Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதிநம

# சுவிசேஷ விரித்துரை

ஆராதிஷ்ட பிலீப்புநேரி முனீந்திரனின்
தியான சம்பிரதாய சந்நியாசிகளுள் ஒருவராகிய
மகத்துவம்பொருந்திய
## யாக்கோமே கொன்சால்வேஸ்
என்னும் குருவானவரால் தமிழ்ப்பாஷையி லியற்றப்பட்ட
இந்நூல்
அமலோற்பவ மரியநாயகிசபை
சுவாமிமாருள் ஒருவரால்
பரிசோதிக்கப்பட்டுத் தற்காலத்துக் கிசையச்
சில நீக்கவும் சில வருவிக்கவும் பெற்றது.

220.7
சிவகுரு

SWAMI GNANAPRAGASAR LIBRARY
'Thodarbaham'
657/1. Hospital Rd.
Jaffna
No. 220.7
NALLUR ★ O. M. I. ★

4-ம் பதிப்பு.

யாழ்ப்பாணம்
1949-ம் ௵
அர்ச்சியசிஷ்ட சூசைமாமுனிவரது கத்தோலிக்கு
அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

[*All rights reserved.*]

005612

# அநுமதி

முற்காலம் இலங்கை என்னும் இத்தீவில் சாங்கோபாங்கர் என்று காரணப்பெயர் பெற்று விளங்காநின்ற மகத்துவம் பொருந்திய யாக்கோமே கொன்சால்வேஸ் என்னும் மாதவமுனிவரால் இயற்றப்பட்டுக் கிறீஸ்தவர்களிடத்தில் பத்தியைவளர்க்கவும், விசுவாசத்தைத் திடப்படுத்தவும், அதியோக்கியமானதென்று முன்சத்தியவேத அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டு இந்நாள்மட்டும் வழங்கிக்கொண்டுவந்த "சுவிசேஷவிரித்துரை" என்னும் இந்நூலை நமது ஆதீனத்துக்குட்பட்ட சுவாமிமாருள் ஒருவரால் பரிசோதிப்பித்து இவர் தற்காலத்துக்கிசைய அதிற் செய்த சிற்சில மாற்றங்களும் புதிதாய் உண்டாக்கிச் சேர்த்த விரித்துரைகளும் ஒருசேர நாமும் அங்கீகரித்து நமது விசாரணைக்குட்பட்ட விசுவாசிகளுடைய பிரயோகத்துக்காகப் பிரசுரம்பண்ண உத்தரவளிக்கின்றோம்.

✠ TH. A. MELIZAN, O. M. I.
Bishop of Jaffna.

Kurunegala 1st. February 1891.

---

*Re-Imprimatur* :

✠ J. A. GUYOMAR, O. M. I.
Bishop of Jaffna.

Jaffna, 16-11-48.

# முகவுரை

"சாங்கோபாங்கர்" என்றும் "இலங்கையின் நூதன நட்சத்திர"மென்றும் அழைக்கப்பட்ட யாக்கோமே கொன்சால்வேஸ் சுவாமியார் பூச்சியமுள்ள யோசேவாஸ் முனிவரைப் பின்தொடர்ந்து கோவையிலிருந்து இலங்கைக்கு எழுந்தருளின அநேக உத்தம இந்திய குருமாருளொருவர். அவர் இலங்கைக்கு வந்தது 1705-ம் ஆண்டு. மரித்து போளவத்தையில் அடக்கப்பட்டது 1742-ம் ஆண்டு. அவர் 1730-ம் ஆண்டு எழுதிய சுவிசேஷ விரித்துரை என்னும் இவ்வருமையான நூல் நெடுங்காலம் கைச்சரவையாய் வழங்கிவந்து முதல் கொழும்பிலே கத்தோலிக்க அச்சுக்கூடத்திலே 1848-ம் ௵ அச்சிடப்பட்டது. பின் இது சென்னையில் 1871-ம் ஆண்டு பல பிழைகளுள்ளதாய் அச்சிட்டு வெளிப்பட்டது. அப்பதிப்பையே வண. ஜே. இப்பொலித்துச் சுவாமியார் "இயன்றமட்டும்" திருத்தி யாழ்ப்பாணத்தின் முதற் பதிப்பாக 1891-ம் ஆண்டு வெளியிட்டார். யாழ்ப்பாணத்து இரண்டாம் பதிப்பும் "மூலப்பிரதியாவது பல மாற்றங்களில்லாத இணைப்பிரதியாவது" கைக்கெட்டாத குறையோடேயே 1902-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. (2-ம் பதிப்பின் முகவுரை காண்க.)

இப்போது வெளியிடப்படுவது உள்ளபடி ஆறுவதான பதிப்பு. இது மூலக் கைச்சரவைகளும் ஆதிக் கொழும்புப் பதிப்பும் கொன்சால்வேஸ் சுவாமியாரே எழுதிய சிங்களப் பதிப்பும் வைத்து ஒப்புநோக்கிச் செய்யப்பட்டது. இதில் முந்திய சுவிசேஷ வாக்கியங்களை மாற்றி தற்காலம் வழங்குகிற திருச்சிணுப்பளிச் சுவிசேஷ வாக்கியங்களை வைத்திருப்பதோடு, ஆதி வெளியீடுகளில் இல்லாதனவும் சுவிசேஷங்களோடு பொருத்தமற்றனவுமான நெடுஞ் செபங்களை அகற்றிவிட்டு அவற்றிற்குப் பதிலாய் அந்தந்த நாளின் பூசையில் வழங்கும் திருச்சபைச் செபம் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தற்காலம் வழங்குகிற சில புதுத் திருநாட்களுக்கும் சுவிசேஷ விரித்துரை அமைக்கப்பட்டிருக்கிறது.

சா. ஞானப்பிரகாசசுவாமி.

நல்லூர் 3-3-31.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் பதிப்பின்

# முகவுரை

உடல், பொருள், ஆவியாகிய மூன்றையுந்தேவதத்தம்பண்ணி முற்றத் துறந்த துறவிகளாய்ப் பிறர் ஆத்தும ஈடேற்றத்தையே விரும்பி இற்றைக்கு நூறு வருஷங்களின் முன் இந்நாட்டுக் கெழுந்தருளி நற்குண நற்செய்கைகளால் விளங்காநின்ற அந்நியதேச குருமாருள் சாங்கோபாங்கர் என்னுங் காரணப்பெயர் சூட்டப்பெற்ற யாக்கோமே கொன்சால்வேஸ் என்பவரும் ஒருவரே. இவர் சிங்களம் தமிழ் சமஸ்கிருதமாதியாம் பாஷைகளை நன்றாய்க் கற்று வல்ல வித்வானாய் "சுவிசேஷ விரித்துரை" என்னும் இவ்வரிய நூலைச் செந்தமிழ்ச் சொற்கள் ஆங்காங்கு விளங்குஞ் சிறந்த வசனநடையாய்த் தமிழில் இயற்றித் தந்தாரென்பது நிச்சயம்.

ஆயினும் மலையினிடத்துப் பிறக்கும்போது மதுரமும் தெளிவும் பொருந்திய ஆற்றுச்சலமானது அம்மலையைவிட்டு நீங்கிப் போகப் போகமண்முதலான பிறபொருள்கலந்து தெளிவுஞ் சுவையுங்குறைந்து தோன்றுமன்றோ. அத்தன்மைபாய் இராஜ ³இருஷிபவர்களால் குன்றாச் சிறப்போடு முடிக்கப்பெற்ற இந்நூலானது முன் நெடுங்காலமாகப் பலவேட்டுப் பிரதிகளாய்ப் பரந்தவிடத்துண்டான சொற்றிரிபு எழுத்துத்திரிபு முதலான குற்றங்களுடன் பின் அச்சுப்பதிப்பித்தவிடத்துண்டான குற்றங்களு மொன்றாய்க்கலந்து தன்னலங்காரங் கெட்டு அம்முனிவரா லியற்றப்பட்டநூல் இதுதானோவென்று பார்த்தவர்கள் சந்தேகங்கொள்ளும்படி இந்நாள்மட்டும் வழங்கிக்கொண்டு வந்தது. இப்படியாகவுஞ் சாதாரணமாய் வழங்கிவந்த அச்சுப் புஸ்தகங்கள் குறைந்தமையால் அநேகர் பத்தியை வளர்க்கும் இவ்வரிய நூலை மீளவு மச்சுப்பதிப்பித்துத் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளை அங்கீகரித்து இந்நூலைச் சுத்தமாய்ப் பிரசுரிக்கவெண்ணி மூலப்பிரதியாவது பல மாற்றங்களில்லாத இணைப்பிரதியாவது அகப்படுமோவென்று அநேக நாளாய்த் தேடியுமகப்படவில்லை. ஆதலாற் சாதாரணமாய் வழங்கிக்கொண்டுவந்த அச்சுப்பிரதியே மீட்டும் இப்போது பதிப்பிக்கப்பட்டது. முற்பதிப்புகளிற் காணபபட்ட பிரத்தியக்ஷமான சொற்றப்பு எழுத்துத்தப்புகள் இயன்றமட்டும் இதில் நீக்கப்பட்டன. கற்றவர்களையன்றிக் கல்லாதவர்களும் முட்டின்றி வாசித்து விளங்கும்பொருட்டுச் சொற்கள் பற்பலவிடங்களில் சாதாரண புணர்பின்றி பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் செய்யப்பட்டிருக்கின்ற விசேஷ மாற்றங்களாவன:—

1-வது, ஞாயிற்றுக்கிழமைகளில் வாசிக்கப்படுகிற சுவிசேஷ வாக்கியங்களெல்லாம் இந்நாட்டு மேற்றிராணிமார் அங்கீகரித்து வழங்கச்



செய்த புதுவைச் சுவிசேஷ வாக்கியங்களுக்கு இசைய மாற்றப்பட்டிருக்கின்றன.

2-வது, அப்படி மாற்றப்பட்டவிடத்து அநேக அரும்பதங்கள் மறைந்துபோக நேரிட்டதினால் அவ்வரும்பதங்களுக்கு வைத்த அகராதியும் நீக்கப்பட்டது.

3-வது, முற்காலத்தில் சில திருநாட்களில் வாசிக்கப்பட்ட சுவிசேஷ வாக்கியங்களுக்குப் பதிலாகப் பிற்காலத்தில் வேறு சுவிசேஷ வாக்கியங்கள் குறிக்கப்பட்டமையால் இச்சுவிசேஷ வாக்கியங்களும் இவைகளுக்கேற்ற விரித்துரைகளும் சேர்க்கப்பட்டன.

சொல்லப்பட்ட திருநாட்களாவன :—செபமாலைத் திருநாள், யேசுவின் திருவிருதயத் திருநாள், தேவமாதாவின் அமலோற்பவ திருநாள் என்பனவாம்.

4-வது, ஆராதிஷ்ட உரோக்குமுனீந்திரன் திருநாளில் வாசிக்கிற சுவிசேஷ விரித்துரையும், மாறுந்திருநாட்கள், இந்நாட்டில் அனுசரிக்கப்பட்டுவரும் கடன்திருநாட்கள் முதலிய அட்டவணைகளுஞ் சேர்க்கப்பட்டன.

அன்றியும் சற்பிரசாதத் திருநாளுக்கு அடுத்துவருகிற இரண்டாம் வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகிற யேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத் திருநாளின் சுவிசேஷமும், சித்திரைமாசம் 25-ந் திகதி சுவிசேஷகரான ஆராதிஷ்ட மாற்கு திருநாளின் சுவிசேஷமும், ஆடிமாசம் 16-ந் திகதி உத்தரியமாதாவின் திருநாட் சுவிசேஷமும் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டன.

சருவேசுரனுக்குத் துதியும் யேசுக்கிறீஸ்துநாதருக்குப் புகழும்
கன்னிமரியம்மாளுக்கு மங்களமுமுண்டாவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாறுந் திருநாட்களின் அட்டவணை

| வருஷம் | சதுரிகை ஞாயிறு மாதம் | சதுரிகை ஞாயிறு திகதி | * விபூதித் திருநாள் மாதம் | * விபூதித் திருநாள் திகதி | பாஸ்குத் திருநாள் மாதம் | பாஸ்குத் திருநாள் திகதி | கர்த்தர் ஆரோகணத் திருநாள் மாதம் | கர்த்தர் ஆரோகணத் திருநாள் திகதி | இஸ். சாந்து திருநாள் மாதம் | இஸ். சாந்து திருநாள் திகதி | தேவநற்கருணை திருநாள் மாதம் | தேவநற்கருணை திருநாள் திகதி | இஸ்.சா.திரு. பின்வரு.ஞா. தொகை | ஆகமனகால முதல் ஞாயிறு மாதம் | ஆகமனகால முதல் ஞாயிறு திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1948 | தை | 25 | மாசி | 11 | பங்குனி | 28 | வைகாசி | 6 | வைகாசி | 16 | வைகாசி | 27 | 27 | கார்த்தி. | 28 |
| 1949 | மாசி | 13 | பங்குனி | 3 | சித்திரை | 17 | வைகாசி | 26 | ஆனி | 5 | ஆனி | 16 | 24 | கார்த்தி. | 27 |
| 1950 | மாசி | 5 | மாசி | 22 | சித்திரை | 9 | வைகாசி | 18 | வைகாசி | 28 | ஆனி | 8 | 26 | மார்கழி | 3 |
| 1951 | தை | 21 | மாசி | 7 | பங்குனி | 25 | வைகாசி | 3 | வைகாசி | 13 | வைகாசி | 24 | 28 | மார்கழி | 2 |
| 1952 | மாசி | 10 | மாசி | 27 | சித்திரை | 13 | வைகாசி | 22 | ஆனி | 1 | ஆனி | 12 | 25 | கார்த்தி. | 30 |
| 1953 | மாசி | 1 | மாசி | 18 | சித்திரை | 5 | வைகாசி | 14 | வைகாசி | 24 | ஆனி | 4 | 26 | கார்த்தி. | 29 |
| 1954 | மாசி | 14 | பங்குனி | 3 | சித்திரை | 18 | வைகாசி | 27 | ஆனி | 6 | ஆனி | 17 | 24 | கார்த்தி. | 28 |
| 1955 | மாசி | 6 | மாசி | 23 | சித்திரை | 10 | வைகாசி | 19 | வைகாசி | 29 | ஆனி | 9 | 25 | கார்த்தி. | 27 |
| 1956 | தை | 29 | மாசி | 15 | சித்திரை | 1 | வைகாசி | 10 | வைகாசி | 20 | வைகாசி | 31 | 27 | மார்கழி | 2 |
| 1957 | மாசி | 17 | பங்குனி | 6 | சித்திரை | 21 | வைகாசி | 30 | ஆனி | 9 | ஆனி | 20 | 24 | மார்கழி | 1 |
| 1958 | மாசி | 2 | மாசி | 19 | சித்திரை | 6 | வைகாசி | 15 | வைகாசி | 25 | ஆனி | 5 | 26 | கார்த்தி. | 30 |
| 1959 | தை | 25 | மாசி | 11 | பங்குனி | 29 | வைகாசி | 7 | வைகாசி | 17 | வைகாசி | 28 | 27 | கார்த்தி. | 29 |
| 1960 | மாசி | 14 | பங்குனி | 2 | சித்திரை | 17 | வைகாசி | 26 | ஆனி | 5 | ஆனி | 16 | 24 | கார்த்தி. | 27 |
| 1961 | தை | 29 | மாசி | 15 | சித்திரை | 2 | வைகாசி | 11 | வைகாசி | 21 | ஆனி | 1 | 27 | மார்கழி | 3 |
| 1962 | மாசி | 18 | பங்குனி | 7 | சித்திரை | 22 | வைகாசி | 31 | ஆனி | 10 | ஆனி | 21 | 24 | மார்கழி | 2 |
| 1963 | மாசி | 10 | மாசி | 27 | சித்திரை | 14 | வைகாசி | 23 | ஆனி | 2 | ஆனி | 13 | 25 | மார்கழி | 1 |

* விபூதித்திருநாள் தொடுத்து பாஸ்குத்திருநாள் (அல்லேலூயாச் சனிக்கிழமை) வரையும் உள்ள காலம் தபசுகாலம் என்று அழைக்கப்படும். தபசுகாலத்தில்வரும் புதன், வெள்ளிக்கிழமைகள் சுத்தபோசன நாட்களாகும். சுத்தபோசனமாவது இறைச்சி கூட்டாமற் சாப்பிடுகிறது. தபசுகாலத்திலுள்ள எல்லா வெள்ளிக்கிழமைகளும் ஒருசந்திநாட்கள். இருபத்தொரு வயசுக்கு மேற்பட்டவர்களும் அறுபதுவயசுக்குட்பட்டவர்களும் ஒருசந்தியை அநுசரிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் போதிய நியாயமின்றி ஒருசந்தியை அநுசரியாதுவிட்டால் கனமான பாவமாயிருக்குமென்றறியவும்.

## மாறாத் திருநாட்களின் அட்டவணை

| மாதம் | திகதி | |
|---|---|---|
| தை மீ | 1 | கர்த்தர் விருத்தசேதனஞ் செய்யப்பட்ட திருநாள் |
| ,, | 6 | கர்த்தர் பிரத்தியட்சமான திருநாள். |
| ,, | 20 | ஆராதிஷ்ட செபஸ்தியார் திருநாள். |
| ,, | 29 | ஆராதிஷ்ட பிறஞ்சீஸ்கு சாலீஸ் திருநாள். |
| மாசி மீ | 2 | தேவமாதாவின் சுத்திகரத் திருநாள். |
| ,, | 24 | ஆராதிஷ்ட மத்தியாஸ் அப்போஸ்தலு திருநாள். |
| | | ☞ இந்தத் திருநாள் பிசகு வருஷத்தில் 25-ந் திகதியில் வரும். |
| பங்குனி மீ | 19 | ஆராதிஷ்ட சூசையப்பர் திருநாள். |
| ,, | 25 | தேவமாதா மங்களங் கேட்ட திருநாள். |
| சித்திரை மீ | 25 | ஆராதிஷ்ட மாற்கு அப்போஸ்தலு திருநாள். |
| வைகாசி மீ | 1 | பிலீப்பு, யக்கோவு அப்போஸ்தலர் திருநாள். |
| ,, | 3 | திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்ட திருநாள். |
| ,, | 26 | ஆராதிஷ்ட பிலீப்புநேரியார் திருநாள். |
| | | ☞ சற்பிரசாதத்திருநாளுக்கு அடுத்துவருகிற 2-ம் வெள்ளிக்கிழமை யேசுக்கிறீஸ்துநாதரின் திருவிருதயத் திருநாள். |
| ஆனி மீ | 13 | ஆராதிஷ்ட அந்தோனியார் திருநாள். |
| ,, | 24 | ஆராதிஷ்ட ஸ்நாபக அருளப்பர் (யுவானி) திரு. |
| ,, | 29 | பேதுரு, பாவிலு அப்போஸ்தலர் திருநாள். |
| ஆடி மீ | 16 | உத்தரியமாதாவின் திருநாள். |
| ,, | 25 | பெரிய யக்கோவு அப்போஸ்தலு திருநாள். |
| ,, | 26 | தேவமாதாவின் தாயான ஆராதிஷ்ட அன்னம்மாள் திருநாள். |
| ஆவணி மீ | 7 | ஆராதிஷ்ட கயித்தானு திருநாள். |
| ,, | 10 | ஆராதிஷ்ட லவுரேன்சியார் திருநாள். |
| ,, | 15 | கன்னிசுத்த தேவமாதா பரலோகத்துக்கு எடுபட்ட திருநாள். |
| ,, | 16 | ஆராதிஷ்ட உரோக்கு முனீந்திரன் திருநாள். |
| ,, | 24 | ஆராதிஷ்ட பார்த்தலோமை அப்போஸ்தலு திரு. |
| ,, | 25 | ஆராதிஷ்ட லூவீஸ் முனீந்திரன் திருநாள். |
| புரட்டாதி மீ | 8 | தேவமாதா பிறந்த திருநாள். |
| | | ☞ இதையடுத்த ஞாயிற்றுக்கிழமை மரிய என்ற திருநாமத்தின் திருநாள். |
| ,, | 21 | ஆராதிஷ்ட மத்தேயு அப்போஸ்தலு திருநாள். |
| ,, | 29 | ஆராதிஷ்ட மிக்கேல் திருநாள். |
| ஐப்பசி மீ | 3 | ஆராதிஷ்ட சின்னமலர்த் திரேசம்மாள் திருநாள். |
| ,, | 7 | தேவமாதாவின் திருச்செபமாலைத் திருநாள். |
| ,, | 28 | ஆராதிஷ்ட சீமோன், ததேயு, அப்போ. திருநாள். |
| | | கடைசி ஞாயிறு கிறீஸ்து தேவராசாவின் திரு. |
| கார்த்திகை மீ | 1 | சகல மோக்ஷவாசிகளுடைய திருநாள். |
| ,, | 2 | உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்கள் திருநாள். |
| ,, | 30 | ஆராதிஷ்ட அந்திரே அப்போஸ்தலு திருநாள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாதம் | திகதி | |
|---|---|---|
| மார்கழி மீ | 3 | ஆராதிஷ்ட பிறஞ்சீஸ்கு சவேரியார் திருநாள். |
| ,, | 4 | ஆராதிஷ்ட பார்பரு கன்னியாஸ்திரீ திருநாள். |
| ,, | 6 | ஆராதிஷ்ட நீக்கொலாவு முனீந்திரன் திருநாள். |
| ,, | 8 | தேவமாதாவின் அமலோற்பவத் திருநாள். |
| ,, | 13 | ஆராதிஷ்ட லூசியம்மாள் திருநாள். |
| ,, | 21 | ஆராதிஷ்ட தொம்மை அப்போஸ்தலு திருநாள். |
| ,, | 25 | கர்த்தர் பிறந்த திருநாள். |
| ,, | 26 | ஆராதிஷ்ட முடியப்பர் திருநாள். |
| ,, | 27 | ஆராதிஷ்ட அருளப்ப அப்போஸ்தலு திருநாள். |
| ,, | 28 | மாசில்லாத குழந்தைகளின் திருநாள். |
| ,, | 31 | சிலுவேஸ்திரி பாப்பு திருநாள். |

### இலங்கையில் அனுசரிக்கப்படவேண்டிய கடன் திருநாட்கள்

1-வது, வருஷத்தில் வரும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளும்.
2-வது, கர்த்தர் விருத்தசேதனங்கொண்ட திருநாள். தை மாசம் 1-ந் திகதி (வருஷப்பிறப்பு)
3-வது, கர்த்தர் மோட்சத்துக்கு ஆரோகணமான திருநாள். (மாறுந் திருநாள்)
4-வது, தேவமாதா பரலோகத்துக்கு எடுபட்ட திருநாள். ஆவணி மாதம் 15-ந் திகதி.
5-வது, தேவமாதாவின் அமலோற்பவ திருநாள். மார்கழி மாதம் 8-ந் திகதி.
6-வது, கர்த்தர் பிறந்த திருநாள். மார்கழி மாதம் 25-ந் திகதி.

### உரோமாபுரியிலிருந்து பிறகிட்டுவந்த அனுமதிப்படி இலங்கையில் அனுசரிக்கவேண்டிய சுத்தபோசனநாட்கள்

1-வது, வருஷத்தில்வரும் எல்லா வெள்ளிக்கிழமைகளும்.
2-வது, தபசுகாலத்திலேவருகிற புதன்கிழமைகளும்.
3-வது, கர்த்தர் பிறந்ததிருநாளுக்குமுந்திய நாள். [நாளுமாம்.
4-வது, தேவமாதா மோட்சத்துக்கு எடுபட்டதிருநாளுக்கு முந்திய
கர்த்தர் பிறந்த திருநாள் அல்லது வருஷப்பிறப்பு வெள்ளிக்கிழமையிலே வருமானால் அந்நாட்களிலே சுத்தபோசனம் அனுசரிக்கக் கடமையில்லை.

### இலங்கையில் அனுசரிக்கவேண்டிய ஒருசந்திநாட்கள்

1-வது, தபசுகாலத்தில் வரும் எல்லா வெள்ளிக்கிழமைகளும்.
2-வது, கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்திய நாளுமாம்.
பெரிய வெள்ளிக்கிழமைதவிர மற்றச் சகல ஒருசந்திநாட்களில் பகற்போசனத்திலேயும், சுத்தபோசனநாட்க ளெல்லாவற்றிலேயும் முட்டை, பால், வெண்ணெய், பாற்கட்டி இவைகள் பாவிக்க உத்தரவு கொடுக்கப்படுகின்றது. சகல சுத்தபோசன நாட்களிலும் சாப்பாட்டிலே கொழுப்புச் சேர்த்துக்கொள்ளவும் உத்தரவுண்டு.

இருபத்தொரு வயசுக்கு மேற்பட்டவர்களுக்கும், அறுபது வயசுக்கு உட்பட்டவர்களுக்கும் ஒருசந்திகாக்கக் கடமையுண்டு.

---



# சுவிசேஷ விரித்துரை

---

## ஆகமனகாலத்தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா இருபத்தோராம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது:— அப்பொழுது சூரியன் சந்திரன் நட்சத்திரங்களிலே பல அடையாளங்கள் தோன்றும். சமுத்திரமும் அலைகளும் இரைந்து கொந்தளிப்பதினால், பூமியில் ஜனங்களுக்கு உபத்திரவமுண்டாகும். உலகத்துக்கெல்லாம் இனி என்ன வரப்போகிறதோவென்று மனிதர்கள் பயந்து, எதிர்பார்த்திருப்பதினால் விடவிடத்துப் போவார்கள். ஏனெனில் வானமண்டலங்களின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது மனுமகன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருவதைக் காண்பார்கள். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, நீங்கள் அண்ணாந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள். ஏனென்றால் உங்கள் இரட்சணியம் சமீபித்திருக்கிறது என்றார். பின்னும் அவர் அவர்களுக்குத் திருவுளம்பற்றின உவமையாவது: அத்திமரத்தையும், சகல விருட்சங்களையும் பாருங்கள். அவைகள் காய்க்கத் துவங்கும்போது, கோடைகாலம் சமீபித்திருக்கிறதென்று அறிந்துகொள்ளுகிறீர்களே. அவ்விதமே நீங்களும் இவைகள் சம்பவிக்கிறதைக் காணும்போது, சர்வேசுரனுடைய இராச்சியம் சமீபமாயிற்றென்று அறிந்துகொள்ளுங்கள். இவையெல்லாம் நடந்தேறுமளவும், இந்தச் சந்ததி ஒழிந்துபோவதில்லையென்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்துபோம்; என் வார்த்தைகளோ ஒழிந்துபோகாது—என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயமேதென்றால், சந்திர, சூரிய, நட்சத்திரங்களிலே அடையாளங்கள் காணப்படும் என்று சொல்லப்பட்டதே. அந்த அடையாளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாவன: சூரியமண்டலம் தனது கதிர்களை லோகத்திலே விடாமல் இருளடைந்த வேஷமாயிருக்கும். சந்திரமண்டலம் மலர்ந்த முகத்தை ஒழித்து இரத்தமயமான கோலத்தைக் காண்பிக்கும். நட்சத்திரங்கள் உதிக்கிற ஸ்தலங்களை விட்டுப் பிசகி ஒளிவிழந்து உயிர்போன பிரேதங்களைப்போல விழும். இந்தடைவாய்ச் சோதிமண்டலங்களிற் சுவாலிக்கிற அக்கினிப் பிரதாபமான அலங்காரம் எல்லாம் மறைந்து அவைகள் கன அந்தகாரம் அணிந்த ரூபமாய்க் காணப்படும். அதேதெனில் இவை எல்லாம் சர்வேசுரன் மனுஷனுக்கு உபகாரமாக உண்டாக்கினதினால், மனுஷன் பாவத்தால் கெட்டுப்போகிறபோது அவனை ஆதரித்திருந்த பிரகாரம் எல்லாம் அந்தகாரமாய்ப்போக ஞாயம் என்று அறியவும்.

ஆனால் இதிலுள்ள ஞான உற்பனமானது: சூரியனோவென்றால் நீதிபர அருணனாகிய கிறீஸ்துநாதராம். சந்திரனோ என்றால் சாந்துவ குணம் நிறைந்த சோமனாகிய தேவமாதாவாம். நட்சத்திரங்களோவென்றால் ஞான ஒளிகளாகிய மோட்சவாசிகளாம். அவர்கள் இற்றைவரைக்கும் மனுஷருக்குப் பிரசன்னராயிருக்கக்கொள்ள, அன்று சற்றும் இரக்கமில்லாமல் அதி உக்கிர முகத்தைக் காண்பிப்பார்கள் என்ற விபரமாம்.

பூமியிலே காண்கிற அடையாளங்களின் விபரமோவென்றால், பூமியிலுள்ள பொருள்களைக்கொண்டுதானே மனுஷன் பாவத்துக்கு ஏதுவானதினால் அந்தப் பொருள்கள் எல்லாம் மனுஷசென்மத்தின்பேரிலே வெகு சினத்தைக் காட்டி அழிவுண்டாக்க அடர்ந்துவருகிறதாயிருக்கும். அதினால் சமுத்திரமானது வான முகடுமட்டாகத் திரைகொண்டு எழும்பி அதின் மச்சங்கள் லோகத்தவர்களை விழுங்க அலட்டுகிறதுபோல வெகுவாய் ஓயாத அபயக்குரலிட்டு, காற்றானது பிரசண்ட மாருதமாய் அடித்து, பூமியானது சகலதிக்கும் அதிர்ந்து நடுக்கங்கொண்டு, மற்றுண்டான பொருள் யாவும் அந்தப் பிரகாரமாய் அழிவுகாண்பித்திருக்கும். அதேதென்றால்: சகலத்தையும் உண்டாக்கின ஆதி பரப்பொருளான சர்வேசுரனுக்கு மனுஷன் எதிராளியானதினால், சகல பொருளும் அவனுக்குப் பகையாய் அழிவுண்டாக்குவது கிரமமுள்ள நீதியென்று அறியவும். இதல்லாமல் இதின் ஞான அர்த்தம் ஏதென்றால், சமுத்திர சலம் நரக சுவாலை என்றும், அதில் அமிழுகிற மச்சங்கள் நரகவாசிகள் என்றும், பிரசண்டவாயு துஷ்டப் பிசாசு என்றும், பூமிநடுக்கம் தேவபயங்கரமான நீதிக்கோபம் என்றும் சொல்லப்படும். இதெல்லாம் மனுஷனுக்கு விரோதமாயிருக்கும் என்று அறியவும்.



அதின்பின் ஆண்டவர் எழுந்தருளுகிற பிரகாரம் எப்படியோவென்றால், பூலோகத்திலே ஆண்டவர் வருகிற வரவின் காலம் இரண்டாகும். முதலாவது மனுஷனை இரட்சிக்கவந்ததினால் பொறுதி, தாழ்ச்சி காண்பிக்கிறவராய் முனிவில்லாமல் அமிர்தகுணம் நிறைந்த குழந்தை முகத்தோடு, சிங்காசன பரிவார அலங்காரம் இல்லாமல் மகா வறுமை, எளிமையோடுவந்தார். இனிமேல் வருகிற பயணமோவென்றால், சகல லோகத்துக்கும் இராசாதிராசனாக முடிதரித்து ஆகாசத்திலே அரண்மனை அலங்கரித்து, மேகத்தின்மீதே சிங்காசனம் ஸ்தாபித்து பராக்கிரம தூதாதி தூதர் மோட்சவாசிகள் சகலரும் புடைசூழச் சிங்கத்தின் உக்கிரத்தைக்கொண்டு சகல லோக பொருள்களையும் ஆளவும் அழிக்கவும் அநந்த வல்லப மகிமையுள்ளவராய் வருவாரென்று அறியவும். எந்த ஸ்தலத்திலே வருவாரோவெனில், லோகத்துக்கு நடுவான இராச்சியத்திலே யோசேபாத்து என்று பேர்ப்பட்ட பள்ளத்தாக்கிலே எழுந்தருளுவார். அவரை எல்லாரும் காண்பார்களோ என்றால் சகல லோக சனங்களும் காண்பார்கள். ஆனால் பாவிகள் ஒருவிதமாயும் புண்ணிய ஆத்துமாக்கள் வேறே பிரகாரமாயும் காண்பார்கள். அதெப்படியென்றால்: பாவிகள் அவருடைய முனிவு நிறைந்த முகத்தைக் கண்டு பயந்து விலகி, அந்த முகத்தின் வெளிச்சத்தால் தங்களுடைய பாவத்தின் அகோரம் சகல லோகத்துக்கும் பிரசித்தமாய்ப் போகிறதினால் வெட்கித்த முகத்தைக் காண்பிக்கமாட்டாமல் தரைமட்டாகத் தலைகுனிந்து பாதாளங்களிலே அமிழ்ந்திப் போகவும், பருவதங்கள் தங்கள்பேரிலே விழவும் விரும்புவார்கள். புண்ணிய ஆத்துமாக்களோ என்றால், தங்கள் சுகிர்தங்களின் வாசனை லோகம் எங்கும் பரிமளித்து மகா கீர்த்தி பரம்பினதினால் நிறைந்த மகிழ்ச்சியாய் அலர்ந்த முகத்தோடு ஆண்டவரைக் காண்பார்கள்.

இப்படிப்பட்ட வர்த்தமானம் சம்பவிக்கிறகாலத்தை அறியத் திருவுளம்பற்றின உவமையின் பயன் ஏதென்றால்: செந்நெல்லின் கதிர்கண்டவுடனே அறுப்புக்காலம் கூடுமாப்போலே லோகத்திலே உபத்திரிய துரிதம் வெகுவாய்ப் பலுகுகிறபோது ஞானப்பயிராகிய மனுஷ சென்மங்கள் சங்கரிக்கப்படுகிற காலமாம் என்று அறிவித்தார். அப்போது நல்ல நெல்லைக் களஞ்சியத்திலே தெரிந்துவைத்துப் பதரையும் வைக்கோலையும் அகல எறிகிறதுபோலப் பலன் நிறைந்த புண்ணிய ஆத்துமாக்கள் திவ்விய களஞ்சியமாகிய மோட்சராச்சியத்திலே கூடி இருப்பார்கள். பதரும் வைக்கோலுமாகிய துர்ச்சனப் பாவிகளும், பிசாசுகளும் நரக அக்கினியில் எறியப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள். ஆனதினால் இப்படிப்பட்ட வர்த்தமானத்தை நாங்கள் ஏலவே அறிந்து எங்கள் கிரியைகள் வியர்த்தகிரியைகளாய் நரகத்துக்கு ஏதுவாகாதபடிக்குத் தருமம் நிறைந்த பயிராய்ச் சீவித்து மோட்ச ராச்சியத்திலே பலன் அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே! தேவரீர் உமது அனந்த வல்லமையை எடுத்தாண்டு எங்கள் மத்தியிலே எழுந்தருளிவாரும். எங்கள் பாவத்துக்குக்கிடைக்க வேண்டிய ஆபத்துக்களில் நின்று நாங்கள் தேவரீருடைய வரவினால் பாதுகாக்கப்பட்டுத் தேவரீருடைய தயவுநிறைந்த அருளினால் ஈடேற்றம் அடைகிறவர்களாகக்கடவோம். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலமும் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென்யேசு.

---

# ஆகமனகாலத்தின்

## இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு பதினோராம் அதிகாரத்தில் எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே அருளப்பர் கிறீஸ்துநாதருடைய செய்கைகளைப்பற்றிச் சிறைச்சாலையில் கேள்விப்பட்டபோது தம்முடைய சீஷர்களில் இருவரை அனுப்பி வரவேண்டியவர் நீர்தாமோ, அல்லது வேறொருவர் வரக் காத்திருக்கவேண்டுமோ என்று கேட்பித்தார். யேசுநாதர் அவர்களுக்கு மறுமொழியாகச் சொன்னதாவது: நீங்கள் போய், கேட்டவைகளையும், கண்டவைகளையும் அருளப்பருக்கு அறிவியுங்கள். குருடர் காண்கிறார்கள், முடவர் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் உயிர்த்தெழும்புகிறார்கள், ஏழைகள் சுவிசேஷம் போதிக்கப்படுகிறார்கள், என்மட்டில் இடறல்படாதவன் பாக்கியவான் என்றார். அவர்கள் போனபின்பு யேசுநாதர் அருளப்பரைக் குறித்து ஜனக்கூட்டத்தை நோக்கிச் சொல்லத் துவக்கினதாவது: நீங்கள் கானகத்தில் எதைப் பார்க்கப் போனீர்கள்? காற்றினால் அசைந்தாடுகிற நாணலையோ? பின்னை எதைத்தான் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய உடைகளை அணிந்த மனிதனையோ! இதோ மெல்லிய உடையணிகிறவர்கள் இராஜமாளிகைகளில் இருக்கிறார்களே. அல்லவென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியிலும் மேற்பட்டவரைத்தான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனென்றால் இதோ என் தூதனை உமது சமுகத்துக்கு முன்பாக அனுப்புகி



றேன். அவன் உமக்கு முன்னே உமது வழிகளை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதப்பட்டது இவரைப்பற்றித்தான்—என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷமாவது: ஸ்நாபக அருளப்பர் ஆண்டவரை ஆர் என்று ஆராயத்தக்கதாகச் சீஷரை அனுப்பினார் என்று சொல்லப்பட்டதே. அதுக்குக் காரணம் ஏதென்றால்: அவர் கிறீஸ்துநாதரை அறியாமல் இருந்ததினால் கேட்டனுப்பினதல்ல. தேவகுமாரன் மனுஷரை ஈடேற்றத்தக்கதாக மனுஷனாய்ப் பிறந்துவந்தார் என்று தாய்வயிற்றினின்றுதானே தேவவரத்தால் அறிந்திருந்தார். ஆனால் தம்முடைய சீஷர்கள் அந்தவகை அறியாமல் இருந்ததினால் மோசம் போகாமல் அவர்கள் தங்கள் கண்ணாலே ஆண்டவரைக் கண்டறிந்து விசுவாசியாய்ப்போக வேண்டும் என்பதற்கு அவர்களை அனுப்பினார் என்று அறியவும்.

ஆனால் அத்தால் எங்களுக்குள்ள படிப்பினையாவது: இந்த லோகத்திலே நடக்கப்பட்ட வேதம், குரு, தெய்வம் முதலானதுகள் எல்லாம் கண்டமாத்திரத்திலே உண்மை என்று விசுவசிக்கக்கடவதல்ல. அதேதெனில், நல்ல பணத்தோடே செல்லாப்பணமும் நடக்குமாப்போலே சர்வேஸ்பரனுடைய சத்தியவேதத்தோடே பொய்மதம், அசத்தியகுரு, தெய்வம் முதலானதுகள் பூலோகத்திலே மிகுதியும் நடக்கிறதுண்டு. ஆனதினால் பொன், வெள்ளியை அறவைத்தும், கல்லில் உரைத்தும் தெரிந்தெடுக்குமாப்போலே வேதமும், குருவும், தேவனும் புத்தியினாலே நன்றாய் விசாரித்து, கேட்டு அறியவேண்டும் என்று படிப்பித்தார். அப்படியே தேவசுபாவத்துக்கடுத்த இலக்ஷணங்களுண்டானவர் தேவன் என்றும், அவர் அருளிச்செய்த சுகிர்த நெறியுண்டானால் வேதம் என்றும், ஏழுபட்டந்தரித்து அந்தவேதம் படிப்பிக்கிறவன் குரு என்றும் கண்டுபிடிக்கிறதல்லாதே அப்படிக்கொத்த அடையாளம் இல்லாமல் யாதொருத்தன் தன் வாக்கால் தன்னைத் தேவன் என்றும், குரு என்றும் சொன்னதினால் மாத்திரம் அங்கீகரிக்கக்கடவதல்ல. ஆகையால் ஆண்டவர் ஸ்நாபக அருளப்பர் கேட்டனுப்பின வார்த்தைக்கு மறுமொழியாக, தாம் கிறீஸ்து என்று தம்முடைய திருவாக்கினாலே சொல்லாமல் தம்மாலே செய்யப்பட்ட கிருத்தியங்களை அதாவது: பிறவிக்குருடர், செவிடர், முடவர் முதலானவர்கள் சுகமாய்ப்போகிறதையும் செத்தவர்கள் எழும்புகிறதையும், தாங்கள் கண்ட கேட்ட பிரகாரம் அறிவிக்கச் சொன்னார். இப்படிப்பட்ட கிரியைகள் சர்வேஸ்பரனுடைய வல்லமையினால் அல்லாதே பேய் மாய்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினாலும், மனுஷர் தந்திரத்தினாலும் செய்யக்கூடாததினால் அத்தால் தாம் சர்வேஸ்பரனுடைய குமாரனே என்று அறியும் மேரை காண்பித்தார்.

அதின்பின் ஸ்நாபக அருளப்பர்பேரில் வசனித்த வசனமாவது: அவர் காற்றினால் அசைபட்ட நாணல்போலேயும் சுகவஸ்திரம் அணிந்த இராசமாளிகைவாசிகள்போலேயும் அல்ல என்ற வசனத்துக்கு அபிப்பிராயம் ஏதென்றால் காற்றால் அசைகிற நாணல் என்பது, விரோத துரிதங்களால் வேத உறுதியிலே தத்தளிக்கிறவனும். சுகவஸ்திரம் அணிந்தவனாவது: லவுகிக செல்வங்களைச் சுகிக்கிறவனும். ஸ்நாபக அருளப்பர் அப்படிக்கொத்தவர் அல்ல. தம்முடைய பிராணனைச் செலவழிக்குந்தனையும் வேதநீதி தவறாதவராய்ச் சகல லோக செல்வங்களையும் வெறுத்து, மெய்மறந்து, கடினதபசுபண்ணியிருந்தார் என்றும் ஆகையால் சகல திவ்விய தீர்க்கதரிசிகளினும் மிக்கானவர் என்றும், லோகமனுஷரில் மகத்தானவர் என்றும், மனோரூபிகளுக்குச் சமானம் என்றும் அறிவித்தார். அப்படியே நாங்கள் பயங்கரத்தினால் எங்கள் வேதவிசுவாசத்தையும், தர்ம நடக்கையையும் கைவிடாமல் அவர் நடந்த சுகிர்தவழியைப் பின்சென்று நடப்போமாகில் அவருக்குக் கிடைத்த மகத்தான வரப்பிரசாதங்களையும் மோக்ஷமுடியையும் நாங்களும் அடைவோமென்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே! நாங்கள் தேவரீருடைய ஏக பேறான திருச்சுதனானவர் எங்களிருதயங்களில் எழுந்தருளிவருவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யும்படி அவ்விருதயங்களைத் தூண்டியருளும். அதினால் நாங்களும் அவருடைய வருகையின் நிமித்தம் பரிசுத்தமாக்கப்பட்ட மனதோடு தேவரீருக்கு ஊழியஞ்செய்யத்தக்கவர்களாவோம். அவரே தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம்பண்ணுகிறவர், ஆமென்யேசு.

---

# ஆகமனகாலத்தின்

## மூன்றும் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் முதலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :— அந்தக்காலத்திலே யூதர்கள் ஜெருசலேமிலிருந்து ஆசாரியரையும் லேவித்தரையும் அருளப்பரிடத்தில் அனுப்பி: நீர்



யாரென்று கேட்டபோது, அவர் சொன்ன சாட்சியமாவது: நான் கிறீஸ்துவானவர் அல்ல என்று அறிக்கையிட்டு, அதை மறுதலிக்காமல் வெளிப்படுத்தினார். அவர்கள் மறுபடியும் அவரை வினாவி: பின்னை நீர் யார்? நீர் எலியாசோ என்று கேட்க, அவர்: நான் அல்ல என்றார். நீர் தீர்க்கதரிசியோ என, அதற்கும் அவர்: நான் அல்ல என்று மறுமொழி சொன்னார். ஆகையால் அவர்கள்: எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் மாறுத்தரஞ் சொல்லும்படி நீர் யார்? உம்மைக் குறித்து என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அதற்கு அவர்: கர்த்தருடைய வழியைச் செவ்வையாக்குங்களென்று இசையாஸ் தீர்க்கதரிசி வசனித்தபடியே வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய குரலொலி நானே என்றார். அனுப்பப்பட்டவர்களோ பரிசேயராயிருந்தார்கள். மீளவும் அவர்கள் அவரை நோக்கி: நீர் கிறீஸ்துவுமல்ல, எலியாசுமல்ல, தீர்க்கதரிசியுமல்லவென்றால், பின்னை ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று கேட்டார்கள். அருளப்பர் அவர்களுக்கு மாறுத்தாரமாக: நான் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கிறேன். ஆனால் நீங்கள் அறியாத ஒருவர் உங்கள் மத்தியில் நிற்கிறார். எனக்குப் பின் வரவேண்டியவரும், என்னிலும் மேன்மையாக்கப்பட்டவரும் அவரே; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கு நான்பாத்திரவானல்ல என்றார். இவைகள் யோர்தான் நதிக்கு அக்கரையில் அருளப்பர் ஞானஸ்நானங்கொடுத்துவந்த பெத்தானியாவில் சம்பவித்தன.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே அறியும் விசேஷமாவது: ஸ்நாபக அருளப்பர் யோர்தான் நதிக்கரையிலே வருகிற சனங்களைத் தண்ணீரால் ஸ்நானம்பண்ணிக் கொண்டிருந்த இடத்திலே யூதர் தங்கள் குருமாரை அனுப்பி அவரை ஆர் என்று கேட்டவகை சொல்லியிருக்கிறதே. அதேது நிமித்தமோவென்றால், ஸ்நானத்தால் ஆத்துமசுத்தி பண்ணுகிறது தேவத்துவம் உடைய கிறீஸ்துவுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் அல்லாதே மற்றவர்களுக்கு ஏலுவதல்ல என்றதினால் அவர்கள் அவர் கிறீஸ்துதாமோ அல்லவோ என்று அறியத்தக்கதாகக் கேட்டனுப்பினார்கள். அத்தால் எங்களுக்குள்ள படிப்பினையாவது: அவர்கள் ஸ்நாபக அருளப்பரை ஆர் என்று அறியக் கருதினதுபோல நாங்களும் அவனவன் தன்னைத்தான் ஆர் என்று விசாரித் தறிந்தால் அதிக பலனுள்ளதாயிருக்கும். அதேதென்றால் மனுஷனானவன் தன்னைத்தான் அறியாததினால் சகலமான பாவங்களும் உண்டாகிறதாகும். அப்படியே எங்கள் ஆதித்தாய் தந்தையான ஆதனும் ஏவையும் தாங்கள் மண்ணால் உண்டாக்கப்பட்டதை அவதானம் பண்ணாததினால் தேவரைப்போலே இருப்போம் என்று நினைத்துப் பாவத்திலே விழுந்தார்கள். ஆகையால் அப்படிப்பட்ட ஆங்காரத்தைத் தள்ளத்தக்கதாகச் சர்வேஸ்பரன் அவர்கள் மண்ணாலே உண்டுபண்ணப்பட்டதையும் மரித்து மண்ணாய்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறதையும் உடனே அவர்களுக்கு அறிவித்தார். அப்படியே நாங்களும் எங்கள் நீசமான பிறவிச்சுபாவத்தை அவதானிப்போமாகில் பாவத்திலே விழமாட்டோம். எங்கள் சரீரம் தாயுடைய உதர அழுக்கில் அல்லது பூமிச்சேற்றில் செனித்ததை நினைத்தால் வங்கிஷ குலபெருமை பாராட்டமாட்டோம். சரீரத்திலே பொக்ஷமாய் நிறைந்திருக்கிற அருவருப்பானதுகளையும் கண், செவி, நாசி, வாய், மல சலவழி முதலான சகல துவாரங்களினாலே நித்தம் ஊறிப்பாய்ந்துவருகிற துர்க்கந்தங்களையும் விசாரித்தால் அப்படிப்பட்ட துர்க்கந்த பாத்திரமான சரீரத்துக்குச் சந்தன, பரிமள, புட்பங்களை அணியவும், பொன், வெள்ளியால் அலங்கரிக்கவும், சலாக்கிய ஆசன சிங்காசனங்களிலே சயனிக்கவும் விரும்பமாட்டோம். அப்படியே சரீரசுக அபேட்சையால் வருகிற பாவம் எல்லாம் விலகும் என்று அறியவும்.

அதின்பின் ஸ்நாபக அருளப்பர் உரைத்த வசனத்திலே காண்கிற படிப்பினை ஏதென்றால்: யூதர் அவரைக் கிறீஸ்து என்று நினைத்த விடத்திலே தாம் கிறீஸ்து அல்ல என்று உண்மை சொன்னதினால் எங்களுக்கு லோகத்தார் சொல்லுகிற இச்சகம் முதலான புகழான வார்த்தைகளை மனோவிருப்பமாய்க் கேளாமலிருக்கவேணும் என்று படிப்பித்தார். கடைசியாய் யூதர் அவரை ஆர் என்று மறுபடி தொடர்ந்து கேட்ட இடத்திலே: தாம் வனத்திலே தொனிக்கிற சத்தம் என்று சொன்னதினால், ஒரு உச்சிதமான ஞானபோதகம் எங்களுக்குப் போதித்தார். அதாவது: சத்தமானது வாக்கினாலே புறப்பட்டவுடனே அழிந்துபோகிறதுபோல மனுஷனானவன் சகல காரியத்திலும் அழிவுள்ளவன் என்று காண்பித்தார். அதேதெனில் நாங்கள் உண்டாக்கப்பட்ட முகனையை விசாரித்தால் உண்டாகுமுன் பூலோகத்திலே ஒருகாரணமும் இல்லாமல், வெறுமையில் நின்று எடுபட்டதினால் அழிவுள்ளவர்களாம். உண்டானதின்பின் தேவ அனுக்கிரகம் இன்றியே எங்களால் ஒரு நல்ல விசாரமானாலும் உண்டாகக்கூடாததினால் அழிவுள்ளவர்களாம். செத்ததின்பின் சரீரம் மண்ணாய்ப்போகிறதினால் அழிவுள்ளவர்களாம். எங்கள்பேரில் சொல்லப்பட்ட வெகுமான புகழ் எல்லாம் அற்றுப்போகிறதினால் அழிவுள்ளவர்களாம். நாங்கள் சம்பாதிக்கிற திரவியம் எல்லாம் எங்களோடு வாராததினால் அழிவுள்ளவர்களாம். நாங்கள் சுகித்த செல்வ பாக்கியம் எல்லாம் எங்களுக்கு மிகுந்தவேதனைக்குக் காரணமாயிருக்கிறதினால் அழிவுள்ளவர்களாம். இப்படியே சகலத்திலும் அழிவுள்ளவர்களாயிருக்கிற எங்கள் நீசத்தனத்தையும் ஈனத்தையும்



அநுதினமும் நினைத்து ஆங்காரம் ஒய்யாரம் எல்லாம் தள்ளித் தாழ்ச்சியோடே நடக்கவேண்டும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே! தேவரீர் எங்கள் செபங்களுக்குத் திருச்செவிசாய்த்து எங்கள் மனதில் அடர்ந்திருக்கிற பாவ அந்தகாரம் தேவரீருடைய வரவினால் நீங்கி ஞானவெளிச்சம் உண்டாகச் செய்தருளும். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலமும் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிறவரே, ஆமென்யேசு.

---

# ஆகமனகாலத்தின்

## நாலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா மூன்றும் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:— திபேரியூ என்னும் செசாருடைய இராச்சியபாரத்தின் பதினைந்தாம் வருஷத்திலே, போஞ்சு பிலாத்து என்பவன் யூதேயா தேசத்துக்கு அதிபதியாகவும், ஏரோது என்பவன் கலிலேயாநாட்டின் சதுர்த்தபாக பதியாகவும், அவன் சகோதரனாகிய பிலிப்பு இத்துரையா நாட்டுக்கும், திராக்கோனிதி நாட்டுக்கும் சதுர்த்தபாக பதியாகவும், லிசினியாஸ் என்பவன் அபிலினே நாட்டுக்குச் சதுர்த்தபாக பதியாகவும், அன்னாஸ், கைப்பாஸ் என்பவர்கள் பிரதான ஆசாரியர்களாகவும் இருந்த காலத்தில், வனாந்தரத்திலே சக்கரியாஸ் குமாரனான அருளப்பருக்கு ஆண்டவருடைய வாக்கியம் உண்டாயிற்று. அப்பொழுது அவர் யோர்தான்நதிக் கடுத்த நாடெங்கும் வந்து, இசையாஸ் தீர்க்கதரிசியின் வாக்கியாகமத்தில் எழுதியிருக்கிறபிரகாரம், பாவ விமோசனத்துக்காகத் தவத்தின் ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார். (அதில் எழுதியிருப்பதேதெனில்): வனாந்தரத்திலே சத்திக்கிறவனுடைய குரலொலி (இதோ)! ஆண்டவருடைய வழியை முஸ்திப்புச் செய்யுங்கள். அவருடைய பாதைகளைச் செவ்வையாக்குங்கள். பள்ளத்தாக்கெல்லாம் தூர்க்கப்படும்; மலை குன்றெல்லாம் தாழ்த்தப்படும்; கோணலானவைகள் நேராகவும், கரடானவைகள் சமவழிகளாகவுமிருக்கும். எந்த மனிதனும் சர்வேசுரனுடைய இரட்சணியத்தைக் காண்பான் என்பதாம்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷமாவது:— ஸ்நாபக அருளப்பர் வனத்திலே இருக்கச்செய்தே சர்வேசுரனுடைய அருள் அவருக்குண்டாகி யோர்தான் நதிக்கரையில் உபதேசித்து ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்தார் என்கிறதினால் அவர் வனத்திலே இருந்த நெறியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஞானஸ்நானங் கொடுத்த மேரையையும், உபதேசித்த தருமத்தையும், விசாரித்தறியவேண்டியது. வனத்திலே இருந்த நெறி ஏதென்றால்: பாலவயதில் எரோதிராயன் குழந்தைகளைக் கொல்லுவித்த முகாந்தரத்தினால் இசவேல் என்கிற தமது மாதாவால் வனத்திலே கொண்டுபோகப்பட்டு அதிலே தேவ சற்காரங்களினால் வளர்ந்ததின்பின், அடிசில் முதலானதுகளைப் புசியாமல் இலைவர்க்கம் பழவர்க்கம் ஆகிய பன்னாசனம், மூலாசனம் இவைகளை உண்டும், நெய்யப்பட்ட வர்ணவஸ்திரமானதைத் தொடாமல் மிருகத்தோல் அணிந்தும், பஞ்சகாமிய சவுக்கியத்தை அரோசித்து, மிகுந்த தியான தருமத்தோடு கடினமான தவம்பண்ணிவந்தார். ஆனதினால் ஆண்டவருடைய முன்கமனவாதி அல்லது கட்டியன் என்கிற உத்தம பிரசாதத்தை அடைந்து பிரசங்கம்பண்ணப் போனார் என்று அறியவும்.

அவர் கொடுத்த ஸ்நானம் எப்படிப்பட்டதோ என்றால்: கிறீஸ்துநாதருடைய கட்டளையால் இக்காலத்திலே செய்யப்படுகிற ஞானஸ்நானம்போல் அல்ல. அதேதெனில், இப்போது கொடுக்கிற ஞானஸ்நானமாவது: பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து என்கிற மூன்றுபேருடையவும் நாமத்தால் செய்யப்படுவது. அதல்லாமல் இதைச்செய்த கிருத்திய நிமித்தமாய் உடனே ஆத்துமம் தேவபிரசாதத்தால் சுத்தமாய்ப்போகிறதாயிருக்கும். அருளப்பர் கொடுத்த ஸ்நானமோ என்றால் பின்வருகிற கிறீஸ்து நாமத்தால் மாத்திரம் ஸ்நானம்பண்ணிப் பச்சாத்தாபத்தால் பாவ விமோசனம் உண்டாக்கினதினால் பச்சாத்தாப ஞானஸ்நானம் என்று சொல்லப்படும். ஆகையால் அப்படிப்பட்ட ஸ்நானம் கிறீஸ்துவின்பேரில் விசுவாசியாய் இருக்கிறதுக்கு ஆயத்தமாயிருந்தது என்று அறியவும்.

அப்பால், அருளப்பர் பண்ணின பிரசங்கத்தின் அபிப்பிராயம் ஏதென்றால்: ஆண்டவருடைய வழியை நேர்பண்ணுங்கள் என்று சொன்னதினால் ஆத்துமாக்களைச் சுத்தம்பண்ணச் சொன்னதாம். பணிந்த ஸ்தலம் நிரம்பும், உயர்ந்த குன்றுகள் பணியும் என்றதாவது: தாழ்ச்சியுடையவர்கள் பணிந்த தலம் என்றும், அகந்தையானவர்கள் குன்றுகள் என்றும் சொல்லப்படும். அப்படியே உயர்ந்த மேடுகளில் தண்ணீர் தரியாமல், பள்ளக்கால்களிலேயும், குழிகளிலேயும் வந்து நிரம்புமாப்போலே தாழ்ச்சி, எளிமை உடையவர்கள் மனதுகளிலே தேவப்பிரசாதங்கள் நிரம்பி, ஆங்கார கெறுவமானவர்களிடத்திலே ஒரு தேவநன்மையுமிராமற் தரைமட்டமாய்த் தாழ்த்தப்படுவார்கள் என்று அறியவும். கோணலானது



நேர்மையாகும், மேடானது சமனொத்த வழியாகும் என்று சொன்ன வசனம் ஏதென்றால், நெறி நீதி கெட்டவர்கள் கோணல் என்றும், கோபம், துவேஷம் முதலான மூர்க்கக்குணமுள்ளவர்கள் மேடு என்றும் சொல்லப்படும். அப்படிப்பட்டவர்கள் ஆண்டவருடைய பிரசாதத்தால் நெறி, ஞாயம், சாந்துவம், சமாதானம் என்கிற தர்மக்குணங்களை அடைவார்கள் என்று அறியவும். அதினால் ஆண்டவருடைய வழி என்கிற மனுஷருடைய இருதயங்கள் தர்ம சுகிர்தங்களினாலே அலங்கரிக்கப்பட்டு ஈடேற்றுகிறவராகிய கிறீஸ்துநாதரைக் காணப் பாத்திரமாவார்கள் என்கிற போதகத்தை உபதேசித்தார் என்று அறியவும். அப்படியே நாங்கள் எங்கள் ஆத்துமாக்களைப் பாவ நிவாரணத்தால் சுத்திபண்ணித் தருமக் கிரியைகளினாலே அலங்கரித்துக் கிறீஸ்துநாதருடைய மோட்ச முக தெரிசனத்தை அடையவேணுமென்று அறியக்கடவோம்.

### திருச்சபைச் செபம்

ஆண்டவரே! உமது அனந்த வல்லமையை எடுத்தாண்டு, எங்கள் மத்தியிலே எழுந்தருளிவாரும். வந்து எங்கள் அவசரங்களில் அத்தியந்த சவுரியத்துடனே உதவிசெய்தருளும். எங்கள் பாவ அக்கிரமங்களினால் வந்த தடைகளெல்லாம் தேவரீருடைய வரப்பிரசாத உதவியினால் வெட்டுண்டு உமது இரக்கத்தின் ஆதரவினால் நாங்கள் தேடுகிற நன்மைகள் தீவிரமாய்க் கைகூடக்கடவது. பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலமுஞ் சீவியராய் இராச்சியபாரம்பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென் யேசு.

---

## கர்த்தர் பிறந்த திருநாளில் முதலாம் பூசையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

இருள்மேகங்களைத் துரத்த வல்லப சுவாலைப் பிரதாபத்தோடு எழும்புகிற தினகரன்போலவும், பூமியின் அகோர அனலை ஆற்றி வருஷிக்கிற குளிர்ந்த பனிபோலவும், உலோக அக்கியானம் என்கிற திமிர் அந்தகாரத்தைத் தள்ளிப் பாவம் என்ற அக்கினி அகோரத்தை அமர்த்தத் திவ்விய சுதனாகிய கிறீஸ்துநாதர் பிறந்த அதிக மகிழ்ச்சி, மகிமையான விசேஷம் இன்று கொண்டாடப்படுவது. இப்படிப்பட்ட விசேஷத்தைச் சுவிசேஷக லூக்கா இரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த பிரகாரமாய்ச் சொல்லிக்காட்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதெப்படியென்முல் அந்தக்காலத்திலே : உலக முழுமையும் குடிக்கணக்கு எழுதப்படும்படியாக செசார் அகுஸ்துஸ் இராயனிடத்திலிருந்து ஓர் கட்டளை பிறந்தது. சீரியதேசத்து அதிபதியாகிய சீரினுஸ் என்பவனுல் இந்த முதலாம் குடிக்கணக்குச் செய்யப்பட்டது. ஆதலால் எல்லாரும் தங்கள் பேர் எழுதிக்கொடுக்கும்பொருட்டு, தங்கள் தங்கள் சொந்த ஊருக்குப் போனுர்கள். அப்படியிருக்க, சூசையப்பர் தாவீதின் கோத்திரத்தையும், குடும்பத்தையும் சேர்ந்தவராகையால், கெற்பவதியான தம்முடைய மனேவி மரியம்மாளோடு பேர் எழுதிக் கொடுக்கும்பட்யாக, கலிலேயாவிலுள்ள நசரேத்தைவிட்டு யூதேயாவிலுள்ள பெத்லேம் என்னும் தாவீது நகரத்துக்குப்போனுர். அவர்கள் அங்கே இருக்கையில் சம்பவித்ததேதெனில், அவளுக்குப் பேறுகாலம் நிறைவேறிற்று. அவள் தன் தலைச்சன் பிள்ளையைப்பெற்று துணிகளால் அவரைச்சுற்றி, முன்னிட்டியில் கிடத்திவைத்தாள். ஏனெனில், சத்திரத்தில் அவர்களுக்கு இடமில்லாமற் போயிற்று. அப்போது அந்த நாட்டில் சில இடையர்கள் விழித்திருந்து, தங்கள் கிடைக்குச் சாமக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இதோ, ஆண்டவருடைய தூதன் அவர்களருகே வந்து நிற்க, தெய்வீகப்பிரகாசம் அவர்களைச் சூழ்ந்து ஒளிர, அவர்கள் மிகவும் பயந்து அஞ்சினுர்கள். ஆனுல் தேவதூதன் அவர்களை நோக்கி : நீங்கள் பயப்படாதிருங்கள் ; ஏனெனில் இதோ, எல்லா ஜனத்துக்கும் மகா சந்தோஷத்தை வருவிக்கும் சுபசெய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். அதேதெனில் : இன்று தாவீதின் நகரத்தில் கிறீஸ்துநாதராகிய இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிருர். குழந்தையைத் துணிகளில் சுற்றி, முன்னிட்டியில் கிடத்தியிருக்கக் காண்பீர்கள் ; இதுவே உங்களுக்கு அடையாளம் என்ருர். என்றவுடனே வானுலக சேனையின் கூட்டம் அந்தத் தேவதூதனேடு சேர்ந்து சர்வேசுரனைத் துதித்து உன்னத ஸ்தலங்களிலே சர்வேசுரனுக்கு மகிமைப் பிரதாபமும், பூலோகத்திலே நல்ல மனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானமும் உண்டாகக்கடவது என்று பாடினுர்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தில் அறியத்தக்க விசேஷமாவது :—அகுஸ்துஸ் சேசார் என்கிற இராயன் தன் முழுராச்சியத்தினும் பெயர்ப் பட்டோலை எழுதக் கட்டளையிட்ட ஞாயம் ஏதென்ருல், அவன் தனக்கு வருகிற வரியை நிச்சயிக்கவேணும் என்று கருதினதினுல் சகல சனங்களும் தங்களுடைய பிதிர்வழியின் இனமுறையின்படியே சென்ம தேசங்களிலே பெயர் எழுதக் கட்டளையிட்டான். ஆனுல் பரலோக இராசாதி இராசனுன பிதாவாகிய சர்வேசுரனுடைய அபிப்பிராயமாவது : உலோக சனங்களை மோட்சராச்சியத்துக்கு நிரூபிக்கப் பெத்திலேம் என்கிற நகரியிலே தம்முடைய திருக்குமாரன் பிறப்பார் என்று முன் திவ்விய தீர்க்கதரிசிகளால் நிச்சயித்திருந்தபடியால் அப்படிப்பட்ட கட்டளையை அவன் உண்டாக்கத் திருவுளமானுர் என்று அறியவும். அந்தக் கட்டளை-



யின்படியே சூசையப்பரும், பரிசுத்த கன்னியாஸ்திரீயான தேவமாதாவும் தங்களுடைய இராசகோத்திரத்தின் ஆதிப்பதியான ஊராகிய பெத்திலேம் நகரியிலே வந்த இடத்திலே தங்க இடம் கிடைக்கவில்லை என்றதே. அப்படியே சர்வலோகத்தையும் உண்டாக்கின சர்வேசுரனுக்கு இளைப்பாற இடங் கிடையாதபோதே எங்களுக்கு இந்தலோகம் நித்தியவாசம் அல்ல என்றும், பிறதேசம் அல்லாதே சுயதேசம் அல்ல என்றும், வழிப்போக்கல்லாதே இளைப்பாற்றி அல்ல என்றும் நினைக்கவேண்டியது.

நகரியிலே தாபரம் இல்லாமல் முன்னிட்டியிலே இருந்தார்கள் என்றதே. அந்த முன்னிட்டி ஏதென்ருல், கோட்டை வாசலருகே வழிப்போக்கருக்கும், மிருகங்களுக்கும் தங்கலான ஒரு ஒதுக்கிருந்தது. அதிலே பரிசுத்த தேவமாதாவும் சூசையப்பரும் சந்தோஷமாயிருந்தார்கள். அதினுல் நாங்கள் அலங்கார விஸ்தார மாட மாளிகைகளை அபேட்சியாமல் நிசிதமான இல்லிடத்தை உசிதமாய் விரும்பப் படிப்பித்தார் என்று அறியவும்.

அப்படிப்பட்ட இடத்திலே இருக்கச்செய்தே, பரிசுத்த கன்னியாஸ்திரீயான தேவமாதா கர்ப்பிணியானநாள் நிறைந்து குமாரனைப் பெற்ருர் என்றதே. அது எந்தவிதமோ என்ருல் மற்ற ஸ்திரீசனங்கள்போலப் பிறவிநோவு உண்டானதல்ல. அதேதென்ருல், அப்படிப்பட்ட துன்பம் ஏவைசெய்த பாவத்திஞல் சர்வேஸ்பரன் சபித்தபிரகாரம் சகல ஸ்திரீ சனங்களுக்கும் சித்திக்கிறதாயிருந்தாலும் தேவமாதா இடத்திலே அப்படிப்பட்ட தோஷத்தின் அடையாளம் முதலாய் அற்பமும் இல்லாததினுல் பிறவித்துன்பம் ஒன்றும் இல்லாமல் அதிக மகிழ்ச்சியாய்ப் பிறவிநோக்குகிறநேரம் அறிந்தார். ஆனதினுல் அந்த நேரத்தில் முட்டிட்டிருந்து ஆகாசத்தைநோக்கி : கைகுவித்து, தியானத்திலே பிரவேசித்து, பிரார்த்திக்கிறபோது அவருடைய ஆத்துமம் பக்தியின் வேகத்தால் பரவசமாகி, இருதயம் முற்றும் அமிர்தம் நிறைந்த தாழியாய், பேரின்ப இரசானியம் நிறைந்த திவ்விய பிரகாசத்தால் உதரம் எல்லாம் அதிநிர்மலம் ஆனது. அந்தநேரத்திலேதானே கன்னிமுத்திரை சற்றுங் குன்ருமலிருக்கப் பளிங்குப் பாத்திரத்திலே பிரவேசித்த சூரியகதிரானது பாத்திரம் தகராமல் தோற்றுகிறமேரையுமாய், விருக்ஷம் மெலியாமல் பூ புட்பிக்கிறதுமாய், புட்பம் நலங்காமல் வாசனை வீசுகிறதுமாய், ஆச்சரிய விதமாக மாதாவின் கெற்பக் குட்சியால் தேவகுமாரன் புறப்பட்டு உலகத்திலே பிரத்தியக்ஷ தெரிசனமானுர். அப்படிப்பட்ட தெரி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தால் அந்தக் கொட்டில் எல்லாம் நடுச்சாமத்திலே சூரியன்
உதயமானதுபோலப் பிரகாசித்திருந்தது. உடனே தானே
பரிசுத்த கன்னியாஸ்திரீயான தேவமாதா ஏலவே தேடி
வைத்த துகில் துணிகளால் பாலனுடைய மிருதுவான மேனி
யைப் பொதிந்து, குளிர் உண்டாகி நடுங்கி அழுதிருந்த குழந்
தையைத் தற்காத்து, வைக்கோல்மீதே சயனிக்கவைத்து,
இரு பாத பங்கயங்களைத் தனது சிரசின்மீது எடுத்தேற்றி
நமஸ்காரம்பண்ணினார். அந்தப்பிரகாரம் சூசையப்பரும் தெண்
டனாக அடிவணங்க, அவ்விடத்திலே இருந்த இரண்டு செந்துக்
களும் தங்களை உண்டாக்கின தேவனை வணங்குகிறதுபோல
ஒடுக்கவணக்கத்தோடிருந்தது.

ஆனால் இப்படிப்பட்ட வறுமையோடே கிடக்கிற தேவ
குமாரனுடைய மகிமையைப் பிதாவாகிய சர்வேசுரன் காண்
பிக்கத் திருவுளமாய் உடனே எண்ணிறந்த கோடி அரூபி
கள் ஆங்காங்கு வாலிப உரூபத்தைக்கொண்டு வானமண்ட
லங்களிலிருந்து இறங்கிவந்து, கீதசங்கீதம்செய்து: பரமண்
டலங்களிலே சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரம் என்று ஒருதன்
இராகம் பாட, பூலோகத்திலே நற்கருத்துடையவர்களுக்குச்
சமாதானம் என்று மற்றவர்கள் பல்லவம்சொல்ல இப்பிர
கார ஸ்துத்தியங்களினாலே மனோகரமான பாடலாய் ஆண்ட
வரைத் துதித்தார்கள்.

இத்தொகையான வசனங்களின் குறிப்பு ஏதென்றால்:
பாவத்தால் சர்வேசுரனோடே பகைத்திருந்த மனுச்சென்
மத்தை இந்தப்பாலன் மத்தியஸ்தனாய்ச் சமாதானமாக்குவார்
என்றும், அப்படிப்பட்ட சமாதானத்தை நற்கருத்துடை
யோர் அடைந்து வானராச்சியத்திலே வெகு மகிழ்ச்சி
கொண்டாடப்படும் என்றும் காண்பிக்கப்பட்டது. ஆனால்
பத்தியுள்ள கிறீஸ்தவர்களே! நீங்களும் இப்படிப்பட்ட சமா
தான நற்கொடைகளைக்கொண்டு உங்கள் அண்டையிலே வந்
திருக்கிற இந்தப் பாலனைத் தெரிசிக்கப்போக வேண்டாமோ?
வந்ததேது? காரணமேது? இட்டிடை முட்டிடை ஏது?
அழுகை ஏது என்று விசாரிக்க வேண்டாமோ? எங்கள்
நேசத்தைக் காண்பித்து அவரை ஆதரிக்கவும், அனுசரிக்கவும்
வேண்டாமோ? வேண்டுமே. ஆகையால் சகலமானபேரும்
அவர் திருப்பாத அடியிலே பணிந்து நமஸ்கரித்து, இப்படியே
ஆராதனை சொல்லுவோமாக:

அமிர்தம் நிறைந்த பாலனே! தேவரீர் சர்வ பராபர அநாதிபிதா
வாகிய சர்வேசுரனுடைய சுதனல்லவோ! இகலோக பரலோக, மகி
மை அடைந்த தேவனல்லவோ! ஆனால் இப்போது இந்த மாட்டுக்



கொட்டிலிலே சிறுவனாய் வந்ததென்ன? சருவலோக ராயனென்றால்
உமக்கு மாளிகையில்லையோ? சிங்காசனமில்லையோ? இராசபரிவார
மில்லையோ? சொர்ணத்தால் உண்டாக்கின நகரமும் மாணிக்கத்தால்
உண்டாக்கின மாளிகையுமுண்டே. பெலவத்தர் ஞானதிக்கருடைய
சிரசின்மீதே ஸ்தாபித்த திவ்விய சிங்காசனமுண்டே. நவ ஆலோக
பந்தி அரூபிகள் புடைசூழ்ந்து, எண்ணிறந்த கோடி மோக்ஷானந்தி
கள் பண்செய்கிறதுண்டே. ஆனால் இதெல்லாம்விட்டு இந்த முன்னிட்
டியிலே வறுமையாய்க் கிடப்பதேது? வைக்கோல்மீதே படுப்பதேது?
செந்துக்களோடே இருப்பதேது? அமுதபாலனே சோதிமண்டலங்
களுக்கு ஒளிவுகொடுக்கிறதும், இராயர்களுக்கு இராசாதிக்கம் கொடுக்
கிறதும், கமலப்புட்பங்களுக்குச் சோபன அலங்காரம் கொடுக்கிற
தும் நீரல்லவோ? ஆனால் இப்போ உமக்குத் துகில் வறுமைப்பாடாவ
தென்ன? திவ்விய அக்கினிச் சுவாலையான உமக்குக் குளிரென்ன?
மோக்ஷானந்தமான உமக்கு அழுகையென்ன? பரகதி சேருகிற துக்
கத்தின் இட்டடைவழியைக் காண்பிக்கக் குருவாய் வந்ததினால் இந்
தத் துக்கித்த வேஷத்தைக்கொண்டு இந்த இட்டடைகள் எல்லாம்
படுகிறீரோ? திருவாக்குத் திறந்து பேசாத குழந்தையாய் இருக்கிற
தினாற் சரீர உறுப்புகள் எல்லாம் நாவாய், சரித்திரங்கள் வாக்கியங்
களாய் ஞானபோதகம் படிப்பிக்கிறீரோ? இப்படிப்பட்ட உம்முடைய
தனிமையைக்கண்டு மேட்டிமையாளருடைய ஆங்கார எண்ணங்கள்
எல்லாம் தள்ளுண்டுபோமே. வைபோகர், ஐசுவரியருடைய செல்வ
மெல்லாம் மிதிபட்டும், பவுள்சு, வாழ்வு எல்லாம் வியர்த்தமாயும்
போமே. பேசத் துவக்குமுன்னே இம்மாத்திரம் தர்மபோதகங்கள்
காண்பிக்கிறபோதே திருவாக்கென்கிற சொர்ண செப்புத் திறந்த
காலத்திலே எம்மாத்திரம் சுகிர்தவாசனை உலோகத்திலே பரிமளிக்க
மாட்டாதோ? வான இராச்சியத்திலே முளைத்த கோதும்பை விதை
யான நீர் பூமியிலே விழுந்தபோதே உலோகம் எல்லாம் மதாளித்து,
ஆத்துமம் எல்லாம் சீவிக்கக் கோதும்பை விளையாதோ? திவ்விய
அக்கினியான நீர் வைக்கோல்மீதே விழுந்தபோதே தீக்கொந்தளித்து
பாவம் எல்லாம் எரிந்து, நீருகி மனு இருதயம் எல்லாம் பத்திச்சுவா
லைப் பிரளயமாயிராதோ? இந்த உம்முடைய இரு நேத்திரங்கள் என்
கிற திவ்விய கங்கையில் பாய்ந்துவருகிற தண்ணீரால் பூமியிலே தர்
மம் விளையாத தலம் இருக்குமோ? சகல உலோகமும் சுகிர்தவிருக்ஷ
மாய்க் கனித்துப் பிரயோசனம் தருமே. ஆனதினால் இப்படிப்பட்ட
சுகிர்த பலன்களுக்காக நீர் அழுகிறதென்றால் இனி அந்தக் கண்ணீர்
ஓய்ந்து அழுகை தவிர்ந்து, ஆறுதலாயிருக்கலாம். பாவியாயிருக்கிற
அடியேனுக்காகத் தேவரீர் வந்தபோதே இந்த இடைஞ்சலான முன்
னிட்டியிலே கிடக்கக்கடவதல்ல. மிகுந்த ஆசையால் கன்றியிருக்
கிற என்னிருதயத்திலே சயனிக்க வாரும் சுவாமீ. அதிலே குளிர்
காற்றுப் பிரவேசியாமல் ஒடுக்கத்தால் பஞ்சேந்திரிய கபாடங்களை
அடைத்து, கொள்கையாற் திரைசெய்து மறைத்திடுவேன். இராசகுமார
னாயிருக்கிற உமக்கு இராசபணதி செய்வேன். என் விசுவாசத்தால்
திருத்தலையில் மகுடஞ் சூட்டுவேன். நம்பிக்கையால் திருக்கரத்தில்
செங்கோலை இஸ்தாபிப்பேன். பத்தியால் திருப்புயத்தில் முத்தாரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூணிடுவேன். தாழ்ச்சியால் திருப்பாதத்தில் பொற்பாதரக்ஷை தொடுவிப்பேன். சுகிர்தத்தால் கனக மாணிக்க மயமான பூஷணஞ் சர்வமும் செய்து உம்முடைய தெய்வீக இராசமகிமைக்கு ஏற்ற ஆசாரத்தோடு அடிபணிவேன். ஆனதினால் என் இருதயத்திலே எழுந்தருளும் சுவாமீ. உம்முடைய கிருபையால் என் பாவத்தைப் பொறுத்துப் பிரசாதத்தால் என் ஆத்துமத்தை அலங்கரித்துச் சுகிர்தத்தால் பரகதி நவநிதிய பாக்கியத்துக்கு என்னைப் பேறுபெற்றவனாக்கிக்கொள்ளும் சுவாமீ. ஆமென்யேசு.

## திருச்சபைச் செபம்.

இந்த மகா பரிசுத்த இரவானது மெய்யான ஞானச் சூரியனாகிய உமது திருச் சுதனின் ஒளிக் கிரணங்களினால் பிரகாசம் அடையச் செய்த சருவேசுரா சுவாமீ! இந்தப் பிரகாசத்தின் இரகசியங்களைப் பூலோகத்திலே கண்டுகொண்ட அடியோர்கள் பரலோகத்திலேயும் அவருடைய தேவபிரகாசத்தின் மூலமாய் ஆனந்த சந்தோஷமடைய அனுக்கிரகம்பண்ணியருளும். அவரே தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவர், ஆமென்யேசு.

---

# கர்த்தர் பிறந்த திருநாளில்
## இரண்டாம் பூசையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

எங்கள் கர்த்தனான யேசுக்கிறீஸ்து பிறந்த மகிமையான விசேஷத்தையும் அதைத் தேவதூதர் இடையர்களுக்கு அறிவித்த வகையையும் சுவிசேஷக லூக்கா எழுதிவைத்த பிரகாரம் முன் பிரசங்கம்பண்ணப்பட்டதே. இப்போது அப்படிப்பட்ட இடையர் ஆண்டவரைத் தெரிசிக்கவந்த சம்பவத்தை அந்த அதிகாரத்திலேதானே எழுதியிருக்கிற பிரகாரஞ் சொல்லிக்காட்டுவோம்.

அதெப்படியென்றால்: தேவதூதர்கள் அவர்களைவிட்டுப் பரலோகத்துக்குப் போனவுடனே, இடையர்கள் ஒருவரொருவரை நோக்கி: நாம் பெத்லகேமட்டும் போய், சம்பவித்ததும், ஆண்டவர் நமக்கு அறிவித்ததுமாகிய இந்தச் சங்கதியைப் பார்ப்போமாக என்று பேசிக்கொண்டு, தீவிரமாய் வந்து, மரியம்மாளையும், சூசையப்பரையும் முன்னிட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டார்கள். கண்டு, அந்தக் குழந்தையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியை அறிந்துகொண்டார்கள். அன்றியும் கேட்டவர்களெல்லாரும் இடையர்களால் தங்களுக்குச் சொல்லப்பட்டவைகளின் பேரிலும் ஆச்சரியப்பட்டார்கள். மரியம்மாள் இந்த வாக்கியங்களையெல்லாம் தன்



இருதயத்தில் வைத்துச் சிந்தித்துக்கொண்டு வருவாள். இடையரும் தங்களுக்குச் சொல்லப்பட்டபடியே தாங்கள் கண்டதும் கேட்டதுமாகிய யாவற்றையும்பற்றிச் சர்வேசுரனைப்போற்றிப் புகழ்ந்துகொண்டு திரும்பிப்போனார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷமாவது: கர்த்தர் பூலோகத்திலே பிறந்தபோது இந்த விசேஷத்தை லோக அரசாட்சி பண்ணுகிற மகா மகத்துவ இராசாக்களுக்கு அறிவியாமல் இடையருக்கு முதல் அறிவிக்கத் திருவுளமானது ஏதென்றால், அந்த இராச்சியத்தை ஆளுகிற ஏரோதி முதலான மற்றப் பேர்போந்த இராசாக்கள் லோக வெகுமான பவுள்சின் ஆசை முதலான விசாரங்கள் மிகுந்து, மனசுகலங்கி இருக்கிறதினால் அப்படிப்பட்டவர்கள் தேவதரிசனத்துக்குப் பாத்திரர் ஆகவில்லை. இடையரோ என்றால் தாழ்ச்சி, எளிமைமிகுந்து பணிந்திருந்ததினால், ஆகாசமழை பள்ளக்கால்களிலே கூடுமாப்போலச் சர்வேசுரனுடைய அருள் அவர்களுக்குக் கிடைத்தது. இதல்லாமல் ஆண்டவர் ஆத்துமாக்களுடைய மேய்ப்பனாக வந்ததினால் முதல் மேய்ப்பருடைய சங்கர்த்தத்தைத் தேடினார் என்கிறதற்கு விபரமாம்.

தேவதூதன் சொன்ன விசேஷத்தைக் கேட்டவுடனே இடையர் ஆண்டவரைத் தெரிசிக்க வந்தார்கள் என்றதே, அது எத்தன்மையோ என்றால் தங்களுக்கு உண்டான காணிக்கைகளைக்கொண்டு தெரிசித்தார்கள் என்று அறியவும். அந்தக் காணிக்கைகள் ஏதென்றால், அவர்கள் செய்துகொண்டிருந்த தொழிலின்படியே தங்களுடைய மந்தைகளிலும், நந்தாவனங்களிலும் உண்டான பலன்களைக் கொண்டுவந்தார்கள் என்று நினைக்கலாயிருக்கும். அதாவது: சிலர் ஸ்தூல செம்மறிக்குட்டிகளையும், சிலர் புட்பம், காய், கனிவர்க்கங்களையும், சிலர் புறு பட்சிகளையும், சிலர் பாணி, பால், நெய், எண்ணெய் இதுமுதலான பதார்த்தங்களையுங் கொண்டுவந்தார்கள் என்று சொல்லலாகும். ஆனதினால் இப்படிப்பட்ட இடையர்களுடைய பத்தியைக் காண்கிற நாங்கள் எங்கள் மனதிலேமிகுந்த தாற்பரியத்தால் ஞானக் காணிக்கைப் பதார்த்தங்களை உண்டாக்கிக்கொண்டு எங்களை ஈடேற்றுகிறவரைத் தரிசிக்கக்கடவோம். அதேதென்றால், செம்மறியாகிய சாந்துவத்தையும், புறுவாகிய அவகடமற்ற மனதையும், புட்பமாகிய மனமகிழ்ச்சியையும், பழமாகிய நற்கிரியையையும், பாணி பாலாகிய மதுரகுணத்தையும், நெய் எண்ணெயாகிய இரக்கத்தையும் என்று இப்படிப்பட்ட சுகிர்தங்களைக்கொண்டு ஆண்டவருடைய திருப்பாதந் தரிசித்து நமஸ்காரம்பண்ணக்கடவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ ! மாமிசமாய் அவதரித்த உம்முடைய தேவ வார்த்தையானவருடைய நவமான ஒளியினால் சூழப்பட்டிருக்கிற நாங்கள் எங்கள் மனதில் பிரகாசிக்கிற விசுவாசத்துக்கு ஏற்றபடி சீவிக்கிறவர்களாகி எங்கள் கிரியைகளிலும் அந்த ஒளி வீசும்படி செய்யக் கிருபைபண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிற வருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# கர்த்தர் பிறந்த திருநாளுக்கு
## அடுத்த ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா இரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே, பிதாவும், மாதாவும் திவ்விய பாலனைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளின் பேரில் அதிசயித்துக் கொண்டிருந்தார்கள். அல்லாமலும், சிமையோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாராகிய மரியம்மாளை நோக்கிச் சொன்னதாவது : இதோ, இவர் இஸ்ராயேலில் அநேகருக்குக் கேடாகவும், உத்தானமாகவும், விரோதிக்கப்படும் குறியாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். உம்முடைய ஆத்துமத்தையும் ஓர் வாள் ஊடுருவும் ; இதினாலே அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படும்படியாகும் என்றார். அன்றியும், ஆசேர் கோத்திரத்தாளும், பானுவேல் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஓர் தீர்க்கதரிசினி இருந்தாள். அவள் கன்னிமைப் பிராய முதல் தன் புருஷனோடு ஏழு வருஷம் வாழ்ந்தவளும், அதிக வயசு சென்றவளுமாயிருந்தாள். எண்பத்துநாலு வயதுமட்டும் விதவையாயிருந்த அவள் தேவாலயத்தைவிட்டு அகலாமல், இரவும் பகலும் உபவாசித்து ஜெபஞ்செய்து (ஆண்டவருக்கு) ஊழியஞ்செய்துகொண்டு வந்தாள். அவளும் அந்நேரத்தில் சடுதியிலே வந்து, ஆண்டவரை ஸ்துதித்து, இஸ்ராயேலின் இரட்சிப்புக்காகக் காத்துக்கொண்டிருந்தயாவரோடும் அவரைக் குறித்துப் பேசினாள். கர்த்தருடைய வேத கட்டளைப்படி அவர்கள் சகலத்தையும் நிறைவேற்றின பின்பு, கலிலேயாவிலுள்ள நசரேத்தென்னும் தங்கள் ஊருக்குத் திரும்பிப்போனார்கள். பிள்ளை வளர்ந்து, ஞானத்தால் நிறைந்து, பலப்பட்டுவந்தது ; சர்வேசுரனுடைய அருளும் அவரிடத்தில் இருந்தது.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது : சிமியோன் என்கிற தர்மவாளன் பரிசுத்த தேவ



மாதாவைப் பார்த்து அவருடைய திருக்குமாரன் அநேகம்
பேர்களுடைய மாணத்துக்கும் எழுந்தேற்றத்திற்கும் இடமா
யிருப்பார் என்று சொன்ன விபரம் ஏதென்றால் : அவரை
விசுவசித்து அவருடைய தர்மத்தை அனுசரித்தவர்கள் மோக்ஷ
சீவியமுடைத்தான சரீரத்தோடு எழுந்திருப்பார்கள் என்
றும் ; அவரை அனுசரியாதவர்கள் நரகத்துக்கு ஏதுவாய் நாச
மாய்ப் போவார்கள் என்றும் சொல்லப்படும். இதல்லாமல்
விரோதங்களுக்கு இலக்காய் இருக்கும் என்றதினால், யூதர்
அவருடைய தர்மத்துக்கும் தேவ சுபாவத்துக்கும் விரோதம்
பண்ணுவார்கள் என்று சொல்லப்படும். அத்தைக் கண்டு
தேவமாதா அனுபவிக்கிற வியாகுலமானது, அவருடைய இரு
தயத்தில் தைத்த வாள் என்கிறதற்கு அர்த்தமாம். அதின்
பின் ஆனாள் என்கிற விதவை இராப் பகல் செபத்தியான
உபவாசத்தோடு கோவிலைவிட்டுப் பிரியாமல் இருந்தார் என்ற
தினால், அறுதலியாய் இருக்கிற ஸ்திரி சனங்கள் ஒடுக்க
வணக்கத்தோடே நடக்கவேண்டிய நடபடியைக் காண்பித்
தார். ஈற்றிலே தேவகுமாரன் வயதிலும் ஞானத்திலும்
வளர்ந்துகொண்டிருந்தார் என்றதினால் நாங்கள் இந்தலோகத்
திலே சீவித்திருக்குந்தனையும், நாளுக்குநாள், கடிகைக்குக்கடி
கை, தர்மத்திலே வர்த்திப்பாய் நடக்கவேணும் என்று அறி
யக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லமையுள்ள நித்திய சருவேசுரா ! தேவரீருடைய திரு
வுளப்படியே எங்கள் சகல கிரியைகளையும் நடப்பித்து, உம்முடைய
நேச திருக்குமாரனுடைய நாமத்தினால் நாங்கள் சகல புண்ணியங்
களிலும் நிறைவுள்ளவர்களாயிருக்க அனுக்கிரகம் பண்ணியருளும்.
இவரே தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனு
மாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாம்
ஆமென்யேசு.

---

# கர்த்தருக்கு விருத்தசேதனச் சடங்கு செய்த
## திருநாளில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

நவமான வேதாதிபரனை எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து தம்
முடைய நூதனவாக்கியம் என்கிற ஞானப்பிரகாசம் பூலோகத்திலே
பிரகாசிக்கும்படி கருணைப்பிரசன்னமாய் உதித்தாரே. ஆனால் அப்படிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட கருணையைச் செலுத்துமுன்னே பூர்வவேத ஆசாரங்களை அழியாமல் அதில் விருத்தசேதனச் சடங்கைத் தம்மிடத்திலே செலுத்துவிக்கத் திருவுளமான உற்சவம் இன்று கொண்டாடப்படுவது.

அதைச் சுவிசேஷக லூக்கா இரண்டாம் அதிகாரத்தில் எழுதிவைத்த பிரகாரமாவது :— அந்தக்காலத்திலே பிறந்த பாலனுக்கு விருத்தசேதனம் செய்யப்படுவதற்காக எட்டுநாள் நிறைவேறினபிறகு அவர் தாயின் உதரத்தில் உற்பவிக்கும் முன்னமே சம்மனசானவரால் சொல்லப்பட்ட யேசு என்னும் நாமதேயம் அவருக்குச் சூட்டப்பட்டது.

இந்த வாக்கியத்திலே விருத்தசேதனச்சடங்கின் கிரமமும் யேசு என்கிற நாமத்தின் மகிமையும் ஏதென்று அறியக்கடவோம். சேதனச்சடங்கு ஏதென்றால் : அது பூர்வ வேதத்தை அனுசரிக்கிறவர்களுக்கு அடையாளமாகவும் பின்வருகிற கிறீஸ்து விசுவாசத்தால் பாகதிசேருதலுக்கு ஆயத்தமாகவும் சர்வேசுரன் கட்டளையிட்ட சடங்காம். ஆனால் இப்படிப்பட்ட கட்டளை மனுஷருக்குக் கடினமானபடியால் அதைக் கிறீஸ்துநாதர் விலக்கி அதின் இடமாக இப்போது ஞானஸ்நானம் என்கிற சடங்கை அதிக பிரசாத பலனுள்ளதாக்கக் கற்பித்தார். ஆனால் இதுக்குமுன் பூர்வ வேதத்தின் கட்டளையை மீறுதபடிக்குப் பரிசுத்த கன்னியாஸ்திரீயான தேவமாதா தம்முடைய திருக்குமாரன் பிறந்த எட்டாம்நாள் வேதாந்தியை அழைத்துவந்து அவருக்கு அந்தச் சடங்குபண்ணுவிக்கவே அவருக்கு யேசு என்கிற பேரை இட்டார்கள். ஆனால் இப்படிப்பட்ட சடங்கு செய்கிறவேளையிலே திவ்விய பாலனுடைய திருமேனியால் சொரிந்த திரு உதிரத் துளிகளும் பிரிந்த திருமாங்கிஷசேஷமும் என்ன விபரமோ எனில்: பின்னொருநாள் எங்கள் ஆத்தும மீட்சிக்கு விலையாகக் கொடுக்கப்பட்ட தம்முடைய சர்வாங்க உதிரத்துக்கு இந்தத் துளிகள் முன் அச்சாரமாகக் கொடுத்தது என்று அறியவும். ஆனதினால் இந்த அமிர்தமான பாலன் தம்முடைய மிருதுவான பசியமேனியில் இம்மாத்திரம் வாதைப்படுகிறபோதே நாங்கள் அவருக்காக எத்தனை பாடுகள் படவேணும் என்று விசாரிக்கக்கடவோம். இதல்லாமல் அவருடைய திருமேனியிலே ஆயுதத்தால் செய்யப்பட்ட சேதனத்தைக்கண்டு நாங்கள் தியானத்தால் எங்கள் மனதின் துர்க்குணங்களையும், கோபம், மோகம், துவேஷம் முதலான அக்கிருத்திய ஆசை அபேட்சை எல்லாவற்றையும் சங்கரிக்க வேணும் என்று அறியவும்.

அதின்பின் இப்படிப்பட்ட நாளிலே அவருக்கு யேசு என்கிற திருநாமம் தரிக்கப்பட்ட காரணம் ஏதென்றால்: யேசு என்கிற நாமத்தின்கருத்து ஈடேற்றுகிறவர் என்று சொல்லப்



படும். அப்படிப்பட்ட நாமம் முன்தேவதூதனால் அறிவிக்கப்பட்டிருந்தாலும் இன்று எங்கள் ஆத்தும ஈடேற்றத்துக்குத் தம்முடைய சரீரத்தின் திரு இரத்தம் சிந்தத் துவங்கினதால் இன்றுதானே ஈடேற்றுகிறவர் என்கிற நாமத்தைத் தமக்குச் சூட்டிக்கொள்ளத் திருவுளமானார் என்று அறியவும். ஆனால் இப்படிப்பட்ட நாமத்தின் மகிமை ஏதென்றால்: இந்த லோகத்திலே புகழப்பட்ட சகலமான நாமங்களுக்குள்ளும் உத்தமமானது என்று அறியவும். அதேதென்றால் ஈடேற்றுகிறவர் என்கிற ஒரு வாக்கியத்தால் அவருடைய தயை, பொறுமை, பராக்கிரமம், வல்லபம், சுகிர்தம் எல்லாம் காண்பித்திருக்கிறதினாலேயும், பிதாவாகிய சர்வேசுரன் அனந்த கருணையாய் இந்த நாமத்தை யோசித்து அதைச் சொல்லிவரவிட்டதினாலேயும், அதற்குச் சமானமான நாமம் பூலோகத்திலே இல்லை என்றும், அது ஒப்பில்லாத மகிமையுள்ள நாமமாம் என்று அறியலாம். ஆனதினால் இகலோக, பரலோக, பாதாளம் என்கிற சகல லோக இடங்களிலும் அந்த நாமத்தைக் கேட்டவர்கள் நமஸ்கரிக்கக் கடவது என்று சர்வேசுரன் திருவுளம் பற்றினார். இதன்றியே இந்த நாமத்தின் முயற்சி வல்லமை ஏதென்றால்: யேசு என்கிற நாமத்தை உச்சரித்த உடனே ஆவேஷமேறுகிற பேய்களுக்கு விண்ணேறுபோலப் பயங்கரமாம். பில்லி, சூனிய பந்தனங்களுக்குக் கூரிய ஆயுதம் போலச் சங்கரித்தலாம். வியாதி, வாதை, கஷ்டங்களுக்குப் பரம அவுஷதமாம் சமுத்திர ஆபத்துக்களுக்கு அஞ்சாத உருயாத்திரையாம். அக்கினி அகோரத்துக்குக் குளிர்ந்த பனி வருஷித்தலாம். சகல விகட துரிதங்களில் காவலுமாய், நரக வாசலை அடைத்தலுமாய், பாகதிவாசலுள் பிரவேசிப்புமாய், சகல மனுஷருக்கு ஈடேற்றமுமாயிருக்கும். அப்படியே யேசு ஆகிய ஈடேற்றுகிறவர் என்கிற நாமத்தின் கருத்து பிரத்தியக்ஷமாம் என்று அறியவும். ஆகையால், சமஸ்த சனங்களும் அப்படிப்பட்ட அமிர்தம் பொழிகிற தேனிருட்டு ஆகிய யேசு என்கிற திருநாமத்தை அனுதினமும் அவதானித்து இருதயத்திலே பதித்துச் சகல அவசரங்களிலேயும், விசேஷமாய்ப் பிராணவியோக அவஸ்தையிலேயும் யேசுவே! யேசுவே! என்று இடைவிடாமல் உச்சரிக்க வேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுராசுவாமி! தேவரீர் முத்திப்பேறுபெற்ற மரியம்மாள் கன்னிமை குன்றுமலிருந்துகொண்டு பெற்றெடுத்த தெய்வீக மகவின்மூலமாய் மனுக்குலமானது இரட்சணியமடைவதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களை அதற்குக் கொடுத்தருளினீரே. சீவியத்தின் காரணராகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துவை எங்களுக்குத் தந்த அந்தத் தேவ கன்னிகை எங்களுக்காக என்றும் மன்றாடிக்கொண்டுவரவும் அனுக்கிரகஞ் செய்தருளும். அந்த எங்கள் ஆண்டவரே தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவர் ஆமென்யேசு.

---

# கர்த்தர் பிரத்தியக்ஷமான திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

தினமண்டலராயன் உதித்த பிரதாபம் சகலலோக திக்கிலும் பிரகாசிக்குமுன்னே தனது இரத்தமயமான கதிர்களைக் கிழக்கு எல்லையில் தோற்றுவிக்கிற பிரகாரமாய்ப் பரமண்டல ஆதிபர இராயனான யேசுக்கிறீஸ்து பூமண்டலத்தில் பிறந்த மகிமையை முதற் கிழக்கு இராசாக்களுக்குப் பிரசித்தமாக்கின மகோற்சவம் இன்று கொண்டாடப்படுவது. அத்தைச் சுவிசேஷக மத்தேயு இரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த பிரகாரம் சொல்லிக்காட்டக் கடவோம்.

அதெப்படி என்றால்: அப்படியே எரோதராசனுடைய நாட்களில் யூதாவின் ஊராகிய பெத்லகேமிலே யேசுநாதர் பிறந்திருக்கையில் இதோ கீழ்த்திசையினின்று சோதிட சாஸ்திரிகள் எருசலேம் நகருக்கு வந்து யூதருடைய இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? ஏனெனில் கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை ஆராதிக்க வந்தோம் என்றார்கள். எரோதராசன் இதைக் கேட்கவே கலங்கினான். ஜெருசலேம் முழுதும் அவனோடு கலங்கினது. பின்னும் அவன் பிரதான ஆசாரியரையும், ஜனத்தின் வேதபாரகரையும் ஒன்றாய்க் கூட்டி கிறீஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடம் விசாரித்தான். அவர்கள் அவனுக்குச் சொன்னதாவது: யூதாவின் பெத்லகேம் ஊரிலேதான்; ஏனெனில் தீர்க்கதரிசியால் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது: "நீயோ பெத்லகேமே, யூதாவின் காணியே, யூதாவின் சிரேஷ்ட நகரங்களில் நீ அற்பமேனும் சிறிதல்ல. ஏனெனில், எனது இஸ்ராயேல் ஜனத்தை ஆளுந்தலைவர் உன்னிடமிருந்து வெளிப்படுவார்" என்பதாம். அப்போது எரோதன் சோதிட சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து அவர்களுக்கு நட்சத்திரந் தோன்றின காலத்தைப்பற்றி ஜாக்கிரதையாய் விசாரித்து அறிந்தான். பிறகு அவர்களைப் பெத்லகேம் ஊருக்கு அனுப்பி: நீங்கள் போய், பிள்ளையைப்பற்றி ஜாக்கிரதையாய் விசாரியுங்கள். அவரை நீங்கள் கண்டபின் நானும் வந்து அவரை ஆராதிக்கும்படி எனக்கு அறிவியுங்கள் என்றான். அரசன் சொன்னதை அவர்கள் கேட்டபின் புறப்பட்டார்கள். அப்போது இதோ, கீழ்த்திசையில் அவர்கள் கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த இடத்தின்மேல்வந்து நிற்குமட்டும் அவர்களுக்கு முன் சென்றது. அவர்களோவென்றால் நட்சத்திரத்தைக்கண்டு சந்தோஷ மிகுதியால் ஆனந்தங்கொண்டார்கள். பின்பு வீட்டில் பிரவேசித்துப் பாலனை அவர் தாயான மரியம்மாளோடு கண்டு, சாஷ்டாங்கமாக விழுந்து அவரை ஆராதித்தார்கள். மேலும் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னும், தூபவர்க்கமும், மீறையும் அவருக்குப் பாதகாணிக்கை வைத்தார்கள். மேலும் அவர்கள் எரோதனிடம் திரும்பிப்போகாதபடி நித்திரையில் உத்தரவு பெற்றதால், வேறே மார்க்கமாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.



இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷமாவது:—ஆண்டவரைத் தரிசிக்கச் சோதி சாஸ்திரிகள் வந்தார்கள் என்று சொன்னதே. அவர்கள் ஆர் என்றால் கிழக்குச் சீமை அடங்கிய தேசங்களை ஆண்டிருந்த வெலிச்சோரு, கஸ்பாறு, வலத்திசார் என்ற இந்த மூன்றுபேராம். அவர்கள் சோதிஷத்திலே தெளிந்திருந்ததினால் சோதிசாஸ்திரிகள் என்று சொல்லப்படும். அவர்கள் கண்ட நட்சத்திரம் எத்தன்மையோ என்றால், சோதி சாஸ்திரத்திலே குறிக்கப்பட்ட யாதொரு தாரகை அல்ல. தேவவிசேஷ பொருட்டால் நவமாய் உண்டாக்கப்பட்ட மகா சுவாலை ஒளிவுள்ள ஒரு தீபிகையின் தோற்றம் என்று அறியவும். அது பூமிக்குச் சமீபமாக இராப்பகல் ஒருகண்டசீராய்ப் பிரகாசித்திருந்ததினால் நட்சத்திர ரூபமாய் வந்த தேவதூதன் என்று சில வேதபாரகர் யோசித்துச் சொல்லுகிறார்கள்.

அப்படிப்பட்ட நட்சத்திரத்தால் கிறீஸ்துபிறந்த விசேஷம் அறிந்தது எப்படி என்றால், முன் தீர்க்கதரிசிகள் எழுதிவைத்த வாக்கியங்களினாலேயும் சர்வேஸ்பரன் அவர்கள் மனதிலே கொடுத்த அருட்பிரசாதத்தினாலேயும் தெளிந்தார்கள் என்று அறியவும். ஆனதினால் அப்படிப்பட்ட தெய்வீக இராசகுமாரனைக் காணவேணும் என்று மிகுந்த தாற்பரியத்தால் தங்களுடைய சீமைகளை விட்டுப் புறப்பட்டார்கள். நட்சத்திரம் அவர்களுக்கு வழிகாட்டினமேரை எப்படி என்றால், மனுஷன்முன் நடந்து போகிறதுபோலப் பெரும்பாதையில் நோக்கம்விடாமல் நேராகத் தோன்றித் தரிக்கிற தலங்களையும் காண்பித்து வரும்.

ஆனால் எருசலேம் நகரியில் வந்தபோதே வழி அறியாமல் யூதர் இராயன் பிறந்தவிடம் எங்கு என்று கேட்டுத் திரிந்த காரணம் ஏதென்றால்: அந்த நகரியிலே சேர்ந்த உடனே நட்சத்திரம் மறைந்துபோகச் சர்வேசுரன் திருவுளமானார். அதேதெனில், அந்த நகரியில் இராசபிரதானி முதலான குடியான

வர்களுடைய மனசு துஷ்ட விசாரங்களினாலே கலங்கியிருந்தபடியால் தேவபுதுமையான பிரகாசம் அவர்களுடைய கண்ணுக்குத் தோன்றச் சர்வேசுரனுக்குத் திருவுளமாகவில்லை. ஆனதினாலே இராசாக்கள் அந்த நகரியை விட்டுப் புறப்பட்ட உடனே மறுபடியும் நட்சத்திரத்தைக் கண்டார்கள். அம்மருவாதியே நாங்கள் பாவவிசாரம் முதலான உலோக எண்ணங்களில் அமிழ்ந்தியிருக்குங் காலத்திலே சர்வேசுரனுடைய அருள் ஒளியும், மோக்ஷ பிரகாசமும் எங்களுக்குத் தோற்றமாட்டாது என்று அறியவும்.

தரிசிக்கவந்த இராசாக்கள் எத்தனை நாளிலே பெத்திலேநகரியில் சேர்ந்தார்களோ என்றால், பதின்மூன்றும் நாளுக்குள்ளாகச் சேர்ந்தார்கள் என்று சில வேதபாரகர்களால் எண்ணப்படுகிறது. அவர்கள் கொண்டுவந்த காணிக்கைகளுடைய மகிமை ஏதென்றால், தாங்கள் இருந்த கிழக்குச் சீமையில் விளைகிற உச்சித பதார்த்தங்களைக் கொண்டுவந்தார்கள். அதாவது, வெலிச்சோர் என்கிறவன் பசும்பொன்னையும், கஸ்பாறு என்கிறவன் தூபத்தையும், வலத்திசார் என்கிறவன் மீறை என்ற சுகந்த பிசினையுங் கொண்டுவந்தார்கள். அப்படிப்பட்ட காணிக்கைகளைக் கொண்டுவந்த விபரம் ஏதென்றால், பொன்னைக் காணிக்கைவைத்ததினால் தாங்கள் தரிசிக்கவந்த ஆண்டவர் சர்வாதியக்ஷ்ய இராயன் என்றும், தூபத்தால் சர்வேசுரன் என்றும், சுகந்த பிசினைக்கொண்டு மரித்தோர் சரீரங்கள் அபிஷேகம்பண்ணுகிறதினால், அவர் சாகிற மனுஷன் என்றும் காண்பித்தார்கள். இந்தவகையாக எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து மெய்யான சர்வேசுரனும், மெய்யான மனுஷனும், இராசாதிராசனும் என்று விசுவசித்த விசுவாசத்தை உலோகத்துக்குப் பிரசித்தம்பண்ணினார்கள் என்று அறியவும். இதல்லாமல் இந்த மூவித காணிக்கைகளால் எங்களுக்கு ஒரு உத்தமமான ஞானபோதகத்தைப் போதித்தார்கள். அதாவது பொன்னாகிய நேசமும், தூபமாகிய தியானமும், மீறையாகிய சரீர ஒறுத்தலுமாம். இப்படியே அந்த மூவித சுகிர்தம் என்கிற ஞான தெட்சணையை எங்கள் இருதயமென்கிற பேழையைத் திறந்து எடுத்துப் பாதகாணிக்கைவைத்து எங்களை ஈடேற்றுகிற ஆண்டவரைத் தரிசிக்கவேணுமென்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுராசுவாமீ! தேவரீர் இந்தத் தினத்திலே நவமான வெள்ளியொன்று வழிகாட்டப் புறச்சாதியார் வந்து உம்முடைய ஏக பேறான திருக் குமாரனை அறிந்துகொள்ளும்படி வெளிப்படுத்தியருளினீரே. இப்போது விசுவாசத்தினால் உம்மை அறிந்திருக்கிற நாங்கள் தேவரீருடைய மோட்சமுக தரிசனையை அடைந்து அக்களிக்குந்தனையும் வழிநடத்தப்படத் தக்கதாக எங்களுக்கு அனுக்கிரகஞ்செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துவாகிய அவரே காரணகாட்சியாக, ஆமென் யேசு.



---

# கர்த்தர் பிரத்தியக்ஷமான
## திருநாளுக்கு அடுத்த
## முதலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா இரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—யேசுநாதருக்குப் பன்னிரண்டு வயது நடக்கிறபோது அவர் தாய் தந்தையர்கள் பண்டிகையின் வழக்கப்படி ஜெருசலேமுக்குப்போய் பண்டிகைநாட்கள் முடிந்து திரும்பி வரும்போது பாலனாகிய யேசுநாதர் பிதா மாதாவுக்குத் தெரியாமல் ஜெருசலேமிலே தங்கிவிட்டார். அவர் தங்கள் கூட்டத்தாரோடு இருப்பாரென்று அவர்கள் எண்ணிக்கொண்டு, ஒருநாள் பயணம் வந்து, தங்கள் இனத்தாரிடத்திலும், அறிமுகமானவர்களிடத்திலும் விசாரித்தும், காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டு, ஜெருசலேமுக்குத் திரும்பிவந்தார்கள். பின்னும் சம்பவித்ததேதெனில், மூன்று நாளைக்குப் பிறகு தேவாலயத்திலே அவர் சாஸ்திரிகள் நடுவிலே உட்கார்ந்து, அவர்கள் சொல்லுகிறதைக் கேட்கவும் அவர்களை வினவவும் கண்டார்கள். அவருடைய வாக்கைக்கேட்ட யாவரும் அவருடைய ஞானத்தையும் மாறுத்தாரங்களையும் பற்றிப் பிரமித்துக்கொண்டிருந்தார்கள். (அவருடைய மாதா பிதாவும்) அவரைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்போது அவருடைய தாயார் அவரை நோக்கி: மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தீர்? இதோ, உம்முடைய தந்தையும், நானும் துக்கித்து, உம்மைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் பிதாவின் காரியங்களில் அலுவலாயிருக்கவேண்டுமென்று உங்களுக்குத் தெரியாதோ என்றார். ஆனால் அவர்கள் தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையைக் கண்டுபிடிக்கவில்லை. பின்பு அவர் அவர்களோடுகூடப் புறப்பட்டு, நசரேத்தூருக்கு வந்து. அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்த வாக்கியங்களையெல்லாம் தன்னிருதயத்தில் வைத்திருந்தாள். யேசுநாதரோவென்றால் சர்வேசுரனுக்கும், மனிதருக்கும் முன்பாக ஞானத்திலும், பிராயத்திலும், வரப்பிரசாதத்திலும் வளர்ந்துகொண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது: எங்கள் ஆண்டவர் தம்முடைய தாய் தந்தைகளோடே திருநாளுக்குப் போனார் என்றதினால், சர்வேசுரனுடைய திருநாட்களை நாங்கள் எத்தனை பத்தியோடே ஆசரிக்கவேணும் என்பதைக் காண்பித்தார். திருநாள் முடிந்ததின் பின் தம்முடைய பிதா மாதாக்களை அறியாமல் கோயிலிலே நின்றுவிட்டார் என்ற வசனத்தினால், நாங்கள் தாய் தந்தை முதலான உறவுற்றார்களுடைய நேசத்தை அரோசித்து ஆலயம், ஆரணியம், மடம் முதலான ஏகாந்த ஸ்தலங்களிலே சர்வேசுரனுக்குப் பணசெய்யவேணும் என்கிற உத்தம தர்மத்தைப் படிப்பித்தார். ஆனால் குமாரன் கோயிலிலே இருந்ததை மாதாவும், வளர்த்த பிதாவும் அறியாதேபோனது எப்படி என்றால், அந்தக் கோயிலின் வழக்கப்படியே ஸ்திரீசனங்களும் ஆண்மக்களும், போக, வர, வெவ்வேறு வாசல் இருந்தது. ஆனதினால் ஆண்மக்களோடே குமாரன் வருவார் என்று பரிசுத்த தேவமாதா நினைத்து, மாதாவோடே வருவார் என்று சூசையப்பர் நினைத்து, இப்படியே இருவரும் கிரகிக்க மாட்டாதே போனார்கள் என்று அறியவும். ஒருநாள் வழி நடந்ததின்பின் உறவுற்றாரிடமாய்க் குமாரனைத்தேடிக் காணவில்லை என்றதற்கு விபரம் ஏதென்றால், சரீர ஐக்கியமாயிருக்கிற பேர்களுடைய சஞ்சரிப்போடே சர்வேசுரனுடைய வரப்பிரசாதங்களைத் தேடவும் அவர்களுடைய பாரபட்சத்தின் வழியால் கிறீஸ்துநாதருடைய மோக்ஷமுடைத்தான முகத்தைக் காணவும் கிடைக்க மாட்டாது என்ற படிப்பினையாம். மூன்றுநாட் தேடினதின் பின் குமாரனைக் கண்டதற்கு விபரம் ஏதென்றால்: மனஸ்தாபம், பாவத்தைக் குருவானவரிடத்தில் சொல்லுதலாகிற உச்சாரணம், அபராதம் தீர்த்தலாகிற பிராயச்சித்தம் என்கிற மூன்று கிரியைகளாலும், அல்லது விசுவாசம், நம்பிக்கை, பத்தி என்கிற மூவித தர்மங்களாலும் அவனவன் இழந்துபோன தேவவரப்பிரசாதங்களையும் மோக்ஷ தரிசனையையும் தேடவேணும் என்கிற படிப்பினையாம். ஆண்டவர் சாஸ்திரிகளோடே வேதவாக்கியங்களிலே தர்க்கஞ் செய்து வினா விடைகளைக் கேட்டிருந்தார் என்றதே, அது எந்த விதமான தர்க்கமோ என்றால்: கிறீஸ்து பூலோகத்திலே வருவார் என்று முன் தீர்க்கதரிசிகள் எழுதியிருந்த வாக்கியத்தின்படியே, வந்தாரோ இல்லையோ என்கிற விசேஷத்தைத் தர்க்கித்து: சிலர் வந்தார் என்றும், சிலர் வரவில்லை என்றும் இருபகுதியாய்ப் பேதலித்துத் தெளியாமல் இருந்தார்கள். அந்நேரம் யேசுநாதர் அவர்கள் நடுவே முடுகித் தீர்க்கதரிசிகளுடைய



வாக்கியங்களை வெளியாக்கி அதினால் கிறீஸ்து பூலோகத்திலே பிறந்தார் என்கிற உண்மையையும், பிறந்ததின்பின் சம்பவித்த ஆச்சரிய விசேஷங்களினாலே அவர் பிறந்து பன்னிரண்டு வயதாய்விட்டது என்கிற ஞாயத்தையும் வெளிப்பொருளாக ஒப்புவித்தார். ஆனதினால் அவருடைய ஞானத்தைக்கண்டு சகலமான பேர்களும் ஆச்சரியப்பட்டார்கள். தேவமாதா குமாரனைக்கண்டு நாங்கள் வியாகுலத்தோடு தேடியிருந்தோம் என்று முறைப்பட்டபோது என் பிதாவின் பணிவிடையிலே நான் இருக்கவேண்டியதல்லவோ என்று சொன்னதற்கு விபரம் ஏதென்றால்: பூலோகத்தின் சகலமான விசாரங்களுக்கும் மேலாகச் சர்வேசுரனுடைய பணிவிடையை விசாரிக்கவேணும் என்று படிப்பித்தார். அப்படியே அவர்கள் கூடவந்து அவர்களுடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்திருந்து ஞானத்திலும், தேவவரப்பிரசாதத்திலும் நிறைவானதுபோல நாங்களும் சர்வேசுரனுக்கும் குரு, தாய், தந்தை முதலான பெரியோர்களுக்கும் அமைச்சலோடே நடக்கவேண்டியது என்று அறியவும். அப்படியே ஆண்டவர் படிப்பித்த சகலமான சுகிர்தங்களிலே வர்த்தித்து லோகத்தை வெறுத்துப் பரலோகத்திலே அவரை முகமுகமாய்க் காணப்போகப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே! தேவரீரைத் தாழ்மையோடு மன்றாடுகிற சனங்களின் வேண்டுகோள்களைத் தெய்வீக தயவோடு அனுகூலமாக்கியருளும். அடியோர்கள் நிறைவேற்ற வேண்டியவைகள் எவைகளோ அவைகளை அறிந்துகொள்ளவும் அறிந்துகொண்டவைகளைச் செய்துமுடிக்கவும் தக்க ஞானப்பெலனுள்ளவர்களாகப் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென் யேசு.

---

# கர்த்தர் பிரத்தியக்ஷமான
## திருநாளுக்கு அடுத்த
## இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் இரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே ஓர் கலியாணம் நடந்தது. யேசுநாதருடைய தாயாரும் அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தார். யேசுநாதரும், அவருடைய சீஷர்களும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். அப்பொழுது திராட்சரசம் அவர்களுக்குக் குறைவாய்ப் போனதினாலே, யேசுநாதருடைய தாயார் அவரை நோக்கி: அவர்களுக்கு இரசமில்லை என்றார். அதற்கு யேசுநாதர்: ஸ்திரீயே, எனக்கும் உமக்கும் என்ன? என்னுடைய காலம் இன்னும் வரவில்லையே என்று அவருக்குத் திருவுளம்பற்றினார். ஆயினும் அவருடைய தாயார் பணிவிடைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றார். அப்படியிருக்க, யூதர் சுத்திகரஞ்செய்கிற முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடந் தண்ணீர் பிடிக்கத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன. யேசுநாதர் அவர்களை நோக்கி: சாடிகளைத் தண்ணீரால் நிரப்புங்களென்று சொல்ல, அவர்கள் அவைகளை வாய்மட்டாக நிரப்பினார்கள். பின்பு யேசுநாதர் அவர்களைப் பார்த்து: இப்பொழுது நீங்கள் மொண்டு, பந்தித் தலைவனிடத்தில் கொண்டுபோய்க் கொடுங்கள் என்க, அவர்களும் கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அது எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீர் மொண்ட பணிவிடைக்காரர் அறிந்திருந்தார்களேயன்றி, பந்தித் தலைவன் அறியாதிருந்தபடியால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரைச் சுவைபார்த்தமாத்திரத்தில், மணவாளனை அழைத்து: எந்த மனிதனும் முந்த நல்ல இரசத்தைப் பரிமாறுவான். ஜனங்கள் திருப்தியாகப் பானஞ்செய்ததின்மேல், கீழ்த்தரமானதைக் கொடுப்பான். நீரோ நல்ல இரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். இவ்வண்ணமே யேசுநாதர் கலிலேயா நாட்டிலுள்ள கானாவூரிலே, தம்முடைய அற்புதங்களுக்கு ஆரம்பமாக, இதைச் செய்து, தமது மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர்கள் அவர்மேல் விசுவாசம் வைத்தார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது: கலிலேய இராச்சியத்திலே கலியாணம் உண்டாகி அதுக்குப் பரிசுத்த தேவமாதாவும் ஆண்டவரும் சீஷரும் கூடினார்கள் என்ற வசனத்திலே, மெய்விவாக பந்தனத்தின் மகிமை காண்பித்திருக்கிறது. அதேதெனில், அப்படிப்பட்ட கலியாணம் லோக ஆசாரம் மாத்திரம் என்று எண்ணாமல் தேவப்பிரசாதத்தின் மகிமையுடைத்தான பரம இரகசியம் என்று அறியவும். அதேதென்றால் கலியாணத்தின் பத்தினி ஆவது ஆண்டவர் உண்டாக்கின திருச்சபைக்கு அடையாளமாம். பத்தா ஆவது கிறீஸ்துநாதருக்கு அடையாளமாம். இந்தடைவாகக் கிறீஸ்துநாதரும் திருச்சபையும் ஒருக்காலும் பிரியாத மேரையாய்ப் பிரசாத பந்தனத்தால் ஐக்கியமாய் இருக்கிறதுபோல ஸ்திரீ புருஷர் இருவரும் யாதொருகாலத்திலும் பிரியாமல் இருக்கக்கடவார்கள் என்று அறியவும். இப்படிப்பட்ட உண்மையை அறியாமல் அக்கியான இருளிலே அமிழ்ந்தினவர்களாய்த் தாங்கள் கொண்ட தாரத்தை அரோசித்து மறுதாரங்களோடே



உறவாடுகிற துர்ச்சனர் சர்வேசுரனுடைய எத்தனை கடினமான முனிவுக்குப் பாத்திரமாயிருப்பார்கள் என்று விசாரிக்கவும். இந்தக் கலியாணத்திலே முந்திரிகைப்பானம் குறைபட்டது என்ற வசனத்தினாலே உலோக சம்மந்த சுக, செல்வ, பாக்கியங்கள் எல்லாம் குறைவுள்ளது அல்லாதே குறைவில்லாததாயிராது என்று அறியவும். இப்படிப்பட்ட குறையைத் தேவமாதா கண்டு கலியாணக்காரர் கேட்டுநிற்கு முன்னமே தாம் அவர்களுக்கு உதவிசெய்யத் தம்முடைய குமாரனுக்கு அறியப்பண்ணினதற்கு விபரம் ஏதென்றால், எங்கள் அவசரங்களுக்கு நாங்கள் அடைமானம் தேடு முன்னமே தாம் தயையுள்ள தாயாய் எங்களுக்கு உதவி செய்ய ஆவலாயிருக்கிறாள் என்று காண்பித்தாள். ஆனால் தேவமாதா குமாரனிடத்திலே கேட்ட மன்றாட்டத்தை அவர் உடனே நிறைவேற்றாமல் ஸ்திரீ என்று கூப்பிட்டு அதைச் செய்ய நமக்குக் காரியம் என்ன என்று திருவுளம்பற்றின காரணம் ஏதென்றால்: தாயானவளை ஸ்திரீ என்று அழைத்த காரணமாவது: அவள் கேட்ட காரியத்தை அவர் வயிற்றிலே நின்றெடுத்த மனுஷீக பெலத்தினாலே செய்கிறதல்ல, தேவசுபாவ பெலத்தினாலே செய்கிறதாயிருக்கும் என்றதினால் தேவசுபாவத்துக்குத் தாய் இல்லை என்று காண்பிக்கத்தக்கதாகத் தாய் என்று சொல்லாத நியாயமாம். இதல்லாமல் இப்படிப்பட்ட புதுமைசெய்யக் காரியம் இல்லை என்றும் என்னுடைய நேரம் வர இல்லை என்றும் திருவுளம்பற்றினதற்கு விபரமாவது: கலியாணக்காரர் தங்களுக்குவந்த இளப்பத்தை அறிந்து பிரார்த்தித்துக்கொள்ளாமல் அவர்களுக்கு அந்த உபகாரஞ்செய்தால் நன்றியறியமாட்டார்கள். ஆனதினால் அவர்கள் தங்களுடைய குறையை அறிந்து பிரயாசப்பட்டு மன்றாட்டம் பண்ணுந்தனையும் அப்படிப்பட்ட நன்மை அவர்களுக்குப் பண்ண ஆன நேரமும் ஞாயமும் இல்லை என்று காண்பித்தார். ஆனாலும் தமது மாதாவின் இரக்கத்தின் மகிமையையும் வேண்டுதற் பலனையும் உலோகத்துக்கு அறியப்படுத்தவேணும் என்கிறதினால் அப்படிப்பட்ட நன்மையைச் செய்துகொடுத்தார் என்று அறியவும். சாடிகளிலே தண்ணீர் நிரப்பி, அத்தால் முந்திரிகை இரசம் உண்டாக்கினதற்கு ஞான விபரம் ஏதென்றால்: தண்ணீர் என்பது பாவிகள் பச்சாத்தாபத்தால் அழுகிற கண்ணீராம். இப்படிப்பட்ட தண்ணீர் இருதயம் என்கிற தாழிகளிலே நிறைந்து தேவபத்தி என்கிற அமிர்தமும், மோக்ஷானந்தம் என்கிற மதுரபானமும் உண்டாகும் என்று அறியவும். ஆனதினால் இப்படிப்பட்ட படிப்பினையைக் கேட்டு நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பாவங்களுக்குப் பச்சாத்தாபப்பட்டு அழுது இந்தக் கண்ணீரால் எங்கள் ஆத்துமாக்களைச் சுத்தம்பண்ணித் தெய்வீக இரசமான மோக்ஷவிருந்துக்குப் பாத்திரமாகக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவத்துக்கும் வல்ல சதா நித்திய சருவேசுரா! தேவரீரே பரலோகத்திலுள்ளவைகளையும் பூலோகத்திலுள்ளவைகளையும் ஒழுங்குபெற நடப்பிக்கிறீரே. உம்மை இரந்து மன்றாடுகிற உமது சனத்தைக் கருணையாய்ப்பார்த்து எங்கள் காலத்திலே தேவரீருடைய சமாதானத்தை அடியோருக்குக்கட்டளையிட்டருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

# கர்த்தர் பிரத்தியக்ஷமான
## திருநாளுக்கு அடுத்த
## மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு எட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் மலையில் நின்று இறங்கினபோது திரளான சனங்கள் அவரைப் பின்சென்று போனார்கள். அப்போது இதோ ஒரு குஷ்டரோகி வந்து, அவரை நமஸ்கரித்து: ஆண்டவரே! தேவரீருக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் கூடுமென்றான். அப்போது யேசுநாதர் தமது கரத்தை நீட்டி அவனைத் தொட்டு: சித்தமாயிருக்கிறேன். சுத்தமாகு என்றார். உடனே அவனுடைய குஷ்டரோகஞ் சுத்தமாயிற்று. யேசுநாதர் அவனை நோக்கி: இதை நீ ஒருவருக்குஞ் சொல்லாதபடி பார்த்துக்கொள். ஆயினும் போய் குருப்பிரசாதிக்கு உன்னைக் காண்பித்து அவர்களுக்கு அத்தாட்சியாக மோயீசன் கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார். பின்பு அவர் கப்பர்னாவும் ஊரில் பிரவேசித்தபோது செந்தூரியன் ஒருவன் அவரிடத்திலே வந்து அவரை மன்றாடி: ஆண்டவரே! என் ஊழியன் திமிர்வாதமாய் வீட்டிலே கிடந்து அகோர வாதைப்படுகிறான் என்றான். அதற்கு யேசுநாதர்: நான் வந்து அவனைக் குணமாக்குவேன் என்றார். அப்பொழுது செந்தூரியன் மறுமொழியாக: ஆண்டவரே! தேவரீர் என் இல்லத்தில் பிரவேசிக்க அடியேன் பேறுபெற்றவனல்ல. ஆனால் தேவரீர் ஒரு வார்த்தை மாத்திரஞ் சொல்லியருளும், என் ஊழியன் சொஸ்தமடைவான். ஏனெனில் அடியேனும் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட மனிதனாயிருக்கிறேன். எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற போர்ச்சேவகரும் உண்டு. (அவர்களில்) ஒருவனை நோக்கி



நான் போவெனப் போகிறான்; வேறொருவனை நோக்கி : வாவென வருகிறான்; என் ஊழியனையும் இதைச் செய்யெனச் செய்கிறான் என்றான். யேசுநாதர் இதைக்கேட்டு அதிசயித்து, தமது பிறகே வருகிறவர்களை நோக்கி: நான் இஸ்ராயேலரிடத்தில் இம்மாத்திரம் விசுவாசத்தைக் காணவில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக இராச்சியத்தில், அபிரகாம், ஈசாக்கு, யாக்கோப்பு என்பவர்களோடு கூடப் பந்தியில் அமருவார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இராச்சியத்தின் மக்களோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று திருவுளம் பற்றினார். பின்னும் யேசுநாதர் செந்தூரியனை நோக்கி : நீ போகலாம். நீ விசுவசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அந்த ஊழியன் சௌக்கியமடைந்தான்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஆண்டவர் குஷ்டனுக்கும் திமிர்வாதக்காரனுக்கும் ஆரோக்கியம் கொடுத்த இரண்டுவித அற்புதமான கிருத்தியங்கள் காண்பித்திருக்குது. அதிலே யோசிக்கத்தக்க விபரம் ஏதென்றால்: முதலாவது குஷ்டம் என்பது பாவவாளனுடைய லக்ஷணமாம். அதேனெனில், குஷ்டவியாதியிலே காண்கிற குணம் எல்லாம் பாவவாளனிடத்திலேயும் காணப்படும். அதெப்படி என்றால் : முதலாவது, குஷ்டத்தால் சரீரம் அருவருப்பான அந்தக்கேடாயிருக்கிறதுபோலப் பாவவாளனுடைய ஆத்துமத்திலே பாவத்தால் சர்வேசுரனுடைய சுரூபம் மறைந்து அக்கிருத்தியம் என்கிற அவலக்ஷணப் பிசாசின் கோலமாகும். இரண்டாவது, குஷ்டத்தால் துர்க்கந்த நாற்றம் வீசுகிறதுபோலப் பாவவாளனுடைய பாவத்தின் அவகீர்த்தி என்கிற துர்க்கந்தம் வெகுதூரம் வீசப்படும். மூன்றாவது, குஷ்டனைத் தொட்டவனுக்கு அந்த வியாதி தொற்றுகிறதுபோலப் பாவவாளனோடே சஞ்சரிக்கிறவன் அவனுடைய துர்க்கிருத்தியங்களைப் பழகி அவனைப்போலப் பாவவாளனாய்ப் போவான். இந்தவகைக் குஷ்டசரீரத்தின் துர்க்குணம் எல்லாம் பாவ ஆத்துமத்தில் இருக்கிறதினால், குஷ்டன் பாவவாளன் என்று கருதப்படும். ஆனதினால், குஷ்டனைக் காண்கிற உலோகத்தார் அவனை அகல விலகிப் போகிறதுபோல் நாங்கள் துஷ்ட செய்கைக்காரரானபேர்களுடைய சங்காத்தத்தை இகழ்ந்து தருமவாளர், சாதுக்கள் இவர்களோடு சம்பாஷணையாய் நடக்கவேணும் என்று அறியவும். ஆனால் சுகம்பெறவந்த குஷ்டன் என்னைச் சுகமாக்கும் என்று ஆண்டவரைப் பிரார்த்தித்துக்கொள்ளாமல் சித்தம் உண்டானால் குணமாக்கலாம் என்று விண்ணப்பஞ்செய்ததற்கு விபரம் ஏதென்றால்: சரீர சுகசெல்வமானதுகள் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு ஆத்துமக் கேடாயிருக்கிறதினால் அப்படிப்பட்ட லௌகீகபோகங்களைச் சருவேசுரனிடத்திலே வருந்திக் கேளாமல் அவருடைய சித்தம் அறிந்தபடி கிடைக்க மன்றாடவேணும் என்ற படிப்பினையாம். ஆண்டவர் அவனுக்குச் சுகங்கொடுக்கத் திருக்கையை நீட்டின விபரம் ஏதென்றால்: தம்முடைய திருக்கரம் என்கிற தேவவல்லமையினால் அந்த ஆச்சரியம் செய்கிற விபரத்தைக் காண்பித்தார். குஷ்டனைக் குணமாக்கினதின்பின் ஆசாரியருக்கு முன்பாகப் போகக் கற்பித்த காரணம் ஏதென்றால்: பாவவாளர் பச்சாத்தாபத்தால் பாவப்பொறுத்தல் அடைந்தாலும் அந்தப் பாவத்தைக் குருமுன்பாக உச்சாரணம்பண்ணப் போகவேணும் என்றதைப் படிப்பித்தார். அதற்கப்பால் இரண்டாவது பண்ணின ஆச்சரியத்தின் அர்த்தம் ஏதென்றால்: ஆண்டவர் திமிர்வாதக்காரனுடைய வியாதியைப் பரிகரிக்கக் கருணைகொண்டு சேர்வைக்காரனுடைய வீட்டுக்கு வருவோம் என்றபோது அதற்கு அவன் தான் பாத்திரன் அல்ல என்றும் ஆண்டவருடைய திருவுளம் உண்டானால் வியாதிக்காரன் சுகமாவான் என்றும் விண்ணப்பம் செய்ததற்கு விபரம் ஏதென்றால்: தன்னுடைய வீட்டுக்கு ஆண்டவர் எழுந்தருளத் தான் பாத்திரவான் அல்ல என்றது, வீடாகிய எங்கள் இருதயங்களிலே சற்பிரசாத வழியாக ஆண்டவர் எழுந்தருளுகிறபோது நாங்கள் அப்படிப்பட்ட நன்மைக்குப் பாத்திரர் அல்ல என்று மிகுந்த தாழ்ச்சியோடே வேண்டுதல் செய்யக்கடவோமென்ற படிப்பினையாம். ஆண்டவருடைய திருவுளத்தால் மாத்திரம் வியாதி குணமாகும் என்றதினால் சர்வலோகத்தையும் ஒரு வாக்கியத்தால் உண்டாக்கின தேவவல்லமை ஆண்டவரிடத்திலே உண்டென்று தான் முழுமனதாலும் விசுவசித்ததைக் காண்பித்தான். இது அல்லாமல் அவருடைய திருவுளம் மாத்திரம் உண்டானால் எங்கள் மனசுகளில் சகல குறைகளும் தீர்ந்து ஞானமும், புத்தியும் தெளிந்து தர்மத்திலே குறை அற்றவர்களாவோம் என்ற விபரமாம். இந்தடைவாக ஆண்டவர் குஷ்டனையும் திமிர்வாதக்காரனையும், குணமாக்கின இரண்டு கிருத்தியங்களையும் நாங்கள் கண்டு குஷ்டம் என்கிற எங்கள் பாவத்தையும் திமிர் ஆகிற எங்கள் தர்மவீனத்தையும் தள்ளி ஈடேற்றம் என்கிற ஆரோக்கியத்தை அடைய ஆண்டவரை முழு விசுவாசத்தோடு பிரார்த்திக்கவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவத்துக்கும் வல்ல சதா நித்திய சருவேசுரா! தேவரீர் எங்கள் பெலவீனத்தைக் கருணைகடாட்சமாய்ப் பார்த்து எங்களைத் தீங்கினின்று காப்பாற்ற உமது தெய்வீக வலதுகரத்தை நீட்டியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ்சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.



# கர்த்தர் பிரத்தியக்ஷமான
## திருநாளுக்கு அடுத்த
## நாலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

சுவிசேஷக மத்தேயு எட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் படகிலேறவே, அவருடைய சீஷர்களும் அவரோடே கூடப் போனார்கள். அப்போது திடீரென, படகு அலைகளால் மூழ்கிப்போகும்படியான விதமாய்க் கடலிலே பெரும் புசல் உண்டாயிற்று. அவரோ நித்திரை செய்துகொண்டிருந்தார். ஆகையால் அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் அணுகி அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், செத்தோமென்றார்கள். யேசுநாதர் அவர்களைப் பார்த்து: அற்ப விசுவாசமுள்ளவர்களே, ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி உடனே எழுந்து, காற்றையுங் கடலையும் அதட்டவே, மகா அமரிக்கை உண்டாயிற்று. அங்கிருந்த மனிதர் பிரமித்து: இவர் எப்பேர்ப்பட்டவர்! காற்றும், கடலும் இவருக்கு அமைகிறதே என்று புகழ்ந்தார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் உற்பனமாவது: ஆண்டவர் கப்பலேறினார் என்றதினாலே ஞானக் கப்பலாகிய திருச்சபை நடக்கும் மேரை காண்பித்திருக்கிறது. அது எப்படி என்றால்: கப்பல் ஓட்டுவிக்கிற மாலுமியானவன் திருச்சபையை நடப்பிக்கிற கிறீஸ்துநாதராம். கலாசுகளாகிய சீஷரும், பாய்மரமாகிய சிலுவையும், பாயாகிய தேவரகசிய பிரசாதங்களும், மற்றும் உண்டான பந்தனங்களாகிய திருச்சபைப் படிப்பினைகளும் இது முதலான கருவிகளைக்கொண்டு பூலோகம் என்கிற சமுத்திரத்திலே கிறீஸ்துவேதம் என்கிற ஞானக்கப்பல் ஓடும் என்று சொல்லப்படும். ஆனதினால் பரகதித் துறையாகிய கரையைச் சேர விரும்புகிறவர்கள் இந்த உரு யாத்திரையாய்ப் போகவேணும் என்று அறியவும். ஆனால் கப்பல் சமுத்திரத்திலே இருக்கச்செய்தே கடல் கொந்தளிப்புக் கொண்டதற்கு விபரம் ஏதென்றால்: பிற சமயக்காரர் கிறீஸ்துவேதத்தை அழிக்கும்படி செய்கிற சில்லறைகளும் பிசாசுகள் தர்மவான்களைக் கலங்கப்பண்ணுகிற சோதனைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்கொந்தளிப்பு என்று சொல்லப்படும். அந்நேரம் யேசுநாதர் நித்திரை செய்துகொண்டிருந்தார் என்பது: லோகத்திலே எத்தனை துரிதங்கள் வந்தாலும் சர்வேசுரனுடைய சித்தம் அறியாமல் ஒரு தீங்கும் வரக்கூடாது என்று களங்கம் அற்ற அமைதியான சித்தத்தோடு இருப்பது ஆத்தும இளைப்பாறுதலான நித்திரை என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட நம்பிக்கையோடு நாங்கள் சகல அவசர ஆபத்துகளிலேயும் முழுமனதாலும் சர்வேசுரனை விசுவசித்து மனங்கலங்காமல் இருக்கக்கடவது என்ற படிப்பினையாம். இந்தப்படி சீஷர் நம்பிக்கை இல்லாமல் தத்தளித்ததினால் அற்ப விசுவாசிகள் என்று ஆண்டவருடைய கடிந்த திருவுளத்தைக் கேட்டார்கள் என்று அறியவும். ஈற்றிலே ஆண்டவர் எழுந்திருந்து சமுத்திரத்தின் கடுங்கோபத்தையும், காற்றின் பிரசண்டத்தையும் அடங்கப்பண்ணினது ஏதெனில்: சர்வத்தையும் சர்வேசுரன் சிருட்டித்ததினால் படைப்புண்ட சகல பதார்த்தங்களும் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருக்கிறது என்று காண்பித்தார். அப்படியே அக்கினி சுடாமலும், தண்ணீர் குளிராமலும், காற்று வீசாமலும், பூமி கனக்காமலும் இருக்கச் சர்வேசுரன் திருவுளமானால் அந்தப்படி இருக்கும் என்று அறியவும். ஆகையால் இப்படிப்பட்ட உயிர் அற்ற அஞ்ஞானச் சடப்பொருள் எல்லாம் சர்வேசுரனுடைய கட்டளையை அறிகிறபோதே புத்தியுள்ள நாங்கள் அதிக பயபத்தியோடே அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ! அடியோர்கள் எத்தனையோ ஆபத்துக்களில் அகப்பட்டு மனுப்பெலத்தினால் அவைகளைத் தாங்கமுடியாதவர்களாயிருக்கிறதைத் தேவரீர் அறிவீரே. எங்கள் பாவத்தின் பலனாக நாங்கள் படுகிற இடையூறுகளைத் தேவரீருடைய உதவியினால் நாங்கள் மேற்கொள்ளத்தக்கதாக எங்களுடைய ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் அவசியமான பெலத்தைத் தந்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

# கர்த்தர் பிரத்தியக்ஷமான
## திருநாளுக்கு அடுத்த
## ஐஞ்சாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு பதின்மூன்றும் அதிகாரத்திலே எழுதிவைத்த திருவாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் உவமையாய்த் திருவுளம்பற்றினதாவது: மோட்ச இராச்சியமானது தன் வயலில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கின்றது. ஆனால் ஆட்கள் நித்திரை செய்கையில் அவனுடைய மாற்றான் வந்து கோதுமை நடுவில் தகரைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிர் வளர்ந்து கதிர்விட்டபோது தகரைகளுங் காணப்பட்டன. அப்போது குடும்பத்தெஜமானுடைய ஊழியர் அவனண்டையில் வந்து: ஐயா, நீர் உம்முடைய வயலில் நல்ல விதையை விதைத்ததில்லையோ? அப்படியானால் தகரைகள் எங்கிருந்து உண்டானதென்று கேட்க, அதற்கு அவன்: இதை மாற்றான் செய்தான் என்றான். அப்போது ஊழியர்: நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமோ என்று கேட்டார்கள். அதற்கு அவன்: வேண்டாம், தகரைகளைப் பிடுங்கும்போது அவைகளோடு கூட ஒருவேளை கோதுமையையும் வேர் அறுத்துப்போடுவீர்கள். ஆனதால் இரண்டையும் அறுப்புக்காலம் வரையில் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுப்புக்காரரைப்பார்த்து: முந்தத் தகரைகளைச் சேர்த்து அவைகளைச் சுட்டெரிக்கும்படி கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ, என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயம் ஏதென்றால்: மனுஷன் தனது களத்திலே நல்லவிதை விதைத்தான் என்பது, கிறீஸ்துநாதர் உலோகம் என்கிற தம்முடைய சொந்த நிலத்திலே நல்ல விதையாகிய தேவவாக்கியங்களையும், பிரசாத அருள்களையும் விதைத்துப் புண்ணிய ஆத்துமம் என்கிற கோதும்பைப் பயிரை உண்டாக்கினார் என்கிற அர்த்தமாம். பயிரைக் காத்திருந்த மனுஷராவது, திருச்சபையில் ஆத்துமாக்களைப் பாரபரிக்கிற குருமாரும் தன்னுடைய ஆத்துமத்தைக் காக்கிற தர்மவாதி முனிகளுமாம். அவர்கள் தியான, செப, சாகரணம் என்கிற பார்வையினாலும், பிரசங்க போதகம் என்கிற குரலைச் சத்தத்தினாலும், பாவமும், பிசாசும் என்கிற துஷ்ட மிருகங்களைத் துரத்துகிறதினால் சர்வேசுரனுடைய பயிரைக் காக்கிறது என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட கிருத்தியங்களிலே அவர்கள் பிரயாசம் இல்லாமல் அசதி, மறதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாயிருக்கும்போது கோதும்பையைக் காக்கிறவர்கள் நித்திரையாயிருக்கும்வேளை என்று சொல்லத்தகும். அந்நேரம் சத்துருவாகிய பிசாசுவந்து களைகளாகிய வேதவிரோத பேதக மதங்களையும் துஷ்ட சந்தோஷ கிருத்தியங்களையும், விதைத்துப் பதிதர், கன்மவாளர், துஷ்டரான, பாவ ஆத்துமாக்களை உலோகத்திலே மதாளிக்கப்பண்ணுவது என்று அறியவும். ஆனால், இப்படிப்பட்ட துஷ்ட களைகளைப் பிடுங்கிப்போடப் பணிவிடைகாரர் உத்தாரங்கேட்ட இடத்திலே அத்தோடே நல்ல பயிரும், பிடுங்குப்படாமல் இருவகையும், வளரட்டும் என்று சொன்னது ஏதென்றால்: துஷ்ட களைகள் என்கிற பாவிகள் பண்ணுகிற நிர்ப்பந்தங்களைப் பொறுத்துப் புண்ணிய ஆத்துமாக்களுடைய பெறுபேறு அதிகரிக்கிறதினாலும் இவர்களுடைய பொறுதி, தாழ்ச்சியைக் கண்டு, பாவிகள் நல்வழியிலே வரலாயிருக்கிறதினாலும் இப்படிப்பட்ட பலன்கள் அற்றுப்போகாதபடிக்குப் புண்ணியவாளரையும். பாவவாளரையும் கூட உலோகத்திலே வளர உபேக்ஷையாய்ப் பார்த்திருக்கிற ஞாயம் என்று அறியவும். ஆனால் அறுப்புக்காலமாவது: சர்வசங்காரகாலம் வரும்போது அறுப்பறுக்கிறவர்களாகிய தேவதூதர்களாலே களைகளாகிற பாவவாளர் எல்லாம் அவனவனுடைய மதவேத பேதக இனத்தின்படியே வெவ்வேறே கட்டுகளாய்க் கூட்டம்பண்ணப்பட்டு நரகசுவாலையிலே தகிக்கப்படுவார்கள் என்றும், கோதும்பை விதையாகிய புண்ணிய ஆத்துமாக்கள் மோட்ச இராச்சியம் என்கிற நவரத்தினத்தால் உண்டாக்கின களஞ்சியத்திலே வைக்கப்படுவார்கள் என்றும் அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே! தேவரீர் உமது குடும்பத்தைத் தளராத இரக்கத்தோடு காத்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறோம். பரலோக வரப்பிரசாதங்களிலே மாத்திரம் நம்பியிருக்கிற அக்குடும்பமானது தேவரீருடைய பெலத்தினாலே என்றும் காப்பாற்றப்படக்கடவது. தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

# கர்த்தர் பிரத்தியக்ஷமான திருநாளுக்கு அடுத்த ஆறும் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு பதின்மூன்றும் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் சனக்கும்பல்களுக்கு உவமையாய்த் திருவுளம்பற்றினதாவது:—பரலோக இராச்சியமானது ஓர் மனிதன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்த கடுகுமணிக்கு ஒப்பாயிருக்கின்றது. அது சகல வித்துகளிலும் மிகவும் சிறிதாயிருந்தாலும் வளரும்போது சகல பூண்டுகளிலும் அதிகப் பெரிதாகி, ஆகாயத்தின் பட்சிகள் அதின் கிளைகளிலே வந்து வசிக்கத்தக்க மரமாகிறது என்றார். இன்னமும் அவர் அவர்களுக்கு உரைத்த வேறோர் உவமையாவது: பரலோக இராச்சியமானது மூன்று மரக்கால் மாவு முழுதும் புளிப்பேறும்படி ஓர் ஸ்திரீ அதற்குள் மறைத்துவைத்த புளிக்காரத்துக்கு ஒப்பாயிருக்கிறதென்று திருவுளம்பற்றினார். யேசுநாதர் இவையெல்லாம் ஜனக்கூட்டத்துக்கு உவமைகளாகச் சொன்னார். உவமைகளினாலன்றி வேறுவிதமாய் அவர்களோடு பேசினவரல்ல. இவ்விதமாய் நான் உவமைகளில் என் வாயைத் திறப்பேன். உலக ஆரம்பமுதல் மறைவாய் இருப்பவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் சொல்லப்பட்டது நிறைவேறும்படியாயிற்று.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே நம்முடைய நாயக யேசுக்கிறீஸ்து மோட்ச இராச்சியத்தின் மகிமையைக் காண்பித்த இரண்டுவித உவமையின் உற்பனத்தை விசாரிக்கவேண்டியது. அதேதென்றால்: முதலாவது வானஇராச்சியம், கடுகுக்குச் சமானம என்றதினால் சுவிசேஷ வாக்கியத்தின் உற்பனம் கடுகு உறைப்புக்குச் சமானமாய் இருக்கும் என்று காண்பித்தார். அது ஏதெனில் கடுகைக் கல்லில் அரைக்கும்போது சுகந்தம் வீசப்படும். வாயில் கொறிக்கும்போது கண்ணீர் ஊறப்படும். அத்தன்மையாகச் சுவிசேஷ வாக்கியத்திலே அடங்கப்பட்ட ஆண்டவருடைய ஞானபோதகங்களை யோசிக்கும்போது சுகிர்தத்தின் வாசம் முகந்து பிரியத்தோடு மனம் பூரிக்கப்படும். அவருடைய பீடை வாதைகளைத் தியானிக்கும்போது வியாகுலமாய் இருதயம் அதிர்ந்து கண்ணீர் பாய்கிறதாயிருக்கும். அதினால் சுவிசேஷ வாக்கியம் கடுகுவிதைக்குச் சமானம் என்கிற விபரமாம். இதல்லாமல் அப்படிப்பட்ட கடுகுவிதை சகல வித்துகளிலும் சிறிதாயிருந்தாலும் முளைத்து எழும்புகிறகாலம், பெரிய விருக்ஷமாகிறதுபோல, சர்வேசுரனுடைய சுவிசேஷவாக்கியம், யேசுநாதர் பாடுபட்ட நிந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினாலே பூலோகத்துக்கு நிசிதமாய்க் கண்டாலும் அதை விசுவசித்தவர்கள் சுகிர்தங்களினாலே மகா தரும ஆத்துமாக்களாய்ப் போவார்கள் என்ற விபரமாம். இதல்லாமல் அப்படிப்பட்ட மரத்தின் கொப்புகளிலே பக்ஷிகள் வந்து தரிக்கும் என்றதினால் இந்தச் சுவிசேஷத்தின் கீர்த்தியைத் தூரதேசத்தின் சனங்கள் கேட்டு, கனியின் மதுரத்தை நாடி வருகிற பறவைகள் போலவும், தேன்கூட்டிலே பதுங்கவருகிற தேனீக்கள்போலவும், மிகுந்த தாற்பரியத்தோடு வந்து தருமத்தைக் கேட்டு அதிலே விசுவாச உறுதியோடு நிலையாயிருப்பார்கள் என்கிற விபரம் என்று அறியவும்.

அதற்கப்பால் இரண்டாவது, திருவுளம் பற்றின உவமையாவது: வான இராச்சியம் மாவிலே கலந்த புளிகாரத்துக்குச் சமானம் என்று சொன்ன வாக்கியத்தினால் தேவ இஷ்டப்பிரசாதத்தின் மகிமையைக் காண்பித்தார். அது எப்படியென்றால்: பெரிய மாக்குவியலிலே அற்பபிரமாணம் புளிகாரத்தைக் கலந்தால் மா எல்லாம் புளித்துப் பொங்குகிறதுபோலே மனுஷருடைய ஆத்துமத்திலே அற்ப அளவு தேவப்பிரசாதம் உண்டானால் மனதிலுள்ள கண்டித, கடூரம் எல்லாம் மெழுகு போல் உருகிப் பத்தியால் பொங்கிப் பெருகும் என்கிறதற்கு அர்த்தமாம். இதல்லாமல் அப்படிப்பட்ட புளிகாரத்தை ஸ்திரீயானவள் மாவிலே கலந்தது என்றதினால், சத்தியவேதக் குருமார் தேவ அபிரகசியமாகிய பிரசாதங்களை மனுஷருடைய ஆத்துமங்களிலே பெறுவித்துத் தருமங்களினாலே வர்த்திக்கவும் தேவ நன்மைகளினால் சம்பூரணமாக நிரம்பவுஞ் செய்வார்களென்பதற்கு விபரமாம். ஆனதினால் இப்படிப்பட்ட மகிமையுடைத்தான தேவப்பிரசாதத்தையும், வல்லபமுடைத்தான சுவிசேஷ வாக்கியத்தையும், நாங்கள் மிகுந்த பத்தியோடு அனுசரித்து அத்தாலே குறிக்கப்பட்ட மோக்ஷராச்சியத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவத்துக்கும் வல்ல சருவேசுரா சுவாமீ! அடியோர்கள் எப்போதும் நியாயமானவைகளையே சிந்திக்கிறவர்களாகி, தேவரீருக்கு உவப்பானவைகளை எங்கள் பேச்சிலும் கிரியையிலும் நிறைவேற்றிவர எங்களுக் கனுக்கிரகஞ் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

( சத்தரிகை )

# தபசுகாலத்தின் முன்வருகிற

## மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

சுவிசேஷக மத்தேயு இருபதாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு உவமையாய்த் திருவுளம்பற்றினதாவது: மோட்ச இராச்சியமானது தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்தும்படி, அதிகாலமே வெளியிலே புறப்பட்ட வீட்டெஜமானுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் வேலையாட்களோடு நாள்ஒன்றுக்கு ஒரு பணம் கூலியாக ஒப்பந்தஞ் செய்து, அவர்களைத் தன் திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பினான். ஏறக்குறைய மூன்றுமணி நேரத்திலும் அவன் வெளியே புறப்பட்டுப்போய்க் கடைவீதியில் சும்மா நின்றுகொண்டிருந்த சிலரைக் கண்டு: நீங்களும் என் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள். நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேனென்று அவர்களுக்குச் சொன்னான். அவர்களும் போனார்கள்; மறுபடியும் அவன் ஆறும், ஒன்பதாம் மணியிலும் வெளியே புறப்பட்டுப் போய் அவ்வண்ணமே செய்தான். சுமார் பதினோராம்மணி நேரத்திலும் அவன் வெளியே புறப்பட்டுப்போய், வேறு சிலர் நிற்பதைக் கண்டு: நீங்கள் சோம்பலாய் நாள் முழுவதும் இங்கே நிற்பானேன்? என்று கேட்க, அவர்கள்: எங்களை ஒருவரும் வேலைக்கு அமர்த்தவில்லை என்றார்கள். அவன்: நீங்களும் என் தோட்டத்துக்குப் போங்கள் என்றான். பிறகு பொழுது சாய்ந்தபோது, தோட்டத்து எஜமான் தன் காரியக்காரனைப் பார்த்து: நீ வேலையாட்களைக் கூப்பிட்டு, கடைசியாட்கள் துவக்கி, முதல் ஆட்கள் வரைக்கும் (சரி) கூலி கொடு என்றான். பதினோராம்மணி நேரத்தில் வந்தவர்களும் அணுகி, ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். அப்போது முந்தினவர்கள்வந்து, தாங்கள் அதிகமாய்ப் பெற்றுக்கொள்வோமென்று எண்ணியிருந்தார்கள். ஆயினும், அவர்களும் ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். அதை வாங்குகையில் அவர்கள் வீட்டெஜமான்பேரில் முறையிட்டு: கடைசியில் வந்த இவர்கள் ஒரு மணி நேரம் வேலைசெய்திருக்க, பகலின் பாரத்தையும், வெயிலின் கொடுமையையும் சுமந்த எங்களோடு இவர்களைச் சமமாக்கினீரே என்றார்கள். எஜமான் மறுமொழியாக அவர்களில் ஒருவனை நோக்கி: நண்பனே! நான் உனக்கு அநியாயஞ் செய்யவில்லை; நீ ஒரு பணத்துக்கு என்னோடு சம்மதிக்கவில்லையோ? உனக்குள்ளதை வாங்கிக்கொண்டு போ; உனக்குக் கொடுத்தபடியே கடைசியில் வந்த இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். எனக்கு இஷ்டமானதை நான் செய்யலாகாதோ? அல்லது நான் நல்லவனாயிருப்பதால், உன் கண் கெட்டதாயிருக்கிறதோ? என்றான். இவ்விதமே கடைசியானவர்கள் முதல்வர்களாகவும், முதல்வர்கள் கடைசியானவர்களாகவும் இருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்கள். ஏனெனில் அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சொற்பப் பேர் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயம் ஏதென்றால்: பரலோக இராச்சியம் என்கிற வசனத்தினால் கிறீஸ்து வேதசபை குறிக்கப்படும். அப்படிப்பட்ட திருச்சபை ஒரு தோட்டத்துக்குச் சமானம் என்று சொன்னது ஏதென்றால்: தோட்டமுடையவன் அதில் பலகாலும் பணிவிடை செய்ய ஆட்களைத் தேடுமாப்போலே, கிறீஸ்துநாதர் தம்முடைய திருச்சபையாகிய ஞானநந்தாவனத்திலே வேலைசெய்யப் புண்ணிய ஆத்துமாக்களைத் தேடுகிறார் என்ற விபரமாம். வேலை செய்கிறவர்களுக்குப் பொருந்தின நாட்கூலியாவது சர்வேசுரனுக்குப் பணிசெய்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற மோக்ஷம் என்கிற சம்பாவனையாம். அதி உதயம், இளமத்தியானம், நல் மத்தியானம், அபராணம், சந்தியாகாலம் என்கிற இந்த ஐந்து வேளைகளிலும் பணிவிடைக்கு ஆளைத்தேடின விபரம் ஏதென்றால்: குழந்தை, சிறுவன், வாலிபன், முதுமான், விருத்தன் என்கிற இந்த அஞ்சுவித வயதிலும் சர்வேசுரன் தமக்குப் பணிசெய்யச் சமஸ்தரையும் அழைக்கிறார் என்று அறியவும். ஆனபடியினாலே யாதொருவன் தான் இளையோன், சிறுவன், கிழவன் என்றும், இந்த வயதிலே தனக்குச் செப தவம் பண்ணக்கூடுமோ என்றும் சொல்லக்கடவதல்ல. அதேதெனில்: சகலமான பேர்களும் எந்த வயதிலும், எந்த நேரத்திலும் சர்வேசுரனுடைய வேதத்தை அனுசரிக்கவும், பாவ நடக்கையை விட்டுத் தரும நடபடியாய் நடக்கவும் கடனாளிகளாய் இருப்பார்கள் என்று அறியவும்.

ஆனால் சாயங்காலம் வேலைசெய்தவனுக்கும் அதிகாலை துவக்கிப் பணிவிடை செய்தவனுக்கும் ஒருவிதமாய்க் கூலிகொடுத்த நியாயம் ஏதென்றால்: கிழவனாய் வேதத்திலே வந்தவனும் சிறுப்போதே துவக்கி வேதநெறியோடே நடந்தவனும் சர்வேசுரனுடைய ஒரே மோக்ஷமுக தரிசனையால் களிகூர்ந்திருப்பார்கள் என்றதற்கு விபரமாம். இந்தப்பிரகாரம் முதலானவர்கள் கடைசியானவர்களாகவும், கடைசியானவர்கள் முதலானவர்களாகவும் இருப்பார்கள் என்று சொன்னவாக்கியத்தினாலே வாலவயதிலே நின்று வேதத்திலே நடந்தவன் பாவஞ் செய்தால் பரகதி சேருதலுக்குப் பிந்தினவன் ஆவான். கிழவனாய் வேதத்தை அனுசரித்தவன் தருமவர்த்திப்போடே நடந்தால் மோக்ஷ வெகுமானங்களுக்கு முந்துவான் என்கிற அர்த்தமாம். இவ்வண்ணமே அழைக்கப்பட்டவர்கள் மிகுதியாகி,



தெரியப்பட்டவர்கள் கொஞ்சம் என்கிறதினால் சர்வேசுரனுடைய வேதத்திலே வருகிறவர்கள் மிகுதியாயிருந்தாலும் அதின்படியே நடந்து மோக்ஷகரை சேருகிறவர்கள் மிகுதியாயிரார்கள் என்று அறிவித்தார். ஆகையால் நாங்கள் அனைவோரும் சர்வேசுரனுடைய வேதம் அனுசரிக்கிறதிலேயும், சுகிர்த நடக்கை நடக்கிறதிலேயும் அதிக பயபத்தியோடே ஒருத்தனுக்கு ஒருத்தன் மேற்பட்டுத் தேவ ஐசுவரியப் பிரசாதங்களுக்குப் பாத்திரமாகப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீருடைய சனத்தின் செபங்களைத் தயவோடே கேட்டருளும். எங்கள் பாவங்களின் நிமித்தம் நீதிப்படியே உபத்திரவப்படுகிற நாங்கள் தேவரீருடைய திருநாம மகிமையின்பொருட்டுத் தண்டனைகளினின்று விடுபட்டவர்களாயிருக்க இரக்கம்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

(சடிகை)

# தபசுகாலத்தின் முன்வருகிற
## இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக லூக்கா எட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே ஏராளமான சனங்கள் கூடி, பட்டணங்களிலிருந்து அவரிடத்தில் தீவிரித்து வரவே, அவர் உவமையாகச் சொன்னதாவது: விதைக்கிறவன் ஒருவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கிறபோது சில விதை பாதையோரத்தில் விழுந்து மிதிபட்டது; ஆகாயத்துப் பறவைகள் அதைப் பட்சித்துப்போட்டன. சிலது கற்பாறையின்மேல் விழுந்து முளைத்தது; ஆயினும் அதற்கு ஈரமில்லாததினாலே காய்ந்துபோயிற்று. வேறு சிலது முள்ளுக்கள் நடுவில் விழுந்தது; ஆனால் முள்ளுக்களும் கூட எழும்பி, இதை அமுக்கிப்போட்டன. வேறு சிலது நல்ல நிலத்தில் விழுந்தது; அது முளைத்து, நூறு மடங்காகப் பலனைத் தந்தது என்றார். இவைகளைச்சொல்லி: கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவானென்று உரக்கக் கூறினார். அப்போது அவருடைய சீஷர்கள் இந்த உவமையின் கருத்து என்னவென்று அவரை வினாவினார்கள். அவர்களுக்கு அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுளம்பற்றினதாவது: சர்வேசுரனுடைய இராச்சியத்தின் இரகசியங்களை அறிந்துகொள்ள உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கோ, அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, அவைகள் உவமைகளாகச் சொல்லப்படுகின்றன. இந்த உவமையின் கருத்து ஏதெனில்: விதை சர்வேசுரனுடையவாக்கியம். பாதையோரத்தில் விதைக்கப்பெற்றவர்கள், வாக்கியத்தைக் கேட்கிறவர்களாம். பின்பு அவர்கள் விசுவசித்து, இரட்சண்யம் அடையாதபடிக்குப் பிசாசு வந்து, அவர்களுடைய இருதயத்தினின்று வாக்கியத்தைப் பறித்துக்கொள்ளுகிறது. கற்பாறையின்மேல் விதைக்கப்பெற்றவர்கள் வாக்கியத்தைக் கேட்கும்போது, சந்தோஷத்தோடு அதை அங்கீகரிக்கிறவர்களாம். ஆயினும் அவர்கள் வேரில்லாதவர்களாய், தற்காலத்துக்கு விசுவசித்து, சோதனைகாலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள். முள்ளுக்கள் நடுவில் விதைக்கப்பெற்றது வாக்கியத்தைக் கேட்கிறவர்கள்தான். ஆயினும் அவர்கள் போய், கவலைகளாலும் ஐசுவரியங்களாலும் உலகவாழ்வின் இன்ப சுகங்களாலும் அமுக்கப்பட்டுப் பலன் கொடாதிருக்கிறார்கள். நல்ல நிலத்தில் விதைக்கப்பெற்றதோ நல்லதும், உத்தமமுமான இருதயத்தோடு வாக்கியத்தைக் கேட்டு அதைக் காப்பாற்றிப் பொறுமையால் பலன் கொடுக்கிறவர்களாம் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட உவமையின் அர்த்தத்தை ஆண்டவர் தாமே பிரத்தியக்ஷமாக்கினார். அதை விரித்துரையாய்க் காண்கிறமேரை எப்படி என்றால், விதை ஆவது: சர்வேசுரனுடைய திருவசனமாம். விதைக்கிற விரைப்பனாவது: ஆண்டவரும், வேதப்பிரசங்கிகளுமாம். விரைக்கப்பட்ட பூமியாவது: மனுஷர்களுடைய இருதயங்களாம். வித்துக்களில் சிலது வழிக்கரையில் விழுந்து மிதியுண்டு பட்சிகளால் உண்ணப்பட்டது என்பது: சில மனுஷருடைய இருதயங்கள் அடக்க ஒடுக்கம் இல்லாத வழிப்போக்காய், அவர்கள் கேட்ட பிரசங்கம், நிசிதமான பல விசாரங்களால் மிதிபட்டுப் பக்ஷி என்கிற பிசாசுகளால் அழிவுண்டுபோம் என்கிற விபரமாம். சில வித்துக்கள் கல்லிலே விழுந்து உலர்ந்துபோயிற்று என்பது, சில மனுஷர் சர்வேசுரனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் வன்னெஞ்சராயிருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் சர்வேசுரனுடைய திருவசனத்தை மனோகரமாய்க் கேட்டாலும் ஈரமாகிய இளக்கமும், தாற்பரியமும் இல்லாமல் விசுவாச உறுதி என்கிற வேர் ஊன்றியிராமல் உபத்திரிய துரிதம் முதலான சோதனைகள் கண்டவுடனே அனலால் உலர்ந்துபோன பயிர்போலக் கேட்ட படிப்பினையைக் கைநெகிழ்ந்து விடுவார்கள் என்ற விபரமாம். சில வித்துக்கள் முட்செடிகளிலே விழுந்து நெரிந்துபோனது என்பது: உலோக ஐசுவரியர் வைபோகர் சுகியான பேர்கள் சர்வேசுரனுடைய வார்த்தையைக் கேட்டாலும்,



லௌகீக பவுஷின்மீது இருக்கிற வாஞ்சையான எண்ணம் என்கிற முள்ளுக்கள் பிரதிதினமும் அவர்கள் மனதிலே தைத்து, வளர்ந்தபயிர் நெரிந்ததுபோல, அனுசரித்த தர்மத்தைப் பலிக்கவிடாமல் நற்கிருத்தியம் என்கிற பலன் அற்றுப் போம் என்ற விபரமாம். கடைசியில் சில வித்துக்கள் நல்ல தரையிலே விழுந்து நூற்றிரட்டிப்பாகப் பலன் கொடுத்தது என்பது: தர்ம ஆத்துமாக்களுடைய இருதயம், பத்தி என்கிற நீரால் பொங்கிப் பெறுபேறு என்கிற எருப்பொருந்திய நல்ல தரையாம். அப்படிப்பட்ட இருதயமுள்ள பேர்கள் கேட்ட தேவவாக்கியத்தைத் தாற்பரியத்தோடு அங்கீகரித்து உறுதியோடு அனுசரித்துச் சுறுசுறுப்போடு செலுத்தித் தரும விருக்ஷம்போல முகத்தாய் வளர்ந்து சுகிர்தம் என்கிற புட்பமாய் அலர்ந்து மோக்ஷசீவியத்தின் பலனை மட்டில்லாத கிரமத்தோடு காய்ப்பார்கள் என்கிற அர்த்தமாம். இந்தப்பிரகாரம் சர்வேசுரனுடைய திருவாக்கின் படிப்பினையைக் கேட்கிற நாங்கள் எங்களுடைய இருதயங்கள் அடக்கம் இல்லாத வழிப்போக்குப்போல ஆகாமலும், கற்பாறை முட்செடிமுதலான பிரயோசனம் அற்ற தரையாய் இராமலும் செழிப்புள்ள பூமிபோலப் பத்திநிறைந்த கருத்தோடே சர்வேசுரனுடைய திருவசனத்தைக் கேட்டுச் செலுத்தி அனந்த சீவியபலம் என்கிற நவநிதிய பாக்கியத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, எங்கள் கிரியைகள் ஒன்றிலேயும் நாங்கள் நம்பிக்கை வையாதவர்களாயிருக்கிறதைக் காண்கிற தேவரீர் சகல சாதிகளினும் அப்போஸ்தலரான சின்னப்பரின் சலிகையால் நாங்கள் எல்லா எதிரிடைகளிலும் பெலனடைந்து தற்காக்கப்பட அனுக்கிரகஞ்செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய், சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

(பஞ்சிகை)

# தபசுகாலத்தின் முன்வருகிற
## ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்.

---

சுவிசேஷக லூக்கா பதினெட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் பன்னிருவரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடத்தில் அழைத்து, அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இதோ ஜெருசலேம் நகருக்குப் போகிறோம்; மனுமகனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட யாவும் நிறைவேறும். எப்படியெனில், அவர் புறச்சாதியாருக்குக் கையளிக்கப்பட்டுப் பரியாசம் பண்ணப்படுவார், சாட்டைகளால் அடிக்கப்படுவார், துப்பப்படுவார்; அவரைச் சாட்டைகளால் அடித்தபின்பு, அவரைக் கொலைசெய்வார்கள். மூன்றாம் நாளிலோ அவர் உயிர்த்தெழுந்திருப்பார் என்றார். அவர்களோ இவைகளில் ஒன்றையும் கண்டுபிடிக்கவில்லை. இந்தப் பேச்சு அவர்களுக்கு மறைபட்டிருந்தது. சொல்லப்பட்டதையும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. பின்பு சம்பவித்ததேதெனில், அவர் ஜெரிக்கோ பட்டணத்துக்குச் சமீபமாய் வருகையில், ஒரு குருடன் பாதையோரத்தில் உட்கார்ந்து, பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். ஜனக்கும்பல் நடந்து போகிறதை அவன் கேட்டு: இதென்னவென்று விசாரித்தான். நசரேனுவாகிய யேசுநாதர் அவ்வழியாய்ப் போகிறாரென்று அவனுக்கு அறிவித்தார்கள். உடனே அவன்: யேசுவே! தாவீதின் குமாரனே, என்பேரில் இரக்கமாயிரும் என்று கூவினான். முந்தி நடந்தவர்கள் அவன் பேசாதிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, என்பேரில் இரக்கமாயிரும் என்று அதிகமாய்க்கூவினான். அப்பொழுது யேசுநாதர் நின்று, அவனைத் தம்மிடத்தில் அழைத்துவரக் கட்டளையிட்டார். அவன் கிட்டவந்தபொழுது, அவர் அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்று கேட்க, அவன்: ஆண்டவரே, நான் பார்வை அடையவேண்டும் என்றான். அப்பொழுது யேசுநாதர்: நீ பார்வையடைவாயாக; உன் விசுவாசம் உன்னை இரட்சித்ததென்று அவனுக்குச் சொன்னார். அக்ஷணமே அவன் பார்வையடைந்து, சர்வேசுரனை ஸ்துதித்துக்கொண்டு அவர் பிறகே போனான். ஜனங்களெல்லாரும் இதைக் கண்டு, சர்வேசுரனைத் தோத்திரம்பண்ணினார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷமாவது: எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து சீஷர்களோடு எழுந்தருளுகிறபோது, எருசலே நகரியில் தமக்குச் சம்பவிக்கப்போகிற நிந்தை, நிர்ப்பந்தங்களை, அவர்களுக்கு ஏலவே அறிவித்த காரணம் ஏதென்றால், அப்படிப்பட்ட நிசித வாதைகளைச் சீஷர்கள் காண்கிறபோது தம்முடைய தெய்வீக வல்லபமகிமைக்கும், பரம ஞானத்துக்கும், குறை ஆரோபித்து அவவிசுவாசமாய்த் தத்தளியாதபடிக்கு அப்படிப்பட்ட பாடுகளைத் தம்முடைய சித்தம் அறியச் சந்தோஷமாய் அனுபவிக்கிறதைக் காண்பிக்கத்தக்கதாக அதை முன்னேற அறிவிக்கத் திருவுளமானார் என்று அறியவும்.

இதல்லாமல் எருசலே நகருக்குப் போகிற சமயத்திலே அதைக் குறித்துப் பேசினது ஏதென்றால்: எருசலே நகரமாவது, மோக்ஷராச்சியத்துக்குக் குறிப்பாம். அதில் கரைசேரத்தக்கதாகத் தம்முடைய பீடையும், மரணமும் வழியா



யிருக்கும் என்றும், அதினால் அனுதினமும், யாவரும் அதைத் தியானிக்கவேணும் என்றும் படிப்பித்த படிப்பினையாம்.

அதின்பின் ஆண்டவர் குருடனுடைய கண்ணை வெளிச்சமாக்கின விஷயத்திலே, அவதானிக்கும் உற்பனமாவது: குருட்டுக்கண் என்பது அக்கியானமாகிய இருளாலும் பஞ்சகாமிய சவுக்கியமாகிய புகையூறலாலுஞ் ஞானக்கண் மறைந்திருக்கின்றவர்களாம். அப்படிப்பட்டவர்கள் குருடன் வழிகாத்திருக்கிறதுபோல ஆண்டவருடைய வழியாகிய கோயில் ஸ்தலங்களிலேயும் வேதபிரசங்க போதகங்கள் வாசிக்கிற இடங்களிலேயும் காத்திருந்து அதிலே நடக்கிற யேசுநாதருடைய அருள் என்ன, அதின் அர்த்தம் வியர்த்தம் என்ன, சுபலம், அபலம் என்ன என்று விசாரித்து அதின்படியே அறிந்து நடக்கத்தக்கதாக எங்கள் புத்திக்கண் திறக்கவும், மனதைத் தெளிவிக்கவும் வேணும் என்று பிரார்த்தித்துக்கொள்ளவேணும் என்று அறியவும். ஆனால் குருடன் பிரார்த்தித்துக்கொள்ளுகிறபோது வழிபோகிற சனங்கள் அவனை அபயமிடாதே என்று கண்டிதமாய்ச் சொன்னவிடத்திலே அவன் அதிக உரத்தசத்தத்தோடு குரலையிட்டுப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தானே. அப்படியே நாங்கள் பண்ணுகிற தர்மங்களிலே, உலகம் சரீரம் பிசாசு என்கிற மூன்று சத்துராதிகளும், மற்றுண்டான சகல அக்கிரம வாஞ்சைகளும் விக்கினமாயிருந்தாலும், அதைத் தட்டி விலக்கி, ஆண்டவருடைய பிரசாதத்தால் மனந்தெளிந்து அறிந்து சுகிர்தவழியின்படியே இவ்வுலகத்திலே ஆண்டவரைப் பின்சென்று நடந்து, அவ்வுலகத்திலே மனம் களிகூர மோக்ஷ சவுக்கியத்தோடே அவரை நித்தமும் துதித்து ஆராதிக்கும்படி பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீர் எங்கள் பிரார்த்தனைகளைக் கிருபாகடாட்சமாய்க் கேட்டு நாங்கள் பாவக்கட்டுகளினின்று விடுவிக்கப்பட்டவர்களாய்ச் சகல பொல்லாப்புகளிலேயும் தற்காப்பு அடைந்துகொள்ள எங்களுக்கு அனுக்கிரகஞ்செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய், சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென் யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிநீறு தரிக்கிற
## திருநாளில் வாசிக்கிற
## சுவிசேஷம்

சுவிசேஷக மத்தேயு ஆறும் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு அருளிச்செய்ததாவது : நீங்கள் உபவாசமாயிருக்கும்போது கள்ள ஞானிகளைப்போல வாடின முகமாய் இருக்கவேண்டாம். ஏனெனில், தாங்கள் உபவாசமாயிருக்கிறதாக மனிதருக்குத் தோன்றும்படி அவர்கள் முகங்களைச் சுண்டிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்கள் சம்பாவனையை அடைந்துகொண்டார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசமாயிருக்கும்போது உன் சிரசைத் தைலத்தால் பூசு, உன் முகத்தையும் கழுவு. உபவாசமாய் இருக்கிறாயென்று மனிதர்களுக்குத் தோன்றாமல் அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்குத் தோன்றும்படி ( அப்படிச் செய் ). அப்போது அந்தரங்கத்தில் காண்கிற உன் பிதா உனக்குச் சம்பாவனையளிப்பார். பூலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம். இங்கே அந்தும் துருவும் அரிக்கிறது. திருடருங் கன்னமிட்டுத் திருடுகிறார்கள். ஆனால் பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே அந்தும் துருவும் அரிக்கிறதுமில்லை. திருடர் அங்கே கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை. ஏனெனில் உன் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேயே உன் இருதயமும் இருக்கின்றது என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே உபவாசம் ஒறுத்தல் முதலான தருமக் கிரியைகளைச் செய்கிற கிரமமும் திரவியங்களைப் பேணுகிற மேரையும் காண்பித்திருக்குது. அதெப்படியென்றால் உபவாசம் பண்ணுகிற விதமாவது : இடம்பர், பாசாங்குக்காரர்போலே உலோகத்தவர்கள் காணத்தக்கதாகச் செய்வதல்ல. அதேதென்றால் : அவர்கள் சர்வேசுரனை உத்தேசியாமல் கள்ளஞானமாய் உலோகத்தவராலே புகழ்பெறத்தக்கதாகத் தருமங்களைச் செய்கிறதினால் அவர்கள் விரும்பின இவ்வுலோக புகழ்ச்சியும் வெகுமானமுமே அவர்களுக்குக் கிடைக்கிற பலன் அல்லாதே அவ்வுலோக நன்மை ஒன்றும் அடையமாட்டார்கள். ஆனால் நாங்கள் சர்வேசுரனாலே மோக்ஷபலன் அடையத்தக்கதாக எங்கள் உள்ளங்களைப் பார்த்திருக்கிற சர்வேசுரன் மாத்திரம் அறிய உலோகத்தவருக்கு மறைவாய்ச் சுகிர்தங்களைச் செய்யவேணும் என்று படிப்பித்தார். இப்படிச் செய்யாதவன் கள்ள ஞானி என்றும், இடம்பன் என்றும் திருவுளம்பற்றினாரே. அதேதெனில், எங்களால் செய்யப்பட்ட நற்கிரியைகள் யாவையும் சர்வேசுரனுடைய அனுக்கிரகத்தால்



செய்கிறதினால் அதற்கு உலோகத்தார் சொல்லுகிற பாராட்டுகள் சர்வேசுரனுக்கு உடையதல்லாதே, எங்களுக்கு உடையதல்ல. ஆகையால் அப்படிப்பட்ட புகழ்ச்சியை யாதொருத்தனும் சர்வேசுரன்பேரிலே ஏற்றாமல் தனக்குடையதுபோலக் கெம்பீரமாய் வெகுமானித்திருந்தால் சர்வேசுரனுடைய ஞான உடைமையைத் திருடினதாய் ஞானக்கள்ளன் என்றும், அல்லது கள்ளஞானி என்றும் சொல்ல ஞாயமாயிருக்கும் என்று அறியவும்.

அதின்பின் பூலோகத்திலே திரவியங்களைச் சம்பாதனை பண்ணிவையாமல் வானத்திலே பொக்ஷத்தைச் சேருங்கள் என்று திருவுளம்பற்றினாரே. அது எவ்விதமோ என்றால் சர்வேசுரனை உத்தேசித்து அவருடைய தேவாலயங்களுக்குக் கொடுக்கிற காணிக்கையும், அவருடைய பணிவிடைகாரராகிய குரு, தபோதனருக்குக் கொடுக்கிற தெக்ஷணைகளும், அவருடைய பிரிய புத்திரராகிய தரித்திரர், யாசகருக்குப் புண்ணியதானமாய்க் கொடுக்கிற பிச்சைகளும், இவை எல்லாம் சர்வேசுரனுடைய சித்தம் என்கிற களஞ்சியத்திலே அடக்கம்பண்ணப்பட்ட திரவியங்கள் என்று அறியவும். அவைகள் நாங்கள் பூலோகத்தில் இருக்குந்தனையும் எங்கள் சீவ இரக்ஷணைக்குச் சகாயமாகி, அவ்வுலகத்திலே பிராணனுக்குச் சததமான மோக்ஷசீவியமாயிருக்கும் என்று அறிவித்தார். அப்படியே செய்யாமல் யாதொருத்தன் பூலோகத்திலேதானே தபலை, சருவங்களிலும் இருப்புக் கடாரங்களிலும் திரவியங்களை நிறைத்துக் கெட்டியாய்க் கேணிகளிலே புதைத்துவைத்தால் அது இருப்புக் கறளாலும் துஷ்டபூச்சி சிதல்களாலும் சோரர் அபகரித்தலாலும் அழிபடும். அல்லது வலுவுடையோரான இராசபிரதானிகளாலும், உறவினராகிய பெந்துசனங்களாலும் மறித்துப் பறிபட்டுத் தனக்கு உதவாமல் அபலமாய்ப்போம் என்று அறியவும். ஆனதினால இவ்வுலோகத்திலே சம்பாதிக்கிற வெகுமான திரவிய வாஞ்சைகளை அரோசித்துச் சர்வேசுரனுடைய சித்தம் என்கிற எங்கள் கருவூலத்திலே எங்கள் மனச்சிந்தையை வைக்கவேணும் என்று படிப்பித்தார்.

இந்தப் பிரகாரமாக ஆண்டவர் படிப்பித்த ஞானபோதகங்களை இந்தநாளிலே பிரசங்கம்பண்ணுகிற காரணம் ஏதென்றால், இன்று திருச்சபை கற்பித்த நாற்பது ஒருசந்திநாள் துவக்கமாகிறபடியால் அப்படிப்பட்ட ஒருசந்திபண்ணுகிற மேரையையும் மாங்கிஷபோசனம் ஒறுத்துச் சரீரசவுக்கியங்களை வெறுத்துத் தபோதனமாய் நடக்கவேண்டிய பிரகாரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் அறிவிக்கிறது கிரமமாம். அதல்லாமல் இதுநிமித்தமாகத் திருச்சபைக் கட்டளையால் இன்றுதானே சமஸ்த சனங்களும் நீறுதரிக்கிற நினைவாம். அதேதென்றால், மண்ணாலே உண்டாக்கப்பட்ட இந்தச் சரீரம் மறுபடியும், மண்ணாய்ப் போகிறது என்கிறதை அவதானித்துப் பிரபஞ்ச அழிவுள்ள வாழ்வு எல்லாத்தையும் அரோசித்து அழியாத திரவியம் என்கிற சுகிர்தங்களை இன்று துவக்கமாய்த் தேடி நடக்க வேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீருடைய விசுவாசிகள் ஒருசந்தி. உபவாசங்களின் ஆசாரத்துக்குரிய முறைமைகளைத் தக்க பயபத்தியோடு கையேற்றுத் தளம்பாத பற்றுதலோடு அனுசரித்துவர ஒத்தாசைபண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# (சதுரிகை) தபசுகாலத்தின்
## முதலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு நாலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :— அந்தக்காலத்திலே யேசுநாதர் பிசாசினாலே சோதிக்கப்படுவதற்கு இஸ்பிரீத்துவினால் வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார். அவர் நாற்பது இரவும், நாற்பது பகலுமாக உபவாசமாயிருந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்போது சோதனை செய்வோன் அவரண்டையில் வந்து : நீர் சர்வேசுரனுடைய சுதனானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அதற்கு அவர் மாறுத்தாரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய வாயினின்று புறப்படுகிற எந்த வாக்கியத்தினாலும் பிழைக்கிறானென்று எழுதப்பட்டிருக்கிறது என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரைப் பரிசுத்த நகரத்திற்குத் தூக்கிக்கொண்டுபோய்த் தேவாலயச் சிகரத்தில் அவரை நிறுத்தி, அவரை நோக்கி : நீர் சர்வேசுரனுடைய சுதனானால் கீழேகுதியும் ; ஏனெனில் அவர் உம்மைக்குறித்துத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரென்றும் ; உம்முடைய பாதம் ஒருவேளை கல்லில் இடறுதபடிக்கு அவர்கள் உம்மைத் தங்கள் கரங்களிலே ஏந்திக்கொள்வார்களென்றும் எழுதியிருக்கிறது என்றான். யேசுநாதர் அதற்கு : உன் தேவனாகிய கர்த்தரைச் சோதியாதிருப்பாயாகவென்று மீளவும் எழுதியிருக்கிறது என்றார். பிசாசான



வன் மறுபடியும் அவரை எடுத்து மிகவும் உயர்ந்த ஓர் பர்வதத்தின் மேல் கொண்டுபோய், உலக இராச்சியங்கள் எல்லாவற்றையும், அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, நீர் கீழே விழுந்து என்னை ஆராதிப்பீராகில் இவையெல்லாம் உமக்குத் தருவேனென்றான். அப்போது யேசுநாதர் அவனைநோக்கி : சாத்தானே, அப்பாலே போ ; ஏனெனில் உன் தேவனாகிய கர்த்தரை ஆராதித்து, அவர் ஒருவரையே சேவிப்பாயாக என்று எழுதப்பட்டிருக்கிறது என்றார். அப்போது பிசாசு அவரைவிட்டு அகன்றுபோகவே, இதோ தேவதூதர்கள் அணுகி அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே பிசாசு எங்கள் ஆண்டவரை மூவித சோதனையால் சோதித்த மேரையும், அதை ஆண்டவர் கண்டனம்பண்ணிப் பிசாசைச் செயித்த பிரகாரமும் காண்பித்திருக்குது. அது எப்படி என்றால், முதலாவது போசனப்பிரியத்தால் சோதிக்கவேணும் என்று ஆண்டவர் பசி தாகமாயிருக்கிறவேளையைக் கண்டு பிசாசு வனத்தில் சரித்த தவசியைப்போலப் பஞ்சைக் கோலங்கொண்டு சில கல்லுகளைக் கையிலெடுத்து இச்சகமான பேச்சோடு முடுகி ஆதலைக் காண்பித்துச் சொல்வது. இப்படியே ஊண் உறக்கம் இல்லாமல் சரீரம் வெகு இளைப்பாயிருப்பதென்ன? நீர் உலோகத்தவரை ஈடேற்றவந்த தேவகுமாரனானால் இப்படிப்பட்ட கருமத்துக்கு ஆயத்தம்பண்ணத்தக்கதாகச் சரீரத்தைச் சுகசெல்வத்தோடு பேணுகிறது அல்லாதே தவத்தால் நோஞ்சலாகப்பண்ணினால் ஈடேற்றத்தின் கருமம் முகியாதேபோம். ஆனதினால் அதற்கு இந்த வனாந்தரத்திலே புசிக்க வேறொன்றும் இல்லாதிருந்தால் இந்தக் கல்லுகளை உம்முடைய தெய்வீக வல்லமையால் அப்பமாக்கிப் பசியாறலாம் என்று சொல்லிற்று. அதற்கு அர்த்தம் ஏதென்றால் : கல் என்பது கன்மனசோடே மனிதன் செய்கிற பாவமாம். அப்படிப்பட்ட பாவம் என்கிற கல்லுகளால் சீவனோபாயங்கள் தேடவேணும் என்று எண்ணுகிறது பிசாசு படிப்பிக்கிற வினைய உபாயம் என்று அறியவும். அதை அறியாத பாவிகளானபேர்கள் சர்வேசுரனுடைய வேத கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல் கன்னெஞ்சராய் பொய், களவு, பிறர்தாரம், அடாத்து, அநீதம் முதலான உபாயங்களினாலே பிழைக்கவேணும் என்று நினைக்கிறபோது பிசாசின் கண்ணியில் மறிபட்டு நரகலோகத்திலே ஆறுதபசியால் அழுந்துவார்கள் என்று அறியவும். ஆனபடியால் அப்படிப்பட்ட அபத்தமான நினைவுகளைவிட்டு அகன்று சருவேசுரனுடைய திருவாக்கினால் பிழைக்கலாம் என்று ஆண்டவர் திருவுளம்பற்றின வாக்கியத்தை ஒருமிப்போடு நம்பியிருந்தால் சீவரக்ஷணைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றன்று வேண்டிய அன்னபானம் குறையறக்கிடைக்கும் என்று அறியவும்.

இரண்டாவது, பிசாசு ஆண்டவரை வெகுமானத்தினால் சோதிக்கவேணும் என்று கோயிற் சிகரத்தின்மீதே ஏற்றுவித்துப் பணியவிழச்சொன்னது ஏதென்றால்: கோயில்முகடு என்கிற தேவவேத விசுவாசத்தைவிட்டுப் பள்ளக்கால் என்கிற நரகபாதாளத்திலே பாயச்சொன்ன விபரமாம். அல்லது அவனவன் செய்கிற தருமங்களிலே வீண்சந்தோஷம் என்கிற காற்றால் ஆங்காரமாய் மனது எழும்பிப் பாவம் என்கிற தாழ்விலே விழப்பண்ணுகிற விபரமாம். அதற்கு ஆண்டவர்: நீ சர்வேசுரனைச் சோதியாதே என்ற வசனந்திருவுளம்பற்றினது ஏதென்றால்: ஏறவும இறங்கவும் ஏணி முதலியவைகள் இருக்கச்செய்தே சர்வேசுரன் காப்பார் என்று படுகிடங்கிலே விழுகிறவன் சர்வேசுரனுடைய வல்லமையைச் சோதிக்கிறது அல்லாதே அவரை நம்புகிறதில்லை என்று அறிவித்தார். அப்படியே சமஸ்தருக்கும் பரகதியில் ஏறச் சர்வேசுரன் ஒரே ஏணியாகச் சத்தியவேதத்தை அறிவித்த இடத்திலே, அதைத்தேடாமல் எந்தவேதத்திலேயும் ஈடேறுவேன் என்று இருக்கிறதும், ஏணிப்படியாகிய பத்துக்கற்பனை ஒழுங்கின்படியே நடவாமல் அக்கிருத்தியமாய்ச் சீவித்துச் சாகுங்காலஞ் சர்வேசுரன் இரங்குவார் என்று எண்ணுகிறதும் இப்படிப்பட்ட நம்பிக்கை எல்லாம் அபத்தமும், அக்கிரமமும் அல்லாதே கிரமமுள்ள விசுவாசம் அல்ல என்றும், அத்தால் பிசாசு அவர்களை ஆகாயத்திலே ஏற்றி நரக ஆழத்திலே விழுத்தும் என்பதற்குச் சந்தேகமில்லை என்றும் அறியவும்.

மூன்றாவது, பிசாசு ஆண்டவரைத் திரவிய ஆசையால் சோதிக்க வேணும் என்று சர்வ உலோக ஐசுவரியங்களையும் அவர் சமுகத்திலே காண்பித்து என்னை வணங்கினால் சர்வத்தையும் தருவேன் என்று சொன்ன விபரம் ஏதென்றால்: சமஸ்த பூவாசிகளும் தனக்கு அடிமைப்படத் தக்கதாகச் சர்வ உலோக திரவிய பதார்த்தங்களுக்குந் தானே அதிபதிநாயன் அல்லாதே வேறொரு தேவன் இல்லை என்று காண்பிக்கத்தக்கதாக அவர்களுக்குச் சொன்ன சுத்தப் பொய் வெளியரங்கமாயிருக்கிறது என்று அறியவும். அதேதென்றால், ஆண்டவர் இருந்த வனத்திலே அப்படிப்பட்ட ஐசுவரியங்கள் ஒன்றும் இல்லாதிருக்கச் செய்தே, அது உண்டானதுபோல மாய்கையால் காண்பித்ததினால், தான் கொடுக்கப்போகிற கொடை எல்லாம் அந்தப் பிரகாரம் பொய்யான தியாகம் அல்லாதே மெய்யான கொடை அல்ல என்று காண்பிக்கப்பட்டது. அதை அறியாமல் மோக

005612



அக்கினிப் புகையால் விசுவாசக்கண் இருண்டவர்கள் அப்படிப்பட்ட பொய்யை மெய் என்று நினைத்துச் சரீரரட்சணைக்குரிய சகலத்திலும் பேயை நம்பி, அதைத்தானே பூசை மந்திர தந்திரங்களினாலே நித்தமும் ஆராதித்து இரைக்கு ஓடிவருகிற மச்சத்திரள்போலக் காம சௌக்கியம் என்கிற இரையால் பாவம் என்கிற தூண்டிலிலே அகப்பட்டுத் தேவநீதி என்கிற கரையில் இழுபட்டு நரக சுவாலை என்கிற கொப்பரையிலே அவிக்கப்படுவார்கள் என்று அறியவும். ஆனதினால் போ, பிசாசே! என்று ஆண்டவர் திருவுளம்பற்றிச் சோதனைக்காரனைத் துரத்தினதுபோல நாங்களும் பிசாசு சோதனையாகிற சுகாசை, செகாசை, தனாசை என்கிற இந்த மூவித ஆசைகளையும் தள்ளிப் பிசாசைக் கெலிக்கவேணும் என்று அறியவும். இதல்லாமல் ஆண்டவர் பிசாசின் சோதனையை வெல்லத்தக்கதாக நாற்பதுநாள் ஊண் உறக்கம் இன்றி உபவாசம்பண்ணினது போல நாங்களும் நாற்பதுநாள் முடியும்மட்டும் ஒறுத்த போசனத்தோடு ஒருசந்தியாய் இருந்து பிசாசைச் செயிக்கவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் தபசுகாலத்தின் அநுசரிப்புகளைக் கொண்டு வருஷந்தோறும் உமது திருச்சபையைச் சுத்தமாக்கியருளுகிறீரே. உமது குடும்பமான இந்தத் திருச்சபை தனது ஒறுத்தல்களின் மூலமாய் அடைந்துகொள்ளத் தேடுகிற நன்மைகளை அது நற்கிருத்தியங்களாற் தேவரீரிடத்திலே பெற்று மகிழத்தக்கதாக அநுக்கிரகம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய், சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## (சதுரிகை) தபசுகாலத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு பதினேழாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக் காலத்திலே யேசுநாதர் இராயப்பரையும், இயாகப்பரையும், அவர் சகோதரனாகிய அருளப்பரையும் அழைத்துக் கொண்டு ஓர் உயர்ந்த மலையின்மேல் அவர்களை ஏகாந்தமாய்க் கூட்டிக் கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் சூரியனைப்போல துலங்கினது. அவருடைய வஸ்திரங்கள் பனியைப்போல வெண்மையாயின. அன்றியும் இதோ, மோயீசனும், எலியாசும் அவரோடு பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள். அப்போது இராயப்பர் யேசுநாதரை நோக்கிச் சுவாமி, நாம் இங்கேயிருக்கிறது நல்லது. தேவரீருக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோயீசனுக்கு ஒரு கூடாரமும், எலியாசுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களை அடிப்போமாகவென்றார். அவர் இன்னும் பேசிக்கொண்டிருக்கையில், இதோ பிரகாசமுள்ள ஓர் மேகம் அவர்களுக்கு நிழலிட, மேகத்தினின்று இதோ, ஓர் குரலொலி உண்டாகி: நம்முடைய நேச குமாரன் இவரே, இவர்பேரில் நாம் பூரண பிரியமாயிருக்கிறோம். இவருக்குச் செவிகொடுங்கள் என்று சத்தித்தது. இதைக் கேட்டுச் சீஷர்கள் முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள். அப்பொழுது யேசுநாதர் கிட்ட வந்து, அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படாதேயுங்கள் என்றார். அவர்களோ தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபொழுது, யேசுநாதர் ஒருவரைத்தவிர வேறொருவரையுங் காணவில்லை. அவர்கள் மலையிலிருந்து இறங்குகையில், யேசுநாதர் அவர்களை நோக்கி: மனுமகன் மரித்தோரினின்று உயிர்த்தெழுந்திருக்கும்வரையில், நீங்கள் இந்தக் காட்சியை ஒருவருக்கும் சொல்லாதேயுங்கள் என்று கட்டளையிட்டார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது: ஆண்டவர் தபோர் என்கிற மலையிலே சீஷர்களுக்குத் தம்மை விசுவ ரூபமாய்க் காண்பித்தார் என்றதே. அது எப்படிப்பட்ட ரூபமோ என்றால்: தாம் மரித்து எழும்புகிற அமல சரீரத்திலே மேற்பட்டு விளங்கும் மோக்ஷ மகிமை அலங்காரத்தையும், நடுத்தீர்க்க எழுந்தருளி வருகையில் பிரதாபிக்கிற தெய்வீக முகப் பிரதாபத்தையும் காண்பித்தார். அத்தால் பருவத சிகரம் எல்லாம் நூதன சூரியோதயம்போலப் பிரகாசித்துப் பரகதி இராச்சியம்போலச் சவுக்கிய செழிப்பானது என்று அறியவும். அந்தச் சமயத்திலே மோசேசு, எலியாசு என்கிற இரண்டு திவ்விய தரிசியர்களும் காணப்பட்ட அபிப்பிராயம் ஏதென்றால், மோசேசு வேதம் எழுதினதினால் வேதவாக்கியத்தின் குறிப்பாகவும், எலியாசு உத்தம தீர்க்கதரிசியானதினால் தரிசியர்களுடைய வாக்கியத்துக்கு அடையாளமாகவும் வந்தார்கள். அப்படியே வேதவாக்கியத்தாலும், தெரிசன வாக்கியத்தாலும், ஆண்டவர் தேவமனுஷ குமாரனைப் பூலோகத்திலே எழுந்தருளினார் என்ற நிண்ணயம் இரு சாட்சிகளால் ஒப்பிக்கச் சர்வேசுரன் திருவுளமானார் என்று அறியவும்.

அப்படிப்பட்ட காட்சியை எந்த நிமித்தமாய் ஆண்டவர் அவர்களுக்குக் காண்பித்தாரோ என்றால், தாம் பாடுபடுகிற நாள் முடுகினதினால் அந்நேரம் தமக்கு வருகிற நிசித இகழ்ச்சியைக் கண்டு சீஷர்களுடைய விசுவாசபட்சம் தளராதபடிக்குத் தாம் மறுபடி சீவித்துப் பிரதாபிக்கிற மகிமையை அவர்களுக்கு ஏலவே காண்பிக்கத் திருவுளமானார் என்று அறியவும்.



ஆனால் இப்படிப்பட்ட தரிசனத்தைக்கண்டு, பேதுரு என்கிற சீஷன் அவ்விடத்திலே கூடாரங்களைக் கட்டித் தங்குகிறது நல்லது என்றதும், அதினால் மேகத்தால் தரிசனம் மறைந்ததும், எந்த அபிப்பிராயமோ என்றால்: அப்படிப்பட்ட விண்ணப்பத்தை அவர் அறிவற்ற மனசோடு செய்ததினால் பராபரனுடைய சித்தத்துக்குப் பொருத்தமாகவில்லை என்று காண்பிக்கப்பட்டது. அது ஏதெனில், அநித்தியமான பூலோகத்தின் வாசத்தை நித்தியம் என்றும் இமிட்டி விழிக்கிறதற்குள்ளாக மறையலான தெரிசனத்தின் சவுக்கியம் நிலையான செல்வம் என்றும் யோசித்ததினால் ஞானவீனன் ஆனார். அப்படியே பிரபஞ்ச வாழ்க்கைக்கு இரையாய் இருக்கிற மூடாத்தும பாவிகள் தாங்கள் அனுபவிக்கிற யாதொரு ஐசுவரிய, மகத்துவ போகபோக்கியம் மாறாத கதியாய் நீளிக்கவும், அழியாத மாடமாளிகையோடு வசிக்கவும் வேணும் என்று நினைத்து மரணத்தையும் மேற்கதிக்குச் செல்லுதலையும் மறந்து இருக்கிறபோது மேகம் என்கிற மரணத்தின் இருள்வந்து அவர்களுடைய இரு கண்களும் ஒருக்காலும் விழியாதபடி மறைத்து, மேகத்திற் தொனித்த சத்தமாகிய சர்வேசுரனுடைய நிருபமான தீர்வையால் மனுஷ உலோக வாச வாழ்வு எல்லாம் கலைந்து நரகலோகத்திலே சாகாத சாவோடு அழுந்தப் போவார்கள் என்று அறியவும். ஆனதினால் இப்படிப்பட்ட நிலையற்ற பிரபஞ்ச வாழ்வோடு கட்டப்பட்ட ஆசையின் கட்டு அவிழ்த்து அழியாத நவநிதியபாக்கியத்திலே சிந்தைவைத்துத் தபோர் என்கிற மலைச் சிகரத்தில் அற்பநேரம் காணப்பட்ட ஆண்டவருடைய முக ஒளிவை நீடூழிகாலம் பரகதியிலே கண்டிருக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, நாங்கள் அற்பமாவது புண்ணியமில்லாதவர்களாயிருக்கிறதைத் தேவரீர் அறிவீரே. ஆதலால் நாங்கள் எங்கள் சரீரத்துக்கு வருகிற சகல தீங்குகளிலேயும் நின்று விலகியும், ஆத்துமத்தில் உண்டாகிற துர்ச்சிந்தனைகளாற் கெடாமல் சுத்தமாயிருக்கும் பொருட்டு எங்களை உள்ளும் புறமும் காத்தருளும் சுவாமி. தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய், சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யெசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (சதுரிகை) தபசுகாலத்தின்

## மூன்றும் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

சுவிசேஷக லூக்கா பதினேராம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் ஊமையாயிருந்த ஓர் பிசாசைத் துரத்தினர். பிசாசைத் துரத்தினவுடனே ஊமையன் பேசினன். சனங்கள் அதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்கள். அப்போது அவர்களில் சிலர் : இவன் பேய்களின் தலையாகிய பேயேல்சேபூபினல் பேய்களைத் துரத்துகிறன் என்றர்கள். வேறு சிலர் அவரைச் சோதிக்கத்தக்கதாக வானத்தினின்று ஓர் அதிசயத்தை அவரிடத்தில் கேட்டார்கள். ஆனல் அவர்களுடைய நினைவுகளை அவர் கண்டமாத்திரத்தில் அவர்களை நோக்கிச் சொன்னதாவது : தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்த எந்த இராச்சியமும் பாழாய்ப்போம் ; வீடும் வீட்டின்மேல் விழும். ஆகையால் சாத்தானும் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்துபோனல், அதின் இராச்சியம் நிலைநிற்பதெப்படி? இப்படியிருக்க நான் பேயேல்சேபூபினல் பேய்களை ஓட்டுகிறேன் என்கிறீர்களே. நான் பேயேல்சேபூபினல் பேய்களை ஓட்டினல், உங்கள் மக்கள் யாரைக்கொண்டு அவைகளை ஓட்டுகிறர்கள்? ஆகையால் அவர்களே உங்களுக்கு நடுவர்களாயிருப்பார்கள். ஆனல் நான் சர்வேசுரனுடைய விரலினலே பேய்களை ஓட்டுகிறேனகில் சர்வேசுரனுடைய இராச்சியம் மெய்யாகவே உங்களிடத்தில் வந்திருக்கிறது. ஆயுதமணிந்த பலசாலி தன் மாளிகையைக் காக்கிறபோது, அவன் உடைமைகளெல்லாம் பத்திரமாயிருக்கின்றன. ஆனல் அவனிலும் அதிக பலவான் ஒருவன் சடுதியில் வந்து அவனை ஜெயித்தால், அவன் நம்பியிருந்த ஆயுதங்களையெல்லாம் பறித்துக்கொண்டு, அவன் கொள்ளைப்பொருளையும் பங்கிடுவான். என்னேடு இராதவன் எனக்கு விரோதியாய் இருக்கிறன் ; என்னேடு சேர்த்துக்கொள்ளாதவன் சிதறடிக்கிறன். அசுத்த அரூபி ஒரு மனிதனைவிட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் இளைப்பாற்றியைத் தேடித்திரிந்தும், கிடையாமல் : நான் விட்டுப் புறப்பட்ட என் வீட்டுக்குத் திரும்பிப் போவேனென்று சொல்லி, மறுபடி வந்து, அது துடைப்பத்தால் சுத்தமாக்கப்பட்டு, சோடிக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறது. அப்பொழுது அது போய், தன்னிலும் அதிக பொல்லாத வேறே ஏழு அரூபிகளைத் தன்னேடு கூட்டிக்கொண்டுவந்து, உள்ளே புகுந்து அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த மனிதனுடைய முந்தின ஸ்திதியிலும் பிந்தின ஸ்திதி அதிக கெடுதியாயிருக்கிறதென்று திருவுளம்பற்றினர். அவர் இவைகளை வசனிக்கையில் சம்பவித்ததேதெனில், ஜனக்கூட்டத்தில் நின்று ஓர் ஸ்திரீயானவள் தன் சத்தத்தை உயர்த்தி, அவரை நோக்கி : உம்மைச் சுமந்த உதரமும் நீர் அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம் பெற்றவைகளே என்றள். அதற்கு அவர் : அப்படியானலும், சர்வேசுரனுடைய வாக்கியத்தைக் கேட்டு, அதை அனுசரிக்கிறவர்கள் பாக்கியவான்களென்று திருவுளம்பற்றினர்.



இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷம் ஏதென்றல், ஆண்டவர் ஊமையான பிசாசை அகற்றினர் என்றதினல் பாவத்துக்கும் பிசாசு என்ற பேர்செல்லும். அதேதென்றல் : பிசாசு தான் ஆவேஷங்கொண்ட மனுஷனுடைய வாயையும், செவிகளையும் அடைத்து, அவனை மூகையும் செவிடனும் ஆக்கினதுபோல, பாவம் மிகுந்த கர்மவாளனை வியர்த்தப் பறைச்சல்களிலே வாய்ச்சாலகனயிருந்தாலும் சர்வேசுரனைத் துதிக்கவும், பாவ உச்சாரணம் பண்ணவும் ஞானபோதகங்களைக் கேட்கவும், இந்திரியங்கள் வழங்காமல் ஊமை, செவிடன் கோலமாகப் பண்ணும் என்று அறியவும். அப்படிப்பட்ட பாவத்தைப் போக்கின உடனே உலோகர் எல்லாம் அதிசயிக்கத்தக்கதாகத் தர்ம வாக்குகளிலும் சுகிர்த சரித்திரங்களிலும் பூரணன் ஆவான் என்ற விபரமாம்.

ஆனல் ஆண்டவர் பிசாசைத் தள்ளி உலோகத்துக்கு இந்த ஆச்சரியமான கிருத்தியத்தைச் செய்த இடத்திலே அதைப் பேய்மூலமாய்ச்செய்தார் என்று சிலர் நிந்தித்ததும், சிலர் மனம் சோதித்ததும் ஏதென்றல் : பூலோகத்திலே தருமவாளர் செய்கிற நற்கிருத்தியங்களுக்குக் கர்மவாளர் மனவெறுப்பாய்ப் பண்ணுகிற எதிரிடை இம்மேரைதான் என்று அறியவும். அப்படியே அவர்களுடைய சுகிர்தங்களை அவகீர்த்தியாக்கத்தக்கதாக அவர்கள் நடக்கிற தாழ்ச்சியை நிசிதம் என்றும், பொறுதியைப் பெலவீனம் என்றும், கபடின்மையை அஞ்ஞானம் என்றும், அற்புதத்தை மாயம் என்றும் இப்பிரகாரம் யோசித்துத் தூஷணிப்பார்கள். ஆனதினல் ஆண்டவர் தேவபெலத்தினல் தள்ளின பிசாசைப் பேய்த் தந்திரத்தினல் செய்தார் என்று சொன்னர்கள். ஆனல் அப்படிப்பட்ட படாபழி மெய்யாகப் போகாது என்று ஆண்டவர் காண்பிக்கத்தக்கதாகப் பிசாசு தன் உள்ளரங்கத்திலே பேதலித்திருக்க, அவன் இராச்சியம் எப்படிப் பெலக்கலாம் என்று திருவுளம்பற்றின அபிப்பிராயம் ஏதென்றல் : பிசாசுகள் துன்மனமாய் நரகத்திலே விழுமுன்னம், மற்ற அரூபிகளோடே ஒரு கூட்டமாய் லூசிப்பேருடைய தலைமையின்கீழே ஒடுங்கி அமைச்சலாயிருந்தார்கள். அவன் கெறுவத்தால் தேவதுரோகியாய் முனிவு அடைந்த உடனே அவனுடைய இராணுவம் கலைந்து இராசாங்கம் கெட்டுத் தலைமை நடவாதேபோனது. அதினல் சர்வேசுரனுடைய பெலத்தினலே அதுகள் தள்ளுண்டு போகிறதல்லாதே அவன் வல்லமை செல்லாது என்று காண்பித்தார்.

பெலவந்த ஆயுதபாணியானவன் தனது அரண்மனையைக் காத்திருந்தால் அவன் வஸ்து எல்லாம் சிதருமலிருக்கும் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது ஏதென்றால்: தர்ம வீரியமுள்ளவன் தன்னுடைய ஆத்துமம் என்கிற அரண்மனையைத் தியான தவம் என்கிற வரங்களையும் கேடயத்தையும், அல்லது அம்பையும் வில்லையுங்கொண்டு காத்திருந்தால், அதிலேயுள்ள திரவியம் என்கிற தேவப்பிரசாதங்கள் தளராமல் இருக்கும். ஆனால் அவனிலும் வல்லவன் என்கிற வலிய பிசாசின் சோதனைவந்து அவனைத் தோற்கடித்துப் பாவத்திலே விழுத்தினால் அவனுடைய ஆயுதம் என்கிற தியான செப தவங்களையும், ஆஸ்தி என்கிற பிரசாதங்களையும் பறித்து அழித்துப்போடும் என்கிற அர்த்தமாம்.

நம்மோடே சேராதவன் நமக்கு விரோதியாய் இருப்பான், நம்மோடே கைக்கொள்ளாதவன் சிதறுவான் என்ற வசனம் ஏதென்றால்: ஆண்டவருடைய சித்தத்தோடு ஒரே சித்தமாயிராதவனும் அவருடைய புண்ணியத்தோடு புண்ணியப்பேறு தேடாதவனும் அவருக்கு விரோதியான பிசாசுக்கூட்டமாய்ப் போய் ஆண்டவருடைய அளவில்லாத புண்ணியபலன் தனக்கு ஒன்றும் உதவாமல் வியர்த்தமாய்ச் சிதறுவான் என்கிற அபிப்பிராயமாம்.

தள்ளுண்டுபோன பிசாசு தண்ணீர் படாத இடங்களிலே இளைப்பாறத் திரியும் என்றும் துடைப்பத்தால் விளக்கிச் சோடித்திருந்த வீட்டைக்கண்டு பிரவேசிக்கும் என்றும் சொன்னது ஏதென்றால்: பத்தியும் இரக்கமும் இல்லாத இருதயம் தண்ணீர் இல்லாத இடம் என்று சொல்லத்தகும். உண்மையான கிறீஸ்து விசுவாசம் இல்லாத யூதர்போல உலோக ஓச்சத்துக்கு நற்கிரியை செய்கிறவர்களுடைய ஆத்துமம் விளக்கிச் சோடித்திருக்கிற வெறும்மனை என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட தலங்களிலே பிசாசு பிரவேசிக்கத் திரிவது என்று அர்த்தமாம். அப்படியே முன் இருந்த வீட்டிற் பிசாசு மறுபடி திரும்புகிறபோது தன்னிலும் அதிக துஷ்ட ஏழு பிசாசைக் கொண்டுவரும் என்றதினால், பாவத்தை விட்டுத் தரும வழி புகுந்தவன் மறுபடி பாவத்திலே விழுகில் ஏழு தலையான பாவங்களிலும் மனங்கொண்டு முந்தினதுக்கு அதிக கர்மவாளனாய்ப் போவான் என்ற அப்பிராயமாம். இந்தப் பிரகாரமாக ஆண்டவர் ஊமைப்பிசாசைத் தள்ளினதிலே போதித்த ஞான அர்த்தங்களை நாங்கள் அறிந்து எங்கள் மனசுகளிலே நிலைகொண்டிருக்கிற கோப, மோக, துவேஷ, துஷ்டாட்ட ஊர்க்க மூர்க்கம் என்கிற கொடிய பிசாசுகளைப் போக்கடித்துச் சனசமுகத்தில் ஒரு ஸ்திரி அதிக விசுவாசத்தோடு ஆண்டவரைத் துதித்ததுபோல நாங்களும் ஆண்டவருக்குப் புகழ்ச்சியான கிரியை



யோடு நடந்து பரலோகத்திலே அவரை ஸ்துத்தியம் நிறைந்த வாக்குகளால் நித்தம் துதித்திருக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லமையுள்ள சருவேசுரா, தேவரீர் நீச அடியாரான எங்கள் வேண்டுதல்களுக்குச் செவிசாய்த்து எங்களைப் பாதுகாக்க உமது தெய்வீக திரு வலதுகரத்தை நீட்டியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய், சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# (சதுரிகை) தபசுகாலத்தின்
## நாலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக அருளப்பர் ஆறும் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் திபேரிய நகரத்துக் கடலாகிய கலிலேயாக் கடலின் அக்கரைக்குப் போனார். திரளான சனங்களும் வியாதிப்பட்டவர்களிடத்தில் அவர் செய்தருளிய அற்புதங்களைக் கண்டதினாலே, அவரைப் பின்சென்றார்கள். ஆகையால் யேசுநாதர் ஓர் மலையின்மேல் ஏறி, அவ்விடத்தில் தம்முடைய சீஷர்களோடு கூட உட்கார்ந்தார். அப்பொழுது யூதருடைய பண்டிகை நாளாகிய பாஸ்கா சமீபித்திருந்தது. அப்படியிருக்க, யேசுநாதர் தம்முடைய கண்களை ஏறெடுத்து, மிகுதியான ஜனக்கும்பல் தம்மிடத்தில் வந்திருக்கிறதைக் கண்டு, பிலிப்பென்பவரை நோக்கி: இவர்கள் சாப்பிடும்படி எங்கேயிருந்து அப்பங்களை வாங்குவோம் என்றார். தாம் செய்யப் போகிறதை அறிந்திருந்தும், அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார். பிலிப்பு அவருக்கு மறுமொழியாக: இவர்களில் ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றார். அப்பொழுது அவருடைய சீஷர்களில் ஒருவரும், சீமோன் இராயப்பருடைய சகோதரனுமாகிய பெலவேந்திரர் அவரை நோக்கி: இங்கே ஒரு பையனிருக்கிறான் ; அவனிடத்தில் ஐந்து வாற்கோதும்பை அப்பங்களும் இரண்டு மீன்களும் இருக்கின்றன. ஆனாலும் அவைகள் இத்தனை பேர்களுக்கு எம்மாத்திரம் என்றார். யேசுநாதர்: ஜனங்களைப் பந்தியமரச்செய்யுங்கள் என்றார். அவ்விடத்தில் புல் மிகுதியாயிருந்தது. அப்படியே பந்தியமர்ந்த புருஷர்கள் சுமார் ஐயாயிரம் பேராயிருந்தார்கள். அப்பொழுது யேசுநாதர் அப்பங்களை எடுத்து, நன்றியறிந்த தோத்திரஞ் சொன்னபின், பந்தியமர்ந்தவர்களுக்குப் பரிமாறினார்.



Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS
"THODARBAHAM"
657/1, HOSPITAL ROAD, JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வண்ணமே மீன்களிலும் அவர்களுக்கு வேண்டியமட்டும் கொடுத்தார். அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: மீதியான துண்டுகள் சேதமாகாதபடிக்கு அவைகளைச் சேர்த்துவையுங்கள் என்றார். அப்படியே அவர்கள் சேர்த்து, ஐந்து வாற்கோதும்பை அப்பங்களிலே சாப்பிட்டவர்களுக்கு மீதியான துண்டுகளால் பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள். யேசுநாதர் செய்த அற்புதத்தை அந்த மனிதர்கள் கண்டு: மெய்யாகவே உலகத்தில் வரவேண்டிய தீர்க்கதரிசி இவர்தான் என்றார்கள். ஆகையால் அவர்கள் தம்மை இராஜாவாக்கும்படி பலவந்தமாய்த் தம்மைப் பிடிக்க வரப்போகிறார்களென்று யேசுநாதர் அறிந்து, மறுபடியும் தனியே மலையின்மேல் ஏறி, விலகிப்போனார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷம் ஏதென்றால்: முதலாவது, ஆண்டவர் சனங்களுக்கு ஓசீவனம் கொடுக்கத் திருவுளமான இடத்திலே அதைக் கொடுக்க முன்னமே அப்பம் கொள்ளலான இடம் எங்கு என்று சீஷர்களுடைய மனதைச் சோதித்துக் கேட்ட காரணம் ஏதென்றால்: அவர்களுடைய மனசு தமது தெய்வீக வல்லமையின்பேரிலே அற்ப விசுவாசமுள்ளது என்று அறிந்ததினால், அத்தை அவர்களுடைய வாக்கினாலே வெளிபொருளாய்க் காண்பித்துத் தாம் செய்கிற கிரியையினாலே அவர்களைத் திருத்தி முழுவிசுவாசியாக்கவேணும் என்றதினால் அப்படிக் கேட்கத் திருவுளமானார் என்று அறியவும். இரண்டாவது, அப்பத்தையும், மச்சத்தையும் கொண்டு அற்புதம் உண்டாக்கினகாரணம் ஏதென்றால்: இரைகண்ட இடத்திலே மச்ச பக்ஷி முதலான அறிவற்ற செந்துக்கள் தொடர்ந்து வருகிறதுபோல, அக்கியானம் என்கிற திமிர் அந்தகாரத்திலேயும், வியர்த்தகாமியம் என்கிற ஆகாச அந்தரங்களிலேயும் முக்குளித்திருக்கிற பூவாசிகளுக்குப் போசனப் பிரியமானது அதிக உருசிகர இரையாயிருக்கிறதினால், அப்படிப்பட்ட இரையால் அவர்களைச் சத்தியவேதம் என்கிற தருமவலையில் அகப்படுத்தி மோக்ஷகரை ஏற்றத் திருவுளமானார் என்ற அபிப்பிராயமாம். அப்படியே அஞ்சு அப்பத்தால் ஐயாயிரம் பேர்களைத் திருப்தியாக்கினதினால் தம்முடைய தேவ வாக்கியத்தால் சகல உலோக பொருட்களையும் உண்டாக்கி, ஒருவிதத்தால் கோடிலக்ஷமேரையாய்த் தானியம் விளையப்பண்ணுகிற தெய்வீக வல்லமையையும், எறும்பு, சிற்றெறும்பு முதலான சகல சீவாத்துமாக்களையும் இரக்ஷித்து வருகிற அனந்த கிருபைப் பரிபாலனத்தையும், விசுவசிக்கச் செய்தார் என்று அறியவும். ஆனால் அந்த அஞ்சு அப்பத்துக்கும் இரு மச்சத்துக்கும் ஞான அர்த்தம் என்னவென்றால்: அஞ்சு அப்பம் என்பது அஞ்சு காமியங்களை வெறுத்த ஐவித



சுகிர்தமான ஒறுத்தலாம். அல்லது மனஸ்தாபம், உச்சாரணம், உபவாசம், தானம், செபம் என்கிற சுகிர்த பாவோச்சாரணத்தின் அஞ்சு லக்ஷணமாம். இது அல்லாமல் சரீரபோசனம், தபோதனபோசனம், உபதேசபோசனம், பிரசாதபோசனம், மோட்சபோசனம் என்கிற ஐவித ஞான உற்பனம் பொருந்திய போசனம் என்றும் சொல்லத்தகும். அப்படிப்பட்ட பஞ்ச கிருத்திய சுகிர்தங்களினாலும் இரு மச்சமாகிய தேவபயம், பத்தி என்கிற இருவகைப் பிரசாதங்களினாலும், ஆத்துமம் சீவிக்கும் என்ற அபிப்பிராயமாம். ஆனதினால் சமஸ்த சனங்களும் ஆண்டவர் கொடுத்த இந்த ஞான ருசிகரமான விருந்தின் தர்ம உணவுகளைக் கையேற்று ஆத்துமத்தையும் சரீரத்தையும் இரட்சிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவ வல்லமையுள்ள சருவேசுரா, எங்கள் துர்க்கிருத்தியங்களுக்கு நீதிப்படி தண்டனைப்படுகிற நாங்கள் தேவரீருடைய வரப்பிரசாதத்தின் ஆறுதலினால் தேற்றரவு அடைந்துகொள்ளக் கிருபை பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

# (சதுரிகை) தபசுகாலத்தின்

## ஐஞ்சாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக அருளப்பர் எட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் யூதசெனங்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: என்னிடத்திலே பாவம் உண்டென்று உங்களில் எவன் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவசிக்கிறதில்லை. சர்வேசுரனால் உண்டானவன் சர்வேசுரனுடைய வாக்கியங்களுக்குச் செவிகொடுக்கிறான். நீங்கள் சர்வேசுரனால் உண்டாகாதவர்களாகையால், செவிகொடாதிருக்கிறீர்கள் என்றார். அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: நீ சமாரியனென்றும், பேய்பிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரியல்லவோ என்றார்கள். அதற்கு யேசுநாதர் மறுமொழியாக: நான் பேய்பிடித்தவனல்ல; நான் என் பிதாவைச் சங்கிக்கிறேன். நீங்களோ என்னைச் சங்கையீனப்படுத்தினீர்கள். ஆயினும் நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுகிறவரும் நியாயந் தீர்க்கிறவருமாகிய ஒருவர் இருக்கிறார். யாதொருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், என்றென்றைக்கும் சாவைக்காண்பதில்லை என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீ பேய்பிடித்தவன் என்று இப்பொழுது அறிந்துகொண்டோம். அபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; நீயோ: யாதொருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், என்றென்றைக்கும் மரணச் சுவை பாரான் என்கிறாயே. எங்கள் பிதாவாகிய அபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார்; தீர்க்கதரிசிகளும் மரித்தார்களே; உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய் என்றார்கள். யேசுநாதர் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: நானே என்னை மகிமைப்படுத்தினால், என் மகிமை ஒன்றுமில்லை. என் பிதாவே என்னை மகிமைப்படுத்துகிறவர். அவரையே நீங்கள் உங்கள் தெய்வம் என்கிறீர்கள். ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை; நானோ அவரை அறிந்திருக்கிறேன். நான் அவரை அறியேன் என்பேனாகில், உங்களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன். அவரை நான் அறிந்து, அவருடைய வாக்கியத்தை அனுசரிக்கிறேன். உங்கள் பிதாவாகிய அபிரகாம் என்னுடைய நாளைக் காணவேண்டுமென்று ஆவலோடு ஆசித்தார்; (அதைக்) கண்டு களிகூர்ந்தார் என்றார். அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு இன்னும் ஐம்பது வயதில்லையே; நீ அபிரகாமைக் கண்டாயோ என்றார்கள். யேசுநாதர் அவர்களை நோக்கி: அபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது அவர்கள் அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்தார்கள். யேசுநாதரோ மறைந்து, தேவாலயத்தினின்று வெளியே போனார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே கிரகிக்கத்தக்க விசேஷமாவது: ஆண்டவர் யூதரைப் பார்த்துத் தம்முடைய பேரில் யாதொரு பாவத்தை எவனாவது ஆரோபிப்பானோ என்று கேட்ட விபரம் ஏதென்றால்: தம்முடைய மனுஷீகம் சகல நன்மைச் சுரூபியான தேவ சுபாவத்தோடு ஐக்கியமாயிருக்கிறதினால் ஒருக்காலும் யாதொரு பாவதோஷத்துக்கு ஏதுவாகக் கூடுவது அல்ல என்று காணச் செய்தார். இதல்லாமல் அப்படிப்பட்ட தம்முடைய சுகிர்த சுபாவ இலட்சணங்களை எந்நாளும் யூதர்களுக்குக் காண்பித்து ஓயாது ஓடுகிற செல்வ ஆறுபோல அவர்களுக்கு நன்மைகளைச் செய்துவருகையிலே அவர்கள் அதிகம் அதிகமாய்த் தம்மை விரோதித்துத் துவேஷித்து வந்ததினால் அவர்களுடைய துஷ்டாட்டத்தைக் காண்பிக்கலானார். இதல்லாமலும், அவர்களைப்போல நாங்களும் சர்வேசுரனால் பிரதிதினம்பெற்ற உபகாரங்களுக்கு நன்றியறியாமல் செய்த பாவங்களை நினைக்கவேணும் என்று அப்படிப்பட்ட வாக்கியத்தைத் திருவுளம்பற்றினார் என்று அறியவும்.



அதின்பின் தாம் வசனிக்கிற சத்தியங்களை விசுவாசியாதது ஏன் என்று கேட்டாரே. அந்தச் சத்தியங்கள் ஏதென்றால்: ஞான தெளிவு அற்ற உலோகத்தவர் கண்டுபிடியாத அநேக பரமானந்த தரும நெறிகளை அவர் வசனித்ததுண்டு. அதாவது, லெளகீக தன திரவியங்களைக் கூர்மையுள்ள முள்ளுக்களாம் என்றும், வெகுமான பெருமைகளை வியர்த்த நீர்க்குமிழியாம் என்றும், செல்வ, சுகபோகங்களைக் கசந்த நீராம் என்றும், இவை சத்தியமாக வசனித்ததுண்டு. ஆனால் ஒருவரும் இப்படிப்பட்ட சத்தியங்களை உண்மை என்று கைக்கொள்வதில்லை. இதல்லாமல் தீவினைக்கு நன்மைசெய்யவும், ஒரு அறை அறைந்தவனுக்கு இன்னம் அறைபடக் கருத்தைக் காட்டவும், உன் வஸ்திரம் பறித்தவனுக்கு மேல்வஸ்திரத்தைத் தியாகம் பண்ணவும், ஒரு கூலிக்கு இரட்டைப் பணிவிடை செய்யவும் என்று இத்தொகைப்பட்ட உலோகருக்கு அரோசகமானதுமாய் ஞானத்துக்கு வெகு உருசிகரமானதுமாய் இருக்கிற உச்சித சுகிர்தங்களைப் படிப்பித்ததுண்டு. அதின் மேரையாய் ஒருவரும் நடப்பதில்லை. ஆனதினால் இப்படிப்பட்டவர்கள் சுகிர்த நீதி விளம்புகிற நேரத்திலே ஆண்டவர் கேட்ட மொழிக்கு மறுமொழியில்லாமல் கடின தீர்வைக்கு உள்ளாவார்கள் என்று அறிவித்தார்.

சர்வேசுரனால் உண்டானவன் அவருடைய வார்த்தையைக் கேட்பான் என்றதற்கு அர்த்தம் ஏதென்றால்: சர்வேசுரனுடைய வாக்கியங்களைக் கேள்விப்படுவதும் அதின் மேரையாய் நடந்து மோட்சம் அடைவதும் அவருடைய அருட்பிரசாதத்தினாலேதான் உண்டாகும் என்று அறிவித்தார். அப்படிப்பட்ட பிரசாதத்தை யூதர் அடையாததினால் மூர்க்கராயிருக்கிறார்கள் என்று காண்பித்தார்.

ஆனால் ஆண்டவர் அருளின இத்தொகைப்பட்ட வசனங்களை யூதர் கேட்டவுடனே அவரைச் சமாரித்தானு சாதியான் என்றும், பிசாசு ஆவேசங் கொண்டவன் என்றும், நிந்தை சொன்ன இடத்திலே அதுக்கு ஆண்டவர் சாந்த சித்தத்தோடு பொறுதியாயிருந்து, தம்மிடத்திலே பிசாசு இல்லை என்ற வார்த்தையை மாத்திரம் அருளின விபரம் ஏதென்றால்: தம்மிடத்தில் பிசாசு உண்டு என்ற வார்த்தை தம்முடைய தேவ சுபாவத்துக்கு மகா பழிப்பானதினால் அதைப் பொய் என்று காண்பியாவிட்டால் வேதத்துக்கு வெகு அவதூறாயிருக்கும். ஆனதினால், அப்படிப்பட்ட பேய்ச்சன்னதம் தம்மிடத்திலே இல்லை என்று அவர் அருளிச்செய்த நியாயமாம். அத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எங்களுக்குப் போதித்த போதகமாவது: உலோகத்தவர் எங்களை உதாசனிக்கிறபோது அந்த உதாசனம் எங்களுக்கு மாத்திரம் குறையாயிருக்குமானால் அதைச் சாதுகுணத்தோடு பொறுக்கவேணும். ஆகிலும் அது சர்வேசுரனுக்கும், வேதத்துக்கும், குருத்துவத்துக்கும் அபகீர்த்தியாயிருக்குமெனில், அதுக்கு உத்தாரஞ்சொல்லித் தள்ளவேணுமென்று படிப்பித்தார்.

தம்முடைய வார்த்தையைக் கேட்கிறவன் ஒருக்காலும் இறக்கமாட்டான் என்றாரே. அது எந்த அர்த்தமோ என்றால், இங்கே உலோக மரணத்தைப்பற்றிச் சொன்னது அல்ல. ஆண்டவர் வார்த்தையைக் கேட்டவன் பாவ மரணத்தையும் நரக சாவையும் அடையமாட்டான் என்று காண்பித்த அபிப்பிராயம் என்று அறியவும்.

பிதாவான அபிரகாம் தம்முடைய நாளைக் காணப் பிரியமாயிருந்தார் என்றாரே. அது ஏதென்றால்: தாம் பூலோகத்திலே வருகிறதை அவர் மகா ஆசையோடே விரும்பி எதிர்பார்த்திருந்தார் என்றும், வந்தபின் ஆனந்தம் அடைந்தார் என்றும் விபரமாம். அபிரகாமுக்கு முதலே தாம் இருந்தார் என்பது ஏதென்றால்: மனுஷசுபாவமட்டிலே தாம் அபிரகாமுடைய பிதிர்வழியாய் அவருக்குப் பின்வந்தாலும் தேவசுபாவமாய் அநாதியில் நின்று அவருக்கும் சகல மனுஷருக்கும் முன் இருக்கிறவர் என்று காண்பித்த விபரமாம்.

இத்தொகையாய் ஆண்டவர் வசனித்த வாக்கியங்களின் ஞான உற்பனங்களை மூட யூதர் அறியாமல் அவர்பேரில் கல் எறியத் திரிந்தது பாவிகளான உலகத்தவர்கள் சர்வேசுரனுடைய நீதி நெறியைக் கவனியாமல் உபகாரங்களுக்கு அபகாரமாய் அவருடைய சமுகத்துக்குப் பாவம் என்கிற கல்லுக்களை எறிகிற விபரமாம்.

இந்தப்பிரகாரமாக ஆண்டவர் படிப்பித்த இந்த உச்சிதமான சுகிர்த போதகங்களை எல்லாம் நாங்கள் அறிந்து யூதர் அவருக்குத் தூஷணஞ் சொன்னதினால் நாங்கள் ஸ்தோத்திரங்களைச் சொல்லவும், கல் எடுத்த கைகளுக்குப் பதிலாய்ச் சுகிர்த நடபடியாகிய புட்பங்களை அவர் சமுகத்திலே தெளிக்கவுஞ் செய்து மகா ஞான தெளிவோடே உலோக விருப்பத்தை அரோசித்து நடந்து நடுத்தீர்வையிலே ஆசீர்வதிக்கப்பட்ட புத்திரர்களுக்குக் கிடைக்கப்போகிற மோட்ச சம்பாவனையை அடையப் பிரயாசப்படக்கடவோம்.



## திருச்சபைச் செபம்

சருவ வல்லமையுள்ள சருவேசுரா சுவாமீ, தேவரீர் உமது குடும்பத்தை இரக்கமாய்த் திருக்கண்ணோக்கிப் பார்த்து, தேவரீருடைய அநுக்கிரகத்தினால் அது சரீரத்துக்கடுத்த காரியங்களில் தவறின்றி நடக்கவும் ஆத்துமத்துக்குரிய காரியங்களில் உமது பாதுகாப்பினால் பொல்லாப்பின்றி வாழவும் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சிய பாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

## (சதுரிகை) தபசுகாலத்தின்

## ஆறும் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு இருபத்தோராம் அதிகாரத்திலே எழுதி வைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் எருசலேம் நகருக்குச் சமீபமாய் வந்து ஒலிவேத்து என்னும் மலை அருகே பெத்பாஜே என்னும் ஊரில் சேர்ந்தபோது இரண்டு சீஷர்களை அனுப்பி அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: உங்களுக்கு எதிராக இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; உடனே அங்கே ஒரு கழுதையும், அதனோடு ஒரு குட்டியும் கட்டப்பட்டிருக்கக் காண்பீர்கள். அவைகளை அவிழ்த்து இங்கே என்னிடம் கொண்டுவாருங்கள். யாராவது உங்களுக்கு ஏதேனும் சொன்னால், இவைகள் ஆண்டவருக்குத் தேவையென்று சொல்லுங்கள், உடனே அவைகளைப் போகவிடுவான் என்றார். இதெல்லாம் தீர்க்கதரிசியால் வசனிக்கப்பட்ட வாக்கியம் நிறைவேறும்படி சம்பவித்தது. அவர் வசனித்ததாவது: இதோ உன் அரசன் சாந்தமுள்ளவராய்க் கழுதையின்மீதும், பொதிமிருகக்குட்டியாகிய அதின் மறியின்மீதும் ஏறிக்கொண்டு உன்னிடத்தில் வருகிறாரென்று, சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்பதாம். ஆதலால் சீஷர்கள் போய் யேசுநாதர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து, கழுதையையும் குட்டியையுங் கொண்டுவந்து, அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களை விரித்து, மேலே அவர் ஏறி உட்காரச் செய்தார்கள். அப்பொழுது திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியில் விரித்தார்கள். வேறு சிலர் மரக்கிளைகளை ஒடித்து வழியிலே பரப்பினார்கள். அல்லாமலும் அவருக்கு முன்னும் பின்னுமாக நடந்துவந்த திரளான ஜனங்கள்: தாவீதன் குமாரனுக்கு ஓசன்னா! சர்வேசுரனுடைய நாமத்தினால் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்! உந்நதங்களில் ஓசன்னாவென்று கூவி ஆர்ப்பரித்துக்கொண்டு போனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே யோசிக்கிற உற்பனமாவது:—ஆண்டவர் வேசரியின் மீதே, எருசலே நகரிக்கு எழுந்தருளினார் என்று சொல்லப்பட்டதே. அப்படிப்பட்ட வாகனத்தில் அவர் எழுந்தருளினது என்ன? யானை, குதிரை, தேர், தண்டிகையிலே எழுந்தேற்றம் பண்ணாதது ஏதென்றால்: இந்த வாகனங்கள் கெம்பீர ஆங்காரத்துக்கு அடையாளமாம். கழுதையோ என்றால் சாந்துவத்துக்கும், பேதமைக்கும் இலட்சணமாம். ஆனதினால் தம்முடைய சாந்துவகுணத்தையும், எளிமையையும், உலோகருக்குக் காண்பித்து, லௌகிக உதாசனங்களை வெறுக்கும் மேரையைப் போதிவிக்கச் செய்தார் என்று அறியவும்.

ஆண்டவருடைய எழுந்தேற்றத்தைக் கொண்டாடத் தக்கதாக, இத்தனை மனுக்களரிகள் வந்து கூடினது ஏது? அவர்களை அழைப்பித்ததும், நூதன ஸ்துத்தியங்களைப் பாடப் போதித்ததும் ஆரோ என்றால், சர்வேசுரன் அவர்கள் உள்ளத்தில் கொடுத்த மனமெழுப்பிப் பிரசாத பெலத்தால் தூண்டப்பட்டு ஒருத்தனை ஒருதன் அறியாமல் வந்து கூடினதல்லாதே, யாதொருத்தன் கூப்பிட்டதல்ல. இதல்லாமல் அவர்கள் பாடின தோத்திரங்களைச் சர்வேசுரன் அவர்களுடைய நாவிலே இசைத்து, உச்சாரணம் பண்ணுவித்தது அல்லாதே எவனாலேயாகிலும, முன் படினமாய்ச் சொன்னதல்ல. இப்படியே சிறுபிள்ளை முதலாய்த் துதிக்கும்போது மதலைகளுடைய சொல்லால் ஆண்டவர் ஆசீர்வதிக்கப்படுவார் என்று முன் எழுதிவைத்த வாக்கியம் நிறைவேறப்பட்டது என்று அறியவும். இத்தன்மையான கொண்டாட்டத்தோடு ஆண்டவர் எழுந்தருளத் திருவுளமான காரணம் ஏதென்றால்: அந்தப் பட்டணவாசிகளால் தாம், பீடையும், நிந்தையும், மரணமும் அனுபவிக்கப் போகிறதினால் அவர்கள் தம்முடைய மகிமையை அறிந்து அப்படிப்பட்ட பாவங்களைச் செய்கிறபோது அதற்குப் பக்குவம் சொல்ல அவர்களுக்கு வார்த்தை கிடைக்கமாட்டாது என்று காண்பித்தருளினார்.

எதிராக வந்த சனங்கள் தங்களுடைய உத்தரிய வஸ்திரங்களைத் தரையிலே விரிக்கவும், மரக் கொப்புக்களைப் பரவவும் பண்ணின ஞாயம் ஏதென்றால்: அந்த இராச்சியத்திலே இராசாக்கள், செயவிருதைக்கொண்டு, பட்டணங்களிலே பிரவேசிக்கிறபோது, அப்படிப்பட்ட கொண்டாட்டம் பண்ணுகிறதினால் அந்த ஆசாரத்தின்படியே செய்தார்கள் என்று அறியவும். ஆனால் அதின் ஞான உற்பனமாவது: உத்தரிய வஸ்திரங்கள்



என்பது தான் தான் அனுசரித்த வேத அடையாளங்கள் என்றும், மரக்கொப்புக்களாவது: அவனவன் பிசாசைச் செயித்த செயவிருதுகள் என்றும் சொல்லப்படும். ஆனதினால் இப்படிப்பட்ட சுகிர்தங்களைக்கொண்டு எங்கள் ஆண்டவருடைய முக தரிசனத்துக்கு எதிராகப்போய் எங்கள் இருதயமென்கிற தெருவீதிகளிலே ஒடுக்கத்தாற் தோறணங்களைக் கட்டி, தியானத்தால் விளக்குத் தளிகளைக் கொளுத்தி, ஸ்துத்தியங்களால் புட்பங்களைத் தெளித்து, பட்ச பிரீதியாற் களியாட்டம்செய்து ஆண்டவருடைய எழுந்தேற்றத்தைக் கொண்டாடி அவரை அனுசாரம் பண்ணவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வத்துக்கும் வல்லவரும் சதா நித்தியருமாகிய சருவேசுரா சுவாமீ, தேவரீர் மனுக்குலமானது தாழ்ச்சியின் மாதிரியைக் கண்டு அநுசரிக்கத்தக்கதாக எங்கள் மீட்பராகிய உமது திருச்சுதன் மனிதசுபாவத்தைத் தரித்துக்கொள்ளவும் சிலுவைமரணத்துக்குள்ளாகவும் திருவுளமானீரே. நாங்களும் அவருடைய திருப்பாடுகளின் அடையாளங்களைத் தரித்துக்கொண்டு அவருடைய உத்தானத்துக்கும் பங்காளிகளாகும்படியாக ஒத்தாசைபண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற அவரே காரண காட்சியாக, ஆமென் யேசு.

---

# (சதுரிகை) தபசுகாலத்தின்

## மகோற்சவ வியாழக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக அருளப்பர் பதின்மூன்றாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—பாஸ்குத் திருநாளுக்கு முந்தின நாளிலே யேசுநாதர் தாம் இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகவேண்டிய தம்முடைய காலம் வந்ததென்று அறிந்து, இவ்வுலகத்திலே இருந்த தம்முடையவர்களைத் தாம் சிநேகித்திருக்கையில் அவர்களை முடிவுபரியந்தம் சிநேகித்தார். சீமோன் குமாரனாகிய யூதாஸ் இஸ்காரியோத் என்பவன் அவரைக் காட்டிக்கொடுக்கும்படி, பிசாசானது அவனுடைய இருதயத்தில் முன்னமே ஏவியிருக்க அவர்கள் அசனம்பண்ணும் வேளையில், அவர், தம்முடைய கையில் பிதாவானவர் சகலத்தையும் ஒப்படைத்திருக்கிறதையும், தாம் சர்வேசுரனிடத்திலிருந்து வந்ததையும், சர்வேசுரனிடத்திற்குப் போகிறதையும் அறிந்து, பந்தியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு எழுந்து, தம்முடைய வஸ்திரங்களைக் களைந்து, ஒரு துண்டை எடுத்து இடையில் கட்டிக்கொண்டு, பின்பு ஒரு அகன்ற பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து சீஷர்களுடைய பாதங்களைக் கழுவவும், தாம் இடையில் கட்டியிருந்த துண்டத்தால் துடைக்கவும் தொடங்கினார். அப்படியே அவர் சீமோன் இராயப்பரிடத்திலே வந்தபோது, இராயப்பர் அவரை நோக்கி: ஆண்டவரே, நீரோ என்பாதங்களைக் கழுவுகிறது என்றார். யேசுநாதர் அவருக்கு மாறுத்தாரமாக: நான் செய்கிறதை இப்பொழுது நீ அறியாய்; இனிமேல் அறிந்துகொள்வாய் என்றார். இராயப்பர் அவரை நோக்கி: நீர் ஒருபோதும் என் பாதங்களைக் கழுவப்படாதென்று சொல்ல, யேசுநாதர் அவருக்கு மறுமொழியாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப்பங்கில்லை என்றார். சீமோன் இராயப்பர் அவரை நோக்கி: ஆண்டவரே, என் பாதங்களை மாத்திரமல்ல, கைகளையும் சிரசையுங்கூடக் (கழுவியருளும்) என்றார். யேசுநாதர் அவரை நோக்கி: ஸ்நானம்பண்ணினவன் பாதங்களையேயன்றி மற்றொன்றையுங் கழுவவேண்டுவதில்லை. மற்றப்படி அவன் முழுதும் சுத்தமாயிருக்கிறான். நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார். ஏனெனில் அவர் தம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் இன்னானென்று அறிந்திருந்தார். அதினிமித்தமே நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார். அவ்வண்ணமே யேசுநாதர் அவர்களுடைய பாதங்களைக் கழுவினபிற்பாடு தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்பவும் பந்தியில் உட்கார்ந்து, அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களோ? நீங்கள் என்னைக் குருவென்றும், ஆண்டவரென்றும் அழைக்கிறீர்கள்; நீங்கள் சொல்வது சரியே; ஏனெனில் நான் அவர்தான். ஆகையால் ஆண்டவரும் குருவுமாகிய நான் உங்கள் பாதங்களைக் கழுவினேனாகில், நீங்கள் ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவக்கடவீர்கள். ஏனெனில் நான் உங்களுக்கு எவ்விதம் செய்தேனோ, அவ்விதமே நீங்களும் செய்யும்படியாக உங்களுக்கு மாதிரிகை காண்பித்தேன் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஆண்டவர் செய்த இருவித அதிசயமான கிருத்தியங்கள் அறியத்தக்க சுக விசேஷமாம். அது ஏதென்றால்: முதலாவது தம்முடையவர்களைத் தாம் முழுதும் நேசித்தார் என்ற வாக்கியத்தால் தம்முடைய அனந்த தயையின் மகிமையை மனுஷரிடத்திலே முகியக் காண்பிக்கச் செய்தார் என்ற அபிப்பிராயமாம். அது ஏதென்றால்: தம்முடைய அளவில்லாத வலிமையால் மனுஷரை உண்டுபண்ணின நன்மையையும், சகல உலோக பதார்த்தங்களால் சீவித்துச் சேமமாய் இருக்கப்பண்ணின நன்மையையும் அல்லாமல் தம்முடைய விலைமதியாத உதிரம் விலையாகக் கொடுத்துப் பிசாசின் அடிமையால் அவர்களை மீட்சிப்படுத்திப் பரலோகத்தின் சகல பாக்கியங்களையும் உரிமையாய்க் கொடுத்தாரே. இதெல்லாம் தம்முடைய அளவில்லாத தயையின் மகிமை



பூரணமாய்க் காண்பிக்கிறதுக்குப் போதாது என்று தம்மைத் தாம் அவர்களுக்குப் போசனமாய்க் கொடுக்கவும், அது நிமித்தமாய்த் தாம் எங்கள் இருதயங்களிலே பிரவேசித்து எங்கள் ஆத்தும சரீரத்தைத் தமது ஆத்தும சரீரத்தோடு ஐக்கியமாக்கி ஒன்றுபடப்பண்ணவுந் திருவுளமானார். அது எந்த விதமோ என்றால், யூதருடைய பூர்வவேத ஆசாரத்தின்படியே பாஸ்குத் திருநாளிலே செம்மறியைப் புசிக்கிற இடத்திலே அப்படிப்பட்ட வழிபாடுகள் தம்முடைய நூதன வேத கிரமத்துக்கு மாறாயிருப்பதினால் அதை நீக்கி அதினிடமாய்க் கோதும்பை அப்பத்திலும், முந்திரிகை இரசத்திலும் தம்முடைய திரு உதிரத்தையும், மாங்கிஷத்தையும் போசன பானமாக்கித் தம்மைத்தாம் செம்மறிப்பலியாக ஒப்புக்கொடுக்கத் திருவுளமானார். ஆனதினால் தம்முடைய ஈராறு சீஷர்களோடே அணியாயிருந்து கோதும்பை அப்பத்தையும், முந்திரிகைப் பான பாத்திரத்தையும் கையேந்தி, இதோ எனது மாங்கிஷம், இதோ எனது உதிரம் என்று வசனித்தவுடனே அந்தத் திருவாக்கின் பெலத்தால் அப்பம் உண்மையான சரீரமும், முந்திரிகை இரசம் உண்மையான இரத்தமும் ஆயிற்று. அப்படியே புசியுங்கள் என்று அனுபவிக்கக் கொடுத்து அதுநிமித்தமாய் மனுஷருடைய இருதயங்களிலே பிரவேசித்துத் தம்முடைய சித்தத்தில் அடங்கிய கருணைப் பிரசாதங்களுடைய பொக்ஷத்தைத் திறந்து சகலமும் எங்களுக்குக் கொடுத்தார் என்று அறியவும்.

அதின்பின், இரண்டாம் கிருத்தியமாவது: தம்முடைய சீஷர்களுடைய பாதங்களைக் கழுவினதினால் தம்முடைய அளவில்லாத தாழ்ச்சியைக் காணச் செய்தார். அது ஏனென்றால் தாம் எங்களை உண்டாக்கினதினால் எங்கள் சர்வேசுரனுமாய், ஆண்டுகொள்ளுகிறதினால் ஆண்டவரும் இராசாவுமாய், படிப்பிக்கிறதினால் குருவும் பிதாவுமாயிருக்கத் தம்முடைய தாசர் தொண்டரான மனிதருடைய காலண்டையிலே பணிந்து தம்முடைய சுத்தமான கைகளினால் அவர்களுடைய அசுத்தக் கால்களைத் தொட்டுக் கழுவித் துடைத்தது, பூமியிலே வானம் மடிந்து விழுந்ததுக்குச் சமானமாமே. ஆனதினால் இதில் நிகரில்லாத அவரது தாழ்ச்சி காணப்பட்டது. இதல்லாமல் தமக்குச் சதிமானம் செய்யப்போகிற யூதாசு என்கிற துரோகியுடைய கால்களையும் அந்தப்படி கழுவினதினால், தம்முடைய அநந்த தாழ்ச்சி என்கிற கரைகாணாத பாதாளத்தினுடைய அடித்தாழ்வைக் காண்பித்தார் என்று அறியவும். எங்கள் ஆண்டவர் அப்படியே பணியத் திருவுளமானபோதே நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரில் உத்தமராயிருக்க நியாயமில்லாததினால் கீழோர் அவகாரி முதலான சகலமானபேர்களுக்குங் கூசாமல் பணியவும் சமஸ்தருக்கும் தான்தான் அதிக நீச பாவவாளன் என்று எண்ணி நடக்கவும் வேணும் என்று படிப்பித்தார். இந்தப் பிரகாரமாக ஆண்டவர் இன்று போதித்த தர்ம மேரைகளை அறிந்து அவர் தம்முடைய சித்தத்தில் இருந்த கருணைக் கருவூலம் சகலமும் எங்களுக்குக் கொடுத்ததுபோல நாங்களும் அவருக்கு எங்கள் இருதயத்தைச் சுகிர்த சிந்தைகள் நிறைந்த பாத்திரமாய்க் கையளிக்கக்கடவோம். அவர் தண்ணீரால் மனுஷருடைய கால் கழுவினதினால் நாங்கள் எங்கள் அசுத்த நடக்கை என்கிற கால்களை மனஸ்தாபம் என்கிற கண்ணீரால் சுத்தமாக்கி, பிராயச்சித்தம் என்கிற பரிவட்டத்தால் துடைத்து மகா பொறுதி தாழ்ச்சியுள்ள நடபடியால் அவரை அனுசரிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் யூதாசுவுக்கு அவனுடைய துரோகத்துக்கேற்ற தண்டனையையும், நல்ல கள்வனுக்கு அவனுடைய விசுவாச உச்சாரணத்துக்குரிய சம்பாவனையையும் கொடுத்தருளினீரே. எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து தமது திருப்பாடுகளின் மூலமாய் இருவருக்கும் அவரவர்க்கேற்ற பிரதிபலன் அளிப்பதற்குக் காரணமானது போல, அடியோர்களுக்கும் எங்கள் பழைய பாவ அந்தகாரத்தை நீக்கித் தம்முடைய எழுந்தேற்றத்தின் மகிமைப் பிரசாதத்தைத் தந்தருளக் கிருபாகடாட்சம் பண்ணியருளும். இவரே தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாம். ஆமென் யேசு.

---

# கர்த்தர் உயிர்த்தெழுந்தருளின
## திருநாளில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

கருமுகில்களால் மறைப்பட்ட சூரியகதிர் மறுபடியும் முகில்களிலிருந்து வெளிப்பட்டுப் பிரதாபிக்கிறதுபோலவும், பூமியில் மண்ணுள் விழுந்த நவதானியவித்து நவமான உயிர்கொண்டு தளைவிரித்து எழும்புகிறதுபோலவும் எங்கள் கர்த்தரான யேசுக்கிறீஸ்து மரணம் என்கிற கருமேக மறைவிலும் கல்லறை என்கிற மண்ணிலுமிருந்து நவமாகச் சீவிய பிரதாபத்தைக்கொண்டு எழுந்தருளின மகிமை இன்று கொண்டாடப்படுவது. அதைச் சுவிசேஷக மாற்கு பதினாறாம் அதிகாரத்தில் எழுதிவைத்த பிரகாரமாவது:—மரியமதலேனம்மாளும், யாகப்பருடைய தாயாகிய மரியம்மாளும், சலோமையம்மாளும் வந்து, யேசுநாதருக்குப் பூசும்படியாகப் பரிமளவர்க்கங்களை விலைக்கு வாங்கிக்கொண்டு, வாரத்தின் முதலாம் நாள் அதிகாலமே சூரியன் உதயமான போது கல்லறைக்கு வந்தார்கள். (வருகிறபோது) கல்லறை வாசலினின்று யார் நமக்குக் கல்லைப் புரட்டித் தள்ளுவானென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். ஏனெனில் அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது; ஆனால் அவர்கள் ஏறெடுத்துப் பார்க்கையில், கல் புரட்டப்பட்டிருக்கிறதைக் கண்டார்கள். பின்னும் அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்தபோது, வெள்ளை அங்கியைத் தரித்து, வலதுபக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலனைக் கண்டு, திடுக்கிட்டார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்கள் அஞ்சவேண்டாம்; சிலுவையில் அறையுண்ட நசரேனுவாகிய யேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார். இங்கேயில்லை; அவரை வைத்த இடம் இதுவே. நீங்கள் அவருடைய சீஷர்களிடத்திலும், இராயப்பரிடத்திலும் போய் உங்களுக்கு முன் அவர் கலிலேயாவுக்குப் போகிறாரென்றும் அவர் உங்களுக்குச் சொல்லியிருந்ததுபோல அவரை அங்கே காண்பீர்களென்றும் அவர்களுக்குச் சொல்லுங்கள் என்றார்.



இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே, ஆண்டவர் உயிர்த்தெழுந்தருளின மகிமையும் சீஷர் முதலான பத்தியுள்ளவர்களுக்குக் காணப்பட்ட பிரகாரமும் காண்பித்திருக்குது. அது எப்படி என்றால்: வெள்ளிக்கிழமை சாயங்காலம் ஆண்டவர் மரித்து அவருடைய திவ்விய ஆத்துமம் பாதாளங்களிலே இறங்க, திருச்சரீரம் கல்லறையிலே அடக்கிக் கல்லறை வாசலை முத்திரையிட்டுச் சேவகர் காத்திருந்தார்களே. அப்படியிருக்கச்செய்தே, மூன்றாம்நாள் எழுந்தருளுவேன் என்று முன் திருவுளம்பற்றின வாக்கியந் தவறாமல் ஞாயிறுவாரம் உதயகாலமாகிறபோது தம்முடைய ஆத்துமம் மறுபடி சரீரத்திலே பிரவேசித்து, அக்ஷயம், இலகு, சூக்ஷம், பிரகாசம் என்கிற சதுர்வித மகிமைப்பிரசாதங்களினாலே சரீரத்தை நவமாய் அலங்கரித்து மரணவருத்தங்கள் கடந்தவருமாய் ஆகாச பாதாளம் ஊடறுக்கலானவருமாய்த் திவ்விய காந்திக் கதிர்களைப் புனைந்தவருமாய்ப் பாவத்தையும் பிசாசையும் செயித்து நரக வல்லமைகளைச் சங்கரித்து வெற்றியைக்கொண்ட அஞ்சுகாயத் தழும்புகளோடும் விருது கட்டியம் கூறுதலோடும ஒட்டோலக மகிமை பிரதாபிக்கிற வீரசூர இராயனாக எழுந்தருளினார் என்று அறியவும்.

இதல்லாமல் இப்படிப்பட்ட மகிமையை முறைகாத்திருந்த சேவகர் அறியும்படி வலுவான பூமிநடுக்கம் உண்டாய் அவர்கள் மல்லாக்காய்விழ, மகிமை உடைத்தான தேவதூதன்வந்து கல்லறைவாசலைத் திறந்துவைத்தார். சேவகர் ஏக்கந்தெளிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்தபோதே கல்லறை திறந்திருக்கிறதையும் அதில் வைத்த தேவபிரேதம் இல்லாததையுங்கண்டு மனங்கலங்கித் தங்கள் மேல் வரப்போகிற பழிபாதகங்கள் கழரவேணும் என்று தாங்கள் கண்ட ஆச்சரியங்களைத் தங்கள் குருமாருக்குச் சொல்லப்போனார்கள். குருமார் அதைக்கேட்டுச் சேவகரைக் கண்டிதமாய்க் கயற்றி, இப்படிப்பட்ட விசேஷம் ஊரிலே பிறவாதபடிக்கு அவையடக்கம்பண்ணக் கட்டளையிட்டார்கள். இதல்லாமல் யாதொருவன் கேட்கில், நாங்கள் நித்திரைச் சோத்தியமாயிருக்க, அவருடைய சீஷர்கள் வந்து களவாகச் சவத்தை எடுத்து ஒளித்தார்கள் என்று சொல்லச்சொல்லி அவர்களுக்குக் கைலஞ்சமாய்க் கன உரொக்கங்களைக் கொடுத்தார்கள். ஆனால் உதித்த ஆதித்தனுடைய உதயம் ஒருவராலும் மறைக்கப் போகாததுபோல வேதசோதியாய்ப் பூலோகத்தைப் பிரகாசிக்கவந்த ஆண்டவருடைய மகிமை மறைக்கலாயிருக்கவில்லை. அப்படியே ஆண்டவர் எழுந்தருளின உடனேதானே முதல் தம்முடைய மாதாவுக்குத்தோன்றி, அதின்பின் பத்தியுள்ள ஸ்திரீகளுக்கும் சீஷர்களுக்கும் தம்முடைய எழுந்தேற்ற மகிமையைக் காண்பிக்கத் திருவுளமானார்.

அது எப்படியென்றால்: முதலாவது, தம்முடைய மாதாவுக்குக் காட்சிகொடுத்த பிரகாரமாவது: பரிசுத்த கன்னியாஸ்திரீயான தேவமாதா மகா அசனசாலையிலே குமாரனுடைய வியாகுலத்தைத் தியானித்து எழுந்தருளுவார் என்ற நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கையிலே கபிரியேல் என்கிற தேவதூதன் கலியாண வஸ்திராபரணங்களை அணிந்துவந்து மாதாவைப் பார்த்து: ஆலேலூய! ஆலேலூய!! பரலோக இராசஸ்பரியே! உம்முடைய திருக்குமாரன் மரித்தவர்கள் இடையில் நின்று எழுந்தருளினதினால் ஆனந்தம் கொண்டாடும்! என்று இத்தொகை வாக்கியங்களால் மங்களம் சொன்னார். அதின்பின் ஆண்டவர் மோட்சானந்த வஸ்திராபரணங்களினாலே மனோகரமான உருவத்தோடு மாதாவுக்குத் தோன்றி அன்னியோன்னியமாய் வினவி ஒருவர் ஒருவரை நோக்கியபோது இருவர் மனமும் பூரித்து மனோவாக்குக்கெட்டாத மகிழ்ச்சி ஆனந்தமுண்டாயிற்று. (இப்படிப்பட்ட ஆனந்தமான சம்பவத்தைத் தேவதூதன் மாதாவுக்கு ஏலவே அறிவித்ததினால் அந்த ஆனந்தம் என்கிற ஆலேலூய திருநாள் ஏலவே சனிக்கிழமையிலே கொண்டாடப்படுவது என்று அறியவும்.)

அதின்பின் பத்தியுள்ள ஸ்திரீசனங்களுக்குக் காட்சிகொடுத்த விதம் எப்படி என்றால்: மரியமதலேன் என்றவள் கொண்ட பத்தி அதிகத்தால் கல்லறைவாசலை விடாமல் காத்



திருந்து அடிக்கடி உற்றுப்பார்த்து அழுதுகொண்டிருக்கையிலே ஆண்டவர் மறுவேஷமாய்த் தன்பிறகே எழுந்தருளியிருக்கிறதைக் கண்டாள். அதுக்கப்பால் பேதுரு, யுவானி முதலான மற்றும் சீஷர்களுக்கும் வெவ்வேறு இடங்களிலே பற்பல வேஷ விதமாய்த் தோன்றி, ஞானத்தெளிவு முதலான அநேக வரப்பிரசாதங்களைக் கொடுத்தார். இந்தப்பிரகாரமாக ஆண்டவர் எழுந்தருளின விருத்தாந்தம் உலோகத்தின் சகல திக்கிலும் பிரசித்தமாய்ப் போனது என்று அறியவும்.

இப்படிப்பட்ட விசேஷத்தைக் காண்கிற நாங்கள் அதிலே யோசிக்கத்தக்க சிந்தனையாவது: ஆண்டவர் மரித்து அடக்கப்பட்ட இடத்தைவிட்டுச் சீவியராய் எழுந்தருளினதுபோல நாங்கள் பாவம் என்கிற மரணத்தையும் கல்லறை என்கிற நரக பாதாளத்தின் இடறுதலையும் விட்டு அகன்று பிரசாதசீவியத்தை அடையவேணும் என்ற விபரமாம். ஆண்டவர் சத்துருக்களைச் செயித்த செயவிருது கையில் ஏந்தியிருக்கிறதுபோல நாங்கள் ஆத்தும சத்துராதியான பிசாசையும் உலோகத்தையும் உடலின் மாயைகளையும் தோற்கடித்து வெற்றிமுடி பெறவேணும் என்ற படிப்பினையாம். அவருடைய திருச்சரீரம் நவமான வரப்பிரசாத அலங்காரம் அணிந்ததுபோல நாங்கள் ஒடுக்க வணக்கம் முதலான தபோதன நடக்கையினாலே மோட்ச பிரதாபமான மாங்கிஷ உத்தானத்தை அடையவேணும் என்ற படிப்பினையாம். இப்படியே ஆண்டவர் போதித்த சுகிர்த மேரைகளை அறிந்து சீஷர் இவ்வுலகத்திலே அவருடைய முக தெரிசனை கண்டு அக்களிப்பானதுபோல நாங்களும அவ்வுலோகத்திலே அவரை முகமுகமாய்க் கண்டு நீடூழிகாலம் அவரோடே களிகூர்ந்திருக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் இன்றையத்தினம் உம்முடைய ஏக பேறான திருச்சுதன் மூலமாய் மரணத்தைச் செயித்து நித்தியமோட்ச வாசலை எங்களுக்குத் திறந்தருளினீரே. எங்களுக்கு நல்லெண்ணங்களை ஏவித்தந்து தொடக்கம்பண்ணிவிடுகிறவராகிய தேவரீர் உமது பிரசாத உதவியினால் நாங்கள் அவைகளைச் சம்பூர்த்தியாக்கவும்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுந்தேற்றத் திருநாளுக்கடுத்த
## தவளோற்சவ ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

சுவிசேஷக அருளப்பர் இருபதாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே ஒய்வுநாளுக்குப்பின் முதல் நாளாகிய அன்று, சாயரட்சையுமாகி சீஷர்கள் கூடியிருந்த இடத்திலே யூதர்களுக்குப் பயந்து, கதவுகளும் பூட்டப்பட்டிருக்கையிலே, யேசுநாதர் வந்து அவர்கள் நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! என்று அவர்களுக்குச் சொன்னார். அவர் இப்படிச் சொன்னபின், தம்முடைய கரங்களையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். ஆகையால் சீஷர்கள் ஆண்டவரைக் கண்டு, சந்தோஷப்பட்டார்கள். மீளவும் யேசுநாதர் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக! பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார். இவைகளைச் சொல்லி, அவர்கள் மேல் ஊதி: இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படும்; எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவர்களுக்கு அவைகள் மன்னியாதிருக்கப்படும் என்றார். யேசுநாதர் வந்தபோது பன்னிருவரில் ஒருவராகிய திதீம் என்னப்படுகிற தோமையார் அவர்களோடுகூட இருக்கவில்லை. ஆகையால் மற்றச் சீஷர்கள்: சுவாமியைக் கண்டோமென்று அவருக்குச் சொன்னபோது, அவர்: நான் அவருடைய கரங்களிலே ஆணிகள் அறைந்த துவாரத்தையும் கண்டு, ஆணிகள் இருந்த இடங்களிலே என் விரலையும் விட்டு, அவருடைய விலாவில் என் கையையும் இட்டாலொழிய நான் விசுவசிக்க மாட்டேன் என்று அவர்களுக்குச் சொன்னார். எட்டு நாளைக்குப்பின் மறுபடியும் அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருக்கையில் அவர்களோடு தோமையாரும் இருந்தார். அப்பொழுது கதவுகள் பூட்டியிருக்க, யேசுநாதர் வந்து, நடுவில் நின்று: உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்றார். பின்னும் அவர் தோமையாரை நோக்கி: இங்கே உன் விரலை இடு, என் கரங்களைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே வை, அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு என்று திருவுளம்பற்றினார். தோமையார் அவருக்கு மறுமொழியாக: என் ஆண்டவரே, என் தேவனே என்றார். யேசுநாதர் அவரை நோக்கி: தோமாஸ், நீ என்னைக் கண்டதினாலல்லோ விசுவசித்தாய். காணாதிருந்தும், விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள் என்றார். அன்றியும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்படாத வேறநேக அற்புதங்களையும் யேசுநாதர் தம்முடைய சீஷர்கள் முன்பாகச் செய்தருளினார். ஆனால் யேசுநாதர் சர்வேசுரனுடைய சுதனாகிய கிறீஸ்துநாதரென்று நீங்கள் விசுவசிக்கும் பொருட்டும், விசுவசித்து, அவருடைய நாமத்தினாலே (நித்திய) ஜீவியத்தை அடையும்பொருட்டும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன.



இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் உற்பனமாவது: ஆண்டவருடைய சீஷர்கள் சத்துராதி யூதர்களுக்குப் பயந்து வீடு வாசல்களை அடைத்திருந்தபோது ஆண்டவரைக் கண்டார்கள் என்றதினால், பாவசிந்தனை என்கிற சத்துருக்கள் எங்கள் இருதயம் என்கிற உள் அறைகளிலே பிரவேசியாமல் பஞ்சேந்திரியம் என்கிற கவாட்சங்களை அடைத்து ஆண்டவருடைய பிரசாத தெரிசனம் காணவேணும் என்ற படிப்பினையாம். அப்படியே செய்யாமல் அதரும விஷயங்களுக்குக் கண், செவி, வாய் முதலான சரீர வாசல்களைத் திறந்து வைத்தால் ஆண்டவருடைய பிரசாத காட்சி கிடையாமல் போம்என்று அறியவும்.

ஆண்டவர் எழுந்தருளின உடனே சமாதானம் என்கிற வசனத்தால் வினவுதல் பண்ணினதினால், மூவித சமாதானம் உண்டு என்று அறியவும். அதாவது: தேவசித்தத்தோடு ஒரு சித்தமாயிருந்தால் சர்வேசுரனுடனே சமாதானமாம். உலோகம் இச்சிக்கிறதை அரோசித்து, உலோகம் அரோசிக்கிறதைக் கையேற்குதலால், உலோகரோடே சமாதானமாம். தனது ஆத்துமத்தை விரோதிக்கிற அக்கிரம வாஞ்சையை அடக்குதலால் தன்னோடே சமாதானமாம். இந்த மூவித சமாதானம், ஆண்டவருடைய பிரசாத காட்சியால் உண்டாகும் என்று அறியவும்.

அதன்பின் ஆண்டவர் சீஷர்பேரிலே ஆவியைவிட்டு, நீங்கள் பொறுத்தவர்களுடைய பாவம் பொறுக்கப்படுவதாம், பொறாதவர்களுடைய பாவம் பொறுக்கப்படாததாம் என்று திருவுளம்பற்றின வசனம் ஏதென்றால்: அந்த வசனத்தால் சீஷர்களையும் அவர்களின் இடமாயிருக்கிற குருமார்களையும் பாவ புண்ணியங்களை ஆராய்ந்து தீர்வையிடத்தக்கதாக நடுவராய் ஏற்படுத்தியருளினார் என்ற விபரமாம். ஆகையால் பாவ விமோசனம் அடையவேணும் என்ற சகலமான பேர்களும் தங்கள் பாவங்களை அவர்கள் முன்பதாக உச்சாரணம் பண்ணிப் பொறுத்தல் அடையக் கடவார்கள் என்ற வேத ஒழுங்கைக் காண்பித்தார் என்று அறியவும். அப்படியே செய்யாமல் சர்வேசுரன் மாத்திரம் அறியப் பாவ உச்சாரணம் பண்ணினால் போதும் என்று குருமாருக்கு ஆண்டவர் கொடுத்த வரப்பிரசாதத்தை மறுதலிக்கிற பதிதர்களும், வெட்கத்தால் பாவத்தை ஒளிக்கிற கிறீஸ்தவர்களும் ஒருக்காலும் பாவ நிவாரணம் அடையாமல் தங்கள் துஷ்டாட்டங்களுடைய கனத்தால் நரக ஆழத்தின் தாழ்விலே அமிழ்ந்திப்போவது குன்றாத சத்தியம் என்று அறியவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட வரங்களை ஆண்டவர் கொடுத்த நேரத்திலே தொம்மை அப்போஸ்தலன் அவ்விடத்திலே இராததினால் இந்தச் செய்தியை மற்றச் சீஷர்கள் அவருக்குச் சொன்ன இடத்திலே அவர் ஆண்டவரைக் கண்ணால் காணாமல் விசுவசியேன் என்று சொன்னதுக்குக் காரணம் என்னவெனில், அது சர்வேசுரனுடைய விசேஷ உத்தரவால் சம்பவித்ததல்லாதே அவருடைய துஷ்டத்தனம் என்று யோசிக்கக்கடவதல்ல. அது ஏனென்றால் அவர் ஆண்டவருடைய காயங்களைக்கண்டு சோதித்துப்பார்த்து ஆண்டவர்தான் என்று அத்தாட்சியாய்க் கண்டு உச்சாரணம் பண்ணினதினால், ஆண்டவருடைய எழுந்தேற்றத்துக்கு உற்ற சாக்ஷியாயிருக்கவும், அத்தால் நாங்கள் மனசுகளில் சகல சந்தேகம் அறத்தெளிந்து ஆண்டவர் பேரிலே முழு விசுவாசியாயிருக்கவும் அப்படியே வந்தது என்று அறியவும். ஆனால் ஈற்றிலே ஆண்டவர் தொம்மையைப் பார்த்து: நீ கண்டதினால் விசுவசித்தாய், காணாமல் விசுவசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்று வசனித்த வசனம் ஏதென்றால், கண்ணால் கண்டறிகிறது சுபாவமேரை அல்லாதே சுகிர்தமல்ல. காணாததை விசுவசிக்கிறதிலே புத்தியும், மனசும் பணிகிறதினால் வெகு பெறுபேறுள்ள சுகிர்தம் என்று காண்பித்தார். அப்படியே தொம்மை அப்போஸ்தலன் ஆண்டவருடைய மனுரூபத்தைக் கண்டு ஆண்டவர் என்றதினால் சுகிர்த பலன் அதிகரியாமல் அவருடைய தெய்வீகத்தைக் காணாமல் தேவன் என்று உச்சரித்ததினால் பாக்கியவானானார் என்று அறிவித்தார்.

இதுகாரணமாக மனுஷர் தாம் தாம் விசுவசிக்கிற விசுவாச நெறியைக் கண்டுபிடிக்கக்கடவார்கள். அது ஏனென்றால், அஞ்ஞானிகளாயிருக்கிற பேர்கள் கண்ணால் காணப்பட்ட பிரபஞ்ச பொருட்களை மாத்திரம் கிரகித்து அவைகளைத்தான் தேவன் என்றும், மோக்ஷம் என்றும் நம்புகிறதினால் பரகதியின் பேறுபெறாமல் கெட்டுப்போகிறார்கள். கிறீஸ்தவர்களாயிருக்கிற பேர்களோ என்றால் கண்ணுக்கு எட்டாத பரம இரகசியங்களைச் சத்ததெரிசனம் என்கிற கேள்வியினால் மாத்திரம் அங்கீகரிக்கிறதினால் அழிவும் அளவும் இல்லாத பரகதிப் பாக்கியத்தை அடையப் பேறுபெறுகிறார்கள் என்று அறியவும். இந்தப்பிரகாரம் ஆண்டவர் சீஷருக்குக் கொடுத்த தெரிசனையால் அறிவித்த விசுவாச மேரைகளை நாங்கள் அறிந்து எங்களுடைய உண்மையான விசுவாசம் தீச்செயல்களால் உயிரற்ற வியர்த்த விசுவாசமாய்ப் போகாமல் சுகிர்த கிருத்தியம் என்கிற உயிருள்ள நம்பிக்கையால் நடந்து மன ஒடுக்கம் என்



கிற சிறுவீட்டிலே, தியானத்தால் ஆண்டவரைத் தெரிசித்து எல்லையற்ற மிகுந்த விசாலமான சாலை என்கிற பரலோகத்திலே பிரத்தியட்ச தெரிசனத்தோடே அவரைக் கண்டு பரிபூரண பாக்கியத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லப சருவேசுரா சுவாமீ, பாஸ்குத்திருநாட் கொண்டாட்டத்தை நடத்துகிறவர்களாகிய அடியோர்கள் எங்கள் சுகிர்த நடக்கையினால் அக் கொண்டாட்டத்தின் பலனைக் கைக்கொள்ளத்தக்கதாக எங்களுக்கு அனுக்கிரகம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# எழுந்தேற்றத்தின்பின்

## இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் பத்தாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—*அந்தக் காலத்திலே யேசுநாதர் பரிசேய சாதியாருக்குத் திருவுளம்பற்றினதாவது :—நானே நல்ல ஆயன் ; நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகத் தன் பிராணனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராத கூலியாளோ ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாததினாலே, ஓநாய் வருகிறதைக் கண்டு, ஆடுகளை விட்டுவிட்டுத் தப்பி ஓடிப்போகிறான். அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பாய்ந்து பிடித்துச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காரனாயிருக்கிறபடியாலும், ஆடுகளின்மேல் அவனுக்கு அக்கரையில்லாததினாலும் ஓடிப்போகிறான். நானே நல்ல மேய்ப்பன் ; நான் என் ஆடுகளை அறிவேன் ; என் ஆடுகளும் என்னை அறியும். என் பிதா என்னை அறிந்திருக்கிறதுபோல, நானும் பிதாவை அறிந்திருக்கிறேன். என் உயிரையும் என் ஆடுகளுக்காகக் கொடுக்கிறேன். இந்த ஆட்டுக் கிடையைச் சேராத வேறே ஆடுகளும் எனக்குண்டு ; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும். அவைகளும் என் குரல் சத்தத்தைக் கேட்கும் ; அப்பொழுது ஒரே ஆட்டுக்கிடையும் ஒரே மேய்ப்பனும் ஆகும்—என்று திருவுளம்பற்றினார்.*

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் உற்பனம் ஏதென்றால், இதிலே நல்ல இடையனுடைய இலக்ஷணங்களை அறிகிற மேரையைக் காண்பித்திருக்குது. அது ஏதென்றால், முதலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது, நல்ல இடையனானவன் தனக்குச் சொந்த ஆடுகளைக் கொண்டிருப்பான். இரண்டாவது, அதுகளைக் கூலியின்றியே மேய்ப்பான். மூன்றாவது, அதுகளைத் துஷ்ட மிருகங்கள் சேதப்படுத்தாமல் தனது பிராணனைச் சிலவழித்துக் காப்பான். இப்படிப்பட்ட இலக்ஷண முள்ளவன் சரியான கோபாலன் என்று காண்பித்தார். இந்தப்பிரகாரமாய் எங்கள் ஆண்டவர் தாம் படைத்த ஆத்துமாக்களாகிய தமது சொந்தப் புருவைகளை எங்களால் ஒரு பிரயோசனமும் இல்லாமல் தம்முடைய அனந்த கிருபையால் இரக்ஷித்துவிட, மிருகம் என்கிற பிசாசின் கையிலும் நரகம் என்கிற கொடிய கடுவாயின் வாயிலுமிருந்து எடுத்து இரக்ஷிக்கிறதினால் நல்ல இடையன் என்கிற நாமத்தைத் தமக்குச் சூட்டிக்கொண்ட ஞாயம் என்று அறியவும்.

இந்தப்பிரகாரமாக இராசபிரதானி, பராபத்தியர் முதலான பேர்கள் சேனை, பிரசைகளைச் சர்வேசுரன் தங்களுக்குக் கையளித்த மந்தை என்று நினைத்து அவர்களை நீதிநெறியால் ஆதரித்து, ஆயுதபெலத்தால் மாற்றான் கையால் தற்காத்துத் தனதானிய பொருட்களால் போஷிப்பித்து இரக்ஷிக்கக்கடவார்கள். அப்படிச் செய்யாமல் கைலஞ்சம், அடாத்தியம், கொடூரம் முதலான நிஷ்டூர விதனத்தால் தாங்களே துஷ்டமிருகங்கள்போல் அந்தப் பிரசைகளை அழித்துச் சிதறப்பண்ணக்கடவார்களல்ல. அந்தப்பிரகாரம் குடும்பவாளி வீட்டெசமான் கிரகஸ்தராயிருக்கிற பேர்கள் தங்கள் நிருவாக சனங்களைத் தங்கள் மந்தை ஆடுகள் என்று நினைத்தும், தொண்டமான்கள் தங்கள் தொண்டர்களைத் தங்கள் புருவை என்று நினைத்தும் அவர்களைத் தரும கிரமத்தோடும், சவுசன்னியத்தோடும் நடப்பிக்கக்கடவார்கள். இதல்லாமல் நியம ஆத்தும இடையராய் ஆண்டவருடைய மந்தையைக் கையேற்றிருக்கிற வேதகுரு தேசிகரானவர்கள் திருச்சபையின் ஆத்துமாக்களை ஓநாய் கடுவாய் என்கிற அக்கியான பதிதர்களுடைய துன்மார்க்கத்திலே சிதறவிடாமல், சங்கதோஷம் சலதோஷம் முதலான பாவம் என்கிற விஷசர்ப்பங்களுடைய கடிவாய்களினால் அழியாதபடி தற்காக்கவும் சுகிர்த நடபடி ஞானபோதகம் பாபோச்சாரணம் சற்பிரசாதம் முதலான தருமப்பயிர் மதாளிக்கிற வயல்களிலே அதுகளை மேய்விக்கவுங் கடவார்கள் என்று அறியவும். இந்தப் பிரகாரமாகச் சமஸ்தரும் தங்கள் தங்கள் மந்தை என்கிற நியமவேதநிஷ்டை தவிராமல் நடந்து மற்றவர்களுடைய ஆத்துமாக்களைக் காக்கிறதுபோலத் தன்னுடைய ஆத்துமத்தையும் பிரியமான புருவையாய்த் தற்காத்து நல்ல இடையனுடைய



இலக்ஷணங்களைக்கொண்டு ஆண்டவரை அனுசரித்துப் பிண்டம் என்கிற சரீரக் கட்டு அவிழும்போது அண்டர் என்கிற மோட்சவாசிகளின் சபையில் உட்படப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் கெட்டுப்போய்த் தாழ்வுற்றிருந்த உலகத்தை உம்முடைய திருக்குமாரனின் அவமானம் பொருந்திய மரணத்தினாலே கரையேறச் சித்தமானீரே. நித்திய மரணத்தின் ஆபத்துக்களினின்று விடுவிக்கப்பட்டோராகிய உம்முடைய விசுவாசிகளுக்கு அழிவில்லாத ஆனந்தத்தைக் கட்டளைபண்ணி அவர்கள் சதாகாலப் பேரின்பத்தையும் அடையச் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து தாமே காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# எழுந்தேற்றத்தின்பின்

## மூன்றும் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக அருளப்பர் பதினாறும் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது : இன்னும் கொஞ்சக்காலம்; அதின்பின் என்னைக் காணமாட்டீர்கள். மீண்டும் கொஞ்சக்காலம் ; அதின்பின் என்னைக் காண்பீர்கள். ஏனெனில் நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார். ஆகையால் அவருடைய சீஷர்களில் சிலர் ஒருவர் ஒருவரை நோக்கி : இன்னுங் கொஞ்சக்காலம், அதின்பின் என்னைக் காணமாட்டீர்கள் ; மீண்டும் கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக் காண்பீர்கள் ; ஏனெனில் நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று நமக்குச் சொல்லுகிறாரே. இது என்ன ? இன்னுங் கொஞ்சக்காலமென்று அவர் சொல்லுவது ஏது? இன்னது சொல்லுகிறாரென்று நமக்கு விளங்கவில்லையே என்றார்கள். ஆகையால் அவர்கள் தம்மை வினவ விரும்புகிறார்களென்று யேசுநாதர் அறிந்து, அவர்களை நோக்கி : இன்னுங் கொஞ்சக்காலம், அதின்பின் என்னைக் காணமாட்டீர்களென்றும், மீண்டும் கொஞ்சக்காலம், அதன்பின் என்னைக் காண்பீர்களென்றும், நான் சொன்னதினால், அதைக் குறித்து உங்களுக்குள்ளே வினாவிக்கொள்ளுகிறீர்கள். மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் : நீங்கள் புலம்பி அழுவீர்கள் ; உலகமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள்; ஆனால் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறிப்போம். ஸ்திரியானவள் பிரசவிக்கும்போது தன் (பேறு) காலம் வந்ததினாலே துக்கப்படுகிறாள். ஆனால் அவள் பிள்ளையைப் பெற்றபின், ஒரு மனுஷன் உலகத்திலே பிறந்தானென்கிற சந்தோஷத்தினாலே அப்புறம் அம்பாயத்தை நினைக்கமாட்டாள். அப்படியே நீங்களும் இப்போது துக்கமாயிருக்கிறீர்கள். ஆனால் மறுபடியும் நான் உங்களைக் காண்பேன். அப்போது உங்கள் இருதயஞ் சந்தோஷிக்கும். உங்கள் சந்தோஷத்தை உங்களிடத்தினின்று ஒருவனும் பறித்துக்கொள்ளமாட்டான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் உற்பனம் ஏதென்றால்: கொஞ்சக்காலம் நம்மைக் காணமாட்டீர்கள். மறுபடியும் கொஞ்சக்காலம் என்னைக் காண்பீர்கள் என்று வசனித்ததினால், தாம் மரிக்கிறபோது மூன்று நாளாகிய அற்பநேரம் தம்மைக் காணாதிருப்பார்களென்றும், மறுபடியும் எழுந்தருளிப் பூலோகத்திலே வசிக்கிற நாற்பது நாளாகிய சற்றுநேரந் தம்மைக் காண்பார்கள் என்றும் அறிவித்த விபரமாம். இந்த அபிப்பிராயத்தைச் சீஷர்கள் கண்டுபிடிக்கமாட்டாமல் கேட்டு அறியக் கருத்துக்கொண்டிருந்த இடத்திலே ஆண்டவர் அவர்களுக்குப் பிள்ளைப்பெறுகிற ஸ்திரியின் உவமையைச் சொன்னது ஏதென்றால்: பிறவிநோக்குகிற ஸ்திரி அந்தவேளையில் எத்தனை வாதை வருத்தப்பட்டாலும் அந்த அம்பாயம் எல்லாம் சற்றிலே அற்றுப் பிள்ளைப்பெற்ற சந்தோஷம் வெகுவாய் நீளிக்கிறதுபோல, ஆண்டவருடைய சீஷர் அவருடைய மரணத்துக்குப்பின் வேதசத்துராதிகளால் வெகுவாகத் துன்பித்து வதைக்கப்பட்டாலும், அது எல்லாம் சற்றுநேரத்திலே கழிந்து அத்தால் நீடூழியுள்ள மோட்ச ஆனந்தத்துக்கு ஏதுவாவார்கள் என்று அறிவித்தார்.

இதல்லாமல், இத்தால் போதிக்கப்பட்ட ஓர் உச்சிதமான ஞான உற்பனமும் உண்டு. அது ஏதெனில் யாதொருவன் துர்க்கிருத்தியத்தை உள்ளரங்கத்திலே நினைக்கிறபோது அந்தக்ஷணத்திலேதானே பாவம் சித்தித்து அத்தால் தேவப்பிரசாத காட்சியையும் மோட்ச தெரிசனத்தையும் இழந்துபோவான். மறுபடியும் பாவத்தை வெறுத்துப் பச்சாத்தாபத்தால் பிரார்த்திக்கிறபோது அந்த அற்பத்துக்குள்ளே இழந்த தேவவரப்பிரசாதத்தை அடைந்து அளவில்லாத மோக்ஷ சம்பாவனையைப் பெறுவான் என்றதைக் காண்பித்தார் என்று அறியவும். இத்தன்மை வர்த்தமானம் உலோகத்திலே நடக்கப்பட்ட ஒரு திருட்டாந்தத்தால் அதிக பிரத்தியட்சமாய்க் காணலாயிருக்கும். அது ஏதென்றால்: ஒருதன் தனது இலக்ஷ கோடி திரவியங்களை வெல்வி தோல்விக்குப் பந்தயமாய் வைத்துச் சொக்கட்டான் பாச்சிக்கையாடுகிறபோது, ஒரு நொடி நேரத்திலே அந்தக் கோடி இலக்ஷ திரவியம் இழந்துபோகலாம். அல்லது அது எல்லாம் கைசேரலாம். அவ்விதமே பூலோகத்திலே வசிக்கிற மனுஷன் சம்பாதித்த திரவியமாவது: தான் விரகு அறிந்தநாள் துவக்கமாய்ச் செய்த சுகிர்தங்களும் அடைந்த பெறுபேறுகளும், மரண அவஸ்தையில் நினைத்த ஒரு பாவத்தாற் சகலதும் அபலமாய்ப்போம். அல்லது அந்த வேளையிலே பச்சாத்தாபம் என்கிற நன்மையைப் பண்ணினால் நொடிநேரத்துக்குள்ளாகப் பாலவயசில் நின்று செய்த பாவம் எல்லாம் நிவாரணமாய் மட்டில்லாத மோக்ஷ சம்பாவனையைக் கைக்கொள்ளலாகும். இந்தடைவாய் அற்பத்தில் என்னைக் காண்பீர்கள் அற்பத்தில் என்னைக் காணமாட்டீர்கள் என்று வசனித்த வாக்கியத்தின் பொருள் வெளிப்பொருளாம் என்று அறியக்கடவோம்.



## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் வழிதப்பிப்போனவர்கள் நீதிநெறியில் திரும்பிவந்து சேர்ந்துகொள்ளும்படியாக அவர்களுக்கு உமது சத்தியத்தின் ஒளியைக் காண்பிக்கிறீரே. கிறீஸ்துவேதத்திலே சேர்ந்திருக்கிற சகலரும் இந்த உண்மையான மார்க்கத்தின் பெயருக்கு ஒத்திராதவைகளெல்லாவற்றையும் விலக்கி இதற்கு ஏற்றவைகளையே பின்பற்றும்படி அனுக்கிரகஞ் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற அவரே காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# எழுந்தேற்றத்தின்பின்
## நாலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் பதினாறாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இப்பொழுது என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன். ஆயினும் எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனாலும் நான் இவைகளை உங்களுக்கு அறிவித்ததினாலே உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. அப்படியானாலும் உங்களுக்கு உண்மையைச் சொல்லு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறேன். நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கின்றது. ஏனெனில் நான் போகாதிருந்தால், தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரார். நான் போவேனாகில், அவரை உங்களிடத்தில் அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். எப்படியெனில் அவர்கள் என்னை விசுவசியாததினாலே, பாவத்தைக் குறித்தும், நான் பிதாவினிடத்திற்குப் போவதினாலும், நீங்கள் இனி என்னைக் காணமாட்டீர்களானதாலும், நீதியைக் குறித்தும், இவ்வுலகத் தலைவன் ஏற்கனவே தீர்வையிடப்பட்டதால், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் (கண்டித்து) உணர்த்துவார். நான் இன்னும் உங்களுக்குச் சொல்லவேண்டிய அநேகங் காரியங்கள் உண்டு. ஆனால் இப்பொழுது அவைகளைத் தாங்கமாட்டீர்கள். சத்திய இஸ்பிரீத்துவாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்தையும் உங்களுக்குப் படிப்பிப்பார். ஏனெனில் அவர் தாமாகப் பேசாமல், கேள்விப்பட்ட யாவையும் பேசி, வரப்போகிறவைகளையும் உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னை மகிமைப்படுத்துவார். ஏனெனில் என்னுடையதினின்று பெற்றுக்கொண்டு உங்களுக்கு அறிவிப்பார்.—என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயம் ஏதென்றால்: ஆண்டவர் என்னை அனுப்பினவர் அண்டையிலே நான் போகிறேன் என்றதினால், எங்களைப்படைத்த சர்வேசுரனிடத்திலே நாங்களும போகும் மேரையாய் அவதானித்து நடக்கவேணும் என்று காண்பிக்கச் செய்தார். ஆனால் தாம் போகிற போக்கு எவ்விடம் என்று கேட்கவில்லை என்றதினால் சமஸ்த மனுஷரும் இவ்வுலகத்தைவிட்டுப் பிரிந்துபோகிறதை அறிந்தும், தாந்தாம் போகிற வழியையும், சேருகிற துறையையும் நினையாமல், சிமிட்டின கண்ணாய் நடக்கிறதினால் அவர்களுடைய அக்கிருத்தியமான பாராமுகத்தைக் கண்டிக்கச் செய்தார். ஆனதினால் அவனவன் போகிற பயணம் மோசம் போகாமல் அதற்கு இரண்டு வழியும் இரண்டு துறையும் உண்டென்று அறியவேணும். அது ஏதென்றால்: பரகதித் துறை சேருகிற வழியானது இட்டடை நடவை என்றும், நரகபாதாளத்திலே இறங்குகிற வழி விசாலமான பாதை என்றும் சொல்லியிருக்கிறது. அது எப்படி என்றால்: தண்டிகை, ரத வாகனங்கள் இழுக்கவும், தனதானிய பாரங்கள் ஏற்றிப்போகவும், பரிவார சதளம் புடைசூழக் களியாட்ட உல்லாசங்களோடு நடக்கவும் அப்படிப்பட்ட செல்வ ஆட்டங்கள் பாவம்மிகுந்த பெருவழியில் அல்லாதே இடைஞ்சலான வழியிற் செய்யக்கூடாததினால் அப்படிப்பட்ட வழி நரக கதியில் இறங்குகிற பெரும்பாதை என்று சொல்லப்படும். பரகதிவழி நடக்கிற மேரையோ என்றால், ஆரவாரமின்றிக் காடு அரணிய ஏகாங்கியுமாய்த் திரவிய வஸ்திராபரண அலங்காரம் இன்றி, ஒற்றையுடு



கூறையுமாய், உருசிகரம் சுகித்த உதரஸ்தூலம் இன்றி ஊண் ஒறுத்த மெலிந்த தேகமுமாய்ச் சுகிர்த நெறியில் நிறுத்தின அடி தவிராமல் வெகு இட்டடையோடு நடக்கிறதினால் அது பரகதியின் இட்டடைவழி என்று சொல்லத்தகும். ஆனதினால் தன்னை அனுப்பின சர்வேசுரனிடத்திலே போகத் தாற்பரியம் உள்ளவன் இந்த வழியின் நேர்மை அறிந்து நடக்கவேணும் என்று அறியவும்.

அதின்பின் இஸ்பிரீத்து வந்தகாலத்திலே உலோகத்தின் பாவத்தையும், தருமத்தையும், நீதியையும் விசாரிக்கும் என்றதே. உலோகத்தின் பாவமாவது, தம்மை விசுவசியாத பாவம் என்றதினால், பூலோகவாசிகள் ஆண்டவரை விசுவசியாத அநேக விசுவாச ஈன விதங்கள் உண்டென்று காண்பிக்கச் செய்தார். அதாவது: அஞ்ஞானிகள் தங்களைப் படைத்த சர்வேசுரனை அறியாத விசுவாச ஈனமும், யூதர் தங்களை இரட்சித்த கிறீஸ்துவை அங்கீகரியாத விசுவாச ஈனமும், பதிதர் தங்களுக்கு வேதம் போதித்த திருச்சபையை அனுசரியாத விசுவாச ஈனமும், கிறீஸ்தவர்கள் விசுவாசத்துக்கு ஏற்ற கிரியை செய்யாத விசுவாச ஈனமும் இத்தொகையான உலோகருடைய விசுவாச ஈனம் ஊனங்கள் எல்லாம் ஒப்புவித்து அப்படிப்பட்ட மூடத்தனத்துக்கு ஏற்ற தீர்வையாகிற நரக இருளைக் காண்பிப்பார் என்ற அபிப்பிராயமாம்.

இரண்டாவது, உலோகத்தின் தர்மமாவது: தம்மைக் காணாத இடத்தில் செய்கிற கிருத்தியம் விசாரிக்கும் என்கிறதினால், சர்வேசுரனுடைய தெரிசனம் இன்றியே உலோகர் செய்கிற நெறிகேடுகளை அறிவிக்கும் என்ற அர்த்தமாம். அது ஏதெனில், அந்நியவேதக்காரர் கிறீஸ்துவை உத்தேசியாமல் செய்கிற தருமங்களும், கிறீஸ்துவேதக்காரர் விருபாராட்டலுக்குச் செய்கிற வீரியங்களும், அவனவன் சிவனோபாயங்களுக்குப் பண்ணுகிற செபதவங்களும் இப்படிப்பட்ட தருமம் எல்லாம் தேவப்பிரசாதபலன் பெறாததினால் வியர்த்தமான பதர்களைப்போல் மோக்ஷகளஞ்சியத்துக்குச் சேராமல் அகல எறியப்படுமென்று அறியவும்.

மூன்றாவது, உலோக நீதியாகிய உலோக பவ இராயனுக்குச் செய்த நீதியை விசாரிக்கும் என்றதினால் பவ இராயன் என்கிற பிசாசை ஒரு பாவத்தால் பரகதியிலிருந்து தூரத்தி நரககதியில் குடியாகத் தள்ளினபோதே, அதைக்கண்டு பயப்படாமல் ஓயாதே பாவங்களில் விழுகிறவர்களுடைய துஷ்டாட்டத்தின் மிகுதியைக் காண்பித்து அதற்கு ஏற்ற தீர்வையாகிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீராத பயங்கரமுள்ள நரகருக்கிரகத்துக்கு ஏதுவாகப்பண்ணும் என்ற அபிப்பிராயமாம்.

ஈற்றிலே இஸ்பிரீத்துவந்து சத்தியமானது எல்லாம் அறிவிக்கும் என்றும், தம்மால் வசனியாமல் நம்மிடத்திலிருந்து பெற்றதை வசனித்து, நமது நாமத்தைப் பிரசித்தம்பண்ணும் என்றதற்கு அர்த்தம் ஏதென்றால், சுவிசேஷகர் தீர்க்கதெரிசி முதலான ஞானபாரகர் வசனித்ததையும், எழுதினதையும் தங்கள் சுபாவ அறிவால் அறிந்து சொல்லாமல் ஆண்டவருடைய அருட்பிரசாத நோக்கத்தின்படியே எழுதினதினால் அந்த வாக்கியங்கள் எல்லாம் ஆண்டவருடைய திருவாக்கு என்ற பேராய் விளங்கும் என்றும், அந்தப்படி சமஸ்தரும் அங்கீகரிக்கவேணும் என்றும் படிப்பித்த விபரமாம். இத்தன்மையாக ஆண்டவர் போதித்த விசுவாசநெறி, தருமநெறி, நீதிநெறி முதலான சுகிர்த நெறிகளை எல்லாம் நாங்கள் ஒரே மனசோடு அங்கீகரித்து அந்த நெறியைத் தவிராமல் வெகு பயங்கரத்தோடு இட்டடை வழியாய் நடந்து எங்களைப் பூலோகத்திலே அனுப்பின ஆண்டவருடைய சன்னிதானத்தைப் பரலோகத்திலே காணப்போகப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் உம்முடைய விசுவாசிகளை ஒரே மனமுஞ் சித்தமுமுள்ளவர்களாகப் பண்ணுகிறீரே. அடியோர்கள் தேவரீர் கற்பிப்பவைகளையே என்றும் நேசித்துத் தேவரீர் வாக்குப்பண்ணுகிற நன்மைகளையே தவறாமல் ஆசித்து, இவ்வாறே இவ்வுலகத்தின் எல்லையில்லாத மாற்றங்களின் மத்தியில் நாங்கள் உண்மையான இன்பம் எதிலுண்டோ அதிலேயே கண்ணுங் கருத்துமுள்ளவர்களாயிருக்கக் கிருபைபண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# எழுந்தேற்றத்தின்பின்

## ஐஞ்சாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக அருளப்பர் பதினாறாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது: என் நாமத்தினாலே நீங்கள் பிதாவி



னிடத்தில் ஏதாகிலும் கேட்பீர்களேயாகில் அதை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றையும் கேட்கவில்லை. கேளுங்கள், உங்கள் சந்தோஷம் பூரணமாகும் பொருட்டுப் பெற்றுக்கொள்வீர்கள். இவைகளை உங்களுக்கு உவமைகளால் சொன்னேன். இதோ காலம் வருகிறது; இனி உவமைகளால் பேசாமல், வெளிப்படையாய்ப் பிதாவின் காரியங்களை உங்களுக்குத் தெரிவிப்பேன். அந்த நாளிலே என் நாமத்தினாலே விண்ணப்பஞ் செய்வீர்கள். ஆயினும் உங்களைப்பற்றி நான் பிதாவை மன்றாடுவேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறதில்லை. ஏனெனில் நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் சர்வேசுரனிடத்தினின்று புறப்பட்டேனென்று விசுவசித்திருக்கிறபடியால், பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார். நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு இவ்வுலகத்துக்கு வந்தேன். மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ, இப்பொழுது வெளிப்படையாய்ப் பேசுகிறீர்; உவமை ஒன்றுஞ் சொல்லுகிறதில்லை. உமக்கு எல்லாம் தெரியுமென்றும், ஒருவனும் உம்மை வினவவேண்டுவதில்லையென்றும் இப்பொழுது அறிந்திருக்கிறோம். இதினிமித்தமே தேவரீர் சர்வேசுரனிடத்திலிருந்து வந்திருக்கிறீரென்று விசுவசிக்கிறோம் என்றார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே சர்வேசுரனைப் பிரார்த்திக்கிற மேரை காண்பிக்கப்படுவது.—அது எப்படி என்றால்: பிரயோசனமாய் இருக்கும்படி பண்ணுகிற பிரார்த்தனையை மூன்று இலக்ஷணத்தோடு பண்ணவேணும் என்று ஆண்டவர் காண்பித்தார். அதின் முதலாவது, என் நாமத்தைக்கொண்டு பிரார்த்திப்பீர்கள் என்றால் எங்களுடைய பிரார்த்தனை ஆண்டவருடைய நாமத்தின் பெலத்தால் பிரயோசனமாம் என்ற விபரமாம். அது ஏனென்றால், மனுஷ சென்மம் எல்லாம் சென்ம பாவத்தால் சர்வேசுரனுடைய முனிவுக்குப் பாத்திரமாய் நன்மை பெறுதலுக்கு அபாத்திரமாய்ப் போனதினால் அதற்கு ஆண்டவருடைய அளவில்லாத புண்ணிய பலன்களை எங்களுக்காக ஒப்புக்கொடுத்து, அத்தால் நாங்கள் பிரார்த்திக்கிற நன்மை பெறலாயிருக்கும் என்று படிப்பித்தார். அது எத்தன்மையோ என்றால்: வீரசூரம் இல்லாத குடியானவன் தனது சாமர்த்தியத்தால் வரிசைபெறமாட்டாதபோதே, இராசகுமாரனைப் பின்சென்று அவர் சலுகையால் அனுகூல வெகுமானங்களைக் கைக்கொள்ளுகிற மேரையாம் என்று அறியவும்.

இரண்டாவது, நீங்கள் என்னைச் சிநேகிக்கிறதினால் என் பிதாவும் உங்களை நேசிக்கிறார் என்றதினால், கிறீஸ்துவை அனுசரிக்கிறவர்களுக்குச் சர்வேசுரன் காருண்ணியம் உள்ள பிதாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல இருப்பார் என்று அறிந்து அந்தப் பத்தியோடே பிரார்த்திககவேணும் என்று படிப்பித்தார். அது ஏனென்றால், பிதா மாதா என்று கூப்பிடுகிற சத்தத்தால் தாய் தந்தையர்மனசு பிள்ளைகள்மேலே வெகுவாய் இரங்கி உருகிறதுபோல, அப்படியே நாங்கள் சர்வேசுரனைப் பிதா என்று உத்தேசித்தால் பிதாவாகிய சர்வேசுரன் அளவில்லாத இரக்கத்தோடு எங்கள் அவசரங்களுக்கு இரங்குவார் என்று அறியவும்.

மூன்றும் இலக்ஷணமாவது: நீங்கள் கேட்டதை மனம் பூரிக்க அடைவீர்கள் என்றதினால், மனம் பூரிக்கிற நன்மை யாவது, மோக்ஷ நன்மையைச் சர்வேசுரன் கொடுப்பார் என்று அறிந்து, அப்படிப்பட்ட நன்மையை அடைய இதமானதுகளைக் கேட்கவேணும் என்று படிப்பித்தார். அதல்லாதே ஆத்துமத்துக்குக் கேடான வியர்த்தமான பொருள்களுக்காக வேண்டுதல் பண்ணுகில் அதைக் கொடுக்கச் சர்வேசுரன் பொருத்தமாக மாட்டார். அது எப்படியென்றால், சீவனுக்கு வினையமாயிருக்கிற பழங்களை அறியாத குழந்தைகள் கேட்டு அழுது நிற்கினும், புத்திமானாயிருக்கிற தாதா அதுகளைக்கொடாமல் ஒழித்து விலக்கிவைக்கிற மேரை என்று அறியவும். ஆனால் பரம அர்த்தம் அறியாத மூடாத்தும மனுஷர் ஒருத்தனைக் கெடுக்க வல்லமை கேட்கிறதும், வீறுபாராட்டுதலுக்குத் திரவியம் கேட்கிறதும், சிற்றின்பத்தைச் செலுத்தச் சவிகேட்கிறதும், இப்படிப்பட்ட நினைவுகள் எல்லாம் ஆத்துமத்துக்கு நச்சுப் பழங்களாய்ப் பிரசாத சீவியத்தைக் கெடுத்துப் பாவம் என்கிற மாணத்துக்கு ஏதுவாக்குகிறதினால் அதுகளுக்காகப் பண்ணுகிற பிரார்த்தனை சர்வேசுரனுடைய சித்தத்துக்கு உபயமாய் இருக்கமாட்டாது. ஆகையால் இத்தொகைப்பட்ட நெறிகேடாய்ப் பண்ணுகிற பிரார்த்தனைகள் சுலக்ஷணம் உள்ள பிரார்த்தனையாய் இராததினால், நீங்கள் இற்றைவரைக்கும் என் நாமத்தால் ஒன்றும் கேட்கவில்லை என்று ஆண்டவர் திருவுளம் பற்றினதுக்கு விபரமாம்.

இந்தவிதமாக நாங்கள் பிரார்த்தனைபண்ணுகிற இலக்ஷண மேரை அறிந்து யாதொரு நன்மை அடைய வேண்டுதல்பண்ணுகிறபோது அது ஆத்துமத்துக்குப் பிரயோசனமாகவேணும் என்று அவதானித்து முகனையில் பிதாவைக் கூப்பிடுகிற சத்தமாய்ச் சர்வேசுரனை உத்தேசித்து முகிவிலே கிறீஸ்துநாதரைக் காரணகாட்சியாக உத்தேசித்து இந்த இலக்ஷண மேரையாய்ப் பிரார்த்திக்கவேணும் என்று படிப்பித்தார். அப்படியே பிரார்த்தித்துக்கொண்டோமாகில் எங்கள் ஆத்துமத்தின் சகலமான



ஆசைகள் பூரிப்பிக்கிற நவநிதிய பாக்கியத்தைக் குறையற அடையலாம் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

'சருவேசுரா சுவாமீ, தேவரீரிடத்திலிருந்துதானே சகல நன்மைகளும் புறப்படுகின்றனவே. ஆதலால் உம்மை இரந்து மன்றாடுகிற அடியோர்கள் தேவரீருடைய ஏவுதலின்படியே நன்மையானவைகளைச் சிந்திக்கவும் உம்முடைய ஆதரவின்கீழ் அவைகளைச் செய்து முடிக்கவும் அனுக்கிரகம்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# கர்த்தர் பரலோகத்துக்கு
## ஆரோகணமான திருநாளில் வாசிக்கிற
## சுவிசேஷம்.

---

பிறதேசத்துக்கு அமராடப்போன வீரசூர இராசேந்திரன் செயவிருதுகளைக்கொண்டு சுய இராச்சியத்துக்குத் திரும்புகிறபோது, நகரம் எல்லாம் பரஸ்பர வினோத சோடினையாய்ச் சிங்காரித்து இராச்சியத்தோர் எல்லாரும் உல்லாச, நடன, கீத, சங்கீத கொண்டாட்டத்தோடு எதிர்வந்து புடைசூழ்ந்து அவனை எழுந்தருளப் பண்ணுவார்களே. அம்மருவாதியே பரலோக அதி ஈஸ்பர இராயனான யேசுக்கிறீஸ்து பூலோகத்திலே ஞான சங்கிராமத்துக்குத் தளவாயாய்ச் சுகிர்த இராணுவத்தோடு வந்து உலோகர் மனதுகளை ஆண்டுகொண்டிருந்த இயமராயனுடைய கோட்டை கொத்தளத்தளி எல்லாம் சங்கரித்துப் பாவ இராச்சியத்தைச் செயித்து வெல்வெற்றியைக்கொண்டு செயசீலனாய்த் தமது சுய இராச்சியமாகிய பரலோகத்துக்கு எழுந்தருளின மகோற்சவ மகிமை இன்று கொண்டாடப்படுவது.—அப்படிப்பட்ட விருத்தாந்தத்தைச் சுவிசேஷக மாற்கு பதினாறாம் அதிகாரத்திலே எழுதிவைத்த பிரகாரம் சொல்லிக்காட்டக்கடவோம்.—அது எப்படி என்றால் யேசுநாதர் கடைசியாய்ப் பதினொருவரும் பந்தியிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனையாகி, தாம் உயிர்த்திருக்கிறதைக் கண்டவர்களை அவர்கள் விசுவசியாமற் போனதைப்பற்றி அவர்களுடைய அவவிசுவாசத்தையும் இருதயக்கடினத்தையுங் கண்டித்தார். பின்னும் அவர் அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: நீங்கள் உலகமெங்கும் போய், எல்லாச் சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவசித்து, ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சணியமடைவான், விசுவசியாதவனோ ஆக்கினைத் தீர்வையிடப்படுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் விசுவசிக்கிறவர்களைத் தொடர்ந்துவரும் அற்புதங்களாவன: என் நாமத்தினால் பேய்களைத் துரத்துவார்கள். நூதனமான பாஷைகளைப் பேசுவார்கள். பாம்புகளைப் பிடித்துத் தூக்குவார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைப் பானம் செய்தாலும், அது அவர்களுக்குப் பொல்லாப்பு செய்யாது. நோயாளிகளின்மேல் கைகளை நீட்ட, அவர்கள் சௌக்கியமடைவார்கள் என்றார். கர்த்தராகிய யேசுநாதர் இவ்விதமாய் அவர்களுடன் பேசினபின்பு, பரலோகத்திற்கு எழுந்தருளி சர்வேசுரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். அவர்கள் புறப்பட்டுப்போய் எங்கும் பிரசங்கித்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு உடனுதவிசெய்து, தொடர்ந்து நடந்த அற்புதங்களால் அவர்களுடைய வாக்கியத்தை உறுதிப்படுத்தினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஆண்டவர் சீஷர்களுக்குக் கடைசியாய்த் தோன்றிப் போதித்த போதகங்களும் ஆகாசகமனமாய் எழுந்தருளின பிரகாரமும் காண்பிக்கப்படுவது.—அது எப்படி என்றால், பரிசுத்த கன்னியாஸ்திரியான தேவமாதாவும் பதினொரு சீஷரும் பத்தியுள்ள அநேகம் சனங்களும் செருசலநகரியில் மகா அசனசாலையில் கூடியிருக்கிற நேரத்திலே ஆண்டவர் அவர்களிடத்திலே எழுந்தருளித் தம்முடைய எழுந்தேற்றத்தில் அவநம்பிக்கையாய் இருந்தவர்கள் தெளியும்படியான போதகம் போதித்து, தம்முடைய நூதன வேதவாக்கியங்களை உலோகத்தின் பதினெட்டுத் திக்கிலும் பிரசங்கம்பண்ண அனுமதம் கொடுத்தார். இதல்லாமல் அத்தை விசுவாசித்தவர்களுடைய விசுவாசத்துக்கு அடையாளமாக அவர்களுக்கு அநேக அற்புதங்கள் செய்ய வரம் உண்டாயிருக்கும் என்றதை அறிவித்தாரே. அதாவது: பேய் ஆவேஷம், சர்ப்ப விஷம் முதலான சரீர நோய் பிணி வருத்தங்கள் எல்லாம் நீக்கவும், பல பாஷைகளை உரைக்கவும் வரம் அடைவார்கள் என்று காண்பித்தார். அது ஏனென்றால், நவமாக நடப்பட்ட இளம் தோப்பின் கன்றுகள் வேர் ஊன்றி வளருந்தனையும், தண்ணீர் பாய்ச்சல் பண்ணுகிறதுபோல நூதனமாய் உண்டாக்கப்பட்ட தமது வேதசபையில் உட்பட்டவர்கள் விசுவாச உறுதியாகுந்தனையும் அவர்களை அற்புதங்களால் தெளியப்பண்ணக் கிரமம் உள்ள தேவதிருவுளம் ஆனது என்று அறியவும். ஆனால் இப்போதும் அந்த அற்புதங்கள் கிறீஸ்தவர்கள் இடத்திலே நடக்குமோ என்றால், விசுவாச பத்தியிலும், தரும சுகிர்த நடக்கையிலும் கதித்தவர்களாய் இருக்கிற மகாத்துமாக்கள் அதிலும் அதிகமான அற்புதங்கள் செய்து வருகிறார்கள். இதல்லாமல் அப்படிப்பட்ட ஆச்சரியங்கள் ஞானமேரையாய்ச் செய்கிறது சற்குணம் உள்ள கிறீஸ்தவர்கள் இடத்திலே காணலாகும் என்று அறியவும்.—அது எப்படியென்றால்: ஒருதனுடைய மனதின் பாவங்களை விலக்குகிறவர்கள் பிசாசுகளைத் துரத்துகிறது என்று சொல்லத் தகும். லௌகீக அழப்புகளை விட்டுப் பரமார்த்த வாக்கியம் பிரசங்கம் பண்ணுகிறவர்கள் நூதனவாக்கு உரைப்பவர் என்று சொல்லத் தகும். கோப, மோக, துவேஷம் முதலான துர்க்குண ஆசை நிக்கிரகம் பண்ணுகிறவர்கள் சர்ப்ப விஷம் நீக்குபவர் என்று சொல்லலாகும். துஷ்டர் போதிக்கிற துர்க்குண படிப்பினையால் மனவிகாரமின்றி இருக்கிறவர்கள் நச்சுப்பழத்தை விழுங்கித் தீமை இல்லாமல் இருக்கிற மேரையாகும். தனது சுகிர்த நடத்தையால் ஒருதனை நல்வழியில் வருவிக்கிறது கர நியாசத்தால் வியாதி குணமாக்குகிற வல்லமை என்று சொல்லலாகும். இப்படிப்பட்ட கிரிகை ஆத்துமம் ஈடேற்றுகிற கிரியைகளாய் இருக்கிறதினால் சரீர உபகாரத்துக்குச் செய்கிற கிருத்தியங்களிலும் அதிக உச்சித ஆச்சரியங்கள் என்றும் இவைகளால் விசுவாசிகளுடைய இலக்ஷணம் உத்தம விதமாய்க் காணப்படும் என்றதை அறிவித்த அபிப்பிராயம் என்று அறியவும்.



இத்தன்மையாய் ஆண்டவர் அமிர்தபோதகங்களைப் போதித்ததின்பின் பரமண்டலங்களில் எழுந்தருளின பிரகாரம் ஏதென்றால், மகா அசன சாலையில் இருந்த சனங்களைத் தயிலத்தோப்பு என்கிற மலையில் வரப்பண்ணி அவ்விடத்திலே தாம் எழுந்தருளி நின்ற கல்லின்மீதே தம்முடைய திருப்பாத அடையாளம் உரூபித்துச் சமஸ்த சனங்களும் பார்த்திருக்க ஆகாசகமனம் துவக்கின உடனே காற்றால் எடுபட்ட அணுப்பிரகாரமாய் இலகு என்கிற வரத்தால் எழுந்து தமது முகதரிசனையைச் சனங்கள்மீதே நோக்குதலுமாய்த் திருக்கரங்கள் சிலுவை மேரை அடைவாக ஆசீர்வாதம் கொடுக்கிறதுமாய் ஆகாசகமனமானார். அப்படியே அந்தரத்தில் முதல் மண்டலம் ஏறுகிறபோது அதில் பறக்கிற பட்சிகளுடைய மதுர நாதம், நாகசுரம் ஊதுகிற உருசிகரமாகவும், விவித வருண மேகக் கூட்டங்கள் பாவாடை விரித்த மேரையாகவும், அதின்மேல் சோதிமண்டலங்கள் சுவாலிக்கிற பிரதாபம், தீவிளக்கு வரிசை பிரகாசிக்கிற அலங்காரமாகவும், இத்தன்மையாய் ஆகாச மார்க்கம் சோடித்திருக்க எழுந்தருளுகிறபோது, பரமண்டல சபையோர் தங்களுடைய அரூபமேனிகள் அங்காங்கமாய் ரூபித்துப் பிரகாசிக்கப் பொன்னுலக மோக்ஷவாசல்கள் திறந்து எண்ணிறந்த கூட்டங்கள் எதிராக வந்து நவவித அணி அரணிப்பாய்ப் புடைசூழ்ந்து நவவருக்க வீணை கீத சங்கீதங்களோடும், பரஸ்பரவித ஸ்துத்திய கானங்களோடும் மனோகர நடன உல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாச பாதங்களோடும் அனுசாரம்பண்ணி ஆண்டவர் அணிந்த உத்தரீய மகிமையை அதிசயித்து இரத்தமயமான வஸ்திராபரணங்களை அணிந்து எழுந்தருளுகிற இவர் ஆர் என்று ஸ்துதித்து வருணித்துச் சகல அண்டசபையோர் செயகொண்டாட்ட சத்தமாய்ப் பரிவாரம் செய்து உன்னத மண்டலங்களில் ஏறின உடனே நீடித்த மேகபடலம் வந்து தெரிசனம் மறைத்தது. ஆண்டவர் திவ்விய நகரவாசலால் பிரவேசித்த உடனே பிதாவாகிய சர்வேசுரனும், இஸ்பிரீத்துசாந்து தேவனும், தேவசுதனை வெகுமான சன்மானத்தோடு ஆதரிக்கவே, வீரபாராக்கிரமம் உடைத்தான மனுஷீகத்தோடு அவர் வலது சிங்காசனத்தில் எழுந்தருளி இருந்தார்.

அப்போது மலையிற் பார்த்திருந்த சனங்கள் ஆகாசத்தின் மீதே நோக்கம் விடாமல் இருக்கிறபோது வெள்ளை வஸ்திரம் அணிந்த அரூபிகள் இருவர் தோன்றி அந்தச் செனங்களைப் பார்த்து, கலிலேய பதியானவர்களே! ஆகாசத்தைப் பார்த்திருப்பதென்ன? பரமண்டலங்களில் ஏறின இந்த ஆண்டவரை இப்போது கண்டபிரகாரம் மறுபடியும் பூலோகத்திலே வருகிற கமனத்தைக் காண்பீர்கள் என்று சொன்னார்கள். அதினால் சகலமான பேர்களும் மலையைவிட்டு இறங்கி ஆண்டவர் முன் திருவுளம்பற்றின வாக்கியத்தின்படியே இஸ்பிரீத்துசாந்து வரவு காணுந்தனையும் செருசலே நகரியில் மகா அசனசாலையில் கூடியிருந்தார்கள். இந்தவிதமாக எங்கள் கர்த்தரான யேசுக்கிறீஸ்து பரலோகத்துக்கு ஆரோகணம் பண்ணின விருத்தியைக் கண்டிருக்கிற சமஸ்தரும் இன்றுதானே அவர் எழுந்தருளுகிற மேரையாய் அவதானித்து எங்கள் மனோசிந்தையும், நேத்திர நோக்குதலும் அவர்மேலே வைத்து அந்த வழியால் எங்கள் ஆத்துமங்கள் மோக்ஷ தலம் சேரத்தக்கதாகப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவ வல்லவரும், நித்தியருமான சருவேஸ்பரா! உம்முடைய ஏக குமாரனாகிய எங்கள் மீட்பரானவர் இன்றையத்தினம் பரமண்டலத்துக்கு எழுந்தருளினதை விசுவசிக்கிறோமே. நாங்களும் எங்கள் மனதினால் என்றும் மேல்லோகத்தில் வசிக்கிறவர்களாயிருக்க எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துநாதர்தாமே காரணகாட்சியாக, ஆமென் யேசு.

# ஆரோகணத் திருநாளுக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

சுவிசேஷக அருளப்பர் பதினைந்தாம் அதிகாரத்திலே எழுதி வைத்த பிரகாரம்:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு அருளிச்செய்த வசனமாவது: பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்தினின்று புறப்படுகிறவருமாகிய சத்திய இஸ்பிரீத்துவான தேற்றுகிறவர் வரும்போது, அவர் என்னைப்பற்றிச் சாட்சி சொல்லுவார். நீங்களும் ஆதிமுதல் என்னோடு கூட இருக்கிறபடியால் (எனக்குச்) சாட்சி சொல்லுவீர்கள். நீங்கள் இடறல்படாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உங்களை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்குவார்கள் அன்றியும் உங்களைக் கொலைசெய்பவன் தான் சர்வேசுரனுக்கு (உகந்த) ஊழியஞ் செய்வதாக நினைக்குங் காலம் வருகின்றது. அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாததினாலே உங்களுக்கு இவைகளைச் செய்வார்கள். ஆகிலும் அந்தக்காலம் வரும்போது, நான் இவைகளை உங்களுக்கு வசனித்தேனென்று நீங்கள் நினைத்துக்கொள்ளும்படி இவைகளை உங்களுக்குச் சொன்னேன் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷமாவது:—இஸ்பிரீத்துசாந்து வந்தகாலத்திலே நமக்குச் சாக்ஷியாயிருப்பார் என்று ஆண்டவர் திருவுளம்பற்றின வசனம் ஏதென்றால், துஷ்ட யூதர் ஆண்டவருடைய தேவ மகிமையை அறியாமல் மற்ற மனுஷர்போல அவர் செத்திறந்துபோனார் என்று நினைத்ததினால், அதற்குப்பின் இஸ்பிரீத்துசாந்து பிரசாதம் என்கிற தீபிகை அவர்களுடைய மனதிற் பிரகாசிக்குங் காலத்தில் அத்தால் ஆண்டவருடைய எழுந்தேற்றத்தின் மகிமையும், ஆகாச கமன மகிமையும், மற்றுண்டான தேவ மகிமை எல்லாம் அறியப்படும் என்ற அபிப்பிராயமாம்.

இதல்லாமல் நீங்களும் எனக்குச் சாக்ஷிசொல்லுவீர்கள் என்றதினால், நீங்கள் நம்மோடே இருந்த நாள் துவக்கமாய்க் கண்ட கேட்ட பிரகாரம் என் வேதவாக்கியத்தை உலோகருக்கு உபதேசித்து, அதுக்காக உங்கள் பிராணனைச் செலவழித்து வேதசாக்ஷியாய் இருப்பீர்களென்ற அர்த்தமாம்.

பூர்வ ஆசார தேவாலயங்களுக்குப் புறத்திப்படுவார்கள் என்றதினால், யூதர்களுடைய பள்ளிகளுக்கும், கிறீஸ்துநாதருடைய தேவாலயங்களுக்கும் வித்தியாசம்பண்ணிக் கிறீஸ்து வேதத்தை அனுசரிக்கிறவர்களை நிந்திப்பார்கள் என்று அறிவித்தார். அப்படியே ஞானம் மறைந்த கண்ணோடிருக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வேதாந்திகள், சத்திய சுரூபி சர்வேசுரனையும் அவருடைய சத்திய சுரூபி சுதனாகிய கிறீஸ்துவையும் அறியாமல் அவருடைய வேதத்தை அனுசரிக்கிறவர்கள் தேவதுரோகி விரோதிகள் என்றும், அப்படிப்பட்டவர்களைக் கொன்றால் புண்ணியம் உண்டு என்றும் நினைத்துக் கிறீஸ்துவேதக்காரருக்கு அநேகம் சில்லறை பண்ணுவார்கள் என்று காண்பித்தார். அதேனென்றால் அப்படிப்பட்ட துரிதங்கள் வந்து சம்பவிக்கும்போது அத்தால் தங்களுக்குப் பரம ஆனந்த மோக்ஷ முடி கிடைக்கும் என்று மனந்தெளிந்து அப்படிப்பட்ட சில்லறை எல்லாம் மனச்சந்தோஷத்தோடு அனுபவிக்கவும், அதுக்காகப் பிராணனைச் செலவழிக்கவும், தைரியமாயிருக்கும் மருவாதியாய் ஏலவே அறிவித்தார் என்று அறியவும். ஆனதினால் இப்படியே ஆண்டவர் வசனித்ததெல்லாம் நாங்கள் ஏலவே அறிந்து ஆண்டவருக்காகப் பாடுபடவும், அவர் வேதத்துக்காகப் பிராணனைக் கொடுக்கவும் வேண்டியிருந்தால் அதற்குப் பயப்படாமல் மகா தைரிய தருமத்தோடு ஆண்டவருடைய வேதத்தை அனுசரித்து நடக்கவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவ வல்லவரும் நித்தியருமாகிய சருவேசுரா, அடியோர்கள் தேவரீருக்கு என்றும் பிரியப்படத் தேடித் தேவரீருடைய சன்னிதானத்தில் உண்மையான மனதோடு ஊழியஞ்செய்துவர அனுக்கிரகஞ் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக. ஆமென்யேசு.

---

# இஸ்பிரீத்துசாந்து பிரசன்னமான
## திருநாளில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

விமரிசையுடைத்தான நந்தாவனக்காரன் தான் உண்டாக்கின உத்தியானம் செழிப்பாய்ப் புட்பிக்கச் சலப்பிரவாகம் பண்ணுகிறமேரையாய்த் திவ்விய விதைப்பனான எங்கள் கர்த்தனான யேசுக்கிறீஸ்து உலோகம் என்கிற விளாகத்திலே வேதம் என்கிற விதை விதைத்துத் தருமஆத்துமம் என்கிற பயிர் உண்டாய் நற்கிருத்தியம் என்கிற கதிராகப் பிரசாதசலம் வருஷிக்கிற இஸ்பிரீத்தை ஏவுவேன் என்று திரு-



வுளம்பற்றினதே. அந்த வாக்கியத்தின் பிரகாரமாக உலோகத்திலே இஸ்பிரீத்துசாந்து பிரசன்னமான மகோற்சவ விசேஷம் இன்று காணலாயிருக்கும். அதைச் சுவிசேஷக அருளப்பர் பதினாலாம் அதிகாரத்திலே எழுதினபிரகாரம் சொல்லிக்காட்டக்கடவோம்:—அது எப்படி என்றால் அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றின வசனமாவது: ஒருவன் என்னைச் சிநேகித்தால், என் வாக்கியத்தை அநுசரிப்பான்; என் பிதாவும் அவனைச் சிநேகிப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனுக்குள் வாசம்பண்ணுவோம். என்னைச் சிநேகியாதவன் என் வாக்கியங்களை அனுசரியான். நீங்கள் கேட்டிருக்கிற வாக்கியம் என்னுடையதல்ல; என்னை அனுப்பின பிதாவின் வாக்கியமாமே. நான் உங்களிடத்தில் தங்கியிருக்கையிலே இவைகளை உங்களுக்குச் சொன்னேன். ஆனால் என் நாமத்தினாலே பிதாவானவர் அனுப்பப்போகிற தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் சகலத்தையும் உங்களுக்குப் படிப்பித்து, நான் உங்களுக்குச் சொன்ன யாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துவிட்டுப் போகிறேன்; என் சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன். உலகம் கொடுக்கிறதைப்போல நான் (அதைக்) கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், அஞ்சாமலும் இருப்பதாக. நான் போய், மீண்டும் உங்களிடத்தில் வருகிறேனென்று நான் உங்களுக்குச் சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்னைச் சிநேகித்தால், நான் பிதாவினிடத்தில் போகிறதைப்பற்றி மெய்யாகவே சந்தோஷப்படுவீர்கள். ஏனெனில் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். மேலும் இது நடக்கும்போது நீங்கள் விசுவசிக்கும்படியாக, நடப்பதற்குமுன் இப்பொழுதே உங்களுக்குச் சொன்னேன். இனி நான் உங்களோடு அநேக காரியங்களைப் பேசுவதில்லை. அதேதெனில் இவ்வுலகத்தின் தலைவன் வருகிறான்; ஆகிலும் என்னிடத்தில் அவனுக்கு ஒன்றுமில்லை. ஆனால் நான் பிதாவைச் சிநேகிக்கிறேனென்றும், அவர் எனக்குக் கற்பித்தபடி செய்கிறேனென்றும் உலகம் அறிந்துகொள்ளும்படி (இப்படியாகும்) என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே இஸ்பிரீத்துசாந்து இறங்கின பிரகாரமும், வரப்பிரசாதங்கள் கொடுத்த மகிமையும் காண்பித்திருக்குது. அது எப்படி என்றால், என்பேரில் பத்தியாயிருந்து என் வாக்கைச் செலுத்துகிறவனுக்கு என் பிதா தயைபண்ணுவார் என்றதினால் பிதாவின் தயையாகிய இஸ்பிரீத்துசாந்து தம்மை நேசிக்கிறவர்களிடத்திலே இறங்குவார் என்று காண்பித்த விபரமாம். ஆனதினால் அப்படிப்பட்ட பத்தி இல்லாதவர்கள் இஸ்பிரீத்துசாந்து பிரசாதம் அடைய மாட்டார்கள் என்று அறியவும். இஸ்பிரீத்துசாந்து வந்த காலத்திலே சகலதும் போதித்துத் தேவதிருவுளம் எல்லாம் வெளிப்படுத்தும் என்றதினால் இஸ்பிரீத்துசாந்து பிரசன்னமானவர்களுடைய மனசிலே கொடுக்கிற வரப்பிரசாதம் காண்பித்தார் என்று அறியவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனதினால் இன்றைத்தினம் எவர்களிடத்திலே இஸ்பிரீத்துசாந்து இறங்கினாரோ, எந்தவிதமாய்த் தோன்றினாரோ, எத்தன்மை வரங்களைக் கொடுத்தாரோ என்று விசாரிக்கவேணும். எவர்களிடத்தில் இறங்கினாரோ என்றால், பரிசுத்த கன்னியாஸ்திரியான தேவமாதா அப்போஸ்தலர் முதலான தேவபத்தி உடையவர்கள் நூற்றிருபது சனம் அளவில் செருசலே நகரியில் மகா அசனசாலையில் கூடிப் பிரார்த்தித்திருக்க, அவர்களிடத்திலே இறங்கினார் என்று அறியவும். அது எந்த விதமோ என்றால், அடர்ந்த காட்டகத்திலே அடித்த பிரசண்ட மாருதம்போலச் சலசலப்பாய் இரைந்து, மகா அசனசாலையிலே சூரிய உதயம் பிரதாபித்ததுபோலச் சுவாலிதமான பிரகாசம் உண்டாய், கண்ணுக்குத் தோன்றாத அரூபியாகிய இஸ்பிரீத்து காணக்கூடுமான ரூபத்தைக்கொண்டு தருமிஷ்டர்மேல் இறங்கித் தாம் இறங்கின அடையாளத்துக்கு அவனவன் சிரசின்மேல் துவசம் தூக்கினதுபோல நாக்குகள்போலும் அக்கினிக் கதிர்கள் காணப்பட்டது. அதில் அவர்களுக்குக் கொடுத்த வரப்பிரசாதங்களுடைய இலக்ஷணங்களும் இசைக்கப்பட்டதென்று அறியவும். கொடுக்கப்பட்ட வரப்பிரசாதம் எவ்விதமோ என்றால், ஞானம், அறிவு, புத்தி, திடாரிக்கம், விமரிசை, தயாபரம், தேவபயம் என்கிற இந்த ஏழு வகை வரப்பிரசாதங்களாம். இவை எல்லாம் கதிர்களின் இலக்ஷணத்தில் தோற்றப்பட்ட மேரை ஏதென்றால், முதலாவது, கதிரில் சுவாலித்த அக்கினி மனோ அக்கினி என்கிற தேவபத்திக்கு இலக்ஷணமாம். ஆனதினால் அப்படிப்பட்ட பத்தியோடு கூடிய தயாபர தைரிய தேவபயம் என்கிற மூவித வரங்கள் காண்பிக்கப்பட்டது. அத்தால் அவர்கள் பாவ தூர்க்குணம் எல்லாம் எரிந்து சுகிர்த குணம் அணிந்து கடவுள் பேரில் பத்தி சுவாலகருமாய்ப் பிறத்தியார்பேரில் சாந்தகுணருமாய்ப் போனார்கள் என்று அறியவும். இரண்டாவது கதிரில் தோற்றப்பட்ட அக்கினிப்பிரகாசம் ஞானப்பிரகாசத்துக்கு அடையாளமாய் அத்தால் ஞானம், அறிவு என்கிற இரு வரங்கள் காணப்பட்டது. அப்படிப்பட்ட வரங்களால் அவர்கள் மனதில் தீபிகை கொளுத்தினதுபோல அக்கியான திமிரம் எல்லாம் தள்ளுண்டுபோய், புத்தி, மனோசித்தம் என்கிற அந்தக்கரணங்கள் தெளிந்து தேவவாக்கிய அர்த்தங்கள் விளங்கவும், அநேக பரம இரகசியங்கள் அறியவும் ஞானபாரகரானார்கள். மூன்றாவது கதிர் இலக்ஷணத்தால் பல பல பாஷை உரைத்தலுக்கும் மந்திர புத்தி போதித்தலுக்கும் சாமார்த்தியமான வித்தியாதான விமரிசை என்கிற இரு பிரசாதங்கள் அடைந்தமேரை தோற்றப்பட்டது. அதினால் பாவ இடறு



களிலே விழாமல் ஆத்துமங்களைக் காக்கவும், இரக்ஷிக்கவும் உத்தம தேவமந்திரவாக்குப் பிரசங்கியானார்கள். இந்தடைவாக இந்த ஏழு வரப்பிரசாதங்களும் அக்கினிநாக்கில் உண்டான மூவித இலக்ஷணத்தால் தோற்றப்பட்டது என்று அறியவும்.

ஆண்டவருடைய சீஷர் இவ்விதமான பிரசாதங்கள் அடைந்த உடனே முன் யாதொரு அட்சரவிதி அறியாதிருக்கச் சகல புராண பிரபந்த வாசினைக்குச் சமர்த்தராய் ஒரு சாஸ்திர வித்தியாப்பியாசமும் இல்லாமல் மகா வேத வித்தியாபாரகராய் அந்நியநாடு திரியாதிருக்கச் சகல இராச்சிய பாஷையில் சாதுரிய வாய்ச்சாலகரானார்கள். அப்படியே சுடுசாம்பலில் அமைந்த அக்கினி ஊதினதுபோலப் பத்திச்சுடருமாய், அரும்பு அலர்ந்ததுபோலச் சுகிர்தகுண அலங்கார ரூபமுமாய், மது பானத்தால் இலாகிரி எடுத்ததுபோலப் பேரின்ப இனிமை ஆதிக்கத்தால் ஞான இலாகிரியருமாய் முன் யூதருக்குப் பயந்திருந்த ஐயம், அச்சங்கள் எல்லாம் அரோசித்துத் திடாரிக்க நரசிங்கராய் மனமிடுக்கோடு மகா அசனசாலையை விட்டுப் புறப்பட்டார்கள். அப்போது நகரித் தெருவீதிகளிலே திரிந்து மகோற்சவ நிமித்தமாய்க் கூடின பல தேசங்களின் சனசமுதாயங்களுக்கு அவனவன் பாஷையால் விளங்கப் பிரசங்கம் பண்ண அன்றுதானே பேதுரு அப்போஸ்தொலுவின் பிரசங்கத்தால் மூவாயிரம் சனங்கள் கிறீஸ்துவேத விசுவாசியானார்கள். இப்படியே இஸ்பிரீத்துசாந்து கொடுத்த வரங்களுடைய மகிமை காணப்பட்டது என்று அறியவும்.

பத்தியுள்ள கிறீஸ்தவர்கள் இப்படிப்பட்ட வரங்களை அடையவேணுமென்றால் தங்களுடைய இருதயம் மகா அசனசாலையாய் யோசித்து, அதை மனஸ்தாபக் கண்ணீரால் கழுவி, உச்சாரணத்தால் விளக்கிச் சுகிர்தத்தால் ஒப்பமிட்டு அப்போஸ்தலர் பிரார்த்தித்திருந்த பிரகாரம் வேண்டுதலாயிருந்தால் இஸ்பிரீத்துசாந்துவின் ஏழு வரப்பிரசாதங்களையும் அடைந்து, அப்படிப்பட்ட ஏழுவரம் என்கிற ஏழு படிகளால் பரகதி நடவை ஏறலாயிருக்கும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் இன்றைத்தினம் இஸ்பிரீத்துசாந்துவின் வெளிப்படுதலினாலே விசுவாசிகளின் மனங்களிற் தெளிவுண்டாகச் செய்தீரே. நாங்களும் அந்த இஸ்பிரீத்துவானவரின் அருளினால் சரியானவைகளையே விரும்பவும் அவருடைய ஆறுதலினால் என்றும் அக்களிக்கவும் அநுக்கிரகம்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவானவர் தம்மோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறித்துவத்தின் திருநாளில்
## வாசிக்கிற சுவிசேஷம்.

கரைகாணாத சலசாகரம் சுனையில் அடங்காததுபோல எங்கள் புத்திக்கு எட்டாத அகோசரமான தேவ திறித்துவத்தின் பரம இரக்சியத்தைச் சருவேசுரன் அறிவிக்கத் திருவுளமான விசேஷம் இன்று கொண்டாடப்படுவது.—அதைச் சுவிசேஷக மத்தேயு இருபத்தேட்டாம் அதிகாரத்திலே எழுதின பிரகாரம் எத்தன்மையோ என்றால் :—அந்தக் காலத்திலே யேசுநாதர் சீஷர்களுக்கு அருளிச்செய்த வசனமாவது : பரலோகத்திலும் பூலோகத்திலும் எனக்குச் சர்வ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் நீங்கள் போய்ச் சகல சாதிசனங்களுக்கும் உபதேசித்துப் பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள். இதோ நான் உலகமுடிவுமட்டும் எந்நாளும் உங்களோடு கூட இருக்கிறேன் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயமாவது : எங்கள் ஆண்டவர், தமக்கு இகலோக பரலோக வல்லமை எல்லாம் உண்டு என்றதினால் தமது மனுஷீகம் சர்வ வல்லப தேவத்துவத்தோடு ஒன்றாயிருக்கிறதினால் தேவனாகுமட்டும் செய்யலானதெல்லாம் மனுஷனானதின் பின்னும் செய்யலாம் என்ற அபிப்பிராயமாம்.

பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து நாமத்தால் ஸ்நாபிப்பீர்கள் என்றதினால், பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து மூவர் ஒரே சர்வேசுரன் என்கிற தேவ திரித்துவத்தின் பரம இரகசியத்தைக் காண்பித்தார். இதல்லாமல் அப்படியே மூவர்பேரில் விசுவாசமாயிருந்து ஸ்நானம் என்கிற ஆத்துமசுத்தி பெறுகிறதல்லாதே, ஒருதரை விசுவசித்து ஒருதரை விசுவசியாவிடில், அல்லது திரித்துவத்தை அங்கீகரித்து, ஏகத்துவத்தை அரோசிக்கில், ஆத்தும நன்மை ஒன்றும் அடையலாயிராது என்று காண்பித்த விபரமாம். ஆனால் மூவர் ஒரே சர்வேசுரனாவதும், ஒரே சர்வேசுரன் மூவர் ஆவதும் எப்படி என்றால், பிதாவின் ஞானம் சுதன் என்றும், சுதனுடையவும் பிதாவுடையவும் நேசம் இஸ்பிரீத்து என்றும் இப்படியே பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து மூவராகும் என்ற நியாயமாம். ஆனால் இந்த மூவரும் ஒரு தேவசுபாவமாய் இருக்கிறதினால் ஒரே தேவன் அல்லாதே மூன்று தேவன் அல்ல என்று அறியவும். இப்படிப்பட்ட தேவ பரம இரகசியம் புத்திக்கிரகணத்துக்கு அவிஷயமானதினால் கண்ணுக்கு விஷயமான யாதொரு உலோக



பாவனையால் தெரிசிக்கலாகப்பண்ணல் உச்சிதமாம். அது எப்படி என்றால், பொழுதில் பிம்பமும், காந்துகையும், கதிரும் மூவித சுபாவ குணம் ஆனாலும் ஒருபொழுது அல்லாதே, மூன்று சூரியர் அல்ல. எங்கள் ஆத்துமத்தில் புத்தி, மனது, சித்தம் என்கிற மூன்று அந்தக்கரணங்கள் இருக்கினும் ஒரு ஆத்துமம் அல்லாதே மூன்று பிராணர் அல்ல. ஒரு ஊற்றால் ஆறும் ஏரியும், நிரம்புதலாகினும் ஒரு தண்ணீர் அல்லாதே பல உதகம் எனல் அல்ல. அம்மருவாதியே பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து, மூவர் ஏகத்துவம் என்றதும், ஏகத்துவம், மூவர் என்றதும் நிர்வசியமான தேவ பரம இரகசியம் என்று அறியவும்.

அதின்பின் உலோகருக்குப் போதிக்கச் சொன்ன வேத போதகங்கள் ஏதென்றால், விசுவாசத்துக்கும், நம்பிக்கைக்கும், நடபடிக்கும் அடுத்தமேரை எல்லாம் போதிக்கக் கட்டளையிட்டார் என்று அறியவும். அதாவது : தேவ திருவுளக் கற்பனை பத்து. திருச்சபை நிஷ்டை அஞ்சு. மோக்ஷபாக்கியப் பேறு எட்டு. தேவ அபி இரகசிய பிரசாதம் ஏழு. தலையான பாவங்களுக்கு எதிரான புண்ணியங்கள் ஏழு. தானமய புண்ணிய கிருத்தியம் ஈரேழு. இஸ்பிரீத்துசாந்துவுக்கு எதிரான பாதகம் ஆறு. பஞ்சகாமிய நிக்கிரகம் அஞ்சு. அஸ்திவார தருமம் நாலு. தேவசியமான சுகிர்தம் மூன்று. சகல வேத சங்க்ஷேப கிருத்தியம் ஒன்று. வேதாகமம் ஒன்று. தேவன் ஒன்று. ஆத்துமம் ஒன்று. பரகதி ஒன்று. நரககதி ஒன்று. இப்படியே விசுவாச இலக்ஷணம், பிரார்த்திப்பு இலக்ஷணம், நடபடி இலக்ஷணம், இது முதலான வேத இலக்ஷணமேரை எல்லாம் போதிக்கக் கட்டளைபண்ணினார் என்று அறியவும்.

இந்தப்பிரகாரமாக நாங்களும் சர்வேசுரனுடைய வேதாந்த மேரைகளை அறிந்து திரித்துவத்தின் பேரிலே உறுதி விசுவாசமாய் எங்கள் புத்தி மனோ சித்தம் என்கிற ஆத்துமத்தின் மூன்று வல்லமையையும் மூவருக்கும் பிரீதியாகக் கையளித்துப் பாவமின்றியே பூலோகத்திலே நடந்தால் பரலோகத்திலே மூவரையும் முகமுகமாய்த் தெரிசித்து ஆத்துமத்தின் மூன்று அந்தக்கரணங்கள் திருத்தி உண்டாகுமட்டாய்ச் சம்பூரண ஆனந்தத்தை அடையலாம் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவவல்லவரும் சதா நித்தியருமாயிருக்கிற சருவேசுரா அடியோர்கள் சத்திய விசுவாசத்தை அறிக்கைபண்ணத் தேவரீருடைய நித்திய திரித்துவத்தின் மகிமைப் பிரதாபத்தைக் கண்டுகொள்ளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமது தெய்வீக வல்லமையின் ஏகத்துவத்தை ஆராதிக்கவும் கிருபைகூர்ந்தருளினீரே. இந்த விசுவாசத்தின் உறுதிப்பாட்டினால் நாங்கள் சகல எதிரிடைகளின் மத்தியிலும் தளராதிருக்க எங்களுக் கனுக்கிரகம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

# சற்பிரசாதத் திருநாளில்

## வாசிக்கிற சுவிசேஷம்

---

அளவற்ற தயைச் சமுத்திரக் கரைகாணாத பிரவாகமானதுமாய்த் தேவதிரவிய கருவூலம் ஆதியந்தங் கொடையானதுமாய் அனந்த சற்கார தேற்றரவுள்ள ஆச்சரிய விஷயமுமாயுள்ள மனோவாக்குக்கு எட்டாத சற்பிரசாத விருந்தின் மகிமை இன்று கொண்டாடப்படுவது. அதைச் சுவிசேஷக அருளப்பர் ஆறும் அதிகாரத்தில் எழுதிவைத்த பிரகாரம் ஏதென்றால் :—அந்தக்காலத்திலே யேசுநாதர் யூதர் கூட்டங்களுக்குத் திருவுளம்பற்றின வசனமாவது : என் மாம்சம் மெய்யாகவே போஜனமும், என் இரத்தம் மெய்யாகவே பானமுமாயிருக்கின்றது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னில் வசிக்கிறான், நானும் அவனில் வசிக்கிறேன். சீவியராகிய பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதாவினால் சீவிக்கிறதுபோலவும், என்னைப் புசிக்கிறவனும் என்னால் சீவிப்பான். பரலோகத்திலிருந்து இறங்கின அப்பம் இதுவே. இது உங்கள் பிதாக்கள் மன்னாவைப் புசித்ததுபோல் அல்ல ; அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே சற்பிரசாதத்தின் சுலக்ஷணங்களும், அத்தால் அடைகிற நன்மைப்பிரசாதங்களும் காணலாயிருக்கும். அது எப்படி என்றால், முதலாவது என் மாங்கிஷ இரத்தம் மெய்யாகவே அன்னபானம் என்றதினால் சற்பிரசாதத்தில் தம்முடைய சரீர உதிரம் சத்திய சுபாவமாயிருக்கிறது என்று காண்பித்தார். ஆனதினால் இப்படிப்பட்ட வெளிபொருளான தேவவாக்கியத்தை அங்கீகரியாமல் மறுபொருளாய்ப் பேதலிக்கிற பதிதருடைய மூடத்தனமும், விசுவாசக் கீழ்மையும், தேவவாக்குக்கு எத்தனையோ விரோதம் என்று அறியலாம். ஆனால் அப்பமாயிருக்கிறது மாங்கிஷமாய்ப் போகிறது எப்படி என்றால் : அது ஆண்டவருடைய திருவாக்குப் பெலத்தால் உண்டாவது என்று அறியவும்.



அது ஏதெனில், உலோகம் படைப்புண்ணுமுன்னே வெறும் பொருளாயிருக்க, ஆகட்டும் என்ற திருவுளத்தால் சகல சீவ அசீவ பொருட்கள் உண்டானதே. தண்ணீரால் நிறைந்த சாடிகள் மதுர இரசம் ஆனதே. செத்த பிரேதமாயிருந்தது உயிர்ப்பு ஆனதே. இதெல்லாம் ஆண்டவருடைய திருவுளத்தால் உண்டாக்கப்பட்டபோதே, அப்படியே கோதும்பை அப்பம் மாங்கிஷமாகிறதும் முந்திரிகை இரசம் இரத்தமாகிறதும் அபூர்வம் அல்ல என்று அறியவும். அப்படி என்றால், சற்பிரசாதம் கொள்ளுகிறவன் அதில் மாங்கிஷ, இரத்தத்தின் சுபாவ சுரூபங் காணாமல் அப்பத்தினும், முந்திரிகை இரசத்தினும், இலக்ஷணம் மாத்திரம் காண்கிற காரணம் ஏதென்றால், உயிர் உள்ள சரீரத்தில் உண்டாயிருக்கிற உரூப ரேகை உயிர் போன காலத்திலும் காணப்படுமாப்போலே அப்பத்தின் முன் உள்ள குண இலக்ஷணம் மாறாமல், அதில் உயிர் என்கிற ஆகுதலை மாத்திரம் இல்லாமற் செய்து மாங்கிஷமாகப் பண்ணினதினால் அந்த இலக்ஷணங்கள் தோற்றப்படுவது. இவை ஆண்டவர் தம்முடைய தெய்வீக பெலத்தின் மகிமையைக் காண்பிக்கவும், விசுவாசிகளுடைய விசுவாச பெறுபேறுகள் அதிகரிக்கவும் வேணும் என்கிறதற்காக இப்படியே உண்டுபண்ணின அபிப்பிராயம் என்று அறியவும்.

ஆனதினால் இவ்விதமாய் ஆண்டவர் பண்ணின இந்தக் கிருத்தியத்தில் இசைக்கப்பட்ட ஆச்சரிய மகிமைகள் கண்டறிதல் உச்சிதமாம். அது ஏதெனில், அப்பம் இல்லாத இடத்தில் அப்பத்தின் குணம் நிற்கிறது அதிசயமாம். மாங்கிஷ குணம் இல்லாத இடத்தில் மாங்கிஷம் இருக்கிறது அதிசயமாம். சடபதார்த்தமாய்க் காணப்படுகிறது சீவித்திருக்கிறது அதிசயமாம். ஒரு கிறீஸ்துவின் சரீரம் பலவிடத்திலும் இருக்கலாகிறது அதிசயமாம். பரலோக நிவாசம் விடாமல் பூலோகத்திலே வசிக்கிறது அதிசயமாம். அணுப்பிரமாணத்தில் என்கிலும் முழு ஆளாயிருக்கிறது அதிசயமாம். அவிள் அளவு கொடுக்கிலும் முழுமையாய்க் கொடுக்கிறது அதிசயமாம். ஆயிரம் சனத்துக்குப் பங்கிடுகிலும் எல்லோரும் அடைகிற அளவு ஒவ்வொருவரும் தனித்தனியே அடைகிறது அதிசயமாம். பிட்கில் பிரிபடாமலும் நொறுக்கில் நொறுங்குண்ணாமலும் முழுமையாயிருக்கிறது அதிசயமாம். பங்கிட்டு முகியாமலும், செலவழித்து அழியாமலுமிருக்கிறது அதிசயமாம். சரீரம் போசித்து ஆத்துமம் சீவிக்கிறது அதிசயமாம். பெறுபேறுக்குத் தக்கது பலனாகிறதும், சுகிர்தவாளருக்குச் சீவியமாயும் பாவிகளுக்கு மரணமாயுமிருக்கிறது அதிசயமாம். இது முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லான எண் அடங்காத ஆச்சரியங்களுடைய சூக்ஷத்தால் சற்பிரசாதம் என்கிற கிருத்தியத்தை உண்டாக்கினதினால் அது ஆண்டவர் பூலோகத்திலே கீர்த்தித்த அற்புதங்களுடைய வீர பராக்கிரம விருது என்று சொல்லப்படும்.

ஆனால் இப்படிப்பட்ட அற்புத விஷயமான கிருத்தியத்தை ஆண்டவர் உண்டுபண்ணின நோக்கம் ஏதென்றால், அதில் தம்முடைய பீடையையும், மரணத்தையும் அவதானிக்கிற ஞாபக நிபந்தனையாகவும், எங்கள் ஆத்துமம் தமது வசமாக்கப்படுகிற அச்சாரமாகவும், தமது சந்நிதானம் எங்களுக்குக் காணப்படுகிற தெரிசியமான ஸ்தானமாகவும், எங்கள் ஆத்துமத்தோடு பத்தாவும் பத்தினியுமாய், ஏகவசமாகிற பந்தனமாகவும், இத்தொகை அபிப்பிராயம் நிறைவேற இவ்வித சூக்ஷகிருத்தியம் உண்டாக்கினார் என்று அறியவும்.

ஆனால், அத்தால் நாங்கள் அடைகிற பிரசாதங்கள் ஏதென்றால், என்னை உட்கொள்ளுகிறவன் என்னிடத்தில் இருப்பன், நாமும் அவனிடத்திலே இருப்போம் என்றதினால், சற்பிரசாதம் கொள்ளுகிறவனுடைய ஆத்தும சரீரம் ஆண்டவருடைய ஆத்தும சரீரத்தோடு ஐக்கியமாய் எங்கள் அனுகூலத்துக்கு ஆண்டவருடைய சித்தம் இரங்கி எங்கள் ஆத்துமம் ஆசிக்கிற பிரசாதம் எல்லாம் மனம் பூரிக்கக் கிடைப்பது என்று காண்பித்தார். அதாவது: பத்தியோடு சற்பிரசாதம் கொள்ளுதல் பாவப்பொறுத்தலாம், துர்க்குணம் அறுத்தலாம், சுகிர்தம் விதைத்தலாம், ஞான எண்ணம் பற்றுதலாம், ஆத்துமம் சீவிக்கிற காலை மாலை ஓசீவனமாம், பெலவீனமான நடக்கைக்கு ஊன்றுகோலாம், கஷ்ட சோகங்களுக்கு சற்கார தேற்றரவாம், பிசாசு சோதினைகளுக்குக் கேடய காவலாம், சுகிர்த வறிமைக்குத் தரும தன தானிய களஞ்சியமாம், தரும கிருத்தியங்களுக்குச் சுவாலை பத்தி பற்றுதலாம், மோக்ஷ சுதந்தரத்தின் நிருபமாம், நரக பயத்துக்கு அபயாஸ்தமாம். இந்த வரங்கள் தவிரக் கிளப்புகிற பிரசாதம், சித்திக்கிற பிரசாதம், துணைப் பிரசாதம், சரமபிரசாதம், இஷ்டப்பிரசாதம் முதலான சகல பிரசாதங்கள் அடைகிற சற்பிரசாதக் கருவூலம் என்றறியவும். ஆனதினால் இத்தொகைப்பட்ட பிரசாத கொடைகளைக் கொண்டு சற்பிரசாதம் என்கிற கேடகத்தில் எழுந்தருளுகிற ஆண்டவரை எங்கள் இருதயத்திலே அபேட்சை ஆசை என்கிற விரைவான ஆசுரத் தூதரை எதிராகவனுப்பி வேண்டுதல் உபாசித்தலாய் எங்கள் இருதயத்திலே உபசாரம்பண்ணி ஆத்துமம் என்கிற தரும சாலையில் புத்தி மனோ சித்தம் என்கிற



உள் அறைகளில் தியானத்தால் ஞான தீபம் கொளுத்தி, நல் எண்ணங்களால் தரும சோடினைபண்ணி, ஆண்டவருடைய சந்நிதானம் கண்ட உடனே ஸ்துத்திய ஸ்தோத்திரங்களால் மினவுதல்பண்ணி, காமிய நிக்கிரகம் என்கிற சிங்காசனத்தில் சயனிப்பித்து, பட்ச பிரீதி என்கிற உருசிகர போசனங்களால் உபாஸ்திபண்ணி, அவருடைய சித்தத்துக்கு எங்கள் ஆத்துமத்தை ஐக்கியமாக்கி ஏகாத்துமமாய் நடந்து பரலோகத்திலே அவரோடே அப்பரியந்த காலம் சீவித்திருக்கப் பிரயாசப்படக் கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் ஆச்சரியமான சற்பிரசாத தேவதிரவிய அனுமானத்திலே உம்முடைய திருப்பாடுகளின் ஞாபகமானது தங்கியிருக்கச் செய்தீரே. அடியோர்கள் தேவரீருடைய திருச்சரீரமும் இரத்தமுமாகிய இந்த மோட்சகருவூலத்தை ஏற்ற விதமாய்ப் பூசித்து உமது ஈடேற்றத்தின் பலனை என்றும் அனுபவிக்கிறவர்களாயிருக்கக் கிருபை பண்ணியருளும். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற

## சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பதினாலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் பரிசேய சனங்களுக்குத் திருவுளம்பற்றின உவமையாவது: ஒரு மனுஷன் பெரிய விருந்து செய்து, அநேகரை அழைப்பித்தான். அப்படியே அவன் விருந்து வேளையில்: இப்பொழுது எல்லாம் தயாராயிருக்கின்றது, அழைக்கப்பட்டவர்கள் வரவேண்டுமென்று சொல்லும்படி, அவர்களிடத்தில் தன் ஊழியனை அனுப்பினான். அவர்களெல்லாரும் ஒருப்படப் போக்குச் சொல்லத் துவக்கினார்கள்; ஒருவன் அவனை நோக்கி: நான் ஒரு தோட்டத்தை வாங்கினேன், அவசியமாய் நான் போய் அதைப் பார்க்க வேண்டும். ஆகையால் என்னை மன்னித்துக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறேன் என்றான். மற்றொருவன்: ஐந்தேர் மாடு வாங்கினேன், அவைகளைப் பரீட்சிக்கப்போகிறேன். ஆகையால் என்னை மன்னித்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றான். இன்னொருவன்: நான் ஒரு பெண்ணை மணமுடித்தேன்; ஆதலால் வரக்கூடாது என்றான். ஊழியன் திரும்பிவந்து, இவைகளைத் தன் எஜமானுக்கு அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தான். அப்பொழுது குடும்பத்தெசமான் கோபமடைந்து, தன் ஊழியனை நோக்கி: நீ சீக்கிரமாகப் பட்டணத்துத் தெருக்களிலும் வீதிகளிலும் போய், ஏழைகளையும் ஊனர்களையும் குருடர்களையும் நொண்டிகளையும் இங்கே அழைத்துக்கொண்டுவா என்றான். பின்னும் ஊழியன்: ஆண்டவனே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னம் இடமிருக்கிறது என்றான். எஜமான் ஊழியனை நோக்கி: நீ புறப்பட்டு, வழிகளிலும், வேலிகளோரத்திலும் போய் என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி கட்டாயப்படுத்து. ஏனெனில் அழைக்கப்பட்டிருந்த அந்த மனுஷரில் ஒருவனும் என் விருந்தைச் சுவைபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட உவமையின் பொருள் ஏதென்றால்: விருந்து உண்டாக்கின மனுஷன் பிதாவாகிய சர்வேசுரனுக்கு அடையாளமாம். விருந்து சற்பிரசாதமாம். அல்லது மோக்ஷ அமிர்தமாம். அதற்கு அழைக்கப்பட்ட விருந்தாளிகள் சகல உலோக வாசிகளாம். அழைக்கப்போன தூதர் காரணக் குருமாராம். அழைத்த விருந்தாடிகளில் ஒருவன்கொண்ட உத்தியானத்தைப் பார்க்கப்போகிறேன் என்றும், ஒருவன் கொண்ட எருதுகளைப் பழக்கப்போகிறேன் என்றும், மற்றவன் விவாகமாயிருக்கிறேன் என்றும், இப்படியே எல்லாரும் பக்குவம் சொல்லி வராதிருந்த விபரம் ஏதென்றால்: உத்தியானம் என்பது பூலோக போகபோக்கியங்கள் என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட இவ்வுலக போக எண்ணங்களிலே மூழ்கியிருக்கிறவன் பரலோக விருந்துக்குப் பாத்திரவானாகமாட்டான் என்ற அபிப்பிராயமாம். ஐயனை எருது கொண்டது என்பது: மிருகத்துக்குச் சமானமாய் மனுஷனுக்குள்ள பஞ்சகாமிய இந்திரியமாம். அதாவது: இரு நேத்திரம், இரு கேள்வி, இரு நாசி, இரு அதரம், இரு கை என்கிற இந்த ஐயனையாம். அப்படிப்பட்ட மிருகங்கள் தலைகவிழ்ந்து மூலாக்கினி தணிக்கிற பதார்த்தங்களை மாத்திரம் தேடி ஞான அர்த்தம் ஒன்றும் அறியாததுபோலப் பஞ்சகாமியத்தின் தசதுவாரங்களால் சரீர சம்பந்த சுகத்தைப் போகிக்கிறவர்கள் ஆத்தும சம்பந்த இன்ப இரசானியத்தை அடையமாட்டார்கள் என்று அறியவும். விவாகம் பண்ணினவனோ என்றால், மோக தூர்க்கந்தம் என்கிற சேற்றுளையில் ஊன்றி எழும்பமாட்டாமல் இருக்கிறவன் என்று சொல்லப்படும். ஆனதினால் மற்றவர்கள் விருந்துக்கு வராமல் பொறுதிகேட்டு நின்ற இடத்திலே இவன் வரக்கூடாது என்று சாதனை செய்த விபரமாம். அப்படியே சிற்றின்ப எண்ணங்களிலே மூழ்குகிறவர்கள் பேரின்ப சிந்தைகளிலே மனது எழும்பாமல் இருப்பார்கள் என்று அறியவும். இந்தடைவாகப்

005612



பெண்வாழ்வு, மண்வாழ்வு, பொன்வாழ்வு என்கிற மூவித வாழ்க்கையில் கட்டுண்டவர்கள் விருந்துக்கு வாராத மூன்று பேர்களுக்கும் அடையாளமாம். அப்படியே பூலோக விருந்தர் பரலோக விருந்துச்சாலையில் உட்படமாட்டார்கள் என்று காண்பித்தார்.

மறுபடியும் விட்டு எசமானான கிரகஸ்தன் விதித்த வசனமாவது: இடுக்கர், வசக்கேடர், கண்ணூனர், காலூனரான பேர்களை அழைத்துவரச் சொல்லி அதுவும் போதாமல் சந்து அடைப்புகளில் விருந்தாடிகளைத் தேடச் சொன்னது ஏதென்றால்: உலோக விரியங்களுக்கு, அசடர் ஊனராயிருக்கிறவர்கள் பரலோக வழிக்கு எளிதாய்ச் சாய்வார்கள் என்ற அபிப்பிராயமாம். இதல்லாமல் தரித்திரராவது: திரவிய ஆசையை வெறுத்த மனோ தரித்திரராம். பெலவீனர் என்பது: சரீரம் ஒறுத்த தபோதனிகளாம். குருடர் என்பது: புறக்கண் பார்வையை மறைத்து உட்கண்ணாய்த் தெரிசிக்கிற ஞானிகளாம். சப்பாணிகள் என்பது: பாவவழியிலே நடவாத தேவ பயபத்தியான நடபடி உள்ளவர்களாம். இவர்கள் உலோக விருந்து என்கிற பவுஷின் ஆசையை வெறுத்ததினால் மோக்ஷ இரசானியம் என்கிற அன்னம் அனுபவிக்க வெகு சந்தோஷத்தோடு வருவார்கள் என்று காண்பித்தார். இது தவிர வழியிலே கிடக்கிறவர்களாவது: யாதொரு வேதசபை என்கிற வீட்டில் உட்படாமலிருக்கிற நாஸ்திகரும், வேலி ஓரங்களிலே இருக்கிறவர்களாவது: வெவ்வேறு மதங்கள் கட்டியிருக்கிற பதிதர் முதலான பல அந்நிய வேதாந்திகளுமாம். இவர்கள் பலத்காரம் என்கிற விசேஷ தேவப்பிரசாத பெலத்தால் மோக்ஷ விருந்தாளிகளுடைய ஆசனங்கள் நிறையச் சர்வேசுரனாலே வேதத்துக்கு வருவிக்கப்படுவார்கள் என்ற அபிப்பிராயமாம். இப்படிப்பட்ட தேவபரம ஞான நீதிநெறியைக் காண்கிற நாங்கள் அவர் பூலோகத்திலே அனுப்பின தூதர் என்கிற வேத குருதேசிகருடைய வாக்குகள் தவறாமல் பொன் ஆசை, பெண் ஆசை, மண் ஆசை என்கிற இந்த மூவாசைப் பந்தனங்களின் கட்டு அவிழ்த்துத் தாற்பரியம் என்கிற ஆடை அணிந்து திவ்விய அமிர்தம் பொழிகிற மோக்ஷ விருந்தை அனுபவிக்கப் போகவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, அடியோர் தேவரீருடைய அதி பரிசுத்த நாமத்தின் பேரில் என்றும் பயமும் பயத்தோடுகூட அன்பும் உள்ளவர்களாயிருக்கப்பண்ணியருளும். ஏனெனில், உம்முடைய சிநேகத்தில் வேரூன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருப்பதாகிய கிருபையை அடைந்துகொண்டவர்கள் எவர்களோ அவர்கள் ஒருபோதும் தேவரீருடைய பாதுகாப்பின்றி அலைக்கழிவதில்லையாமே. தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## மூன்றும் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக லூக்கா பதினைந்தாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக் காலத்திலே அவருடைய வாக்கியங்களைக் கேட்கவேண்டுமென்று ஆயக்காரர்களும் பாவிகளும் அவரண்டையில் வந்தார்கள். ஆனதினால் பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து : இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களோடே அசனம்பண்ணுகிறார் என்பார்கள். ஆகையால் அவர் பின்வரும் உவமையை அவர்களுக்குச் சொல்லி வசனித்ததாவது : உங்களில் நூறு ஆடுகளை உடைய எவனாகிலும் அவைகளில் ஒன்று காணாமற்போனால், மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்தில் விட்டுவிட்டு, காணாமற்போன ஆட்டைக் காணுந்தனையும் தேடித்திரியானோ? அதைக் கண்டுபிடித்த பின்பு, சந்தோஷமாய் அதைத் தன் தோள்களின்மேல் போட்டுக்கொண்டு, வீட்டுக்குவந்து, தன் சிநேகிதரையும், அயலகத்தாரையும் கூட வரவழைத்து : காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடித்தேன், ஆகையால் என்னோடுகூடக் களிகூருங்களென்று சொல்லுவானல்லோ? அவ்விதமே தவஞ்செய்ய அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப்பற்றி உண்டாகிற சந்தோஷத்தைவிட, தவஞ்செய்கிற ஒரு பாவியினிமித்தம் மோட்சத்திலே அதிக சந்தோஷமுண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்றியும் பத்துத் திராக்மா என்னும் பணங்களையுடைய எந்த ஸ்திரீயானாலும் அதில் ஒன்று காணாமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி அதைக் காணுந்தனையும் கவலையோடு தேடாதிருப்பாளோ? அதை அவள் கண்டுபிடித்தபின்பு, தன் சிநேகிதிகளையும், அயல் வீட்டுக்காரிகளையுங் கூட வரவழைத்து : இதோ காணாமற்போன என் பணத்தைக் கண்டுபிடித்தேன், ஆகையால் என்னோடேகூடக் களிகூருங்களென்று சொல்லுவாளல்லோ? அவ்விதமே தவஞ்செய்கிற ஒரு பாவியினிமித்தம் தேவதூதர்களுக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று திருவுளம்பற்றினார்.



இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஆண்டவர் பாவிகளோடு சம்பாஷணையாயிருந்ததுக்கு யூதர் வசைசொன்ன மேரையும் அதுக்கு ஆண்டவர் அவர்களை இருவித உவமையால் தெளியப்பண்ணின மருவாதியும் காண்பித்திருக்குது. யூதர் வசைசொன்ன கீழ்மை எத்தன்மையோ என்றால், சித்திரக்காரன் எழுதப்போகிற உரூபத்தின் அலங்காரத்தைக் காணு முன்னே அவன் முதல்கீறின இரேகைக் கோடுகளை, அறியாதவன் பார்த்து அவனை அசடன் என்று நிராகரிக்கிறதுபோலவும், வயலில் காண்கிற தானிய பலாபலன்களை விசாரியாமல் அதிலிருக்கிற சேறு எருக்கண்டு அருவருக்கிறதுபோலவும், அப்படியே ஆண்டவர் பாவிகளைச் சம்பாஷணையால் ஈடேற்றுகிறதில் உள்ள பெறுபேறுகளையும் ஆத்தும நன்மையையும் மோக்ஷ மகிமையையும் அறியாமல் அவர் பாவிகளோடே சஞ்சரிக்கிறார் என்று நிர்மூட யூதர் நிந்தை சொன்ன அபிப்பிராயம் என்று அறியவும். ஆனதினால் அவர்களுடைய மூடத்தனத்தைத் தெளிவிக்கத்தக்கதாக ஆண்டவர் வசனித்த உவமையின் பொருள் ஏதென்றால் : நூறு புருவை உடையவன் என்பது நூறாயிரம் இலட்ச தூதாதி தூதர் உண்டாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துவாம். இவை எல்லாம் பரலோகத்திலே இருக்கப் பிரிந்துபோன ஆடாவது : பாவத்தால் தேவ சமுகத்தை விலகிப்போன மானிட சென்மத்தை ஈடேற்றத் தக்கதாகப் பூலோகம் என்கிற வனாந்தர வழியாய்த் தேடிவந்த மேரையாம். ஆட்டைக் கண்ட உடனே இடையன் சந்தோஷமாய் அதைத் தன் தோளிற் சுமந்து இல்லத்திற் கொண்டுவந்து மகிழ்ச்சி கொண்டாடுகிறதுபோல ஆண்டவர் மனுஷ சென்மத்தின் பாரத்தைச் சிலுவையில் இசைத்துத் தமது திருப்புயத்தில் சுமந்து இல்லம் என்கிற மோக்ஷ இராச்சியத்துக்குக் கொண்டுவந்து, அவர்களோடும் சகல மோக்ஷவாசிகளோடும், மோக்ஷானந்தம் கொண்டாடப்படுவது என்ற அபிப்பிராயமாம். இதைக் கண்டு கிறீஸ்து இடமாயிருக்கிற தபோதனிகள் தன் தன்னுடைய ஆடு என்கிற பெந்துசன தாசர், பரிவார சிநேகிதர் சம்மந்தியரைவிட்டு, கெட்டுப்போன ஆடுகள் என்கிற பாவத்தாலும், அக்கியானத்தாலும் புறத்திப்பட்டிருக்கிற சனங்களை ஈடேற்றத்தக்கதாகப் பிறநாடு தேசங்களில் போய்ப் பிரயாசப்பட ஞாயமாயிருக்கும் என்று காண்பித்தார்.

இரண்டாம் உவமையாவது : பத்துப் பொன் உள்ள ஸ்திரீ ஒரு பொன் கைவழுவிப்போனால் விளக்கேற்றி வீட்டைக்கூட்டி அதைத் தேடுவாள் என்றதினால், பத்துப் பொன் என்கிற பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கற்பனை அல்லது பத்துத் தரும பிரசாதம் கைக்கொண்டிருக்கிறவன் அதில் ஒரு கற்பனை என்கிலும், ஒரு தருமம் என்கிலும் மீறிப்போகில் விளக்கு என்கிற ஆத்தும சோதனையால் இல்லம் என்கிற தன் இருதயத்தைப் பற்றும்பற்றாய்ச் சோதித்துத் துடைப்பம் என்கிற உச்சாரணத்தினால் பாவம் என்கிற ஊத்தையைக் கூட்டித் தள்ளிவிட்டு இழந்துபோன பிரசாதத்தை அடையவேணும் என்கிற அபிப்பிராயமாம். இந்தப் பிரகாரமாக நாங்கள் பாவத்தால் எங்கள் ஆத்துமத்தையும், சுகிர்தத்தையும் இழந்துபோகிறபோது சோதினை என்கிற ஞானவெளிச்சத்தோடும், பாவ உச்சாரணத்தோடும் ஈடேற்றம் என்கிற விலைமதியாத உரொக்கத்தை அடையவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருப்போரைப் பாதுகாத்தருளுகின்றவராகிய சருவேசுரா, தேவரீருடைய உதவியின்றி உறுதியான நன்மை விளைவதும் சுத்தமான சீவியம் உண்டாவதுமில்லையாமே. ஆதலால் தேவரீருடைய ஆதரவின்கீழும் தேவரீரால் நடத்தப்பட்டும் அடியோர்கள் அவ்வுலக நன்மைகளை இழந்துபோகாமலே இவ்வுலக நன்மைகளை அநுபவித்துவரும்படிக்கு உம்முடைய கருணைகடாட்சத்தை எங்கள்பேரிற் திருப்பியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## நாலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக லூக்கா அஞ்சாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் ஜெனேசரேத் என்னும் ஏரியினருகே நிற்கையில், திரளான ஜனங்கள் தேவவாக்கியத்தைக்கேட்கும்படி அவரிடத்தில் வந்து நெருங்கினார்கள். அப்போது ஏரியோரத்தில் இரண்டு படகுகள் நிற்கக் கண்டார். மீன் பிடிக்கிறவர்கள் கீழேயிறங்கி வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள். அவைகளில் ஒன்றாகிய சீமோனுடைய படகிலே அவர் ஏறி, கரைக்குச் சற்றுத் தூரத்தில் அதைத் தள்ளும்படி அவரைக் கேட்டுக்கொண்டு, அந்தப் படகில் உட்கார்ந்து ஜனங்களுக்கு உபதேசித்தார். உபதேசித்து முடிந்தபின், சீமோனை நோக்கி: படகை ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய்



மீன்பிடிப்பதற்கு உங்கள் வலைகளை வீசுங்கள் என்றார். சீமோன் பிரத்தியுத்தாரமாக: போதகரே, நாங்கள் இரவெல்லாம் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் தேவரீருடைய வார்த்தையின்படியே வலையை வீசுவேன் என்றார். அப்படி அவர்கள் செய்தவுடனே, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்க ஏராளமான மச்சங்களை வளைத்துப் பிடித்தார்கள். அப்போது மற்றப் படகிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படி, அவர்களுக்குச் சயிக்கினை காட்டினார்கள். அவர்களும் வந்து, இரண்டு படகுகளையும் நிரப்ப, அவைகள் கிட்டத்தட்ட அமிழ்ந்திப்போகிறதாயிருந்தன. சீமோன் இராயப்பர் இதைக் கண்டவுடனே, யேசுநாதருடைய பாதத்திலே விழுந்து: ஆண்டவரே, நான் பாவியான மனுஷன். என்னை விட்டு அகலும் என்றார். ஏனெனில் அவர்களுக்கு அகப்பட்ட மீன்பாட்டினிமித்தம், அவரும் அவரோடிருந்த சகலரும் பிரமிப்படைந்திருந்தார்கள். அவ்விதமே சீமோனுடைய தோழராகிய செபதேயின் குமாரர் இயாகப்பரும் அருளப்பரும் (பிரமிப்படைந்திருந்தார்கள்.) ஆனால் யேசுநாதர் சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். ஆதலால் அவர்கள் படகுகளைக் கரைக்குத் தள்ளினபின், எல்லாவற்றையும்விட்டு, அவரைப் பின்சென்றார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷமாவது: ஆண்டவருடைய அமிர்த பிரசங்க வாக்கைக் கேட்கத் திரளான சனங்கள் தாற்பரிய மனவிருப்போடு கும்பலாய் வந்து நிறைகிற இடத்திலே, ஆண்டவர் உருவில் ஏறிக் கரை விலகி இருந்து பிரசங்கம் பண்ணின அபிப்பிராயம் ஏதென்றால், கரை என்கிற பூலோக போகங்களில் மன்னி நிற்கிற ஆசாபாசத்தைவிட்டு நாவாய் என்கிற ஞானத்திலே மனம் வைத்துத் தேவவாக்கின் உருசியை அனுபவிக்க வேணும் என்று காண்பித்தார். பிரசங்கம் முகிந்தபின் உருவை ஆழியில் அகலவிட்டு வலைவிடச் சொன்னது ஏதென்றால், வாக்கினாலே வேதம் போதித்ததின்பின் தியானம் என்கிற ஆழியிலே உட்பிரவேசித்துத் தான் உபதேசித்த வேதம் என்கிற வலையில் மச்சம் என்கிற மனுஷ ஆத்துமாக்கள் உட்படச் சர்வேசுரனைப் பிரார்த்திக்கவேணும் என்று படிப்பித்தார். ஆனால் மீன்படுக்கிறவர்கள் இராமுழுதும் பிரயாசப்பட்டு ஒரு மீனமும் அகப்படாமல் ஆண்டவருடைய திருவாக்கைக்கொண்டு வலை எறிந்த உடனே சபலமான மீன்பாடானது ஏதென்றால், நாங்கள் எந்தக் கருமத்தையும் சர்வேசுரனை நம்பித் துவக்கவும் அவருடைய உதவியால் நிறைவேற்றவும் வேணும் அல்லாதே தன்னுடைய பலத்தை நம்பி யாதொரு காரியத்துக்குக் கங்கணம் கட்டித் திரிவதினால் வெல்வினை காணமாட்டாது என்று அறிவித்தார். இதல்லாமல் வலையில் வந்த மயிலைகள் ஒரு உருவில் அடங்காமல் இரண்டு ஓடமும் கொண்டுவந்து கனமாய்



Nallur Swami Gnanapragasar Librar
OBLATE FATHERS
" THODARBAHAM "
657/1, HOS...
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்பிப்போன விபரம் ஏதென்றால், சர்வேசுரனுடைய சுவிசேஷ வாக்கியத்தைக் கேட்டு வேதத்திலே பிரவேசிக்கிறவர்கள், ஓர் ஆலயத்திலும் ஒரு மடத்திலும் அடங்காமல் உலோகம் எங்கும் ஆலய மந்திரங்களும், முனி, இருஷி, ஏகாங்கிகளுடைய அரணிய வாசங்களும், நிறைபடும் என்று காண்பித்த விபரமாம். சீஷர்கள் மீன்பாட்டின் அதிசயத்தைக்கண்டு பயந்திருந்த இடத்திலே ஆண்டவர் அவர்களை இனிமேல் மனுஷ ஆத்துமாக்களைப் படுப்பீர்கள் என்றதற்கு அர்த்தம் ஏதென்றால், மச்சங்கள் அறிவில்லாமையால் வலையில் பிடிபடுகிறது அருமையல்ல, ஞானமுள்ள மச்சம் என்கிற மனு இனம் எல்லாம்: சாஸ்திர வித்தியாப்பியாசத்தில் கதித்தவர்களும், வரிசை மாணிபங்களில் ஈஸ்பரர் ஐசுவரியர்களும், இராசபிரதானி பிரபு முதலான சமஸ்தரும், தேவ வேதம் என்கிற வீச்சுவலையிலே உட்பட்டு வருகிறதே அதிசயமாம். ஆனதினால் நீங்கள் இனிமேல் இத்தொகைப்பட்ட தேவபிரசங்க வலைகளைக் கொண்டுபோய் உலோகம் என்கிற சமுத்திரத்திலே விரித்து மனுஷ ஆத்துமாக்களைக் கரைசேர்ப்பீர்கள் என்று அறிவித்தார். இந்தப்பிரகாரம் அவர்களும் தங்களுடைய சகல உலோக சுதந்தரங்களையும் அரோசித்து, ஆண்டவருடைய தருமத்தை அனுசரித்துப் பன்னிரண்டுபேரும் உலோக பதினெட்டுத்திக்கிலும் பிரசங்கிகளாய்ப் போய் எண் அடங்காத ஆத்துமாக்களைக் கரைசேர்த்ததினால் ஆண்டவருடைய வாக்கு நிறைவேறப்பட்டது. ஆனதினால் நாங்களும் அப்படிப்பட்ட தேவ வாக்கியத்தைக் கேட்டுத் திவ்விய பிரசாத வலையில் அகப்பட்டுப் பரகதிசேரப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீருடைய ஆணையினாலே எங்களுக்கு இவ்வுலக சீவியம் சமாதானத்துடன் கூடியதாயிருக்கவும் உமது திருச்சபை அமரிக்கையான பயபத்தியினால் உளங் களிக்கவும் கிருபை செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---



# இஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின் ஐஞ்சாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு அஞ்சாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: வேதபாரகர், பரிசேயர் இவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகப்பட்டிராவிட்டால் மோட்ச இராச்சியத்திற்குள் பிரவேசிக்கமாட்டீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். கொலை செய்யாதிருப்பாயாக, கொலை செய்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஆளாகிறானென்று முன்னோர்களுக்குச் சொல்லப்பட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களே. நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தன் சகோதரனைக் கோபிக்கிற எவனும் நியாயத்தீர்ப்புக்கு ஆளாவான். ஆனால் தன் சகோதரனை ராக்கா என்பவன் ஆலோசனைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவான்; பைத்தியனே என்பவன் நரக அக்கினிக்கு ஆளாவான். ஆதலால் நீ பீடத்தண்டையில் உன் காணிக்கையைச் செலுத்தும்பொழுது உன் சகோதரன் உன்மேல் ஏதோ மனத்தாங்கலாயிருக்கிறானென்று அங்கே நினைவுகூர்வாயாகில், உன் காணிக்கையை அங்கே பீடத்தின் முன்பாக வைத்துவிட்டு, முந்த உன் சகோதரனோடு உறவாடப்போ; பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாயாக என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது: உங்களுடைய சுகிர்தம் யூதருடைய சுகிர்தங்களிலும் அதிகம் பூரணமாகாமல் மோக்ஷம் அடையீர்கள் என்றதினால், யூதர் சர்வேசுரனுடைய பத்துக்கற்பனை செலுத்துகிற மேரை தேவசித்தத்துக்கு அனுகூலமாயிருக்கவில்லை என்று காண்பித்தார். அது ஏதெனில், யூதர் கிரிகையினால் செய்கிற தீங்குகள் மாத்திரம் பாவம் என்று நினைத்தது அல்லாதே சிந்தையால், வாக்கால் செய்கிற அக்கிருத்தியங்கள் பாவம் என்று எண்ணவில்லை. அப்படியே கொலைசெய்யாதே என்ற கற்பனைக்கு யாதொருதனை வதையாதிருக்கிறதல்லாதே வன்மிக்கிலும் நிந்திக்கிலும் வேதவிரோதம் அல்ல என்பார்கள். ஆகையால் இதுவும் பாவமாயிருக்கும் என்று காண்பித்தார். அது ஏதென்றால், சிந்தையால் குரோதம் உன்னுகிறது, சிந்தையால் செய்த கொலையாம். வாக்கால் தூஷணிக்கிறது, வாக்கால் செய்த கொலையாம். கிரிகையால் சீவனைக் கெடுக்கிறது, கிரிகையால் செய்த கொலையாம். சகல அக்கிருத்தியங்களுக்கும் நடுவும் தீர்வையும் ஆக்கினையும் உண்டாயிருக்கும் என்று காண்பித்தார்.

Nallur Swami Gnanapragasar Library
OBLATE FATHERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவிதமாய் முதலாம் கற்பனையில் அந்நிய தேவனை ஆசரியாதே என்றதினால், மறு தேவாதிகளை வணங்குகிறது மாத்திரம் பாவம் அல்ல. அவர்களுடைய கோவில் ஆலய, சுரூப சோடினை முதலான விக்கிரக ஆராதனை பண்ணுகிறதும், பண்ணுவிக்கிறதும், ஆதரிக்கிறதும் பாவமாம். மந்திர எந்திரம், சூனிய வினையம், குறி சாஸ்திரம் இத்தொகைப்பட்ட ஆசார உபசாரம் எல்லாம் பாவம் என்று அறியவும். இரண்டாங் கற்பனையில் தேவநாமத்தை உத்தேசித்துப் பொய்ச் சத்தியம் இடாதே என்பதற்குச் சர்வேசுரனை உத்தேசிக்கிறது மாத்திரம் ஆணை அல்ல. மாதா, பிதாவையும் வானம் பூமியையும், தனது ஆத்தும சரீரத்தையும், சுரூபம் சிலுவை முதலான சர்வேசுரனுக்கு அடையாளமானதையும்கொண்டு பொய்ச் சத்தியம் உச்சரித்தலும், மெய்ச்சத்தியம் வியர்த்தமாய்ச் சொல்லுதலும் பாவமாம். இப்படியே ஆம் அல்ல என்றமொழி அல்லாதே இதில் மேற்பட்ட வாக்கெல்லாம் அநர்த்தம் என்று அறிவித்தார். ஆறும் கற்பனையில் பிறதார அனுபோகம் செய்யாதே என்பதற்குப் பரஸ்திரி சங்கம் மாத்திரம் விலக்கினது அல்ல. சிற்றின்ப ஆசையால் எந்த ஸ்திரீ முகம் நோக்கினாலும் சாதுரிய வாக்கு உரைக்கிலும் அங்கம் பிரத்தியங்கம் சௌந்தரிய சேஷ்டை காட்டுகிலும் காண்கிலும் இதுக்குச் சம்பந்தமான மருவுதல் மினவுதல் முதலான யாதொரு காமச்சன்னை செய்யினும் பாவமாம். இப்படியே மற்றக் கற்பனைகளுக்கும் எதிரான வாக்கு, கிரிகை, சிந்தை, சயிக்கினை எல்லாம் பாவம் என்று அறிவித்தார்.

ஆனதினால் நீ காணிக்கை வைக்கிறபோது யாதொருத்தனோடே விரோதித்திருந்தால் முன் சமாதானமாய்ப் போய்ப் பின் காணிக்கை வைப்பாய் என்ற வாக்கியத்தால், மனசுகளிலே யாதொரு விரோத சிந்தனை மோக சிந்தனை வஞ்சகம், கபடு முதலான யாதொரு அவக்குண சிந்தை ஆசை உண்டாயிருக்கப் பூசை காணிக்கை பண்ணுகில் சர்வேசுரனுடைய சித்தத்துக்குப் பிரீதியான ஆராதனையாயிராதென்று காண்பித்தார். ஆனதினால் அப்படிப்பட்ட அலகட மனதோடு பாபோச்சாரணம் பண்ணுகிலும் பாவ நிவாரணம் ஆகாது. சற்பிரசாதம் கொள்ளுகிலும் சாவல்லாதே பிரசாத சீவியம் உண்டாயிராது. வேறே தருமத்தோடே கூடிய கிரிகைகள் ஏது செய்கிலும் மோக்ஷ பெறுபேறாயிராது. ஆனதினால் இப்படிப்பட்ட அவகுண சித்தத்தோடு தேவ கிருத்தியங்களைச் செய்யக்கடவதல்ல என்று அறியவும். யூதர் இத்தன்மையான நீதிநெறியை அறியாமல் சர்வேசுரனுடைய கற்பனைகளைச் செலுத்துகிறோம் என்று



விறுபாராட்டித் திரிந்ததினால் அவர்களுடைய சுகிர்தம் சர்வேசுரனுக்கு உவப்பாயிருக்கவில்லை என்றும், அதினால் கிறீஸ்தவர்கள் அவர்களிலும் அதிக பயபத்தி நெறியோடு தேவகற்பனை செலுத்தவேணும் என்றும் ஆண்டவர் அறிவித்த அபிப்பிராயமாம். அப்படிப்பட்ட தேவ அபிப்பிராயத்தை நாங்கள் அறிந்து சிந்தனையினாலும், வாக்கினாலும், கிரிகையினாலும் முழு மனப் பத்தியோடு சர்வேசுரனுடைய கற்பனை செலுத்தி மோக்ஷ பெறுபேறு அடையவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

தேவரீரை நேசிக்கிறவர்களுக்குக் கண் காணாத சம்பாவனைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறவரான சருவேசுரா, அடியோர் உம்மைச் சகலத்திலேயும், சகலத்திலும் மேலாகவும் நேசித்து எங்கள் சகல ஆசைகளையும் மேலிட்டவைகளான உமது வாக்குத்தத்தங்களை நாங்கள் அடைந்துகொள்ளத்தக்கதாக உமது அன்பின் பற்றுதலை எங்கள் இருதயங்களிற் பொழிந்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணசாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்
## ஆறும் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்.

---

சுவிசேஷக மாற்கு எட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே மறுபடியும் திரளான ஜனங்கள் கூடி வந்திருக்கையில், சாப்பிடுவதற்கு அவர்களிடத்தில் ஒன்றுமில்லாதபோது, யேசுநாதர் தம்முடைய சீஷர்களை அழைத்து அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: இந்த ஜனங்களின்மேல் இரக்கமாயிருக்கிறேன். ஏனெனில் இதோ, இவர்கள் மூன்று நாளாய் என்னிடத்தில் தங்கி, உண்பதற்கு ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களைப் பட்டினியாய் வீட்டுக்கு அனுப்பிவிட்டால், வழியில் சோர்ந்துபோவார்கள். ஏனெனில், இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்திருக்கிறார்கள் என்றார். அதற்கு அவருடைய சீஷர்கள் மறுமொழியாக: வனாந்தரமான இவ்விடத்திலே ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து அவர்களைத் திருப்தியாக்கக்கூடும் என்றார்கள். மீளவும் அவர்: உங்கள் வசத்தில் எத்தனை அப்பங்கள் உண்டென்று அவர்களைக் கேட்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் : ஏழு என்றார்கள். அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தியமரக் கட்டளையிட்டு, அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து நன்றியறிந்த தோத்திரஞ் சொல்லி, அவைகளைப் பிட்டுப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள். சில சிறு மச்சங்களும் அவர்களிடத்தில் இருந்தன. அவைகளையும் அவர் ஆசீர்வதித்து, பரிமாறக் கட்டளையிட்டார். ஜனங்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மேலும் மீதியான துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள். சாப்பிட்டவர்கள் ஏறக்குறைய நாலாயிரம் பேராயிருந்தார்கள். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது : நாலாயிரஞ் சனங்கள் வழி உபகரண ஓசீவனம் இன்றி ஆண்டவருடைய சந்நிதானத்திலே பிரசங்கம் கேட்க வந்தார்கள் என்றதினால், அந்தச் சனங்களுடைய பத்தி விசுவாசத்தின் மகிமை காண்பித்திருக்குது. அது ஏதெனில், தங்கள் இல்லிடங்களைவிட்டுத் தங்களுடைய அலுவல்களை அசட்டைபண்ணித் தங்களுடைய பசி, தாக, உபத்திரியத்தையும் ஒன்றும் கவனியாமல் ஆண்டவரை நம்பி அவருடைய திருவாக்கின் உருசியை மாத்திரம் அனுபவித்து அவர் கூட இருந்ததினால் தங்களுடைய நம்பிக்கை பத்தியின் இலக்ஷணமேமரை காணச்செய்தார்கள். அத்தைக்கண்டு நாங்கள் சரீரசுகத்திலும் ஆத்தும சுகத்தை உச்சிதமாய் எண்ணித் தேவதிருவுளத்தைக் கேட்கவும், செலுத்தவும், உலோக துரித உபத்திரியங்களை எண்ணாமலிருக்கவேணும் என்ற படிப்பினையாம்.

இதல்லாமல் மூன்றுநாள் ஆண்டவர் அண்டையில் இருந்தார்கள் என்றதினால் அவருடைய தெய்வீக திறித்துவத்தின் இரகசியத்தை அனுசரித்த இலக்ஷணத்தைக் காண்பித்தார். ஆண்டவர் அவர்களை ஓசீவனமின்றியே அனுப்பினால் வழியிலே மூர்ச்சையாய் விழுவார்கள் என்று திருவுளம்பற்றின விபரம் ஏதென்றால், சற்பிரசாதம் என்கிற ஓசீவனம் இன்றியும், தேவ அனுக்கிரகப் பெலன் இன்றியும் தருமவழியிலே நடக்கிறவன் வசக்கேடாய்ப் பாவத்திலே விழுவான் என்று காண்பித்தார். அவர்களில் சிலர் தூரயில் நின்று வந்தார்கள் என்ற அபிப்பிராயம் ஏதென்றால், பாவத்தால் தேவசமுகத்துக்குப் புறத்திப்பட்டவர்கள், தூரயிலிருக்கிறார்கள் என்று சொல்லப்படும். அப்படிப்பட்டவர்கள் ஆக்கினை அதிசயம் முதலான யாதொரு காரண காட்சியால் தருமவழியில் திரும்புகிறபோது, அவர்களுக்கு அதிக தேவப்பிரசாத சற்காரங் கிடையாவிட்டால் அதி சீக்கிரமாய்ப் பாவத்திலே விழுவார்கள் என்ற விபரமாம்.



ஆண்டவர் ஏழு அப்பத்தையும் சில்வான மச்சத்தையுங் கொண்டு நாலாயிரம் சனங்களைச் சம்பூரணமாக்கின விபரம் ஏதென்றால், தலையான பாவங்களுக்கு எதிரான ஏழு சுகிர்தங்களும் ஏழு அப்பங்கள் என்று சொல்லப்படும். அதாவது, தாழ்ச்சி, தியாகம், விரத்தத்துவம், சாந்துவம், மரியாதை, தயாபரம், சுறுசுறுப்பு என்கிற இந்த ஏழு சுகிர்தங்களாம். மச்சமோ என்றால், அதற்கடுத்த தரும நெறிகளாம். அப்படியே அந்த ஏழு அப்பத்தினால் நாலாயிரம் சனங்கள் சம்பூரணமானதுபோல, ஞான அப்பம் என்கிற இந்த ஏழுவித போசனங்களால், அல்லது ஏழு பரம அவுஷதங்களால் ஆத்துமத்தின் மூலிகை வியாதி என்கிற ஏழு தலையான பாவங்களைப் போக்கிச் சமஸ்தரும் பிரசாத சீவியத்தை அடைந்து ஈடேறுவார்கள் என்று அறியவும்.

இதல்லாமல் ஏழு அப்பத்தின் மிச்சத்தினாலே ஏழுகூடை நிறைந்ததுபோல, ஒவ்வொரு சுகிர்த பிரசாதத்தினாலும், அநேகம் தருமம் வர்த்திக்கும் என்ற அர்த்தமாம். ஆகையாய் இப்படிப்பட்ட திவ்விய அப்பம் என்கிற சுகிர்த பிரசாதங்களை நாங்களும் அனுபவித்து நீடூழிகாலம் சீவித்திருக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ பராக்கிரம தேவனே, உத்தமமானது சகலதும் உமது கொடையாமே. ஆதலால் தேவரீரே எங்கள் நெஞ்சுகளிலே உமது திருநாமத்தின் பேரில் அன்பை மூட்டி எங்களிடத்தில் வேதபத்தி அதிகரிக்கச் செய்வதுமல்லாமல் நன்மையானவைகளை வளர்த்து, வளர்த்த நன்மைகளை உமது தெய்வீக கருணையால் காத்து நடப்பித்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்
## ஏழாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு ஏழாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது : ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்திலே பறிக்கிற ஓநாய்களாய் உங்களிடத்தில் வருகிற கள்ளத் தீர்க்கதரிசிகள் மட்டில் எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுடைய கனிகளைக்கொண்டே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சப் பழங்களையாவது, முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையாவது பறிப்பாருண்டோ? அவ்வாறே நல்ல மரமெல்லாம நல்ல கனிகளைக் கொடுக்கும். கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது, கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஆதலால் அவர்களுடைய கனிகளைக் கொண்டே அவர்களை அறிவீர்கள். என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிறவர்கள் எல்லாரும் மோட்ச இராச்சியத்திற்குள் பிரவேசிப்பதில்லை. ஆனால் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவனே மோட்ச இராச்சியத்தில் பிரவேசிப்பான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷம் ஏதென்றால்: கள்ளத் தீர்க்கதரிசியாவது, பொய்மதங்களைப் போதிக்கிற அந்நிய வேதாந்திகளும், அபகட போதகங்களைப் போதிக்கும் கோட்காரரும், தங்கள் அக்கிருத்தியத்தால் மற்றவர்களைப் பாவத்திலே விழுத்துகிற சங்கதோஷவாதிகளும் ஆகிய இவர்கள் பொய்யாங்க தெரிசிகள் என்றும் கள்ள ஞானி தேசிகர் என்றும் சொல்லப்படும். இப்படிப்பட்டவர்கள் ஓநாய்களுடைய கொடிய நெஞ்சுடையவர்களாயிருப்பார்கள் என்றது ஏதென்றால், ஓநாய் தனது குரூர வாயால் செந்துக்களை வதைக்கிறதுபோல இவர்கள் தங்கள் வாக்கினால் மனுஷ ஆத்துமாக்களை நாசம்பண்ணி நரக சாவுக்கு ஏதுவாக்குவார்கள். ஆனால் தங்களுடைய அதி மூர்க்க குணத்தை உலோகர் கண்டு அறியாதபடிக்குச் சாதுரிய கிரந்தச்சொல், அரிய பழமொழி திருஷ்டாந்தம் முதலான நாகரீக வாக்கியங்களினாலே சுகிர்தங்களுடைய மகிமையை வருணித்துத் தரும சாந்துவமான கோலத்தைக் காண்பிக்கிறதினால் செம்மறி வேஷத்தைக் கொண்டுவருவார்கள் என்றதற்கு விபரமாம். அப்படிப்பட்ட வேஷம் அபகட சிறப்பென்று கண்டுபிடிக்கத்தக்கதாக ஆண்டவர் திருவுளம்பற்றின உவமையின் பொருளாவது: நல் விருக்ஷம் நற்பழம் அல்லாது துர்ப்பழம் கொடாததுபோல அப்படியே அவர்கள் தருமிஷ்டர் சாதுவரானால் தருமக்கிரியை செய்வார்கள். ஆனால் அவர்கள் அப்படியே செய்யாமல் மரம் என்கிற தங்களுடைய மனசுகளில் இருக்கிற பாவம் என்கிற விஷத்தைக் காண்பிக்கத்தக்கதாகப் பொன் வாஞ்சை, பெண் வாஞ்சை, செகசுக வாஞ்சை என்கிற துர்க்கந்த புட்பங்களால் மலர்ந்து, அடாத்தியம், மோகம், ஒய்யாரம் என்கிற நச்சுக் காயைக் காய்க்கிறதினால் அப்படிப்பட்ட பழங்களால் அவர்கள்



எப்படிப்பட்ட ஆத்துமாக்களோ என்று காணலாயிருக்கும். அப்படியே நாங்கள் அவர்களை அறிந்துகொண்டு அவர்களுடைய வஞ்சக வாக்கால் ஏய்க்கப்பட்டு நரகம் என்கிற அதி கொடிய ஓநாய் வாயிலே விழாதபடிக்கு அவர்களை விலகி அவர்கள் போலச் சர்வேசுரனுக்கு இஞ்சிறை ஸ்துத்தியம் சொல்லாமலும், எங்கள் ஆத்துமம் வெறுந்தழை தழைக்கிற மரமாயிராமலும், நல் எண்ணம் என்கிற சுகந்த புட்பங்களால் புட்பித்து நற்கிருத்தியம் என்கிற முந்திரிகைக் குலையாய் எங்கள் நடபடி கனித்து அப்படிப்பட்ட முந்திரிகை இரசம் என்கிற மோக்ஷ மதுர பானம் அனுபவிக்கப் போகவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா தேவரீருடைய பராமரிப்பானது சகலத்தையும் தவறில்லாமல் ஒழுங்குபடுத்துவதாமே. அடியோருக்கும் யாதொரு தீங்கும் வராமற் காத்துச் சகலமும் எங்களுக்கு நன்மையாய் வரச்செய்தருளவேணுமென்று அத்தியந்த விநயத்தோடு உம்மை மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துநாதர்தாமே காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்
## எட்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பதினாறாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக் காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம் பற்றினதாவது: ஐசுவரியவானாகிய ஒரு மனிதனுக்கு ஒரு காரியஸ்தனிருந்தான். அவன் தன் எஜமானுடைய ஆஸ்தியைச் சிதறடித்ததாக எஜமானிடத்தில் அவனைக் குறித்து அவதூறு சொல்லப்பட்டது. ஆகையால் எஜமான் அவனை வரவழைத்து, அவனை நோக்கி: உன்னைக் குறித்து இப்படி நான் கேள்விப்படுகிறதென்ன? உன் விசாரிப்பின் கணக்கை யொப்புவி; நீ இனி என் காரியஸ்தனாயிருக்கக்கூடாது என்றான். காரியஸ்தன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: நான் என்ன செய்வேன்? என் எஜமான் விசாரணை வேலையினின்று என்னை நீக்குகிறானே. மண் வெட்டவும் எனக்குச் சக்தியில்லை, பிச்சையெடுக்கவும் வெட்கமாயிருக்கிறது. ஆகையால் நான் காரியஸ்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையினின்று தள்ளப்படும்போது, சிலர் என்னைத் தங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளும்படி நான் செய்யவேண்டியது இன்னதென்று அறிவேன் என்று சொல்லிக்கொண்டு, தன் எஜமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவனாக வரவழைத்து, முதலாவது வந்தவனைப் பார்த்து: நீ என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்க, அவன்: நூறு குடம் எண்ணெய் என்றான். அப்பொழுது அவன்: நீ உன் சீட்டை வாங்கி, உடனே உட்கார்ந்து, ஐம்பதென எழுது என்றான், அப்பால் அவன் வேறொருவனை நோக்கி: உன் கடன் எவ்வளவு என, அவன்: நூறு கோரளவு கோதுமை என்றான். அதற்குக் காரியஸ்தன்: நீ உன் சீட்டை வாங்கி, எண்பதென எழுது என்றான். அந்த அநீத காரியஸ்தன் விவேகமாய்ச் செய்துகொண்டதைப்பற்றி, எஜமான் அவனை மெச்சிக்கொண்டான். ஏனெனில், இப்பிரபஞ்சத்தின் மக்கள் ஒளியின் மக்களிலும் தங்கள் சந்ததியிலே அதிக விவேகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் மரணமடையும்போது நித்திய கூடாரங்களில் உங்களை ஏற்றுக்கொள்ளும்படிக்கு அந்தப் பொருட்களைக்கொண்டு உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதித்துக்கொள்ளுங்கள் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயம் ஏதென்றால், திரவியக்காரன் என்பது சர்வாதி இரக்ஷ பராபரனும், அவருடைய பொக்ஷத்தைப் பராமரிக்கிற காரியக்காரனாவது: மனுஷனும். அது ஏதென்றால், மனுஷனுக்கு உண்டாயிருக்கிற புத்தி, விமரிசை, சரீரசவுந்தரியம் முதலான நற்குண இலட்சண நன்மைகளைச் சர்வேசுரன் செனனத்திலே அவனவனுக்குக் கொடுத்தபடியால் அது சர்வேசுரனுடைய சம்பத்து என்று சொல்லப்படும். இதல்லாமல் அவனவன் பூமியில் கண்ட தானிய பலன்களைச் சர்வேசுரன் வானத்தின் உபகரணத்தினால் வர்த்தித்து உண்டாகப்பண்ணுகிறதினாலும் வியாபாரம் முதலான தொழில்களால் சம்பாதித்த தனத்தைச் சர்வேசுரன் கொடுத்த விமரிசை சாமர்த்தியத்தால் அடைந்ததினாலும் இவையும் சர்வேசுரனுடைய உடைமை என்று சொல்லப்படும். அப்படியே அவர் கொடுத்ததை நாங்கள் ஆண்டு அனுபவித்திருக்கிறதினால் அவருடைய உக்கிராணக்காரர், பராபத்தியகாரர், காரியக்காரராயிருக்கிறோம் என்று அறியவும். ஆனதினால் அப்படிப்பட்ட சம்பத்தை அவருடைய சித்தத்துக்கு அனுகூலமாம்படியே பிச்சைதானம், தெக்ஷணை தானம், தேவாலய சேவை முதலான சுகிர்த தருமங்களுக்குச் செலவழிக்க நியாயமாயிருக்கச் செய்தே, அப்படிச் செய்யாமல் எங்கள் இச்சையின்படி வீறு அலங்காரம், தூர்த்த சஞ்சாரம், கலியாண களியாட்டம் முதலான வியர்த்த ஆட்டங்களுக்குச் செலவழித்தால் சர்வேசுரனுடைய திரவியம் அழித்ததென்று சொல்லப்படும். ஆனதினால் பராபத்தியக்காரன் தன்னுடைய உத்தியோகத்தை எசமான் மாற்றின உடனேஎன்னசெய்வேன் என்றும் பூமியைக் கிண்டித் தெண்டிக்கவும், பிச்சை இரக்கவும் மாட்டேன் என்றும் பரிதபித்தானே. அப்படியே எங்களையும் சர்வேசுரன் எங்களுடைய பொக்ஷப் பராமரிப்பை மாற்றுகிற நேரமாகிய இறுதிகாலமாகிறபோது மண் என்கிற சரீரத்தில் உபவாச ஒறுத்தலால் தெண்டிக்கவும் பிறத்தியாருடைய புண்ணியம் எங்களுக்குக் கேட்டு அடையவும் அவகாசம் இல்லை என்று அறியவும். ஆனதினால் உக்கிராணக்காரன் செய்த உபாயமாவது: தன் நாயனுடைய உடைமையைக் கடன்காரருக்கு முறைகேடாய்ப் பொறுத்துத் தன்னை ஆதரிக்க அன்பாளர், மித்திரர் ஆக்கினதைக்கண்டு நாங்கள் சர்வேசுரன் எங்களுக்குக் கொடுத்த சம்பத்தியை அநியாயமாய்ச் செலவழியாமல் அவருடைய சித்தத்தின்படியே தருமதானங்களுக்கு நியாயமாய்ச் செலவழித்து அப்படிப்பட்ட தருமம் என்கிற பிராண மித்திரர் தங்கள் இல்லிடம் என்கிற மோக்ஷ இராச்சியத்திலே எங்களைக் கையேற்றுக்கொள்ளத்தக்கதாகப் பிரயாசப்படக் கடவோம்.



## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, அடியோர்கள் எப்போதும் சரியானவைகளையே சிந்திக்கவும் நடப்பிக்கவும் தக்கதான நன் மனதை எங்களுக்குத் தயவாய்த் தந்தருளும். தேவரீராலன்றி உயிர்வாழ முடியாத நாங்கள் தேவரீராலேயே உமது சித்தத்தின்படி சீவிக்கிறவர்களாகக்கடவோம். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## ஒன்பதாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக லூக்கா பத்தொன்பதாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக் காலத்திலே யேசுநாதர் எருசலேம் நகரிக்குச் சமீபித்தமாத்திரத்தில் நகரத்தைப்பார்த்து, அதின்பேரில் கண்ணீர்விட்டு, வசனித்ததாவது: உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது உன் சமாதானத்துக்கு உரியவைகளை நீ அறிந்திருந்தாலல்லோ தாவீளை; ஆனால் இப்பொழுது அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. ஆகையால் உனக்கு ஒரு காலம் வரும்; அப்போது உன் சத்துராதிகள உன்னைச் சுற்றிலும் அகழிவெட்டி, உன்னைச் சூழ வளைந்து, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரைமட்டமாக்கி, உன்னிடத்தில் கல்லின்மேல் கல்நிற்கவிடார்கள். ஏனெனில், உன்னைச் சந்திக்க வந்த காலத்தை நீ அறியாமற் போனாய் என்றார். பின்பு அவர் தேவாலயத்தில் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையும் வாங்குகிறவர்களையும் வெளியே துரத்தத் தொடங்கி, என் வீடு ஜெப வீடு என்று எழுதியிருக்கிறதே; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார். மேலும் அவர் அநுதினமும் தேவாலயத்தில் போதித்துக்கொண்டிருந்தார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது: ஆண்டவர் எருசலேம் நகரியை நோக்கி, அது தனக்குச் சமாதானமானதை அறியவில்லை என்று வியாகுலமாய்த் திருவுளம்பற்றினது ஏனென்றால்: சமாதானமாவது, சுகிர்த நடக்கை என்று சொல்லத்தகும். அப்படிப்பட்ட நடபடி அந்த நகரியில் இல்லாமல் பாவம் மிகுந்திருக்குது என்று காண்பித்த மேரையாம்.

உன்னைச் சத்துராதிகள் வளைப்பார்கள் என்றதினால்: வெஸ்பசியானு, தீத்து என்கிற இராசாக்கள் எதிராளியாய் அந்த நகரியை அழிக்க வருவார்கள் என்று காண்பித்தார். உன்னையும் உன்னைச் சார்ந்த பிள்ளைகளையும் என்பது: அந்த நகரியிலுள்ள சனங்களையாம். நாலுதிக்கிலும் இறுகப்பிடித்து நெருக்குவார்கள் என்பது: தனதானிய ஜீவன சகாயம் வருகிற வழி எல்லாம் மறித்துப் பசி தாகத்தோடும், கஷ்ட சோபத்தோடும் சாகப்பண்ணுவார்கள் என்ற விபரமாம். இதல்லாமல் கல்லின் மேல் கல் இராமல் பண்ணுவார்கள் என்பது: கோட்டை, மதில், மாடமாளிகை, தேவாலயம் முதலான சகல சிறப்பு ஆரணிப்பும் அழிந்து இடிந்து வலசைவாங்கின வனாந்தரமேரை அல்லாதே நகரி நாடு என்கிற இலக்ஷணம் ஒன்றும் இல்லாமற் பண்ணுவார்கள் என்ற விபரமாம். இதெல்லாம் அறிவித்த காரணம் ஏதென்றால், யூதர் ஆண்டவரைப் பாடுபடுத்துகிற பாவத்தால் அந்த அனர்த்தம் எல்லாம் சம்பவிக்கிறதை ஏலவே அறிந்து, அப்படிப்பட்ட பாதகத்தைச் செய்ய அவர்கள் பயப்பட்டிருக்கும்படிக்கு அதை அறிவித்த அபிப்பிராயம் என்று அறியவும்.

ஆனால் இதிலே யூகிக்கிற ஞான அர்த்தமோ என்றால், எருசலேம் நகரியாவது: எங்கள் ஆத்துமமாம். அதிலே வசிக்கிற சனங்களாவது: மனசிலே இருக்கிற சுகிர்த சிந்தைகளாம். கோட்டை மாட மாளிகை அலங்காரமாவது: ஆத்துமத்தின் வரப்பிரசாத மகிமையாம். இவை எல்லாம் அழிக்க வருகிற



சத்துராதிகள்: பாவமும் பிசாசுமாம். இப்படியே வருகிற அழிவு எல்லாம் தேவகிருபை கிடைத்த நாளை அறியாததினால் சித்திக்கும் என்றதினால், தேவகிருபை நாள் என்பது: ஆண்டவர் அந்த நகரியில் எழுந்தருளி அற்புதங்கள் காண்பித்த நாளாம். இப்போது எங்கள் ஆத்துமத்திலே அவர் தமது அருட்பிரசாதமும், நல் எண்ணமும் ஊட்டுவிக்கிறவேளை தேவகிருபை கொடுக்கிறவேளை என்று சொல்லப்படும். அப்படிப்பட்ட பிரசாதத்தையும் எண்ணங்களையும் நாங்கள் அகற்றி அசட்டையாய்த் திரிகிறபோது பாவமும் அத்தோடே சகல தரும அழிவும் பிசாசுகள் செய்கிற ஆக்கினையும் சம்பவிக்கும் என்று அறியவும். ஆனதினால் அப்படிப்பட்ட அபிப்பிராயத்தை நாங்கள் அறிந்து சர்வேசுரனால் எங்களுக்கு யாதொரு நல் எண்ணம் தோற்றுகிற நேரம், அத்தை மகா பத்தியோடே யூடற விசாரித்து அதின்படியே தவறாமல் நடந்து எங்கள் ஆத்துமம் என்கிற நகரி, பாவத்தால் தரும அழிவாயிராமல் சுகிர்தத்தால் அலங்காரமான செருசலே நகரியுமாய்த் தேவாலய மந்திரமுமாய் இருக்கப்பண்ணி அதில் யூதர்பண்ணின வியாபாரம் என்கிற அவகட சிந்தனை, வாக்கு, கிரியை முதலான துராசாரம் இல்லாமல் மகா சுத்தத்தோடும் நித்திய செப தியானத்தோடும் ஆண்டவருடைய தெரிசனம் காணப் பிரயாசப்படக்கடவோம்

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, உம்மை யிரந்து மன்றாடுகிற அடியோர்களின் வேண்டுதலுக்குத் தயாபரமாய்ச் செவிசாய்த்தருளும். நாங்கள் ஆசிக்கிறவைகளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகத் தேவரீருக்கு உவப்பானவைகள் எவைகளோ அவைகளுக்காகவே மன்றாடச் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறிஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## பத்தாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக லூக்கா பதினெட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக் காலத்திலே தங்களை நீதிமான்களென்று நம்பி, ஆணவங்கொண்டு மற்றவர்களை அலட்சியம்பண்ணிவந்த சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைக்குறித்து அவர் பின்வரும் உவமையைச் சொன்னார். இரண்டு மனிதர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள். அவர்களில் ஒருவன் பரிசேயன்; மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்றுகொண்டு தனக்குள்ளே ஜெபித்ததாவது: சர்வேசுரா! நான் திருடர் அநீதர் விபசாரக்காரராகிய மற்ற மனிதரைப் போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததைப்பற்றி உமக்குத் தோத்திரஞ் செய்கிறேன். நான் வாரத்தில் இருமுறை ஒருசந்தி பிடிக்கிறேன்; எனக்குள்ள எல்லாவற்றிலும் பத்திலொரு பாகம் செலுத்துகிறேன் என்றான். ஆயக்காரனோ தூரத்தில் நின்று, தன் கண்களை முதலாய் வானத்தை நோக்கி உயர்த்தத் துணியாமல், தன் மார்பில் அறைந்துகொண்டு: சர்வேசுரா! பாவியாகிய என்பேரில் கிருபையாயிரும் என்று ஜெபித்தான். இவனே அவனைவிட நீதிமானாகித் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் தன்னை உயர்த்துகிற எவனும் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது: இருவர் செபம்பண்ணப் போனார்கள் என்றதினால், இருவித செபம்பண்ணுகிற மேரை காண்பித்திருக்குது. அதாவது: பரிசேய நாணயக்காரன் கெம்பீரத்துக்கு அடையாளமாய்த் தாழ்ச்சி இன்றியே செபம்பண்ணின மேரையும், ஆயக்காரன் பதமைக்கு இலக்ஷணமாய்த் தாழ்ச்சியோடே செபம்பண்ணின விதமும் காணலாகும். அது எப்படி என்றால், பரிசேயன் உலோகர் கண்ணுக்கு இலக்காய் எல்லோருக்கும் முன் பீடத்தின் சமீபமாகச் சற்றும் படியாமல் நின்று தன்னுடைய உபவாச ஒறுத்தலின் மகிமையையும், தெட்சணை தானம் கொடுத்த நெறிகளையும் பாராட்டி, மற்றவர்களை நிந்தித்தது அல்லாதே செபத்திலே கேட்டது ஒன்றும் இல்லை. ஆகையால் அவனுடைய பிரார்த்தனை வீண் பிரார்த்தனையாய்ப் பாராட்டின புண்ணியங்களும் வியர்த்த புண்ணியங்களாய் நரகத்திலே விழப் பாத்திரமானான் என்று காண்பித்தார். ஆயக்காரனோ என்றால் தன்னுடைய பாவத்தின் மிகுதியை நினைந்து மனுஷர் சமுகத்துக்கு எதிராக இருக்கவும், வானத்தை நோக்கவும் தான் பாத்திரவான் அல்ல என்று எல்லோருக்கும் பிறகே, தரைமட்டாகத் தலைகுனிந்திருந்து, தன்னுடைய பாவத்தைப் பொறுக்கவேணுமென்று மன்றாடினான். அதினால் அவனுடைய மன்றாட்டம் சீக்கிரமாய்ச் சர்வேசுரனுடைய சந்நிதியில் ஏறி அவன் மோக்ஷ பெறுபேறு அடைந்தான் என்று காண்பித்தார். அப்படியே நாங்கள் ஆங்காரியான பரிசேயன்போல மற்றவர்களை நிந்தியாமல், தான் தான் எல்லாரிலும் அதிக பாவவாளன் என்று அவதானித்துப் புண்ணியஞ் செய்கிலும் அதைச் சர்வேசுரனுடைய அனுக்கிரகத்தால் செய்யப்படுகிற



தினால் எங்கள் வல்லப, மகிமைகளைப் பாராட்டாமல் எங்கள் சுகிர்தம் என்கிற விதையைத் தாழ்ச்சி என்னும் தாழ்விலே புதைத்துப் பெறுபேறு என்கிற தரும விருக்ஷமாய் வளர்த்து, மோக்ஷம் என்கிற மதுர பழத்தைக் காணவேணும் என்று அறியக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் பொறுப்பதிலேயும் இரங்குவதிலேயுமே விசேஷமாய் உமது சர்வ வல்லமையைக் காட்டியருளுகிறீரே. நாங்கள் தேவரீருடைய வாக்குத்தத்தங்களை நாடித் தேடி உமது பரலோக நன்மைகளிற் பங்குள்ளவர்களாகும்படிக்கு எங்கள் பேரில் உமது இரக்கத்தை மேலும் மேலும் பொழிந்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக் கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## பதினோராம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மாற்கு ஏழாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக் காலத்திலே யேசுநாதர் தீரின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, சீதோன் வழியாகத் தெக்கப்போலி நாட்டின் எல்லைகளின் நடுவே கலிலேயாக் கடலருகே வந்தார். அங்கே ஊமையனும், செவிடனுமான ஒருவனை அவர் சமுகத்தில் கொண்டுவந்து: அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படி அவரை மன்றாடினார்கள். அவர் ஜனக்கூட்டத்திலிருந்து அவனைத் தனியே அழைத்துக்கொண்டுபோய், அவனுடைய செவிகளுக்குள் தமது விரல்களையும் வைத்து, உமிழ்ந்து அவன் நாவையும் தொட்டு, வானத்தை அண்ணார்ந்து பார்த்து, பெருமூச்செறிந்து: எப்பெத்தா என்று அவனுக்குச் சொன்னார். அதற்குத் திறக்கப்படு என்றர்த்தமாம். அக்ஷணமே அவனுடைய செவிகளும் திறக்கப்பட்டு, அவன் நாவின் கட்டும் அவிழ்ந்துபோக, அவன் செவ்வையாய்ப் பேசினான். இதை எவனுக்கும் சொல்லாதபடி அவர்களுக்குக் கட்டளையிட்டார். ஆயினும் அவர் எவ்வளவு அதிகமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப் பிரசித்தம்பண்ணி: இவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார்: செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் செய்தாரென்று சொல்லி மேன்மேலும் அதிசயப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச சொல்லப்பட்ட வாக்கியத்தின் உற்பனம் ஏதென்றால், ஊமையும், செவிடுமான மனுஷனாவது : வாய், செவி என்கிற இரு இந்திரியங்களிலும் அதிக பாவம் மிகுந்த மனுஷனாம். அது ஏதெனில், ஆவலாதிச் சொல், இஞ்சிறைச் சொல், நிந்தைச் சொல், உதாசனம், தூர்ச்சனம் முதலான பிரகட, அவகட விகடச் சொல் உரைத்தலுக்கு அதிக வாய்ச்சால்கனாயிருக்கிறவன், தேவஸ்துத்தியம், வணக்கம், உபாசித்தல், உபதேசித்தல் முதலான ஆத்தும பிரயோசனமான வாக்கு ஒன்றும் வசனிக்கலாயிருக்கமாட்டான். யாதொருதன் உரைக்கிலும் கேட்க விருப்பம் இல்லாமலிருப்பான். ஆனதினால் அப்படிப்பட்டவன் கேள்வியும், வாக்கும் வெகுவாய்த் திறந்திருந்தாலும் மூகை, செவிடன் என்று ஞான அர்த்தமாய் யோசிக்கிற ஞாயம் என்று அறியவும்.

ஆனால் அப்படிப்பட்ட அங்கவீனனைச் சுகமாக்க, ஆண்டவர் அவனைச் சனக்கூட்டத்திலிருந்து புறம்பாய் எடுத்த காரணம் ஏதென்றால், சமுசாரக் கவலை மனுச்சஞ்சாரம் முதலான உலோக சஞ்சரிப்போடிருந்துகொண்டு சர்வேசுரனுடைய வாக்கைச் சாவதானமாய்க் கேட்கவும், அவதானமாய்ச் செலுத்தவும் கூடாது என்றும், அதினால், ஏகாந்தமாயிருந்து அதின பலனை அடையவேணும் என்றும் படிப்பித்தார். இதல்லாமல் செவிடன் செவியில் திருவிரல் விடவும், அவன் நாவில் உமிழ்நீர் தடவவும் காரணம் ஏதென்றால், ஆண்டவருடைய தேவ சுபாவத்திலே இருக்கிற வலிமை அவரது மனுச் சரீர அவயவங்களிலேயும் உண்டாயிருக்கும் என்று உலோகத்துக்கு அறிவிக்கத்தக்கதாக, அப்படியே செய்த காரணம் என்று அறியவும். அது ஏதெனில், அவருடைய திருக்கரமாவது சகல உலோகமும் உண்டாக்கின பெலனையும் சகலத்தையும் இரக்ஷிக்கிற உதார கிருபையையும் காண்பிக்கிற அடையாளமாம். உமிழ்நீரோ எனில், பரம ஞானத்துக்கு இலக்ஷணமாம். அப்படிப்பட்ட வரங்களை அந்த அங்கவீனனுடைய நாவுக்கும் செவிக்கும் கொடுத்து வளமாய்க் கேட்கவும் திறமாய்ப் பேசவும் பண்ணின மேரை காண்பிக்கச் செய்தார். அப்படியே இந்த மூவித மேரையாகிய ஏகாந்த வாசத்தாலும் ஞானத்தாலும் பிரசாத பெலத்தாலும் எங்கள் ஆத்துமத்தினுடைய தரும ஈனங்களைப் போக்கி, ஞான ஆரோக்கியம் அடையவேணும் என்று அறியவும்.

ஈற்றிலே ஆண்டவர் தாம் செய்த புதுமையைப் பாசியும் பண்ணவேண்டாம் என்று கற்பிக்க அவர்கள் அதிக பிரசங்கமாகத் துதித்துப் பிரசித்தமாக்கின காரணம் ஏதென்றால்,



சர்வேசுரன் எங்களுக்குக் கொடுக்கிற வரப்பிரசாதங்களை நாங்கள் அடக்கமாய் வைக்கிறபோது அவர் அவைகளை அதிக மகிமையோடு உயர்த்துவார் என்ற அபிப்பிராயமாம். இந்தப் பிரகாரம் அந்த மூகன்பேரில் பண்ணின அற்புதம் எங்களுக்குப் போதித்த ஞானபோதகம் என்று அறிந்து எங்கள் வாக்கு, செவி என்கிற இரு வாசல்களாலும் சகலமான பாவங்கள் வருகிறதினால் அதற்கு அவதானம் என்கிற கதவு வைத்துத் தேவகற்பனை என்கிற பூட்டு உண்டாக்கி, அதை உலோக அர்த்தங்களுக்கு அடைக்கவும், பரலோக அர்த்தங்களுக்குத் திறக்கவும் செய்து இந்த மேரையாய் நடந்து ஆத்துமத்தில் சகல ஈன ஊனங்கள் போக்கி ஞான ஆரோக்கியம் அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லவரும் நித்தியருமாகிய சருவேசுரா, தேவரீர் உம்மை மன்றாடுகிறவர்களுடைய பெறுபேறுகளுக்கும் விண்ணப்பங்களுக்கும் மேற்பட்டவிதமாய்த் தயாபர இரக்கம்பண்ணுகிறவராமே. அடியோர்களுடைய பாவக்குறைகளையும் பொறுத்து, எங்கள் மன்றாட்டங்களில் நாங்கள் கேட்கத் துணியாதவைகளையுந் தந்து உமது இரக்கப் பெருக்கத்தை எங்கள்மேற் பொழிந்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## பன்னிரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பத்தாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்கள் பக்கமாய்த் திரும்பிச் சொன்னதாவது : நீங்கள் காண்கிறவைகளைக் காணும் கண்கள் பாக்கியம் பெற்றவைகள். ஏனெனில், அநேகம் தீர்க்கதரிசிகளும் இராசாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியிருந்தாலும், அவர்கள் காணவுமில்லை, கேட்கவுமில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது இதோ, நீதிசாஸ்திரியொருவன் எழுந்து, அவரைச் சோதிக்கத்தக்கதாக : போதகரே, நான் என்னத்தைச் செய்து, நித்திய சீவியத்தை அடைவேன் என்று கேட்க, அவர் அவனை நோக்கி :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதப் பிரமாணத்தில் எழுதப்பட்டிருக்கிறதென்ன? எவ்வாறு வாசிக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன் பிரத்தியுத்தாரமாக: உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமத்தோடும், உன் முழுத் தத்துவங்களோடும், உன் முழு மனதோடும் சிநேகிப்பாயாக; உன்னைப்போல உன் பிறனையும் சிநேகிப்பாயாக (என்று எழுதியிருக்கிறது) என்றான். அவர் அவனை நோக்கி: நீ சரியாய்ப் பதிலுரைத்தாய்; அப்படியே செய்; அப்போது பிழைப்பாய் என்றார். அவனோ, தன்னை நீதிமானென்று காண்பிக்க விரும்பி, யேசுநாதரைப்பார்த்து: என் பிறன் யார் என்று கேட்டான். யேசுநாதர் மறுமொழியாகத் திருவுளம்பற்றினதாவது: ஒரு மனிதன் ஜெருசலேமிலிருந்து ஜெரிக்கோ நகருக்கு இறங்கிப் போகையில், கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவனிடத்திலிருந்ததையெல்லாம் பறித்துக்கொண்டு, அவனைக் காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுப் போனார்கள். அத்தருணத்தில் ஆசாரியன் ஒருவன் அவ்வழியாய் வரும்படி நேர்ந்தது. ஆனாலும் அவனைக் கண்டு, அப்பாலே போய்விட்டான். அவ்விதமே, ஒரு லேவித்தனும் அவ்விடத்துக்குச் சமீபமாய் வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். ஆனால் வழிப்போக்கனான சமாரியன் ஒருவன் அவனருகே வந்து, அவனைக் கண்டு மனமிரங்கி கிட்ட அணுகி, எண்ணெயும் திராட்ச ரசமும் வார்த்து அவனுடைய காயங்களைக் கட்டி, அவனைத் தன் வாகனத்தின்மேல் ஏற்றி, ஒரு சத்திரத்தில் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான். மறுநாள் அவன் இரண்டு தெனியர் நாணயங்களை எடுத்துச் சத்திரக்காரனுக்குக் கொடுத்து: இவனை விசாரித்துக்கொள்; நீ அதிகமாய்ச் செலவழித்திருப்பதையெல்லாம் நான் திரும்பிவரும்போது, உனக்கு உத்தரிப்பேன் என்றான். ஆகையால் கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான் என்றார். அதற்கு அவன்: அவனுக்குத் தயை செய்தவனே என்றான். அப்போது யேசுநாதர் அவனை நோக்கி: நீயும் போய் அவ்விதமே செய் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே விசாரிக்கும் விசேஷமாவது: நீங்கள் காண்கிறதைக் காணப்பெற்ற கண்கள் பேறுபெற்றதுகள் என்று ஆண்டவர் திருவுளம்பற்றின விபரம் ஏதென்றால், சீஷர்களுக்குச் சர்வேசுரன் பரம இரகசியங்களை அறியத்தக்கதாகக் கொடுத்த அருட்பிரசாதம் என்கிற கண்களால் அவர்கள் மோக்ஷம் பெறுவார்கள் என்றும், அப்படிப்பட்ட பிரசாதங்கள் மற்ற உலோக பெரியோர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் காண்பித்தார்.

அப்போது யூதரில் வித்தியாபாரகன் ஒருவன் ஆண்டவரைச் சோதிக்கத்தக்கதாகப் பரகதி வழியைக் கேட்டது ஏனென்றால், அத்தால் ஆண்டவர் தம்மைத் தாம் வணங்கச் சொல்லுவாரோ அல்லது ஏக பராபரனை வணங்கச் சொல்லுவாரோ என்று பார்த்து யாதொரு குற்றத்தை அவர்மேல்



ஏற்றலாம் என்று கருதினான். ஆனால் ஆண்டவர் வேதத்தில் எழுதியிருக்கிற பிரகாரம் ஏதென்று அவனிடத்திலே கேட்டுச் சர்வேசுரனையும் தன் ஆத்தும சகோதரனையும் நேசிக்கவேணும் என்கிறதை அவன் வாக்கினாலேதானே சொல்லுவித்து அவனுடைய அவகட நோக்கத்தைத் தள்ளினார்.

ஆனால் அவன் மறுபடியும் தன் ஆத்தும சகோதரனாவது ஆர் என்று கேட்ட இடத்திலே அதுக்குக் கள்ளரால் வாதிக்கப்பட்ட வழிப்போக்கனுடைய உவமையைச் சொன்ன விபரம் ஏதென்றால், அப்படிப்பட்ட மனுஷன் வழியிலே விழுந்திருக்கிறதைப் பூசகனும், லேவித்தனும், சமாரித்தனும் என்கிற மூன்று பேர் கண்ட இடத்திலே இருவர் அவனைப் பராமரியாமல் போய்ச் சமாரித்தன்மாத்திரம் இரக்கமாய் அவனைத் தற்காத்ததினால் அந்தக் கிருத்தியத்தால் புறத்தியானைச் சகோதரமாய்ச் சிநேகிக்கிறமேரை காண்பிக்கத் திருவுளமானார். அது ஏதெனில், தன்னை நேசிக்குமாப்போலே, மற்றவனை நேசிக்கிறதிலே ஈரேழு புண்ணிய தான கிருத்தியங்கள் காணலாயிருக்கும். அது எல்லாம் சமாரித்தன் என்றவன் வாதைக்காரன்பேரில் காண்பித்தான் என்று அறியவும். அது எப்படி என்றால், முதல் கிருத்தியமாவது: பசித்தவனுக்கு அன்னதானம் கொடுப்பது. இரண்டாவது: தவித்தவனுக்குப் பானம் கொடுப்பது. மூன்றாவது: உடுகூறை அற்றவனுக்கு வஸ்திரதானம் கொடுப்பது என்று சொல்லியிருக்கிறதே. இந்தப் பிரகாரமாகச் சமாரித்தன் வாதைக்காரனைத் தன் கைச்செலவு கொடுத்து, அன்னபானம், வஸ்திரதானம் குறையில்லாமல் பராமரித்ததினால் அந்த மூவித தான கிருத்தியங்கள் செய்ததைக் காண்பித்தான். அதின் பின் அவனைத் தாபரத்திலே கொண்டுபோய் வைத்ததினால், தேசாந்திரிகளுக்கு விடுதி கொடுப்பது என்கிற நாலாம் கிருத்தியம் செய்தான். அவனுடைய வாதை வருத்தங்களைப் பரிகரித்ததினால், வியாதிக்காரரை ஆதரிப்பது என்கிற அஞ்சாம் கிருத்தியம் செய்தான். அவனுக்கு அதிகமாய்ச் செலவழித்த கடனைத் தீர்ப்பேன் என்றதினால், சிறைமீட்பது என்கிற ஆறாம் கிருத்தியம் செய்தான். அவன் சாகாமல் செத்தவனாய்க் கிடந்த இடத்திலே சுமந்து தாபரத்திலே வைத்ததினால், செத்தவர்களை நல்லடக்கம் பண்ணுவது என்கிற ஏழாம் கிருத்திய மேரை காண்பித்தான். இப்படியே சரீரத்துக்கடுத்த ஏழுவித புண்ணியம் செய்ததுந்தவிர ஆத்துமத்துக்கடுத்த புண்ணியங்களில் முதலாவது: அவனைக் கள்ளர் போகும் வழியால் விலக்கி நல்லிடம் சேர்த்ததினால், நல்யோசனை புத்தி போதிப்பது என்கிற கிருத்தியத்தைக் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தான். இரண்டாவது: அவன் காயத்தில் மருந்து மது தயிலமிட்டுப் பரிகரித்ததினால், அறியாதவனை வித்தை படிப்பிப்பது என்கிற கிருத்தியம் செய்தான். மூன்றாவது: அவனுடைய பரிதாபங்களை நீக்கினதினால், சலித்தவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறது என்கிற கிருத்தியத்தைச் செய்தான். நாலாவது: அவன் தன் பாவத்தால் கள்ளர் கையிலே அகப்பட்டு அனுபவித்த வாதைகள் தவிர, பரிகரிக்கிறதிலே தோற்றுவித்த வாதைகளால் குற்றவாளனைப் பராபத்தியம் பண்ணுவது என்கிற கிருத்தியத்தைச் செய்தான். ஐந்தாவது: தனது நாணயத்தைப் பாராமல் நிசிதனாய்க் கிடந்தவனை எடுத்ததினால், நிந்தை பொறுப்பது என்கிற கிருத்தியத்தைச் செய்தான். ஆறாவது: அவனுடைய வசக்கேடுகளுக்கு இரங்கினதினால், பெலவீனமாய்ச் செய்கிற குற்றங்களைப் பொறுப்பது என்கிற கிருத்தியத்தைச் செய்தான். ஏழாவது: அவனுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தாபரக்காரனை மன்றாடினதினால், சீவித்த மரித்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளவேணும் என்கிற கிருத்தியத்தைக் காண்பித்தான். இந்தவிதமாய் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் அடுத்த பதினாலு தானமய புண்ணிய கிருத்தியங்களை ஒரேயோர் கிரிகையால் காண்பித்ததினால் தன்னைத்தான் நேசிக்குமாப்போலே மற்றவர்களையும் ஆத்தும சகோதரராய் நேசித்திருக்கிற மேரை காண்பித்தான். அதினால் அப்படிப்பட்ட புறத்தியாருடைய நேச இலக்ஷணத்துக்கு ஆண்டவர் அவனை உதாரணமாய்க் காண்பித்த அபிப்பிராயம் என்று அறியவும்.

இந்தப்பிரகாரமாய் ஆண்டவர் அருளிச்செய்த இந்த உவமை அதிக பிரத்தியட்சமாய்க் காணவேணும் என்றால், அதற்கு எங்கள் சரீரத்திலேதானே ஒரு உவமை உண்டு. அதாவது: சரீரத்தின் யாதொரு அவயவத்திலே நோ இருக்கிறபோது மேல் எல்லாம் வாதை அனுபவித்து அப்படிப்பட்ட வாதையை நீக்குதல்பண்ணத் தக்கதாகத் தெண்டிக்கும். அப்படியே காலில் முள்ளுத் தைக்கில் தலை முதலான உறுப்புக்கள் தனக்குக் காரியம் இல்லை என்று அசட்டையாயிராமல் தலை புத்தியோடு முள் எடுக்கிற தந்திரம் விசாரிக்கவும், கண் முள்ளிருக்கிற இடம் சோதிக்கவும், கை அதை எடுக்கவும், மேல் எல்லாம் குனிந்து அதற்குச் சகாயங் கொடுக்கவும் இந்தப்படி சகல அவயவங்களும் அந்த நோவை நீக்கப் பிரயாசப்படுமே. இம்மருவாதியே நாங்கள் சமஸ்தரும் ஒரு மண்ணால் உண்டாக்கப்பட்டதினால் ஒரு சரீர அவயவங்கள் என்று நினைக்கக்கடவோம். இதல்லாமல் ஆத்துமத்துக்கு ஒரு அநாதிபிதா



வும் ஒரு வேதகுருவும் இருக்கிறதினால் எல்லாரும் ஆத்தும சகோதரர் என்றும் சரீர செனனத்துக்கும் ஒரு ஆதித்தாய் தந்தை இருக்கிறதினால், ஒக்கற் சகோதரர் என்றும், உலோகம் என்கிற ஒரு நந்தாவனத்தில் பலன் அனுபவிக்கிறதினால் சங்காத்திகள் என்றும் ஒரு பரகதி இராச்சியம் வகிக்கப்போகிறதினால் ஓர் ஊர்வாசிகள் என்றும், நினைத்து இப்படிப்பட்ட நினைவோடு சமஸ்தரும் அன்னியோன்னிய வார பக்ஷமாய் நேசித்துத் தேவநேசமும், பிறர்நேசமும் என்கிற இந்த இருவித அக்கினி இரதங்களால் பரகதியில் ஏறவேணும் என்று அறியக்கடவோம்.

### திருச்சபைச் செபம்

சர்வ வல்லவரும் நித்தியருமாகிய சருவேசுரா, தேவரீருடைய திருவருளினாலேதானே உம்முடைய விசுவாசிகள் உமக்கு ஏற்றவிதமாய் நல்லூழியஞ் செய்வோராவார்களே. அடியோரும் உம்முடைய வாக்குத்தத்தங்களை அடைந்துகொள்ளத் தக்கவிதமாய்ப் பிழைபாடில்லாமல் நடந்துவர எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## இஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின் பதின்மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

**சுவிசேஷக லூக்கா பதினேழாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—**அந்தக்காலத்திலே யேசுநாதர் எருசலேம் நகருக்குப் போகையில் சமாரியா, கலிலேயா நாடுகளின் நடுவே நடந்துகொண்டிருந்தார். அவர் ஓர் கிராமத்துக்குள் பிரவேசிக்கும்போது, குஷ்டரோகிகளாகிய பத்துப்பேர் அவருக்கு எதிராகவந்து, தூரத்தில் நின்று: யேசுவே, போதகரே! எங்கள்பேரில் இரக்கமாயிரும் என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்கள். அவர்களை அவர் கண்டவுடனே: நீங்கள் போய், உங்களை ஆசாரியருக்குக் காண்பியுங்கள் என்றார். அவர்கள் போகும்பொழுதே சொஸ்தமானார்கள். அவர்களிலே ஒருவன் தான் சொஸ்தமானதைக் கண்டு, உரத்த சத்தமாய்ச் சர்வேசுரனை ஸ்துதித்துக்கொண்டு திரும்பிவந்து, அவருடைய பாதங்களுக்கு முன்பாக முகங் குப்புற விழுந்து, அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொன்னான். அவன் சமாரியனாயிருந்தான். யேசுநாதர் மறுமொழியாக:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துப்பேரும் சொஸ்தமானார்களல்லோ? மற்ற ஒன்பது பேர் எங்கே? இந்த அந்நியன் ஒழிய வேறொருவனும் திரும்பிவந்து, சர்வேசுரனுக்கு ஸ்துதி செலுத்தக் காணோமே என்று சொல்லி, அவனை நோக்கி: நீ எழுந்துபோ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று திருவுளம் பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் உற்பனம் ஏதென்றால், குஷ்ட வியாதியுள்ள பத்துப் பேராவது: சர்வேசுரனுடைய பத்துக்கற்பனைகளை மீறின பத்துப்பாவவாளர் என்று சொல்லப்படும். அவர்களுடைய குஷ்ட வியாதியில் தோற்றப்படுகிற கொடிய புண்களால், அவர்கள் அனுசரித்த விவித வேதமதப் பிரகாரம் காணப்படும். ஆனால் சரீர சுகம் அடைந்ததின்பின் சறுவாங்கமும் ஒரு நிறமாய்ப் போகிறதுபோல அவர்கள் மனசு சர்வேசுரன்பேரில் தெளிந்த உடனே பத்துப்பேரும் ஒருமனசாய்க் கூடி ஆண்டவர் எழுந்தருளுகிற வழியைப் பார்த்திருந்தார்கள் என்று அறியவும். ஆனால் ஆண்டவரைக் கண்டு தூர இருந்து பிரார்த்தித்துக்கொண்ட விபரம் ஏதென்றால், பாவவாளனாயிருக்கிற மனுஷன் தன்னுடைய பாவத்துக்குப் பயமும், வெட்கமும் உண்டாய்த் தான் தரும ஆத்துமாக்களுடைய சபைகளிலே இருக்கப் பாத்திரவான் அல்ல என்று நினைத்துத் தாழ்ச்சியோடே வேண்டிக்கொள்ளவேணும் என்ற படிப்பினையாம். ஆண்டவர் அவர்களுடைய பிரார்த்தனையைக் கேட்டுப் பூசாரிகள் சந்நிதியிலே போகக் கற்பித்த விபரம் ஏதென்றால், பாசமய வாதிகள் சர்வேசுரனுடைய வேதத்தைக் கைக்கொள்ளக் கருதி வருகிறபோது முதல் குருமாரிடத்திலே உபதேசங் கேட்கப் போகவேணும் என்று படிப்பித்த அபிப்பிராயமாம். அப்படியே அவர்கள் அந்தக் கற்பனை மீறாமல் போகச் செய்தே அவர்களுடைய மனசு சர்வேசுரனுக்கு ஏற்றிருந்ததினால் போகுமுன்னமே வழியிலே சுகம் அடைந்தார்கள் என்று அறியவும். பத்துப்பேர் சுகம் அடைந்த இடத்திலே சமாரித்தன் என்ற அந்நிய சாதி மனுஷன் மாத்திரம் திரும்பிவந்து தோத்திரம்பண்ண மற்றவர்கள் வாராமல் போன விபரம் ஏதென்றால், மற்ற ஒன்பது பேரும் யூதர் சாதியிலுள்ளவர்களாம். அவர்களுக்குச் சர்வேசுரன் அதிக உபகாரம் செய்திருக்கையிலே அதிக துஷ்டராயிருக்கிறார்கள் என்றதையும், அம்மாத்திரம் உபகாரங்களைக் காணாத அந்நியசாதி மனுஷர் அவர்களிலும் மிக்காய்ச் சர்வேசுரன் பேரிலே பத்தியாயிருப்பார்கள் என்கிறதையும் காண்பித்த விபரமாம். இதல்லாமல் மற்ற ஒன்பதுபேரும் எங்கே என்று ஆண்டவர் கேட்டதினால், தேவ உபகார நன்றி அறியாதவர்கள் சர்வேசுரனுடைய சமுகத்துக்குப் புறத்திப்பட்



டிருக்கிறார்கள் என்கிற அபிப்பிராயமாம். ஆனதினால் சமாரித்தன் என்கிறவன் தனக்குச் செய்த உபகார நன்றி அறிந்த உடனே தோத்திரம்பண்ண வந்ததைக்கண்டு நாங்கள் அனுதினமும் சர்வேசுரனால் பெறுகிற உபகாரங்களை அனுதினமும் அவதானித்துத் தோத்திரம்பண்ணவேணும் என்ற படிப்பினையாம். ஈற்றிலே ஆண்டவர் சமாரித்தனைப் பார்த்து உன் விசுவாசம் உன்னை இரக்ஷித்தது என்றதினால் சர்வேசுரனுடைய உண்மையான விசுவாசத்தால் சகலமான பேர்களும் ஈடேறுவார்கள் என்று காண்பித்தார்.

ஆனதினால் நாங்கள் விசுவசிக்கிற தேவ விசுவாசம் என்கிற வெளிச்சம் பாவம் என்கிற பிரசண்டகாற்றால் அவிந்து போகாதபடிக்கு எச்சரிக்கை, அடக்கம், ஒடுக்கம் என்கிற மறைவுகளால் காப்பாற்றிவைத்து அப்படிப்பட்ட தீபிகையைக் கையேந்தி சததகாலம் சம்பூரண ஆரோக்கியம் பெறுகிற இராச்சியத்தின் வழியைத் தவறாமல் நடக்கப் பிரயாசப்படக் கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லவரும் நித்தியருமாகிய சருவேசுரா சுவாமீ, அடியோர்கள் விசுவாசத்திலும் நம்பிக்கையிலும் தேவசிநேகத்திலும் வர்த்திக்கக் கிருபைபண்ணும். மீளவும் தேவரீர் வாக்குப்பண்ணுகிற நன்மைகளை நாங்கள் அடைந்துகொள்ளப் பேறுபெற்றவர்களாகும்பொருட்டு தேவரீர் கட்டளைபண்ணுகிற கட்மைகளையும் அநுசரிக்கப்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## பதினாலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு ஆறம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: எவனாலும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடாது. ஏனெனில் ஒருவனைப் பகைத்து, மற்றொருவனை நேசிப்பான், அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றொருவனைப் புறக்கணிப்பான். சர்வேசுரனுக்குந் திரவியத்திற்கும் ஊழியஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய உங்களால் கூடாது. ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: உங்கள் உயிர் பிழைக்க எதை உண்போமென்றும், உங்கள் உடலை மூட எதை உடுத்திக்கொள்வோமென்றும் ஏக்கமாயிராதேயுங்கள். உணவைவிட உயிரும் உடையைவிட உடலும் மேன்மையானதல்லவோ? ஆகாயப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் குவிக்கிறதுமில்லை. ஆகிலும் அவைகளை உங்கள் பரம பிதா போஷித்துவருகிறாரே. அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுள்ளவர்கள் அல்லவோ? மேலும் யோசித்துக் கவலைப்படுவதினால் தன் உயரத்துக்கு ஒரு முழம் கூட்ட உங்களில் எவனாலே கூடும்? அன்றியும் உடைக்காக நீங்கள் கவலைப்படுவானேன்? வயல் வெளிகளிலுள்ள லீலிப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. ஆயினும் சலோமோன் முதலாய்த் தனது சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலென்கிலும் உடைபூண்டதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குச் சர்வேசுரன் இத்தன்மையாய் உடை உடுத்துவித்தால், அற்ப விசுவாசமுள்ளவர்களே, உங்களுக்கு எவ்வளவோ அதிகமாய் உடை உடுத்துவிப்பார்? ஆதலால் என்னத்தை உண்போம் அல்லது என்னத்தைக் குடிப்போம், அல்லது எதை உடுத்திக்கொள்வோம் என்று கவலைப்படாதிருங்கள். ஏனெனில் இவைகளெல்லாவற்றையும் அஞ்ஞானிகளே தேடுகிறார்கள். உங்கள் பிதாவானவரோவென்றால் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று அறிவார். ஆகையால் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்த முந்தத் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயமாவது: இரு நாயகர்களுக்கு ஒருதன் ஊழியம் பண்ணக்கூடாது என்றதினால், இரு நாயகர்களாவது ஆர் என்றால், ஆண்டவர்தாமே அறிவித்த பிரகாரம் தேவனும் திரவியமும் இரு தொண்டமான்கள் என்று சொல்லப்படும். அது ஏனென்றால், திரவியமாவது: தன் பொக்கிஷத்திலே சேமமாயிருக்க எங்களைக்கொண்டு தனது வர்த்திப்புக்கான பல தொல்லைகள் செய்விக்கிறதினால் அதுவும் ஒரு எசமான் என்று சொல்லப்படும். இதல்லாமல் ஆத்துமமும் சரீரமும் இரு எசமான்கள் என்றும், இகலோக பரலோகம் இரு எசமான்கள் என்றும், இம்மையும், மறுமையும், பேரின்ப ஆசையும், சிற்றின்ப ஆசையும் இவை எல்லாம் எங்கள் மனசை ஆண்டிருக்கிறதினால் எங்கள் எசமான்கள் என்றும் சொல்லத்தகும். ஆனதினால் ஒருவனைப் பகைத்து மற்றவனை நேசிப்பான் என்றதினால், சம்பத்தைத் தேடுகிறவன் சர்வேசுரனைக் கைவிடுவான். பூலோகத்தை நம்புகிறவன் பரலோகத்தை இகழுவான். சரீரத்தைப் பேணுகிறவன் ஆத்துமத்தை வதைப்பான் என்ற அபிப்பிராயமாம்.



ஆனால் நாங்கள் சரீர கவலையையும் உலோக ஆசையையும் வெறுத்தால் பூலோகத்திலே எப்படிச் சீவிக்கலாமோ என்று யாதொருவன் கேட்கில், அதற்கு ஆண்டவர் இருவித உதாரணம் காணபித்தார். அதாவது: ஆகாச பட்சிகளும் வயல்களிலுள்ள புட்பங்களும் சீவிக்கிற மேரையை யோசிக்கலாம் என்றார். அது எப்படியெனில், பட்சிகள் ஒரு விதை விதைப்பதுமில்லை, அறுப்பு அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் நிரப்புகிறதுமில்லையே. அப்படியே விதைப்பினால் ஒன்றுக்கு நூறு விளைகிறதுபோல அநியாயப் பொலிசை அடாத்தியம் கைலஞ்சம் முதலானதுகளால் சம்பத்து வர்த்திப்புத் தேடக்கடவதல்ல. அறுப்பு அறுப்பதாவது: பொக்கிஷ பத்தாயங்களை அறுத்துத் தகர்த்து வீடுகளைக் கன்னமிட்டுக் கள்ளவழிகளால் உடைமை தேடுவதல்ல. களஞ்சியத்திலே கூட்டிவைக்கிறதாவது: வாஞ்சை என்கிற கடாரத்தில் தனம் குவித்துப் புதைத்து வைக்கக்கடவதல்ல. இப்படிப்பட்ட உபாயங்களால் பட்சிகள் சீவிக்கிறதுமில்லை. நாங்களும் சீவிக்கக்கடவோமல்ல என்று படிப்பித்தார். ஆனால் அதுகள் சீவிக்கிற மேரை எப்படியென்றால், ஒருதன் விதைத்த வயல் உத்தியானம் நந்தாவனங்களிலே போய் இருந்து தேவவரத்தால் அன்றன்று சீவிக்கவேண்டியதை அடையுமே. அந்தப்பிரகாரமாய் ஆத்தும பிரயோசனத்துக்குத் திரிகிற தபோதன சந்நியாசிகள் எந்த ஊர் தேசத்திற்குப் போகினும், அந்தந்த ஊர் வாசிகள் அவர்களைத் தங்கள் மனைகளிலே வசிக்கவும் தங்கள் பொருள்களால் புசிக்கவும் சந்தோஷமாய்க் கொடுத்துத் தாபரிக்கிற மேரை அனுபவ சித்தியால் காணப்படுவது. இதல்லாமல் அப்படிப்பட்ட பறவைகளுடைய உச்சித நடக்கையாவது: பூமியோடு திரியாமல் அந்தரத்திலே ஆகாசவாசிகளாய் மனோகர நாதம் செய்து ஆறுதலாய் இருக்கிறதுபோல நாங்களும் எங்கள் மனசு பூமியின்மீதே ஊன்றிவையாமல் தியான செபம் என்கிற இரு சிறகால் வானத்திலே ஏற, அந்தரம் என்கிற பூலோக நம்பிக்கை இன்றிப் பராபரனை நம்பி இருக்கவேணும் என்ற படிப்பினையாம்.

அதின்பின் வயல்களில் உள்ள புட்பங்களின் உவமையை யோசிக்கிற மேரை எப்படியென்றால், அதுகள் நூல் நூற்கிறதும், வஸ்திரம் நெய்கிறதுமில்லை என்றதினால், எங்கள் மனம் நூல் நூற்கிறதுபோல, ஒன்று இரண்டாய்க் கூட்டி நீட்டிப் பொய் பிரகட சிறப்புகளால் கதைகள் இழைத்து, அலங்கார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும், மகிமையும் தேடக்கடவதல்ல. பின்னை எப்படியென்றால், வனத்தில் விருக்ஷங்கள் யாதொருதன் நடாமலும் தண்ணீர் இறையாமலும் ஆகாச பனியால் வளர்ந்து புஷ்பிக்கிறதே. அப்படியே ஆரணியங்களிலே வசிக்கிற ஏகாங்கிகள் உலோக கவலை இன்றித் தேவ உதவியால் தரும விருக்ஷமாய் வளர்ந்து சுகிர்த மலர்களுடைய அலங்காரம் காண்பிக்கிறதைப் பார்த்து நடக்கலாம் என்று படிப்பித்தார். இந்த மேரையாய் ஆண்டவர் படிப்பித்த சுகிர்தங்களை அறிந்து எங்கள் மனசு இரு நாயகர்களுக்கு அடிமைப்படாமல் பிரபஞ்சம் என்கிற அநியாய நாயகனை அரோசித்து எல்லாத்திலும் பராபரனை மாத்திரம் நம்பி எங்கள் நடபடி மேரைக்கு அவர் காண்பித்த உச்சித இரண்டு விதமாகிய பட்சியையும் கமலத்தையும் பார்த்து அதுகள் சீவிக்கிற மேரையாய் எங்கள் சீவனோபாயத்தை யோசித்துப் புஷ்பங்கள்போல நற்கிருத்தியங்களால் மலர்ந்து பட்சிகள்போல வான இராச்சியத்துக்குப் பறந்து பரகதி உத்தியானத்திலே நவநிதிய பழங்களைச் சுகிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீர் என்றும் உமது திருச்சபையை ஆதரவாய்க் காத்து நடத்தியருளவேண்டுமென்று மன்றாடுகிறோம். தேவரீருடைய உதவியில்லாவிடில் மனுஷ பெலவீனமானது தவறுகளுக்குள்ளாவது நிச்சயமாகையால் அது என்றென்றும் உமது ஒத்தாசையினால் கெடுதிகளினின்று விலக்கப்பட்டும் நன்மையான காரியங்களிற் செலுத்தப்பட்டும்வரக் கிருபைபண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென் யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## பதினைஞ்சாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற

## சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா ஏழாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக் காலத்திலே யேசுநாதர் நயீமென்னும் பட்டணத்துக்குப் போகையில், அவரோடேகூட அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் போனார்கள். அவர் பட்டணத்து வாசலுக்குச் சமீப



மாய் வருகையில், இதோ தன் தாய்க்கு ஏக குமாரனாகிய ஒருவன் மரித்து, வெளியில் கொண்டுவரப்பட்டான். அவளோ விதவையாயிருந்தாள். பட்டணத்திலிருந்து வெகு ஜனங்களும் அவளோடு கூட வந்தார்கள். கர்த்தர் அவளைக் கண்டபோது, அவள்மேல் மனமிரங்கி, அவளைப் பார்த்து: நீ அழவேண்டாம் என்று சொல்லி, கிட்ட நெருங்கிப் பாடையைத் தொட்டார். அதைச் சுமந்தவர்களோ நின்றார்கள். அப்பொழுது அவர்: வாலிபனே, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திரு என்றார். உடனே, இறந்தவன் எழுந்திருந்து, உட்கார்ந்து பேசத் தொடங்கினான். அவனை அவர் அவன் தாயிடம் ஒப்புவித்தார். சகலரும் பயமடைந்து, மகா தீர்க்கதரிசி நமது நடுவிலே தோன்றினாரென்றும், கடவுள் தமது பிரசைகளைச் சந்தித்தருளினாரென்றும் சொல்லிச் சர்வேசுரனை ஸ்துதித்தார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் உற்பனம் ஏதென்றால்: ஆண்டவர்கண்ட பிரேதமாவது: பாவம் என்கிற சாவால் தேவப்பிரசாதம் என்கிற உயிரை இழந்துபோன ஆத்துமமாம். அது ஒரே தாய்பிள்ளை என்றதினால் எங்கள் சீவனுக்கு ஒரே பிறப்பு இறப்பு அல்லாதே மறு பிறப்பாய்ப் பிறக்கமாட்டாது என்றும், நரகத்திலே விழுந்தவன் மறுபடி பரகதியில் சீவிக்கப் போகான் என்றும் காண்பித்த அபிப்பிராயமாம். அத்தால் அளவற்ற சென்மங்களை அனுசரிக்கிற அஞ்ஞானிகளுடைய மூடத்தனத்தையும் மிகுதி ஆத்துமாக்கள் உண்டானதுபோலத் தங்கள் இறுதியை நினையாத கிறீஸ்தவர்களுடைய அசட்டைத்தனத்தையும் தெளியப்பண்ணினார் என்று அறியவும். செத்தவனுடைய பிரேதத்தோடு தாயும் நகரவாசிகளும் அழுகையாய்ப் போனார்கள் என்றதினால் எங்கள் ஆத்துமம் தேவப்பிரசாதத்தை இழத்தல் என்கிற சாவை அடைந்தபோது அத்தோடு மனம் என்கிற ஆத்துமத்தின் தாய் இந்திரியமும், இருதயத்தில் வசிக்கிற சகல சற்குண நல்விசாரங்களும் தத்தளித்து மயங்கிப்போம் என்ற அர்த்தமாம். பட்டணத்தின் முகவாசலிலே ஆண்டவர் அறுதலியின் அழுகையைக்கண்டு இரங்கினார் என்றதினால், முகவாசல் என்கிற தேவசமுகத்திலே பிரவேசிக்கிற ஆத்துமம் பச்சாத்தாபம் என்கிற அழுகையாயிருக்கிறதைக் கண்டால் சர்வேசுரன் இரங்குவார் என்ற அர்த்தமாம். ஆண்டவர் பிரேதம் எடுக்கிற பாடையைத் தொட்ட உடனே சுமக்கிறவர்கள் நின்றார்கள் என்றது ஏதென்றால், சவத்தை எடுத்த நாலுபேர் என்பது ஆத்துமத்தை நரகத்துக்கு இழுக்கிற காம குரோத மத மார்ச்சரியம் என்கிற நாலு துர்க்குணங்களாம். பாடையாவது: ஆண்டவருடைய சிலுவையாம். அப்படியே ஆண்டவர் சிலுவையிலே திருக்கரம் அறைந்து எங்கள் துர்க்குண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்களை அழித்து நீக்குதல்பண்ணினார் என்ற விபரமாம். திருவாக்கால் எழுந்திரு என்ற உடனே செத்தவன் எழும்பிப் பேசத் துவக்கித் தாய்கைவசமான விபரம் ஏதென்றால், ஆண்டவருடைய திருவாக்குப் பெலத்தால் ஆத்துமமானது பாவ சோக சோம்பல் எல்லாம் தெளிந்து தேவப்பிரசாதம் என்கிற சீவியத்தை அடைந்து சர்வேசுரனுக்கு ஸ்துத்தியம் சொல்ல நாவழங்கித் தாய்வசம் என்கிற தனது பூர்வக நல்ல நடபடி அடைவான் என்ற விபரமாம். ஆண்டவர் செய்த அற்புதத்தைக் கண்டு சமஸ்தரும் பயந்து சர்வேசுரனை வாழ்த்தினார்கள் என்றதினால், நாங்கள் ஆண்டவருடைய திருவாக்கைப் பயத்தோடே கேட்கவும் அவர் பண்ணுகிற நன்மைகளை நித்தம் துதிக்கவும் வேணும் என்ற படிப்பினையாம்.

இத்தொகைப்பட்ட படிப்பினையைக்கொண்டு நாங்கள் எங்கள் ஆத்துமத்தின் மரணம் என்கிற நரக சாவை விலக்கத்தக்கதாகச் சர்வேசுரனைப் பிரார்த்தித்துப் பாவ மயக்கத்தை விட்டு எழுந்து சுகிர்தத்தால் சீவித்துத் தாய்வசம் என்கிற பரகதியில் சுதந்தரவாசம் அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீருடைய இடைவிடாத இரக்கமானது உம்முடைய திருச்சபையைச் சுத்தமாக்கிப் பெலப்படுத்தக் கடவது. தேவரீருடைய உதவியில்லாமல் அது சேமமாய் நிலைபெறக்கூடாதாகையால் உமது தயவினாலேதானே அது ஆண்டு நடத்தப்படக்கடவது. தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## பதினாறாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக லூக்கா பதினாலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் ஒரு ஓய்வுநாளிலே பரிசேயரில் தலைவனாகிய ஒருவனுடைய வீட்டில் அசனம்பண்ணப் போயிருந்தபோது (அங்கே இருந்தவர்கள்) அவர்மேல் நோக்கமா



யிருந்தார்கள். அப்பொழுது மகோதர வியாதியஸ்தனான ஒரு மனுஷன் அவருக்கு முன்பாக இருந்தான். யேசுநாதர் நீதிசாஸ்திரிகளையும் பரிசேயரையும் நோக்கி: ஓய்வுநாளிலே சுகமாக்கலாமா என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாதிருந்தார்கள். அவர் அவனைக் கையால் பிடித்துச் சுகமாக்கி, அனுப்பினார். பின்னும் அவர் அவர்களைப் பார்த்து: உங்களில் யாதொருவனுடைய கழுதையாவது எருதாவது கிணற்றில் விழுந்தால், ஓய்வுநாளானாலும் உடனே அதை வெளியே இழுத்துவிடாதிருப்பானோ? என்றார். அதற்கு அவர்கள் பதில்சொல்ல மாட்டாமலிருந்தார்கள். அப்பால் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் எப்படி முதல் ஆசனங்களைத் தெரிந்துகொள்ளுகிறார்களென்று அவர் பார்த்து, அவர்களுக்குச் சொன்ன உவமையாவது: நீ கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருக்கும்போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே; ஏனெனில் உன்னிலும் அதிக கனவான் ஒருவேளை அவனால் அழைக்கப்பட்டிருக்கலாம். அப்பொழுது உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து: இவருக்கு இந்த இடத்தைக் கொடு என்று சொல்லும்படியாயிருக்கும். அப்பொழுது நீ வெட்கத்தோடு கடைசியான இடத்திற்குப் போவாய். ஆனால் நீ அழைக்கப்பட்டிருக்கும்போது, கடைசியான இடத்தில்போய் உட்கார்ந்திரு; அப்பொழுது உன்னை அழைத்தவன்வந்து உன்னை நோக்கி: சிநேகிதனே, மேலான இடத்துக்கு வாரும் என்று சொல்ல, உன்னோடேகூடப் பந்தியிலிருக்கிறவர்களுக்கு முன்பாக அது உனக்கு மகிமையாயிருக்கும். ஏனெனில் தன்னை யுயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படுவான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷம் ஏதென்றால்: ஆண்டவருடைய சமுகத்திலே வந்திருந்த மகோதர வியாதிக்காரனானவன்: திரவியவாஞ்சைக்காரனுக்கு அடையாளமாம். அது ஏதெனில், உஷ்ணோதரவியாதியில் உதரம் நீர் பெருகிப் பருத்து வீங்கி, உப்பிசமாய் வெகு தாகமெடுக்கிறதுபோல, வஸ்துலோபி பாசாண்டியானவன் எத்தனைக்குத் திரவியப் புசிப்பில் அதிகப்படுவானோ அத்தனைக்கு வாஞ்சை மிகுத்திருப்பான் என்ற அர்த்தமாம். அப்படிப்பட்ட வியாதிக்காரன் சுகம் பெறவந்த இடத்திலே ஆண்டவர் அவனைப் பரிகரிக்கு முன்னே ஓய்வுநாளில் பரிகாரம் ஆகுமோ என்று யூதரிடத்திலே கேட்ட காரணம் ஏதென்றால், அவர்கள் ஆசரிக்கிற சனிக்கிழமைத் திருநாட்களிலே செய்யலாகாத கிருத்தியங்களையும் செய்யலான கிருத்தியங்களையும் இன்னதென்று அறியாமல் தருமக்கிருத்தியங்களையும் அன்று விலக்க வேணும் என்று நினைக்கிறதினால் அப்படிப்பட்ட அவர்களுடைய அஞ்ஞானத்தைக் கண்டிக்கவும் திருநாட்களை ஆசரிக்கிற சுகிர்த மேரையை எங்களுக்குப் போதிக்கவும் அப்படிக் கேட்டருளினார் என்று அறியவும். ஆகையால் அவர்கள் திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களிலே செய்கிற மற்றக் கிரியைகளைக்கொண்டு உபதேசிக்கத் தக்கதாக அவர்களுடைய ஆடு மாடுகளுக்கு அவர்கள் பண்ணுகிற உதவியை உதாகரணமாய்க் காண்பித்தார். அது ஏதெனில், தங்களுடைய ஆடு மாடு முதலான மிருகங்கள் கேணி, கிடங்குகளிலே இடறிவிழுகில் எந்த நாளிலும் எந்தச் சாமத்திலும் கரையில் எடுக்கவும், பரிகரிக்கவும், மேய்ச்சலுக்குக் கட்டவிழ்த்துவிடவும் செய்வார்களே. இவை எல்லாம் தங்கள் திரவியம் அபலமாய்ப் போகாமல் பதனம் பண்ண வேணும் என்கிறதுக்கு ஓய்வுநாளில் செய்யலாயிருக்குமாகில் மிருகங்களிலும் மனுஷன் உச்சிதம் அல்லவோ? ஒரு மனுஷன் இறந்ததினால் உள்ள அபலமும் ஈடேறினதினால் உள்ள பலனும் அதிகமல்லவோ? அப்பிரமாணமாய் அதிகம் உண்டே. ஆனால் மிருக இரக்ஷணையைப் பார்க்க ஆத்தும இரக்ஷணையைத் திருநாளில் செய்ய அதிக நியாயமாயிருக்கும் என்றும் இத்தொகைப்பட்ட தானமய கிருத்தியங்கள் திருநாட்களிலே விலக்கப்பட்ட தொழில்களைப்போல அல்ல என்றும் போதித்தார்.

அதின்பின் கலியாணச் சமுகங்களிலே மேலான மகிமைமானிபங்களை விரும்புகிறவர்களுக்குக் கடைப்பந்தியில் இருப்பாய் என்றது ஏதென்றால், அப்படியே பரலோகத்தில் மானிபங்கள் அடைகிறமேரை காண்பிக்கச் செய்தார். அது ஏதெனில் அதிக தாழ்விலே வேரூன்றின விருக்ஷம் அதிக உன்னதமாய் எழும்புகிறதுபோலப் பூலோகத்தில் எல்லாருக்கும் தாழ்ந்த இருப்பிடத்தைத் தேடுகிறவன் பரலோகத்தில் எல்லாருக்கும் உச்சமான சிங்காசனத்தைப் பெறுவான். பூலோகத்திலே வெகு தரித்திரம் பிடித்தவனானவன் பரலோகத்திலே வெகு சம்பத்துச் சுகிப்பான் என்று படிப்பித்தார். இந்தப் பிரகாரமாக ஆண்டவர் போதித்த இந்த இருவித விரதமேரையை நாங்கள் அறிந்து முதல் மகோதரனைப் பரிகரித்ததைப் பார்த்துப் பவுள்சின் வாஞ்சை நிறைந்திருக்கிற எங்கள் உதரங்களைத் தானமய சுகிர்த கிருத்தியங்களால் பரிகரிக்கவும், மேலில் பெருகுகிற விஷசலம் என்கிற துர்க்குணங்களைத் தவங்களால் தணிக்கவும், உலோக கெம்பீர ஓச்சத்தைத் தாழ்ச்சியால் பணிக்கவும், பிரயாசிப்போம். இரண்டாவது கிடங்கில் விழுந்த புருஷையின் உவமையை உத்தேசித்து எங்கள் ஆத்துமம் பாவம் என்கிற இடறுகளிலே விழுகில் பச்சாத்தாபம், உச்சாரணம் என்கிற இரு ஏணிப்படிகளால் அதைச் சிதறவிடாமல் சிக்கெனக் கரை எடுத்துச் சற்பிரசாதம் என்கிற சஞ்சீவியால் தேற்றி இது முதலான தரும கிருத்தியங்களை எந்த நாளிலும் வேளையிலும் செய்து சதத சீவியத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.



## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீருடைய வரப்பிரசாதமானது என்றும் எங்களை ஏவி எங்களைப் பின்தொடரவும் சகல நற்கிருத்தியங்களிலும் நாங்கள் கண்ணுயிருக்கப்பண்ணவும் செய்தருளவேணுமென்று மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## பதினேழாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு இருபத்திரண்டாம் அதிகாரத்திலே எழுதி வைத்த வாக்கியமாவது:— அந்தக்காலத்திலே பரிசேயர் யேசுநாதரிடத்திலே ஒருங்குகூடி வந்தார்கள். அவர்களில் நீதிசாஸ்திரியான ஒருவன் அவரைச் சோதிக்கும்படியாக: போதகரே, வேதப்பிரமாணத்தில் பெரிதான கற்பனை எதுவென்று கேட்டான். யேசுநாதர் அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தாவை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமத்தோடும், உன் முழு மனதோடும் சிநேகிப்பாயாக. இதுவே எல்லாத்திலும் பெரிதும் முதன்மையுமான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம்கற்பனை என்னவென்றால், உன் பிறனை உன்னைப்போல் சிநேகிப்பாயாக என்பதே. இந்த இரண்டு கற்பனைகளிலும் வேதப்பிரமாண முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்றன என்றார். பின்பு பரிசேயர் கூடியிருக்கையில் யேசுநாதர் அவர்களை நோக்கிக் கேட்டதாவது: கிறீஸ்துநாதரைக் குறித்து உங்களுக்குத் தோன்றுகிறது என்ன? அவர் யாருடைய குமாரன்? என்று கேட்க, அவர்கள்: தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால் தாவீதென்பவர் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவலால் அவரை ஆண்டவரென்று அழைக்கிறதெப்படி? நாம் உம்முடைய சத்துருக்களை உமது பாதங்களுக்கு மணையாகப் போடுமட்டும், நமது வலது பாரிசத்தில் உட்காருமென்று ஆண்டவர் என் ஆண்டவருக்குத் திருவுளம்பற்றினாரென்று சொல்லியிருக்கிறாரே. ஆகையால் தாவீதென்பவர் அவரைத் தன் ஆண்டவரென்று அழைத்திருக்க, அவருக்கு அவர் குமாரனாயிருக்கிறதெப்படி? என்றார். அதற்கு மறுமொழியாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையுஞ் சொல்லக்கூடவுமில்லை. அது முதல் அவரைக் கேள்வி கேட்க எவனுந் துணியவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயமாவது: யூத வித்தியாபாரகன் ஆண்டவரைச் சோதிக்கத்தக்கதாக வேதத்தின் முதலாம் கற்பனை ஏதென்று கேட்ட நோக்கம் ஏதென்றால், அவர் தம்மைத்தாமே சர்வேசுரன் என்று வணங்கச் சொல்லுகில் அதை வேதப்பிழை என்று நடுவிலே முறைப்படலாம் என்று யோசித்தான். ஆனால் அப்படிப்பட்ட சூதான எண்ணங்கள் அளவில்லாத தேவ ஞானத்துக்கு மறைவாயிருக்கமாட்டாததினால் அதை ஆண்டவர் அறிந்து வேதத்திலே எழுதியிருக்கிற பிரகாரம் அதை அவனுக்குக் காண்பித்தார். அதாவது: முழுமனதோடும், சகல புத்தியோடும், ஆத்துமத்தோடும் ஏக பராபரனை முதல் நேசித்து, இரண்டாவது: தனக்குள்ள தயைபோல மற்றவனுக்குந் தயவு பண்ணுவாய் என்று திருவுளம்பற்றியிருக்கிற வார்த்தைகளைக் காண்பித்து அத்தால் வித்தியாபாரகனுடைய உச்சாயத்தை வியர்த்தமாக்கி, எங்களுக்கும் இந்த இரு கற்பனைகளையும் செலுத்துகிற மேரை போதித்தார். அது எப்படியென்றால், முழு மனதோடு சர்வேசுரனை நேசிக்கிறதாவது: எங்கள் மனதை அவருடைய பதிவிரதையின் இலக்ஷணமாய் எண்ணிப் பதிவிரதையானவள் தனது பத்தாவை அல்லாதே மறுகணவனுடைய அன்பைக் காக்கமாட்டாததுபோல எங்கள் மனதிலே சர்வேசுரனுடைய பத்தியல்லாதே வேறே யாதொரு படைப்பின் நேசம் இல்லாமலிருக்க வேணும் என்ற அபிப்பிராயமாம். முழு ஆத்துமத்தோடு நேசிக்கிறதாவது: எங்கள் ஆத்துமம் சர்வேசுரனுடைய சிங்காசனமாயிருக்கிறதினால் இராச சிங்காசனத்தில் ஊழியன் உட்காரமாட்டான். அதுபோல எங்கள் ஆத்துமத்தைச் சர்வேசுரன் மாத்திரம் ஆளுகிறது அல்லாதே அதில் பேய்விசாரம் முதலான செகவாஞ்சைகள் ஆள ஞாயம் இல்லை என்ற அர்த்தமாம். சகல புத்தியோடு நேசிக்கிறதாவது: எங்கள் புத்தி, அறிவு சர்வேசுரனுடைய சந்நிதியிலே எரிகிற தீபமாயிருந்து அந்த வெளிச்சத்தால் அவரையும் அவருடைய வாக்கியங்களையும் தியானிக்கிறது அல்லாதே உலோக எண்ணம் பாவ எண்ணம் யூகியாமலும் மறுவேத மதங்களை அங்கீகரியாமலும் இருக்கவேணும் என்ற அபிப்பிராயமாம். இந்தடைவாய் முழு மனோசித்த ஆத்துமத்தோடு சர்வேசுரனை நேசிக்கிற கிரமமேரை என்று அறியவும்.

அதின்பின் தன்னைப்போல மற்றவனை நேசிக்கிற கிரமம் எப்படியென்றால் தனக்கு விருப்பமானது மற்றவனுக்கும் விருப்பமாம் என்றும் தனக்கு அரோசகமானது மற்றவனுக்கும் அரோசகமாம் என்றும் நினைத்துத் தன்னைக் காக்கிற மேரையாய் மற்றவனைக் காக்கவேணும் என்ற அபிப்பிராயமாம். இந்தமேரையாய் யாதொருதன் புறத்தியாரை நேசியாமல் தான் சர்வேசுரனை நேசிக்கிறேன் என்று சொல்லுகில் அது பொய்யான நேசம் என்று அறியலாயிருக்கும். அது எப்படியென்றால், சர்வேசுரனுடைய பத்தியானது அக்கினி என்றும் புறத்தியாருடைய தயை அதில் எழும்புகிற காந்தி என்றும் சொல்லப்படும். அப்படியே காந்தி இல்லாத இடத்திலே அக்கினி உண்டு என்பது பொய் எண்ணமாயிருக்கிறதுபோலப் புறத்தியாருடைய நேசமின்றிச் சர்வேசுரனை நேசிக்கிறது என்பது மெய்யாயிராது என்று அறியவும். இப்படியே இந்த இரு கற்பனையில் சர்வேசுரனுடைய வேதம் நிறையும் என்கிறதினால் வித்தியாபாரகன் ஒரு கற்பனை மாத்திரம் கேட்ட இடத்திலே ஆண்டவர் இரண்டு கற்பனையும் திருவுளம்பற்றின அபிப்பிராயம் என்று அறியவும். ஈற்றிலே ஆண்டவர் யூதரிடத்திலே தம்மை ஆர் என்று கேட்ட காரணம் ஏதென்றால், தாம் சர்வேசுரனுடைய மெய்யான குமாரன் என்று அவர்கள் அறியாமல் தம்மைச் சோதிக்கிறதினால் தாவீது என்கிற இராச தீர்க்கதரிசி செப்பின வாக்கியத்தால் தம்மைக் கிறீஸ்து என்று அறிவிக்கத்தக்கதாக அப்படியே கேட்டருளினார் என்று அறியவும். ஆனால் யூதர் ஆண்டவர் கேட்ட வாக்கியத்தின் பொருளுக்குப் பிரத்தியுத்தரம் சொல்லமாட்டாமல் அன்றுதொடுத்து அவரிடத்திலே ஏதாகிலும் கேட்கவும், அவரைச் சோதிக்கவும் பயந்திருந்தார்களே. அப்படியே நாங்களும் சர்வேசுரனுடைய இரகசியங்களையும் தெய்வீக மேரையையும் அளவறுத்து அறியவும் அவருடைய சித்தத்தைச் சோதிக்கவும் பயப்படவேணும் என்ற படிப்பினையாம். இந்தப் பிரகாரமாக ஆண்டவர் படிப்பித்த சகலமான படிப்பினைகளையும் விசேஷமாய் வேதவாக்கியங்கள் எல்லாம் நிறைவேற்றுகிற இருவித கற்பனையையும் அறிந்து, இந்த இரண்டு கற்பனையையும் ஆத்துமத்துக்குச் சீவியம் உண்டாக்குகிற இரு கையுமாய்ப் பரகதி வழிநடக்கிற இரு காலுமாய் மோக்ஷம் காண்கிற இரு கண்களுமாய் யோசித்து அத்தால் திவ்விய நகரத்தில் பிரவேசித்துச் சர்வேசுரனை முகமுகமாய்க் காணப் பிரயாசப்படக்கடவோம்.



## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீருடைய பிரசைகளாகிய நாங்கள் பிசாசின் சங்காத்தங்களை முழுதும் விலக்கி ஏக மெய்யான சர்வேசுரனாகிய உம்மையே சுத்த மனதோடு வழிபட்டு வர எங்களுக்கு அநுக்கிரகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணவேணுமென்று பிரார்த்திக்கிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சிய பாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்
## பதினெட்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக் காலத்திலே யேசுநாதர் படகேறிக் கடலைக் கடந்து தமது பட்டணத்துக்கு வந்தார். அங்கே படுக்கையில் கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவர் சமுகத்தில் கொண்டுவந்தார்கள். யேசுநாதர் அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, நம்பிக்கையாயிரு; உன் பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டன என்று திருவுளம்பற்றினார். உடனே வேதபாரகரில் சிலர்: இவர் தேவதூஷணஞ் சொல்லுகிறாரென்று தங்கள் உள்ளத்தில் சொல்லிக்கொண்டார்கள். யேசுநாதர் அவர்களுடைய நினைவுகளைக் கண்டறிந்து சொன்னதாவது: நீங்கள் ஏன் உங்கள் இருதயங்களிலே தீது நினைக்கிறீர்கள். உன் பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டன என்பதோ, அல்லது எழுந்திருந்து நட என்பதோ எது அதிக எளிது? ஆனால் பூமியிலே பாவங்களைப் பொறுக்க மனுமகனுக்கு வல்லமையுண்டென்று நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு, இதோ திமிர்வாதக்காரனை நோக்கி அவர் சொன்னதாவது: நீ எழுந்திருந்து உன் கட்டிலை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ என்றார். அவனும் எழுந்து தன் வீட்டுக்குப் போனான். இதைக் கண்ட ஜனங்கள் திகிலடைந்து, மனிதருக்கு இப்படிப்பட்ட வல்லமையைத் தந்தருளின சர்வேசுரனைத் தோத்திரித்தார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயம் ஏதென்றால், படுக்கையோடுகிடந்த முடவனாவது: பூலோக போகங்களிலே மனது ஊன்றிப் பரலோக வழி நடக்க எழும்ப மாட்டாமல் கிடக்கிற பாவவாளனுடைய ரூபமாம். அப்படிப்பட்ட வியாதிக்காரனை ஆண்டவர் குணமாக்குமுன்னே அவனுடைய பாவத்தைப் பொறுத்த காரணம் ஏதென்றால், அக்கினி நூராமல் புகை அமராததுபோலப் பாவம் என்கிற அக்கினியால் உற்பவித்த வியாதி நீங்கலாக முதல் அவனுடைய





பாவத்தைப் பொறுக்கத் திருவுளமானார் என்று அறியவும். இப்படியே வியாதிகள் உற்பவிக்கிற காரணம் இன்னம் அநேகம் உண்டு. சிலருக்குப் பொறுதியால் பெறுபேறு அதிகரிக்கிறதுக்கு வியாதி உண்டாம். சிலருக்குப் பாவத்துக்குப் பிராயச்சித்தமாக வியாதி உண்டாம். சிலரிடத்திலே தேவமகிமை காணும்படிக்கு வியாதி உண்டாம். இப்படியே திமிர்வாதக்காரன் தன்னுடைய பாவ நடக்கையை அடக்கவேணும் என்கிறதுக்காகக் கால் முடங்கி இருந்ததினால் ஆண்டவர் முதல் அவனுடைய பாவத்தைப் பொறுத்துப் பின் அவனுக்கு நடக்கக் கால் கொடுத்த அபிப்பிராயம் என்று அறியவும். ஆனால் ஆண்டவர் வியாதிக்காரனுடைய பாவம் பொறுத்த வசனத்தை யூதர் கேட்டு அவர் சர்வேசுரனைப் பழித்தார் என்று ஆண்டவர் பேரிலே அவலாதியை ஆரோபித்தது ஏதென்றால், ஆண்டவருடைய தேவசுபாவத்தை அறியாமல் அப்படியே யூகித்தார்கள் என்று அறியவும். இந்தப்பிரகாரமாக இப்போதும் வேதபோதக பதிதர் கிறீஸ்து இடமாயிருக்கிற சத்தியவேதக் குருமாரை அவலாதி சொல்லி ஆண்டவர் அவர்களுக்குப் பாவம் பொறுக்கக் கொடுத்த வரப்பிரசாதத்தை மறுதலிக்கிறார்கள். ஆனதினால் ஆண்டவர் திமிர்வாதக்காரனுடைய வியாதியைப் போக்கி அத்தால் ஆத்தும வியாதி என்கிற பாவங்களையும் தாம் பொறுக்கலாம் என்று காண்பித்தார். இதல்லாமல் தம்முடைய மனுஷ சுபாவத்துக்குள் இந்த வல்லமை தமது தானுபதியாயிருக்கிற குருமாருக்குத் தம்மால் கொடுக்கலாம் என்றதையும் அறிவிக்கச் செய்தார். அதினால் அப்படிப்பட்ட திருவுளத்தை அறிந்து எவனும் அவர்களிடத்திலே பாபோச்சாரணம்பண்ணிப் பாவப் பொறுத்தல் அடையவேணும் என்று காண்பிக்கச் செய்தார். அதை விசுவசியாதவர்கள் யூதருக்குச் சமானமான அவிசுவாசியாவார்கள் என்று அறியவும்.

இந்த மேரையாய் ஆண்டவர் திமிர்வாதக்காரனைத் தொட்டுப் போதித்த படிப்பினைகளை நாங்கள் அறிந்து ஆண்டவர் முதல் அவனுடைய பாவத்தைப் பொறுத்து வியாதியைக் குணமாக்கினதுபோல நாங்கள் பாபோச்சாரணத்தால் ஆத்தும பீடை என்கிற பாவங்களையும், தரும ஈனங்களையும் பரிகரித்து முடவன் தனது படுக்கையைக்கொண்டு இல்லிடத்துக்குப் போனதுபோல நாங்கள் எங்கள் படுக்கை என்கிற அழிவில்லாத ஆத்தும நடக்கையைக்கொண்டு எங்கள் இல்லிடம் என்கிற பாகதியில் பிரவேசிக்கப் போகவேணும் என்று அறியக் கடவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபைச் செபம்

கர்த்தாவே, தேவரீருடைய அருட்பிரசாத உதவியில்லாமல் நாங்கள் உமக்கு உவந்தவர்களாயிருக்கக் கூடாதிருக்கிறபடியால் உமது தயாபர இரக்கந்தானே அடியோர்களுடைய மனதுகளைத் தூண்டி நடப்பிக்கக்கடவது. தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்தவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிற வருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்
## பத்தொன்பதாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு இருபத்திரண்டாம் அதிகாரத்திலே எழுதி வைத்த வாக்கியமாவது:—அந்தக் காலத்திலே யேசுநாதர் யூத சிரேஷ்ட ஆசாரியர்களுக்கும் வேதநெறியர்களுக்கும் மறுபடியும் உவமைகளாய் வசனித்துத் திருவுளம்பற்றினதாவது: பரலோக இராச்சியமானது தன் குமாரனுக்குக் கலியாணஞ் செய்த ஓர் இராசனுக்கு ஒப்பாயிருக்கின்றது. கலியாணத்துக்கு அழைக்கப்பட்டவர்களைக் கூப்பிடும்படி, அவன் தன் ஊழியரை அனுப்பினான். அவர்களோ வர மனமில்லாதிருந்தார்கள். மீளவும் அவன் வேறு ஊழியரை அனுப்பி: இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன். என் எருதுகளும் கொழுக்க வளர்ந்த மிருகங்களும் அடிக்கப்பட்டிருக்கின்றன. எல்லாந் தயாராயிற்று. கலியாணத்துக்கு வாருங்களென்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள் என்றான். ஆனால் அவர்கள் அதை அலட்சியம்பண்ணி, ஒருவன் தன் கிராமத்துக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்களோ அவனுடைய ஊழியரைப் பிடித்து அவமானப்படுத்திக் கொன்றுபோட்டார்கள். அரசன் இதைக் கேள்விப்பட்டுக் கோபமடைந்து தன் இராணுவத்தை யனுப்பி, அந்தக் கொலைபாதகரைச் சங்கரித்து, அவர்களுடைய பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்பொழுது அவன் தன் ஊழியரைப் பார்த்துச் சொன்னதாவது: கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களோ அபாத்திரரானார்கள். ஆகையால் நீங்கள் வழிச்சந்திகளிலே போய், நீங்கள் காண்கிற யாவரையும் கலியாண விருந்துக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். அப்படியே ஊழியர் புறப்பட்டு, வீதிகள்தோறும் போய், எதிர்ப்பட்ட நல்லவர்கள் பொல்லாதவர்கள் எல்லாரையுங் கூட்டிக்கொண்டு வந்தார்கள். கலியாண சாலையும் பந்தியமர்ந்தவர்களால் நிறைந்தது. பந்தியமர்ந்தவர்களைப் பார்க்கும்படி, அரசன் உள்ளே பிரவேசித்தபோது, அங்கே கலியாண வஸ்திரம் அணியாத ஒருவனைக் கண்டு: சிநேகிதனே! கலியாண வஸ்



திரமின்றி, நீ இங்கே எப்படிப் பிரவேசித்தாய்? என்று கேட்க, அவன் மௌனமாயிருந்தான். அப்போது அரசன் பணிவிடைக்காரரை நோக்கி: இவனுடைய கை கால்களைக் கட்டி, இவனை வெளியே இருளிலே தள்ளுங்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான். ஏனெனில் அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பப் பேர் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் ஞானபொருள் ஏதென்றால், கலியாணம் உண்டாக்கின அரசன் என்பது, பிதாவாகிய சர்வேசுரனுக்கு அடையாளமாம். விவாகம்பண்ணின குமாரனோ என்றால், பரிசுத்த மாதாவின் திரு உதரம் என்ற மண அறையிலே மனுஷீகம் என்ற பிரியையைத் தெய்வீகத்துக்குப் பந்தனமாகக் கட்டப்பட்ட விபரமாம். அதல்லாமல் வேதசபையும் எங்களுடைய ஆத்துமமும் கிறீஸ்துநாதரோடே பிரசாத பந்தனமாயிருக்கிற மேரை ஞான விவாகம் என்று சொல்லப்படும். இப்படிப்பட்ட கலியாணத்துக்கு அடிசல் பண்ணின போசனம் ஏதென்றால், வேதத்தில் இருக்கிற தேவ அபி இரகசிய பிரசாதங்களும், சுகிர்த போதகங்களும் ஆத்துமம் சீவிக்கிற போசனம் என்று சொல்லப்படும். விருந்துக்கு முதல்அழைக்கப்போன தூதர்களோ என்றால், உலோகம் எங்கும் உபதேசிக்கப்போன ஈராறு அப்போஸ்தலராம். அதின்பின் அனுப்பின தூதரோ என்றால், அப்போஸ்தலரிடமாய் வேதம் போதிக்கிற காரணக் குருமார்களாம். முதல் அழைக்கப்பட்ட விருந்தாளிகள் ஆர் என்றால், முதலாவது, வேதவாக்கியத்தைப் பெற்ற யூதசனங்கள் என்று சொல்லத்தகும். ஆனால் அவர்கள் இராசாவின் கட்டளையைச் சட்டைபண்ணி வயலுக்கும் செட்டுவாணிபத்துக்கும் போனார்கள் என்றதினால், உலோகவாசிகள் பூமியில் பலன்களையும் வியாபாரக் கவலையையும் ஆத்தும பலன்களிலும் உச்சிதமாய் எண்ணி அதுக்காகத் தேவவாக்கை அசட்டை செய்கிறார்கள் என்ற அபிப்பிராயமாம். இதல்லாமல் மற்றவர்கள் பணிவிடைக்காரரைக் கொன்றுபோட்டார்கள் என்றதினால், தேவவேதம் போதிக்கிற தர்ம ஆத்தும குருமார்களை அன்னிய வேதக்காரர் நிந்தை அவகீர்த்திபண்ணி வதைக்கிற விபரமாம். ஆகையால் அரசன் சினத்தோடு கொலைக்காரரை வதைத்து அவர்களுடைய பட்டணத்தையும் சுட்டெரித்துப் போட்டதுபோல் வேதம் போதிக்கிற குருமாரை நிந்திக்கிறவர்களுடைய ஆத்துமம் பாவம் என்கிற சாவுக்கு ஏதுவாய்ச் சரீரத்தோடு நரக சுவாலையிலே எறியப்படும் என்ற விபரமாம். அதுக்கப்பால் வழிக்கரையில் இருந்த நற்குண துர்க்குணரானவர்களைக் கூட்டிவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் ஏதென்றால், யூதசாதி என்கிற வங்கிஷபதியானவர்கள் முதல் அழைக்கப்பட்டு வாராமல் போனபோதே வழிப்போக்கு என்கிற நல்சாதி, கீழ்சாதியான சகலரும் நடக்கிற இடங்களிலும் ஊர் தேசங்களிலும் இருக்கிறவர்களும் சாதிபேதம் பாராமல் எல்லோரும் வேதம் கேட்கவும், மோக்ஷ நன்மை பெறவும் பாத்திரவான்களாவார்கள் என்ற அபிப்பிராயமாம். ஆனால் விருந்துக்கு வந்தவர்களில் கலியாண வஸ்திரம் இல்லாத ஒருவனைக் கண்டு விலங்கோடு அந்தகாரத்திலே தள்ளினதுபோல வேதத்துக்கு வந்தவர்களில் யாதொருவன் கலியாண வஸ்திரம் என்கிற தேவ இஷ்டப்பிரசாதம் இல்லாமல் இருந்தால் அப்படிப்பட்டவனை ஆண்டவர் நடுத்தீர்க்கிற நாளிலே துஷ்ட நிக்கிரகத்தோடு ஒருக்காலும் அழியாத நரக இருளிலே தள்ளுவார் என்கிற விபரமாம்.

இப்படிப்பட்ட தேவநெறி நியாயத்தை நாங்கள் அறிந்து ஆண்டவர் எங்களை அழைக்கவிட்ட பணிவிடைக்காரராகிய குருமார்களுடைய வார்த்தை தவறாமல் தேவவிருந்துச்சாலை என்கிற வேதசபையில் உட்பட்டுப் பாவமின்றியே அவருடைய இஷ்டப்பிரசாதம் என்கிற கலியாண வஸ்திரம் அணிந்து மோட்ச விருந்தின் அமிர்தம் அனுபவிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லவரும் தயாபரருமாயிருக்கிற சருவேசுரா, அடியோர்களுடைய ஈடேற்றத்துக்கு எதிரிடையாயுள்ள சகலத்தையும் தேவரீர் இரக்கமாய் எங்கள் பாதையினின்று விலக்கியருளும். இப்படியே நாங்கள் ஆத்தும சரீர தடைகளினின்று விடுவிக்கப்பட்டவர்களாய்த் தேவரீருக்குச் சித்தமானதையெல்லாம் உற்சாக மனதோடு நிறைவேற்றத்தக்கவர்களாகுவோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்
## இருபதாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் நாலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக் காலத்திலே கப்பர்னா ஊரில் வியாதியுள்ள



குமாரனை உடைய ஓர் சிற்றரசன் இருந்தான். யேசுநாதர் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வருகிறாரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டவுடனே, அவரிடத்திற்போய், அவர் வந்து தன் குமாரனைக் குணமாக்கவேண்டுமென்று மன்றாடினான். ஏனெனில் அவன் சாகக்கிடந்தான். அப்பொழுது யேசுநாதர் அவனை நோக்கி : நீங்கள் அற்புதங்களையும் ஆச்சரியங்களையும் கண்டாலொழிய, விசுவசிக்கமாட்டீர்கள் என்று சொல்ல, அந்தச் சிற்றரசன் அவரை நோக்கி : சுவாமி, என் மகன் சாகிறதற்குமுன்னே வரவேண்டும் என்றான். யேசுநாதர் அவனை நோக்கி : நீ போகலாம், உன் மகன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனிதன் யேசுநாதர் தனக்குச் சொன்ன வார்த்தையை நம்பிப் போனான். அவன் போகையில், அவனுடைய ஊழியர் அவனுக்கு எதிர்கொண்டுவந்து : உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள். அப்பொழுது அவன் : எந்நேரத்தில் அவனுக்கு வியாதி குணமானதென்று அவர்களிடத்தில் விசாரிக்க, அவர்கள் : நேற்று ஏழு மணிக்குக் காய்ச்சல் அவனைவிட்டு நீங்கினது என்றார்கள். உன் மகன் பிழைத்திருக்கிறானென்று யேசுநாதர் தனக்குச் சொன்ன நேரம் அதுதான் என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவசித்தார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது : சிற்றரசனான துரையினுடைய மகன் கப்பர்னா என்கிற பட்டணத்தில் வியாதியாய் இருந்தது என்ற விபரம் ஏதென்றால், கப்பர்னா என்கிற நாமம் அன்னம் நிறைந்ததான நாடு என்று சொல்லப்படும். அப்படியே அன்னபான அக்கிரமத்தினாலும் விபரீத வியஞ்சன உருசிகாரத்தினாலும் பீடை உரோகங்கள் உற்பவிக்கப்படும் என்ற விபரமாம். இந்தத் துரையினுடைய மகனுக்குள்ள வியாதி ஏதென்றால், வெகுவாய்த் தோஷிக்கப்பட்ட சுரமாம். அப்படிப்பட்ட சுரம் அவனுக்குப் போசன வித்தியாசத்தால் சரீரத்திலே பிரகோபித்த விஷசுலங்களால் உண்டானதுபோல எங்கள் ஆத்துமத்திலும் பஞ்சேந்திரிய அக்கிரமத்தால் அநேகவித ஞான சுரங்கள் உற்பவிக்கப்படும் என்று அறியவும். அதாவது : அகந்தை, அபேட்சை, மோகம், கோபம், கொதி, துவேஷம், மந்தம் என்கிற இந்த ஏழு தலையான துர்க்குணங்கள் ஆத்துமத்தைப் பீடிக்கிற ஏழு சுரம் என்று சொல்லத்தகும். ஆனதினால் அந்த நாயகன் தன் மகனுக்குச் சரீர சவுக்கியம் அடைய ஆண்டவரை மன்றாடினதுபோல நாங்களும் எங்கள் ஆத்தும விஷதோஷங்களை நீக்குதல்பண்ண ஆண்டவரைப் பிரார்த்தித்து அதுக்கு அவர் போதித்த பரம அவுஷத மேரையாகிய ஏழு சுகிர்தங்களைச் செய்து ஆத்துமம் சுகம் அடையவேண்டும் என்று அறியவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அந்தப் பிரபு ஆண்டவரைத் தன் இல்லிடத்துக்கு அழைத்தபோது அதிசயங்கள் காணாமல் விசுவசிக்கமாட்டீர்கள் என்று திருவுளம்பற்றின விபரம் ஏதென்றால், ஆண்டவர் தம்முடைய திருவாக்குப் பெலத்தால் மாத்திரம் சுகமும் சீவனும் கொடுக்க வல்லவராய் இருக்கிறதை அவன் அறியாமல் அதற்குத் தன் வீட்டுக்கு வரவேணும் என்று நினைத்து வேண்டுதல் பண்ணினதினால் விசுவாச ஈனன் ஆனான் என்று காண்பித்தார். அதினால் தம்முடைய தேவவல்லமையை அவனுக்குக் காண்பித்து விசுவாசியாக்கவேணும் என்றதினால் அவன் இல்லிடத்துக்குப் போகாமல் அவன் மகன் சீவிக்கிறான் என்ற வசனத்தால் மாத்திரம் சீவனும் சுகமும் கொடுத்தருளினார் என்று அறியவும். அப்படியே அவன் இந்த அதிசயத்தைக் கண்டதின்பின் தன்னுடைய சகல குடும்பத்தோடும் ஆண்டவர் பேரிலே ஏகாந்த விசுவாசமாய்ப் போனான். இந்தப்பிரகாரமாக அற்ப விசுவாசமுள்ள கிறீஸ்தவர்களும் தங்கள் அவசரங்களுக்கு நினைத்த நேரம் சர்வேசுரன் பிரசன்னமானால் நல்ல விசுவாசிகளாயும் அது இல்லாவிட்டால் விசுவாச ஈனராயும் போகிறார்கள் என்கிறதைக் கண்டுவருகிறோம். ஆனதினாலே சுரவியாதிக்காரனைத் தொட்டு ஆண்டவர் போதித்த இவ்வண்ணமான படிப்பினை எல்லாம் நாங்கள் அறிந்து எங்கள் ஆத்துமத்தின் சுரம் என்கிற ஏழு தலையான பாவங்களுக்கு ஏழு சுகிர்தம் என்கிற உச்சித பரம அவுஷத பானங்கள் அனுபவித்து அகங்காரி, கோபி, மோகி, லோபி, போசனப்பிரியன், காய்மகாரி, சோம்பன் என்கிற நிசிதப்பேர் படாமல் தாழ்ச்சியுள்ளவன், பொறுதிக்காரன், விரத்துவன், உதாரி, மட்டசனி, பிறர்சிநேகன், சுறுசுறுப்புள்ளோன் என்கிற சுகிர்த புகழ்பூண்டு சகல உலோகத்துக்கும் ஏக பராபர துரையாய் இருக்கிற சர்வேசுரனுக்கு உகந்த மக்களாய் அவரோடு சதாகாலம் சீவிக்கப்போகப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, உம்முடைய விசுவாசிகளுக்குத் தேவரீர் மன்னிப்பையும் சமாதானத்தையும் இரக்கமாய்த் தந்து நாங்கள் சகல துரோகங்களுக்கும் நிவாரணமடைந்தவர்களாய்க் கலக்கமில்லாத மனதோடு உமக்கு ஊழியம்பண்ண அநுக்கிரகஞ் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக் கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின் இருபத்தோராம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு பதினெட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக் காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு இந்தத் திருஷ்டாந்தத்தைத் திருவுளம்பற்றினார். பரலோக இராச்சியமானது தன் ஊழியரிடத்தில் கணக்குக் கேட்கவேண்டுமென்றிருந்த ஓர் அரசனுக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. அவன் கணக்குக் கேட்கத் துவங்கினபோது, பதினாயிரம் தலேந்து அவனிடத்தில் கடன்பட்டிருந்த ஒருவன் அவனுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டான். ஆனால் கடனைச் செலுத்த அவனுக்கு நிர்வாகமில்லாமையால், அவனுடைய எஜமான் அவனையும், அவன் பெண்சாதி பிள்ளைகளையும், அவனுக்குண்டான யாவற்றையும் விற்றுக் கடனைச் செலுத்தக் கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியன் அவன் பாதத்திலே விழுந்து, அவனை நோக்கி: என்பேரில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குச் செலுத்திவிடுகிறேன் என்று மன்றாடினான். ஆகையால், எஜமான் அந்த ஊழியன்மேல் மனமிரங்கி அவனையும் விடுதலையாக்கி, அவன் கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அந்த ஊழியன் வெளியே புறப்பட்டுப்போய்த் தன்னிடத்தில் நூறு தெனியர் கடன்பட்டிருந்த தன் உடனூழியரில் ஒருவனைக் கண்டு, அவன் மன்னையைப் பிடித்து நெரித்து, நீ பட்ட கடனைக் கொடு என்றான். அப்போது அவனுடைய உடனூழியன் அவன் காலிலே விழுந்து அவனை மன்றாடி: என்பேரில் பொறுமையாயிரு; உனக்கு எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்த்துப்போடுகிறேன் என்றான். ஆனால் அவன் சம்மதியாமல், போய், அவன் தன் கடனைத் தீர்க்குமளவும் அவனைச் சிறைச்சாலையிலே போடுவித்தான். அவனுடைய மற்ற உடனூழியர்கள் நடந்தவைகளைக் கண்டு, மிகவும் துக்கப்பட்டுத் தங்கள் எஜமானிடத்தில் வந்து, நடந்ததெல்லாவற்றையும் அறிவித்தார்கள். உடனே அவனுடைய எஜமான் அவனை வரவழைத்து: துஷ்ட ஊழியனே, நீ என்னை மன்றாடினதினாலே, உன் கடனெல்லாம் உனக்கு மன்னித்தேனே. ஆகையால், நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடனூழியனுக்கு இரங்கவேண்டாமோ? என்று சொல்லி, அவனுடைய எஜமான் கோபித்து, அவன் கடனையெல்லாம் செலுத்தும் வரையில் உபாதிக்கிறவர்கள் கையில் அவனை ஒப்புவித்தான். ஆகையால் உங்களிலும் அவனவன் தன் சகோதரனுக்கு உங்கள் முழு இருதயத்தோடு மன்னியாவிட்டால், என் பரமபிதாவும் உங்களுக்கு இவ்வண்ணமே செய்வார் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயம் ஏதென்றால், தாசரோடே கணக்குக் கேட்கிற இராயனாவது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவிகளுடைய நடுத்தீர்க்கிற சர்வேசுரனும், பதினாயிரம் பொன் கொடுக்கிற கடனாளியாவது: கனமான பாவம் செய்த கன்மவாளனும். அவன் எசமானை வணங்கிப் பொறுதி கேட்டதினால் அவனுடைய கடன் எல்லாம் பொறுத்ததுபோல நாங்களும் பச்சாத்தாபமாய்ச் சர்வேசுரனைப் பிரார்த்தித்துக்கொண்டால் எங்கள் பாவங்கள் எல்லாம் பொறுப்பார் என்ற விபரமாம். ஆனால் அந்த ஊழியன் தன் கூட்டாளிக்குச் சில்வானக் கடனைப் பொறாததினால் மறுபடியும் எசமான் அவனை அழைத்துச் சகல கடனும் அறவாக்குந்தனையும் மழுவர் கையிலே வாதிக்க ஒப்புக்கொடுத்ததுபோல நாங்களும் எங்கள் கூட்டாளியாகிய ஆத்தும சகோதரனுக்கு அவன் செய்த பிழைகளைப் பொறாதிருக்கில் நாங்கள் பட்ட பெரும் கடனாகிய சர்வேசுரனுக்குச் செய்த எண்ணில்லாத துரோகங்களை அவர் பொறாமல் அதின் ஆக்கினை முழுதும் நிறைவேற்றத்தக்கதாக இவ்வுலகத்தில் பொருள்களை வாதிப்புக்கு ஏற்ற மழுவராக்கி அவ்வுலகத்திலும் நியம கொலைக்காரராகிய பிசாசுகள் கையிலே அக்கினி ஆயுதங்களால் வாதிக்கும்படி கையளிப்பார் என்ற அபிப்பிராயமாம். அது ஏதெனில், நாங்கள் சமஸ்தரும் ஒரு பூமி மண்ணோடே கூடிய ஒருசாதி சனமாயிருக்கிறதினால் ஒருவனுக்கு ஒருவன் செய்த வெகுமானமும், அவமானமும் உச்சிதம் அல்ல. அத்தால் கொண்ட கடனும் பெரிதும் அல்ல. சர்வேசுரனோ என்றால், நிகரில்லாத மகிமைச் சுரூபியாய் இருக்கிறதினால் அவருக்கு நாங்கள் செய்கிற எதிரிடை நிகரில்லாத தீமையாயிருக்கும். அத்தால் உள்ள கடனும் அளவில்லாத கடனாயிருக்கும். அப்படியிருக்க அவர் எங்களுக்குச் சகலதும் பொறுக்கிற இடத்திலே நாங்கள் ஒருதனுக்கு ஒருதன் பொறாமல் இருக்கிறதற்கு ஒரு நியாயமும் இல்லை என்று அறியவும். இத்தன்மையாய்த் தேவ ஞான நெறியைக் காண்கிற நாங்கள் திரிபுவனத்துக்கும் இராசாதி இராயனான சர்வேசுரன் நடுத்தீர்வை என்கிற தமது இராச யோகத்திலே இருந்து தமது ஊழியரான மனுஷருடைய பாவ புண்ணிய கடன்களை அளவறுத்து அறவாக்க வருவார் என்று நினைக்கக்கடவோம். அப்போது அவர் அனாதியாய் எங்களுக்குக் கொடுத்த பத்துப் பொன் என்கிற பத்துக் கற்பனைகளை அனுசரியாத கடனையும், அவருடைய காரியக்காரர்களிடத்தில் பெற்ற ஐந்து பொன் என்கிற திருச்சபைக் கற்பனை ஐந்தும் அனுசரியாத கடனையும், இதல்லாமல் அதிக கருணையாய்ப் பராமரிக்கக் கொடுத்த ஏழு கருவூலம் என்கிற தேவ இரகசிய பிரசாதங்களில் வஞ்சகம் பண்ணின கடனையும், மெய், வாய், கண், மூக்கு, செவி



என்கிற ஐந்து நந்தாவனங்களில் சுகிர்த பலனை அழித்த கடனையும், ஆத்தும சரீரம் சீவிக்கக் கொடுத்த சுபாபகுண உபகாரங்களையும் வானம், பூமி, மனுஷர், சம்மனசுகள் மனோரூபிகளால் அடைந்த சகல சற்கார உபகார கடனையும், மனம், வாக்கு, கை என்கிற மூவித பத்திரங்களிலே எழுதியிருக்கிற பிரகார குணங்கள் எல்லாவற்றையும் சிட்டற ஒப்புவிக்கவேணும் என்று அறியவும். ஆனதினால் அதற்கு எங்கள் இருதயம் என்கிற பொக்கிஷத்திலே பெறுபேறு என்கிற திரவியங்களைக் கூட்ட இது துவக்கமாய்ப் பிரயாசப்பட்டு அவர் நடுத்தீர்வைக்கு எங்களை அழைக்கிறவேளையிலே கெட்ட ஊழியர்களைச் சபித்துத் தள்ளுகிற முனிவுக்குப் பாத்திரமாகாமல் அவர் தம்முடைய பிரிய மக்களுக்குக் கொடுக்கிற ஆசீர்வாதத்தைப் பெற்று அவரோடே சதாகாலம் சீவிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே! உம்முடைய குடும்பமானது தேவரீருடைய பாதுகாவலினாலே சகல எதிரிடைகளிலிருந்து விடுதலையாகி உம்முடைய திருநாமத்தின் பேரிலுள்ள பத்தியால் நற்கிரியைகள் நிறைந்திருக்கத்தக்கதாக எங்களை இடைவிடாத இரக்கத்தோடு காத்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## இருபத்திரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு இருபத்திரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே பரிசேயர் போய் அவரைப் பேச்சிலே (குற்றம்) பிடிக்கவேண்டுமென்று ஆலோசனை செய்து, தங்கள் சீஷர்களையும் எரோதியரையும் அவரிடத்திலனுப்பிச் சொல்லுவித்ததாவது: போதகரே! நீர் சத்தியவந்தரென்றும், சர்வேசுரனுடைய நெறியை உள்ளபடியே போதிக்கிறீரென்றும், நீர் மனிதருடைய தாக்ஷண்யம் பார்க்காதவராகையால் ஒருவனையுஞ் சட்டைபண்ணாதவரென்றும் அறிந்திருக்கிறோம். ஆகையால் செசாரிராயனுக்கு வரி செலுத்தத் தகுமோ, தகாதோ? உமக்குத் தோன்றுகிறதென்ன? எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். யேசுநாதரோ அவர்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்மனதை யறிந்து, கள்ள ஞானிகளே, நீங்கள் என்னைச் சோதிப்பானேன்? வரிப்பணத்தை எனக்குக் காண்பியுங்களென்று சொல்ல, அவர்கள் தெனியர் என்ற ஒரு பணத்தை எடுத்து அவருக்குக் காண்பித்தார்கள். அப்போது யேசுநாதர்: இந்த ரூபமும், மேலெழுத்தும் யாருடையதென்றும் அவர்களைக் கேட்டார். அதற்கு அவர்கள்: செசாருடையது என்றார்கள். அப்பொழுது யேசுநாதர்: அப்படியானால் செசாருடையவைகளைச் செசாருக்கும், சர்வேசுரனுடையவைகளைச் சர்வேசுரனுக்கும் செலுத்துங்களென்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே அறியத்தக்க விசேஷமாவது: யூதர் ஆண்டவரை வசனத்தால் குற்றத்தில் அகப்படுத்தச் சூழ்ச்சி செய்தார்கள் என்றதினால், அவர்களுடைய மூடத்தனம் எத்தன்மையோ என்றால், மிதப்பால் ஆழம் சோதிக்கவும், பளிங்கால் சூரியனை மறைக்கவும உபாயம் பண்ணின மேரையாம். அப்படியே சர்வேசுரனுடைய ஞானப் பிரகாசத்துக்கு ஏதும் மறைக்கவும் அவருடைய அளவில்லாத சித்தத்தை எங்கள் புத்தியால் சோதிக்கவும் கூடாது என்றதை அறியாமல் நிர்மூடராய்ப் போனார்கள் என்று அறியவும். இந்தப்பிரகாரமாக மூடாத்தும பாவிகளும், தாங்கள் ஒருதரும் காணாமல் பாவம் செய்யவேணும் என்று, ஒளிப்பு மறைப்புகளிலேயும் கதவு சன்னல் பூட்டின அறைகளிலேயும் தங்களுடைய துர்க்கிருத்தியத்தைச செலுத்துகிறபோது ஆதித்தன் உதித்ததுபோல ஞானக் கண்ணால் சகலத்தையும் பார்த்திருக்கிற சர்வேசுரன் அவர்களுடைய அருவருப்பான பாவத்தைக் கண்டு தீர்வைக்குள்ளாக்குகிறார் என்று அறியவும்.

ஆனால் அவர்கள் கேட்ட கேள்வியாவது: செசார் என்ற இராசாதி இராயனுக்கு வரிகொடுக்கலாமோ இல்லையோ என்று கேட்டது ஏதென்றால், கொடுக்கப்படாதெனில், இராசதுரோகி என்று முறைப்படுவோம்; கொடுக்கலாம் என்கில் தன்னைச் சர்வநாயக தேவகுமாரன் என்று சொல்லுகிறதை நெருடாக ஒப்புவிப்போம் என்று நினைத்தார்கள். இப்படிப்பட்ட சூழ்ச்சிகளால் அளவில்லாத ஞானச் சுரூபியான சர்வேசுரனை ஏய்க்கக்கூடாது என்றதைக் காண்பிக்கத்தக்கதாக இராயனுக்கு அடுத்ததை இராயனுக்கும் தேவனுக்கு அடுத்ததைத் தேவனுக்கும் கொடுங்கள் என்று திருவுளம்பற்றி ஒரு குற்றத்திலும் உட்படாத பிரகாரம் அவர்களுடைய உச்சாயத்தை வியர்த்தமாக்கினார். ஆனால் தாம் அருளிச் செய்த நீதியை அதிக பிரத்தியட்சமாய்க் காண்பிக்கத்தக்கதாக இறை கொடுக்கிற பணத்தைக் கொண்டுவரச் சொல்லி அதில் உள்ள அச்சுரூபம் ஆருடையது என்று கேட்டதே. அதற்கு விபரம்



ஏதென்றால், அந்த மேரையாய் எங்கள் ஆத்துமத்தின் ரூபத்தையும் நாங்கள் யோசித்து அதை யாருக்கு உடையது என்று அறியும் நியாயத்தைக் காண்பிக்கச் செய்தார். அது எப்படியென்றால், அந்தப் பணத்திலே செசார் இராயனுடைய லாஞ்சனை இருந்ததினால் அந்த இராயனுக்குத்தானே கொடுக்க நியர்யமாயிருந்ததுபோல எங்கள் ஆத்துமத்திலே புத்தி மனோ சித்தம் என்கிற தேவதிரீத்துவத்தின் இலக்ஷணம் உண்டாயிருக்கிறதினால் அது சர்வேசுரனுக்குத்தானே உடையது அல்லாதே வேறொருவனுக்குக் கொடுக்க நியாயம் இல்லை என்று அறிவித்தார். ஆனபடியால் நாங்கள் கண்ணுக்குப் பிரத்தியட்சமாய்த் தேவ உரூபம் பதித்த யாதொரு பிரதிமையைக் காண்கிறபோது அதை வெகு பயபத்தியோடு ஆசரிக்கிறதுபோல, அதிலும் அதிகமாய்ச் சர்வேசுரனுடைய சீவிய உரூபம் பதித்திருக்கிற எங்கள் ஆத்துமத்தை நிராகரிக்கப் பயப்படவேணும். அப்படியிருக்கத் துர்ச்சன பாவிகள் இந்த நியாயத்தைப் பாராமல் தங்களுடைய அக்கிருத்தியத்தால் ஆத்துமத்தின் ஞான சுரூபமான இலக்ஷணத்தைச் சிதைவு பண்ணி, சிலர் மூர்க்கத்தால் அதைத் துஷ்ட இடபகோலமாக்கி, சிலர் கோப ஆங்காரத்தால் சிங்க வேஷமாக்கி, சிலர் மூடத்தனத்தால் கழுதை வேஷமும் மோக அசுத்தத்தால் பன்றி வேஷமுமாகப் பண்ணுகிறதல்லாமல் உலோபிகள் திரவிய ஆசையால் அத்தை விலைக்கிரயம்பண்ணி அக்கியானி, பதிதர் பிரபஞ்ச வாஞ்சையால் அத்தை முழுதும் பிசாசுக்கு அடிமையாக்கிக் கொடுக்கிறார்கள். இவ்விதமாய்ச் சர்வாதி இரக்ஷ தேவ இராயனுக்கு உடைய அறவரிப்பணத்தை அநியாய பவ இராயனுக்குக் கொடுக்கிறதினால் அப்படிப்பட்டவர்கள் எத்தனை துஷ்ட தேவ துரோகிகளாய் எத்தனை மகா தேவ கேடுகளுக்கு உள்ளாவார்கள் என்று நினைக்கலாம்.

ஆனதினால் அப்படிப்பட்ட ஆக்கினைக்கு நாங்கள் உட்படாமல் எங்கள் ஆத்துமத்தில் உள்ள தேவசுரூபம் என்கிற புத்தி மனோ சித்தங்களை அனுதினமும் தேவ திரீத்துவத்துக்குக் கையளித்து அவருடைய சித்தம் தவறாமல் சுகிர்தத்தால் நடந்து மோக்ஷ தரிசனத்தால் தேவசமமாய்ப் போகப் பிரயாசப்படக் கடவோம்.

## திருச்சபைச் செபம்

எங்கள் அடைக்கலமும் பெலமுமாயிருக்கிற சருவேசுரா, உமது திருச்சபையின் பத்தியுள்ள வேண்டுதல்களுக்குப் பத்தியின் காரணராகிய தேவரீர்தாமே பிரசன்னமாய்ச் செவிசாய்த்து நாங்கள் நம்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறவைகள் எவைகளோ அவைகளைத் தப்பாமல் அடைந்துகொள்ளக் கிருபைபண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின்

## இருபத்துமூன்றும் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் சனங்களுக்குப் பிரசங்கம்பண்ணிக்கொண்டிருக்கிறபோது இதோ அதிபதி யொருவன் அணுகி அவரை நமஸ்கரித்து: ஆண்டவரே, என் குமாரத்தி இப்பொழுதே மரித்தாள். ஆயினும் தேவரீர் வந்து, உமது கரத்தை அவள்மேல் வைத்தருளும். அவளும் பிழைப்பாள் என்றான். அப்போது யேசுநாதர் எழுந்து தமது சீஷர்களோடு கூட அவன் பிறகே போனார். அப்போது இதோ பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ளவளான ஒரு ஸ்திரீ அவர் பிறகே யணுகி அவருடைய வஸ்திரத்தின் விளிம்பைத் தொட்டாள். ஏனெனில்: நான் அவருடைய வஸ்திரத்தை மாத்திரம் தொடுவேனாகில் சௌக்கியமாவேனென்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். ஆனால் யேசுநாதர் திரும்பிப்பார்த்து அவளைக் கண்டு: மகளே நம்பிக்கையாயிரு, உன் விசுவாசம் உன்னைச் சௌக்கியமாக்கினதென்றார். அந்நேரமுதல் அந்த ஸ்திரீ சௌக்கியமாயிருந்தாள். யேசுநாதர் அந்த அதிபதியினுடைய வீட்டிற் சேர்ந்தபோது அங்கே தாரை ஊதுகிறவர்களையும் இரைகிற ஜனக்கும்பலையுங் கண்டு, எட்டிப் போங்கள். ஏனெனில் இச் சிறு பெண் சாகவில்லை, நித்திரை செய்கிறாளென்றார். ஆனால் அவர்கள் அவரை நகைத்தார்கள். கும்பலை வெளியே தள்ளினபின், அவர் உள்ளே பிரவேசித்து, அவளுடைய கரத்தைப் பிடிக்கவே சிறு பெண் எழுந்திருந்தாள். இந்தக் கீர்த்தி அந்நாடெங்கும் பரவிப் பிரஸ்தாபமாயிற்று.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஊகிக்கிற ஞான உற்பனம் ஏதென்றால், பிரபு தனது குமாரத்தி மரணம் அடைந்தாள் என்றதினால், சரீரமரணமும் ஆத்துமமரணமும் என்று இருவித மரணம் உண்டு என்று அவதானிக்கக்கடவது. அது ஏதெனில், சரீரத்தால் பிராணன் பிரிகிறபோது சரீரமரணம் என்றும் ஆத்துமத்தால் தேவப்பிரசாதம் பிரிகிறபோது ஆத்தும மரணம் என்றும் சொல்லத்தகும். சரீர மரணம் திரி



தோஷ அதிகரிப்பால் உண்டாவதுபோல ஆத்தும மரணம் திரிவித ஆசைகளுடைய மீறுதலால் உண்டாக்கப்படுவது என்று அறியவும். ஆனதினால் இந்தப் பிரபு தன் குமாரத்தி சரீர சீவியம் அடைய ஆண்டவரைப் பிரார்த்தித்துக்கொண்டதுபோல நாங்கள் எங்கள் ஆத்துமத்துக்குப் பிரசாத சீவியம் அடைய ஆண்டவரை மன்றாடவேணும் என்ற படிப்பினையாம்.

ஆனால் ஆண்டவர் பிரபுவினுடைய பிரார்த்தனையைக் கேட்டு எழுந்தருளிப்போகிற வழியிலே பன்னிரண்டு வருஷம் பெரும்பாடு கொண்டிருந்த ஸ்திரி பின்பற்றிவந்து அவர் துகிலின் ஓரத்தைத் தொட்டுச் சுகமான விபரம் ஏதென்றால், அந்த ஸ்திரி அந்நிய வேதக்காரர்களுக்கு அடையாளமாம். அவள் ஈராறு வருஷம் துவாலை அசுத்தத்தால் சுத்திகரம் பெறமாட்டாமல் இருந்ததுபோல அந்நிய வேதக்காரர் ஈராறு வருஷம் அல்ல ஈராறாயிரம் கோடி வருஷம் இரத்தப்பிரளயமாய்த் தவம்பண்ணினாலும் ஆத்தும சுத்தி அடையமாட்டார்கள் என்ற விபரமாம். ஆனால் அவள் ஆண்டவருடைய வஸ்திரத்தைத் தொட்டுச் சுகமாவேன் என்று விசுவசித்துத் தொட்ட உடனே குணமாய்ப் போனதுபோல, ஆண்டவருடைய வஸ்திரம் என்கிற தேவமனுஷீகத்தை விசுவசிக்கிறவன் அதின் விளிம்பு என்கிற அணுப்பிரமாணமாகிலும் பேறுபலன் அடைந்தாலும் அத்தால் ஈடேறுவான் என்று அறியவும்.

அதின்பின் ஆண்டவர் இராச பிரபு நிவாசத்துக்கு எழுந்தருளிச் செத்திருந்தவளைக் கண்டு செத்தவள் அல்ல நித்திரை பண்ணுகிறாள் என்று திருவுளம்பற்றினது ஏதென்றால், புண்ணிய ஆத்துமாக்களுடைய மரணமானது உலோகத்துக்குச் சாவாய்க் காண்கிலும் ஞானக்கண்களுக்கு நித்திரை மருவாதியாயிருக்கும். அது ஏனென்றால், நித்திரை பண்ணுகிறவன் கொஞ்சநேரம் சரீரம் மறந்து விழிக்கிறதுபோலத் தர்ம ஆத்துமாக்கள் கொஞ்சக்காலம் சரீரத்தைவிட்டுப் பிரிந்திருந்து மறுபடியும் மகிமையோடு எழுந்திருப்பார்கள். இதல்லாமல் அவர்களுடைய ஆத்துமம் ஒருக்காலும் சாவைக் காணாமல் சீவித்திருக்கும். பாவிகளோ என்றால் தாங்கள் விழுந்த நரகத்திலே ஒருக்காலும் எழுந்திருக்கமாட்டாமல் ஆத்தும சரீரத்தோடு சதாகாலமும் அதிலே கிடக்கிறதினால், அவர்களுடைய மரணம் உண்மையான சாவாயிருக்கும் என்ற விபரம் காண்பித்தார் என்று அறியவும். ஆனால் ஆண்டவர் செத்தவளை எழுப்புகிறதுக்கு முன் தாரை ஊதுகிறவர்களையும் புலம்பல் சொல்லுகிறவர்களையும் தூரத் துரத்தின விபரம் ஏதென்றால், தாரை ஊது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறவர்களாவது, முகத்துதி செய்யும் வாசாலகர் என்றும், புலம்புகிறவர்கள், உலோக அளப்புக்காரர் என்றும் சொல்லலாகும். அப்படிப்பட்டவர்கள் ஆத்துமத்தின் உண்மை நிலையை மறைக்கிறதினால் அவர்கள் சஞ்சரிப்போடு ஆத்துமம் சீவியம் அடையப்போகாது என்றதைக் காண்பித்தார். ஆனதினால் அவர்களைத் துரத்தினதின் பின் ஆண்டவர் வீட்டில் பிரவேசித்துச் செத்தவளைக் கைதொட்டு எழுப்பினதுபோல நாங்கள் இவ்வுலோக சஞ்சாரத்தை அரோசித்தால் ஆண்டவர் எங்கள் இருதயம் என்கிற கிரகத்தில் பிரவேசித்துத் தம்முடைய திருக்கை என்கிற பிரசாத பெலத்தால் ஆத்துமத்தைத் தொட்டு எங்களையும் பரலோக சீவியத்துக்கு எழுப்புவார் என்ற அபிப்பிராயமாம்.

இந்தப் பிரகாரமாக ஆண்டவர் செத்தவளைத் தொட்டுப் போதித்த உபதேசம் எல்லாம் நாங்கள் ஊடற யோசித்து எங்கள் ஆத்துமத்தின் சாவாகிய பாவத்தையும் நரக தீர்வையையும் அகற்றத்தக்கதாக மனோபிரார்த்தனை வாக்குப்பிரார்த்தனை என்ற இருவித செபத்தால் ஆண்டவரை உபாசித்து, எங்கள் மனதைக் கலங்கப்பண்ணுகிற சந்தடியாகிற லௌகீக எண்ணம், சிற்றின்ப எண்ணம், துன்பம், விம்பம் எல்லாம் அகலத் துரத்தி எங்கள் இருதயம் தெளிந்த நதியாய்த் துலங்கப்பண்ணி அதில் நிழலாங்கமாய் இவ்வுலகத்திலே ஆண்டவருடைய சமுகத்தைக் கண்டு அவ்வுலோகத்திலே அவரைப் பிரத்தியட்ச அங்கமாய்க் காணப் பிரயாசப்படக்கடவோம்.

### திருச்சபைச் செபம்

கர்த்தாவே, உமது பிரசைகளாகிய அடியோர்கள் பெலவீனத்தினாற் கட்டிக்கொண்ட பாவக் கட்டுக்களிலிருந்து விடுதலையாகும்படியாக எங்கள் அக்கிரமங்களையெல்லாம் உமது அனந்த தயவினாற் பொறுத்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## ஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின்பின் இருபத்துநாலாம் ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு இருபத்துநாலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷர்



களுக்குத் திருவுளம்பற்றினதாவது: தானியேல் தீர்க்கதரிசியால் வசனிக்கப்பட்ட அருவருப்புக்குரிய நாசமானது திருஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, வாசிக்கிறவன் உணரக்கடவான். அப்போது யூதேயா நாட்டிலிருக்கிறவர்கள், மலைகளுக்கு ஓடிப்போகக்கடவார்களாக. அரமியத்தில் இருக்கிறவனும் தன் வீட்டிலிருந்து எதையாகிலும் எடுக்கும்படி இறங்காதிருப்பானாக. வயலிலிருக்கிறவனும் தன் வஸ்திரத்தை எடுக்கும்படி திரும்பாதிருப்பானாக. அந்நாட்களில் கெற்பவதிகளுக்கும், பாலூட்டுகிறவர்களுக்கும் ஐயோ கேடு! ஆதலால் நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலாவது ஓய்வுநாளிலாவது நேரிடாதபடிக்குப் பிரார்த்தித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், அப்பொழுது மிகுந்த உபத்திரவமுண்டாகும். அவ்வித உபத்திரவம் உலகமுண்டான நாள்முதல் இந்நாள்மட்டும் இருந்ததுமில்லை. இனி இருக்கப்போகிறதுமில்லை. அந்த நாட்கள் குறைக்கப்பட்டாலொழிய, எந்த மாம்சமும் பிழைக்கமாட்டாது. ஆயினும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தம் அந்த நாட்கள் குறைக்கப்படும். அக்காலத்தில், இதோ கிறீஸ்துநாதர் இங்கேயிருக்கிறார், அல்லது அங்கேயிருக்கிறார் என்று யாராவது உங்களுக்குச் சொன்னால் விசுவசியாதேயுங்கள். ஏனெனில் கள்ளக் கிறீஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பிக் கூடுமாகில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் வஞ்சிக்கும்படியான பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்தேன். ஆதலால், இதோ, அவர் வனாந்தரத்திலிருக்கிறார் என்று சொன்னாலும் வெளியே புறப்படாதிருங்கள். இதோ, வீட்டுக்குள்ளேயிருக்கிறார் என்றாலும், விசுவசியாதேயுங்கள். ஏனெனில் மின்னலானது கிழக்கில் தோன்றி, மேற்குமட்டாகப் பிரகாசிப்பது எப்படியோ, அப்படியே மனுமகனுடைய வருகையுமிருக்கும். பிணம் எங்கேயோ அங்கேயே கழுகுகளும் வந்துகூடும். அந்நாட்களின் உபத்திரியத்துக்குப் பின்பு, உடனே சூரியன் இருள, சந்திரன் தன்னொளி கொடாதிருக்க, நட்சத்திரங்களும் வானத்தினின்று விழ, வானத்தின் வல்லமைகள் அதிரும். அப்பொழுது மனுமகனுடைய அடையாளமானது வானத்தில் காணப்படும்; பூமியிலுள்ள சகல ஜாதி ஜனங்களும் புலம்பி, மனுமகன் வான மேகங்களின்மேல் மிகுந்த வல்லபத்தோடும் மகிமையோடும் வருவதைக் காண்பார்கள். அப்போது அவர் தம்முடைய தூதர்களை எக்காளப் பெருந்தொனியோடு அனுப்புவார். அவர்கள் வானத்தின் மேல்முனை முதல், கடைமுனை வரையில், நான்கு திசைகளிலுமிருந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள். அத்திமரத்தினின்று ஓர் உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள். அதில் இளந்துளிர்கண்டு, இலைகள் தழைக்கும்போது, கோடைகாலம் சமீபமாயிற்றென்று அறிந்திருக்கிறீர்கள். இவ்வண்ணமே, நீங்களும் இவைகளெல்லாவற்றையும் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறாரென்று அறிந்துகொள்ளுங்கள். இவையெல்லாம் நடந்தேறுமளவும், இந்தச் சந்ததி ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்துபோம். என் வார்த்தைகளோ ஒழிந்துபோகாது என்று திருவுளம்பற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தின் அபிப்பிராயமாவது: தேவாசார ஸ்தலத்தில் துர்ஆசாரம் காண்கிறவேளை சங்காரம் வரும் என்றதினால், தேவாசாரஸ்தலம் என்பது கோயில், ஆலயம் முதலான பூச்சிய தலங்களும் குரு சந்நியாசி தபோதனர்களுடைய சுத்தமான பீடங்களும் ஸ்நானம், உச்சாரணம், சற்பிரசாதம் முதலான தேவப்பிரசாத ஸ்தானங்களுமாம். இப்படிப்பட்ட இடங்களிலே துர்ஆசாரம் என்கிற பூச்சியம் அற்ற அக்கிருத்தியங்கள் நடக்கும்போது வரப்போகிற சங்காரம் என்பது முதலாவது: உலோகத்துக்கு முதுமையான எருசலேநகர சங்காரமும், இரண்டாவது: ஞான நகரமாகிய மனுஷ ஆத்துமத்தில் நன்மை சங்காரமும், மூன்றாவது: சகல உலோக சங்காரமும் உண்டாகும் என்ற அபிப்பிராயமாம். அப்படிப்பட்ட காலத்திலே யூதேய இராச்சிய குடியானவர்கள் பருவதங்களில் ஏறவும், முகட்டில் வெளியில் இருந்தவர்கள் வீட்டில் திரும்பாமல் இருக்கவும் வேணும் என்றது ஏதென்றால், அந்நாளிலுள்ள நெருக்கத்தின் கடினத்தால் எவனாகிலும், தன் ஊர், தேசம், வீடு, மனைகளில் வாழவும், ஆளவும் இடங் கிடையாது என்று காண்பித்தார். இது அல்லாமல் அதின் ஞான யோசனை ஏதென்றால், பருவதங்களில் ஏறுகிற மேரையாவது: சுகிர்த பருவதமாயிருக்கிற கிறீஸ்துநாதர் பரிசுத்த கன்னியாஸ்திரி முதலான தர்ம இஷ்டர்களுடைய அடைக்கலமாய்ப் போகவும் தியான செபம் என்கிற ஏணிகளால் வான முகடுகளில் ஏறவும் வேணும் என்ற படிப்பினையாம். வெளியிலே இருக்கிறவன் வீட்டுக்கு வாராதிருப்பானாக என்றதினால், உலோக வாழ்வை அரோசித்துத் தர்ம வழியில் போனவன் மறுபடி உலோக வாழ்வை விரும்பி வரக்கடவதல்ல என்ற படிப்பினையாம். அந்நாளிலே கெற்பணிகளுக்கும் ஊட்டும் தாய்களுக்கும் அதிக பரிதாபம் உண்டாம் என்றது ஏனென்றால், அவர்களுக்குப் புத்திரர்கள்பேரில் இருக்கிற பட்சத்தினால் அதிக வியாகுல கஷ்டம் உண்டாய்த் தங்களுடைய சீவனைப் பார்க்க, அவர்களுடைய சீவனை இழக்கிறதிலே அதிகமாய்ப் பரிதவித்து அந்தப் பரிதாபத்தால் தங்கள் ஆத்துமம் ஈடேற்றுகிறவழியை அவதானிக்கமாட்டாமல் கெட்டுப்போவார்களென்ற விபரமாம். இதல்லாமல் அதின் ஞான அர்த்தமாவது: கெற்பம் என்றது, மனோ இந்திரியம் என்றும் அதில் செனித்த பிள்ளை சுகிர்த சிந்தை என்றும் அப்படிப்பட்ட சிந்தை பலன்கொடாமல் இருக்கிறது பிள்ளைப்பெறுமலிருக்கிற மேரை என்றும் சொல்லத்தகும். ஆகையால் அப்படிப்பட்டவர்கள் ஐயோ என்று பிரலாபிக்கிற சத்தமாவது: நரகத்திலே நித்தம் அழுகிற பாவிக



ளுடைய பிரலாபத்தின் இலட்சணமாய் இருக்கும் என்று அறியவும். மாரிகாலத்திலும் சனிவாரத்திலும் பயணம் போகாதே என்ற விபரம் ஏதென்றால், மழைக்காலத்திலே சலம் சேறு சரியால் வழிகளிலே இடறுகள் உண்டாகுமே. குளிர் காற்றால் உஷ்ணம் அற்றுச் சீதளம் உண்டாகுமே. அப்படியே தேவபத்தி என்கிற உஷ்ணம் இல்லாத மனதோடும் பாவத்திலே இடறுகிற நினைவோடும் நடக்கக் கடவதல்ல என்றும் காண்பித்தார். சனிக்கிழமையில் நடவாதே என்றது ஏனென்றால், அந்நாளிலே யூத மார்க்கத்தில் ஊழியத் தொழில் விலக்கியிருந்ததினால் அப்படியே ஆத்தும நன்மையை விலக்குகிற தொழிலாகிற பாவ எண்ணம் சரீர எண்ணம் உலோக எண்ணம் இத்தொகையான எண்ணங்களால் பரலோக வழி நடக்கப் போகாது என்ற விபரமாம். அந்தக் காலத்திலே பொய்யாங்க கிறீஸ்துதெரிசிகள் வருவார்கள் என்றது ஏதென்றால், அந்திக்கிறீஸ்து என்கிற தேவசத்துராதியும் அவனுடைய மந்திரி, பிரதானிகளும், உலகம் முடியுங்காலத்துக்கு முடுகினதாய் வருவார்கள் என்றும் இப்போதும் பதிதர் முதலான துன்மார்க்கக்காரர் அவர்கள் இடமாய்த் திரிகிறார்கள் என்றும் காண்பித்தார். அவர்கள் அங்கு இங்கு கிறீஸ்து உண்டு என்று சொல்லுகில் விசுவசியாதே என்றதினால், அவர்களுடைய பொய்மத மார்க்கங்களை அங்கீகரிக்கவேண்டாம் என்று படிப்பித்தார். அவர்கள் காண்பிக்கிற அதிசயங்கள் அவர்ச்சியர்களான தெரியப்பட்டவர்கள் முதலாய் ஏய்ப்புண்ணத்தக்க விதமாய் அப்படிக்குப் பெரிதாயிருக்கும் என்றதினால், அவர்கள் பிசாசின் மாயவித்தைகளால் சமஸ்தரும் பயப்படத்தக்கதாகப் பொய்யாங்கமான காயசித்தி, மாயாசித்திகளைக் காண்பித்து அத்தால் பாவிகளையும் தர்மவாளர்களையும் மோசம்போக்க உத்தியோகிப்பார்கள் என்ற அபிப்பிராயமாம். ஆனால் அதுகளைக் கண்டு பாவிகள் மோசம்போவார்கள் அல்லாதே சர்வேசுரனால் மோட்சத்துக்குக் குறிக்கப்பட்ட தர்மவாளர் அத்தால் ஏய்ப்புண்ணாமல் அசையாத நிலையாய் இருப்பார்கள் என்று அறியவும். அது எப்படியென்றால், பசும்பொன் அறவைத்தால் அதிகமாய்த் துலங்கும். அடுவல் கருகி நீறாய்ப் போகுமே; அம்மருவாதியாயிருக்கும் என்று அறியவும். பிணம் உள்ள இடத்தில் பட்சிகள் இருக்கும் என்றதினால் பாவ கந்தம் வீசுகிற இடத்தில் பேய்த் துர்க்கந்தம் கூடும் என்ற அபிப்பிராயமாம். சந்திர, சூரிய, நட்சத்திரங்கள் பிரகாசம் மறையும் என்றதினால், சோதிமண்டலங்களால் உலோகத்துக்கு உள்ள உபகாரங்கள் அற்றுப்போகும். இதல்லாமல் சூரியனாகிய தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியும் சந்திரனாகிய திவ்விய பிரசாதமும் நட்சத்திரமாகிய நல் எண்ணங்களும் இவையெல்லாம் இல்லாமற் போகும் என்று அறியவும். ஆகாசத்திலே ஆண்டவருடைய இலாஞ்சனை பிரதாபிக்கும் என்றது ஏதென்றால், அவர் பாடுபட்ட சிலுவை என்ற விருதின் அடையாளம் நடுத்தீர்வைநாளிலே ஆகாசத்தில் நின்று எழுந்தருளப்பண்ணிச் சகல பூவாசிகள் காணத்தக்கதாக உலோக நடுவாந்த நாட்டில் உன்னத ஸ்தலத்திலே பாவ புண்ணியத்துக்குச் சாக்ஷியாய் ஸ்தாபிக்கப்படும் என்று அறியவும். அப்போது உலோக கோத்திரங்கள் எல்லாம் அழும் என்றதினால், இயக்கோ என்கிற பிரதான பிதாவின் பன்னிரண்டு புத்திரர்களால் பலுகின பன்னிரண்டு யூதர் பிதிர் பரம்பரைகள் யூதேய இராச்சியத்திலே அதிபதியாய் அதிலே ஆண்டவரைச் சிலுவையிலே வாதித்ததினால் அந்தச் சிலுவையின் மகிமையை அவர்கள் கண்டு மகா பரிதாபத்தோடு அழுவார்கள் என்ற விபரமாம். அதின்பின் ஆண்டவரை வல்லப மகிமையோடு காண்பார்கள் என்றதினால், அவரைப் பூலோகத்திலே நிந்தித்தவர்கள் அவருடைய தேவ மகிமையைக் கண்டு நாணவும், அவரை வதைத்தவர்கள் தங்களை வாதிக்கிற வல்லமையைக் கண்டு பயப்படவும், ஆன முக தரிசனை அடைவார்கள் என்ற அர்த்தமாம். வானமேகங்களிலே வருவார் என்றதினால், வானமேகம் என்கிற வான இராச்சியத்தின் நீதியைப் பூமியில் காண்பிக்கக் கொண்டுவருவார் என்ற அர்த்தமாம். எக்காள சத்தத்தோடு மனோரூபிகளை அனுப்பி உலோக நான்கு எல்லையிலுமிருந்து அவர்ச்சியர்களைக் கூட்டுவார் என்றதினால் நாலு தேவதூதர்கள் உலோக நாலு திக்கிலும் எக்காளம் ஊதுகிற சத்தமாய்க் கூப்பிட்டுச் செத்தவர்களை நடுவுக்கு வரச் சொல்லுவார்கள் என்றும், அப்படியே வந்தவர்களில் தெரியப்பட்டவர்கள் மோக்ஷ இராச்சியத்திலே கூடுவார்கள் என்றும் அபிப்பிராயமாம்.

அத்திமரத்தில் கிளையும், தழையும் கண்டவுடனே, கோடைக்காலம் சமீபித்த அடையாளத்தை அறியுங்கள் என்றது ஏதென்றால், அத்தியாவது உலோகம் என்றும், கிளையும், தழையும் அதில் உற்பவிக்கிற சரீர, ஆத்தும உபத்திரியங்கள் என்றும் சொல்லப்படும். அல்லது அத்தி மனுஷன் என்றும் தழையும், கிளையும் அவனுடைய மனோவாக்குக் கிரியைகள் என்றும் சொல்லத்தகும். இவையெல்லாம் அக்கிரமமாய்ப் பிரபலித்த உடனே சாவு என்கிற ஆயுதத்தால் ஆத்துமம் என்கிற குலையை அறுத்து உலோகம் என்கிற மரமும் அடியோடே சங்கரிக்கப்படும் என்ற அர்த்தமாம். இத்தன்மையாக ஆண்டவர் பின்வரப்போகிற சங்காரங்களுடைய அடையாளத்தை ஏலவே காண்பித்ததை நாங்கள் அறிந்து எங்கள் ஆத்துமம் என்கிற நகரியில் தர்ம அழிவு வாராதபடிக்குத் துராசாரமாகிய துர்ச்சன கிருத்தியங்களைத் தவிர்த்துப் பேய், மெய், வையம் என்கிற சத்துராதி அந்திக்கிறீஸ்துவின் மந்திரிகளால் ஏய்ப்புண்ணாமலும் துர்விசாரம் ஆகிய அவர்களுடைய உபதேசங்களைக் கேளாமலும் திரவிய சுக வெகுமானம் என்கிற அதிசய மாய்கைகளை நம்பாமலும் அவர்கள் பண்ணுகிற நெருக்கமாகிய அக்கினியில் பொற்காசுபோலத் துலங்கி வயிரத் தழிபோல விசுவாச உறுதியாய் நடுத்தீர்வைக்கு வருகிற ஆண்டவரை அவர்ச்சியர்களென்கிற தெரியப்பட்டவர்களோடு அலர்ந்த முகமாய்க் கண்டு எங்கள் சுகிர்தம் என்கிற உருசிகர அத்திப்பழங்களை அவருடைய திருப்பாதத்திலே காணிக்கை வைத்து அவரோடே சததமான சீவியத்தோடு சீவித்திருக்கப் பிரயாசப்படக்கடவோம்.



## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீருடைய விசுவாசிகளாகிய நாங்கள் உமது தெய்வீக வரப்பிரசாதத்தின் ஆதரவை ஆவலோடு தேடுகிறவர்களாகி உம்முடைய தயாபர இரக்கத்தின் மேலான உதவியை அடைந்து கொள்ளத்தக்கதாக எங்கள் மனதுகளைத் தூண்டியருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோக்ஷவாளருடைய திருநாட்களிலே வாசிக்கிற சுவிசேஷ விரித்துரை.

---

## தை மாதம் இருபதாந் திகதி
# ஆராதிஷ்ட செபஸ்தியாம்
## முனீந்திரனுடைய திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக லூக்கா ஆறும் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் மலையிலிருந்து இறங்கி மைதானமான ஓரிடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷர் கூட்டமும், யூதேயா நாட்டின் எத்திசையிலிருந்தும், ஜெருசலேம் நகரத்திலிருந்தும், தீர், சீதோன் நகரங்களின் கடற்கரைகளிலிருந்தும் வந்த ஏராளமான ஜனங்களும் இருந்தார்கள். இவர்கள் அவருடைய வாக்கைக் கேட்கவும், தங்கள் நோய்களினின்று சுகமாக்கப்படவும் வந்திருந்தார்கள். அசுத்த அரூபிகளால் உபாதிக்கப்பட்டவர்களும் சொஸ்தமானார்கள். அவரிடத்திலிருந்து ஒரு சக்தி புறப்பட்டு, எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்களெல்லாரும் அவரைத் தொடும்படி வழிதேடிக்கொண்டிருந்தார்கள். அப்போது அவர் தம்முடைய சீஷர்கள்மேல் தமது கண்களை ஏறெடுத்துப்பார்த்துத் திருவுளம்பற்றினதாவது : தரித்திரர்களே, நீங்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில், சர்வேசுரனுடைய இராச்சியம் உங்களுடையது. இப்பொழுது பசியாயிருக்கிறவர்களே, நீங்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் திருப்தியடைவீர்கள். இப்பொழுது அழுகிறவர்களே, நீங்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் சிரிப்பீர்கள். மனுமகனைப்பற்றி ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களை விலக்கித் தூஷணித்து உங்கள் பேரை ஆகாதென்று தள்ளும்போது, நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந்நாளிலே அகமகிழ்ந்து களிகூருங்கள். ஏனெனில் இதோ, பரலோகத்திலே உங்கள் சம்பாவனை ஏராளமாயிருக்கின்றது என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷவாக்கியத்தால் ஆராதிஷ்ட செபஸ்தியாம் முனீந்திரனுடைய சுகிர்த சீவியம் இன்று வாழ்த்தப்படுவது. அது எப்படியென்றால், செபஸ்தியாம் முனீந்திரன் நற்வோன, மெதியோலான என்ற இரு தேசவாசிகளான சங்கைபோந்த பிதா மாதாக்களால் பிரசவமானார். அவருடைய சரீர இலக்ஷண உரூப ரேகையாலும் குல மகிமையாலும் தியோக்கிலேசியானு என்ற உரோமை நகரத்துச்

சக்கிரவர்த்தி அவரை மிகவும் நேசித்ததால், தனது முந்தின படைச் சேனைக்குத் தளவாயாக உட்படுத்தினான். ஆனால் செபஸ்தியாம் முனீந்திரன் சத்தியவேதத்திலே மிகவும் உறுதி கொண்டிருந்ததினால் கிறீஸ்தவர்களுக்குத் தயாபர பட்சத்தாலும் உரொக்கத்தாலும் இரகசியமாய் உபகாரம்பண்ணி வருவார். இவர்களில் வேதவிசுவாச உறுதிக்காகக் கஸ்தி வாதைப்படப் பயந்து தத்தளித்திருக்கிறவர்களைத் தமது நற்போதகத்தால் உறுதிப்படுத்துவார். இந்த நற்போதகங்களைக் கேட்டவர்கள் மிகுதியான தயிரியங்கொண்டு அச்சம், பயம் இல்லாமல் வாதைப்பட ஒருமிப்பார்கள். இவர்களில் விசேஷமாய் மாற்கு, மருசலியானு என்கிற இரு சகோதரர் தத்தளித்திருக்கும்போது, செபஸ்தியாம் முனீந்திரன் அத்தை அறிந்து நற்போதகங்களால் உறுதிப்படுத்தி அவர்களுக்கு மிகுதியான திடாரிக்கத்தைப் பயிற்றினதினால் இருவரும் கிறீஸ்துநாதருக்காகத் தங்கள் உதிரத்தைச் சிலவழித்து பிராணபரித்தியாகிகளாகப் பெறுபேறு அடைந்தார்கள். இத்தைக் குறித்துத் தியோக்கிலேசியானு அறிந்து செபஸ்தியாம் முனீந்திரனை அழைப்பித்து மிகுந்த கோபத்தால் கயற்றினதின்பின் நானாவித அபாய உபாயத்தால் அவரைச் சத்தியவேதத்திலிருந்து அக்கியான மதத்துக்குத் திருப்பத் தெண்டித்தான். ஆனால் உபகாரத்தாலும் முனிவின் ஆக்கினையாலும் பயமுறுத்துதலாலும் ஒரு பலனும் காணாததினால் அவரை ஒரு தூணிலே கட்டுவித்து அம்பால் எய்யக் கற்பித்தான். இந்த வாதையால் உயிர் அற்றுப்போனது என்று யாவரும் நினைத்துப்போனதால் இரோனிய என்ற சுத்தமான ஸ்திரி பிரேதத்தை அடக்கம்பண்ணுகிறதற்காகக் கட்டவிழ்ப்பித்தபோது சீவனுடனிருக்கக்கண்டு தனது நிவாசத்துக்குக் கொண்டுபோய் அவுஷதங்களால் குணப்படுத்தத் தெண்டித்தாள். அப்படியே சொற்ப நாளுக்குள்ளாக முழு ஆரோக்கியத்தை அடைந்து சொல்லப்பட்ட கொடிய தியோக்கிலேசியானுக்கு எதிராகவந்து அவனுடைய அநீதத்தைக் கண்டித்தார். கொடிய தியோக்கிலேசியானு செபஸ்தியாம் முனீந்திரன் மரணித்துப்போனதாக உணர்ந்திருந்ததால் அவரைச் சீவனுடன் காணும்போது ஆச்சரியப்பட்டுக் கண்டனத்தால் கோபம் அதிகமாகி ஆத்துமம் பராபரனுக்குக் கையளிக்குந்தனையும் அவரைக் கசை, சம்மட்டி இது முதலான ஆயுதங்களால் வாதிக்கும்படி கட்டளைபண்ணினான். இத்தன்மையாய்ப் பிராணன் பிரிந்ததின்பின் அவருடைய தேகம் அசுத்தஸ்தலத்தில் வீசிப்போடக் கட்டளை பண்ணப்பட்டது. அந்நாளில் உலூசினா என்ற புண்ணிய ஸ்திரிக்



குச் செபஸ்தியாம் முனீந்திரன் தெரிசனத்தில் காணப்பட்டுத் தம்முடைய தேகம் இருக்கிற இடமும் அடக்கப்படத்தக்க தலமும் காண்பித்தார். இப்படியே குறித்த தர்ம ஸ்திரி அவருடைய தேகத்தை அபவித்திரமான ஸ்தலத்திலிருந்து எடுத்து உரோமை நகரத்தில் சுத்தவாளருடைய தேகங்கள் அடக்கியிருக்கிற கத்தக்கூம்பு என்கிற அதி பூச்சியமான ஸ்தலத்தில் பூமிதானம்பண்ணிவைக்க அவர் பேருக்குப் பிரதான கோவில் கட்டப்பட்டது. அவருடைய சலுகையைத் தேடுகிறவர்கள் கொள்ளைநோய் இது முதலான நானாவித உரோகங்களால் சகாயம் அடையலானதினால் குறித்த சுவிசேஷத்திலே காணலாகிற மேரை கிறீஸ்துநாதர் வெளியரங்கமான ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும்போது அவ்விடத்தில் கூடின ஏராளமான சனக்கூட்டம் அவரால் புறப்படும் வல்லமையால் குணப்பட விரும்பியிருந்தபிரகாரம், ஆராதிஷ்ட செபஸ்தியாம் முனீந்திரன் அந்த வரத்தை அடைந்தவராய்ச் சகாயம்பண்ணிவருகிறார். அத்தால் நாங்கள் எல்லோரும் அவர் பேரிலே மிகுந்த பத்தி கொண்டு அவருடைய சுகிர்த சீவியத்தின் பிரகாரம் இயன்றளவாக நடந்து படுகிற ஆபத்து முதலான ஆத்தும சரீரத்தின் வியாதிகளிலிருந்து அவருடைய சலுகையால் நிவாரணமாகப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லபமுள்ள சருவேசுரா சுவாமீ! எங்கள் பலவீனத்தைக் கிருபையுடனே பார்த்து அடியோர்கள் செய்த பாவங்களின் கனத்தினால் எங்களுக்கு வந்திருக்கிற துன்பதுரிதங்களின்பேரிற் சித்தமிரங்கி, அர்ச். பபியானும் செபஸ்தியானும் என்கிறவர்களுடைய மன்றாட்டினால் எங்களுக்கு வேண்டிய ஆதரவு கிடைக்கும்படிக்குக் கிருபை செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக ஆமென்யேசு.

---

### தை மாதம் இருபத்தொன்பதாந் திகதி

# ஆராதிஷ்ட பிறஞ்சீஸ்கு சாலிஸ்

## முனீந்திரனுடைய திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு இருபத்தைந்தாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷர்களுக்கு உவமையாக இப்படியே மொழிந்தருளினார். ஒரு மனுஷன் தூரதேசத்துக்குப் பயணமாய்ப் புறப்பட்டபோது தனது ஊழியரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துத் தன்னுடைய திரவியங்களை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தான். அவன் ஒருவனுக்கு ஐந்து தலேந்தும், வேறொருவனுக்கு இரண்டு தலேந்தும், இன்னொருவனுக்கு ஒன்றுமாக, அவனவனுடைய சக்திக்குத் தக்கபடி கொடுத்து, உடனே பிரயாணமாய்ப் போனான். ஐந்து தலேந்தை வாங்கினவன் போய், அவைகளைக்கொண்டு உழைத்து, வேறு ஐந்தைச் சம்பாதித்தான். அவ்வண்ணமே இரண்டு தலேந்தை வாங்கினவனும் வேறு இரண்டைச் சம்பாதித்தான். ஒன்றை வாங்கினவனோ போய், பூமியைத் தோண்டித் தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான். வெகுகாலத்துக்குப் பின் அந்த ஊழியருடைய எஜமான் வந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான். அப்பொழுது, ஐந்து தலேந்தைப் பெற்றுக்கொண்டவன் அணுகி வேறே ஐந்து தலேந்தை ஒப்புக்கொடுத்து: ஆண்டவனே, ஐந்து தலேந்தை என் வசத்தில் ஒப்புவித்தீரே, இதோ வேறைந்தை ஆதாயமாகச் சம்பாதித்தேன் என்றான். எஜமான் அவனைப் பார்த்து: சவ்வாஸ், நம்பிக்கையுள்ள நல்ல ஊழியனே! நீ சொற்பக் காரியங்களில் பிரமாணிக்கனாயிருந்ததினால், அநேக காரியங்களின்மேல் உன்னை அதிகாரியாக்குவேன். உன் எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி என்றான். அப்படியே இரண்டு தலேந்தை வாங்கினவனும் வந்து: ஆண்டவனே! என் வசத்தில் இரண்டு தலேந்தை ஒப்புவித்தீரே, இதோ வேறிரண்டைச் சம்பாதித்தேன் என்றான். எஜமான் அவனைப் பார்த்து: சவ்வாஸ், நம்பிக்கையுள்ள நல்ல ஊழியனே! நீ கொஞ்சத்தில் பிரமாணிக்கமுள்ளவனாயிருந்ததினால், அநேக காரியங்களின்மேல் உன்னை அதிகாரியாக ஸ்தாபிப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி என்றான்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின் அபிப்பிராயமாவது: தூர தேசத்துக்குப் போகப் புறப்பட்ட நாயன் ஆர் என்றால், பரலோகத்துக்கு எழுந்தருளின எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துவாம். ஊழியருக்குக் கொடுத்த பணம் ஏதென்றால் சகல மனுஷருக்கும் கொடுக்கப்பட்ட சரீர ஆத்தும சக்தி இலக்ஷணங்களும் தேவகுமாரன் இவ்வுலோகத்துக்கு இறங்கி வந்து தமது மரண பீடைகள் நிமித்தமாகப் பிசாசின் அடிமைத்தனத்தால் எங்களை இரட்சித்து எங்கள் ஆத்தும ஈடேற்றத்துக்கு உபகாரமாக உண்டாக்கின பிரசாத திரவியங்கள் இது முதலாகக் கொடுக்கப்படுகிற வரப்பிரசாதங்களாம். அப்படியே ஒருவனுக்கு அஞ்சு பொன்னும், ஒருவனுக்கு இரண்டுபொன்னும், ஒருவனுக்கு ஒரு பொன்னும் கொடுத்ததற்கு அர்த்தம் ஏதென்றால், சரீர ஆத்துமங்களுக்குக் கிடைக்கிற சுபாப தத்துவப் பெலனும் தேவ வரப்பிரசாதங்களும் சகலருக்கும் ஒருவிதமாகக் கிடையாமல் சிலருக்கு அதிகமும் சிலருக்குக் குறைவும் கிடைக்கிறதற்கு விபரமாம். நாயன் திரும்பிவந்து கணக்குக் கேட்டான் என்றதே. அது யேசுநாதர் நடுத்தீர்வை அன்று சகல மனுஷருடைய பாவ புண்ணியங்களை விசாரித்து



நீதம் தீர்க்கிறதற்கு விபரமாம். அஞ்சு பொன் கைப்பற்றினவன் இன்னம் அஞ்சு பொன்னும், இரண்டு பற்றிக்கொண்டவன் இன்னம் இரண்டு பொன்னும் தேடினதற்கு அர்த்தம் ஏதென்றால், அவனவன் தன் தன் சுபாப கிரமத்திலாவது ஞான கிரமத்திலாவது சர்வேசுரனால் அடைந்த உபகார நன்மைகளுக்குத் தக்கது அவருக்குப் பண்செய்து தன் ஆத்தும ஈடேற்றத்துக்காகப் பிரயாசப்படவேணும் என்று காண்பித்தார். அது எப்படியென்றால், நல்ல சரீர ஆரோக்கியமுள்ளவன் சர்வேசுரனுடைய கற்பனைகள் குறை இன்றிச் செலுத்தவேணும் என்றும் அத்தனை சரீர சுக சவுக்கியம் இல்லாதவன் தனது துன்ப, துயரங்களைப் பொறுமையோடு நிருவகித்துக் கூடிய மட்டும் சர்வேசுரனுக்குப் பண்செய்ய வேணும் என்றும் அபிப்பிராயமாம். இன்னம் உலோகத்தில் வசிக்கிற கிறீஸ்தவர்கள் ஒரு பொன்னாகிய வேதாகமத்துக்கு அடுத்த கற்பனைகள் செலுத்தவும், குருமார் இரு பொன்னாகிய தங்கள் கடன்கள் தீர்க்கவும், தவசிகள், கன்னியாஸ்திரீமார் முதலான ஞான அப்பியாசத்துக்குச் சர்வேசுரனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அஞ்சு பொன்னாகிய தங்கள் ஞான அந்தஸ்துக்கடுத்த கடன் தீர்க்கவேணும் என்றும் காண்பித்தார். அப்படியே அவனவன் தன்னுடைய அந்தஸ்துக்கடுத்த தேவகற்பனைகளைக் குறையின்றிச் செலுத்தவேண்டியது.

ஆனதினால் இந்தத் திருநாளில் சர்வேசுரனுடைய இந்த உண்மையான வாக்கியத்தைக் கேட்ட சமஸ்தரும் அவனவன் சர்வேசுரனால் அடைந்த ஆத்தும சரீர உபகாரங்களைக்கொண்டு அவருக்கு நீதியாம்படி பண்செய்யப் பிரயாசிக்கவேண்டியது. அப்படியே பிரயாசித்தால் முன் குறித்த ஊழியர் இருவர் அடைந்த கருணைத் தயவு அல்லாமல் நித்திய மோக்ஷபாக்கியம் அடையலாம் என்று அறியக்கடவது. அதற்கு நாங்கள் தயிரியப்படத்தக்கதாக அர்ச். பிறஞ்சீஸ்கு சாலீஸ் குருப்பிரசாதியின் சுகிர்த நடக்கையைச் சங்க்ஷேபமாய்ப் பார்க்கக்கடவோம். அது எப்படியென்றால், அர்ச்சியசிஷ்ட பிறஞ்சீஸ்கு சாலீஸ் நல்ல கோத்திரத்திலுள்ள சுகிர்தவாளரான தாய் தந்தையர்களால் சாலீசு என்ற நகரியில் பிறந்தார். பால வயதில் தானே அவர் பண்ணின சுகிர்த அப்பியாசங்களால் மேல்வரும் காலத்துக்கு மகா தருமவாளனாவார் என்று அவரைக் கண்டயாவரும் அறிந்துகொண்டார்கள். வாலிப வயதில் கல்வி சாஸ்திரங்களைப் படித்து மகா படிப்பாளியாகப் பேர்ப்படப் பாத்திரமானார். சரீர சுக செல்வங்களையும் உலோக வெகுமானங்களையும் முழுமனதாய் வெறுத்து வாலிபவயதில்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிசுத்தம் காப்பேன் என்று சர்வேசுரனுக்கு வார்த்தைப்பாடு கொடுத்திருந்தார். சபோதியவென்ற மந்திராலோசனையில் தமக்கு நியமிக்கப்பட்டிருந்த மகா உத்தியோகத்தைக் கைக்கொள்ளாமல் குருவிருத்திக்கு ஏற்பட்டுத் தேவ குமாரனுடைய திரு உதிரத்தால் மீட்கப்பட்ட ஆத்துமங்களுக்காகத் தமது ஆத்தும சரீரத்தைக் கூடிய சகல பிரயாசத்துக்கும் ஒப்புக்கொடுத்தார். அப்படியே வாக்குக்கு எட்டாத கஸ்தி வேதனைகளைச் சரீரத்தில் பட்டு அனுபவித்து அநேகம் ஆத்துமாக்களைப் பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து இரட்சித்துச் சுகிர்த நெறியில் திருப்பி எழுபத்தீராயிரம் வேதபேதகபதிதரைச் சத்தியவேதத்துக்குத் திருப்பினதும் அல்லாமல் அநேக துஷ்ட பாவிகளைத் தமது உபதேசத்தால் தேவபய பத்திக்குத் திருப்பிக்கொண்டார். குருப்பிரசாதி ஸ்தானத்துக்கு ஏற்பட்டுச் சர்வேசுரனுடைய நேசத்தால் வெந்து எரிந்து அவருடைய ஸ்தோத்திர ஆசாரம் வர்த்திக்கும்படியாகக் கன்னியாஸ்திரீகளின் கூட்டமொன்றை உண்டாக்கி அதற்கு வேண்டிய ஞானக் கிரமக் கட்டளைகளைக் கொடுத்துத் தேவ ஸ்தோத்திரத்தை வர்த்திக்கப்பண்ணினார். அதல்லாமல் அவருடைய விரத்தத்துவம், பொறுமை, தாழ்ச்சி, உபவாச ஒறுத்தல் இதுமுதலான சுகிர்தங்கள் சொல்லி முகிக்கலான விசேஷம் அல்ல. இந்தப்பிரகாரமாய் இந்தத் தர்மவாளன் சர்வேசுரனால் பற்றிக்கொண்ட அஞ்சு பொன்னாகிய சரீர தத்துவப் பெலன், உலோக மகிமை, சாஸ்திரப்படிப்பு, தேவவிசுவாசம், ஞானக்கியானமாகிய இவைகளைக்கொண்டு இன்னம் அஞ்சு பொன்னாகிய மோட்ச பெறுபேறுகளைக் கூடிய பிரயாசத்தோடு தேடி அளவில்லாத மோக்ஷ பாக்கியத்தை அடைந்தார். இவருடைய ஞான தயிரியத்தை நாங்கள் பார்த்துச் சர்வேசுரன் எங்களுக்குக் கொடுத்தருளின கற்பனைகளைக் குறை இன்றிச் செலுத்தி மோக்ஷ பாக்கியத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் உமது ஸ்துதியரும் மேற்றிராணியாருமான முத்திப்பேறுபெற்ற பிறஞ்சிஸ்கு என்பவர் ஆத்துமாக்களின் இரட்சணியத்தின் பொருட்டு எல்லார்க்கும் எல்லாமாக இருக்கச் சித்தமானீரே. நாங்களும் உமது சிநேகத்தின் இன்பமாதுரியத்தினால் நிறைந்து அவருடைய நற்போதகங்களைப் பின்பற்றுவதினாலும் புண்ணிய பேறுகளின் சலுகையினாலும் நித்திய பேரின்பத்தை அடைந்துகொள்ளும்படி எங்களுக்குக் கிருபாகடாட்சம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயகர் யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

## மாசி மாதம் இரண்டாந் திகதி

# தேவமாதாவின் சுத்திகரத்திருநாளில்

## வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா இரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே மோயீசனுடைய நியாயப்பிரமாணத்தின்படி அவளுடைய சுத்திகர நாட்கள் நிறைவேறினபோது, அவரை ஜெருசலேமுக்குக் கொண்டுபோனார்கள். ஏனெனில் தாயின் கருப்பையைத் திறந்து பிறக்கும் ஆணெல்லாம் ஆண்டவருக்கு அபிஷேகமாக்கப்பட்டதென்று, கர்த்தருடைய நியாயப் பிரமாணத்திலே எழுதியிருக்கிறபடி, அவரைக் கர்த்தர் சமுகத்தில் ஒப்புக்கொடுக்கவும், ஒரு சோடு காட்டுப் புறாக்களையாவது, இரண்டு மாடப்புறாக் குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவேணுமென்று, கர்த்தருடைய பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி செய்யவும். (அவரை ஜெருசலேமுக்குக் கொண்டுபோகவேண்டியதாயிருந்தது). அப்பொழுது, இதோ ஜெருசலேமில் சிமையோன் என்னும் பேருள்ள ஓர் மனிதன் இருந்தார். அந்த மனிதன் நீதிமானுமாய், பயபக்தியுடையவருமாய், இஸ்ராயேலின் தேற்றரவுக்கு எதிர்பார்த்திருக்கிறவருமாய் இருந்தார். இஸ்பிரீத்துசாந்துவானவரும் அவரிடத்தில் இருந்தார். அன்றியும், தாம் ஆண்டவருடைய கிறீஸ்துவைக் காண்பதற்கு முன்னே சாவைக் காண்பதில்லையென்று அவர் இஸ்பிரீத்துசாந்துவினால் வாக்குப் பெற்றிருந்தார். அப்படியிருக்க, அவர் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவலால் தேவாலயத்துக்கு வந்தார். குழந்தையாகிய யேசுநாதருக்காக வேதமுறைமைப்படி செய்வதற்கு அவருடைய பிதா மாதா அவரை உள்ளே கொண்டுவரும்போது, அவர் தம்முடைய கரங்களில் அவரை ஏந்திக்கொண்டு, சர்வேசுரனைத் தோத்தரித்து வசனித்ததாவது: ஆண்டவரே! உம்முடைய வாக்கியத்தின்படியே உம்முடைய தாசனை இப்பொழுது சமாதானத்தோடு போகவிடுவீர்: ஏனெனில், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஏற்படுத்தின உம்முடைய இரட்சிப்பை என்னுடைய கண்கள் கண்டுகொண்டன. (அது) புறஜாதிகளைப் பிரகாசிப்பிக்கிற ஒளியாகவும், உமது ஜனமாகிய இஸ்ராயேலருக்கு மகிமையாகவும் இருக்கிறது என்று துதித்தார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே பரிசுத்த தேவமாதா தமது குமாரனைக் கோயிலிலே கொண்டுபோன காரணத்தின் மகிமை காண்பிக்கப்படுவது. அது ஏதெனில், பூருவவேத கிரமமாய் மொய்சேசு எழுதின பிரகாரம் ஆண்பிள்ளைப் பெற்ற ஸ்திரீகள் நாற்பதுநாளும், பெண்பிள்ளைப் பெற்றவர்கள் எண்பதுநாளும், துடக்குச் சுத்திகரமாக வீட்டிலே இருந்து அதின்பின் பெற்ற பிள்ளைகளைக்கொண்டு அதுக்கான புறா முதலான காணிக்கைகளையுங்கொண்டு கோயிலுக்

குப் போகக் கட்டளையாயிருந்தது. இதல்லாமல் தலைப்பிள்ளையானதுகள் கோயிலுக்குத்தானே தாசராகப்பண்ணவும், அல்லது காணிக்கைவைத்து மீட்கவும் கற்பித்திருந்தது. அது எது நிமித்தமோ எனில், இஸ்றுவேல் சந்ததி எஜிப்து இராச்சியத்தில் அடிமைப்பட்டிருந்த காலத்திலே அவர்களை ஈடேற்றத்தக்கதாக அந்த இராச்சிய குடியானவர்களில் தலைப்பிள்ளைகள் எல்லாம் சாக வரம் கொடுத்ததினால் அந்த நன்றி அறியத்தக்கதாக இஸ்றுயேல் குடிகளில் தலைப்பிள்ளைகள் சர்வேசுரனுக்குத் தாசராகக் கிரமமாய்க் கற்பித்திருந்தது. இப்படிப்பட்ட கட்டளை எல்லாம் சென்ம பாவத்தோடு பிறந்த பிள்ளைகளுக்கும், பிரசவித்த ஸ்திரீகளுக்கும், நியமமானது அல்லாதே அப்படிப்பட்ட ஒரு தோஷமும் இல்லாத பரிசுத்த தேவமாதாவுக்கும் குமாரனுக்கும் அந்தக் கட்டளை கடனாயிருக்கவில்லை. ஆனால் அவருடைய பரிசுத்த கன்னிமையை உலோகம் அறியாததினால் தேவகற்பனை மீறினார் என்று ஆவலாதி சொல்லாதபடிக்கும் நாங்களும் சர்வேசுரனுடைய தேவகற்பனைகளை எத்தனை பயபத்தியுடனே நிறைவேற்றவேணும் என்ற படிப்பனை காண்பிக்கும்படிக்கும் அப்படியே தமக்குக் கடன் இல்லாத கட்டளை ஆசாரங்களை மகா பத்தியோடு செலுத்தினார் என்று அறியவும். ஆனால் இப்படியே பரிசுத்த தேவமாதா தம்முடைய குமாரனைக்கொண்டு கோயிலுக்குப் போன இடத்திலே கண்ட அற்புத மகிமை ஏதெனில், தீர்க்கதெரிசியும், தெரிசினியுமாய் அருள் பெற்றிருந்த சிமியோனும் ஆனாளும் என்கிற தர்மவாதிகள் அந்தவேளையிலே கோயிலில் பிரவேசித்துத் தேவகுமாரனைக் கண்டறிந்து, இவர்தாம் பூலோகத்தை ஈடேற்ற வருபவரான கிறீஸ்து என்று உலோகத்துக்குப் பிரசித்தமாக்கித் துதித்தார்கள். ஆனதினால் இப்படிப்பட்ட திருநாட் கொண்டாட்டம் வருஷந்தோறும் கொண்டாடத்தக்கதாக வேத திருச்சபைக் கட்டளையாகிக் கிறீஸ்தவர்கள் சமஸ்தரும் அந்த ஆசீர்வதிக்கப்பட்ட மெழுகுதிரிகளைக் கொண்டு திருவிழாச் சுற்ற வழக்கமாயிற்று. ஆனால் அப்படியே மெழுகுதிரி ஏற்றுகிற விபரமும் பலனும் ஏதெனில், கொளுத்தின மெழுகுதிரியிலுள்ள மெழுகும் திரியும் நெருப்பும் என்கிற இந்த மூன்று பதார்த்தங்கள் யேசுநாதருடைய மனுஷ சரீரத்தையும், ஆத்துமத்தையும், தெய்வீகத்தையும் காண்பிக்கிற அடையாளமாம். அத்தைக் கையில் ஏந்தினதினால் அப்படிப்பட்ட தெய்வீக மனுஷீகமான கிறீஸ்துவை விசுவசிக்கிற விசுவாசத்தின் உண்மை காண்பிக்கிறதாம். இதின் நிமித்தமாய்க் கிறீஸ்தவர்கள் சாகிறவேளையில் தாங்கள் விசு-



வசிக்கிற கிறீஸ்துவேத விசுவாசத்தை விடாமலிருக்கிற அடையாளத்துக்குச் சாகுந்தனையும் கொளுத்தின மெழுகுதிரி கைவிடாமலிருக்கிற நெறியாம் என்று அறியவும். இத்தொகைப்பட்ட சுகிர்த படிப்பனைப் பலன் எல்லாம் கன்னிசுத்த தேவமாதா நிமித்தமாய் நாங்கள் கண்டு அடைகிறதினால் அவர்பேரில் சாகுந்தனையும் பத்திவிடாமலிருந்து அவர் சலுகையால் மோக்ஷ தெரிசனத்தின் வெளிச்சம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லவரும் சதா நித்தியருமான சருவேசுர சுவாமீ, தேவரீருடைய ஏக பேறுன சுதனானவர் இன்றைத்தினம் எங்களுடைய மாமிசசுபாவத்தோடு தேவாலயத்திலே காணிக்கைவைக்கப்பட்டதுபோல் நாங்களும் சுத்திகரிக்கப்பட்ட இருதயங்களோடு தேவரீருக்குக் காணிக்கையாக்கப்படச் செய்யவேணுமென்று மகா தாழ்ச்சியோடு உம்மை மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துதாமே காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## மாசி மாதம் இருபத்துநாலாந் திகதி
# ஆராதிஷ்ட மத்தியாஸ்
## அப்போஸ்தலுவின் திருநாளில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு பதினோராம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் உச்சரித்த வசனமாவது : பிதாவே, பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் ஆண்டவரே! உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். ஏனெனில் நீர் இவைகளை ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் மறைத்துச் சிறியோர்களுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், பிதாவே, இதுவே உமக்குப் பிரியமாயிருந்தது. சகலமும் என் பிதாவினால் எனக்குக் கையளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் பிதாவைத்தவிர சுதனை ஒருவனும் அறியான். அத்தன்மையே சுதனும், சுதன் யாருக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருப்பாரோ அவனும் தவிர, பிதாவை ஒருவனும் அறியான். வருந்திச் சுமைசுமந்திருக்கிறவர்களாகிய நீங்களெல்லோரும் என் அண்டையில் வாருங்கள், நான் உங்களைத் தேற்றுவேன். என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவனாயிருக்கிறேனென்று என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்போது உங்கள் ஆத்துமங்களுக்கு இளைப்பாற்றியைக் கண்டடைவீர்கள். ஏனெனில் என் நுகம் இனிதாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின் பொருளாவது: கல்வி பெருத்தவர்களுக்கு வெளிவிடாததுகளைச் சிறியோர்களுக்கு வெளிவிட்டார் என்றதினால், மகாசாஸ்திரம் கற்றிருக்கிற பெருமையுள்ளவர்கள் சர்வேசுரனுடைய இரகசியங்களை அறியப் பிராப்திகளாகாமல் தாழ்ச்சியால் தங்களைச் சிறுமைப்படுத்துகிறவர்கள் மகா தேவ ஞானத் தெளிவுகளுக்குப் பாத்திரம் ஆவார்கள் என்ற விபரமாம். இதல்லாமல் என் பாரத்தைச் சுமந்து, என் தாழ்ச்சி பொறுதியைப் பார்த்து நடவுங்கள் என்றதினால், தம்முடைய வேதகட்டளைகளின் பாரத்தை நாங்கள் தெண்டிப்போடு செலுத்தவேணும் என்றும் அதுக்காக எத்தனை கஸ்தி, துன்பங்களைப்பட்டுப் பிராணனைச் சிலவழிக்க வேண்டியிருக்கினும் அப்படியே பாடுபட்டு அவருடைய சுகிர்த பொறுதி, தாழ்ச்சியைப் பின்சென்று மோக்ஷ இளைப்பாறுதலை அடையவேணும் என்றும் விபரமாம். இந்த வாக்கியங்களின் படிப்பனைகள் எல்லாம் ஆராதிஷ்ட மத்தியாஸ் அப்போஸ்தலு குறைஅற்ற பிரகாரமாகச் செலுத்தின மேரை அவர் சுகிர்த நடக்கையில் காணலாயிருக்கும். அது எத்தன்மையோ என்றால், ஆண்டவர் தெரிந்துகொண்ட பன்னிரண்டு சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்றவன் கெட்டுப்போனதினால் அவனிடமாய் வேறொருவனைத் தெரிந்துகொள்ளவேணும் என்று அப்போஸ்தலுமார் கூடி உசாவி, ஞானத்திலும் தர்மத்திலும்போந்த இரண்டுபேர்களைத் தெரிந்து அவர்களில் அப்போஸ்தலு பிரசாதத்துக்குப் பேறுபெற்றவன் ஆர் என்று காண்பிக்கும்படி சர்வேசுரனைப் பிரார்த்தித்த இடத்திலே ஆராதிஷ்ட மத்தியாசுவின் பேரில் பெறுபேறின்குறி காணப்பட்டது. அதனால் மற்ற அப்போஸ்தலுமாரோடு அவர் கிறீஸ்துவேதம் பிரசங்கிக்கத்தக்கதாக யூதேய என்கிற இராச்சியம் அவருக்குப் பங்குப்பேறாய்க் கிடைத்தபிரகாரம் அந்த இராச்சியத்திலே அநேக வருஷம் துஷ்ட யூதருக்குக் கிறீஸ்துவேதம் உபதேசித்திருந்தார். அப்படியே அவர் பண்ணுகிற போதகங்களுக்குச் சர்வேசுரன் அநேகம் அற்புதங்களின் சாட்சியைக் காண்பித்ததினால் ஆண்டவரைக் கொன்றுபோட்ட துஷ்ட துரோகிகளான யூதர்களில் திரளான பேர்கள் விசுவசித்து அதினால் யூதேய இராச்சியத்திலே கிறீஸ்துவேதம் பிரபலிக்கமாயிற்று. அத்தைக் கண்டு மற்றத் தெளிவற்ற யூதர், நாங்கள் வதைத்தவனை எங்க ளிராச்சியத்திலே



வணங்க ஒட்டுவோமோ என்று எழுந்து மத்தியாஸ் அப்போஸ்தலுவின் வசனத்தைப் பொய்யாக்கவும் அவரைக் குறைப்படுத்தவும் அநேக உபாய தந்திரங்களையும் குழப்பங்களையும் பண்ணி, முடியாத இடத்திலே அவர் பசலீய என்கிற நகரியில் தங்கள் பள்ளிகளில் பிரசங்கம் பண்ணின இடத்திலே அவரைச் சிறைப்படுத்தித் தங்கள் பிரதான குருமாருக்குக் கையளித்தார்கள். ஆனால் அவர்களும் அப்போஸ்தலுவோடு வேதந் தர்க்கிக்க அறியாதவர்களாய் வேதசபை கூடுகிற கூட்டத்திலே கொண்டுபோய் அதில் தங்கள் மகா சிரேஷ்ட குருவுடனே தர்க்கிக்கப்பண்ணினார்கள். அப்போது அவன் மோய்சேசு வேதத்தின்படியே சொல்லுகிற வசனம் எல்லாத்துக்கும் அப்போஸ்தலு மறுமொழிகொடுத்து இவர் கிறீஸ்துவேதத்தின்படியே கேட்கிற உத்தரங்களுக்கு அவன் ஒரு மொழியும் செப்பமாட்டாமல் தங்கள் வேதம் குறைபட்டுப் போகிறதைக்கண்டு ஞாயத்தால் வெல்லமாட்டாதவனைக் கோபத்தால் வெல்லவேணும் என்று சபையிலிருந்த சகல பிரதான குருமாரும் விதறி எழுந்திருந்து அவரைக் கல்லெறிந்து கொல்லத்தக்கதாகத் தீர்வை கொடுத்தார்கள். அப்படியே அந்த அநியாயத் தீர்வைக்குக் காரணமாயிருந்த இரு சாட்சிகள் முதற் கல் எறிந்த இடத்திலே அந்தக் கல்லுகளைத் தேவ நடுத்தீர்வையிலே சாட்சியாய் இருக்கத்தக்கதாக ஆராதிஷ்ட அப்போஸ்தலு தம்மை அடக்குகிற குழியிலே வைக்கச்சொன்னார். இப்படியே கல் எறிந்ததின்பின் இராச்சிய முறைமையின்படியே வாளால் வீசுகிற இடத்திலே ஆராதிஷ்ட அப்போஸ்தலு இரு கரமும் ஆகாசத்தை நோக்கிக் குவித்துத் தம்முடைய சுகிர்த ஆத்துமத்தைச் சர்வேசுரனிடத்திலே கையளித்தார். இந்த மேரையாய் அவர் ஆண்டவருடைய படிப்பினை எல்லாம் செலுத்திச் சுகிர்த நடக்கையோடு மோக்ஷஞ்சேர்ந்ததைப் பார்த்து நாங்களும் அவர் சுகிர்தங்களை இயன்றளவு அனுசரித்து அவர் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் முத்திப்பேறுபெற்ற மத்தியாசுவை உமது அப்போஸ்தலர்மாரின் கூட்டத்திற் சேர்த்துக்கொள்ளச் சித்தமானீரே. அவருடைய வேண்டுதலின் சலுகையால் நாங்கள் எப்போதும் தேவரீருடைய கிருபாகடாட்சத்தை அடைகிறவர்களாயிருக்கப்பண்ணியருளவேணுமென்று பிரார்த்திக்கிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குனி மாதம் பத்தொன்பதாந் தேதி கன்னிமரியாயின் பத்தாவுமாய் இலங்கைக்கு இரக்ஷைபிதாவுமான

# ஆராதிஷ்ட சூசையப்பர்

## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு முதலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—யேசுவின் தாயாராகிய மரியம்மாள் சூசையென்பவருக்குத் திரு மணவாளியாயிருக்கையில் அவர்கள் கூடியிருக்குமுன்னே, அவள் இஸ்பிரீத்துசாந்துவினால் கெற்பவதியாகக் காணப்பட்டாள். ஆனால் அவளுடைய பத்தாவாகிய சூசையென்பவர் நீதிமானாயிருந்ததினாலும், அவளைக் காட்டிக்கொடுக்க மனமில்லாததினாலும் இரகசியத்தில் அவளை அனுப்பிவிடக் கருத்தாயிருந்தார். இவைகளைப்பற்றி அவர் யோசித்துக்கொண்டிருக்கையில், இதோ ஆண்டவருடைய தூதன் நித்திரையில் அவருக்குத் தோன்றிச் சொன்னதாவது: சூசையே, தாவீதின் குமாரனே, நீர் உமது மனைவியாகிய மரியம்மாளை அங்கீகரித்துக்கொள்ள அஞ்சவேண்டாம். ஏனெனில் அவளிடம் உண்டான கெற்பம் இஸ்பிரீத்துசாந்துவினால் ஆயிற்று. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். நீர் அவருக்கு யேசு என்னும் நாமஞ் சூட்டுவீர்; ஏனெனில் அவரே தமது ஜனத்தை அவர்களுடைய பாவங்களினின்று இரட்சிப்பார் என்று வசனித்தார்.

இந்தச் சுவிசேஷ வாக்கியத்திலே சூசையப்பர் தேவமாதாவுடனே விவாகம்பண்ணின மகிமையும் அவர் நடந்த விரதத்துவத்தின் சுகிர்த மகிமையும் காண்பிக்கப்படுவது. விவாகபந்தன மகிமை ஏதெனில், பரிசுத்த தேவமாதா சிறுப்போதே நின்று தமது கன்னிமையைச சர்வேசுரனுக்குக் காணிக்கையாக வைத்து விவாக பந்தனத்துக்குச் சம்மதியாமல் இருக்கிற இடத்திலே அவர் வெந்துவானவர்கள் அது உலோகத்துக்குக் குறையாயிருக்கும் என்று நினைத்து இராச குருப்பிரசாதியின் முன்பாக முறைப்பட்டார்கள். அப்போது இராசகுரு இவ்வித புதுமையான விசேஷத்தைக் கேட்டு வாலப்பெண்பிள்ளை வாழாமலிருக்கில் உலோக வழக்கத்துக்கு இழுப்பாமே. வாழப்போகில் அவள் சர்வேசுரனுக்குக் கையளித்த கன்னிசுத்தம் பழுதாமே. இதுக்கு ஏது நடுச்சொல்வேன் என்று சர்வேசுரனைப் பிரார்த்தித்த இடத்திலே ஒரு சத்தம் கேட்கப்பட்டது. அதாவது: தாவீதிராசா குலத்திலுள்ள ஒரு மனுஷனுடைய கையிலிருக்கிற தண்டுக்கோல் புட்பிக்கலாகும். அப்



படிப்பட்ட புருஷனிடத்திலே பழுதற்ற பிரகாரம் வாழலாம் என்று சொல்லிற்று. அத்தை இராசகுரு கேட்ட உடனே தனக்கு அடங்கிய இராச்சியத்தில் தாவீதிராசா கோத்திரத்தில் உண்டான வாலிபர் சமஸ்தரும் சபையில் கூடத்தக்கதாகக் கட்டளை அனுப்பினார். அப்போது மற்ற வாலிபர்கூடச் சூசையப்பரும் வந்த இடத்திலே அவர் கையிலிருந்த தண்டு புட்பித்தல் காணப்பட்டது. அதனால் இவர்தான் கன்னிமரியாய்க்குச் சர்வேசுரன் தெரிந்து கொடுத்த ஏற்ற புருஷன் என்று அறிந்து உடனேதானே அவருக்கு விவாகதாரணமாகக் கையளிக்கப்பட்டார். இப்படியே ஆச்சரியவிதமாகச் சூசையப்பர் விவாகபந்தனம் கையேற்றிருக்கையிலே அவர் நடந்த சுகிர்த மகிமை ஏதெனில், சிறுபிராயந்தொடுத்துத் தாமும் விரத்தம் காக்கவேணும் என்று, தம் மனதைச் சர்வேசுரனுக்குப் பூரணமாய்க் கையளித்திருந்ததினால் கன்னிமரியாயும், அவரும், ஒருசித்த அனுகூலமாய்ச் சகோதரபாவமாக நடந்தது அல்லாதே சிற்றின்ப அனுபவத்தை ஒருக்காலும் கிரியையிலும் வாக்கிலும் சிந்தையிலும் எண்ணாமல், பொழுதை நோக்குதலால் நிலவின் வெளிச்சம் அதிகரிக்கப்படுவதுபோல இருவருடையவும் சுகிர்த நோக்குதலால் அவர்கள் கற்பின் மகிமை அதிகமாய்த் துலக்கப்பட்டது. இந்தக்கிரமமாய் நடந்துவருகையிலே சிறிதுகாலத்துக்குப்பின் சர்வேசுரன் பரிசுத்த கன்னியாஸ்திரி இடத்திலே உற்பவிக்கத் திருவுளமாய் அவள் கெற்பணியாய் இருக்கிறபோது சூசையப்பர் இந்தத் தேவ இரகசியத்தை அறியாமல் தன்னோடே சஞ்சாரம் இல்லாதிருக்கக் கெற்பமான விதம் ஏதென்று மனதிலே வெகுவாய்ச் சோபித்து இவை உலோகம் அறிந்தால் அவசார ஸ்திரீ என்று கல் எறியப்படலாகுமே. இப்படிப்பட்ட அக்கிரமத்தை ஒருக்காலும் நினைக்கமாட்டாதவளுக்கு இந்தத் துரோகத்தை எப்படிச் செய்வேன்! ஒன்றும் அறியாதமேரை விட்டுப்போவேன் என்று விசாரித்திருக்கிற வேளையில் சர்வேசுரன் அவருடைய சோப சந்தேகங்களைத் தீர்க்கத் திருவுளமாய்த் தேவதூதனை அனுப்பி இஸ்பிரீத்துசாந்து பிரசாதத்தினால் தேவதூதன் அவரிடத்தில் உற்பவித்த இரகசியத்தை வெளியாக்கினார். அத்தால் சூசையப்பர் தெளிந்து அவர் சர்வேசுரனுக்கு மாதாவாயிருக்கிறதினால் அதுக்கான பத்தியுபசாரமாய் நடந்துவருவார். ஆனால் சர்வேசுரன் கன்னியாஸ்திரி இடத்திலே உற்பவிக்கத் திருவுளமாயிருக்கச்செய்தே அவர் விவாக பந்தனமாகச் சித்தமானது ஏதென்று கேட்கில், புருஷன் இல்லாமல் பிள்ளைப்பெற்றால் உலோகத்துக்கு ஆவலாதி நிந்தனைக்குக் காரணமாயிருக்கும் என்றதினாலும், பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவ்விய பாலனுக்கும் தாயாருக்கும் அந்தரமில்லாமல் காவலாளி உண்டாயிருக்கவேணும் என்றதினாலும், அப்படியே விவாக பந்தனமாய் இருக்கப்பண்ணினார் என்று அறியவும். இதல்லாமல் சூசையப்பர் பட்ட சோக சந்தேகங்களால் அவரும் கன்னி மரியாயும் ஒருக்காலும் சம்யோக வாச்சிரமமாய்க் கூடவில்லை என்று காட்டி இருவருடையவும் சுகிர்த கற்பின் மகிமை பிரசித்தமாகப்பண்ணினார். இந்த மேரையாகச் சூசையப்பரைச் சர்வேசுரன் தமது குமாரனுக்கும் அவர் மாதாவுக்கும் காவலாளியாகத் தெரிந்ததினாலும் தேவசுதன் அவரைப் பிதாமேரையாய்ச் சங்கித்து, சொற்கீழ் நடந்ததினாலும் சூசையப்பருடைய சுகிர்த பெறுபேறின் மகிமை எம்மாத்திரம் பெரிது என்று வாக்கால் பிரசங்கித்துச் சொல்லலான சிரமம் அல்ல. இதல்லாமல் சருவ லோகம் இரக்ஷிக்கிற ஆண்டவர் அவருக்குப் பிள்ளையாய் வெகுமானம் கொடுத்ததினால் ஆண்டவரால் பெறவேண்டிய நன்மையெல்லாம் அவர் சலுகையால் பெறலாயிருக்கும். ஆனதினால் சமஸ்தரும் ஆராதிஷ்ட சூசையப்பர்பேரில் பத்தியோடே நடக்கவேண்டியதல்லாமல் விசேஷமாய் அவர் இந்த இலங்கையைக் காக்கிற இரக்ஷை பிதாவாயிருக்கிறதினால் இலங்கைப்பதியின் கிறீஸ்தவர்களாகிய நாங்கள் சமஸ்தரும் அவர்பேரில் அதிக விசேஷ பத்தியாய் நடந்து அவர் சலுகையால் மோக்ஷம் பெறப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, நாங்கள் கேட்டடைந்துகொள்ளுவதற்குப் பாத்திரமற்றவர்களாயிருக்கிற நன்மைகள் தேவரீருடைய அதிபரிசுத்த மாதாவின் திருப் பத்தாவானவருடைய வேண்டுதலால் எங்களுக்குக் கிடைக்கத்தக்கதாக அவருடைய புண்ணிய பேறுகளின் பங்கை எங்களுக்குத் தந்தருளும். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிறவரே, ஆமென்யேசு.

---

## பங்குனி மாதம் இருபத்தஞ்சாந் திகதி
# பரிசுத்த தேவமாதா
## மங்களங்கேட்ட திருநாளில் வாசிக்கிற
## சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா முதலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே கபிரியேல் என்னும் தேவதூதன் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சர்வேசுரனால் அனுப்பப்பட்டு,



தாவீதின் கோத்திரத்தாராகிய சூசையப்பர் என்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாக பந்தனமான ஓர் கன்னிகையிடத்தில் வந்தார். அந்தக் கன்னிகையின் பேர் மரியம்மாள். தேவதூதன் அவளிருந்த இடத்தில் பிரவேசித்து: பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே என்றார். இதை அவள் கேட்டமாத்திரத்தில், அவருடைய வார்த்தையினால் கலங்கி, இந்த மங்களம் எத்தன்மையானதோஎன்று யோசனையாய் இருக்கையில், தேவதூதன் அவளை நோக்கி: மரியே! நீர் அஞ்சவேண்டாம். ஏனெனில் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர். இதோ, உமது உதரத்தில் கெற்பந்தரித்து, ஓர் குமாரனைப் பெறுவீர்; அவருக்கு யேசு என்னும் நாமஞ் சூட்டுவீர். அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய சுதன் என்னப்படுவார்; ஆண்டவரான சர்வேசுரன் அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குத் தந்தருளுவார்; ஆதலால் அவர் யாக்கோபின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய அரசாட்சிக்கு முடிவு இராது என்றார். அப்போது மரியம்மாள் தேவதூதனைப் பார்த்து: இது எப்படியாகும்? நான் புருஷனை அறியேனே என்று சொல்ல, தேவதூதன் அவளுக்கு மாறுத்தாரமாக: இஸ்பிரீத்துசாந்து உமது மேல் எழுந்தருளிவருவார்; உன்னதருடைய வல்லபமானது உமக்கு நிழலிடும்; ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் என்னப்படுவார். இதோ, உமக்குப் பந்துவாகிய எலிசபேத்தும் தன் முதிர்வயதிலே ஓர் புத்திரனைக் கெற்பந்தரித்திருக்கிறாள். மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறும்மாதம். ஏனெனில் சர்வேசுரனால் கூடாத வாக்கு ஒன்றுமில்லை என்றார். அப்போது மரியம்மாள்: இதோ, நான் ஆண்டவருடைய அடிமை. உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றாள்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே கன்னிசுத்த தேவமாதா தேவதூதன் சொன்ன மங்களத்தைக் கேட்டுத் தேவசுதனைக் கெற்ப உற்பத்தியாகக் கொண்ட விசேஷத்தின் மகிமை காண்பிக்கப்படுவது. அது எப்படி என்றால், பரிசுத்த கன்னியாஸ்திரீ விவாகபந்தனமானதின்பின் தமது பத்தாவோடு கன்னிமையின் சம்பத்தைக் காப்பாற்றிச் சுகிர்த சீவியத்துடன் நித்தியமும் தேவ திருவாக்குப் புஸ்தகங்களை வாசித்திருக்கையிலே அதில் சர்வேசுரன் மனுஷனாகப் பிறக்கிறது உண்டென்று எழுதியிருந்த வாக்கியத்தைக்கண்டு அப்படியே சர்வேசுரனுக்குத் தாயாயிருக்கப்போகிற ஸ்திரீ எத்தனை பெறுபேறு அதிகரித்தவளோ! அப்படிப்பட்ட திவ்விய நாயகியானவளுக்கு நான் பண்செய்கிறவளாவேனாகில் எத்தனை பாக்கியம் பெற்றவளாவேனோ என்று மிகுந்த தாழ்ச்சியோடு தியானித்திருக்கிறவேளையில், அப்படிப்பட்ட அவளுடைய தாழ்ச்சியைச் சர்வேசுரன் கண்டு அவளுக்குத்தானே தமது மாதாவாகிற மகிமையைக் கொடுக்கத் திருவுளங்கொண்டு, அந்த விசேஷத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைச் சொல்லத் தம்முடைய தூதனை அனுப்பினார். அப்போது தேவதூதன் சொன்ன வார்த்தையைக் கன்னிசுத்த மாதா கேட்டுத் தம்முடைய சிறுமைத்தனத்திலே அமிழ்ந்தி ஒல்கி அப்படிப்பட்ட மகிமைக்குத் தாம்பேறுபெற்றவர் அல்ல என்று பயந்ததும் அல்லாமல் தாம் புருஷனை அறியாமலிருக்க இப்படிப்பட்ட உற்பத்தி உண்டாகிறமேரை எப்படி என்று கேட்டதுக்கு, தேவதூதன் சொன்ன மொழிகளால் மனம்தெளிந்ததின்பின் சர்வேசுரனுடைய சித்தம் ஆகட்டும் என்று தமது மனச் சம்மதியைக் காண்பித்தார். அக்ஷணத்திலே தேவசுதன் அவருடைய உதரத்தில் மனுஷ சுபாவத்தை எடுத்து உற்பவித்தார் என்று அறியவும்.

இப்படியே பரிசுத்த தேவமாதாவின் திரு உதரத்தில் இரத்த மாங்கிஷங்கொண்டு சரீரம் உண்டாகி அதுக்குத் திவ்வியபிரசாதம் நிறைந்த ஆத்துமத்தைக்கொடுத்து அப்படிப்பட்ட ஆத்துமம், சரீரம் என்கிற மனுஷ சுபாவத்தைத் தமது தேவ சுபாவத்தோடு அயிக்கியம்பண்ணித் தேவனும் மனுஷனுமாய்ப் பூலோகத்திலே சர்வேசுரன் பிறந்த மகிமை காணப்பட்டது. இந்தப்பிரகாரமாய்ச் சர்வேசுரன் எங்கள் பாவங்களுக்காகப் பூலோகத்திலே பிறந்த விசேஷத்தைக் காண்கிற நாங்கள் எங்கள் பாவங்களுடைய கொடுமை எம்மாத்திரம் பெரிதென்று விசாரிக்கவேணும். அது ஏனெனில், வானத்துக்கும், பூமிக்கும் எத்தனை தூலை உண்டோ, தேவனுக்கும் மனுஷனுக்கும் எத்தனை வேற்றுமை உண்டோ, சீவனுக்கும் மரணத்துக்கும் எத்தனை விரோதம் உண்டோ, அப்படியிருக்கப் பரலோகத்தில் நின்று ஆண்டவரைப் பூலோகத்திலே வரப்பண்ணினதும் அளவில்லாத மகிமையுள்ள சர்வேசுரனை நீச நிந்தனையான மனுஷ சுபாவத்தைக் கையேற்கப்பண்ணினதும் நித்திய சீவனாயிருக்கிற தேவனை மரணத்துக்கு ஏதுவாகப்பண்ணினதும் எங்கள் பாவத்தின் கொடுமை அல்லாதே வேறல்லவே. ஆனதினால் அப்படிப்பட்ட பாவத்தை எத்தனை வெறுப்போடே வெறுக்கவேண்டியது என்று அறியவும். இதல்லாமல் இப்படிப்பட்ட தேவ உற்பத்தி கன்னிசுத்த தேவமாதாவின் உதரத்தில் உண்டான போதே அவருடைய மகிமை எம்மாத்திரம் என்று விசாரிக்கலாம். அது ஏதெனில், திரிலோகத்தில் அடங்காத சர்வேசுரன் அவருடைய உதரத்தில் ஒடுங்கினதும் மனோரூபிகளுடைய சிரசிற் சிங்காசனம் ஸ்தாபித்திருக்கிறவர் அவரைச் சிங்காசனமாக்கிக்கொண்டதும் சகல லோகத்தை இரக்ஷிக்கிறவர் அவரால் உற்பத்தியானதும் ஆகிய இத்தால் அவருடைய மகிமை எம்மாத்திரம பெரிது என்று காணலாயிருக்கும். இப்



படிப்பட்ட மகிமையும் பலன்களும் எல்லாம் தேவதூதன் மங்களஞ்சொன்ன வாக்கியத்தால் வந்ததினால் இந்த உபகாரங்களுக்கு எல்லாம் நாங்கள் நன்றியறியத்தக்கதாக அப்படிப்பட்ட மங்களத்தைக்கேட்ட வேளையாகிய சந்தியாகாலம் அந்த உபகாரங்களை நினைவுகூரும்படி கிறீஸ்தவர்களுடைய தேவாலயங்களிலே மணிச்சத்தம் செய்யப்படுகிறது. அப்போது கிறீஸ்தவர்கள் சமஸ்தரும் நமஸ்காரத்தோடிருந்து தேவதூதன் சொல்லியருளிய மங்களம் முதலான வாக்கியங்களை உச்சரித்து வேண்டுதல் பண்ணுகிறது வழக்கமாயிற்று என்று அறியவும். இந்தப்பிரகாரமாகச் சகல மனுஷருக்கும் வந்த இந்த ஈடேற்றத்தின் நிமித்தத்தை நாங்கள் நிதமும் நினைத்து அதுக்குக் காரணமான பரிசுத்த தேவமாதாவைப் பத்தியோடே அனுசரித்து அவர் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசிக்கக் கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் சம்மனசானவர் விசேஷஞ் சொன்னபோது முத்திப்பேறுபெற்ற கன்னிமரியம்மாளின் திருவுதரத்திலே உம்முடைய திவ்விய வார்த்தையானவர் மனுச் சுபாவத்தை எடுத்துக்கொள்ளச் சித்தமானீரே. அர்த அம்மாளை மெய்யாகவே சருவேசுரனுடைய மாதாவென்று விசுவசிக்கிற அடியோர்கள் அவருடைய மன்றுட்டங்களினால் தேவரீர் சமுகத்தில் அநுக்கிரகமடைந்துகொள்ளக் கிருபைகூர்ந்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துதாமே காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

### சித்திரை மாதம் இருபத்தஞ்சாம் திகதி

# சுவிசேஷகரான ஆராதிஷ்ட மாற்கு

### திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பத்தாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அக்காலத்திலே கர்த்தர் வேறே எழுபத்திரண்டு பேரையும் நியமித்து, தாம் போகவிருந்த சகல பட்டணங்களுக்கும், இடங்களுக்கும் தமது சமுகத்துக்கு முன்பாக அவர்களை இருவரிருவராக அனுப்பி, அவர்களுக்குச் சொன்னதாவது: அறுப்பு மிகுதியாம், வேலையாட்களோ கொஞ்சப்பேர்; ஆதலால் தன் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வெள்ளாண்மைக்கு எஜமானை மன்றுடுங்கள். புறப்பட்டுப் போங்கள். இதோ, ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புகிறதுபோல, நான் உங்களை அனுப்புகிறேன். பணப்பையையாவது கைச்சோளியையாவது பாதரட்சைகளையாவது கொண்டுபோகவேண்டாம். வழியில் ஒருவரையும் வினவவும்வேண்டாம். நீங்கள் எந்த வீட்டில் பிரவேசித்தாலும்: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக என்று முதலாவது சொல்லுங்கள். சமாதான புத்திரன் அங்கேயிருந்தால் உங்கள் சமாதானம் அவன்மேல் தங்கும்; இல்லாதிருந்தால், அது உங்களிடத்தில் திரும்பிவரும். அந்த வீட்டில்தானே தங்கி, அவர்களிடத்தில் உள்ளவைகளைப் புசித்துப் பானஞ்செய்யுங்கள். ஏனெனில் வேலைக்காரன் தன் கூலிக்குப் பாத்திரவானாயிருக்கிறான். வீட்டுக்கு வீடு போகாதேயுங்கள். அவ்வண்ணமே நீங்கள் எந்தப் பட்டணத்தில் பிரவேசித்தாலும், அந்தப் பட்டணத்தார் உங்களை ஏற்றுக்கொண்டால், அவர்கள் உங்களுக்குப் பரிமாறுகிறவைகளைப் புசித்து, அவ்விடத்திலுள்ள நோயாளிகளைச் சொஸ்தமாக்கி, சர்வேசுரனுடைய இராச்சியம் உங்களுக்குச் சமீபித்தது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே அறியத்தக்க ஞான உற்பனம் ஏதென்றால், எங்கள் கர்த்தரும் ஈடேற்றுகிறவருமான யேசுநாதர் சிலசமயத்தில் புத்திபோதகங்களாலும், சிலநேரத்தில் கிரியைகளாலும் எங்களுக்குப் படிப்பித்ததுண்டு. அது ஏனென்றால், அவருடைய கிரியைகள்தானே கற்பனைகளாம். ஏனெனில், அவர் மவுனமாய் ஏதும்செய்கிறபோது அத்தால் நாங்கள் செய்யவேண்டியதுகளை எங்களுக்குக் காண்பித்துப் படிப்பித்தார் என்று அறியவும். அப்படியே எழுபத்திரண்டுபேரை நியமித்துத் தாம் வரப்போகிற எல்லாப் பட்டணத்துக்கும், இடத்துக்கும் ஏவினதற்கு விபரம் ஏதென்றால், எழுபத்திரண்டுபேர் என்பது கிறீஸ்துநாதருடைய எழுபத்திரண்டு சீஷர்களாம். தாம் வரப்போகிற எல்லாப் பட்டணத்துக்கும், இடத்துக்கும் என்றதினால் நம்முடைய நாயன் யேசுக்கிறீஸ்து இவ்வுலோகத்தைவிட்டுப் பரலோகத்துக்கு எழுந்தருளச்செய்தே தம்முடைய அப்போஸ்தலரையும், சீஷர்களையும் சகல இடங்களிலும் போய்ப் பிரசங்கித்தும் புத்திபோதகத்தைச் சொல்லியும், அதைக்கேட்டுத் தங்கள் இருதயங்களில் அவதரித்திருக்கிற மனுஷ இருதயத்தில் கிறீஸ்துநாதர் எப்போதும் வாசம்பண்ணுவார் என்பதற்கு விபரமாம். இவ்விரண்டுபேரை நியமித்து அனுப்பினதற்கு ஞான உற்பனம் ஏதென்றால், தயவின் கற்பனைகள் இரண்டாம். அவை தேவநேசமும், பிறர்நேசமுமாம். இந்த இருகற்பனைகளில் சகல வேதம் அடங்கலானதென்றும், பிறர்நேசம் இல்லாதவிடத்தில் தேவநேசமும் தன்நேசமும் இருக்கமாட்டாது என்றும் அறியவும். ஆனால் இந்தச் சுவிசேஷத்தில் எழுதப்பட்ட வாக்கியம் சுவிசேஷகரான ஆராதிஷ்ட மாற்கு திருநாளில் வாசிக்கப்படு



கிறதினாலும், அவர் அதற்குக் காரணமாயிருக்கிறதினாலும், தேவநேசத்துக்கும் பிறர்நேசத்துக்கும் தன்னாத்துமநேசத்துக்கும் அவர் நடந்த மேரை காண்பிக்கப்படுவது. அது எப்படியென்றால், சுவிசேஷகரான ஆராதிஷ்ட மாற்கு என்பவர் யூதகோத்திரத்தில் பிறந்தவராம். ஆராதிஷ்ட பேதுரு அப்போஸ்தலுவின் சீஷனானதினால் அவருடைய புத்திபோதகத்தைக் கேட்டும், முழுமனசோடே கிறீஸ்துவேதத்தை விசுவசித்தும், அவரால் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார். அதின்பின் ஆராதிஷ்ட பேதுரு அப்போஸ்தலு கற்பித்த கட்டளையின்படியே மிகுந்த தாழ்ச்சியோடும், தேவபத்தியோடும், இலக்கணத்தோடும் சுவிசேஷத்தை எழுதிவைத்தார். அதற்கப்பால் ஆராதிஷ்ட பேதுரு அப்போஸ்தலு தமது சீஷர்களில் சிலரைப் பலவிடங்களுக்குத் தேவாலயங்களைக் கட்டவும், மனுஷ ஆத்துமாக்களுக்கு நற்போதகத்தைப் பிரசங்கிக்கவும் அனுப்பச்செய்தே அவர்களில் ஒருவரான மாற்கு அக்கிலேய என்ற இராச்சியத்துக்கு நியமிக்கப்பட்டு அவ்விடத்தில் தேவாலயத்தைக் கட்டிக் கிறீஸ்துவேதத்தைப் போதித்து அநேக சனங்களைச் சத்தியவேதத்தை அனுசரிக்கப்பண்ணினார். அங்கிருந்து சிரேன்பெந்தாப்புலியென்ற லீபிய இராச்சியத்தில் ஒரு பகுதியிலும், எஜிப்த்து இராச்சியத்திலும் அநேக அற்புதங்களைக் காண்பித்து வெகு சனங்களைக் கிறீஸ்துவேதத்தை அனுசரிக்கச்செய்ததல்லாமல் அவ்விடத்திலிருந்த பேய் விக்கிரக கோவில்களையும் இடித்து அழித்துப்போட்டார். இதுவுந்தவிரத் தேபாயித் என்ற எஜிப்த்து இராச்சியத்துக்கு அடுத்த ஊருக்குப் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அவ்வூர் மனுஷர் அக்கியான அந்தகாரத்தோடிருந்ததுமல்லாமல் அக்கியான பில்லி, சூனியம் இதுமுதலான துர்க்கிரிகை செய்துவந்தார்கள். ஆனால் பராபரனுடைய பிரசாதத்தினாலும் சுவிசேஷகரான மாற்கு என்பவரின் பிரயாசத்தினாலும் அந்த அஞ்ஞான அந்தகாரத்தை விலக்கிச் சத்தியவேதத்தை அனுசரித்தார்கள். ஆராதிஷ்ட மாற்கு பன்னிரண்டு வருஷமட்டும் அவ்விடத்தில் பிரசங்கித்துவந்தார். அவ்விடம்விட்டு அலிசந்திரியா இராச்சியத்துக்குவந்து வெகுபேருக்கு விசுவாசத்தின் வழியைக் காட்டி விசுவாசம் வர்த்திக்கத்தக்கதாக வேதபோதகரையும் நியமித்துவந்தார். அலிசந்திரியா என்ற தேசத்தில் வேதாகமத்தை வர்த்திக்கப்பண்ணினதினால் அவ்வூர் அக்கியானிகள் எல்லோரும் ஆராதிஷ்ட மாற்குவுக்கு விரோதிகளாயிருந்ததல்லாமல் அவர் காண்பித்த அற்புதங்கள் யாவும் பேய்வித்தை என்றும் அவர் வித்தைக்காரன் என்றும் அவரைக் கொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட யோசனைபண்ணினார்கள். ஆனால் அத்தருவாயில் சர்வேசுரன் அவரை அந்த அக்கியானிகளால் தற்காத்துக்கொண்டார். மறுபடியும் அந்த அக்கியானிகள் அவரைத் தேடித் திரியும்போது அவர் பராபரனுக்குப் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கிற நேரத்தில் அவரைப்பிடித்து அவருடைய கால்களைக் கயிற்றால் கட்டி வீதியிலிழுத்துக் கூக்குரல்பண்ணி இந்தத் துட்டனைக் கடலுக்கு முடுகக் கொண்டுபோங்கள் என்று நிந்தித்தார்கள். இது சம்பவித்தது சித்திரைமாதம் இருபத்துநாலாந் திகதியாம். அதின்பின் ஆராதிஷ்ட மாற்குவை முழுநாளும் இழுத்து அவ்விடத்திலிருந்த கல்லுக்களெல்லாம் அவருடைய உதிரத்தால் சிவந்ததுமல்லாமல் அவருடைய மாங்கிஷமும் பொடிப்பொடியாகி அந்தத் தரையில் ஒருநேரமாகுதல் தாம் பட்ட பாடுகளுக்காகச் சர்வேசுரனை மன்றாடவும், அவரைத் துதிக்கவும் அவகாசம் கொடாதே போனார்கள். இதுவுமல்லாமல் அந்த இராத்திரியிற்றானே அவரைப் பிடித்துச் சிறைப்படுத்தினவிடத்தில் பராபரன் அவருக்குக் காணப்பட்டு இரு காட்சியினால் அவருக்குத் தேற்றரவுபண்ணினார். மற்றநாளாகிற சித்திரைமாதம் இருபத்தஞ்சாம் திகதியில் அந்தக்கொடிய அக்கியானிகள் அவரை இழுக்கிறபோது தம்முடைய சுகிர்தம் நிறைந்த ஆத்துமத்தை அலிசந்திரியா என்ற தேசத்தில் சர்வேசுரனுக்குக் கையளித்தார். இந்த முனிவருடைய திருநாளில் சகல மோக்ஷவாசிகளுடையவும் பிரார்த்தனை சொல்லப்படுகிறது ஏனென்றால், எங்கள் பாவங்களால் எங்களுக்கு வருகிற தேவ ஆக்கினையால் சர்வேசுரன் எங்களை நிவாரணம்பண்ண அந்தப் பிரார்த்தனையைச் சொல்லும்படி சாதாரண திருச்சபையின் தலைவராகிய முதலாம் பெரிய கிறகோரி என்ற நாமமுடைத்தான பாப்பு கட்டளைபண்ணினார். அது ஏனென்றால், ஒருபோது உரோமை நகரியில் கொள்ளைநோய் பிடித்தபோது எல்லாரும் பயங்கரமாயிருந்தார்கள். சர்வேசுரன் அவர்களை அதில் நின்று நிவாரணமாக்கவேணுமென்று இந்த முனிவருடைய பேரைக் குறித்துத் திருச்சபையில் சொல்லப்பட்ட பாப்பானவர் பிரார்த்தனையைச் சொல்லித் திருவிழாக் கொண்டாட்டமாகச் சுற்றினபின் பராபரனால் நிவாரணம் அடைந்தார்கள். ஆனதினால் அது எப்போதும் நடந்துவருகிறதற்குக் கட்டளையாயிற்று என்று அறியவும். ஆகையால் இத்தன்மையான சுகிர்த மகிமையோடு சீவித்து வேதசாட்சியாய் மரணித்து மோக்ஷமுடியை அடைந்த சுவிசேஷகரான ஆராதிஷ்ட மாற்குபேரில் நாங்கள் பத்தியாயிருந்து அவருடைய சுகிர்த கிரியைகளை இயன்



றளவு அனுசரித்து மோக்ஷ இராச்சியத்தில் சர்வேசுரனை முகமுகமாய்க் காணப்பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் முத்திப்பேறுபெற்ற மாற்கு என்னும் உமது சுவிசேஷகரைச் சுவிசேஷம் போதிக்கும் வரப்பிரசாதத்தினால் மேன்மைப்படுத்தினீரே. நாங்கள் எப்போதும் அவருடைய திருப்போதகத்தினால் நன்மையடையவும் மன்றாட்டத்தினால் தற்காக்கப்படவும் எங்களுக்கு அநுக்கிரகம்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய், சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## வைகாசி மாதம் முதலாந் திகதி

# ஆராதிஷ்ட பிலிப்பு யக்கோவு

## அப்போஸ்தலர்களின் திருநாளில் வாசிக்கிற

## சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் பதினாலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:— அக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது: உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; சர்வேசுரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறீர்கள்; என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஏனெனில் உங்களுக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தஞ்செய்யப் போகிறேன். நான் போய், உங்களுக்கு ஒருஸ்தலத்தை ஆயத்தஞ்செய்தபின்பு, நான் இருக்கிற ஸ்தலத்திலே நீங்களும் இருக்கத்தக்கதாக, நான் திரும்பிவந்து உங்களை என்னிடத்தில் அழைத்துக்கொள்வேன். நான் எவ்விடம் போகிறேனென்றும் அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்க, தோமையார் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிறது எவ்விடமென்று அறியோமே; வழியை நாங்கள் எப்படி அறியக்கூடும் என்றார். யேசுநாதர் அவரை நோக்கி: வழியும், சத்தியமும், ஜீவனும் நானே. என் வழியாய் அல்லாதே பிதாவினிடத்தில் சேருகிறவன் ஒருவனுமில்லை. நீங்கள் என்னை அறிந்திருந்தால், என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள். ஆனால் இதுமுதல் அவரை அறிந்துகொள்வீர்கள்; அவரைக் கண்டுமிருக்கிறீர்கள் என்றார். அப்பொழுது பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பித்தருளும், அதுவே எங்களுக்குப் போதும் என்றார். யேசுநாதர் அவருக்குத் திருவுளம்பற்றினதாவது: இவ்வளவு காலமாய் நான் உங்களோடேகூட இருந்தும், நீங்கள் என்னை அறிந்துகொள்ளவில்லையோ? பிலிப்புவே, என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைக் காண்கிறவன் என் பிதாவையுங் காண்கிறான்; அப்படியிருக்கப் பிதாவை எங்களுக்குக் காண்பித்தருளும் என்று நீ சொல்லுவதெப்படி? நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதாக நீங்கள் விசுவசிக்கிறதில்லையோ? நான் உங்களோடு பேசுகிற வார்த்தைகளை நானாகப் பேசுகிறதில்லை. பிதாவானவர் எனக்குள் வசித்து, அவரே கிரியைகளைச் செய்கிறார். நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதாக நீங்கள் விசுவசிக்கமாட்டீர்களோ? இல்லாவிட்டால் கிரியைகளின் நிமித்தமாவது விசுவசியுங்கள். மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: என்னை விசுவசிக்கிறவன் நான்செய்கிற கிரியைகளைத் தானும்செய்வான்; இவைகளில் அதிக பெரிதானவைகளையும் செய்வான். ஏனெனில் நான் பிதாவினிடத்தில் போகிறேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவை ஏதேது கேட்பீர்களோ. சுதனிடத்தில் பிதா மகிமைப்படும்பொருட்டு, நான் அதைச் செய்தருளுவேன் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே பிலீப்பு யக்கோவு என்ற அப்போஸ்தலுமாருடைய சுகிர்த மகிமை கொண்டாடப்படுவது. அது ஏதெனில் பிலீப்பு ஆண்டவரைப் பார்த்து: எங்களுக்குப் பிதாவாகிய சர்வேசுரனைக் காண்பியும் என்று சொன்னதுக்கு, ஆண்டவர் தம்மைக் காண்கிறவன் பிதாவையும் காண்கிறான் என்று சொன்னதினால், தமது தெய்வீகத்தையும் திரீத்துவத்தையும் விசுவசிக்கவேணும் என்ற படிப்பினையாம். இதல்லாமல் பிதாவண்டையிற் போக வழியும் சத்தியமும் சீவனும் நாம்தாம் என்று சொன்னதினால் தம்முடைய சுகிர்த வழியால் நடக்கவும், தம்முடைய சத்திய வசனங்களை விசுவசிக்கவும், தம்முடைய திருமுக தெரிசனையைக்கண்டு மோக்ஷசீவியம் அடையவும் வேணும் என்ற விபரமாம். இப்படியே வசனித்த படிப்பினையெல்லாம் அப்போஸ்தலராகிய பிலீப்பும் யக்கோவும் என்ற இருவரும் குறையற்ற பிரகாரமாய் விசுவசித்துச் செலுத்தினதினால் அதின்படியே அவர்களுடைய கிரியைகளையும் செய்த புதுமைகளையும் காண உச்சிதமாம். அது எப்படியென்றால், ஆராதிஷ்ட பிலீப்பு அப்போஸ்தலுவானவர் முந்த முந்த ஆண்டவரால் அழைக்கப்பட்ட சீஷனாய்ச் சீத்திய என்ற தேசத்திலே இருபது வருஷம் அக்கியானிகளுக்குக் கிறீஸ்துவேதம் பிரசங்கித்து எவுரோப்ப என்ற தேசத்தில் கிறீஸ்துவாக்குப் பேதகம்பண்ணின பதிதவினையர்களைத் தெளிவித்தார். அப்போது சிருட்டிகரான சர்வேசுரனை அறியக் கண்மறைந்திருந்த அக்கியானிகள் அவரைச் சிறைப்படுத்தித் தாங்கள் வணங்கியிருந்த செவ்வாய் என்ற கிரகத்தை வணங்கக் கூட்டிப்போன இடத்திலே அந்தச் செவ்வாய் ரூபத்தின் பாதவடியிலிருந்து விஷவகோர சர்ப்பம் புறப்பட்டு அந்தக் கோயில் நாயக பூசாரியைச் சீறின அதிர்ச்சி



யால் கொன்றுபோட்டு அவரைச் சிறைப்படுத்துவித்த நீதவான்கள் இருவரையும் வருத்தப்படுத்திற்று. அந்நேரம் அப்போஸ்தலுவானவர் அவர்களைப் பார்த்து: நீங்கள் இந்தச் செவ்வாயின் விக்கிரகத்தைத் தள்ளி அதின் இடமாய்க் கிறீஸ்துவின் சிலுவையை வணங்குவீர்களானால் ஆரோக்கியம் ஆவீர்கள் என்று புத்திசொன்ன இடத்திலே எல்லாரும் அப்படியே செய்வோம் என்று வார்த்தைப்பாடு கொடுத்தார்கள். அதினால் பிலீப்பு அப்போஸ்தலு சர்ப்பத்தை ஒருவருக்கும் பொல்லாப்புச் செய்யாதபடிக்குக் காட்டிலே போகக் கற்பிக்க அது காணாமல் போயிற்று. அதின்பின் அப்போஸ்தலுவானவர் வியாதிக்காரரைக் கரநியாசத்தினாற் குணமாக்கிச் செத்தவர்களையும் உயிர்ப்பித்தார். அத்தைக்கண்டு சகலமான சனங்களும் கிறீஸ்து வேதத்தை விசுவசித்ததினால் ஒரு வருஷமாக அவர்களுக்கு வேதபோதகஞ் சொல்லியிருந்தார். இந்தமேரையாய் அநேகம் பிசாசுவிக்கிரகக் கோயில்களை அழிப்பித்து அநேகமாயிரம் சனங்கள் உண்மையான சர்வேசுரனை அறியும்படி பண்ணினதின்பின் துஷ்ட அக்கியானிகள் கையால் சிலுவையில் அறையப்பட்டுத் தமது சுகிர்த பிராணனைக் கிறீஸ்துவின் கையிற் சேரப்பண்ணினார்.

அதின்பின் யக்கோவு அப்போஸ்தலு நடந்த சுகிர்தம் ஏதெனில், அவர் தர்ம நடக்கையிலும் முகச்சாயல்களிலுங் கிறீஸ்துநாதரை வெகுவாய் ஒத்திருந்ததினால் அவருடைய சகோதரன் என்றும், சுகிர்தவாதி என்றும் பேர்ப்பட்டிருந்தார். தாய் வயிற்றில் நின்று பழுதற்ற சுத்தமும், கற்புத்துவமும் உண்டாய் மதுபானமும் மாங்கிஷ போசனமும், முழுக்குக் குளிப்பு முதலான சரீரபேணுதலும் ஒறுத்துச் சுக அணிகளையும் தவிர்த்திருந்தார். நித்தமும் கோயிலிலே பிரவேசித்து முழந்தாளில் தியானத்தோடிருக்கிற வழக்கத்தால் முழந்தாள் இரண்டும் கன்றி இருந்தது. இப்படியே அவருடைய சுகிர்தம் சகல யூதசாதியாருக்கும் அதிசயமாய் இருந்ததினால் அவரை யெருசலே நகரிக்கு இராசா குருப்பிரசாதியாயிருக்கக் கட்டளை பண்ணினார்கள். அவ்விடத்தில் இருக்கிறபோது அவருடைய வசனஞ் சகலமான யூதருக்கும் வெகு நம்பிக்கையாகி அவர் சொன்னதை ஒருவரும் தட்டமாட்டார்கள் என்றதினால், யூதர் சனங்கூடி அவரைக் கிறீஸ்துவின்பேரிலே விசுவசிக்கத்தக்க உண்மையான விசேஷம் பிரசங்கிக்கச் சொன்னார்கள். அப்போது அப்போஸ்தலுவானவர் பாஸ்குத் திருநாளையிலே பிரசங்க ஆசனத்தில் நின்று முன் தீர்க்கதெரிசிகள் எழுதின வாக்கியங்களினால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூலோகத்திலே வருகிற மெசீய என்ற யேசுக்கிறீஸ்து இவர்தாம் என்று ஒப்புவித்த இடத்திலே குடியானவர்கள் வெகு விசுவாசமாய்த் தாவீது மகனாகிய கிறீஸ்துவே! எங்களை இரக்ஷியும் என்று சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரஞ் சொன்னார்கள். இப்படிப்பட்ட வசனங்களை யூதருக்குள் வித்தியா நெறியுரான பொல்லாதவர்கள் கேட்டுத் தங்கள் மனதில் இருந்த விஷத்தால் வெறியெழும்பினவர்களாய் விதறிச் சுகிர்த வாதியானவர் நீதிமொழி தப்பினார் என்று அவரைப் பிரசங்க ஆசனத்தில் நின்று தரையில் விழத்தள்ளிக் கல் எறியச் சொன்னார்கள். அப்படியே கல் எறியச் செய்தே அப்போஸ்தலுவானவர் தம்மை வாதிக்கிறவர்களுடைய பாவம் பொறுக்கச் சர்வேசுரனைப் பிரார்த்தித்துத் தம்முடைய ஆத்துமத்தைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார். இந்தப்பிரகாரமாய் அப்போஸ்தலர் இருவரும் நடந்த சுகிர்தங்களையும், செய்த அற்புதங்களையும் நாங்கள் கண்டு சர்வேசுரனைத் துதித்து அவர்களுடைய சலுகையால் மோட்சம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் பிலிப்புவும் யக்கோபுவும் என்னும் உம்முடைய அப்போஸ்தலர்களுடைய வருஷாந்தத் திருவிழாவினால் எங்களை அகமகிழச் செய்தீரே. இவர்களுடைய பெறுபேறுகளைக் கண்டு ஆனந்தங்கொள்ளுகிற நாங்கள் இவர்கள் முன்மாதிரிகையையும் பின்பற்றி நடக்க எங்களுக்கு அனுக்கிரகம்செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயகர் யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

### வைகாசி மாதம் மூன்றாந் திகதி

# கிறீஸ்துவின் சிலுவை கண்டெடுத்த

## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் மூன்றாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :-அந்தக்காலத்திலே யூதர்களுக்குள்ளே பிரபுவான நிக்கோதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவனிருந்தான். அவன் இராவிலே யேசுநாதரிடத்தில் வந்து : குருவே, நீர் சர்வேசுரனிடத்திலிருந்து போதகராய் வந்திருக்கிறீரென்று அறிவோம். ஏனெனில் ஒருவனும் தன்னோடு சர்வேசுரன் இருந்தாலொழிய, நீர் செய்கிற இந்த அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். யேசுநாதர் அவனுக்கு மறுமொழியாக : ஒருவன் மறுபடியும் பிறவாதிருந்தால், சர்வேசுரனுடைய இராச்சியத்தைக் காணமாட்டானென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். நிக்கோதேமு அவரை நோக்கி : மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறக்கக்கூடும்? அவன் தன் தாய் வயிற்றில் திரும்பவும் பிரவேசித்து. மறுபடி பிறக்கக்கூடுமோ என்றான். யேசுநாதர் பிரத்தியுத்தாரமாக : ஒருவன் ஜலத்தினாலும், இஸ்பிரீத்துசாந்துவினாலும் மறுபிறப்பு அடையாதிருந்தால், சர்வேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டானென்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாம், இஸ்பிரீத்துவினால் பிறந்தது இஸ்பிரீத்துவாமே. நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று நான் உனக்குச் சொன்னதைப் பற்றி ஆச்சரியப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான பக்கத்தில் வீசுகின்றது. அதின் சத்தத்தைக் கேட்கிறாய்; ஆயினும் அது எங்கேயிருந்து வருகிறதென்றும் எங்கே போகிறதென்றும் அறியாய். இஸ்பிரீத்துவினால் பிறந்த எவனும் அத்தன்மையே இருக்கிறான் என்று திருவுளம்பற்றினார். அதற்கு நிக்கோதேமு : இவைகள் எப்படி ஆகக்கூடும் என்று கேட்க, யேசுநாதர் அவனுக்கு மறுமொழியாக : நீ இஸ்ராயேலில் போதகனாயிருந்தும், இவைகளை அறியாயோ? நாங்கள் அறிந்திருக்கிறதைப் பேசி, கண்டதற்குச்சாட்சி சொல்லுகிறோமென்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். ஆயினும் எங்கள் சாட்சியத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பூலோகத்துக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும், நீங்கள் விசுவசிக்கவில்லையே; பரலோகத்துக்கடுத்த காரியங்களைச் சொல்வேனாகில், எப்படி விசுவசிப்பீர்கள்? பரலோகத்தினின்று இறங்கினவரும், பரலோகத்திலிருக்கிறவருமான மனுமகனைத் தவிர, பரலோகத்துக்கு ஏறினவர் ஒருவருமில்லை. மோயீசன் கானகத்திலே சர்ப்பத்தை உயர்த்தினது போல, மனுமகனும், தம்மை விசுவசிக்கிற எவனும் சேதமாகாமல், நித்திய ஜீவனை அடையும்படி உயர்த்தப்படவேண்டும் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே பிரசாதஸ்நானத்தின் மகிமையும் திருச்சிலுவையின் மகிமையும் காணப்படுவது :— அது ஏதெனில் நீக்குதேமு என்றவனை ஆண்டவர் பார்த்து மறுபடி பிறவாதவன் மோக்ஷகரை சேரமாட்டான் என்று சொன்னதினால், இருவகைப் பிறப்பு உண்டு என்று காண்பித்தார். அதாவது : தாய்வயிற்றில் சரீர பிறப்பாய்ப் பிறக்கிறதல்லாமல் தண்ணீராலும் தேவப் பிரசாதத்தினாலும் ஞானப்பிறப்பு உண்டாகி அத்தால் மோக்ஷ மகிமை பெறலாம் என்று அறிவித்தார். அது ஏனெனில், அந்தந்த வித்து இல்லாமல் அந்தந்த விருக்ஷம் முளைக்கவும், அந்தந்த விதப்பழங்கள் காய்க்கவும் மாட்டாததுபோலத் தேவமுகதெரிசனம் என்கிற மோக்ஷத்தை அடையத் திவ்வியபிரசாதம் என்கிற வித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் எவனும் பாத்திரமாகமாட்டான். அதினால் அப்படிப்பட்ட தேவப்பிரசாதம் என்கிற வித்து உண்டாகப் பிரசாத ஸ்நானம் என்கிற ஞானப்பிறப்பாய்ப் பிறக்கவேணும் என்ற விபரமாம். ஆனால் சகலமான பிரசாதங்கள் உண்டாகவும் வர்த்திக்கவும், ஆண்டவருடைய சிலுவையும் பீடையும் காரணமாய் இருக்கிறதினால் அப்படிப்பட்ட சிலுவையின் மகிமையையுங் காண்பிக்கத் திருவுளமானார். அது எப்படியென்றால், மொயீசன் வனத்தில் சர்ப்பத்தை ஏற்றின ரூபமாய்க் கிறீஸ்துநாதர் சிலுவையில் உயர்த்தப்படுவார் என்றதினால், இஸ்ருயேல் சனங்கள் வனாந்தரவழியாய் நடக்கிறபோது அவர்கள் சர்ப்பக்கடி நோயால் பீடிக்கப்பட்டபோது மொயீசன் வெண்கலத்தால் அவ்வித சர்ப்பரூபத்தை உண்டாக்கி மரத்தில் தூக்கிவைக்க, அத்தைப்பார்த்து நோயாளிகள் குணமாய்ப் போனதுபோலச் சிலுவையில் அறையப்பட்ட கிறீஸ்துநாதரைப் பாவிகள் விசுவாசக்கண்ணால் பார்த்துத் தங்கள் பாவ விஷங்களில் நின்று நிவாரணமாவார்கள் என்று காண்பிக்கத் திருவுளமான மேரை என்று அறியவும்.

ஆனதினால் இப்படிப்பட்ட சிலுவையின் பெறுபேறுகளை அறியத்தக்கதாக இன்று கொண்டாடப்படுகிற விசேஷ வர்த்தமானம் ஏதெனில், ஆண்டவர் சிலுவையில் பாடுபட்டதின் பின் பலன் அடையத்தக்கதாகக் கிறீஸ்தவர்கள் அந்தச் சிலுவையை நிதமும் ஆசரிக்கப்போகிறதைக்கண்டு துஷ்ட அக்கியானிகள் அப்படிப்பட்ட ஆசாரத்தை விலக்கவேணும் என்று அந்தச் சிலுவையைக் கெபியான குழிக்குள்ளே புதைத்து அதின்மேலே சுக்கிரனின் விக்கிரகக் கோவிலை உண்டாக்கி வைத்தார்கள். அப்படியே ஏறக்குறைய நூற்றைம்பது வருஷம் கடந்ததின்பின் அந்த நிந்தனையை நீக்கச் சர்வேசுரன் திருவுளமாய்க் கொன்ஸ்தந்தீனு என்ற எம்பிரதோருடைய தாயான எலேன் என்றவளுக்குச் சொற்பனத்திலே தோன்றி அப்படிப்பட்ட சிலுவை இருக்கிற இடத்தால் அதைக் கண்டெடுக்கிற மேரையை அறிவித்தார். அதினால் எலேன் என்றவள் அதுக்கான உதவியைக்கொண்டு குறித்த தலத்திற்போய்ப் பிசாசு விக்கிரகக்கோவிலை இடித்துக் குழியைத் தோண்டினபோது இரு கள்வருடைய சிலுவையுங்கூட மூன்று சிலுவையிருக்கக்கண்டு ஆண்டவருடைய சிலுவையை யிதன் தலைப்புறம் பதித்திருந்த எழுத்துக் காணாதேபோனதினால் தெரிந்துகொள்ளமாட்டாமலிருக்கிறபோது அதை ஆச்சரியவிதமாய்ச் சர்வேசுரன் காண்பிக்கத் திருவுளமானார். அது எப்படியென்றால், யெருசலேநகரியில் இராச குருப்பிரசாதியாயிருந்த மக்காரி என்றவர் சர்வே



சுரனைப் பிரார்த்தித்து வியாதிகேவலமாயிருந்த ஒரு ஸ்திரியின் மேல் இந்த மூன்று சிலுவையையும் ஒவ்வொன்றாய்க் கொண்டுபோய் வைத்தவிடத்திலே மற்றச் சிலுவைகளால் குணங்காணாமல் ஆண்டவருடைய சிலுவையைத் தொட்டவுடனே ஒரு வியாதிவருத்தமும் இல்லாமல் குறையற்ற ஆரோக்கியமானாள். அதினால் இதுதான் ஆண்டவருடைய சிலுவை என்ற உண்மையை அறிந்து மகா கொண்டாட்டமாய் ஒரு ஆலயத்தை உண்டாக்கி அதில் ஒரு பாதியை வெள்ளித்தகடு அழுத்திவைத்து, மற்றப் பாதியையும் ஆணிகளையும் உரோமையில் தன் மகனாகிய கொன்ஸ்தந்தீனு இராயனுக்குக் கையளித்ததினால் அதுக்குஞ் சிலுவையின்பேரால் பூச்சியமான ஆலயம் உண்டாக்கி அதிலே வைக்கப்பட்டது. அந்நாள் துவக்கம் குற்றவாளரைச் சிலுவையில் அறையாதபடிக்கு அந்த இராயன் கட்டளையிடவே முன் உலோகத்துக்கு அவமானமாயிருந்த சிலுவையானது அன்றுமுதல் வெகு பூச்சியமாய்க் கொண்டாடப்படலானது. அதினால் இப்படிப்பட்ட சிலுவை கண்டெடுத்த மகிமை வருஷந்தோறுங் கொண்டாடச் சாதாரண கிறீஸ்துசபையில் கட்டளையுண்டானது என்று அறியவும். இத்தைக் கண்ட நாங்கள் கிறீஸ்து சிலுவையின் பெறுபேறு அடையத்தக்கதாக அவருடைய பாடுகளை நிதமும் நினைத்து அநுசரிக்கப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் எங்கள் இரட்சணியத்தின் அடையாளமாகிய திருச்சிலுவையானது கண்டெடுக்கப்பட்ட பிரஸ்தாபத்தினால் உம்முடைய திருப்பாடுகளின் அற்புத ஞாபகங்களைப் புதுப்பித்தருளினீரே. அடியோர்களும் இந்தச் சீவிய விருட்சத்தின் பெறுமதியைக்கொண்டு நித்திய சீவியத்தின் பெறுபேறடைய எங்களுக்கு அநுக்கிரகம்பண்ணியருளும். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலமுஞ் சீவியராய் இராச்சியபாரம்பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென்யேசு.

---

## வைகாசி மாதம் இருபத்தாறுந் திகதி
## தியான சம்பிரதாயம் உண்டாக்கின
# ஆராதிஷ்ட பிலீப்பு நேரியார்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பன்னிரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது: உங்கள் இடைகள் வரிந்துகட்டப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும், எரிகிற தீபங்கள் உங்கள் கைகளில் இருக்கவுங்கடவது. தங்கள் எஜமான்வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படியாக அவர் கலியாணத்திலின்று எப்பொழுது திரும்புவாரென்று காத்திருக்கிற மனிதருக்கு நீங்கள் ஒப்பாயிருக்கக்கடவீர்கள். எஜமான் வரும்போது விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியரே பாக்கியவான்கள்; அவர் தமது இடையை வரிந்துகட்டி, அவர்களைப் பந்தியமரச்செய்து, அவர்களில் ஒவ்வொருவரிடத்திலும் போய் அவர்களுக்குப் பரிமாறுவாரென்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர் இரண்டாஞ் சாமத்தில் வந்தாலும், மூன்றாஞ் சாமத்தில் வந்தாலும் அவ்வண்ணமே காண்பாராகில், அவ்வூழியர் பாக்கியவான்கள். அல்லாமலும், திருடன் இன்னவேளையில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், சந்தேகமற விழித்திருந்து, தன்வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிந்துகொள்ளுங்கள். அந்தப்படியே, நீங்களும் ஆயத்தமாயிருங்கள். ஏனென்றால் நீங்கள் நினையாதவேளையில் மனுமகன் வருவார் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தில் ஆராதிஷ்ட பிலீப்புநேரியாருடைய சுகிர்தமகிமை வாழ்த்தப்படுவது. அது ஏதெனில், இடைகளைக் கட்டிக் கையில் வெளிச்சங்கொண்டு விழித்துக் காத்திருக்கவேணும் என்று ஆண்டவர் சொன்னதினால், சரீர ஆசைகளை ஒறுக்கிற விதமும் மனதால் சர்வேசுரனைத் தியானிக்கிற நெறியும் படிப்பித்த மேரையாம். இப்படிப்பட்ட சரீர ஒறுத்தலும் மனோதியானமும் என்கிற இந்த இருவித சுகிர்தங்களை ஆராதிஷ்ட பிலீப்புநேரியார் அதிக விசேஷமாய் அநுசரித்து உலோகத்துக்குப் பிரசங்கம்பண்ணிப் பலனுண்டாக்கினார். அது எப்படியென்றால், மனோதியானம் என்கிற செபத்தில் தாம் நித்தமும் அழுந்திச் சர்வேசுரனை நினைத்திருக்கிறதல்லாமல் அதை மற்றவர்களும் அறியவேணும் என்று அதுக்கான நெறிகளை எழுதி அப்படிப்பட்ட தியானத்தை அநுசரிக்கக் குருத் தபோதனர்களைக் கூட்டித் தியான சம்பிரதாயம் என்ற கூட்டத்தை உண்டாக்கினார். அப்படிப்பட்ட கூட்டங் கோவைப்புரிகாண மற்றும் இராச்சியங்களிலும்பரந்து, எங்குஞ் செபத்தியான ஆலயங்கள் உண்டாகி மனோசிந்தையால் செபத்தியானம் பண்ணுகிற படிப்பனை அவர் உண்டாக்கின சம்பிரதாய சந்நியாசிகளால் உலோகத்துக்கு அறியப்பட்டது.

இதல்லாமல் அவருடைய ஒறுத்தலின் மகிமை எப்படியென்றால், சரீரஉணவு ஒறுக்கிறதிலே வாரத்திலே அநேகநாள் ஒருசந்தி அனுசரித்துக்கொண்டுவருவார். சிலபோது ஒரு அன்னபானமும் நினையாமல் அநேகநாள் தேவபத்தியாற் காப்பாற்றப்படுவார். சரீர செல்வ சவுக்கியங்களை ஒறுத்தபிரகாரம் எப்படியெனில், நாங்கள் அசுத்தங்களை அருவருக்கிற மேரை



யாய் அவர் சுகங்களை வெறுத்திருப்பார். பூலோக வெகுமான துரைத்தனங்களைத் தமது தர்மத்துக்கு வினையம்பண்ணுகிற சத்துராதிகள் என்று விலக்கிப் புறக்கணித்திருப்பார். மனதில் நிறைந்திருந்த தேவபத்தியோவெனில், உலையில் ஊதப்பட்ட தீச்சுவாலைபோலவே பத்திச்சுடரை மனது கொள்ளாததினால் இரு விலாக்களும் ஊதின மேரையாய்க் காணப்படும். அப்படிப்பட்ட பத்தி லாகிரியால், தமது ஆத்துமம் பூலோகத்தில் இல்லாததுபோலச் சர்வேசுரனிடத்திலே பரவசமாய்ப் பூசை பண்ணுகிற சிலவேளைகளில் மகா வேகத்தால் பூமியால் எடுபட்டு அந்தரமாகத் தோன்றுவார். நாள்தோறும் பிரதானமான ஏழு ஆலயங்களைத் தெரிசித்து ஓய்வின்றிச் சுகிர்த போதகங்களைச் சொல்லிவருவார். அவர் தானக்கிரியைகளை எவ்வளவு உச்சிதமாய் அனுசரித்தாரென்றால், பிச்சை இரக்கிறவர்களுக்குக் கொடுக்க வேறொன்றும் இல்லாதிருக்கில் தமது ஊண்உடுப்புகளைக் கொடுப்பார். அதினால் அப்படிப்பட்ட தானம், தயாபரம் சர்வேசுரனுக்கு வெகு பிரியமாகி ஒருதினம் ஒரு தேவதூதன் பிச்சாடன இரப்பன் ரூபமாய் அவருடைய மனதைச் சோதிக்க வந்து அவர் தானம் பண்ணின அப்பத்தைக் கையேற்றார். இன்னமும் ஒருநாள் இராவிலே பிச்சை இடப்போனபோது கிணற்றிலே விழுந்து தேவதூதனால் கைதூக்கப்பட்டார். இப்படிப்பட்ட சுகிர்தங்களுக்காகச் சர்வேசுரன் அவருக்குப் பின்வருங் காரியங்களை அறியவும் மரண அவஸ்தையாயிருக்கிறவர்களைக் குணமாக்கவும் செத்தவர்களை உயிர்ப்பிக்கவும், செத்து மோக்ஷபதவி சேருகிற புண்ணியாத்துமாக்களைக் காணவும் வரங்கொடுத்தார். அல்லாமலும் பாவவாளனையும் புண்ணியவாளனையும் அவனவனுடைய ஆத்துமத்திலிருந்து உண்டாகிற துர்க்கந்தத்தினாலும் சுகிர்த வாசனையினாலும் கண்டு அறிந்துகொள்ளுவார். இந்த மேரையாய் ஆராதிஷ்ட பிலீப்புநேரியார் நடத்தின சுகிர்தங்களாலும் அவர் சம்பிரதாய சந்நியாசிமார் பண்ணின பிரயாசங்களாலும் பூலோகத்தில் காணப்பட்ட தர்ம பலன்களையும் விசேஷமாய் இந்த இலங்கையில் நூற்றைம்பது வருஷகாலமாய்க் கோவைத் தியானசம்பிரதாயக் குருக்களால் ஈடேறின ஆத்துமாக்களின் பலன்களையும் அவர் நிமித்தமாய் அடைந்ததினால் அவர் சுகிர்த மகிமையை வாழ்த்தி வருணித்து ஈறுகாணக்கூடாது. அதினால் இப்படிப்பட்ட அவருடைய தருமத்தை நாங்கள் இயன்றளவு அனுசரித்து அவர் சலுகையால் மோக்ஷம் பெறப் பிரயாசிக்கக்கடவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் முத்திப்பேறுபெற்ற பிலீப்பு என்னும் உம்முடைய ஸ்துதியரை உமது அர்ச்சியசிஷ்டவர்களின் மகிமைப் பதவிக்கு உயர்த்தியருளினீரே. அவருடைய திருநாளைக் கொண்டாடுகிற நாங்கள் அவர் புண்ணிய நடக்கையின் முன்மாதிரிகையினால் பிரயோசனமடைந்து கொள்ளுவோருமாகும்படிக்கு எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

### ஆனிமாதம்
### யேசுக்கிறீஸ்துநாதருடைய
# திவ்விய இருதயத் திருநாளில்
### வாசிக்கிற சுவிசேஷம்

---

(இந்தத் திருநாள் சற்பிரசாதத் திருநாளுக் கடுத்துவருகிற இரண்டாம் வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுவது.)

சுவிசேஷக அருளப்பர் பத்தோன்பதாம் அதிகாரத்திலே எழுதி வைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே யூதர்கள், அன்று ஓய்வு நாளுக்கு ஆயத்தநாளாயிருந்ததினாலும், அந்த ஓய்வுநாள் பெருநாளாயிருந்ததினாலும், அந்த நாளிலே சரீரங்கள் சிலுவையில் இராதபடி, அவர்களுடைய கணைக்கால்களை முறித்து, அவைகளை எடுத்துப்போடவேண்டுமென்று பிலாத்துவினிடத்தில் கேட்டுக்கொண்டார்கள். ஆதலால் போர்ச்சேவகர் வந்து முந்தினவனுக்கும், அவனோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த மற்றவனுக்கும் கணைக்கால்களை முறித்தார்கள். யேசுநாதரிடத்தில் வந்தபொழுதோ, அவர் ஏற்கனவே மரித்தாரென்று கண்டு, அவருடைய கணைக்கால்களை முறிக்கவில்லை. ஆனால் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவை (குத்தி)த் திறந்தான். உடனே அதினின்று இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. இதைக் கண்டவனே இதற்குச் சாட்சி சொல்லியிருக்கிறான். அவனுடைய சாட்சியும் உண்மையாயிருக்கின்றது. நீங்கள் விசுவசிக்கும்பொருட்டு, உண்மையானவைகளைத் தான் சொல்லுகிறதாக அறிந்திருக்கிறான். அவரிடத்தில் எலும்பை முறிக்கமாட்டீர்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் சம்பவித்தன. பின்னும் ஒரு வேதவாக்கியம் கூறுவது: தாங்கள் ஊடுருவினவரை நோக்கிப் பார்ப்பார்கள் என்பதாம்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தினால் எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துவின் திருவிருதயமானது மனுமக்கள்மேல்



வைத்த அளவில்லாத நேசப்பெருக்கத்தின் அபூர்வ அத்தாட்சி காணலாகும். அது எப்படியென்றால், கரைகாணாத கருணை சமுத்திரமாகிய எங்கள் ஆண்டவர் பாவத்தாற் கெட்டுப்போன மனுக்குலத்தை மீட்கத் தாமே மனுஷ அவதாரம் பண்ணித் தரித்திரனாய்ப் பிறந்து எளியனாய்ச் சீவித்துக் கொடிய பாதகனைப் போல் அரிய பாடுகளைப்பட்டுச் சிலுவையில் மரிக்கிறது தமது அளவற்ற நேசப் பெருக்கத்துக்குப் போதாதென்றாற்போல் அந்த நேசப் பெருக்கத்தை ஆதியோடந்தமாய்க் காண்பிக்கும்பொருட்டு நவமாய்ப் புரிந்த ஆச்சரியமாவது: ஒரு தேசத்திலே சிறைப்பட்டிருக்கிற குடிபதிகளை மீட்கிறதற்காக உயிர் கொடுத்து இறக்கக் கருணைகொண்ட ஓர் இராசனானவன் இராச்சியத்திலுள்ள தன் களஞ்சியமெல்லாம் அவர்களுக்குத் திறந் தளிக்கிறமேரையாய், ஆத்தும இராயனாகிய எங்கள் ஆண்டவர் சிலுவையில் மரித்தவேளை தெய்வீக களஞ்சியமாகிய நேசத்தால் நிறைந்த தமது இருதயம் ஓர் ஈட்டியால் குத்தித் திறபடச் சித்தமானார். அது எப்படியென்றால், போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியால் அவருடைய விலாவைக் குத்தித் திறந்தவிடத்திலே அந்தக்ஷணமே உதிரமும் சலமும் புறப்பட்டது என்றதினால், பூமியின் கீழ்ப்பட்ட திரண்ட சலமானது உள்ளே தங்கமாட்டாமல் பூமியைக் கிழித்துச் சராசரங்களை வளர்க்கும் ஆறுகளாய்ப் புறப்பட்ட பிரகாரம் எங்கள் ஆண்டவர் மனுமக்கள்மேல் வைத்தநேசமானது தமது இருதயத்தினுள்ளே தங்கமாட்டாமல் ஆத்துமாக்களை வளர்க்குஞ் சஞ்சீவியாய்ப் புறப்பட்டதென்றறியவும். இப்பிரகாரமாய் உதிரமும் சலமுமாகிய இருவித நீர் புறப்பட்டது என்றதின் அபிப்பிராயம் ஏதோவெனில், சலத்தால் ஆத்துமம் சென்மதோஷம் நீங்கிப் பிரசாதமடைந்து மறுரூபமாகிறதற்கு வழியாகிய ஞானஸ்நானங் குறிக்கப்படும். உதிரத்தாலோவெனில் பலியும் ஆத்தும போசனமுமாய் விளங்கும் நேசதிரவிய அனுமானமாகிய திவ்விய சற்பிரசாதம் காண்பிக்கப்படும். மீளவும் இதிலே அவதானிக்கத்தகும் விசேஷமாவது: எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து உலகத்திலிருந்த தம்மவர்களை நேசித்தபடியால் முற்றமுடிய நேசித்தாரென்ற தேவவாக்கின்படி எங்கள் ஆண்டவர் தமது நேச பரம சூழ்ச்சியால் ஆச்சரியங்களுக்குள்ளே ஆச்சரியமாகிய திவ்விய சற்பிரசாதத்தை உண்டாக்கி அதில் தாமே சருவ நன்மையும் சுரக்கும் ஏக ஊற்றாய் எழுந்தருளி உலக முடியுமட்டும் மனுமக்களுக்குள்ளே வாசம்பண்ணியருளத் திருவுளங் கொண்டார். இவ்வண்ணமே எங்கள் ஆண்டவர் தமது அளவற்ற நேசத்தை அநேக அபூர்வமான தெய்வீக அடையாளங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளால் காண்பித்தவிடத்திலேயும், மனுமக்களுக்குள்ளே அநேகர் நன்றிகெட்டவர்களாய்த் தமது இருதயத்துக்குப் பிரதிநேசங்காண்பியாது மீளவும் அவ்விருதயத்தை ஆயிரம் ஈட்டிகளால் ஊடுருவப்பண்ணினதுபோலக் கொடிய பாவங்களால் வாதிக்கிறதைக்கண்டு துக்கசாகரத்தில் அமிழ்ந்தினவராய்த் தம்முடைய உத்தம அடியாளாகிய மார்க்கரீத்து மரி அலக்கொக் என்னும் கன்னியாஸ்திரீயிடத்தில் முறையிட்டுச் சொன்ன பரிசாவது :—ஒருநாள் அக்கன்னிகையானவள் தேவநற்கருணையின் முன்பாகத் தேவநேசத்தைத் தியானித்து உருகி, உருகிப் பரவசமானாள். அப்போது யேசுநாதர் அவளுக்குத் தரிசனையாகிக் கூரியமுண்முடி சூடி நேச அக்கினியால் தகிந்துகொண்டிருக்கிற தமது இருதயத்தைக் காண்பித்து: இதோ! மனிதரை அநந்தவிதமாய் நேசிக்கிற எமது இருதயம். நன்றியீனராகிய அநேகாயிரம்பேர் நிந்தை அவமானங்களையே கைம்மாறாய்ச்செய்து இடைவிடாமல் இதை வாதிக்கிறார்களே! ஆனதினால் எமது நேச புத்திரியே! நீயே எம் இருதயத்தைத் தேற்றி அதற்கு நிந்தைப்பரிகாரமாக எமது இருதய பத்தியை உன்னுடைய வாக்காலும் கிரியையாலும் எங்கும் பரம்பும்படி செய்யக்கடவாயென்றும் அப்பத்தியின் மூலமாய் எண்ணிறந்த வரங்களை உலகத்துக்கு அருளுவோமென்றும் அதுகள் இன்னதின்னதென்றும் சொல்லி மறைந்தருளினார்.

இப்பிரகார காட்சியில் ஆண்டவர் அவளுக்கு அருளிய விசேஷ வாக்குத்தத்தங்களாவன :—1-வது, நாம் அவர்களுடைய அந்தஸ்துக்குத் தேவையான எல்லா வரப்பிரசாதங்களையுந் தந்தருளுவோம். 2-வது, அவர்கள் குடும்பத்திலே சமாதானம் உண்டாயிருக்கச் செய்வோம். 3-வது, அவர்களுக்குக் கஸ்தியில் ஆறுதலாயிருப்போம். 4-வது, அவர்களுக்குச் சீவியகாலத்திலும் விசேஷமாய் மரணவேளையிலும் தவறாத அடைக்கலமாயிருப்போம். 5-வது, அவர்கள் கையிடுங் கருமங்களின்மேல் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பொழிந்தருளுவோம். 6-வது, பாவிகளுக்கு நமது இருதயம் இரக்கத்தின் ஊற்றும் கரைகாணாத சமுத்திரமுமாயிருக்கும். 7-வது, வெதுவெதுப்புள்ள ஆத்துமாக்கள் பத்திவேகமுள்ளவர்களாவார்கள். 8-வது, பத்திவேகமுள்ள ஆத்துமாக்களோவென்றால் சீக்கிரமாய் மிகுந்த சாங்கோபாங்கத்தை அடைந்துகொள்ளுவார்கள். 9-வது, நமது திரு இருதயத்தின் படம் பிரசித்தமாய் வைத்து வணங்கப்படும் வீடுகளை நாமே ஆசீர்வதித்தருளுவோம். 10-வது, பாவிகளின் கடினமான இருதயத்தை இளகச்செய்யும்படி குருமார்களுக்குக்



கல்வித் திறமையைத் தந்தருளுவோம். 11-வது, இந்த வணக்கத்தைப் பரம்பச்செய்கிறவர்களுடைய பெயர்கள் நமது இருதயத்திலே எழுதப்பட்டு அதில் நின்று ஒருபோதும் அழிக்கப்படமாட்டாது. 12-வது, ஒன்பது மாசமட்டும் அடுத்துவரும் முதல் வெள்ளிக்கிழமைதோறுந் தேவநற்கருணை வாங்கும் அனைவருக்கும் உயிர்பிரியுந்தனையும் நன்னெறியில் நிலைக்கும் வரத்தை நமது சருவ வல்லபமுள்ள அன்பினால் அருளி, அவர்கள் நமது வரப்பிரசாதமும், தேவதிரவிய அனுமானங்களும் பெறாமல் மரணியாதபடி நமது திரு இருதயமே அத்தறுவாயில் பயமற்ற அடைக்கலமாயிருக்குமென்று நமது கரைகாணாத கருணையைக் கொண்டு வாக்குப்பண்ணுகிறோம் என்பதுகளாம்.

இப்படியே எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து அநேக வாக்குத்தத்தங்களை அருளிமறைந்ததின்பின் அந்த ஏழைக்கன்னியாஸ்திரீயானவள் தேவ அருளை முன்னிட்டு அவ்வுத்தம பத்தியை உலகத்துக்குப் பிரசங்கித்ததினால் தேவ நிந்தைப் பரிகாரசபைகள் அநேகாநேகமாய் முளைத்து உலகமடங்கலும் அற்புதமாய்ப் பரந்து செபதபதான தருமங்களால் ஆண்டவருடைய நேச பலியாகிய திருவிருதயத்துக்கு அன்பும் ஆறுதலும் செய்துவருகின்றன.

ஆகையால் பாவிகள்மேற்கொண்ட நேசப் பெருக்கத்தால் தமது சருவாங்க உதிரத்தையும் கடைசித்துளிபரியந்தம் சிந்தி உயிர்விட்டதுமல்லாமல் தமது இருதயத்தைத் திறந்து எங்களுக்குப் புகலிடமாக்கவுந் திருவுளங்கொண்ட எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துவின் அணைகடந்த நேசத்துக்குக் கைம்மாறாக எங்கள் சிந்தனை வாக்குக் கிரியை இவைகளால் அவருடைய நேச இருதயத்தை மேன்மேலும் வாதைப்படுத்தாமல் அதற்கு இசைந்தமேரையாய் நடந்து மோக்ஷானந்தத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் எங்கள் பாவ அக்கிரமங்களால் காயப்பட்டதாகிய உம்முடைய திருக்குமாரனுடைய இருதயத்தில் சிநேகத்தின் அளவில்லாத் திரவியங்கள் நிறையச்செய்யக் கிருபைகூர்ந்தருளினீரே. நாங்கள் அந்தத் திருவிருதயத்துக்கு எங்கள் பத்தியுள்ள ஆசார வணக்கங்களைக் காண்பித்து, அதற்கு ஏற்கையான பரிகாரக் கிருத்தியங்களையும் செய்ய எங்களுக் கநுக்கிரகம்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய்இராச்சியபாரம்பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துதாமே காரணகாட்சியாக, ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனி மாதம் பதின்மூன்றாந் திகதி
# ஆராதிஷ்ட அந்தோனியார்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு அஞ்சாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது: நீங்கள் பூமியின் உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்? இனி அது வெளியே கொட்டப்படுவதற்கும், மனிதரால் மிதிக்கப்படுவதற்குமேயன்றி, வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்தின் ஒளியாயிருக்கிறீர்கள். பருவதத்தின்மேலிருக்கிற பட்டணம் மறைவாயிருக்கமாட்டாது. தீபத்தைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைக்காமல் வீட்டிலுள்ள யாவருக்கும் பிரகாசிக்கும்படி அதை விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அவ்வண்ணமே மனிதர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் பொருட்டு, உங்கள் ஒளி அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. வேதப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களை என்கிலும் அழிக்க வந்தேனென்று நீங்கள் நினைக்கவேண்டாம். அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: வானமும் பூமியும் ஒழிந்துபோகுமுன் வேதப்பிரமாணத்திலுள்ள சகலமும் நிறைவேறுமொழிய அதில் ஓர் சிறு அட்சரமாவது ஓர் புள்ளியாவது நிறைவேறாமற் போவதில்லை. ஆகையால் மிகவும் சிறிதாகிய இந்தக் கற்பனைகளில் ஒன்றை மீறி, அவ்வண்ணமே மனிதருக்குப் போதிப்பவன் மோட்ச இராச்சியத்தில் மிகவுஞ் சிறியவனாக எண்ணப்படுவான். அவைகளை அனுசரித்துப் போதிப்பவனோ மோட்ச இராச்சியத்தில் பெரியவனாக எண்ணப்படுவான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஆராதிஷ்ட அந்தோனியாருடைய தர்மமகிமை வாழ்த்தப்படுவது. அது ஏதெனில் நீங்கள் உப்புக்குச் சமானமாவீர்கள் என்று திருவுளம்பற்றினதினால் உப்பால் சகல ஊண் பதார்த்தங்கள் அழியாதபடிக்குக் காப்பாற்றப்படுவதுபோல ஆராதிஷ்ட அந்தோனியார் தமது போதகங்களால் மனுஷருடைய ஆத்துமாக்களைத் தர்ம உருசி அடையவும் பாவத்தால் கெட்டுப்போகாமல் ஈடேறவுஞ் செய்தார். அது எப்படியென்றால், அவர் கல்வி, கலைக்கியானங்களை மிகுதியும் கல்லாத ஏழைச் சந்நியாசியாயிருக்கச் செய்தே, தன் மூப்புக் கட்டளையால் பிரசங்கம்பண்ணப்போன இடத்திலே மண்குகையில் பொன் வார்த்த மேரையாய்ச் சர்வேசுரன் அவர் மனதில் ஞானத் தெளிவுகளைக் கொடுக்க, அவர் திருவாக்குப் புத்தகங்களுடைய அர்த்தங்களை அறிந்து மாணிக்கத்



துக்குள்ளே மறைந்த ஒளியைத் தேய்மானத்தால் இலங்கப் பண்ணுகிறதுபோலத் தேவவாக்கியங்களுடைய பொருள்களை வெளியாக்கி முத்தினைக் கோர்க்கிறதுபோலச் சுகிர்தங்களினுடைய கிரமத்தை இணைத்துச் சொல்லிக் காண்பிப்பார். ஆனதினால் அந்தக் காலத்திலே இருந்த அர்ச். பாப்பானவர் இவர் பிரசங்கம்பண்ணுகிற இடத்தில் கேட்டிருந்து அவர் வசனங்கள் சம்மனசு வாக்கால் சொல்லப்படுகிற வசனங்கள்போலக் காணப்படுகிறது என்று வசனித்தார். இப்படிப்பட்ட போதகங்களின் மகிமையால் பாவிகள் எத்தனை கல்மனதாயிருக்கினும் உப்புப்போல் கரைந்து மனதில் அடைந்திருந்த பாவ விருப்பங்களை விட்டுத் திவ்விய உருசிகரம் குடித்ததுபோல் பேரின்ப இரசம் நிறைந்த இருதயம் உடையவர்களாவார்கள்.

அப்படியே துஷ்டபாவிகள் சுகிர்தவாளராய்ப் போனதுக்கு அளவில்லை. இந்த மேரையாய் ஆண்டவருடைய வாக்கின்படி ஆராதிஷ்ட அந்தோனியார் உப்புக்கு ஒப்பாய்ப் பூமியில் தர்ம உருசிகளை உண்டாக்கினதல்லாமல், உலோகத்துக்கு வெளிச்சம் ஆவீர்கள் என்ற வாக்கை நிறைவேற்றின மேரை எப்படியென்றால், அக்கியானப் படலங்களால் கண்மறைந்த சோனகர், துலுக்கர் முதலான பல அஞ்ஞான சமயவாதிகளும், விசுவாசம் பேதலித்த பலவித முரண்டர், பதிதர்களும் அவருடைய ஞானம், தர்மம், செபம், பிரசங்கம் முதலான சுகிர்தவாக்குக் கிரியைகளைப் பார்த்துச் சூரியனைக் கண்டாற்போல் அக்கியான விருள்களையும் முரண்டு மேகங்களையும் விட்டுத் தெளிந்தார்கள். இப்படியே அவருடைய வெளிச்சத்தால் மனிதர் தெளிந்ததுமல்லாமல் புத்தியில்லாத மிருகசெந்துக்களும் கடலின் மச்சங்களும் புத்தியுள்ளதுபோலத் தெளிந்த மேரை எப்படி என்றால், பதிதர்களில் அதிகமுரண்டுள்ள சிலபேர்கள் சற்பிரசாதத்திலே உண்மையான கிறீஸ்துவை வணங்கவேணுமென்று ஆராதிஷ்ட அந்தோனியார் படிப்பிக்கிற படிப்பினைக்குப் பரியாசம்பண்ணி அவர் ஒப்பிக்கிற வாக்குகளையும் முரண்டாய்த் தட்டி, நாங்கள் கொண்டுவருகிற மிருகம் இந்தக் கிறீஸ்துமுன்பாக நமஸ்காரம் பண்ணி வணங்குமாகில் நாங்களும் வணங்குவோம் என்று பொருத்தமானார்கள். அப்படியே மூன்றுதினம் புல்லுண்ணாத ஒரு கழுதையைச் சற்பிரசாதம் எழுந்தருளப்பண்ணுகிற இடத்திலே கொண்டுவந்துவிட்டு, அதினுடைய பசிக்கான தழைகளையும் காட்டினார்கள். அது தழையை நோக்காமல் சற்பிரசாதத்தை நமஸ்காரம்பண்ணின தன்மை காணப்பட்டது. இப்படியே மிருகம் தெளிந்ததைக்கண்டு தாங்களுந் தெளிந்தார்கள். இன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் ஒருநாள், ஆராதிஷ்ட அந்தோனியார் தம்முடைய வாக்குகளைத் தட்டுகிறவர்களுக்காகக் கடற்கரையிலேபோய் மச்சங்களைப் பார்த்து : நீங்கள் சர்வேசுரனுடைய படைப்பானால் அவருடைய வாக்குகளைக் கேட்க வாருங்கள் என்று கூப்பிட்டுச் சொன்ன இடத்திலே, மச்சத் திரள்கள் அணியணியாய் அவர் முன்பாக ஓடிவந்து வாய்களை அண்ணாந்து, அவர் வாக்கைக் கேட்கிறதுபோலவும், வால்களைச் சுழற்றி அக்களிக்கிறதுபோலவும் காணப்பட்டது அதைக்கண்டு அவருடைய பிரசங்கங் கேட்கமாட்டாதவர்கள் சந்தோஷமாய்க் கேட்டு விசுவசித்தார்கள்.

இத்தொகைப்பட்ட புதுமைகளாலும் கிரியை வாக்குகளாலும் ஆராதிஷ்ட அந்தோனியார் உலோகம் எங்கும் சூரியன் உதித்ததுபோலப் பிரகாசித்துத் தம்முடைய சுகிர்த ஆத்துமம் சர்வேசுரனுக்குக் கையளித்ததின்பின் அவருடைய திவ்விய பிரேதத்திலேயும்கண்ட புதுமையாவது: அவரை அடக்கி அநேக வருஷம் சென்றதின்பின் அவருடைய ஆராதிஷ்ட சரீரத்தைக் கிறீஸ்தவர்கள் வணங்கத்தக்கதாக வேறே மகிமையான ஸ்தலத்திலே வைக்கவேணும் என்று குழியைத் திறந்து எடுத்தபோது தேகம் அழிந்திருக்க நாவு மாத்திரம் உயிர் உள்ளதுபோல் இருந்தது. அதினால் அந்தச் சுகிர்தமுள்ள நாவினுடைய பெறுபேற்றின் மகிமையைச் சர்வேசுரன் தோற்றுவித்தார் என்று காணப்பட்டது. இப்படியே ஆராதிஷ்ட அந்தோனியார் சீவித்தும் மரித்தும் காண்பித்த சுகிர்தங்களையும் அற்புதங்களையும் தவிர இப்போதும் அவர் வேண்டுதலால் கிறீஸ்தவர்கள் அடைகிற ஆச்சரிய உபகாரங்களுக்கு எண்ணளவில்லை. அது ஏதெனில், எப்படிப்பட்ட நோயாளிகளும் அவஸ்தைப்படுகிறவர்களும், யோக்கிய அந்தரப்படுகிறவர்களும் அவரைப் பிரார்த்தித்துச் சகாயம் அடையாதவர்கள் இல்லை. விசேஷமாய்க் காணாதேபோன வஸ்துக்களுக்கு அவரை உறுதியாய் நம்பி விசுவாசத்தின் அடையாளத்தை அவர் பாதத்திலே வைக்கவே காணாதுபோன பொருள்கள் ஆச்சரியவிதமாய்க் காணப்படுகிற நன்மைச் சகாயத்தை நித்தமும் கிறீஸ்தவர்கள் அடைந்துவருகிறார்கள். அதினாலே அப்படிப்பட்ட வல்லமையுள்ள ஆராதிஷ்டவர்பேரில் நாங்கள் பத்தியாயிருந்து மோக்ஷம் அடையப் பிராயசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீருடைய திருச்சபையானது உம்முடைய ஸ்துதியரான முத்திப்பேறுபெற்ற அந்தோனியாரின் பத்தியுள்ள கொண்டாட்டத்தினால் என்றும் ஞான உதவிகளைப் பெற்றுக்கொள்வதும் பரலோக ஆனந்தங்களுக்கு உரிமையுள்ளதுமாகி மகிழ்ச்சியடையச் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.



---

### ஆனி மாதம் இருபத்துநாலாந் திகதி

# ஆராதிஷ்ட ஸ்நாபக யுவானியார்

## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா முதலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—எலிசபெத்தம்மாளுடைய பிரசவகாலம் நிறைவேறி, அவள் ஓர் குமாரனைப் பெற்றாள். அப்போது ஆண்டவர் தமது கிருபையை அவளிடத்தில் விளங்கச்செய்தாரென்று அவளுடைய அயலகத்தாரும் சுற்றத்தாரும் கேள்விப்பட்டு, அவளுடன் மகிழ்ந்து அவளை வாழ்த்தினார்கள். எட்டாம் நாளில் சம்பவித்ததேதெனில் : பிள்ளைக்கு விருத்தசேதனஞ் செய்ய அவர்கள் கூடிவந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படியே சக்கரியாஸ் என்று அதற்குப் பேரிடப்போகையில், அதின் தாய் எதிர்மொழியாக : அப்படியல்ல, அதற்கு அருளப்பன் என்று பேரிடவேண்டும் என்றாள். அவர்களோ அவளை நோக்கி : உன் உறவின்முறையாரில் இந்தப் பெயர் கொண்டவன் ஒருவனுமில்லையே என்று சொல்லி, அதின் தகப்பனுக்குச் சயிக்கினை காட்டி, அதற்கு என்ன பேரிடவேண்டுமென்று கேட்டார்கள். அவர் ஓர் எழுத்துப் பலகையைக் கேட்டு வாங்கி, அதின் பேர் அருளப்பனென்று எழுதினார். அதினால் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அக்ஷணமே அவருடைய வாய் திறக்கப்பட்டு, நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, சர்வேசுரனைத் தோத்தரித்துப் பேசினார். ஆகையால் அவருடைய அயலகத்தாரெல்லாருக்கும் பயமுண்டானதுமன்றி, யூதாவின் மலைநாடெங்கும் இந்தச் செய்திகளெல்லாம் பிரசித்தமுமாயிற்று. (இவைகளை) கேள்விப்பட்ட யாவரும் தங்கள் இருதயங்களில் இவைகளை வைத்துக்கொண்டு, ஒருவனொருவனைப் பார்த்து : இந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாய் இருக்குமென்று நினைக்கிறாய் என்பார்கள். ஏனெனில் ஆண்டவருடைய கரம் அதனோடிருந்தது. மீளவும் அதின் தந்தையாகிய சக்கரியாஸ் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டுத் தீர்க்கதரிசனமாய் உரைத்ததாவது : இஸ்ராயேலின் தேவனாகிய கர்த்தர் தோத்தரிக்கப்படுவாராக. ஏனெனில், அவர் தம்முடைய பிரஜைகளைச் சந்தித்து, அவர்களை மீட்டுக்கொண்டார் என்றார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே ஸ்நாபக யுவானியாரின் தரும மகிமை காண்பிக்கப்படுவது. அது ஏதெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னில்: முதலாவது, அவர் பிறந்தஉடனே கேட்டவர்கள் சர்வேசுரனை ஆனந்த அக்களிப்பாய்த் துதித்தார்கள் என்றதினால், அவரால் மோக்ஷ ஆனந்தமாகிய கிறீஸ்துவைக் காணலாம் என்ற குறிப்பாம். அவர் பேர் யுவானி என்றதினால் யுவானியாவது அருள் என்று சொல்லப்படும். அப்படியே கிறீஸ்துநாதரைப் பிரசங்கிக்க அவர் முதல் அருள் அடைந்தார் என்ற மகிமையாம். யுவானி என்ற பேருள்ளவர் அவர் கோத்திரத்திலே வேறு ஒருவரும் இல்லை என்றதினால் பூலோகத்திலுள்ள சமஸ்தரிலும் அவர் கீர்த்தியுள்ள பேர் அடைவார் என்ற மகிமையாம். சக்கரியா என்ற அவர் பிதா யுவானி என்ற பேர் எழுதின உடனே ஊமையாயிருந்த நா வழங்கினது என்றதினால் அக்கியானத்தால் சர்வேசுரனைத் துதிக்க நா வழங்காதவர்கள் இவரால் துதிக்கப்பண்ணுவிக்கலாம் என்ற மகிமையாம். இவர் நிமித்தமாய்ச் சக்கரியா என்றவர் திவ்வியகாட்சியை அடைந்து கிறீஸ்துவைத் துதித்ததினால் இவர் தீர்க்கதரிசிகளில் பெரிய தீர்க்கதரிசியாவார் என்ற மகிமையாம். இவ்வித புதுமைகளை உலோகத்தவர்கண்டு இவர் எவ்வித மகிமையுடையவர் ஆவாரோ என்று அதிசயித்துச் சொன்னதினால் இவர்மகிமை சகல உலோகத்துக்கும் ஒப்பில்லாத அதிசய கிரமமாகும் என்ற விபரமாம்.

இந்த மேரையாய் யுவானி பிறந்தபோது கண்ட மகிமைகள் அல்லாமல் அவர் தாய் வயிற்றில் உற்பவித்திருக்கையிலே கண்ட மகிமையாவது: பரிசுத்த தேவமாதா இசவேலை மினவ வந்த நேரத்திலே அவள் உதரத்திலிருந்த கிறீஸ்துவை அவர் அறிந்து அக்களிப்போடு துள்ளினதினால், அந்நேரம் அவர் சென்மபாவம் நீங்கிப் பரிசுத்தமான மகிமை காணப்பட்டது. பிறந்ததின்பின் சிறுப்பத்தில் வனத்திலே கொண்டுபோகப்பட்டு வனத்திலே இலை ஊணாகவும், மிருகத் தோல் உடுப்பாகவும், உலோக சுக, உணவு, உடுப்பு ஒன்றும் இல்லாமல் சீவித்து ஏகாந்தமாய்க் கடுந் தபம் பண்ணினதினால் ஏகாங்கி முனி முதலான தபோதனர்களுக்கு முதல் தப நெறி காண்பித்தவராம். அதின்பின் தேவ அருள் அடைந்து யொடுதாஞ் சுற்றுக்கிராமங்களில் கிறீஸ்துவின் வரவைப் பிரசங்கம்பண்ணினதினால் சுவிசேஷ பிரசங்கிகளுக்கு முதல் நெறி காண்பித்தவராம். கிறீஸ்துவின்பேரில் விசுவாசமாய்ப் பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டவர்களைத் தண்ணீரால் ஸ்நானம்பண்ணினதினால் பச்சாத்தாப ஸ்நானத்தின் நெறியும் காண்பித்தவராம். இதல்லாமல் பூலோகத்திலே வந்திருக்கிற கிறீஸ்துவை உலோகத்தவர் அறியாமல் தம்மைக் கிறீஸ்து என்று எண்ணினபோது தாம் கிறீஸ்துவின் செருப்-



பைக் கழற்றுகிறதற்கும் பாத்திரவான் அல்ல என்று தம்மைத் தாழ்த்தி அவரை வாழ்த்தினதினால் தாழ்ச்சியின் சுகிர்த நெறியைப் பூலோகத்தில் படிப்பித்தவராம். இன்னமும் தம்மைப் பின்செல்லுகிற சீஷரைக் கிறீஸ்து இடத்தில் அனுப்பினதினால் கிறீஸ்துவைப் பின்செல்லவேண்டிய மேரை காண்பித்தவராம். கடைசியிலே ஏரோது இராயனுக்குப் பிறதாரத்தை விலக்க வேதபோதகம் போதித்ததினால் அந்தப் பிரதார ஸ்திரீயால் கோப வயிராக்கியங்களை அடைந்து அதுக்காகத் தலை வெட்டுண்டு மோக்ஷம் சேர்ந்ததினால் சர்வேசுரனுடைய வேதத்துக்காகப் பிராணனைக் கொடுக்கிற வேதசாட்சிகளுடைய சுகிர்த மகிமை காண்பித்தவராம். இந்தப்பிரகாரமாக ஆராதிஷ்ட ஸ்நாபக யுவானியார் உற்பவித்ததிலும், வளர்ந்ததிலும், சீவித்து மரித்ததிலும், சகல உலோகத்துக்கும் சுகிர்த ஞான நெறிகளைக் காண்பித்த முந்தினவரும் ஒப்பில்லாதவருமாய் இருக்கிறதினால் ஸ்நாபக யுவானிக்கு மேற்பட்டவனாய்ப் பூலோகத்திலே பிறந்தவன் இல்லை என்று ஆண்டவர் தம்முடைய திருவாக்கினாலே காட்டி அருளினார். ஆனதினால் இப்படிப்பட்ட மகிமையுள்ள ஆராதிஷ்டவருடைய சுகிர்தங்களை நாங்கள் இயன்றளவு பின்சென்று அவர் சலுகையால் மோக்ஷம் பெறப் பிரயாசிக்கக்கடவோம்.

### திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் இன்றைத்தினத்தை முத்திப்பேறுபெற்ற யுவானியாரின் திருப் பிறப்பினால் எங்களுக்கு அரிய தினமாக்கத் திருவுளமானீரே. உம்முடைய சனத்துக்கு ஞான ஆனந்தத்தின் வரத்தையளிக்கவும் சகல விசுவாசிகளின் இருதயங்களையும் நித்திய இரட்சணியத்தின் பாதையில் நடப்பிக்கவும் கருணைகூர்ந்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## ஆனி மாதம் இருபத்தொன்பதாந் திகதி
## ஆராதிஷ்ட பேதுரு, பாவிலு
## அப்போஸ்தலர்களின் திருநாளில் வாசிக்கிற
## சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு பதினாறும் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :— அந்தக்காலத்திலே யேசுநாதர் பிலிப்புவின் சேசாரேயா என்னும் திசைகளுக்கு வந்தபோது, தம்முடைய சீஷர்களை நோக்கி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுஷர்கள் மனுமகனை யாரென்று சொல்லுகிறார்களென்று கேட்டார். அவர்கள் மாறுத்தாரமாக: சிலர் ஸ்நாபக அருளப்பரென்றும், சிலரோ எலியாஸென்றும், வேறு சிலர் எரேமியாஸ் அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவரென்றுஞ் சொல்லுகிறார்களென்றார்கள். யேசுநாதர் அவர்களைப் பார்த்து: நீங்களோ, என்னை யாரென்கிறீர்கள் என்று கேட்டார். சீமோன் இராயப்பர் மறுமொழியாக: நீர் கிறீஸ்துவானவர், சயஞ்சீவிய சர்வேசுரனுடைய குமாரன் என்றார். அப்போது யேசுநாதர் அவருக்கு மறுமொழியாக, யோனாவின் குமாரனான சீமோனே, நீ பாக்கியவான், ஏனெனில் மாம்சமும், இரத்தமுமல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவானவர்தாமே இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ இராயாய் இருக்கிறாய்; இந்த இராயின்மேல் என் திருச்சபையைக் காட்டுவேன். நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது. மோட்சத்தின் திறவுகோல்களையும் உனக்குக் கொடுப்பேன்; பூலோகத்தில் நீ எதைக் கட்டுவாயோ, அது பரலோகத்திலுங் கட்டப்பட்டிருக்கும். நீ பூலோகத்தில் எதைக் கட்டவிழ்ப்பாயோ, அது பரலோகத்திலுங் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே ஆராதிஷ்ட பேதுரு, பாவிலு என்கிற அப்போஸ்தலர் இருவருடையவும் பெறுபேறின் மகிமை காணலாயிருக்கும். அது ஏதெனில், ஆண்டவர் தம்மை ஆர் என்று கேட்டபோது தேவரீர் மெய்யான சர்வேசுரனுடைய குமாரன் என்று பேதுரு அப்போஸ்தலு சொன்னதினால் அவரைத் தம்முடைய திருச்சபைக்கு முதற் போராய் ஸ்தாபித்து மோக்ஷவாசலைத் திறக்கவும், பூட்டவும் திறவுகோல்களையும் கொடுத்து உலோகத்திலே அவர் கட்டினதையும் அவிழ்த்ததையும் பரலோகத்திலே கட்டினதும் அவிழ்த்ததுமாக வரம் கொடுத்தார். அதினால் பூலோகத்திலே கல்மனதானவர்களுடைய பாவக் கட்டுக்களை அவர் கிறீஸ்துவின் பெறுபேறுகளால் அவிழ்த்து மோக்ஷவாசலால் உட்பிரவேசிக்கப்பண்ணவும், தீயமனதை விடாதவர்களுக்குத் தங்கள் பாவங்களுக்காக ஆக்கினையிட்டு மோக்ஷவாசலால் பிரவேசியாதபடிக்குக் கதவு பூட்டவும், இந்த இரண்டு தத்துவத்தின் முகாமையையும் தலைமையையும் கொடுத்த மகிமையாம் என்று அறியவும்.

ஆனால் அவர் செய்த விசுவாச உச்சாரணத்தினாலே மாத்திரம் இவ்வளவு பெறுபேறுகள் அடைந்தபோதே அவர் நடந்த சுகிர்த நடக்கையால் அடைந்த பெறுபேறுகளையும் எத்தனை என்று அறிதல் உசிதமாம். அது எப்படியென்றால், இஸ்பிரீத்துசாந்து சீஷாக்களின் பேரில் இறங்கினதின்பின் பேதுரு அப்போஸ்தலு செருசலேம் நகரி வீதியில் புறப்பட்டுப் பல



பாஷைகளால் பிரசங்கம்பண்ண, மூவாயிரம் சனங்கள் கிறீஸ்துவை விசுவசித்தார்கள். இதல்லாமல் கோவில்வாசலில் இருந்த ஒரு பிறவி முடவனைக் குணமாக்கின புதுமையைக் கண்டு ஐயாயிரம் பேர் கிறீஸ்துவின் பத்தியை அனுசரித்தார்கள். அப்போது பேய்வித்தை மாயத்தில் மிஞ்சின சீமோன் என்ற ஒருவன் மாயத்தால் பிசாசுகளைத் தன்னிடமாக்கிக்கொண்டு தான் போகிற வருகிற இடந்தோறும் அதுகள் நிழல்போல் முன்னும் பின்னும் சூழ்ந்துகொண்டு திரியப்பண்ணுவான். அப்படிப்பட்ட நிழல்களைத் தான் உயிர்ப்பித்த பிராணிகள் என்று சொல்லிக் காயாசித்தி மாயாசித்திகளால் பல வேஷங்களைக்கொண்டு உலோகத்தார் தன்னைத் தம்பிரான் என்று வணங்கப்பண்ணி எத்தித்திரிவான். இப்படிப்பட்ட ஏய்ப்பால் மனுஷர் கெட்டுப்போகிறதை அப்போஸ்தலு கண்டு அவனுடனே அநேகந்தரந் தர்க்கித்து அவனுடைய பொய் மாயைகளை மனுஷருக்கு ஒப்பித்தார். அதினால் அவன் நாணித் தன்னைப் பின்சென்றிருந்த செனங்களைப் பார்த்து, நீங்கள் என்னை விசுவசியாதபோதே நான் தேவதூதர்களால் பரலோகத்திலே என் பிதாவண்டையில் போய் அவ்விடத்தில் நின்று உங்களை ஆக்கினையிடுவேன் என்று சொன்னான். அப்படியே பூமாலை தலையிற் சூடி ஒரு மேடையின்மேல் ஏறிக் கைகொட்ட அந்தப் பிசாசுகள் அவனை ஆகாசத்துக்குக் கொண்டுபோனது. அப்போது ஆகாசத்திலே வெகு தூரமாய்ப் போகுந்தனையும் அப்போஸ்தலு பொறுத்திருந்து பிசாசுகளைப் பார்த்துச் சர்வேசுரனுடைய ஆணைப்படியே அவனைக் கைவிடுங்கள் என்று சொல்ல அந்தப் பேயின் நிழல்கள் அவனைக் கைவிட்டுப் பிரிந்துபோக வித்தைக்காரன் பூமியிலே விழுந்து எலும்பு நொருங்கிச் செத்துவிட்டான். அத்தைக் கண்டு ஏழு தினத்துக்குள்ளாகப் பதினாயிரம்பேர் கிறீஸ்துவேதத்தைக் கையேற்றார்கள். அதின்பின் அப்போஸ்தலுவானவர் குருடர், செவிடர், முடவர் முதலான அங்கவீன வியாதிக்காரரைக் குணமாக்கினதல்லாமல், அவர் போகும்போதும், வரும்போதும் நிழல் விழுகிற இடத்திலே வியாதிக்காரரையும், செத்தவர்களையும் வைக்கச் சுகமும், சீவியமும் அடைவார்கள். அப்படியே இருபத்தைஞ்சு வருஷம் உரோமையில் இருந்தும் முப்பத்திரண்டு வருஷம் கிறீஸ்துவின் கட்டளைப்படி சகல திருச்சபைக்கும் மூப்பாயிருந்து அதை நடப்பித்து அளவிடக்கூடாத சனங்களைச் சர்வேசுரனுடைய பத்தியிலே சேர்த்ததின் பின், நேரோ என்ற இராயனுடைய காமஸ்திரீகளான இருவர் கிறீஸ்துவேதத்தை அனுசரித்துப் பாவத்தை விட்டு விரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராய் இருக்கிறதை அவன் கண்டு சகல கிறீஸ்தவர்களையும் முனிவோடே வாதித்து வதைத்துப் பேதுரு அப்போஸ்தலனையும் தலை கீழாய்ச் சிலுவையிலே வதைத்தபோது அவர் தமது சுகிர்த பெறுபேறுகள் நிறைந்த ஆத்துமத்தைச் சர்வேசுரனிடத்திலே கையளித்தார்.

அதின்பின் பாவிலு அப்போஸ்தலனுவுடைய சுகிர்த மகிமை எப்படியென்றால், அவர் முதல் கிறீஸ்துவேதத்துக்கு விரோதியாய் இருந்ததினால் வேதக்காரரைக் காட்டிக்கொடுக்கப் போகிற வழியிலே ஆகாசம் திறபட்டுக் கிறீஸ்துநாதரைக் கண்டு அவருடைய அப்போஸ்தல துரைத்தனத்துக்குத் தெரியப்பட்டார். அதின்பின் பற்பல இராச்சியங்களிலே கிறீஸ்துவேதத்தைப் பிரசங்கித்து யூதரோடு வெகுவாய்த் தர்க்கித்து உண்மையான கிறீஸ்து வேதத்தை அனுசரிக்கப்பண்ணின சனங்களுக்கு எண்ணளவில்லை. பிசாசுகளைத் துரத்தினதும், வியாதிக்காரர் அங்கவீனர்களைக் குணமாக்கினதும் அல்லாமல் அவருடைய சல்லட வெயர்வை துடைத்த சீலைத்துண்டு முதலானதுகளைத் தொட்ட உடனே அநேக வியாதிக்காரர் குணமாவார்கள். கடைசியிலே உரோமை நகரியில் பிரசங்கம் பண்ணுகிறபோது நேரோ என்ற இராயனுடைய ஊழியக்காரன் ஒருவன் பிரசங்கம் கேட்கப் பலகணி வாசலில் ஏறின இடத்திலே மூர்ச்சையாய் விழுந்து செத்தான். அவனை அப்போஸ்தலனுவானவர் உயிர்ப்பிக்க அவன் இராயனிடத்திலே போய்க் கிறீஸ்துநாதர் மெய்யான சர்வேசுரனும், வானத்துக்கும் பூமிக்கும் இராசாவும் என்றும் சொன்னபோது, அவனையும் அநேகம் கிறீஸ்தவர்களையும் ஆக்கினைபண்ணி அப்போஸ்தலனுவையும் தலைவெட்டக் கட்டளை இட்டான். அப்போது அப்போஸ்தலனுவானவர் இராசாவைப் பார்த்து, நீ பண்ணுகிற வாதை மரணம் சற்றுநேரத்துக்குள்ளே முடியும், நான் எப்போதும் சீவித்திருப்பேன். அத்தை மெய்யாகக் காணத்தக்கதாக நான் செத்த இரண்டாம் நாள் என்னைச் சீவனோடே காண்பாய் என்று சொன்னார். இப்பிரகாரம் கொலைக்களத்தில் போனபோது முழந்தாளில் இருந்து தன் பிராணனை ஒப்புக்கொள்ளச் சர்வேசுரனைப் பிரார்த்தித்த உடனே தலை தறிபட உதிரமும் பாலுமாகச் சிந்தப்பட்டு அந்த வெட்டுண்ட சிரம் வாயினாலே யேசு என்ற பேரை உச்சரித்தது. இந்த விதமாய்ச் சர்வேசுரனுக்குப் பிராணனை ஒப்புக்கொடுத்ததின்பின் நேரோ என்ற இராயனுக்குத் தாம் சொன்ன பிரகாரம் தோன்றி இதோ நான் சீவித்திருக்கிறதைப் பார். இத்தால் நீ கிறீஸ்துவை விசுவசியாவிட்டால் நித்திய நரகம் உனக்குக் கதியாம் என்று சொல்லி மறைந்தார். இந்த மேரையாக அப்போஸ்தலனுமார் இருவரும் சர்வேசுரனுடைய வேதத்துக்காகப் பாடுபட்டு மரித்த சுகிர்த பெறுபேறுகளுடைய மகிமையைப் பார்த்து நாங்கள் இயன்றளவு அவர்களைப் பின்சென்று அவர்கள் சலுகையால் மோட்சம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.



## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் இன்றைத் தினத்தை உம்முடைய அப்போஸ்தலர்களான பேதுருவும் பாவுலுவும் என்கிறவர்களுடைய வேதசாட்சி மரணத்தினால் பரிசுத்தமாக்கினீரே. வேத முறைமைகள் தொடங்கக் காரணமாயிருந்த இந்த இருவருடையவும் போதனைகளை உமது திருச்சபையானது சகலத்திலும் பின்பற்றி நடக்க அநுக்கிரகம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## ஆடி மாதம் பதினாறந் திகதி
# உத்தரிய மாதாவின் திருநாளில்
## வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பதினோராம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அக்காலத்திலே யேசுநாதர் சனக்கூட்டத்துக்குப் பிரசங்கித்திருந்தபோது சம்பவித்ததேதெனில், ஜனக் கூட்டத்தில் நின்று ஓர் ஸ்திரீயானவள் தன் சத்தத்தை உயர்த்தி, அவரை நோக்கி : உம்மைச் சுமந்த உதரமும் நீர் அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம் பெற்றவைகளே என்றார். அதற்கு அவர் : அப்படியானாலும், சர்வேசுரனுடைய வாக்கியத்தைக் கேட்டு, அதை அநுசரிக்கிறவர்கள் பாக்கியவான்களென்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின் அபிப்பிராயமாவது :-சனத்தின் நடுவில் நின்ற ஸ்திரீ ஆண்டவருடைய பிரசங்க வாக்கியங்களைக் கேட்டு அவரைச் சுமந்த உதரமும் பாலூட்டின பயோதரங்களும் பாக்கியம் பெற்றதுகள் என்று வாழ்த்தினதினால், நாங்கள் விசுவசிக்கிற வேத விசேஷங்களை மனதில் மாத்திரம் விசுவசித்தால் போதாது, வாயினாலும் வேண்டிய வேளையில் உச்சரிக்கவும் வேணும் என்ற விபரமாம். இன்னமும் தேவமாதாவை ஸ்துதிக்கிற வழக்கம் ஞாயமானது என்னும் அத்தால் காண்பித்திருக்குது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பிரத்தியுத்தரமாக ஆண்டவர் ஸ்திரீயைப்பார்த்து தேவவாக்கியத்தைக் கேட்டு அனுசரிக்கிறவர்கள் அதிக பாக்கியம் பெற்றவர்கள் என்று வசனித்தது ஏனென்றால், தேவ வேத கற்பனைகளைச் செலுத்தாமல் விசுவாசத்தினால் மாத்திரம் தேவசிநேகமும் ஆத்தும ஈடேற்றமும் அடையலாயிராதென்று காண்பிக்கச் செய்தார். ஆகையால் இந்தச் சுவிசேஷ வாக்கியத்தைக் கேட்கிற சமஸ்த கிறீஸ்தவர்களும் அந்த ஸ்திரீக்குச் சமானமாய்க் கைக்கொண்ட தேவ விசுவாசத்தைப் பயம் அச்சமின்றி உச்சரிக்கவும் அதினால் இவ்வுலோகத்திலே வரப்பட்ட எந்த விக்கினங்களும் பட்டு அனுபவிக்க ஒருமித்திருக்கவும் வேணுமென்று அறியக்கடவது. இன்னமும் ஆண்டவர் வசனித்த வாக்கியத்தால் மோக்ஷ பலன் அடைய விசுவாசம் மாத்திரம் போதாது என்றும் அறிந்து வேதகற்பனைகளைச் செலுத்துதலால் மோக்ஷ பலன் அடையப் புண்ணிய பெறுபேறுகளைத் தேடவேணும் என்றும் அறியக்கடவோம்.

இந்தச் சுவிசேஷ வாக்கியம் உத்தரியமாதாவின் உற்சவத்தில் வாசிக்கப்படுகிறதினாலும் அந்தப் பரிசுத்த மாதாவின் உற்சவத்துக்குக் காரணமாயிருக்கிறதினாலும் அவருடைய உத்தம மகிமை வாழ்த்தப்படுதல் உசிதமாம். அது எப்படியென்றால், சருவ பராபரனானவர் பரிசுத்த தேவமாதாவின் பேரில் கொண்ட பட்சத்தினால் அந்த நாயகி இவ்வுலோகத்தில் பிறக்கு முன்னமே சகலருக்கும் நன்மை நிறைந்தவளாய் வரப்போகிறாள் என்கிறதைப் புதுமையான அடையாளங்களால் காண்பிக்கச் சித்தமானார். அது எப்படியென்றால், பூருவகாலத்திலே எலீயசு என்ற தீர்க்கதெரிசி கர்மேல் என்கிற மலையின் மேலிருக்கும்போது தேவமாதாவின் அடையாளமாக வெகு சவுந்தரியமான ஒரு மேகம் கடலிலிருந்து ஏறுகிறதைக் கண்டார். தண்ணீர் நிறைந்த மேகம் பூமியின்மேல் தண்ணீராய்ப் பொழிந்தால் அந்தப் பூமியிலே வெகு பிரயோசனம் உண்டாக்குவதுபோல் நன்மை யாவும் நிறைந்த ஞான மேகம் என்கிற பரிசுத்த தேவமாதா சகலருக்கும் கருணையாயிருப்பாள் என்கிறதைச் சர்வேசுரனுடைய பொருட்டால் சொல்லப்பட்ட எலீயசு தீர்க்கதெரிசி அறிந்துகொண்டார். அது எப்படியென்றால், பரிசுத்த தேவமாதா பிறந்த பிற்பாடு அவளுடைய அமுதமான புத்தி போதகத்தைக் கேட்டவர்களும் அவளுடைய ஆச்சரியமான புண்ணியங்களைக் கண்டவர்களும் தங்கள் மனசு முழுதும் இந்த நாயகிக்குக் கையளித்ததுமல்லாமல் தேவமாதா உயிரோடிருக்கும்போது சொல்லப்பட்ட மேகத்தைக் கண்ட ஸ்தலத்திலே பரிசுத்த தேவமாதாவைக் குறித்து ஒரு



ஆலயத்தைக் கட்டி அதிலே நாள்தோறும் போய்ப் பரிசுத்த தேவமாதாவின் பேரில் செபம்பண்ணிவருவார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட தேவாலயம் கர்மேல் என்கிற மலையின்மேல் இருந்ததினால் அதிலே செபம்பண்ணுகிறவர்களை அர்ச்சியசிஷ்ட உத்தரிய மாதாவின் கர்மேல் சபையார் என்று எல்லோரும் சொல்லுவார்கள். அனந்த தயாபரமுள்ள தேவமாதா அப்படிப்பட்ட சபையாரின் பேரில் பட்சமாயிருந்ததினால் அவர்களுக்கு மிகுந்த பாக்கியத்தைக் கொடுக்கச் சித்தமானார். அது எப்படியென்றால், உத்தரியமாதாவின் சபைக்கு உட்பட்டவர்களில் அதிக அன்பான புத்திரனாகிய அர்ச்சியசிஷ்ட சீமோன் எஸ்தோக்கு என்றவர் இந்தச் சபைக்கு ஒரு விசேஷமான விருது கொடுத்து இந்தச் சபையை வெகுமானிக்கவேணுமென்று பரிசுத்த தேவமாதாவை மன்றாடி நிற்கும்போது, அதிக நேசமான மித்திரனே! உன் சபைக்கு இதை உத்தரியமாகவும் எனது கூட்டத்தின் அடையாளமாகவும் கைக்கொள்ளுவாய். இது உனக்கும் சகல கர்மேலின் சபையாருக்கும் விசேஷமான விருதாயிருக்கும். இத்தோடு யாதொருதன் மரணித்தால் நித்திய ஆக்கினைக்கு ஏதுவாகமாட்டான். இதோ ஈடேற்றத்தின் அடையாளம், வினையங்களுக்குச் சவுக்கியம், சமாதானத்துக்கும் நித்திய பொருத்தத்துக்கும் இது வாக்குத்தத்தம் என்ற வாக்கியங்களால் பரிசுத்த தேவமாதா இந்த உத்தரியத்தைச் சீமோன் எஸ்தோக்குவுக்குக் கொடுத்து இந்தச் சபையாரை வெகுமானித்தாரென்று பத்தியுள்ள பரம்பரையாகச் சொல்லப்படுவது. இதினால் சாதாரண திருச்சபைக்குச் சிரேஷ்டராயிருந்த பாப்புக்கள் அந்தச் சபையை உறுதியாக ஸ்தாபித்து அதுக்கு விசேஷமான பலன்களைக் கட்டளையிட்டார்கள். ஆனால் அந்தக் காலத்திலே ஐரோப்ப இராச்சியத்தில் இந்தச் சபையை அறியாதிருந்ததினால் இது நிமித்தம் சில பேர்கள் இந்தச் சபையை நிர்மூலமாக்க நினைத்து மூன்றாம் ஒனோரியுஸ் என்ற நாமமுடைத்தான பாப்புவிடத்தில் சொல்லிப் பிரயாசப்பட்டார்கள். ஆனால் அன்று இராத்திரியில்தானே தேவமாதா சொல்லப்பட்ட மூன்றாம் ஒனோரியுஸ் என்ற பாப்புவுக்குக் காணப்பட்டு இந்தச் சபையின்பேரில் பட்சமாயிருக்கக் கட்டளையிட்டார். ஆடி மாதம் பதினாறாந் திகதி உத்தரிய மாதாவின் திருநாள் கொண்டாடத் திருச்சபை கட்டளைபண்ணியிருக்கிறது. ஆனதினால் பரிசுத்த தேவமாதாவின் சுத்தமான உத்தரியம் எங்களுக்குச் சித்திக்கிற சகல ஆத்தும சரீர யோக்கியங்களுக்கும் பிசாசு சோதனைகளுக்கும் உத்தம அவுஷதமாயிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறதை அறிந்து அந்தச் சுத்தமான உத்தரியத்தை மகா பூச்சியத்தோடு அடைந்து நாள்தோறும் ஏழு பிரியதத்தமும், ஏழு திரீத்துவ தோத்திரமும் சொல்லி அத்தால் வேதவிசுவாசம் வளரவும் தேவ சத்துருக்களை மங்கடித்துத் திருச்சபை வர்த்திக்கவும் சத்தியவேத இராசாக்கள் சமாதானமாய் நடக்கவும் உம்முடைய உத்தரிய சபையில் உட்பட்ட சகலரும் தருமத்தோடு நடக்கவும் உம்முடைய கருணை கிடைக்கவேணும் என்று மன்றாடி இன்னமும் அவருடைய உத்தம ஏழு மகிமையையும் தியானித்துச் செப தியானம் பண்ணுதல் உச்சிதமாம். அந்த ஏழு மகிமை ஏதென்றால், முதலாவது சென்மதோஷமின்றிப் பிரசவித்தது. இரண்டாவது கன்னிசுத்தத்தோடு சீவித்தது. மூன்றாவது ஆண்டவர் அவருதரத்தில் உற்பவித்தது. நாலாவது ஆண்டவருக்கு மாதாவானது. அஞ்சாவது மரணத்தைச் செயங்கொண்டது. ஆறாவது பரலோகத்துக்கு எடுக்கப்பட்டது. ஏழாவது பரலோக இராசேஸ்பரி என்று மோக்ஷ முடி சூட்டப்பட்டது. இப்படியே செப தியானம் பண்ணுகிறவர்களுக்குச் சாதாரண திருச்சபையின் தலைவராகிய பாப்புவினால் நியமிக்கப்பட்ட பூரண பலன் அனுதினமும் அடையலாகும். ஆகையால் இத்தொகைப்பட்ட உத்தம மகிமையான உத்தரியத்தை நாங்கள் மகா பத்திகொள்கையோடு முத்தி செய்து, சனத்தின் நடுவில் நின்ற ஸ்திரீ ஆண்டவரை நோக்கி அபயமிட்டு அவரைச் சுமந்திருந்த உதரமும் பாலூட்டின பயோதரங்களும் பாக்கியம் பெற்றதுகள் என்று வாழ்த்தினமேரையாய் நாங்களும் சுத்தமான உத்தரியப்பேறு அடைந்து தேவமாதாவின் பேரை ஒருமனப் பட்சத்தோடு ஸ்தோத்திரித்து அவருடைய சலுகையால் மோட்ச பாக்கியத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமி, தேவரீர் கர்மேல் சபைக்கு உம்முடைய திவ்விய மாதாவாகிய முத்திப்பேறுபெற்ற நித்திய கன்னிமரியம்மாளின் பரிசுத்த நாமத்தைச் சூட்டி அதனை அலங்கரித்தருளினீரே. இந்தத் திருத் தாயின் ஞாபகத்தை இன்று பத்தியுள்ள ஆராதனைகளாற் கொண்டாடுகிற நாங்கள் அவருடைய உதவி சகாயங்களால் காக்கப்பட்டுச் சதா நித்தியமான பேரின்பத்தை அடைந்துகொள்ளக் கிருபை பண்ணியருளும். பிதாவோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற ஆண்டவரே, ஆமென்யேசு.

---

### ஆடி மாதம் இருபத்தைஞ்சாந் திகதி

# ஆராதிஷ்ட பெரிய யக்கோவு

## அப்போஸ்தலுவின் திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்.

சுவிசேஷக மத்தேயு இருபதாம் அதிகாரத்தில் எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே செபதேயின் குமாரருடைய தாய் தன் பிள்ளைகளோடு கூட ஏதோ கேட்கவேண்டுமென்று யேசுநாதரிடம் வந்து வணங்கினாள். அவர் அவளைப் பார்த்து: உனக்கு என்னவேண்டும் என்றார். அதற்கு அவள்: தேவரீருடைய இராச்சியத்திலே இந்த என்னுடைய இரண்டு பிள்ளைகளையும், உமது வலது பக்கத்தில் ஒருவனும் இடது பக்கத்தில் ஒருவனுமாக உட்காரக் கற்பித்தருளும் என்றாள். யேசுநாதர் மாறுத்தாரமாக, அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறது இன்னதென்று அறியீர்கள். நான் உட்கொள்ளப்போகிற பாத்திரத்தை நீங்களும் உட்கொள்ளக்கூடுமா? என்றார். அதற்கு அவர்கள்: கூடும் என்றார்கள். அப்பொழுது அவர்: என் பாத்திரத்தை நீங்கள் உட்கொள்வீர்களென்பது மெய்தான். ஆயினும் என் வலது பாரிசத்திலாவது, இடது பாரிசத்திலாவது உட்காரும்படி உங்களுக்கு அருளுவது என்னுடைய காரியமல்ல, என் பிதாவினால் நியமிக்கப்பட்டவர்களுக்கே கிடைக்கும் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே ஆராதிஷ்ட யக்கோவு அப்போஸ்தலுவின் தரும மகிமை கணலாயிருக்கும். அது ஏதெனில் ஆண்டவர் தாம் குடிக்கிற பானத்தை நீங்களும் குடிக்கலாமோ என்று கேட்டதற்குக் குடிப்போம் என்று அவர்கள் சொன்னதினால் ஆண்டவர் அனுபவிக்கிற சகல கஸ்தி வாதைகளையும், மரணத்தையும் நானும்பட்டு அனுபவிப்பேன் என்று யக்கோவு அப்போஸ்தலுவினுடைய மனதில் தைரியமும், ஆண்டவர் பேரில் பத்தியும், காண்பித்த மகிமையாம். ஆனதினால் அப்படிப்பட்ட சுகிர்த மகிமையைப் பிரசித்தமாக அவர் வாக்கினால் சொன்னதை நடக்கையால் நிறைவேற்றினமேரை காணுதல் உச்சிதமாம். அது எப்படியென்றால், ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளினதின்பின் அவர் யூதேயா சமாரியா என்ற இராச்சியத்திலும், எஸ்பாஞ் என்ற தேசத்திலும் கிறீஸ்துவேதத்தைப் பிரசங்கித்தார். ஆனால் அந்த நாட்டுச் சனங்கள் மதிபோதாதமிருந்த அறிவீனராய் இருந்ததினால் வேதத்தின் ஞான கிரமங்களைத் தெளியமாட்டாமல் ஒன்பதுபேர் மாத்திரம் வேத அனுசாரிகள் ஆனதைக் கண்டு அதில் ஏழுபேரைத் தம்மோடே கூட்டிப்போய் வேத கிரமங்களிலே தெளிவாக்கிக் குருப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் கொடுத்து மறுபடியும் அவர்களை எஸ்பாஞ் இராச்சியத்துக்கு அனுப்ப, அவர்களால் இராச்சியம் முழுதும் கிறீஸ்து வேதத்தை அனுசரிக்கலாயிற்று. அதின்பின் அப்போஸ்தலு ஆனவர் யூதேய இராச்சியத்திலே யூதர் வேதபண்டிதர்களோடு வெகுவாய்த் தர்க்கித்து. அவர்கள் எதிர்மொழி மொழியமாட்டாதபடிக்கு நாணுவித்து யூதர் வேதத்தை அதட்டினபோது அவர்கள் எர்மோசினி என்ற ஒரு பேய்வித்தைக்காரன் அண்டையிலே போய் அப்போஸ்தலுவோடே தர்க்கித்து அவரை வெல்லச் சொன்னார்கள். அதுக்கு அவன் அப்படிப்பட்ட ஏழை ஆனவனோடே தர்க்கிக்க நான் வேணுமோ, என் சீஷர்களில ஒருவன் போதாதோ என்று சொல்லிப் பிலேத்து என்ற தனது சீஷனை அப்போஸ்தலுவோடே தர்க்கிக்க அனுப்பினான். அப்படியே பிலேத்து என்றவன் அப்போஸ்தலு அண்டையில் போன இடத்திலே அவர் காண்பித்த வேத கிரம ஞாயங்களைக் கேட்டுக் கிறீஸ்துவேதத்தின் பேரில் தெளிந்து தன் குருவிடத்தில் வந்து அப்போஸ்தலு படிப்பிக்கிற கிறீஸ்துவேதம் உண்மை என்றும் அதைத் தானும் அனுசரிக்க வேணும் என்றும் சொன்னான். எர்மோசினி என்ற வித்தைக்காரன் கோபமாகித் தன் வித்தையால் அவனை அசையாதமேரையாய்க் கட்டிவைத்து உன்னுடைய யக்கோவு உன்னை விடுவிக்கிறதைப் பார்ப்பேன் என்று சொன்னான். இந்தச் செய்தியை அப்போஸ்தலு அறிந்து தன்முகம் துடைக்கிற சீலையைக் கொடுத்து, ஆண்டவர் கட்டப்பட்டவர்களை அவிழ்க்கிறார், வீழ்ந்தவர்களை எழுப்புகிறார் என்ற வாக்கியத்தை உச்சரிக்கச் சொல்லி அனுப்பினார். அப்போது பிலேத்து என்றவன் அதைக் கையேற்றுக்கொண்டு சொல்லச் சொன்ன திருவாக்கை உச்சரித்த உடனே பேய்ப் பந்தனங்கள் வியர்த்தமாய்ப் போய் எர்மோசினி என்ற வித்தைக்காரனை வெறுத்து, நிந்தித்து அப்போஸ்தலு அண்டையில் போய்ப் பிரசாத ஸ்நானம் பெற்றான். இவ்வித கிரமத்தை எர்மோசினி என்ற வித்தைக்காரன் கண்டு தான் அனுசரிக்கிற பிசாசுகளை அழைப்பித்து அப்போஸ்தலுவையும் பிலேத்துவையும் கட்டித் தன் முன்பாகக் கொண்டுவரச் சொல்லிக் கற்பித்தான். அந்தக் கட்டளையைச் செலுத்தப் பிசாசுகள் அப்போஸ்தலு அண்டையில் போன இடத்திலே தேவதூதனால் வெகுவாய்ப் பீடிக்கப்பட்டுத் தங்கள்மேல் இரங்கவேணும் என்று அப்போஸ்தலுவைக் கூப்பிட்டார்கள். அந்தக் கூக்குரலை அப்போஸ்தலு வானவர் கேட்டு, ஏன் வந்தீர்கள் என்று பிசாசுகளைக் கேட்டபோது உம்மைக் கட்டிக்கொண்டுபோக எர்மோசினி எங்களை



அனுப்பினான் என்று சொன்னார்கள். ஆனால், நீங்கள் அவனைத்தானே என்முன்பாகக் கட்டி வாருங்கள் என்று கட்டளையிட்டார். அக்ஷணத்திலே பிசாசுகள் போய் எர்மோசினி என்றவனைப் பின்முறியாகச் சேர்த்து அப்போஸ்தலு முன்பாகக் கொண்டுவந்து விட்டு அவனைக் கடின ஆக்கினைகள் பண்ணத்தக்கதாக உத்தாரங் கேட்ட இடத்திலே, பொல்லாப்புச் செய்தவர்களுக்கு நாங்கள் நன்மை செய்யவேணும் அல்லாதே தின்மை செய்யக்கடவோம் அல்ல. அதினால் அவனைத் தன் மனதாகப் போகவிடுங்கள் என்று கட்டளையிட்டார். அப்போது எர்மோசினி என்ற வித்தைக்காரனைப் பிசாசுகள் விட்ட இடத்திலே அவன் இன்னமும் பிசாசுகள் தன்னை வாதிக்கலாகும் என்று பயந்து அப்போஸ்தலு இடத்திலே உதவி கேட்டு அதுக்கு அவர் கொடுத்த தெண்டுக்கோலைக் கையேந்திக்கொண்டு பயம் இன்றித் தன் வீட்டுக்குப் போய்த் தனது வித்தைமாயப் புத்தகங்களை எல்லாம் சுடத்தக்கதாக அப்போஸ்தலு கையில் கொண்டுவந்து கொடுத்தான். இதல்லாமல் தான் செய்த குற்றத்துக்குப் பொறுதிகேட்டு அவர் கையால் பிரசாத ஸ்நானம் பெற்று மகா தருமவாளன் ஆனான். இவ்வித கிரமமாய் எர்மோசினி கிறீஸ்துவேதத்துக்குப் போனதை யூதர் கண்டு நாட்டைக் குழப்பி அப்போஸ்தலுவைக் குழப்பக்காரனாகச் சிறைப்படுத்திக் கழுத்தில் கயிறிட்டு ஏரோது இராயன் அண்டையில் கொண்டுபோய்க் கொல்லத் தீர்வை பெற்றுக்கொண்டார்கள். அப்படியே கொலைக்களத்துக்குக் கொண்டுபோகும் வழியில் அப்போஸ்தலு ஆனவர் ஒரு முடவனைக் குணமாக்கினதைக் கொலைக்காரச் சேவகன் கண்டு தானுங் கிறீஸ்தவன் ஆகவேணும் என்று தண்ணீர் கொண்டுவந்து கொடுத்து அவர் கையால் பிரசாத ஸ்நானம் பெற்றான். அதினால் அப்போஸ்தலுவோடு சேவகனுந் தலை வெட்டுண்டு தங்களுடைய சுகிர்த ஆத்துமங்களைச் சர்வேசுரனுக்குக் கையளித்து மோக்ஷ முடி பெற்றார்கள். இந்தப் பிரகாரமாக ஆராதிஷ்ட யக்கோவு அப்போஸ்தலு ஆண்டவருடைய பீடைப் பாத்திரத்தைக் குடிப்பேன் என்று சொன்ன வாக்கைத் தவறாமல் அவருக்காகப் பாடுபட்டு அடைந்த சுகிர்த பெறுபேறுகளை நாங்கள் கண்டு அவர் சலுகையால் மோட்சம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, அடியோர்கள் தேவரீருடைய அப்போஸ்தலரான யாகப்பருடைய உதவி சகாயங்களினாற் பெலன்கொண்டு உமக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியமான விதமாய் நடக்கும் நம்பிக்கையான மனதோடு ஊழியஞ் செய்யவுந்தக்கதாகத் தேவரீர்தாமே எங்களைப் பரிசுத்தமாக்குகிறவரும் பாதுகாக்கிறவருமாயிருந்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சிய பாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

## ஆடி மாதம் இருபத்தாருந் திகதி

# பரிசுத்த கன்னியாஸ்திரீயின் தாயான ஆராதிஷ்ட ஆனாளின்

## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

**சுவிசேஷக மத்தேயு பதின்மூன்றும் அதிகாரத்தில் எழுதிவைத்த வாக்கியமாவது :—** அக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு உவமையாகத் திருவுளம்பற்றினது : பரலோக இராச்சியமானது ஓர் நிலத்தில் புதைத்திருக்கிற புதையலுக்கு ஒப்பாயிருக்கின்றது. அதைக்கண்ட மனிதன் அதை மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினால் போய், தனக்குள்ள யாவையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்ளுகிறான். மீளவும் பரலோக இராச்சியமானது நல்ல முத்துகளைத் தேடுகிற வர்த்தகனுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் விலையேறப்பெற்ற ஓர் முத்தைக் கண்டமாத்திரத்தில், போய், தனக்குண்டான யாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்ளுகிறான். அல்லாமலும் பரலோக இராச்சியமானது கடலில் வீசப்பட்டு எவ்வகை மச்சங்களையுஞ் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கின்றது. அது நிறைந்தபின், வெளியில் இழுத்துக் கரையில் உட்கார்ந்து நல்லவைகளைத் தெரிந்தெடுத்து, பாத்திரங்களில் வைத்துக்கொண்டு, ஆகாதவைகளைப் புறம்பே எறிந்துவிட்டார்கள். இவ்வண்ணமே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர் புறப்பட்டுப்போய் நீதிமான்கள் நடுவிலிருந்து தீயோரைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார். பின்னும் அவர் : நீங்கள் இதையெல்லாம் கண்டுபிடித்தீர்களோ? என்றார். அதற்கு அவர்கள் : ஆம் என்றார்கள். அப்போது அவர்களை நோக்கி அவர் சொன்னதாவது : ஆகையால் பரலோக இராச்சியத்துக் கடுத்தவைகளிலே தேர்ந்த வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் வெளியில் எடுத்துக் காட்டுகிற வீட்டெஜமானுக்கு ஒப்பாயிருக்கிறான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சுவிசேஷத்திலே சொல்லப்பட்ட மூன்று உவமைகளினாலேயும் ஆராதிஷ்ட ஆனாளுடைய தானதருமமும், சுகிர்த



பெறுபேறுகளின் மகிமையும், வருணிக்கப்பட்டிருப்பதைக் காணலாகும். அது ஏதெனில் : முதலாவது, மோக்ஷ இராச்சியம் புதையலுக்குச் சமானம் என்றும், அது இருக்கிற இடம் அறிந்தவன் தனது சகல வஸ்துக்களைக் கொடுத்துக் கொள்வான் என்றும் சொன்னதினால் அந்தப்பிரகாரம் ஆராதிஷ்ட ஆனாள் மோக்ஷ சம்பத்தின் புதையல் இருக்கிற இடமாகிய தான தருமத்தின் நெறி அறிந்து அதுக்காகத் தனது சகல வஸ்துக்களையும செலவழித்தார். அது எத்தன்மையோ எனில், தமது போக போக்கியங்களாலும், பிரயாசங்களாலும் வருகிற சகல பலன்களையும் மூன்று பங்காய்ப் பிரித்து ஒரு பங்கை விதவை, கன்னியாஸ்திரீ, தேசாந்திரி முதலான இல்லாவாளருக்குப் பிச்சையாகக் கொடுத்து, ஒரு பங்கைத் தன் சமுசார பிள்ளைகளுக்கு இரட்சைதானமாக்கி, ஒரு பங்கைத் தேவாலயத் திருவிழாக்களுக்குக் காணிக்கையாக்கிச் செலவழித்துவருவார். அதினால் பெறுபேறுகளுடைய ஞான பொக்ஷத்தை அடைந்து அத்தால் என்றென்றைக்கும் சீவிக்கப் பாத்திரமானார்.

இரண்டாம் உவமையாவது : மோக்ஷ இராச்சியம் உச்சித மாணிக்கங்களைத் தேடுகிறவனுக்குச் சமானம் என்றும், அத்தைச் சகல வஸ்துவையுங் கொடுத்துக் கொள்வான் என்றும் சொன்னதினால் அந்தப்பிரகாரம் ஆராதிஷ்ட ஆனாள் இரத்தின ஆசைக்குச் சமானமான ஆவலோடு புத்திர சம்பத்தைத் தேடித்திரிவார். அது ஏதெனில், இருபது வருஷம் பிள்ளை இல்லாமல் உலோகத்தில் நிந்திக்கப்பட்டதினால் நித்தமும் சர்வேசுரனைப் பிரார்த்தித்து ஒரு பிள்ளைப்பாக்கியம் கிடைத்தால் அதைச் சர்வேசுரனுடைய பணிவிடைக்குத்தானே கையளிப்பேன் என்று நேர்ந்து, அதுக்காக வருஷந்தோறும் மிகுந்த காணிக்கைப் பதார்த்தங்களைக்கொண்டு தேவாலயத்தைத் தெரிசிக்கப் போவார். அதினால் இப்படிப்பட்ட அவருடைய பத்தி, பிரார்த்தனை, பெறுபேறுகளைச் சர்வேசுரன் தயாபர முகமாய்க் கையேற்று அவர் தேடின மாணிக்கத்தைக் கொடுக்கத் திருவுளமானார். அதாவது : பூலோகத்திலே சகல ஸ்திரீகளில் அதிக பெறுபேறுள்ள மரிய என்ற பரிசுத்த கன்னியாஸ்திரீயைப் பெறுவார் என்று தேவதூதன் அறிவிக்க அந்தப்பிரகாரமாய்க் கெற்பந்தரித்துச் சர்வேசுரனுக்கு மாதாவாயிருக்கிற பரிசுத்த கன்னியாஸ்திரீயாகிய விலைமதியாத இரத்தினத்தைப் பெற்றடைந்து, அது நிமித்தமாய்த் தாமும் சகல உலோகமுஞ் சீவித்துச் சகாயம் அடையலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றும் உவமையாவது: மோக்ஷ இராச்சியம் கடலில் வீசின வலைக்குச் சமானமாய், வலைஞர்கள் நல்ல மச்சங்களைத் தெரிந்து எடுத்து ஆகாததுகளைத் தள்ளிப்போடுவார்கள் என்று சொன்னதினால், அந்தப்பிரகாரம் ஆராதிஷ்ட ஆனாள் தமது ஞான விமரிசை என்கிற வலையைப் பூலோகம் என்கிற, கடலில் வீசி நல்ல ஒழுக்கங்களைத் தெரிந்துகொண்டு தீய ஒழுக்கங்களை விலக்கி வெறுத்துக் கிரியையிலும், வாக்கிலும், சிந்தனையிலும் அற்ப தோஷமும் பழுதுங் காணாதபடிக்குச் சுகிர்த நடக்கையாய் நடந்து அப்படிப்பட்ட சுகிர்த பெறுபேறு என்கிற நல்ல மச்சங்களைத் தமது இருதயம் என்கிற பொக்ஷத்திலே நிறைத்து அத்தால் மோக்ஷத்தின் அமுத விருந்துகளை அனுபவிக்கப் பாத்திரமானார். இந்தப் பிரகாரமாக ஆராதிஷ்ட ஆனாள் ஆண்டவர் திருவுளம்பற்றின உவமை வசனம் எல்லாம் தமக்குத்தான் வசனித்ததாகத் தவறாமல் நடந்து மோக்ஷம் பெற்றதினால் அப்படிப்பட்ட சுகிர்தங்களையும் அவர் பெற்றடைந்த இரத்தினம் என்ற பரிசுத்த தேவமாதாவின் விலைமதியாத பெறுபேறு சம்பத்துக்களையும் நாங்கள் பத்தியோடே பார்த்து அனுசரித்து அவர் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் முத்திப்பேறுபெற்ற அன்னம்மாளுக்கு உம்முடைய ஏக பேறான திருக்குமாரனுடைய மாதாவின் மாதாவாயிருக்கும் வரப்பிரசாதத்தைக் கட்டளையிட்டருளச் சித்தமானீரே. அந்த அம்மாளுடைய திருநாளைக் கொண்டாடுகிற நாங்கள் அவருடைய சலிகையினால் தேவரீர் சமுகத்திலே கிருபையடைய எங்களுக்குத் தயவாய் அநுக்கிரகம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சிய பாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துதாமே காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## ஆவணி மாதம் ஏழாந் திகதி
# ஆராதிஷ்ட கயித்தானு
## முனீந்திரனுடைய திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேய ஆறாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷருக்கு வசனித்ததாவது : எவனானாலும் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ் செய்யக்கூடாது. ஏனெனில், ஒருவனைப் பகைத்து, மற்றொருவனை நேசிப்பான், அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றொருவனைப் புறக்கணிப்பான். சர்வேசுரனுக்குந் திரவியத்திற்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது. ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: உங்கள் உயிர்பிழைக்க எதை உண்போமென்றும், உங்கள் உடலைமூட எதை உடுத்திக்கொள்வோமென்றும் ஏக்கமாயிராதேயுங்கள். உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் மேன்மையானதல்லவோ? ஆகாயப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள் ; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் குவிக்கிறதுமில்லை. ஆகிலும் அவைகளை உங்கள் பரமபிதா போஷித்துவருகிறாரே. அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுள்ளவர்கள் அல்லவோ? மேலும் யோசித்துக் கவலைப்படுவதினால் தன் உயரத்துக்கு ஒரு முழம் கூட்ட உங்களில் எவனாலே கூடும்? அன்றியும் உடைக்காக நீங்கள் கவலைப்படுவானேன்? வயல்வெளிகளிலுள்ள லீலிப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. ஆயினும் சலோமோன் முதலாய்த் தனது சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலென்கிலும் உடை பூண்டதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குச் சர்வேசுரன் இத்தன்மையாய் உடை உடுத்துவித்தால், அற்ப விசுவாசமுள்ளவர்களே, உங்களுக்கு எவ்வளவோ அதிகமாய் உடை உடுத்துவிப்பார்? ஆதலால் என்னத்தை உண்போம் அல்லது என்னத்தைக் குடிப்போம், அல்லது எதை உடுத்திக்கொள்வோம் என்று கவலைப்படாதிருங்கள். ஏனெனில் இவைகளெல்லாவற்றையும் அஞ்ஞானிகளே தேடுகிறார்கள். உங்கள் பிதாவானவரோவென்றால் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று அறிவார். ஆகையால் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்தமுந்தத் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் என்று திருவுளம்பற்றினார்.



இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தினால் ஆராதிஷ்ட கயித்தானு முனீந்திரனுடைய சுகிர்த சீவியமும், அவர் உண்டாக்கின சபையின் உச்சிதமான நெறியும் வாழ்த்தப்படுவது. அது எத்தன்மையோ என்றால் தியேனி என்கிற இத்தாலிய இராச்சியத்துக்கு அடங்கிய பட்டணத்திலே அதிக சங்கைபோந்த பிரபுவுமாய் ஆராதிஷ்ட பேதுரு அப்போஸ்தலுவுடைய ஆசனத்தில் எழுந்தருளின உத்தம பாப்புவுக்குக் கிட்டின உறவினருமாய் ஒரு பிரதானி இருந்தார். இவர் தமது மகிமைக்கு ஒப்பான ஸ்திரீயோடே விவாகம்பண்ணி இருவரும் போக போக்கியம் மிகுதியும் உள்ளவர்களாயிருந்தும் அதில் அபேட்சையின்றிச் சர்வேசுரனுடைய சித்தமாம்படியே தவறாமல் நடக்கிறவர்களாயிருந்தார்கள். இப்படியே நாட்போகையில் இவருடைய ஸ்திரீ கெற்பந்தரித்து ஓர் ஆண்பிள்ளையைப் பிரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தாள். அவ்வேளையில் அந்தக் குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு தேவாலயத்துக்கு நடந்து தேவமாதாவின் பீடத்துக்குச் சமீபமாய் முழந்தாளிட்டு அந்தச் சுத்தமான பிரதிமையைப் பார்த்துத் தமது புத்திரனைக் கைக்கொண்டு சித்தமாம்படி நடப்பிக்கவேணும் என்று பத்திவேகத்துடனே பிரார்த்தித்தாள். இந்த வேண்டுதல் நிர்மலசித்தத்தோடும், பத்திவேகத்தோடும், பண்ணப்பட்டதினால் தேவமாதா தயாபர கருணையாய்க் கைக்கொண்டதாக அற்புதத்தினால் காண்பிக்கச் சித்தமானார். இந்தடைவாய்க் கயித்தானு முனீந்திரன் தேவமாதாவின் காவலினால் சிறுப்பந்தொடுத்து மற்றும் குழந்தைகள்போல் செல்வப் பராக்கிலே பழகாமலும், யாதொரு பாவதோஷத்துக்கு உள்ளாகாமலும் சர்வேசுரனுடைய பயபத்தியை அதிகப்படுத்தி வருவார். அது எப்படியோ என்றால், தமது புத்தி விமரிசை வளர்ந்துவரும் நாளிலே தம்மைத்தாமே சர்வேசுரனுக்குப் பலியாகக் கையளித்து வளர வளரச் செபம், தவம், ஒறுத்தல், உபவாசம் முதலான நற்கிரியையோடு, மரியாதை, தாழ்ச்சி, சிரவணம், கன்னிசுத்தம் முதலான சுகிர்தங்களிலே வளர்ந்துவருவார். ஆனால் பிதாக்கள் தங்களுக்குண்டான போகபாக்கியங்களை இந்தப் புத்திரனால் மிகுவித்துத் தங்கள் மகிமையை வாழ்த்துவிக்க நினைத்ததினால் பத்தாவி என்கிற இராச்சியத்தில் இருக்கும் சாஸ்திர களஞ்சிய கூடத்துக்கு அனுப்பப்பட்டார். இப்படியே பள்ளிக்கூடத்துக்கு வந்து சாஸ்திரங்களில் அப்பியாசம் பண்ணிவருகையில் தேவ பயபத்தியில் அதிகமதிகமாய் வளர்ந்துவருகிறதல்லாதே சுகிர்த சீவியத்தைக் குறைத்து வந்தவரல்ல. இத்தன்மையான சீவியத்தோடே தர்க்க சாஸ்திரம், தேவ சாஸ்திரம், நீதிநெறி சாஸ்திரம் முதலானதுகளைப் பூரணமாய்ப் படித்துக்கொண்டு வித்தியாபாரகப் பட்டத்தை அடையத் தகுந்தவரானார். ஆனால் உலோக மகிமையை வெறுத்து இருந்ததினால் அந்தச் சாஸ்திரங்களைப் படித்ததின்பின் தமக்கு உரித்தான உரிமைச் சுதந்தரியத்தோடு வாழ்வையும் கைவிட்டு வழிச் செலவுக்கு ஒன்றும் கைக்கொள்ளாமல் தேசாந்திரியாக உரோமை நகரத்துக்குப் பிரயாணமானார்.

அத்தறுவாயிலே சுத்தமான பேதுரு அப்போஸ்தலு ஆசனத்தில் இரண்டாம் யூலியு என்கிறவர் முழுத் திருச்சபைக்கும் அதிசிரேஷ்ட பாப்புவாயிருந்தார். இந்த உத்தம சிரேஷ்ட பாப்புவானவர் கயித்தானு முனீந்திரன் முன் இருந்த சில பாப்புக்களுக்கு உறவுற்றாருமாய்க் கல்வி கலைக்கியானத்திலே வெகுவாய்த் தெளிந்து வித்தியாபாரக பட்டத்தை அடைந்திருக்-



கிறவருமாய்ச் சுகிர்த கிரியையிலே சம்பன்னருமாய் இருக்கிறதாக அறிந்துகொண்டு குருப்பட்டத்தைத் தரிக்கக் கட்டளைபண்ணினார். குறிக்கப்பட்ட அர்ச். பாப்பு கட்டளைப்படி குருப்பட்டத்தை அடைந்ததின்பின் உரோமை நகரத்து மந்திர ஆலோசனைக்கு அடங்கிய குருக்களுக்கு இரண்டாவதாகிய இடத்தை இவருக்கு உதார சித்தத்தோடு கொடுத்தருளினார். ஆனால் கயித்தானு முனீந்திரன் சர்வேசுரனுடைய பத்திவேகத்தால் எரிந்து அத்தால் மற்றவர்களையும் எரிக்க விரும்பி இந்த நகரிக்குத் தேசாந்திரியாய் வந்ததினால் சொல்லப்பட்ட உத்தியோகத்தை அர்ச். பாப்புவுடைய கட்டளைக்குக் கைக்கொண்டிருந்தாலும் சொற்ப நாட்குள்ளாக அதைக் கைவிட்டு உலோக ஆதாரம் அற்ற ஒரு குகையில் புகுந்து இராப் பகலாய்ச் செபதியானம்பண்ணி இருப்புச் சங்கிலியால் இரத்தம் ஓடுந்தனையும் அடித்துக்கொள்ளுவார். நாயறுட்சை தவிர மற்ற நாட்களிலே ஊண், உபவாசம், கடிந்தமாய்க் காப்பார். முள்ளொட்டியாணம் மயிரொட்டியாணம் முதலான ஆயுதங்களால் சரீரத்தை வாட்டிக் கன்னிசுத்தத்தைச் சுத்தமாய்க் காக்கப் பிரயாசிக்கிறதல்லாதே ஆத்துமம் சர்வேசுரனுக்குப் பணிந்து நடக்க முழுக் கவலையோடே பிரயாசிப்பார். இப்படியே சிறுப்பந்தொடுத்துத் தமது மனசிலே உட்கொண்ட பத்திவேகம் மிகுந்து ஞானத்திலே வெகுவாய்த் தெளிந்ததின் பின் பிறரைத் தெளிவிக்கச் சொல்லப்பட்ட குகையிலிருந்து புறப்பட்டார்.

ஆனால் பிறருக்காகப் பிரயாசித்தது எத்தன்மையோ என்றால் தெரு வீதிகளிலே போய் அவர்களுக்குத் தேவ வாக்கியங்களை உபதேசிப்பார். வருத்தர் சாலைகளைக் கட்டுவித்து வருத்தர்களை அதிலே கூட்டி அவர்களுடைய புண் குஷ்டங்களைத் தாமாகக் கழுவி மருந்திட்டுச் சரீரத்துக்குப் பரிசாரகம்பண்ணினதின்பின் அவர்களுக்கு ஞானபோதகம் சொல்லித் தெளிவிப்பார். இந்தச் சுகிர்த பிரயாசம் சர்வேசுரனுக்கு வெகு பிரியமானதால் அது ஓர் அற்புதத்தினால் காண்பிக்கப்பட்டது. அது எப்படி என்றால், அந்த உரோகருக்குள்ளே புண் குஷ்ட வேஷமாகக் கிறீஸ்துநாதர் காணப்படச் செய்தே உரோகன் என்று நினைத்துத் தமது ஞானப் பழக்கத்தின்படியே புண்களைக் கழுவி முத்தமிட்டபோது அவர் தாம் ஆர் என்று அறிவித்து ஆசீர்வதித்தருளினார். இந்தடைவாய்ப் பாவிகளை நல்வழியில் வருவிக்கவும், பத்தியுள்ளவர்களுடைய தேவ நேசத்தை அதிகப்படுத்தவும் தமது பிரயாசம் போதாததாய் எண்ணிக் குருப்பிரசாதிகளைக் கூட்டிக்கொண்டு பிசாசோடே அம-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராட்டங்கொண்டு ஞான செயங்கொள்ள மனசிலே விரும்பினார். ஆனால் அந்த அமராட்டத்துக்குச் சர்வேசுரனுடைய நேசத்தினாலே தெளிந்த குருப்பிரசாதிகள் வேண்டியதாயிருந்ததினால் அதுக்கான ஒரு சபையை உண்டாக்கக் கருதினார். அது எத்தன்மையோ என்றால், உதார சித்தத்தோடு கொடுக்கிறதைக் கைக்கொள்ளுகிறதல்லாதே ஒருதனிடத்திலே கேளாமலும் தோட்டம், துரவு வாங்காமலும், காசு பணத்தில் அபேட்சை வையாமலும் இப்படியே சுவிசேஷத்தில் குறிக்கப்பட்ட மேரையாய் வஸ்திரம், போசனத்துக்குக் கவலையின்றிப் பராபரனுடைய காவலிலேதானே முழு நம்பிக்கை வைத்துச் சுகிர்தத்தை மாத்திரம் தேடுகிற ஒரு சபையை உண்டாக்கினார். ஆனால் அர்ச். பாப்புவின் உத்தாரம் இல்லாமல் சபையை நடப்பிக்கக் கூடாததினால் அதுக்கான ஒழுங்குகளைப் பிரபந்தமாக்கி முழுத் திருச்சபைத் தலைவரான அர்ச். பாப்புவின் உத்தாரம் அடையும்படி கையளிக்கும்போது அவர் அதைக் கைக்கொண்டு தமது மந்திராலோசனைக்கு அடங்கிய உத்தம குருப்பிரசாதிகளுடைய ஆலோசனையிலே யோசனைபண்ணிப்பார்த்துப் பெலவீனமான மனுச் சுபாவத்தால் நிலைபேறாய் நடப்பிக்கக்கூடாத மேரையை அந்த அர்ச். பாப்பு நினைக்கிறதாகக் கயித்தானு முனீந்திரன் அறிந்து உரோமை நகரத்திலேதானே சுத்தமான பேதுருவை சீயு என்ற பிரதான தேவாலயத்திலே தியானத்தில் வேண்டுதலாயிருக்கும் நேரத்தில் ஒரு காட்சியைக் கண்டார். அது எத்தன்மையோ என்றால் மோக்ஷ கபாடம் திறபடத் திரீத்துவமாகிய ஏக சர்வேசுரன் சீவாசீவ வஸ்துக்களைத் தம்முடைய தயாபர பரிபாலனத்தால் இரட்சிக்கிற மேரையைக்கண்டு அந்த ஒழுங்குகளைச் செலுத்த ஒருமித்தார். இந்த விசேஷத்தை அர்ச். பாப்புவும் அவருடைய மந்திராலோசனைக்கு அடங்கிய குருப்பிரசாதிகளும் கேட்டுச் சொல்லப்பட்ட பத்தியை நடப்பிக்கத்தக்கதாக உத்தாரங் கொடுக்கச் சித்தமானார்கள்.

இத்தன்மையாய்க் கயித்தானு முனீந்திரன் சர்வேசுரனுடைய பரிபாலனத்தை முழு விசுவாசத்தோடு நம்பி உண்டாக்கின சபை இற்றைவரைக்கும் நடந்துவருகிறதல்லாதே அந்தச் சபையின் சந்நியாசிகளைக்கொண்டு பத்தியுள்ள கிறீஸ்தவர்களுடைய பத்தியை அதிகப்படுத்தியும் பாவிகளை நல்வழியில் வருவித்தும் அவவிசுவாசிகளைத் தெளிவித்துப், இப்படியே ஏராளமான பெறுபேறுகளைத் தேடினபின் தமது ஆயுசு நிறைந்து மரணங் கிட்டினதாகத் தேவ காட்சியினால் அறிந்து கடைசியான தேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுச் சங்



கீதங்களைப் பாடியிருக்கும்போது பிரசவமான வேளை தொடுத்துத் தேவமாதா தமது புத்திரனைக் கைக்கொண்டு நடப்பித்து வந்த தயாபர கருணையை ஈறுந்த காலத்திலேயும் காண்பிக்கத்தக்கதாகக் காட்சியால் தயாபரமான முகமண்டலத்தோடு காணப்படச் சித்தமானார். அந்நேரத்தில் கயித்தானு முனீந்திரன் வாலவயசு தொடுத்து உலோக கவலையின்றி மோட்ச இராச்சியத்தைமாத்திரம் ஆசித்துச் சுகிர்த பெறுபேறுகளால் நிறைந்த தமது விமலமான ஆத்துமத்தைத் தேவமாதாவுக்குக் கையளித்தார். இத்தை நாங்கள் அறிந்து உலோக கவலையின்றி மோட்ச இராச்சியத்தை ஆசித்து அவருடைய சுகிர்த கிரியையின்படியே இயன்றளவாக நடந்து அவருடைய சலுகையால் மோட்ச சம்பாவனையை அடையத்தக்கதாகப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா, தேவரீர் உம்முடைய ஸ்துதியாகிய முத்திப்பேறு பெற்ற கயித்தானு முனீந்திரனுக்கு அப்போஸ்தலர்களைக் கண்டுபாவித்துச் சீவிக்கும் வரத்தைக் கட்டளையிட்டருளினீரே. அடியோர்களும் அவருடைய மன்றாட்ட உதவியையும் முன்மாதிரியையுங்கொண்டு தேவரீரிலேயே என்றும் நம்பிக்கை வைப்போராய்ப் பரலோக காரியங்களைமட்டுமே தேடுவோராய் நடக்கக் கிருபைபண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

## ஆவணி மாதம் பத்தாந் திகதி

# ஆராதிஷ்ட லவுரேன்சாமியின்

## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் பன்னிரண்டாம் அதிகாரத்திலே எழுதி வைத்த வாக்கியமாவது :—அந்தக் காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது: மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். கோதுமைமணி நிலத்திலே விழுந்து மடியாவிட்டால், அது தனியே கிடக்கும். மடிந்ததானால், மிகுந்த பலனைத் தரும். தன் ஜீவனை நேசிக்கிறவன் அதை இழந்துபோவான். இவ்வுலகத்தில் தன் ஜீவனைப் பகைக்கிறவனோ சததமான சீவியத்துக்கு அதைக் காப்பாற்றிக்கொள்ளுகிறான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால், என்னைப் பின்பற்றக்கடவான். நான் எங்கேயிருக்கிறேனோ, அங்கே என் ஊழியனும் இருப்பான். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால், என் பிதா அவனைக் கனப்படுத்துவார் என்று திருவுளம்பற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே ஆராதிஷ்ட லவுரேன்சியார் பாடுபட்ட சுகிர்த பெறுபேற்றின் மகிமை காணலாயிருக்கும். அது ஏதெனில், நிலத்தில் விழுந்த மணி செத்துப்போகில் பலன் அழிக்கலாகும் என்றதினால், அப்பிரகாரமாக ஆராதிஷ்ட லவுரேன்சியார் சர்வேசுரனுக்காகப் பாடுபட்டுச் செத்து மோட்ச பலன் அடைந்தது காணப்பட்டது. இதல்லாமல் தன் ஆத்துமத்தை இவ்வுலகத்திலே வெறுக்கிறவன் அவ்வுலோகத்திலே அதைச் சீவிக்கப்பண்ணுவான் என்றதினால், அந்த மேரை ஆராதிஷ்ட லவுரேன்சியார் இவ்வுலகத்திலே தம்முடைய சீவனைக் காக்கவேணும் என்று விரும்பாமல் சுக செல்வ ஆசைகளை வெறுத்துச் சகல கஸ்தி வாதை நிர்ப்பந்தங்களோடும் இவ்வுலகத்திலிருந்து பிரிந்து பரலோகத்திலே நீடூழியுள்ள சீவியத்தை அடைந்தது காணப்பட்டது. ஆனதினால் இப்படிப்பட்ட சுகிர்த பெறுபேறுகளை அடைந்த மேரையையும் பாடுபட்டுச் செத்த காரணத்தையும் அறிகிறது உச்சிதமாம்.

அது எப்படியென்றால், ஆராதிஷ்ட லவுரேன்சியார் அமிர்த குண இலக்ஷணமும் தருமபிரியமும் உள்ளவராய்ச் சிஸ்து என்ற வேத குருச் சிரேஷ்டருக்குப் பூசைப் பரிசாரகனாயிருந்தார். அப்போது உரோமையில் இராயனாயிருந்த பிலிப்பு என்றவன் கிறீஸ்துவனானபடியால் சாகிறவேளையில் தனது இராச புதையல்களைப் பிறசமய இராசாக்களுக்குக் கைசேராதபடி புண்ணிய தானமாகச் சிஸ்து என்ற பாப்பானவருக்குக் கையளித்தான். இந்தச் செய்தியைப் பின்வந்த தேசிய என்ற பிறசமய இராசா அறிந்து சிஸ்து என்ற பாப்பானவரை அழைப்பித்து அந்தப் புதையல்களைக் கையளிக்கவும் தனது தேவர்களை வணங்கவும் சொல்லி அந்தப் பிரகாரம் செய்யாதிருந்தால் அவரைக் கொல்லக் கற்பித்தான். அதுக்குச் சிஸ்து என்ற குருச் சிரேஷ்டர் தரும உடைமையைக் கையளிக்கச் சம்மதியாததினாலும் பிசாசுகளை வணங்கமாட்டாததினாலும் சர்வேசுரனுக்காகத் தமது பிராணனைக் கொடுக்கச் சம்மதித்துப் புதையல்களைப் பிச்சைக்காரருக்குப் பகிர ஆராதிஷ்ட லவுரேன்சியாருக்குக் கட்டளையிட்டார். அதின்படியே லவுரேன்சியார் மூன்று நாளையில் அந்த இராச்சியத்திலுள்ள வறியவர்களைக் கூட்டி உடைமைகளைப் பகிர்ந்ததின்பின் சிஸ்து என்ற தன் குருவைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகிறதைக் கண்டு அவரைப் பார்த்து, குருவே! தேவரீர் கட்டளையிட்ட பிரகாரம் புதையல்களைப் பகிர்ந்தேனே; நான் தேவரீருக்குப் பிள்ளையும் பூசைப் பரிசாரகனுமாயிருக்கிறதினால் என்னை இல்லாமல் ஒருநாளும் பூசைபண்ணவில்லையே. ஆனால் இப்போது உமது பிராணனைச் சர்வேசுரனுக்குப் பூசைபண்ணப்போகையில் என்னையுங்கூடக் கூட்டிப்போகாமல் விட்டுப்போகிறது என்ன? ஏது குறை அடியேனிடத்திலே கண்டீர் என்று அழுது சொன்னதற்கு, அவர் மகனே! நான உன்னை விட்டுவிடவில்லை, விருத்தாப்பியனாயிருக்கிற நான் இவ்வளவு படுகிறேன. வாலிபனாயிருக்கிற உனக்கு அதிக போரும் மகிமையான செயமும் உண்டாயிருக்கும். அதினால் மூன்றுநாட் சென்று என்னைப் பின்செல்லுவாய் என்று சொன்னார். அப்போது ஆராதிஷ்ட லவுரேன்சியார் புதையல் பகிர்ந்தார் என்ற வார்த்தையைக் கொலைச் சேவகர் கேட்டுத் தேசியு என்ற இராயனுக்கு அறிவித்தபோது அவன் ஆராதிஷ்ட லவுரேன்சியாரை அழைத்துப் புதையல்களைக் காட்டச் சொன்னான். அதுக்கு அவர் மூன்றுநாட் கெடு வைத்து அதுக்குள்ளாக ஊரிலுள்ள வறியர், யாசகர்களை இராயன்முன் கூட்டிவந்து, இதோ அழியாத புதையல்கள் இவர்கள்தான். பூலோகத்திலே புதைத்து வைக்கிற புதையல்கள் அழியும், இவர்களுக்குக் கொடுக்கிறது அழியாது என்று சொன்னார். அதைக்கேட்டு இராயன் வெகுவாய்க் கோபித்து ஆராதிஷ்ட லவுரேன்சியாரைச் சிறைப்படுத்தவும், கஸ்தி வாதைகள் படுத்தவும் கட்டளையிட்டான். அப்போது ஆராதிஷ்ட லவுரேன்சியார் சிறையில் இருந்தபோது ஒரு குருடனைக் குணமாக்கினது கண்டு அங்கங்கே வியாதிக்காரர் அவரண்டையில் வந்து வியாதியிலிருந்து சுகம்பெற்றுப் போவார்கள். இவையல்லாமல் சிறைச்சாலையின் நாயகனான இப்போலித்து என்றவனும் அவர் போதகங்களைக் கேட்டுத் தனது பெண்சாதி பிள்ளைகளோடு கிறீஸ்தவனானான். இப்படிப்பட்ட செய்திகளைத் தேசியு என்ற இராயன் அறிந்து ஆராதிஷ்ட லவுரேன்சியாரைச் சாட்டை சம்மட்டிகளால் கடினமாய் அடிப்பித்துக் காய்ச்சின இரும்புத் தகடுகளை முதுகிலே அழுத்தி வாதிப்பித்தான். ஆனால் இப்படிப்பட்ட வாதைகளைப்படுகிறபோது ஆராதிஷ்ட லவுரேன்சியார் சற்றும் சலியாமல் சிரித்த முகமாய்ச் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரங்கள் சொல்லுகிறதைக் கண்டு கல்லுகளைக்கொண்டு வாயையும் பல்லையும் நொருங்கப்பண்ணி இரும்புச் சிறும்பியின்மேல் வைத்துச் சுடச் சொன்னான். அப்படியே அவர் வேகையில் இந்தத் தீர்த்தம் எனக்குக் குளிர்ந்த நீர்போல் ஆறுதலாயிருக்கிறது. உன்னை முடியாத நரக அக்கினி தகிக்கும் என்று சொன்னார். கடைசியாய் அந்த இராயனைப் பார்த்துச் சொல்லுவார்: நிர்ப்பாக்கியனே! எனது ஒரு பாரிசம் வெந்ததே; இனி மறு பாரிசத்தைப் புரட்டிவைத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துச் சுட்டுச் சாப்பிடு என்று சொல்லி ஆகாசத்தை நோக்கிச் சர்வேசுரனைப் பிரார்த்தித்துத் தம்முடைய சுகிர்த பிராணனைக் கையளித்தார்.

இந்த மேரையாய் ஆராதிஷ்ட லவுரேன்சியார் ஆண்டவர் சொன்ன உவமையின்படியே கோதும்பை மணிபோலத் தம்முடைய ஆத்துமம் உலகத்துக்கு மரித்துச் சுகிர்தமாக முளைத்துப் பரலோகத்திலே மோக்ஷானந்தப் பழங்களைக் கனிக்கச் செய்தார். இப்படிப்பட்ட பெறுபேறுகளின் மகிமையை நாங்கள் கண்டு எங்களாலானமட்டும் பின்சென்று அவருடைய சலுகையால் மோக்ஷமடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லமையுள்ள சருவேசுரா, தேவரீர் முத்திப்பேறுபெற்ற லவுரேன்சியார் தமது வேதனைகளின் அக்கினியைச் சகித்து வெற்றியடையச் செய்ததுபோல அடியோரும் எங்கள் துர் ஆசாபாசங்களின் சுவாலையை அவித்து மேற்கொள்ள எங்களுக்கு அனுக்கிரகம்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## ஆவணி மாதம் பதினைஞ்சாந் திகதி
# கன்னிசுத்த தேவமாதா
## பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

பூமியில் நின்று வானமுகடுமட்டும் வளர்ந்து உயர்ந்த ஒரு மரம் அடியும் நுனியும் எல்லாம் புட்பித்துக் கனித்து உலோகம் எங்கும் பரப்பின கொம்பு கவைகளுடைய நிழலாலும், பரிமளிக்கிற மலர்களுடைய அலங்காரத்தினாலும் பழுத்த பழங்களுடைய உருசிகரத்தினாலும், சமஸ்த மனுஷர், மிருகம், பட்சி, பறவை என்னப்பட்ட சீவாத்துமம் யாவுக்கும் ஏக சீவாதாரமாயிருக்கிறதைக் கண்டால் அப்படிப்பட்ட மரத்தின் மகிமையை எவரால் வாழ்த்தி, வருணித்து முடிக்கலாம்? பூலோகத்தில் யாதொரு நவமான மோக்ஷம் உண்டானதோ அல்லது துக்கம் நிறைந்த இந்த உலோகத்துக்குள்ளே வேறே ஒரு மதுரமான சிறு லோகம் முளைத்ததோ என்று நினைத்து ஆச்சரியப்படலாயிருக்குமே. ஆனால் இப்படிப்பட்ட ஆச்சரியமான விருட்சம் ஏதென்றால், பூலோகத்திலே வேரூன்றிப் பரலோகத்திலே மோக்ஷ ஆனந்தப் பழங்களைக் காய்த்த பரிசுத்த கன்னியாஸ்திரியான தேவமாதா என்று அறியக்கடவோம். அது ஏனெனில், அவர் தாய்



உதரத்தில் செனித்த முதல் க்ஷணம் துவக்கம் மரித்த நேரமட்டாக அடைந்த சுகிர்த வரப்பிரசாதங்கள் எல்லாம் ஒன்றின்மேல் ஒன்று கல்லடுக்கின மேரையாய் அடுக்கினால் வானத்தைக் கடந்து உயர்ந்த கோபுரமாயிருக்கும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. இதல்லாமல் அவர் சீவித்த நாட்கள் எல்லாம் வாக்கால், சிந்தனையால், கிரியையால் செய்த சகல கிருத்தியங்களும், சுகிர்த மலர்களாயும், பழங்களாயும் இருக்க, பார்த்தவர்களுடைய கண் குளிர்ந்து மனதுகளிலே பத்தியாகிய உருசிகரம் நிறைந்திருக்கும் என்கிறதுக்குச் சந்தேகமில்லை. ஆனதினால் அப்படிப்பட்ட விருட்சமாகிய தேவமாதாவின் மகிமையை இன்று பிரசங்கிக்கத் தக்கதாக, சுவிசேஷக லூக்கா பத்தாம் அதிகாரத்தில் எழுதி வைத்த வாக்கியமாவது :—அக்காலத்திலே யேசுநாதர் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு ஊரிலே பிரவேசித்தார். அவ்விடத்தில் மார்த்தம்மாள் என்னப்பட்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டாள். இவளுக்கு மரியம்மாளென்னும் பேருள்ள ஒரு சகோதரி இருந்தாள். அவள் ஆண்டவருடைய பாதத்தின் கிட்ட உட்கார்ந்து, அவருடைய வாக்கியத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தம்மாளோ பற்பல வேலைகளைப் பரபரப்புடன் செய்துவருகையில் (யேசுநாதருக்கு முன்பாக) வந்து நின்று: ஆண்டவரே, என் சகோதரி என்னைத் தனியே வேலைசெய்ய விட்டிருக்கிறதைப்பற்றித் தேவரீருக்குக் கவலையில்லையா? அவள் எனக்கு உதவிசெய்யக் கற்பித்தருளும் என்றாள். ஆண்டவர் அவளுக்குப் பிரத்தியுத்தாரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைப்பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆயினும் ஒரு காரியந்தான் அவசரம். மரியம்மாள் உத்தமமான பங்கைத் தெரிந்துகொண்டாள். அது அவளிடத்தினின்று எடுபடமாட்டாது என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே கன்னிசுத்த தேவமாதா மோக்ஷ ஆனந்தஞ் சேர்ந்த மகிமை காணப்படுகின்றது :—அது ஏதெனில் ஆண்டவர் மரியம்மாள், மார்த்தம்மாள் என்ற இரு சகோதரிகளுடைய விடுதியில் எழுந்தருளினபோது அவர்களில் ஒருத்தி யாதொரு கவலையுமின்றி அவர் வாக்கு உருசியை அனுபவித்திருந்தாள் என்கிறதினால், ஆண்டவரை அனுசரிக்கிறவர்களுக்கு இரு வகைச் சீவியம் உண்டு என்று காண்பித்த மேரையாம். அதாவது: இவ்வுலோகத்திலே சுகிர்தம் தேடப் பிரயாசத்தோடு சீவித்திருக்கிறதினால், இப்படிப்பட்ட கவலையான சீவியத்துக்கு மார்த்தம்மாள் என்றவள் குறிப்பாம். பரலோகத்திலே பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுதலாய் ஆண்டவருடைய திருமுக தெரிசனை பெற்றிருக்கிறதினால் அதுக்கு மரியம்மாள் என்றவள் குறிப்பாம். ஆனதினால் இப்படிப்பட்ட குறிப்பின்படியே மரியம்மாள் என்றவளுடைய கிருத்தியத்தால் கன்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்த தேவமாதா இவ்வுலோக பிரயாசங்களை விட்டுப் பரலோகம் சேர்ந்தமேரை காணலாகும்.

அது பரம்பரையாகச் சொல்லப்படுகிறது எந்தப்பிரகாரமோவெனில், ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளினதின்பின் கன்னிசுத்த தேவமாதா இருபத்துமூன்று வருஷம் பூலோகத்திலிருந்து தமது திருக்குமாரன் பாடுபட்ட ஸ்தலங்களைத் தெரிசித்து வியாகுலமாய்த் தியானித்து இருந்ததல்லாமல், நவமாய் உண்டாக்கப்பட்ட கிறீஸ்துவேத சபைக்கு ஆன போதக படிப்பினைகளைக் கொடுத்து அப்போஸ்தலருக்கும் ஆறுதல் கொடுத்திருந்தாள். அப்படியே தமது வயது எழுபத்திரண்டும் சென்றதின்பின் திருக்குமாரனுடைய முக தெரிசனை அடையப் போகவேணும் என்று மகா ஆசை நேசமாய்ச் சர்வேசுரனைப் பிரார்த்தித்தபோது அந்தப் பிரார்த்தனை தேவகருணைக்கு உவப்பாகி இவருடைய சுகிர்த செயவிருதுக்கு அடையாளமாகத் திவ்விய அலங்காரமுள்ள பசுங் கொப்பைத் தேவதூதன் கையில் கொடுத்தனுப்பி, மூன்று தினத்துக்குள்ளாக இவருடைய ஆத்துமத்தைப் பரலோகத்திலே அழைப்பிக்கிற விசேஷத்தை அறிவிக்கச் சொன்னார். அப்படியே தேவதூதன் வந்து பரிசுத்த தேவமாதாவுக்கு அந்த விசேஷம் சொன்னவிடத்திலே இவர் தமது மரண அவஸ்தைக்குமுன் அப்போஸ்தலுமாரையும் காணவேணும் என்ற நேசத்தைக் காண்பித்ததினால் அந்த நினைவு நிறைவேறும் என்று அறிவித்துப்போனார். அந்தப் பிரகாரமாய் அந்தந்தத் தொலையான தேசங்களில் இருந்த அப்போஸ்தலுமார் தேவ பொருட்டாலுந் தேவதூதர் உதவியாலும் வந்துகூடக் கிறீஸ்துநாதர் குறித்த நாளிலே தமது திவ்விய தூதர் கூட்டங்களோடு தேவமாதா அண்டையில் இறங்கித் தமது திருமுக தெரிசனை கொடுத்தார். அத்தைக் கண்டவுடனே பரிசுத்த தேவமாதா குமாரனுடைய நேசத்தின் மகா வேகத்தால் வியாதி நோய் இல்லாமல் நித்திரைசெய்த மேரையாய்ப் பிராணனைக் குமாரன் கையில் ஒப்புக்கொடுத்தார். அதின்பின் ஆண்டவர்பேரில் பத்தியாயிருந்த ஆண், பெண்ணான கிறீஸ்தவர்கள் கூடித் திருவிழாக் கொண்டாட்டத்தோடு திவ்விய பிரேதத்தை எடுத்து யோசேப்பாத்து என்ற வெளியிலே நவமான கல்லறையில் பூமிதானம் பண்ணி, அப்போஸ்தலுமார் தியானத்தோடு காத்திருக்கையில் தேவதூதர்களுடைய நாதங்கள் கேட்கலாயிற்று. அப்போது மற்ற அப்போஸ்தலுமாருடன் வந்துசேரக்கூடாமலிருந்த தொம்மை அப்போஸ்தலு இரண்டு தினத்துக்குப் பின் வந்து தேவமாதாவைக் காணாமல் அழுது திவ்விய பிரேதத்தை யாகிலும் காணவேணும் என்று கல்லறை அண்டையிலே முடுகித் திறந்துபார்க்கப் பிரேதத்தைப் பொதிந்த பரிவட்டம் அல்லாதே தேகத்தைக் காணவில்லை. இதல்லாமல் இத்தனை நாளுங் கேட்கப்பட்ட கீதத் தொனிகள் அன்றுதான் அமர்ந்தது. ஆனதினால் அப்போஸ்தலுமார் சமஸ்தரும் ஆச்சரியப்பட்டுத் தியானத்தோடு சர்வேசுரனைப் பிரார்த்திதிருக்கையிலே ஆண்டவர் சரீரத்தோடு பரலோகத்துக்கு எழுந்தருளினமேரை சென்ம தோஷம் இல்லாத தமது மாதாவின் சரீரத்தையும் பூலோகத்திலே அழிய ஒட்டாமல் ஆத்துமத்தோடே சீவிக்கப் பரலோகத்துக்குச் சுவீகாரமாக்கினார் என்று சீஷர்களுக்குத் தெரிவித்தார்.

இதல்லாமல் யுவானி அப்போஸ்தலு முதலான தருமவாதிகள் கண்ட காட்சிகளால் மாதா பரலோகத்துக்கு ஏறின மகிமை காண்பிக்கப்பட்டது. அது எப்படியென்றால், பரிசுத்த தேவமாதா ஆத்தும சரீரத்தோடு ஆகாசத்தின்மீதே ஏறுகிற போது சந்திரமண்டலத்தில் சேர, சந்திரன் ஒரு தாசனைப் போல் பாதங்களை அணைத்துக்கொண்டது. சூரியமண்டலத்தில் சேர, சூரியன் மலர்ந்த கமலம்போல் அவர் சர்வாங்கத்தையும் அலங்காரமாக்கினது. நக்ஷத்திரமண்டலத்தில் சேர, பன்னிரண்டு நக்ஷத்திரங்கள் மாணிக்கங்களால் சேர்த்த கிரீடம் போலச் சிரசில் சூழ்ந்துகொண்டது. ஆனதினால் இப்படிப்பட்ட மகிமையோடு அவர் ஆகாசத்தில் ஏறுகிறபோது தேவதூதர் கண்டு அதிசயித்து அவரைத் துதித்துச் சொன்ன வசனமாவது: நிலவைப்போல் சவுந்தரியமானவராய், சூரிய உதயம் போல் ஆகாசத்தில் ஏறிவருகிற இவர் ஆர்? என்று வாழ்த்தினார்கள். இந்த மேரையாய்ப் பரிசுத்த தேவமாதா பரமண்டலங்களில் சேர்ந்தவுடனே பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து மூவரும் அவரைக் கையேற்று, ஆதரித்துத் தேவசிங்காசனத்துக்குப்பின் சகல மோக்ஷவாசிகள் இருப்பிடத்துக்கும் மேலான ஆசனத்தில் ஸ்தாபித்துப் பரலோக, பூலோக இராசேஸ்பரியாய் முடி சூட்டினார்கள்.

இப்படியே பரலோகத்திலிருக்கிற தேவமாதா பூலோகத்திலிருக்கிற எங்களுக்குச் சகாயம் பண்ணுகிறமேரை எப்படியோவெனில், பூமியிலிருந்து எழும்பும் புகைகள் ஆகாசத்தில் சென்று மேகத்துக்குள்ளே பிரவேசித்தவுடனே உறைந்து தண்ணீராய் இளகி வருஷித்துச் சகல உலோகமும் செழிப்பிக்குமே. அத்தன்மையாகப் பரிசுத்த தேவமாதா பரலோகத்திலிருக்கத் தம்முடைய கருணைத் தயாபர செல்வங்களைத் துளி துளியாய்ப் பூலோகத்தில் இறைத்துச் சமஸ்தருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்க அக்கினியையும் அவித்து அவனவன் கருதின நன்மை அடையலாகும் என்று அறியவும். ஆனதினால் கிறீஸ்தவர்களான நாங்கள் சமஸ்தரும் பரிசுத்த தேவமாதாவை விசேஷ பத்தியாய் அனுசரித்து அவர் சலுகையால் மோக்ஷமடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, எங்கள் கிரிகைகளாலே தேவரீருக்கு உவப்பானவர்களாக வல்லமை அற்றிருக்கிற நாங்கள், உம்முடைய திருச் சுதனாகிய எங்கள் கர்த்தரின் தாயாருடைய வேண்டுதலினால் ஈடேறத்தக்கதாக எங்கள் குறைகளைப் பாராட்டாமல் அநுக்கிரகஞ் செய்தருளும். இவரே தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவராம், ஆமென்யேசு.

---

## ஆவணி மாதம் பதினாறாந் திகதி
# ஆராதிஷ்ட உறோக்கு முனீந்திரன்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பன்னிரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அந்தக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கித் திருவுளம்பற்றினதாவது: சிறு மந்தையே, நீங்கள் பயப்படாதேயுங்கள்; ஏனெனில் உங்களுக்குத் தம்முடைய இராச்சியத்தைத் தரும்படி உங்கள் பிதாவுக்குச் சித்தமாயிற்று. உங்களுக்கு உள்ளவைகளை விற்று, பிச்சை கொடுங்கள் ; பழமைப்படாத பணப்பைகளையும், குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள் ; அங்கே திருடனும் அணுகான், பூச்சியும் அரிக்காது. அதேதென்றால், உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ, அங்கேயே உங்கள் இருதயமும் இருக்கும் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தினால் ஆராதிஷ்ட உறோக்குமுனீந்திரன் அடைந்துகொண்ட மோக்ஷபெறுபேற்றின் மகிமை காணப்படுகின்றது. அது எப்படியென்றால், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்ஷத்தையும் பரலோகத்திலே சம்பாதித்து வையுங்கள் என்றதே. அந்தப்பிரகாரம் மும்பெலியே என்னும் சிறந்த ஊரிலே பத்தி விசுவாசமுள்ள தாய் தந்தையரிடத்திலே நின்று பிறந்தவராகிய ஆராதிஷ்ட உறோக்கு முனீந்திரன் தமது இளமைப் பிராயத்திற்றானே இவ்வுலோக பாக்கிய இன்ப சுகங்கள் எல்லாம்



பழமைப்பட்டு அழிந்து கெடும் தன்மையுடையவைகளாதலால் அதுகளையெல்லாம் அரோசித்துத் தள்ளிப் பழமைப்படாததும் ஒருபோதும் அழிந்து கெடாததுமாகிய ஆத்தும சுக செல்வங்கள் என்னும் புண்ணிய திரவிய சம்பாத்தியத்தை இடைவிடாமல் சம்பாதிக்கப் பிரயாசப்பட்டுக்கொண்டு வந்தார்.

மீளவும் திருடரும் பூச்சிகளும் அணுகாத மோக்ஷத்திலே உங்கள் பொக்ஷங்களைச் சேர்த்த வையுங்கள் என்று திருவுளம் பற்றினதே. அதின் அபிப்பிராயம் ஏதென்றால், ஒருவன் தான் புண்ணியங்களைச் செய்யும்போது திருடனாகிய முகப்பிரீதியும் பூச்சியாகிய உலக சம்பாவனையுமுள்ள கருத்தோடு அப் புண்ணியங்களைச் செய்தால் அப்புண்ணியங்கள் பாழாய்ப்போகுமாகையால் அந்தத் துர்க் கருத்துகளை நீக்கித் தேவகருத்தோடு புண்ணியங்களைச் செய்கிறதே, மோக்ஷ களஞ்சியத்தில் அதுகளைச் சேமமாய்ச் சேர்த்து வைக்கிறது என்ற அபிப்பிராயமாம். இந்தப் பிரகாரமாய் ஆராதிஷ்ட உறோக்கு முனீந்திரனானவர் உலக முகாந்திரத்துக்காகப் புண்ணியங்களைச் செய்யாமல் சர்வேசுரன் ஒருவருக்கே உவப்பாயிருக்கவேணும் என்ற தேவ முகாந்திரத்துக்காக அதுகளைச் செய்ததினால் மோக்ஷத்திலே தமது பொக்ஷங்களைச் சேர்த்துவைக்கிறவரானார். இப்படிப்பட்ட சுகிர்த சம்பாத்திய புண்ணிய பொக்ஷத்திலே தேவநேசமும் அத்தோடே சம்பந்தப்பட்ட பிறர்நேசமுமே அதி உச்சிதமாய் விளங்கிய புண்ணியங்களாம். அன்றியும் உங்கள் பொக்ஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் என்ற பிரகாரம் ஆராதிஷ்ட உறோக்குமுனீந்திரனுடைய சுகிர்த புண்ணியங்களெல்லாம் தெய்வீக பொக்ஷத்தில் வைக்கப்பட்டிருந்ததினால் அவருடைய சிந்தையும் கவனமும் அப்பொக்ஷத்திலும் அதைப் பாதுகாப்பவராகிய சர்வேசுரனிலும் தங்கியிருந்தது. ஆகையால் அவர் பரலோகவாசியே அல்லாமல் இகலோகவாசி அல்ல என்று சொல்லத்தகும்.

அல்லாமலும் சிறு மந்தையே பயப்படாதே என்றதினால், ஆராதிஷ்ட உறோக்கு முனீந்திரன் இத்தாலிய தேசத்திலே கொள்ளைநோய் உண்டுபட்டு அநேகாயிரஞ் சனங்கள் தினந்தோறும் இறக்கிறதைக்கண்டு மிகவும் பரிதபித்து அக்கொள்ளைநோய்க்கு அஞ்சாது தயிரியத்தோடே தம்முடைய ஊரைவிட்டு இத்தாலிய தேசத்துக்குப் பிரயாணமானார். அங்கே சேர்ந்தவுடனே கொள்ளை நோயில் அகப்பட்டு வருந்துகிற சகலருக்கும் ஆத்தும சரீர சகாயங்களைத் தம்மாலானமட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷத்தோடும் அன்போடும் செய்துகொண்டுவருவார்; செத்தவர்களை அடக்குவார்; சாகிறவர்களுக்குப் பக்கத்திலேயிருந்து ஆறுதலும் திடனும் சொல்லி அவர்களை நல்ல மரணத்துக்கு ஆயத்தப்படுத்துவார். இந்த மேரையாய் ஆராதிஷ்ட உரோக்கு முனீந்திரன் அந்தக் கொள்ளை நோய் நடந்த காலமட்டும் தம்மை அந்தத் தேசத்தவர்களுக்காய்ப் பலியாக்கினாற்போல அன்பினாலும் ஆதரவினாலும் எல்லாருக்கும் எல்லாமாய் விளங்கிக்கொண்டிருந்தார். சர்வேசுரனோவென்றால், இப்பிரகார புண்ணியங்களால் சிறந்த தம்முடைய உத்தம ஊழியன்மேல் வைத்த நேசத்தை எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்க் காட்டும்படி அவர் மூலமாய் அநேக அற்புதங்களைச் செய்து கொள்ளை நோயாளிகளுக்குள்ளே அநேகருக்கு ஆரோக்கியத்தைத் தந்தருளினார். இவ்விதமாய் இவர்பட்ட பிரயாசத்தால் அத்தேசத்திலிருந்து அக் கொடிய கொள்ளை நோய் நீங்கின பிற்பாடு ஆராதிஷ்ட உரோக்கு முனீந்திரன் தம்முடைய சென்ன ஊருக்குத் திரும்பிப்போகையில் கொடிய மனிதர் அவரைப் பிடித்துச் சிறையில் அடைத்துச் சிலகாலமாக வாதித்தார்கள். ஆராதிஷ்ட உரோக்கு முனீந்திரனோவெனில், தேவ ஊழியத்தின் நிமித்தம் தமக்கு வந்த கஸ்திவாதைகளை எல்லாம் தளராத பத்தி விசுவாசத்தோடு சகித்துக் கடைசியாய்ச் சிறையில் நின்று விடுதலாகி முன்னிலும்பார்க்க அதிக சுறுசுறுப்புடனே தருமவழியில் நடந்து நல் மரணத்தினால் பரம பிதா கொடுக்கத் திருவுளங்கொண்டிருந்த இராச்சியமாகிய மோக்ஷ சுதந்தரத்தையும் தாம் அங்கே சம்பாதித்து வைத்த புண்ணியங்களின் மகிமைக் கிரீடத்தையும் பெற்றுச் சமாதானத்தில் நீடூழி வாழுகிறவரானார்.

இப்பிரகாரமே ஆராதிஷ்ட உரோக்கு முனீந்திரன் அடைந்துகொண்ட மோக்ஷ மகிமைக்குக் காரணமாவது: அவர் எல்லாத்தையும் பார்க்கச் சர்வேசுரனையும் தம்மைப்போலே பிறத்தியாரையும் நேசித்ததென்றதினால், நாங்களும் ஆராதிஷ்ட உரோக்கு முனீந்திரனிடத்திலே விளங்கிய இந்த இரண்டு புண்ணியங்களையும் அனுசரித்து அவருடைய சலுகையால் அவர் அடைந்த மோட்ச பிரதாப சீவியத்தை அடைந்துகொள்ளப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, தேவரீர் உம்முடைய சனத்தைச் சலியாத தயவோடே காப்பாற்றி முத்திப்பேறுபெற்ற உரோக்கு முனீந்திரனின் பெறுபேறுகளுடைய சலுகையினால் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் உண்டாகிய சகல தொற்றுநோய்களிலும் நின்று விலக்கிச் சேமமாக்கியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.



---

## ஆவணி மாதம் இருபத்துநாலாந் திகதி
# ஆராதிஷ்ட பர்த்தொலோமை
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா ஆறும் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே யேசுநாதர் செபஞ்செய்யத்தக்கதாக ஒரு மலைக்குப் புறப்பட்டுப்போய், சர்வேசுரனை வேண்டிக்கொள்வதிலே இரவெல்லாம் செலவழித்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை அழைத்து, அவர்களில் பன்னிருவரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார். (அவர்கள் யாரெனில்) இராயப்பரென்று தாம் காரணப் பெயரிட்ட சீமோனும், இவருடைய சகோதரனாகிய பிலவேந்திரரும், இயாகப்பரும், அருளப்பரும், பிலிப்பும், பர்த்தொலோமையும், மத்தேயும், தோமையாரும், அல்பேயின் குமாரனாகிய யாகப்பரும், செலோத்தேஸ் என்னப்பட்ட சீமோனும், இயாகப்பருடைய சகோதரனாகிய யூதாவும், துரோகியான யூதாஸ் இஸ்காரியோத்து என்பவனுமாம். பின்னும் அவர் அவர்களோடுகூட இறங்கி, மைதானமான ஓரிடத்திலே நின்றார். அங்கே அவருடைய சீஷர் கூட்டமும், யூதேயா நாட்டின் எத்திசையிலிருந்தும், ஜெருசலேம் நகரத்திலிருந்தும், தீர், சீதோன் நகரங்களின் கடற்கரைகளிலிருந்தும் வந்த ஏராளமான ஜனங்களும் இருந்தார்கள். இவர்கள் அவருடைய வாக்கைக் கேட்கவும், தங்கள் நோய்களினின்று சுகமாக்கப்படவும் வந்திருந்தார்கள். அசுத்த அரூபிகளால் உபாதிக்கப்பட்டவர்களும் சொஸ்தமானார்கள். அவரிடத்திலிருந்து ஒரு சக்தி புறப்பட்டு, எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்களெல்லாரும் அவரைத் தொடும்படி வழிதேடிக்கொண்டிருந்தார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஆராதிஷ்ட பர்த்தொலோமை அப்போஸ்தலுவின் சுகிர்த பெறுபேறுகளின் விசேஷம் காணலாயிருக்கும். அது ஏனெனில், ஆண்டவருடைய சீஷராகப் பின்சென்று வந்த அநேகம் சனங்களிலே தம்முடைய வேதத்தைப் பிரசங்கிக்கும் அப்போஸ்தலு என்ற பன்னிரண்டு பேரை மாத்திரம் தெரிந்துகொண்ட விடத்திலே அவர்களுக்குள்ளே ஆராதிஷ்ட பர்த்தொலோமை அப்போஸ்தலு உத்தியோகத்துக்குத் தெரியப்பட்டது அவருடைய பெறுபேற்றின் மகிமையாம். இதல்லாமல் ஆண்டவரைத் தொடுகிறவர்கள் அவருடைய தேவ வல்லமையினால் குண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவார்கள் என்றதினால், ஆராதிஷ்ட பர்த்தொலோமை அவர் கூட நித்தமுந் திரிந்து எப்போதும் அவர் சரித்திரங்களையும் திரு வாக்குகளையும் கண்டு கேட்டிருக்கையிலே அந்த வல்லமையால் எத்தனை ஞான சுகிர்த தெளிவுகளை அடைந்திருப்பார் என்ற மகிமை உத்தேசிக்கலாகும்.

அதினால் அவர் நடந்த சுகிர்த மேரை எப்படியென்றால், ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளினதின்பின் இந்த அப்போஸ்தலு தனக்குக் குறித்த பங்குப்பேற்றின்படியே இந்தியாவின் புறநாடு தேசங்களிலும், செருப்புலி என்ற தேசத்திலும் கிறீஸ்துவேதத்தைப் பிரசங்கித்தவிடத்திலே துஷ்ட சத்துராதிகள் பண்ணின சதிமானங்களையும் விரோதங்களையும், சர்வேசுரன் ஆச்சரியவிதமாய் விலக்கிக் காண்பித்த அற்புதங்களுடைய மகிமையைக் கண்டு கிறீஸ்துவை விசுவசித்த சனங்களுக்கு எண்ணளவில்லை. இதல்லாமல் அர்மேனிய என்ற தேசத்தில் போய்ப் பொலுமி என்ற இராசாவையும், அவன் குடும்பச் சனங்களையும் அவனுக்குச் சேர்ந்த பன்னிரண்டு பட்டணங்களையும் கிறீஸ்துவேதத்தில் தெளியப்பண்ணினார். இப்படியே அவர் போகிற தேசங்களில் சனங்கள் எல்லாம் அவரைப் பின்சென்று பிசாசுக்கோயில் ஆராதனைகளைக் கைவிட்டுப் போகிறதை அந்தக் கோயில் பூசாரிகள் கண்டு, தங்கள் பிழைப்புக் கெட்டுச் சீவிக்க உபாயம் இல்லாமலிருக்கிறதினால் பொலுமி என்ற இராசாவின் சகோதரனைப் பின்சென்று எந்தப் பிரகாரமும் அப்போஸ்தலுவைக் கொல்லுவிக்கவேணும் என்று மன்றாடினார்கள். அதினால் அவனுடைய உபாயத்தினால் அப்போஸ்தலுவின் பேரில் இல்லாத குற்றங்களைச் சாட்டிச் சிறைப்படுத்திக் கொல்லுவிக்கத் தீர்வைபெற்றுக்கொண்டார்கள். இப்படியே பூலோகத்தில் ஒருவருக்கும் முன் செய்யப்படாத ஆக்கினையை இவருக்குச் செய்யவேணும் என்று உயிரோடே உடலிலுள்ள தோலை உரிக்கப்பண்ணினார்கள். ஆராதிஷ்ட அப்போஸ்தலு இந்த வாதையை மகா தேவ வல்லமையோடு அனுபவித்து அத்தோடே தம்முடைய பிராணனைச் சர்வேசுரனுக்குக் கையளித்து வேதசாட்சி முடியை அடைந்துகொண்டார். ஆனதினால் இவ்விதமான அவருடைய சுகிர்தங்களை நாங்கள் அனுசரித்து அவர் சலுகையால் மோக்ஷமடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லவரும் சதா நித்தியருமாகிய சருவேசுரா, தேவரீர் இன்றைக்கு முத்திப்பேறுபெற்ற உம்முடைய அப்போஸ்தலரான பர்த்தொலோமையாரின் திருநாளிலே அடியோர்களுக்குப் பத்தியுள்ள



ஞான ஆனந்தத்தைத் தந்தருளினீரே. உமது திருச்சபையானது அவர் விசுவசித்தவைகளை நேசிக்கவும் அவர் போதித்தவைகளைப் பிரசங்கிக்கவும் அநுக்கிரகம் பண்ணியருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## ஆவணி மாதம் இருபத்தைஞ்சாந் திகதி
# ஆராதிஷ்ட லூவீஸ் முனீந்திரன்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பத்தொன்பதாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷர்களுக்கு உவமையாகத் திருவுளம்பற்றினது. வங்கிஷபதியொருவன் ஒரு இராச்சியத்தைக் கைக்கொண்டு, திரும்பிவரும்படி தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்டான். அப்பொழுது அவன் தன்னுடைய பத்து ஊழியரையும் வரவழைத்துப் பத்துராத்தல் பணங்களை அவர்களுக்குக் கொடுத்து, நான் திரும்பி வருமளவும் வியாபாரஞ் செய்யுங்கள் என்று அவர்களுக்குச் சொன்னான். அவனுடைய குடிகள் அவனைப் பகைத்து: இவன் எங்களுக்கு இராஜாவாயிருப்பது எங்களுக்கு மனதில்லையென்று சொல்லும்படி அவன் பின்னாலே ஸ்தானாபதிகளை அனுப்பினார்கள். ஆனால் அவன் இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டு, திரும்பி வந்தபோது, தான் பணம் கொடுத்திருந்த ஊழியரில் ஒவ்வொருவனும் வியாபாரஞ்செய்தது எவ்வளவென்று அறியும்படி அவர்களைத் தன்னிடத்தில் அழைத்துவரக் கட்டளையிட்டான். அப்பொழுது, முந்தினவன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ஒரு ராத்தல் பணம் பத்து ராத்தல் பணத்தைச் சம்பாதித்திருக்கிறது என்றான். எஜமான் அவனைப்பார்த்து: நல்லது, உத்தம ஊழியனே, நீ அற்ப விஷயத்திலே நாணயவானாயிருந்தபடியால், பத்துப்பட்டணங்களுக்கு அதிகாரியாயிருப்பாய் என்றான். பின்பு இரண்டாம் ஊழியன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ஒரு ராத்தல் பணம் ஐந்து ராத்தலை விளைவித்தது என்றான். அவன் இவனை நோக்கி: நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான். பிறகு மற்றொருவன் வந்து: ஆண்டவனே, இதோ உம்முடைய ராத்தல் பணம், இதை ஓர் உறுமாலையில் முடிந்து வைத்திருந்தேன். ஏனென்றால் நீர் வைக்காததை எடுக்கிறவரும் விதைக்காததை அறுக்கிறவருமாகிய கண்டிப்புள்ள மனுஷனென்று (அறிந்து) உமக்குப் பயந்திருந்தேன் என்றான். எஜமான் அவனை நோக்கி: கெட்ட ஊழியனே, உன் வாயினாலே உன்னைத் தீர்வையிடுகிறேன். நான் வைக்காததை எடுக்கிறவனும், விதைக்காததை அறுக்கிறவனுமாகிய கண்டிப்புள்ள மனுஷனென்று நீ அறிந்தாயே. ஆகையால் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிவரும்போது, என் பணத்தை வட்டியோடுங்கூட நெருக்கி வாங்கும்படியாயிருந்ததே, அப்படியிருக்க, அதைக் காசுக்கடையில் என் போட்டு வைக்கவில்லை என்று சொல்லி, சூழ நின்றவர்களை நோக்கி: இவன் வசத்திலிருக்கிற அந்த ராத்தல் பணத்தையெடுத்து, பத்து ராத்தல் பணம் உள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான். அதற்கு அவர்கள்: ஆண்டவனே, அவனுக்குப் பத்து ராத்தல் பணமிருக்கிறதே என்றார்கள். அதற்கு அவன்: உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் பூர்த்தியடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து அவனுக்கு உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான்-என்பதாம்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷத்திலே குறிக்கப்பட்ட உவமையால், பிரான்ஸ் இராச்சியத்தின் அரசனாகிய லூவீஸ் முனீந்திரனுடைய மகிமை பிரசங்கிக்கப்படுகிறது. அது எப்படியென்றால், குறித்த இராயன் இளம்வயதிலேதானே தமது பிதாவானவரை இழந்துபோனார். அவருடைய மாதாவான தோணா விளங்க என்கிறவள் தனது குமாரனைப் பத்தியோடே வளர்க்கிறது தனக்குக் கடமையென்று உத்தேசித்து அவனைப் பார்த்து: அன்பான புத்திரனே! நீ யாதாமொருநாள் பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறதைப்பார்க்கிலும் சாகிறது நல்லது என்று வசனித்தாள். இந்த வசனத்தைக் கல்லிலே வெட்டின அக்ஷரம்போல் அவர் தமது இருதயத்தில் பதித்துக்கொண்டு பராபரனுடைய பயபத்தியைத் தவறாமல் ஸ்நானபிரசாதம் பெற்ற நேரத்தில் அடைந்துகொண்ட பத்துப் பொன்பாரமாகிய வரப்பிரசாதத்தை யாதொரு பாவதோஷத்தினால் மங்கடியாமல் நாளுக்குநாள் அதிகமதிகமான பத்தி. வேகத்தை மிகுவிக்க விரும்பி அதுக்காக மனோதியானத்தில் அனுதினமும் பழகிக்கொண்டு வருவார். அத்தால் தேவ நேசத்தில் வெந்து பராபரனை நேசிக்கிறவன் அவர் முகாந்தரமாகப் பிறரையும் நேசிப்பான் என்ற வாக்கியத்தின்படி பிறர்பேரில் தயாபரமான அன்பை வைத்துச் சிறியோர், பெரியோர், இஷ்டர், பகைவர், மகிமையுடையோர் முதலான யாவரையுந் தம்மை நேசிக்குமாப்போல் நேசித்து வருவார். யாசகர்பேரில் இரக்கம் வைத்துத் தயாபர சித்தத்தால் இராச பொக்ஷத்தைச் செலவழிப்பார். கிழமைதோறும் அவர்களைத் தமது அரண்மனையில் உட்படுத்தி அவர்களுடன் சாப்பிடுகிறதல்லாதே உடுமானங்களையும் பகிர்ந்து வருவார். குறித்த தயவினால் இராக்காலத்தில் வருத்தர் சாலைக்குத் தாமே நடந்து வருத்தக்காரருடைய புண் குஷ்டங்களைத் தமது கையாலே கழுவித் துடைத்து, முத்தமிட்டு ஆத்தும சரீர புண்ணியங்களை அனுசரித்து வருவார். பிறர்பேரில் தமது இருதயத்தில் எரிகிற



அக்கினியான தயவால் பாவிகளைத் திருப்பி நல்வழியில் வருவிக்க அனுதினமும் பிரயாசிப்பார். அன்றியும் பத்தியுள்ளவர்களுடைய சுகிர்த பலன்களை மிகுவிக்கத் தெண்டிப்பார். இந்தத் தயவாலேதானே சுத்தமான ஸ்தலமாகிய யெருசலேநகரம் துலுக்கர் கைவசமானபடியால் நித்தமுங் கண்ணீர் சிந்திச் செப தியானங்களில் பிரலாபித்து அதை மீட்கச் சேனைகளைக் கூட்டி அவ்விடத்துக்குப்போய் வேதத்துக்காகக் கஸ்தி உபத்திரியங்களைப்பட்டு அங்கே ஏராளமான துலுக்கரை வேதத்துக்கு உட்படுத்தினார். பராபரனுடைய நேசமென்கிற அக்கினியை மூளப்பண்ணத்தக்கதாக இந்திரியங்களை ஒறுத்து ஆசையானது மீறாதபடி அடக்கவேண்டும் என்று அறிந்து வாயால் துர்ப்பேச்சு முதலானதுகளைப் பேசாமல் மவுனத்தைக் காப்பார். குறித்த இந்திரியங்களுக்குள்ளே கண்ணால் அதிக பாவம் உண்டாகிறது என்று அறிந்து கண்ணை அடக்கி நடப்பார். அடாத வசனங்களைக் கேளாதபடிக்குக் காதுகளை அடைத்தவராய்ச் சீவிப்பார். முள்ளொட்டியாணம், மயிர்ச்சட்டை, இருப்புவார் முதலான சரீரத்தின் மீறுதல்களை அடக்கும் ஆயுதங்களால் பாவத்துக்கு ஏதுவாகாதபடி சரீரத்தை மெலிவிப்பார். ஊண் உபவாசத்தால் தனது முழங்கால் பலவீனப்பட்டது என்று தவீது இராசா எழுதின பிரகாரம், ஊண் ஒறுத்தலைக் காத்துவருவார். மறுநாட்களிலே பொதுவான உணவுகளை உண்கிறது அல்லாதே சுகியான பதார்த்தங்களைத் தொடாதிருப்பார். ஆசையின் மீறுதலை அடக்குகிறதுக்காக அனுதினமும் குரு உபதேசங்களைக் கேட்டும் வேதவாக்கியங்களை வாசித்தும் அத்தால் தெளிவினை அடைந்து அந்தக்கரணங்களின் மீறுதலைச் செயித்து வருவார். சொற்ப அற்ப குற்றம் என்கிற பாவங்களின் நிமித்தம் மிகுந்த மனஸ்தாபக் கண்ணீர்களோடே கிழமைதோறும் பாவசங்கீர்த்தனம் பண்ணிப் பத்திவேகத்தோடே சற்பிரசாதத்தை அனுபவித்து வருவார். கிறீஸ்துநாதருடைய பாடுகள் பேரில் மிகுந்த ஆசை வைத்து அனுதினமும் பத்தியோடே பூசைகண்டு வருவார்.

இப்படியே தமது ஸ்நானப் பிரசாத நேரத்திலே இராயனாகிய சர்வேசுரனிடத்தில் அடைந்த பத்துப் பொன் ராத்தலாகிய தேவ இஷ்டப்பிரசாதங்களை யாதொரு தோஷத்தால் மங்கடியாமல் இரட்டிப்பாகிய ஏராளமான பேறுபேறுகளை அடைந்ததினால் பத்துப் பட்டணத்தின் அரசாட்சியாகிய நித்திய மோக்ஷ வாழ்வைப் பெறும் நாள் முடுகினது என்று பராபரனுடைய தெளிவிப்பினால் அறிந்து தேவதிரவிய அனுமானங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் ஆயத்தமாகி மரண தினம் வரலான நேரத்தில் பக்தியுள்ள சந்நியாசிகளோடே அந்நியோந்நியமாய்த் தேவ கீர்த்தனைகளைப் பாடித் தமது பெறுபேறு நிறைந்த ஆத்துமத்தைச் சர்வேசுரனுக்குக் கையளித்தார்.

இதினால் நாங்களும் ஆராதிஷ்ட லூவீஸ் முனீந்திரனுடைய வல்லபமான சலுகையால் இவ்வுலோக நிர்ப்பந்தங்களைச் சகித்து மரணத்துக்குப் பிற்பாடு உத்தம ஊழியன் அடைந்த புகழை அடையத்தக்கதாகப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் உம்முடைய ஸ்துதியரான முத்திப்பேறுபெற்ற லூவீஸ் முனீந்திரனைப் பூலோக இராச்சியபாரத்திலிருந்து பரலோக இராச்சிய மகிமைக்கு அழைத்தருளினீரே. அவருடைய புண்ணிய பேறுகளினாலும் வேண்டுதலினாலும் இராசாக்களுக்கு இராசாவான உம்முடைய திருக்குமாரன் யேசுக்கிறீஸ்துநாதரோடு அடியோரும் பங்காளிகளாயிருக்க எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும். இவரே தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவராம், ஆமென்யேசு.

---

புரட்டாதி மாதம் எட்டாந் திகதி

# கன்னிசுத்த தேவமாதா பிரசவமான

## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

திரிபுவனமும் விதித்துச் சகல உலோகமும் சிருட்டித்த சர்வேசுரன் தமது மோக்ஷமண்டலம் பிரதாபிக்க மனோரூபிகளுடைய திரிமூன்று பிரதாப பங்திகளை உண்டாக்கி ஆகாசமண்டலம் பிரகாசிக்கத் திரிவித பிரபையாகிய சந்திர, சூரிய, தாரகைகளை உண்டாக்கிப் பூமண்டலம் அலங்கரிக்க மனுஷ, மிருக, விருக்ஷம் என்கிற திரிவர்க்க பிராணிகளை உண்டாக்கி அவை எல்லாம் தமது வல்லமையின் விருது காண்பிக்கப் போதாததாய்த் திரிபுவனமும் ஒருமிக்க ஒளிவு ஆக்குகிற திரிவித அலங்காரமாகிய ரூப அலங்காரம், குண அலங்காரம், பிரசாத அலங்காரம் என்கிற இந்த மூன்று மகிமையுள்ள ஒரு நவமான பிறப்பை உண்டாக்கத் திருவுளமானார். அது ஏதென்றால், நக்ஷத்திரங்களுடைய சவுந்தரியத்தை வெல்ல அதிக சவுந்தரியம் உள்ளதுமாய், சம்மனசுகளுடைய சுத்தத்தை வெல்லுகிற சுத்தம் உள்ளதுமாய், பூலோகத்தில் சகல ஆத்துமாக்களில் நிகரில்லாத பெறுபேறு உள்ளதுமாய், நிர்மல கன்னிமை உள்ள மரிய என்ற ஸ்திரி, பூமியில் மண் பீறி முளைத்து



எழும்பின சண்பகமலர்போலவும், பொற்செப்புத் திறந்து எடுத்த விலைமதியாத மாணிக்கம்போலவும் ஆனா என்கிற மாதாவின் உதரத்திலிருந்து பிறக்கக் கருணையானார். ஆனதினால் இப்படிப்பட்ட மகிமையுள்ள ஸ்திரி சகல மனுஷ சென்மங்களுக்குள்ளும் பாக்கிய உத்தமி என்று காண்பிக்கத்தக்கதாகச் சுவிசேஷக மத்தேயு ஆதாமின் பிரதான பரம்பரைகளை எண்ணி எல்லாத்துக்கும் மேலாகக் கிறீஸ்துநாதருக்குச் சேர்ந்தபடியில் கன்னிமரியாளை வைத்து அவரால் கிறீஸ்துநாதர் பிறந்தார் என்று எழுதினார்.

அது எப்படி என்றால், சுவிசேஷக மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் முகனையாவது: அபிரகாம் குமாரனும், தாவீதின் குமாரனுமாகிய யேசுக்கிறீஸ்துநாதருடைய ஜன்மிப்பின் ஆகமமாவது: அபிரகாம் ஈசாக்கைப் பெற்றார். ஈசாக்கு யாக்கோப்பைப் பெற்றார். யாக்கோப்பு யூதாவையும், அவர் சகோதரர்களையும் பெற்றார். யூதாவோ, தாமாரென்பவளால் பாரேசையும், சாராவையும் பெற்றார். பாரேஸ் எஸ்ரோனைப் பெற்றார். எஸ்ரோன் ஆரோமைப் பெற்றார். ஆரோம் அபினதாபைப் பெற்றார். அபினதாபு நாஸ்ஸோனைப் பெற்றார். நாஸ்ஸோன் சால்மோனைப் பெற்றார். சால்மோன் ராஹாப் என்பவளால் போவோஸைப் பெற்றார். போவோஸ் ரூத் என்பவளால் ஓபெதைப் பெற்றார். ஓபெது ஜெஸ்ஸேயைப் பெற்றார். ஜெஸ்ஸேயோ தாவீது ராஜாவைப் பெற்றார். தாவீது ராஜா ஊரியாவின் மனைவியாயிருந்தவள் மூலமாய் சலோமோனைப் பெற்றார். சலோமோன் ரோபோவாமைப் பெற்றார். ரோபோவாம் அபியாஸைப் பெற்றார். அபியாஸ் ஆசாவைப் பெற்றார். ஆசா யோசப்பாத்தைப் பெற்றார். யோசப்பாத் யோராமைப் பெற்றார். யோராம் ஒசியாஸைப் பெற்றார். ஒசியாஸ் யோவாத்தாமைப் பெற்றார். யோவாத்தாம் ஆக்காஸைப் பெற்றார். ஆக்காஸ் எசெக்கியாஸைப் பெற்றார். எசெக்கியாஸ் மனாசேயைப் பெற்றார். மனாசே ஆமோனைப் பெற்றார். ஆமோன் யோசியாஸைப் பெற்றார். பபிலோனுக்குக் குடியேறிய காலத்தில் யோசியாஸ் யெக்கோனியாஸையும் அவருடைய சகோதரர்களையும் பெற்றார். பபிலோனுக்குக் குடியேறினபின் யெக்கோனியாஸ் சலாத்தியேலைப் பெற்றார். சலாத்தியேல் ஸொரோபாபேலைப் பெற்றார். ஸொரோபாபேல் அபியூதைப் பெற்றார். அபியூத் எலியாசிமைப் பெற்றார். எலியாசிம் ஆஸோரைப் பெற்றார். ஆஸோர் சதோக்கைப் பெற்றார். சதோக் ஆக்கீமைப் பெற்றார். ஆக்கீம் எலியூதைப் பெற்றார். எலியூத் எலேயாசாரைப் பெற்றார். எலேயாசார் மாத்தானைப் பெற்றார். மாத்தான் யாக்கோப்பைப் பெற்றார். யாக்கோபு மரியாயின் மணவாளனான சூசையைப் பெற்றார். இவரிடமாகக் கிறீஸ்தென்னப்படுகிற யேசுநாதர் பிறந்தார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே கன்னிசுத்த தேவமாதா பிறந்த விசேஷத்தின் மகிமை காணலாயிருக்கும். அது ஏதெனில், முற்காலத்திலே பிதாப்பிதாவாகிய யாக்கோபு என்றவருக்குச் சர்வேசுரன் ஒரு ஏணி பூமியிலிருந்து ஆகாசந் தட்டச் சாத்தியிருந்ததையும், அதின் உச்சத்தில் கிறீஸ்துநாதர் எழுந்தருளியிருந்ததையும் காட்சியாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பித்தாரே. அப்படிப்பட்ட மகிமையான ஏணிப்படிகளின் விபரமாகிய கன்னிசுத்த தேவமாதாவின் பரம்பரைகள் சுவிசேஷ வாக்கியத்திலே காண்பித்திருக்குது. ஆனதினால் அந்தப்படிகளால் தேவமாதா இருக்கிற படிமட்டும் ஏறி அவரால் பிறந்த கிறீஸ்துநாதருடைய மகிமையைப் பார்த்துத் தேவமாதாவின் மகிமை உத்தேசிக்கலாகும். அது எத்தன்மையோவெனில் சொர்ன மாணிக்கம் விளைகிற பூமியின் மணலும் அந்த நிறமாய் மினுங்குமே. முத்து உற்பவிக்கிற சிப்பியின் உட்புறமும் அந்த முத்துப்போல் ஒளிருமே. சூரியன் உதிக்கிற மேகத்தில் அதின் கிரணங்கள் நிறைந்து இரத்தமயமாய்ப் பிரகாசிக்குமே. அப்படியே சுகிர்த மாணிக்கம் விளைந்த பூமியுமாய்த் திவ்விய அருணன் உதித்த மேகமுமாய் இருக்கிற கன்னிசுத்த தேவமாதா அப்படிப்பட்ட சுகிர்த அலங்காரமும், திவ்விய மகிமையும் கொண்டிருப்பார் என்கிறதற்குச் சந்தேகமில்லை. ஆனதினால் சொர்ன மாணிக்கம் விளைகிற பூமியைக் கண்டுபிடித்தவன் எத்தனை ஐசுவரியவானாய், எத்தனை அக்களிப்புள்ளவனாய் இருப்பான். அப்படியே தருமம் விளைந்த பூமியாகிற கன்னிசுத்த தேவமாதா பூலோகத்தில் பிறந்ததை இன்று கண்ட நாங்கள் அதிலும் அதிக அக்களிப்பு ஆனந்தங் கொண்டாட ஞாயமாயிருக்கும். இதல்லாமல் சூரியன் உதயமாகிற விடியற்காலத்தைக் கண்டவுடனே மனுஷ, மிருக, பக்ஷி சகலதும் சந்தோஷமாய்த் தங்கள் உறைவிடங்களில் நின்று புறப்பட்டு மிருக பறவைகள் தங்கள் குரவையை எழுப்பி நாத அலங்காரங் காண்பித்து மனுஷர் தங்களுக்குள்ளே அன்னியோன்னியமாய் மங்களஞ் சொல்லித் தேவராச மந்திரங்களிலே மேளதாளம், சேவிணை, சிங்காரஞ்செய்து சகல உலோகமும் அக்களித்த மேரையாயிருக்குமே. அப்படியே திவ்விய சூரியன் உதிக்குமுன் காணப்பட்ட விடியலாகிய பரிசுத்த தேவமாதா உதித்ததைக் கண்டு உலோகவாசிகள் சமஸ்தரும் எத்தனை மகிமையோடு உற்சவம் கொண்டாடவேணும் என்கிறது காணலாகும். அதுவும் சர்வேசுரன் காட்சியாகக் காண்பிக்கத் திருவுளமானார். அது எவ்விதமோவெனில், ஆரணியத்தில் ஏகாந்தமாய்த் தவம் பண்ணியிருந்த ஒரு முனீசுரனுக்குப் புரட்டாதி எட்டாம் நாள் வரும்போது அன்று ஆகாசத்தில் பரம சங்கீத நாதங்கள் கேட்கப்படும். அது ஏதென்று அவர் அதிசயித்துச் சர்வேசுரனைப் பிரார்த்தித்தவிடத்திலே தேவமாதா பிறந்தநாள் அல்லவோ என்ற சத்தம் உண்டாயிற்று. ஆனதினால் இப்படிப்பட்ட உற்சவம் கொண்டாடச் சர்வேசுரனுக்கு எத்தனை பிரியமாயிருக்குமென்கிறதை அறிந்து வரு-



ஷந்தோறும் புரட்டாதி எட்டாந் திகதி இந்தத் திருநாள் கொண்டாடத் திருச்சபைக் கட்டளையானது. இந்தப்பிரகாரமாய்க் கன்னிசுத்த தேவமாதா பிறந்த மகிமையை நாங்கள் கண்டு அவர்பேரில் பத்தியாயிருந்து அவர் சலுகையால் மோக்ஷ இராச்சியத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே! முத்திப்பேறுபெற்ற கன்னிகையின் பிறப்பானது உம்முடைய அடியவர்களுக்கு ஆத்தும இரட்சணியத்தின் ஆரம்பமாய் இருந்ததாமே. அப்படியே அந்தத் திருப் பிறப்பின் பத்தியுள்ள கொண்டாட்டமும் அவர்களுடைய சமாதானத்தின் வளர்ச்சிக்குக் காரணமாயிருக்கும்படியாகத் தேவரீருடைய பரம வரப்பிரசாதத்தின் கொடையை அவர்களுக்குக் கொடுத்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக் கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# கன்னிசுத்த தேவமாதா பிரசவமான
## நாளாகிய புரட்டாதி மாதம் எட்டாந் திகதிக்கு
### அடுத்த ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடப்படுகிற
## அவருடைய மரிய என்ற திருநாமத்தின்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா முதலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே கபிரியேல் என்னும் தேவதூதன் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சர்வேசுரனால் அனுப்பப்பட்டு, தாவீதின் கோத்திரத்தாராகிய சூசையப்பர் என்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாக பந்தனமான ஓர் கன்னிகையிடத்தில் வந்தார். அந்தக் கன்னிகையின் பேர் மரியம்மாள். தேவதூதன் அவளிருந்த இடத்தில் பிரவேசித்து: பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே; ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே என்றார். இதை அவள் கேட்டமாத்திரத்தில், அவருடைய வார்த்தையினால் கலங்கி, இந்த மங்களம் எத்தன்மையானதோ என்று யோசனையாயிருக்கையில், தேவதூதன் அவளை நோக்கி: மரியே! நீர் அஞ்சவேண்டாம், ஏனெனில் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர். இதோ, உமது உதரத்தில் கெற்பந்தரித்து, ஓர் குமாரனைப் பெறுவீர்; அவருக்கு யேசு என்னும் நாமஞ் சூட்டுவீர். அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய சுதன் என்னப்படுவார்; ஆண்டவரான சர்வேசுரன் அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காசனத்தை

அவருக்குத் தந்தருளுவார்; ஆதலால் அவர் யாக்கோபின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய அரசாட்சிக்கு முடிவு இராது என்றார். அப்போது மரியம்மாள் தேவதூதனைப் பார்த்து: இது எப்படியாகும்? நான் புருஷனை அறியேனே என்று சொல்ல, தேவதூதன் அவளுக்கு மாறுத்தாரமாக: இஸ்பிரீத்துசாந்து உமதுமேல் எழுந்தருளிவருவார்; உன்னதருடைய வல்லபமானது உமக்கு நிழலிடும்; ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் என்னப்படுவார். இதோ, உமக்குப் பந்துவாகிய எலிசபேத்தும் தன் முதிர்வயதிலே ஓர் புத்திரனைக் கெற்பந்தரித்திருக்கிறாள். மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதம். ஏனெனில் சர்வேசுரனால் கூடாத வாக்கு ஒன்றுமில்லை என்றார். அப்போது மரியம்மாள்: இதோ, நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றாள்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தால் கன்னிசுத்த தேவமாதாவுடைய திருநாமத்தின் உத்தம மகிமை வாழ்த்தப்படுவது. அது எத்தன்மையோ என்றால், மலர்ந்த புட்பத்தினுடைய இதழ்களின் வருண அலங்காரம் யாவும் குவிந்த பூ அரும்புக்குள் அடங்கியிருக்கிற மேரையாய்க் கன்னிசுத்த தேவமாதாவின் சுகிர்தம் யாவும் அவருடைய அஞ்சு எழுத்தில் அடங்கிய மரியம்மா என்ற திருநாமத்தால் அறிந்துகொள்ளல் உச்சிதமாம். அது ஏதெனில், மரிய என்ற நாமத்தின் கருத்தாவது: லத்தீன் பாஷையால் சமுத்திரம் என்றும், சிரிய பாஷையால் உத்தம நாயகி என்றும், எபிரேவு பாஷையால் சமுத்திரத்தின் நக்ஷத்திரம் என்றும் சொல்லத்தகும். அப்படியே சமுத்திரம் என்றதினால், அதில் நிறைந்திருக்கிற தண்ணீரால் சமஸ்தரும் உபகாரம் அடைகிற மேரையாய்ப் பரிசுத்த தேவமாதா நிறைந்திருக்கிற தேவகருணைப் பிரசாதங்களால் சகல உலோக வாசிகளும் அவருடைய அனுக்கிரகம் அடையலாயிருக்கும். உத்தம நாயகி என்றதினால், நாயகனைச் சேவிக்கிறவனால் இரட்சிக்கப்படுகிறதுபோல் தேவமாதாவின் பேரிலே பத்தியாயிருக்கிறவன் அவர் வேண்டுதலால் உலோகத்தில் சகல திரவிய சகாயத்தையும் அடையலாம். சமுத்திரத்தின் நக்ஷத்திரம் என்றதினால் சமுத்திரயாத்திரை செய்கிறவர்கள் அந்த நக்ஷத்திரத்தைப் பார்த்துச் சகல ஆபத்திலும் நின்று ஈடேற்றப்படுகிறதுபோல் நாங்கள் எங்கள் ஆத்தும சரீரத்தின் சகல ஆபத்து அந்தரங்களில் அவரைப் பார்த்துப் பிரார்த்திக்க அதுகளில் நின்று நீங்கலாம் என்று அறியவும்.

இதல்லாமல் இந்தத் திருநாமத்தின் உத்தம மகிமையைச் சர்வேசுரன் அநேக ஆச்சரியமான புதுமைகளால் காண்பிக்கச் சித்தமானதினால் அதுகளில் ஒரு புதுமையை இவ்விடத்தில் காட்டுவோம். அது எப்படியென்றால், பிராஞ்சு இராச்சியத்திலே சுத்தமான வேணெடித்துவுடைய கூட்டமிருந்தது. அந்தக் கூட்டத்திலே இராச குருப்பிரசாதி ஒருவர் வந்து ஞானப் பிரசங்கம் பண்ணுகிறபோது மரிய என்கிற தேவமாதாவுடைய திருநாமத்தின் எழுத்தின்படியே ஆராதனைபண்ணி மகா தேவநன்மை பெற்ற ஒருவனுடைய வர்த்தமானத்தைச் சொன்னார். அந்தக் கூட்டத்திலிருந்த ஒஸ்தியு என்ற சந்நியாசி அதைக்கேட்டு அப்படிப்பட்ட ஆராதனையைத் தானும் பண்ணவேணும் என்று மனதிலே பத்தி எழுப்பி நாள்தோறும் அந்தப்படி சேவித்துக்கொண்டு வருவான். அப்படி வருகையிலே ஒருநாள் சந்நியாசிகள் எல்லாருங் கூடிச் செபம்பண்ணுகிறவிடத்திலே இந்தச் சந்நியாசி வராதபடியால் ஏன் வரவில்லை என்று அவன் அறையினுள்ளே பார்க்கப்போனவிடத்திலே அவன் செத்துக் கண், காது, வாய் முதலான இந்திரியத் துவாரங்களால் அலங்காரமான பூக்கள் புறப்பட்டு ஒவ்வொரு பூவிலேயும் மரிய என்கிற எழுத்து எழுதியிருந்தது. அதைக்கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டு அந்த ஊரின் இராச குருப்பிரசாதிக்கு அறியப்பண்ணினவிடத்திலே அவர் சனங்களோடே பார்க்கவந்து அப்படிப்பட்ட புட்பங்களைக் கண்டு அதில் வாயால் புறப்பட்ட ஒரு பூவை எடுத்துக்கொண்டு அதை நினைப்பூட்டுதலுக்காக ஒரு பளிங்குப் பாத்திரத்தில் அடைத்துவைத்தார். அத்தால் அநேகம் புதுமை சம்பவிக்கிறது. ஆகையால் இப்படிப்பட்ட மகிமையான மரிய என்ற நாமத்தைச் சமஸ்தரும் எவ்வேளையும் உச்சரிக்கவும். அத்தைக் கேட்டவுடனே தலைசாய்த்து நமஸ்கரிக்கவும் கடவார்கள். அப்படியே நாங்கள் செய்து சாகுந்தனையும் அவர் பத்திவிடாமல் இருந்து அவர் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.



## திருச்சபைச் செபம்

சர்வ வல்லவரான சருவேசுரா, அதி பரிசுத்த கன்னியாஸ்திரியான மரியம்மாளுடைய திருநாமத்தைத் துதித்து அதின் அடைக்கலத்தில் அகமகிழுகிற உம்முடைய விசுவாசிகள் அந்த அம்மாளுடைய பத்தியுள்ள வேண்டுதலினால் இவ்வுலகில் சகல விக்கினங்களினின்றும் விலகி அவ்வுலகில் நித்திய ஆனந்தத்தை அடையத்தக்கவர்களாகும்படிக்கு அநுக்கிரகம்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாதி மாதம் இருபத்தொராந் திகதி

# சுவிசேஷக மத்தேயு

## அப்போஸ்தலுவின் திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்.

---

சுவிசேஷக மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே யேசுநாதர் ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னப்பட்ட ஓர் மனிதனைக் கண்டு, அவனை நோக்கி: என் பிறகே வாவென்றார். அவனும் உடனே எழுந்து அவரைப் பின்சென்றான். பின்னும் சம்பவித்ததேதெனில், யேசுநாதர் அவன் வீட்டில் பந்தி அமர்ந்திருக்கையிலே அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து அவரோடும் அவருடைய சீஷர்களோடுங் கூடப் பந்தி அமர்ந்தார்கள். இதைக் கண்ட பரிசேயர் அவருடைய சீஷர்களை நோக்கி: உங்கள் குரு ஆயக்காரரோடும் பாவிகளோடும் அசனம் செய்வானேன் என்றார்கள். யேசுநாதர் அதைக்கேட்டுத் திருவுளம் பற்றினதாவது: சொஸ்தமுள்ளவர்களுக்கு வைத்தியன் வேண்டுவதில்லை. நோயாளிகளுக்கே வேண்டும். பலியையல்ல, தயாளத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்தென்னவென்று போய்க் கற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நீதிமான்களையல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே ஆராதிஷ்ட மத்தேயு அப்போஸ்தலுவின் மகிமை காணலாயிருக்கும். அது ஏதெனில், பூலோகத்திலுள்ள இத்தனை சென்மங்களுக்குள்ளே அவரைத் தம்முடைய அப்போஸ்தலுவாகத் தெரிந்துகொண்டதினால் அவர் பேறுபெற்ற பிரசாத மகிமையாம். இதல்லாமல் அவர் ஏழை ஈனசாதியாயிருக்கிறதைப் பாராமல் அவரை அதிக தயாபரத்தோடு ஆதரித்து அவருக்காக அவர் சாதியாரையும் இரக்ஷிக்கக் கிருபைபண்ணினதினால் அவருடைய தாழ்ச்சியின் அதிகம் ஆண்டவருடைய கிருபாகடாட்சத்துக்கு எத்தனை உவப்பானது என்று காண்பிக்கப்பட்டது.

அதினால் இப்படிப்பட்ட கருணைப்பிரசாதங்களால் அவர் நடந்த சுகிர்த நடக்கை எப்படி என்று அறிதல் உசிதமாம். அது எப்படி என்றால், ஆண்டவர் பரலோகத்துக்கு ஆரோகணமானபின் அவர் யூதேய இராச்சியத்திலேயிருந்து ஆண்டவரின் சுகிர்தங்களின் விசேஷத்தை எழுதிச் சுவிசேஷம் என்ற புத்தகத்தை உண்டாக்கினார். அதின்பின் தமக்குக் குறித்த பங்குப்பேற்றின்படியே எத்தியோப்பியா என்ற இராச்சியத்திலே கிறீஸ்துவேதப் பிரசங்கம் பண்ணப்போய்ச்



சரேசு, அற்பசாது என்ற வித்தைக்காரர் இருவர் தங்கள் வித்தை மாயங்களால் வியாதிக்காரரை, அங்கவீனர்களைக் குணமாக்கித் தங்களைத் தேவர்களாகக் காண்பித்து எத்தித் திரிகிறதைக் கண்டு அவர்களுடைய வித்தை மாயங்களை உலோகருக்கு, வெளியாக்கி ஒருவரும் அவர்களை விசுவசியாதபடிக்குப் பண்ணினார். அப்போது வித்தைக்காரர் தங்கள் பெருமை கெட்டுப்போகிறதைக் கண்டு அதிக விஷமான பாம்பு இரண்டை அப்போஸ்தலுபேரில் ஏவினார்கள். அதுகளை அவர் சிலுவை அடையாளத்தால் அமைத்து வனத்தில் போகக் கட்டளையிட்டார். இப்படிப்பட்ட வல்லமையோடு அவர் பிரசங்கம் பண்ணுகிறவேளையில் அந்த ஊர் இராசாவின் குமாரன் இறந்ததினால் அவனை எழுப்ப வித்தைக்காரரைக் கூப்பிட்டபோது, அவர்கள் தங்கள் வல்லமையின் குறை பிறருக்குத் தோன்றாதபடிக்கு அவன் தேவனாய்ப் போயிருக்கிறான் என்று சொல்லி மயக்கினார்கள். அப்போது இராயன் அப்போஸ்தலுவிடத்திலுள்ள தேவ வல்லமையின் விசேஷத்தைக் கேள்விப்பட்டு அவரை அழைப்பித்துக் குமாரனை எழுப்பச் சொன்னவிடத்திலே அவர் சர்வேசுரனைப் பிரார்த்திக்க, செத்தவன் எழுந்தான். அத்தைக் கண்டு இராயன் ஆச்சரியப்பட்டு மனுஷரூபமாய் வந்திருக்கிற ஒரு தேவனைக் காணத்தக்கதாகத் தனக்கு அடங்கிய சீமைகளிலுள்ள அனைவரையும் கற்பித்தான். எல்லாரும் பொன் முடிகளையும் பூசைப் பதார்த்தங்களையும் கொண்டுவந்தார்கள். அத்தைக் கண்டு அப்போஸ்தலுவானவர் நாணி, நான் தேவகிறீஸ்துவுடைய ஊழியன் அல்லாதே கிறீஸ்து அல்ல என்று கிறீஸ்துவேதத்தின் உண்மையைப் பிரசங்கித்து எல்லாரையும் வேத விசுவாசிகளாக்கினார். இதல்லாமல் அவர்கள் கொண்டுவந்த பொன் முடி முதலான காணிக்கைப் பதார்த்தங்களை விலையாக்கி அத்தால் தேவாலயத்தைக் கட்டுவித்து அதில் தாம் முப்பத்திமூன்று வருஷம் இருக்க அந்த இராச்சியம் ஆளுகிற எசிப்பு என்ற இராயனும் அவர் குடும்பத்தவரும் குடியானவர்கள் சமஸ்தரும் பிரசாத ஸ்நானம் பெற்று இராச்சியம் முழுதும் கிறீஸ்து இராச்சியமானது. இது தவிர அந்த இராசாவின் குமாரத்தியாகிய எபிசேனி என்றவள் இருநூறு கன்னியாஸ்திரிகள் கூட்டத்துக்குத் தலைவியானாள். இப்படியிருக்கையிலே எசிப்பு என்ற இராசா இறந்தபின் இராக்கு என்ற ஞானமற்ற இராயன் இராச்சியம் கையேற்றவிடத்திலே எபிசேனி என்ற கன்னியாஸ்திரியை விவாகம்பண்ண வேணுமென்று விரும்பி அவள் மனம் சம்மதிக்கும்படி அப்போஸ்தலுவைப் புத்தி சொல்லச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான். அதுக்கு அப்போஸ்தலுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் பிரசங்கம் பண்ணுகிறவிடத்திலே விவாக பந்தனத்தின் மகிமையைச் சொல்லுவேன் என்றார். அப்படியே இராயனும் எபிசேனி என்ற குமாரத்தியும் சகல சனங்களும் கோயிலில் கூடியிருக்கிற வேளையில் அப்போஸ்தலுவானவர் பிரசங்க ஆசனத்தில் ஏறி மெய்விவாக பந்தனத்தின் மகிமையை வருணித்து ஈற்றிலே சொன்னதாவது: சர்வேசுரனுக்குத் தன் கற்பைக் கையளித்துத் தேவ பத்தினியாயிருக்கிறவளை யாதாமொருதன் தன் கைவசமாக்கினால் தேவதுரோகியாய் மகா தேவ கேடுகளுக்குப் பாத்திரமாவான் என்று சொன்னார். அதைக் கேட்டு இராக்கு என்ற இராயன் தான் நினைத்த நினைவை வியர்த்தமாக்கினார் என்று கோபமாய் எரிந்து ஒரு சேவகனை விட்டு அவன் அப்போஸ்தலுவை வாளால் குத்துவிக்க அவர் தமது பிராணனைச் சர்வேசுரனுக்குக் கையளித்தார். அதின்பின் எபிசேனி இருந்த கூட்டத்தில் இராயன் நெருப்பிட்டபோது தேவதூதனால் அந்த அக்கினி இராயனுடைய மாளிகையில் பற்றி அதிலிருந்த சனங்கள் செத்து இராயன் பீடிக்கப்பட்டு வாதைகள் பொறுக்கமாட்டாமல் தன் கையால் பிராணனைப் போக்கிக்கொண்டான். இந்த மேரையாய் ஆராதிஷ்ட மத்தேயு அப்போஸ்தலு தம்முடைய சுவிசேஷ பிரசங்கத்தால் உலோகத்தைத் தெளிவித்து மோக்ஷஞ் சேர்ந்த சுகிர்த நடக்கைகளை அனுசரித்து நாங்களும் அவர் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, அடியோர்கள் நாங்களாகவே அடையக்கூடாத நிலைபரத்திலிருக்கிற நன்மைகளைத் தேவரீருடைய அப்போஸ்தலரும் சுவிசேஷகருமான முத்திப்பேறுபெற்ற மத்தேயு முனீந்திரனின் சலுகையால் அடைந்துகொள்ளக் கிருபைபண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## புரட்டாதி மாதம் இருபத்தொன்பதாந் திகதி
## தேவ அதிதூதனாகிய
# ஆராதிஷ்ட மிக்கேல்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு பதினெட்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே சீஷர்கள் யேசுநாதரிடத்தில்



வந்து: பரலோக இராச்சியத்திலே அதிகப் பெரியவன் யாரென்று நினைக்கிறீர்? என்றார்கள். அப்போது யேசுநாதர் ஓர் பாலனை அழைத்து, அவனை அவர்கள் நடுவில் நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பி, பாலர்களைப்போல் ஆகாவிட்டால், பரலோக இராச்சியத்திலே பிரவேசிக்கமாட்டீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பாலனைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக இராச்சியத்தில் அதிகப் பெரியவனாயிருக்கிறான். இப்படிப்பட்ட பாலன் ஒருவனை என் பெயராலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான். ஆனால் என்பேரில் விசுவாசமுள்ள இச்சிறியோரில் ஒருவனுக்கு இடறலாயிருப்பவன் எவனோ, அவன் கழுத்திலே கழுதை சுழற்றும் எந்திரக் கல்லைக் கட்டி ஆழ்ந்த சமுத்திரத்தில் அவன் அமிழ்த்தப்படுவது அவனுக்கு நலமாயிருக்கும். இடறலினிமித்தம் உலகத்துக்கு ஐயோ கேடு, ஏனெனில் இடறல்கள் கட்டாயம் வந்துதான் தீரும்; ஆயினும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ கேடு! ஆகையால் உன் கையாவது உன் காலாவது உனக்கு இடறலாயிருந்தால், அதைத் தறித்து உனக்குத் தூரமாய் எறிந்துபோடு. நீ இரு கைகளை அல்லது இரு கால்களை உடையவனாய் நித்திய அக்கினியில் தள்ளப்படுவதைவிட, முடவனாய் அல்லது நொண்டியாய்ச் சீவியத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். உன் கண்ணானது உனக்கு இடறலாயிருந்தால், அதைப் பிடுங்கி உனக்குத் தூரமாய் எறிந்துபோடு. இரு கண்ணுள்ளவனாய் அக்கினிச் சூளையில் தள்ளப்படுவதைவிட, ஒற்றைக் கண்ணனாய்ச் சீவியத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். இந்தச் சிறுவர்களில் ஒருவனையும் புறக்கணியாதபடி எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் மோட்சத்திலே அவர்களுடைய சம்மனசுகள் பரமண்டலங்களிலேயிருக்கிற என் பிதாவின் சமுகத்தை இடைவிடாமல் தரிசிக்கிறார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே தேவதூதரான சகல சம்மனசுகளுடையவும், விசேஷமாய் அதிதூதனான மிக்கேல் சம்மனசு உடையவும மகிமைப் பிரதாப பெறுபேறுகள் காணலாயிருக்கும். அது ஏதெனில் மோக்ஷ இராச்சியத்திலே பெரியவன் ஆர் என்று சீஷர் கேட்டதற்கு, தன்னைச் சிறுவன்போலச் சிறுப்பிக்கிறவன் பெரியவனாவான் என்று ஆண்டவர் திருவுளம்பற்றினதினால், அந்தப் பிரகாரம் ஆராதிஷ்ட மிக்கேல் சம்மனசு லூசிப்பேர் என்ற தலையான பிசாசின் ஆங்காரங்களைத் தள்ளித் தன்னைச் சர்வேசுரன் முன்பாக வெகுவாய்ச் சிறுப்பித்துப் பணிந்ததினால் சகல தேவதூதருக்கும் முகாமையான மகிமையை அடைந்தார்.

சர்வேசுரனை விசுவசிக்கிற இந்தச் சிறுவர்களை இடறல்படுத்துகிறவனைத் திருகைக் கல்லைக் கட்டிச் சமுத்திரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிழ்த்தலாகும் என்றதினால், அந்தப் பிரகாரம் துஷ்ட லூசிப்பேர், சர்வேசுரனைப் பணிந்த தூதர்களைக் கலக்கித் தன் பாரிசமாகப் பாவத்திலே விழுத்தினதினால் அவன் கழுத்திலே தேவ தீர்வை என்கிற கல்லைக் கட்டி நரக அக்கினிச் சமுத்திரத்திலே விழுத்தப்பட்டான்.

தன் கை, கால் தனக்கு இடறலாயிருக்கில் அதை வெட்டி எறியவேணும் என்றதினால், தனக்கு அயிக்கியமாயிருக்கிற பெந்துசனம், சிநேகிதர் முதலானவர்கள் தன்னைப் பாவத்திலே விழுத்தக் காரணமாயிருக்கில் அவர்களை விலகவும், தன்னைப் பாவத்திலே இழுக்கிற மோகம், கோபம் முதலான இந்திரிய ஆசைகளை வெறுக்கவும் வேணும் என்கிற விபரமாம். இந்தப் படிப்பனையின் பிரகாரம் லூசிப்பேர் பாரிசமாய்ப் போகாத சகலமான தேவதூதர் அக்கிரம பாவ ஆசைகளை வெறுத்துச் சிறு பிள்ளைகள்போல் ஒருவருக்கும் பொல்லாப்புச் செய்ய மாட்டாதவர்களுமாய், வருமம், வைராக்கியம், வஞ்சகம் அறியாதவர்களுமாய்ச் சர்வேசுரனுக்கு ஒருசித்த்தோடு படிந்திருந்ததினால் அவருடைய முக தெரிசனையை அனுபவிக்கிற உற்ற பணிவிடைக்காரராகத் தெரியப்பட்டதும் அல்லாமல் மோக்ஷ இராச்சியத்தில் அரசாளுகிற அதிகப்பட்ட வெகுமான மகிமைகளை அடையப் பாத்திரமானார்கள். அது ஏதெனில் சர்வேசுரன் மோக்ஷ இராச்சியத்தை ஆளுகிற சகல கிருத்தியங்களை ஒன்பது வரிசையாக வகுத்து அதில் ஒவ்வொரு வரிசைக்கு அடுத்த வல்லமையும் மகிமையும் அதுக்கான நாமங்களையும் கொடுத்து அவர்களைக் கீர்த்தி அடையப்பண்ணினார். அதாவது சர்வேசுரனுடைய நன்மைத்தனத்தின் விசேஷத்தைப் பார்த்து அதி நேச பிரிய சுவாலையால் பற்றியிருக்கிறவர்கள் பத்திசுவாலகர் என்றும், அவருடைய அனந்த வல்லமையைத் தியானித்து ஞானத்தில் அதிகப்பட்டவர்கள் ஞானாதிக்கர் என்றும், அவருடைய இராச கிரம நீதி ஆசனம் பார்த்திருக்கிறவர்கள் பத்திராசனர் என்றும் பேர்ப்பட்டார்கள். இதல்லாமல் இந்த மூன்று பந்தியிலிருக்கிறவர்கள் அதிகமாய்ச் சர்வேசுரனை முடுகிட்டு இருக்கிறதினால் அவருடைய சித்தத்தின் விசேஷங்களை அறிந்து மற்றத் தூதர்களுக்குச் சொல்ல, அதை நாதகிருத்திய முறையாகச் செலுத்தப் பண்ணுகிறவர்கள் நாதகீர்த்தியர் என்றும், உலோக கிரமத்துக்கு மேலான அற்புத கிரமங்களைத் தேவ சக்தியால் செய்விக்கிறவர்கள் சத்துவகர் என்றும், பிசாசின் எதிர் வல்லமைகளைத் தங்கள் பெலத்தால் நீங்கப்பண்ணுகிறவர்கள் பெலவத்தர் என்றும், இராச பிரதானிகளையும் அவர்களுடைய



இராச்சியங்களையும் காக்கிறவர்கள் பிராதமிகர் என்றும், அதிகப்பட்ட தேவகருணை விசேஷங்களுக்குத் தூதராக அனுப்பப்படுபவர்கள் அதிதூதர் என்றும், அவசர காரியங்களுக்கும் சகல மனுஷ ஆத்தும காவல்களுக்கும் அனுப்பப்படுபவர்கள் தூதர் என்றும், இந்த மேரையாய் ஒன்பதுவித கிருத்தியங்களுக்கான வல்லமைகளை அடைந்து ஒன்பது தேவ ஞான பந்தியை வருணிக்கிற மகிமை உற்றார்கள்.

ஆனால் அவர்கள் எல்லாருக்கும் ஆராதிஷ்ட மிக்கேல் தூதன் முகாமையானதினால் அவருடைய மகிமையைச் சர்வேசுரன் அதிக விசேஷமாய்ப் பூலோகத்திலே காண்பிக்கத் திருவுளமான ஒரு அற்புத விசேஷத்தைச் சொல்லக்கடவோம். அது எவ்விதமோவெனில், அப்பூலிய என்ற தேசத்திலே காருகனு என்ற மலையடிவாரத்தில் வசிக்கிற சனங்களுடைய ஒரு எருது காணாதேபோய் ஒரு குகையில் சேர்ந்திருந்தபோது அந்த ஊர்வாசி ஒருவன் அத்தைக் கண்டு அம்பால் எய்தவுடனே அந்த அம்பு எய்தவன்பேரிலேதானே நாடிவந்தது. அத்தைக் கண்டு சகலமான பேர்களும் பயந்து அதிசயித்து அந்த ஊரின் இராசகுரு அண்டையில் போய் இவ்வித செய்தியைச் சொல்ல அவர் சர்வேசுரனைப் பிரார்த்தித்தபோது ஆராதிஷ்ட மிக்கேல் தூதன் அவருக்குத் தோன்றி அந்த எருது இருந்த இடம் தமது அடைக்கலமாயிருக்குதென்று அறிவித்தார். அதினால் இராச குருப்பிரசாதியும் அந்தப் பட்டணத்திலுள்ளோரும் திருவிழா ஒழுங்கோடு பார்க்கப்போக, அந்தக் குகை தேவாலயம்போல் இருக்கிறதைக் கண்டார்கள். அது நிமித்தமாய் அந்தத் தலம் சர்வேசுரன் தமது அதிதூதனான மிக்கேல் பேரால் தேவாராதனைக்குக் குறித்தது என்று அறிந்து அன்று துவக்கம் அதில் தேவாராதனையை நடத்தினார்கள். இதல்லாமல் அதில் ஆராதிஷ்ட மிக்கேலுடைய வேண்டுதலால் அடைகிற சகாயங்களையும் காண்கிற அற்புதங்களையும் பார்த்து, அவர் பேரால் பெரிய தேவாலயம் உண்டாக்கி வழங்கி வருகிறது. ஆனதினால் இப்படிப்பட்ட வல்லமையுள்ள தேவ அதி தூதனையும் மனுஷனுக்கு உபகாரமாய் இருக்கிற மற்றுண்டான சகல தேவதூதர்களையும் நாங்கள் பத்தியோடே அனுசரித்து அவர்களுடைய சலுகையால் மோக்ஷமடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் சம்மனசுகளுடையவும் மனுஷருடையவும் பணிவிடைகளை ஆச்சரியமான விதமாய் ஒழுங்குபடுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பிக்கிறீரே. பரலோகத்திலே உமது சமுகத்தில் என்றும் நின்றூழியஞ் செய்கிறவர்களாகிய இச் சம்மனசுகளால் பூலோகத்திலே எங்கள் சீவியத்துக்குப் பாதுகாவலுண்டாயிருக்கும்படி கிருபாகடாட்சம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

## ஐப்பசி மாதம் முதலாம் ஞாயிற்றுக்கிழமை
# ஆராதிஷ்ட செபமாலைத்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா முதலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அக்காலத்திலே கபிரியேல் என்னும் தேவதூதன் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சர்வேசுரனால் அனுப்பப்பட்டு தாவீதின் கோத்திரத்தாராகிய சூசையப்பர் என்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாகபந்தனமான ஓர் கன்னிகையிடத்தில் வந்தார். அந்தக் கன்னிகையின் பேர் மரியம்மாள். தேவதூதன் அவளிருந்த இடத்தில் பிரவேசித்து : பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க ! கர்த்தர் உம்முடனே ; ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே என்றார். இதை அவள் கேட்ட மாத்திரத்தில், அவருடைய வார்த்தையினால் கலங்கி, இந்த மங்களம் எத்தன்மையானதோ என்று யோசனையாயிருக்கையில், தேவதூதன் அவளை நோக்கி : மரியே ! நீர் அஞ்சவேண்டாம். ஏனெனில் சர்வேசுரனிடத்தில் கிருபை பெற்றிருக்கிறீர். இதோ உமது உதரத்தில் கெற்பந்தரித்து, ஓர் குமாரனைப் பெறுவீர் ; அவருக்கு யேசு என்னும் நாமஞ் சூட்டுவீர். அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய சுதன் என்னப்படுவார் ; ஆண்டவரான சர்வேசுரன் அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குத் தந்தருளுவார் ; ஆதலால் அவர் யாக்கோபின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய அரசாட்சிக்கு முடிவு இராது என்றார். அப்போது மரியம்மாள் தேவதூதனைப் பார்த்து : இது எப்படியாகும்? நான் புருஷனை அறியேனே என்று சொல்ல, தேவதூதன் அவளுக்கு மாறுத்தாரமாக : இஸ்பிரீத்துசாந்து உமதுமேல் எழுந்தருளி வருவார் ; உன்னதருடைய வல்லபமானது உமக்கு நிழலிடும் ; ஆகையால் உம்மிடத்தில் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் என்னப்படுவார். இதோ உமக்குப் பந்துவாகிய எலிசபேத்தும் தன் முதிர்வயதிலே ஓர் புத்திரனைக் கெற்பந் தரித்திருக்கிறாள். மலடி என்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதம். ஏனெனில் சர்வேசுரனால் கூடாத வாக்கு ஒன்றுமில்லை என்றார். அப்போது மரியம்மாள் : இதோ, நான் ஆண்டவருடைய அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றாள்.



இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தினால் செபமாலை என்னும் முக்கிய செபத்தின் மகிமை காணலாயிருக்கும். அது எப்படியென்றால், பூமாலையானது அதில் தொடுக்கப்பட்ட பூவின் மாட்சிமையால் சிறந்து விளங்குமே. அப்பிரகாரமாய்ச் செபமாலையானது அதிலே அடங்கிய தெய்வீக செபதியானங்களால் சிறந்து விளங்குமென்றதினால், அச் செபதியானங்கள் ஏதென்று அறிவது உச்சிதமாம். அவைகள் ஏதோவெனில், பிதாவாகிய சர்வேசுரன் தமது குமாரத்தியாகிய கன்னிமரி அம்மாளுக்குத் தேவதூதனால் சொல்லுவித்த மங்களமும், இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரன் தமது பத்தினியாகிய அப் பரம நாயகிக்கு எலிசபேத்தம்மாளால் கூறுவித்த சுப சோபனமும், சுதனாகிய சர்வேசுரன் தமது மாதாவாகிய அவருக்குத் தமது ஞான பத்தினியாகிய திருச்சபையால் உரைப்பித்த வந்தனை வாழ்த்துமாகிய பிரியதத்தமந்திரமும், மனுஷ அவதாரத்தை நிறைவேற்றியருளிய பரம திரித்துவர் தோத்திரமும், மனுஷ அவதார பரம இரகசிய தியானமும், யேசுக்கிறீஸ்துநாதர் தமது தெய்வீக பிதாவைக் குறித்துச் செய்தருளிய பரமண்டலமந்திரமுமாம் என்று அறியவும். இப்படிப்பட்ட உச்சித செபங்களைச் செபமாலையாய் ஓதுங் கிரமமேரை ஏதோவென்றால், தங்க நூற் கம்பியிலே முத்துக்களைப் பப்பத்தாய்க் கோத்து, நீலத்தால் பிரிந்த பவளங்களை இடையிடையே அமைத்து முடிக்கப்பெற்ற ஓர் மாலையைப் போல், மனுஷ அவதார பரம இரகசியமாகிய களிகூர்ந்த, வியாகுல, மோக்ஷ காரணிக்கங்களை முறையே தியானித்துக்கொண்டு பிரியதத்த மந்திரம் பத்தோடு திரித்துவ தோத்திரம் ஒன்றும் பரமண்டல மந்திரம் ஒன்றும் சேர்த்து இவ்வாறு நூற்றைம்பத்துமூன்று பிரியதத்த மந்திரங்களை உச்சாரணம் பண்ணுகிறதே முழுக் கோவையாகிய செபமாலை ஓதி முடிக்கிற மேரையாம் என்று அறியவும்.

ஆகையால் பரம நாயகியாகிய தேவமாதா பாவிகள் ஈடேறும் பொருட்டு வானத்தில் நின்று பூமி மட்டும் வரவிட்ட மணிவடமாகிய இச் செபமாலையைப் பத்தியோடு ஓதி அதின் பலனை அடைந்துகொள்வதற்கு அதின் சம்பவத்தை அறிவது உச்சிதமாம். அது எப்படியென்றால் : பிரான்ஸ் இராச்சியத்தின் அல்விசி என்ற நகரியில் அல்விசியெர் என்ற பதிதர் சத்தியவேத விசுவாசத்தை மறுதலித்து விரோதமான விசேஷங்களைப் பிரசித்தப்படுத்தி அநேக கிறீஸ்தவர்களைத் தங்கள் தப்பறையான மதத்துக்குத் திருப்பிக்கொண்டு வந்தார்கள். அர்ச்சியசிஷ்ட தொமீங்கு முனீந்திரன் இத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்துமாக்கள் தேவ துரோகிகளாய் நரகத்துக்கு ஏதுவாகிறதினால் துக்கங்கொண்டு கவலித்துப் பிரசங்கங்களைச் சொல்லி அவர்களைத் திருப்பப் பிரயாசித்தும் ஒரு பலனுங் காணாமல் தேவமாதாவை மன்றாடிப் பிரார்த்தித்தார். அப்போது தேவமாதா மகா மகிமைப் பிரதாபத்தோடு அவருக்குக் காணப்படக் கருணையானார். அப்படியே காணப்பட்டு அவரை ஆறுதல் பண்ணிச் சொல்லப்பட்ட பதிதரையும் அவர்களால் பழுதான மற்றவர்களையும் திருப்பும்படியாகச் செபமாலைப் பத்தியைப் பிரசித்தப்படுத்தக் கட்டளை பண்ணினார். தொமீங்கு முனீந்திரன் அந்தப் பத்தியைப் பிரசங்கித்த இடத்தில் திருச்சபைச் சரித்திரங்களில் எழுதியிருக்கிற பிரகாரம் பதிதரையும் அவர்களை அனுசரித்த மற்றவர்களையும் நூறாயிரம் பேருக்கு அதிகம் சத்தியவேத விசுவாசத்துக்குத் திருப்பிக்கொண்டார். ஆனதினால் செபமாலையின் பத்தியாவது ஆத்தும, சரீர சத்துராதிகளை அகற்றவும் தேவ இஷ்டப்பிரசாதங்களைப் பெறவும், தேவ விசுவாசத்திலும் சுகிர்த நடக்கையிலும் உறுதிப்படவும் மகா தேவ அவுஷதம் என்று அறியக்கடவோம். ஆனதினால் தங்கள் ஆத்தும ஈடேற்றத்தை விரும்பித் தேடுகிற கிறீஸ்தவர்கள் நாள்தோறும் செபமாலையை ஓதிக்கொண்டு வருகிறது உத்தம கிரியை என்று அறியக்கடவார்கள். முழுச் செபமாலை என்கிற பதினைந்து பங்கையும் ஓதக்கூடாதே போகில் அதில் மூன்றில் ஒரு பங்கையாவது ஓதினால் பலன் உண்டாகும்.

அந்தப் பலனை அறிந்துகொள்ளத் தக்கதாக நடந்த ஒரு அற்புதத்தைக் கேட்கக்கடவோம். அது எப்படியென்றால், ஒரு எளிய ஸ்திரிக்கு இரு பெண்பிள்ளைகள் இருந்தார்கள். அவள் பிழைக்கிறதற்கு ஒரு அடைமானமும் இல்லாமல் தன் பிள்ளைகளுக்கு யாதொரு விக்கினம் வருமோ என்று பயந்து மகா கவலையாய்த் தேவமாதாவின் கருணை அடையும்படிக்குத் தன் பிள்ளைகளோடே தேவமாதாவின் சுரூபத்தின் முன்பாக நாள்தோறுஞ் செபமாலை ஓதிவருவாள். அப்படியே ஒருநாள் மகா சோக வியாகுலத்தால் கவலித்து ஆதலையற்ற எல்லாரையும் ஆதரித்துக் காக்கிற தேவமாதாவின் அடைக்கலத்தைத் தேடிப்போகிறேன் என்று தன் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு செபமாலைமாதா என்று பேருடைத்தான கோவிலில் ஸ்தாபித்திருந்த சுரூபத்தின்முன் முழந்தாளிட்டு, என் ஆண்டவளே! இந்தப் பிள்ளைகளை வாழக்கொடுக்க எனக்கு இயல்பு இல்லாதது உமக்குத் தெரியுமே. ஆனதினால் இந்த இரண்டு பிள்ளைகளையும் உம்முடைய திருக்கரங்களுக்கு ஒப்



புக் கொடுக்கிறேன். இனிமேல் நான் அவர்களுக்குத் தாய் அல்ல, நீர்தாமே தயையுள்ள மாதாவாகி உம்முடைய சித்தத்தின்படியே நடப்பியும் என்று இந்த இருவரையும் தேவமாதாவின் சுரூபத்தின் திருக்கரங்களுக்கு அருகில் கூட்டிப்போய், முத்தி செய்யப்பண்ணி ஒப்புக்கொடுத்து வீட்டுக்கு வந்து முன்னிலும் அதிக பத்தியோடே அனுதினமும் செபமாலையை ஓதிக்கொண்டு வருவாள். அப்போது தேவமாதா இரக்கம் நிறைந்த தாயைப்போல் அவர்களைக் காப்பாற்றக் கருணையாகி ஒருநாள் வர்த்தகன் ஒருவன் அவர்கள் வீட்டினருகில் வந்து நூறு பொற்காசு அவர்களுக்குக் கொடுத்து உங்கள் பிதாவுக்கு நான் முன்கொடுக்கவேண்டிய கடன் இது என்று சொல்லிப் போய்விட்டான். இப்படியே அந்தப் பிள்ளைகளுக்குத் தேவமாதாவின் கருணை கிடைத்தது என்று தாய் கண்டு நேர்த்தியான உடைகளைச் செய்வித்துக் கொடுத்து மகிமையோடே அவர்களைக் கோவிலுக்குப் போக விட்டவிடத்தில், அந்த ஊரார் இந்த உடையும் ஆஸ்தியும் இந்த எளியதுகளுக்கு எங்கேயிருந்து வந்தது என்றும், ஆகாத நடத்தையால் சம்பாதித்தது என்றும் நினைத்து அந்தக் குமாரிகளுடைய மானத்துக்கு அவகீர்த்தியாகப் பேசினவிடத்தில், பிள்ளைகளுடைய தாய் அந்த அவதூற்றை நீக்க வேறோர் அடைமானமும் இல்லாமல் இரு பிள்ளைகளையும் தேவமாதாவிடத்தில் அனுப்பி உங்களுக்குப் பிழைப்புக்கொடுத்த உங்கள் மாதாவிடத்தில்தானே அதற்கு ஆறுதல் கேட்டு அடையுங்கள் என்று சொன்னாள். இந்த விசாரத்தோடு அவர்கள் கோயிலுக்குப்போய் மிகுந்த சனக்கூட்டத்தின் நடுவில் பிரசங்கங் கேட்டிருக்கிறபோது இரண்டு பூமுடிகள் அந்த இரு குமாரிகளின் தலைசூழ விழுந்து அது அவர்களுடைய கன்னிசுத்தத்துக்காகத் தேவமாதாவால் கிடைக்கப்பட்டது என்று ஒரு சத்தம் கேட்கலானது. அத்தால் அவர்கள் பேரில் சொன்ன அவதூற்றை நீக்கி அந்த நகரியின் தலைவன் இந்த ஆச்சரியத்தைக் கண்டு அந்த இரு குமாரிகளைக் கன்னியாஸ்திரி கூட்டத்துக்குட்படுத்தினான். அவ்விடத்தில் மகா சுகிர்த நெறியோடு சீவித்து அந்தக் கன்னியாஸ்திரி கூட்டத்துக்குத் தலைமை உத்தியோகத்தைப் பெற்றார்கள்.

இந்த அற்புதத்தைக் கேட்ட சமஸ்தரும் தேவமாதாவின் பத்தியால் ஆத்தும சரீர ஆபத்துகளில் கிடைக்கிற நன்மையை அவதானித்துத் தேவமாதாவின் பத்தியை அனுசரிக்கிறது சர்வேசுரனுக்கு அதிக பிரியமுள்ள கிரியை என்று அறிந்து சமஸ்த கிறீஸ்தவர்களும் நாள்தோறும் செபமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் பத்தியைக் கைவிடாமல் நடந்து உலோகம், சரீரம், பிசாசு என்கிற மூன்று சத்துருக்களையும் செயித்துத் தரும நெறி தவறாமல் நடந்து தேவமாதாவின் சலுகையால் மோக்ஷ பாக்கியத்தை அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீருடைய ஏக பேறான திருக்குமாரன் தமது சீவியத்திலும் மரணத்திலும் உத்தானத்திலும் எங்களுக்கு நித்திய இரட்சணியமாகிய பொக்கிஷத்தைச் சுதந்தரித்துத் தந்தாரே, இந்தப் பரம இரகசியங்களை முத்திப்பேறுபெற்ற கன்னி மரியம்மாளின் திருச் செபமாலை மூலமாய்த் தியானிக்கிற நாங்கள் அவைகள் காட்டுகிற முன்மாதிரியைப் பின்பற்றவும் அவைகள் வாக்களிக்கிற நன்மைகளை அடைந்துகொள்ளவும் அனுக்கிரகம்பண்ணியருளவேணுமென்று உம்மையே மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக் கிறீஸ்துதாமே காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## ஐப்பசி மாதம் இருபத்தெட்டாந் திகதி
# ஆராதிஷ்ட சீமோன், ததேயு
## அப்போஸ்தலர்களின்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் பதினைஞ்சாம் அதிகாரத்திலே எழுதி வைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது: உங்களுக்கு நாம் கற்பிக்கிற கற்பனையாவது: நீங்கள் ஒருவரை ஒருவர் சிநேகிக்கும் பொருட்டே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன். உலகம் உங்களைப் பகைத்தால், உங்களைப் பகைக்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறிந்துகொள்ளுங்கள். நீங்கள் உலகத்தாராய் இருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். ஆனால் நீங்கள் உலகத்தார் அல்லாததினாலும், நானே உலகத்தினின்று உங்களைத் தெரிந்துகொண்டதினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியன் தன் எஜமானிலும் பெரியவன் அல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன என் வாக்கியத்தை நினைத்துக்கொள்ளுங்கள். என்னை அவர்கள் துன்பப்படுத்தினால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள். என் வாக்கை அவர்கள் அநுசரித்தால், உங்கள் வாக்கையும் அநுசரிப்பார்கள். ஆனால் என்னை அனுப்



பினவரை அவர்கள் அறியாததினாலே, என் நாமத்தின் நிமித்தம் இவையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள். நான் வராமலும், அவர்களோடு பேசாமலும் இருந்தேனாகில், அவர்களுக்குப் பாவமிராது. ஆனால் இப்போது தங்கள் பாவங்களைக் குறித்து அவர்களுக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான். வேறெவனும் செய்யாத (அற்புத) கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தால், அவர்களுக்குப் பாவமிராது. இப்போதோ அவர்கள் கண்டிருந்தும், என்னையும் என் பிதாவையும் பகைக்கிறார்கள். ஆனால் இலவசமாய் என்னைப் பகைத்தார்களென்று அவர்களுடைய வேதப்பிரமாணத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படியாக இப்படிச் செய்கிறார்கள் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சுவிசேஷ வாக்கியத்திலே சீமோன், ததேயு என்ற இரு அப்போஸ்தலருமாருடையவும் பெறுபேறு மகிமை காண்பிக்கப்படுவது:—அது ஏதெனில், நீங்கள் அன்னியோன்னியமாய் நேசிப்பீர்களாக என்று கற்பித்ததினால், அப்படியே இவர்கள் உலோக மனுஷரை ஈடேற்றத்தக்கதாகப் பிரயாசங்களைப்பட்டு, அவர்களைச் சாதாரண பக்ஷபிரமாணமாய் நேசித்ததைக் காண்பித்தார்கள்: நீங்கள் உலோக மனுஷர் ஆகாமல் உங்களைத் தெரிந்துகொண்டோம் என்றதினால், அந்தப்பிரகாரமாய் அவர்கள் உலோக வெகுமான சுக செல்வ சம்பத்து எல்லாம் வெறுத்து வேறுபட்டுப் பரலோக மனுஷராகத் தெரியப்பட்டதைக் காண்பித்தார்கள். இதல்லாமல் இதுக்காக உலகம் உங்களை வெறுத்து எமது நாமத்தின் நிமித்தமாய் நிந்தனை வாதை நிர்ப்பந்தங்களெல்லாம் படுத்தலாகும் என்றதினால், அந்தப்பிரகாரமாய் அப்போஸ்தலர் இருவரும் உலோக வெறுப்பை அடைந்து ஆண்டவருடைய நாமத்துக்காகச் சகல கஸ்தி துன்பங்களையும் பட்டுத் தங்கள் பிராணனைச் செலவழித்த பெறுபேறுகளைக் காண்பித்தார்கள்.

அதினால் இப்படியே அவர்கள் நடந்த சுகிர்த நடக்கையின் விசேஷத்தை அறியக்கடவோம். அது எத்தன்மையோ எனில், சீஷர்கள்பேரில் இஸ்பிரீத்துசாந்து இறங்கினதின்பின் ததேயு அப்போஸ்தலன் மெசோப்பெத்தேமியா, போந்து என்ற தேசங்களிலும், சீமோன் அப்போஸ்தலன் எஜீப்து என்ற இராச்சியத்திலும் போய்க் கிறீஸ்துவேதத்தைப் பிரசங்கித்துப் பேர்சிய இராச்சியத்துக்குப் போனார்கள். அப்போது அவ்விடத்திலே பபிலோனிய இராசாவின் சேனாபதியான வறாக்கு என்றவன் இந்தியரோடு அமராடப்போக ஆயத்தமாகி அந்த யுத்தத்தின் முடிவு எப்படியாகும் என்று தங்கள் தேவர்களிடம் கேட்டறியப் போனபோது அந்தத் தேசத்திலே தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதர் வந்திருக்கிறதினால் எங்களால் அதுக்கு மறுமொழி சொல்லக்கூடாது என்றார்கள். அத்தைச் சேனாபதியானவன் கேட்டு இப்படிப்பட்ட தேவதூதர் ஆர் என்று விசாரித்துத் தேடிக்கொண்டு வரச்சொல்ல, அப்போஸ்தலுமாரைக் கண்டு கூட்டிக்கொண்டு வந்து விட்டார்கள். அப்போது அவர்களிடத்திலே தான் செய்யப்போகிற யுத்தத்தின் செயம் எப்படியோ என்று சேனாபதி கேட்க, உங்கள் தேவர்களுடைய வாக்கின் உண்மையை நீங்கள் அறியும்படி அவர்களைப் பேச உத்தரவு கொடுத்தோம். அவர்கள் வாக்கை நீங்கள் முதல்கேட்டறிந்ததின்பின் நாங்கள் சொல்லுவோம் என்றார்கள். அப்படியே தங்கள் தேவர்களிடத்திலே அவர்கள் கேட்டதுக்கு, கடினமான போர்கள் உண்டாகும். இரு போராளிகளுடைய வெகு சேனைகளுக்கும் சேதம் உண்டாகும் என்று சொல்ல அப்போஸ்தலுமார் சிரித்தார்கள். அத்தைக் கண்டு சேனாபதியானவன் நான் பயந்திருக்க நீங்கள் சிரிக்கிறீர்களோ என்று கேட்டவிடத்திலே நீர் பயப்படக் காரியமில்லை. நாளைப் பொழுது விடிந்து ஒரு சாமத்துக்குள்ளாக இந்தியாவில் நின்று தானாபதிகள் சமாதான நிருபங் கொண்டுவருவார்கள் என்று சொன்னார்கள். இந்தச் சொல்லுக்கு அவனுடைய கோயில் பூசாரிகள் கேலிபண்ணினதினால் சேனாபதியானவன் இதின் உண்மை காணுந்தனையும் இரு திறத்தாரையும் மறியலில் வைத்தவிடத்திலே, மற்றநாள் அப்போஸ்தலுமார் சொன்னபிரகாரம் இந்தியாவின் தானாபதிகள் வந்து சேனாபதியானவனைப் பணிந்தார்கள். அத்தைக் கண்டு சேனாபதி தங்கள் பூசாரிகளைக் கொல்லக் கற்பித்தவிடத்திலே அத்தை அப்போஸ்தலுமார் விலக்கித் தங்களுக்குக் கொடுத்த வெகுமதிகளையும் கையேற்காமல் விட்டார்கள். அதின் பின் சேனாபதி அப்போஸ்தலுமாரைப் பபிலோனிய இராசாவின்முன் கூட்டிக்கொண்டுபோய் இவர்கள் மனுஷ தேகத்தோடு வந்திருக்கிற தேவர்கள் என்று அவர்களிடத்தில் கண்ட தேவ வல்லமை விசேஷங்களைச் சொன்னான். அவ்விடத்திலிருந்த வித்தைக்காரர் வர்மித்து இவர்கள் நாடு சோதிக்கவந்த வேவுகாரர் என்று சொன்னபோது சேனாபதி அவர்களைப் பார்த்து அப்போஸ்தலுமாரோடே தர்க்கிக்கச் சொன்னான். அதுக்கு அவர்கள் அப்போஸ்தலுமாரோடே தர்க்கிக்குமுன் பட்டணத்திலிருக்கிற சகல அறிவாளிகள் வந்தாலும் தங்களை வெல்லமாட்டாததைக் காண்பிப்போம் என்று சாஸ்திர பண்டிதரான சகலரையும் அழைப்பிக்கப்பண்ணி வந்தவர்களைத் தங்கள் மாய மந்திரங்களால் வாய் பேசாதபடிக்கு ஊமை ஆக்கினார்கள். மறு-



படியும் பேச உத்தாரங் கொடுத்து அசையாதபடிக்கு முடமாக்கினார்கள். மீளவும் முடத்தை மாற்றிக் கண்தெரியாதபடிக்குக் குருடாக்கினார்கள். இப்படியே தோற்றுப்போன சாஸ்திர பண்டிதரை அப்போஸ்தலுமார் கண்டு அவர்கள்மேல் சிலுவை வரைந்த உடனே பேய்ப் பந்தனங்கள் அவிழ்ந்து இராசாவின் சமுகத்திலே அவர்களோடு தர்க்கித்தவர்களை நாணுவித்து, மயங்கப்பண்ணினபோது மறுபடியும் வித்தைக்காரர் தங்கள் வித்தையால் மாயாசர்ப்பங்களை உண்டாக்கி அறிவாளிகள்பேரில் ஏவினார்கள். அப்போஸ்தலுமார் அந்தச் சர்ப்பங்களைத் தங்கள் அங்கிகளால் வாரி அவைகளை வித்தைக்காரர்பேரிலே திருப்பி விட்டார்கள். அப்போது அவர்களை அந்தப் பாம்புகள் கடிக்கிறதைப் பொறுக்கமாட்டாமல் கூக்குரலிடுகிறபோது அப்போஸ்தலுமார் இரங்கி இந்த விஷத்தைக் கண்டு உங்கள் பாவ மாயவிஷத்தை விடுங்கள் என்று சொல்லிச் சர்ப்பங்கள் தங்கள் விஷத்தை உறிஞ்சி எடுக்கும்படி கற்பித்தார்கள். அப்படியே விஷம் உறிஞ்சுகிறவிடத்திலும் மூன்றுநாள் வாதைப்படுத்தி அகன்றுபோயின. இந்தப்பிரகாரம் வித்தைக்காரரை அந்த நகரியிலிருந்து துரத்தினவிடத்திலே அவர்கள் எழுபது பேய்ப் பூசாரிகளிருக்கிற நகரியில் போய் அந்தப் பூசாரிகளைக்கொண்டு அப்போஸ்தலுமாரைப் பிடித்துத் தாங்கள் வணங்குகிற சூரிய விக்கிரக கோவிலிலே வணங்குவிக்கக் கொண்டுபோனபோது அந்த உருபங்களுக்குள்ளிருந்த பிசாசுகள் குரவையிட்டு உருபங்களையும் உடைத்துப்போட்டன. அத்தைக் கண்டு பூசாரிகள் அப்போஸ்தலுமார்பேரில் சீறி அவர்களைக் கொன்றுபோட்டார்கள். அக்ஷணத்திலே ஆகாசத்தால் இடிகள் விழுந்து வித்தைக்காரர் செத்துப்போகக் கோவில் மூன்று பங்காய் இடிந்து விழுந்தது. இந்த மேரையாய் அப்போஸ்தலுமார் இருவரும் ஆண்டவருடைய திருவாக்கின்படியே பாடுபட்டு, அவர் நாமத்துக்காகத் தங்கள் பிராணனைத் தியாகமாகச் செலவழித்து வேதசாட்சி முடியை அடைந்தார்கள். இப்படிப்பட்ட சுகிர்தங்களை நாங்களும் அனுசரித்து அவர்கள் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, அடியோர்கள் உமது முத்திப்பேறுபெற்ற அப்போஸ்தலர்களான சீமோன் ததேயு என்கிறவர்களின் மூலமாய்த் தேவரீருடைய திருநாமத்தை அறியவரக் கடாட்சம்பண்ணினீரே. நாங்கள் அவர்களுடைய நித்திய மகிமைப் பிரதாபத்தை நற்பயனோடு கொண்டாடவும், கொண்டாடுவதினால் நற்பயனடையவும் எங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுக்கிரகம்பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## கார்த்திகை மாதம் முதலாந் திகதி
# சகல மோக்ஷவாசிகளுடையவும்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு அஞ்சாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அக்காலத்திலே யேசுநாதர் சனக்கூட்டங்களைக் கண்டு ஒரு மலையின்மீதேறி உட்கார்ந்த மாத்திரத்தில், அவருடைய சீஷர்கள் அவரண்டையில் அணுக, அவர் தமது திருவாய்மலர்ந்து அவர்களுக்குப் போதித்தருளினதாவது : மனத் தரித்திரர் பாக்கியவான்கள் ; ஏனெனில் மோட்ச இராச்சியம் அவர்களுடையது. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். அழுகிறவர்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் அவர்கள் ஆறுதலடைவார்கள். நீதியின்மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் அவர்கள் திர்ப்தியடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் அவர்கள் இரக்கமடைவார்கள். தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் அவர்கள் சர்வேசுரனைத் தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் அவர்கள் தேவ மக்கள் என்னப்படுவார்கள். நீதியினிமித்தம் உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ; ஏனெனில் மோட்ச இராச்சியம் அவர்களுடையது. என்னைப்பற்றி மனிதர் உங்களைச் சபித்துத் துன்பப்படுத்தி, உங்கள்மேல் சகல தின்மையையும் அபாண்டமாய்ச் சொல்லும்போது, நீங்கள் பாக்கியவான்கள். அப்போது அகமகிழ்ந்து அக்களியுங்கள் ; ஏனெனில் பரலோகத்தில் உங்கள் சம்பாவனை ஏராளமாயிருக்கின்றது என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷவாக்கியத்திலே சகல மோக்ஷவாசிகளுடையவும் சுகிர்த பெறுபேறுகளின் மகிமை காணலாயிருக்கும். அது ஏனெனில், ஆண்டவர் சகல சுகிர்த பெறுபேறுகளின் நெறிகளை எட்டுவிதமாய் வகுத்து அதுக்கான பலனையும் வெகுமான மகிமையையும் காண்பித்ததினால் அந்தப்பிரகாரம் சகல மோக்ஷவாளர்களும் தங்கள் சுகிர்த நெறிகளை நிறைவேற்றி அதுக்கான தரும வெகுமானம் அடைந்திருக்கிறது காண்பிக்கப்படுவது.



அது எப்படியென்றால்: முதலாவது, மன எளியவர்கள் மோக்ஷ இராச்சியத்துக்கு உடையவர்களாவார்கள் என்றதினால், அந்தப்பிரகாரம் தேவதூதரான சகல சம்மனசுகளும் தங்களுக்குச் சர்வேசுரன் சகல மனுஷரிலும் அதிக ஞான அறிவு, சக்தி, சவுந்தரியம் முதலான பிரதாப மகிமைச் சம்பத்துகளைக் கொடுத்திருக்கையிலே அதுக்காக அவர்கள் லூசிப்பேரைப்போலக் கெம்பீரமாய் எழும்பாமல் மிகுந்த எளிமை, தாழ்ச்சியோடு சர்வேசுரனுக்குப் பணிந்ததினால் மோக்ஷ இராச்சியத்திலே அதிக பிரதாபமுள்ள ஞான அதிகாரங்களை அடைந்து சீவிக்கிறார்கள். இரண்டாவது, சாந்துவ குணமுள்ளவர்கள் பூமியில் அதிபதியாய் வாழ்வு அடைவார்கள் என்றதினால், அப்பிரகாரமாய் ஆதிபிதாக்கள் பூலோகத்திலே தங்கள் சத்துராதிகளுக்குக் கோபதாபம் காண்பியாமல், விரோத விக்கினங்களால் மனதில் முகத்தில் மாற்றம் இல்லாமல், நிறைந்த சமுத்திரம்போல் பூரண சாந்துவகுணமாய் நடந்ததினால் தங்கள் பிதிர்வழி பூலோகத்திலே வெகுவாய் வர்த்தித்து நீடித்திருக்கிறதைக் காணப் பாத்திரமானார்கள். மூன்றாவது, அழுகை மனஸ்தாபமாயிருக்கிறவர்கள் என்றதினால், அவ்விதமாய்த் தபோதனிகள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாப வியாகுலப்பட்டு வனவாசங்களில் போய்க் கடின தபசுகளைச் செய்ததினால் பரலோகத்திலே அதுக்கான மோக்ஷானந்த ஆறுதலை அடைந்தார்கள். நாலாவது, பசித்துத் தவித்ததுபோல் தருமத்தை ஆசித்தவர்கள் திருப்தி அடைவார்கள் என்றதினால், அத்தன்மையாய் ஸ்துதியர்கள் தர்ம ஆசையோடு வாக்கினால் சர்வேசுரனைத் துதித்து ஆராதித்ததுமல்லாமல் மனோகிரியையாலும் அவருடைய ஆராதனை ஆசாரங்களைப் பூலோகத்திலே வாழ்த்தப்பண்ணினதினாலும் பரலோகத்தில் தங்கள் சுகிர்த ஆசை சம்பூரணமாகிற மோக்ஷானந்தத்தை அடைந்தார்கள். அஞ்சாவது, இரக்கமுள்ளவர்கள் இரக்கம் அடைவார்கள் என்றதினால், அப்படியே அப்போஸ்தலுமார் பூலோகத்தில் பாவிகள் அக்கியானக் கிருத்தியங்களால் கெட்டுப்போகாதபடி வெகு தயாபர இரக்கமாய் அவர்களைக் கரையேற்றப் பிறநாடு தேசங்களில் திரிந்து, கஸ்திகள்பட்டு வேத நற்போதகங்களால் ஈடேறப் பண்ணினதினால் பரலோகத்திலே சர்வேசுரனுடைய அளவில்லாத தயைக் கிருபைக்கேற்ற மோக்ஷ மகிமை அடைந்தார்கள். ஆறாவது, மனச் சுத்தம் உள்ளவர்கள் சர்வேசுரனைக் காண்பார்கள் என்றதினால், அந்தடையாய்த் திவ்விய தீர்க்கதரிசிகள் தங்கள் மனதுகளிலே விசுவாச ஈனம், மதி ஈனம், கபடு, வஞ்சகம் முதலான அற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசும் இல்லாமல் சுத்த மனதோடு நடந்ததினால் பூலோகத்திலே தங்கள் சரீரக் கண்களுக்குத் தோற்றாத தூர விசேஷங்களையும் தேவபரம இரகசியங்களையும் காணத் திவ்விய காட்சி அடைந்து பரலோகத்திலே சர்வேசுரனை முகம் முகமாய்க் காணப் பிரத்தியட்ச தெரிசனத்தை அடைந்திருக்கிறார்கள். ஏழாவது, சமாதான குணத்தவர்கள் தேவபுத்திரர் என்று சொல்லப்படுவார்கள் என்றதினால், கன்னியர்கள் தங்கள் சரீரத்தில் சகல மோக விரக ஆசைகளை மறுத்துச் சரீரமில்லாத அரூபிகளுக்குச் சமானமாய்த் தங்கள் மனதைச் சுகிர்த சமாதானமாக்கி நடத்தினதினால் அரூபமான சர்வேசுரனுடைய புத்திரர் என்ற பேர் அடைந்து மோக்ஷ மகிமையைப் பெற்றார்கள். எட்டாவது, நீதிக்காகப் பாடுபடுகிறவர்கள் மோக்ஷ இராச்சியத்துக்கு உரித்தாளியாவார்கள் என்றதினால், அவ்வண்ணமே வேதசாட்சிகள் பூலோகத்திலே சர்வேசுரனுடைய வேததருமத்துக்காகப் பாடுபட்டு இரத்தஞ் சிந்தி ஆண்டவர் எங்களுக்காகப் பிராணனைக் கொடுத்த உபகாரத்துக்குப் பிரத்தி உபகாரமாகத் தங்கள் பிராணனைக் கொடுத்ததினால் பரலோகத்திலே வேதசாட்சிகளுக்கேற்ற மோக்ஷ இராச்சியத்தின் மகிமையையும் முடியையும் அடைந்தார்கள்.

இந்த மேரையாய் ஆண்டவர் அருளிச்செய்த எட்டுவித பெறுபேறுகளின் நெறியாவது: மன எளிமை, மனச்சாந்துவம், மனச் சுத்தம், மனத் தயாபரம், மனச் சமாதானம், சுகிர்த ஆசை, சுகிர்த தயை, சுகிர்த பொறுமை என்ற இந்த எட்டுவித சுகிர்தங்களை மோக்ஷ இராச்சியத்திலே வசிக்கிற சமஸ்தரும் நிறைவேற்றி அதுக்கான பாக்கிய மகிமைகள் பெற்றுப் பிரகாசிக்கிறார்கள். அதினால் இப்படிப்பட்ட சுகிர்தங்களை நாங்கள் இயன்றளவு அனுசரித்து அவர்கள்பேரிலே சாகுந்தனையும் பத்தி விடாமல் நடந்து அவர்கள் சலுகையால் மோக்ஷ பாக்கியத்தை அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சர்வ வல்லவரும் சதா நித்தியருமான சருவேசுரா, தேவரீர் உம்முடைய சகல சுத்தவாளர்களுடையவும் பெறுபேறுகளை நாங்கள் ஒன்றுகூட்டிக் கொண்டாடக் கிருபைபண்ணினீரே. அடியோர்கள் ஆசித்துத் தேடுகிறதாகிய உம்முடைய தயாபர இரக்கத்தின் மிகுதியை இத்தனை சலுகைக்காரரும் செய்யும் வேண்டுதலைப் பார்த்து எங்கள்மேற் பொழிந்தருள வேணுமென்று அதி தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

## கார்த்திகை மாதம் இரண்டாந் திகதி

# உத்தரிக்கிற ஸ்தலத்திலே இருக்கிற ஆத்துமாக்களுக்காகப்

## பிரார்த்திக்கிற நாளிலே வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் அஞ்சாம் அதிகாரத்திலே எழுதினதாவது :- அக்காலத்திலே யேசுநாதர் யூதர் சனங்களை நோக்கி: மரித்தோர் தேவசுதனுடைய குரலொலியைக் கேட்குங் காலம் வருகிறதென்றும், அது இப்பொழுதே வந்திருக்கிறதென்றும், அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்களென்றும் மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, சுதனும் தம்மிலே தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அவருக்குத் தந்தருளினார். அவர் மனுமகனாயிருக்கிறபடியினாலே நியாயத் தீர்வையிடும் அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம். ஏனெனில் கல்லறைகளிலுள்ள யாவரும் தேவசுதனுடைய குரலொலியைக் கேட்குங் காலம் வருகிறது. அப்பொழுது நற்கிரியைகளைச் செய்தவர்கள் உயிர்த்துச் சீவியத்துக்கும், துர்க்கிரியைகளைச் செய்தவர்கள் உயிர்த்து, ஆக்கினைத் தீர்வைக்கும் புறப்படுவார்கள் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின் அர்த்தமாவது: மரணித்தவர்கள் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் இப்போது வந்திருக்கிறது. அத்தைக் கேட்கிறவர்கள் சீவிப்பார்கள் என்றதற்கு அர்த்தம் இரண்டு வகையாம். அதாவது: சர்வேசுரனுடைய சித்தத்தையும் அவர் வேதத்தையும் அறியாமல் அக்கியான அந்தகாரத்தால் நரகாக்கினைக்கு ஏதுவாயிருந்த மனுஷர் தேவ குமாரனுடைய மனுஷ அவதாரம் காரணமாக அவர் போதித்த உண்மையான வேதத்தைக் கைக்கொண்டு அந்த மரணத்தால் நீங்குவார்கள் என்றதாகும். இரண்டாம் அர்த்தமோ என்றால்: நடுத்தீர்வை நாளில், மரணித்தவர்கள் சகலரும் சர்வேசுரனுடைய வல்லமையினால் சவக்குழிகளில் நின்று எழுந்து தேவ குமாரனுடைய தெரிசனத்தைக் காண்பார்கள் என்ற அர்த்தமாம்.

பிதா தாமாகச் சீவிக்கிற பிரகாரம் குமாரனையும், தாமாகச் சீவிக்கப்பண்ணினார் என்றதின் விபரமாவது: பிதாவாகிய சர்வேசுரன் ஆதி அந்தம் இல்லாதவர் என்றும் அவரால் பரிசுத்த குமாரனும் அப்படியே நித்தியமானவர் என்றும் காண்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச் செய்தார். மனுஷ குமாரனாகியமட்டும் நடுத்தீர்க்க அவருக்குத் தத்துவம் கொடுத்தார் என்றதற்கு அர்த்தமாவது: நடுத்தீர்க்கவும் மோக்ஷம் நரகம், அவனவன் கிரியைகளுக்கு ஒப்பாக நியமிக்கவும் தேவசுதனுக்குத் தெய்வீகத்துக்கு அடுத்தமட்டும் பிதாவோடு ஒரு சமானத்துவம் உண்டாயிருக்கிறதென்றும் அது மனுஷீகத்துக்குக் கொடுக்கப்பட்டது என்றும் காண்பிக்கச் செய்தார். சவக்குழிகளில் இருக்கிற சகலரும் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் நாள் வரும்போது நல்வினை செய்தவர்கள் சீவியத்துக்கு எழுந்திருப்பார்கள். தீவினை செய்தவர்கள் ஆக்கினைக்கு எழும்புவார்கள் என்று திருவுளம்பற்றின வாக்கியத்துக்கு அர்த்தமாவது: நடுத்தீர்வை நாள் வரும்போது மரித்தோர் யாவரும் நல்லோர், தீயோர், கிறீஸ்தவர்கள், அக்கியானிகள், ஆதி பிதாவான ஆதாம் முதலாகக் கடைசியில் பிறக்கும் மனுஷன் உட்பட எக்காலத்திலாவது உலோகத்திலே பிறந்து இறந்த மனுஷர் எல்லோரும் கடல் மச்சங்களால் விழுங்கப்பட்டவர்கள் என்கிலும் மிருகங்களுக்கு இரையாய்ப் போனவர்கள் என்றாலும் குழிகளில் வைக்கப்பட்டவர்கள் ஆகிலும் வானத்தில் எக்காளச் சத்தம் தொனிக்கும் நிமிஷத்திலே முழுச் சரீர ஆத்துமத்தோடு எழும்புவார்கள் என்ற விபரமாம். நீங்கள் அதிசயப்படவேண்டாம். அது ஏதென்றால், சவக்குழிகளில் இருக்கிற சகலரும் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும் என்ற வாக்கியத்தின் விபரமாவது: மேற்சொல்லப்பட்ட சகல மனுஷருடையவும் உத்தானத்தின் விசேஷம் எங்கள் புத்திக்கு எட்டாதிருக்கின்றமைபற்றித் தாமே சத்திய சுரூபியாகையால் மீளவும் அத்தை உறுதிப்படுத்தி, மரித்த சகலரும் உலக முடிவில் உயிர்த்துத் தம்முடைய சத்தத்தைக் கேட்பார்கள் என்று மாத்திரம் சொல்லாமல் தமது தேவ தத்துவத்தைக்கொண்டு மெய்யாகவே மெய்யாகவே என்று திருவுளம்பற்றியருளினார் என்று அறியவும். ஈறாந்தமாய் நல்வினை செய்தவர்கள் சீவியத்துக்கு எழுந்திருப்பார்கள், தீவினை செய்தவர்கள் ஆக்கினைக்கு எழுந்திருப்பார்கள் என்று அருளின வாக்கியத்தின் கருத்தாவது: சகலமான மனுஷருடையவும் துர்க்கிரியை, நற்கிரியை நடுத்தீர்வை நாளன்று விசாரிக்கப்படும் என்றும் நல்லோர் மோக்ஷத்துக்கும், தீயோர் நரகத்துக்கும் போவார்கள் என்றும் காண்பிக்கச் செய்தார்.

இந்தச் சுவிசேஷ வாக்கியத்தையும் அதின் அர்த்தத்தையும் கேட்டவர்கள் இப்போது குழிகளில் இருக்கிற தங்கள் தாய், தந்தை, சகோதரர், உறவினர் முதலான பேர்களைப்



போலத் தாங்களும் ஒரு குழியிற் கிடந்து மண்ணாய்ப்போகிற சமயம் வரும் என்று நினைத்து உலோக சீவியத்தின் வியர்த்த கெம்பீரங்களையும் சரீர மதத்தின் தீய ஆசைகளையும் அடக்கப் பிரயாசித்து நல்ல மரணத்துக்கு ஆயத்தம்பண்ணவேண்டியது. அப்பால் உலக முடிவில் சகலமான மனுஷரும் மீளவும் ஆத்தும சரீரத்தோடு உயிர்ப்பார்கள் என்பதையும் பயங்கரத்தோடு அவதானித்து, இச் சீவியத்திலே ஆங்காரம், லோபம், மோகம், குரோதம் முதலான துர்க்குணங்களை விடாமலும் இச் சீவியத்தின் செல்வம் அல்லாதே அச்சீவியத்தை நினையாமலும் இருக்கிறபேர்கள் அன்று சகல மனுச்சென்மம் கூடுகிற இடத்தில் எவ்வளவு வெட்கத்தோடும், துக்கத்தோடும் இருப்பார்கள் என்று முழு அவதானத்துடனே தியானிக்கக்கடவார்கள். பின்னையும் தேவசுதன் ஆத்தும கழுவுதலுக்குத் தமது அளவில்லாத கிருபையினால் உண்டாக்கின பாவசங்கீர்த்தனம் என்னும் தேவதிரவிய அனுமானத்தைப் புத்தியீனமாகப் பாவித்து அத்தைப் பலனோடு பெறாமலும் பொறுதி அடையாமலும் இருந்த பேர்கள் அன்று என்ன உத்தாரம் தேவநீதிபானுக்குச் சொல்லுவார்கள் என்றும் நினைக்கக்கடவார்கள். ஈறாந்தமாய் நல்லோர் மோக்ஷத்துக்கும் தீயோர் நரகத்துக்கும் நடப்பார்கள் என்ற வாக்கியத்தால் மோக்ஷமும் நரகமும் அவனவன் கிரியைகளினால் தேடுகிற பதவி என்று அறிந்து நடுத்தீர்வை நாளிலே எங்கள் நற்கிரியை மனம் பூரிக்கப்பண்ணும் என்றும் எங்கள் துர்க்கிரியை சொல்லிலடங்காத சோபத்துக்கு ஏதுவாக்கும் என்றும் யோசிக்கக்கடவோம். அப்படியே இச்சீவியத்தில் தேவகற்பனைகளைச் செலுத்தும்படி பட்ட பிரயாசம் மாங்கிஷ ஒறுத்தல், கன்னிசுத்தம், விரத்தசுத்தம், பிச்சைதானம், பொறுதி, சாந்துவம் முதலான சுகிர்தங்கள் அவனவனை நித்திய செல்வத்துக்குப் பாத்திரனாக்கும். ஆனால் அதற்கு எதிரியாகத் தேவகற்பனைகளின் அவமதிப்பு, லோபம், மோகம், குரோதம், கொதி முதலான துர்க்குணங்கள் நரகத்துக்கு இழுத்துக் கொண்டு போகும் என்று உத்தேசிக்கவேண்டியது. அவை எல்லாம் மெய்யாகவே அப்படிச் சித்திக்கப்போகிறது என்று விசுவசித்து இந்த அநித்திய சீவியத்தின் சிற்பகாலத்திலே கஸ்திப்பட்டுத் தேவகற்பனைகளைச் செலுத்தி நித்திய சீவியத்திலே அளவில்லாத மோக்ஷபாக்கியம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

இதல்லாமல் இன்று திருச்சபையில் கொண்டாடப்படுகிற இந்தத் திருநாளின் காரணத்தை விசாரித்து அறிய விரும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிற பேர்கள் அறியத்தக்கது ஏதென்றால், மரணித்தவர்களுடைய ஆத்துமம் சேருகிற பதவி மூன்றென்று அறியவேண்டியது. அதாவது: மோக்ஷம், நரகம், உத்தரிக்கிற ஸ்தலம் என்ற இந்த மூன்று தலமுமாம். பிரசாத ஸ்நானம் பெற்றதின்பின் யாதொரு கன்ம பாவத்துக்கும் ஏதுவாகாதவர்கள் மரணித்தவுடனே மோக்ஷம் சேருவார்கள். பின்னையும் கன்ம பாவங்களுக்கு ஏதுவானவர்கள் மெய்யான பாவசங்கீர்த்தனத்தால் பொறுதி அடைந்து பச்சாத்தாபத்தின் கிரியைகளினால் பாவத்துக்கடுத்த ஆக்கினை எல்லாம் இந்த உலோகத்தில் சரிவர உத்தரித்திருந்தால் மரணித்தவுடனே மோக்ஷம் சேருவார்கள். சாவான பாவங்களுக்கு ஏதுவாகிப் பாவப்பொறுத்தல் அடையாமல் மரணித்தவர்கள் நரகத்துக்கு ஏதுவாவார்கள். ஆனால் செய்த பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மெய்யான உச்சாரணம்பண்ணிப் பொறுதி அடைந்தவர்கள் பச்சாத்தாபக் கிரியைகளினால் தங்கள் பாவத்துக்கடுத்த உத்தரிப்பை இந்த உலோகத்திலே பண்ணாமல் மரணித்தால் அத்தை உத்தரிக்கிற ஸ்தலம் என்கிற தலத்தில் பண்ணத் தேவ நியமத்தின்படியே போகிறது என்றும் அறியக்கடவார்கள். அவ்விடத்தில் தங்கள் பாவத்துக்கு அடுத்த உத்தரிப்பை அக்கினியின் கஸ்தியினால் அனுபவித்ததின்பின் பரலோகஞ் சேருவார்கள் என்றும் அறியவேண்டியது.

இந்த உண்மையின் விசேஷத்தைப் பதிதர் மறுதலித்தாலும் அத்தைத் தப்பாத உண்மையான தேவதிருச்சபை வேதவாக்கியங்களில் ஊன்றிப் படிப்பிக்கிறதினால் உறுதியான விசுவாசம் என்று அறிந்து அவனவன் தான் செய்த பாவத்துக்குப் பொறுதி அடைந்தால் மாத்திரம் போதாது என்றும், அதற்கடுத்த உத்தரிப்பு இவ்வுலகத்திலே பண்ணவேணும் என்றும், பண்ணாதிருந்தால் அச் சீவியத்திலே அதிக கடின உத்தரிப்புப் பண்ணவேண்டியதாயிருக்கும் என்று அவதானித்துச் செப தவத்தினால் தன் பாவங்களுக்கடுத்த ஆக்கினையை இந்த உலோகத்திலேதானே உத்தரிக்கப் பிரயாசப்படக்கடவான். அதற்கு மனசில் நல்விசாரம் உண்டாயிருக்கத்தக்கதாக நடந்த ஓர் அற்புதத்தைக் கேட்கக்கடவோம். அது எப்பிரகாரமோ என்றால்: ஐரோப்பிய இராச்சியத்தில் தேவபயபத்தியோடு நாட்கழித்த கிறீஸ்தவன் ஒருவன் மகா கடினமான ஒரு வியாதியினால் சிறிது வருஷகாலம் பீடிக்கப்பட்டவிடத்திலே அதைச் சகிக்கமாட்டாமல் சர்வேசுரனைப் பார்த்துத் தன்னை இவ்வுலோகத்தால் எடுக்கப் பிரார்த்தித்து வரும்பொழுது ஒரு தேவதூதன் அவனுக்குத் தோன்றிச் சொல்லு



வது: உனது பிரார்த்தனையைச் சர்வேசுரன் கேட்கச் சித்தமானார். ஆனால் உனக்கு அறிவிக்கிறதாவது: இந்த வியாதி வருத்தத்தை ஒரு வருஷமட்டும் நீ பொறுத்து மோக்ஷஞ் சேரவும், அல்லது இப்போது மரணித்து மூன்றுநாள் உத்தரிக்கிற ஸ்தலத்தில் உன் பாவக் குற்றங்களுக்கடுத்த அக்கினை அனுபவித்து மோக்ஷத்துக்கு அழைக்கப்படவும் தேவ நியமம் என்று அறிவித்தார். அதற்கு நோயாளி இவ்வுலோகத்திலே ஒரு வருஷம் கஸ்திப்படுகிறதைப் பார்க்க உத்தரிக்கிற ஸ்தலத்திலே மூன்று நாள் உத்தரித்து மோக்ஷம் சேருகிறது அதிக எளிது என்று அவதானித்து அத்தைத் தெரிந்துகொண்டவுடனே அவன் ஆத்துமம் உடலை விட்டுப் பிரிந்து உத்தரிக்கிற ஸ்தலத்தில் இறங்கலானது. அவ்விடத்தில் சில நாழிகை அந்தக் கடூர அக்கினியில் கஸ்திப்படுகிறபோது பொறுக்கமாட்டாமல் குரவைச் சத்தத்தோடு முறைப்பாடு பண்ணச் செய்தே, முன் தோற்றப்பட்ட தேவதூதன் மீளவும் தோன்றி ஏன் இப்படி அபயமிடுகிறாய் என்றார். அதற்கு அந்த ஆத்துமம் சொல்லுவது: நீர் தேவதூதன் என்றால் பொய் சொல்லுவது எவ்விதம்? மூன்று நாள் உத்தரிக்கிற ஸ்தலத்தில் கஸ்திப்பட்டபின் மோக்ஷத்துக்கு அழைக்கப்படுவேன் என்று சொன்னதல்லவோ? இப்போது இத்தனை வருஷகாலம் என்னை இவ்விடத்திலே விட்டது எப்படி என்று தாழ்ச்சியோடு சொல்லத் தேவதூதன் மறுமொழியாகத் தேவ பரிசாரகர் ஒருபோதும் பொய் சொல்லுவதில்லை. நீ மரணித்து இன்னமும் ஒருநாள் செல்லவில்லை. உனது சடலம் இன்னம் அடக்கவுமில்லை. ஆனால் இந்த அக்கினியின் கொடூரம் நிமித்தமாய்ச் சிற்பநேரம் நீ பட்ட கஸ்தி வெகு வருஷங்கள்போல் உனக்குத் தோற்றப்படுகிறது. ஆகிலும் இப்போது என்னத்தைத் தெரிந்துகொள்ளுகிறாய் சொல்லு. ஒரு வருஷம் உலோகத்திலே முந்தின வியாதி வருத்தத்தைப் படப் போகிறாயோ? அல்லது இவ்விடத்தில் மூன்று நாள் உத்தரிக்கப் போகிறாயோ? என்று கேட்டதற்கு, அவன் பெருமூச்சு விட்டுச் சொல்லுவான்: இவ்விடத்திலே மூன்றுநாள் கஸ்திப்படுகிறதைப் பார்க்க உலோகத்திலே உலகம் முடியுமட்டும் அந்த வியாதி வருத்தத்தை மாத்திரமல்ல அதிலும் அதிக கடின வியாதி வருத்தங்களையும் அனுபவிக்க ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். அக்ஷணமே பூமிதானம் பண்ணக் கொண்டுபோகப்பட்டவனின் சரீரத்தில் அவன் ஆத்துமத்தைத் தேவதூதன் உட்பிரவேசிக்கப் பண்ணினவிடத்திலே அவன் சீவனோடெழும்பி உடுப்பாட்டின பிரேத வஸ்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் கழற்றி எழுந்து நிற்க எல்லோரும் ஏங்கி அதிசயித்தார்கள். அந்நேரம் அவன் நடந்த வர்த்தமானம் எல்லாம் வெளியாக்கி உத்தரிக்கிற ஸ்தலத்தின் உண்மையையும் அதில் உண்டான கஸ்தியின் கொடூரத்தையும் பிரசித்தம் பண்ணி ஒரு வருஷமட்டும் வியாதியின் கொடூரத்தைப் பொறுதியோடு பட்டதுமல்லாமல் உத்தரிப்புக்கடுத்த பலவித கிரியைகளையும் செலுத்தி மரணித்துப் பரலோகஞ் சேர்ந்தான்.

இத்தைக் கேட்கிற கிறீஸ்தவர்கள் இச் சீவியத்தில் தங்கள் பாவங்களுக்காகச் செப தபத்தினுல் உத்தரிப்புப் பண்ணத் தெண்டிக்கிறது நலம் என்று அறியக்கடவார்கள். அதல்லாமல் சீவித்திருக்கிறவர்கள். மரணித்தவர்களுக்காகப் பிரார்த்திக்கிறதும் அவர்களுக்காகப் பூசை, பிச்சை, தானம், செபம், தபம் பண்ணுகிறதும் அந்த ஆத்துமாக்களின் கஸ்தியைக் குறைக்கிறதற்கும் முடிக்கிறதற்கும் தேவ பொருட்டால் நியமிக்கப்பட்ட கிரியைகள் என்று அறியக்கடவார்கள்.

## திருச்சபைச் செபம்

தாராளமாய்ப் பொறுதி கொடுப்பவரும் மனுஷ இரட்சணியத்திலே மிகுந்த ஆசையுள்ளவருமாகிய சருவேசுரா, இவ்வுலகத்தை விட்டு இறந்துபோன தேவரீருடைய அடியார்களான ஸ்திரீபுமான்களுடைய ஆத்துமங்கள் நித்திய கன்னியாகிய மரியம்மாளுடையவும் உமது சகல அர்ச்சியசிட்டர்களுடையவும் வேண்டுதலினுல் சதாகால பேரின்பத்திலே பங்கடையச் செய்தருளவேணுமென்று தயாள சமுத்திரமாகிய தேவரீரை மன்ருடுகிருேம். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென் யேசு.

---

### கார்த்திகை மாதம் இருபத்தாருந் திகதி

# ஆராதிஷ்ட
# சிலுவேஸ்திரி மடாதிபரின்

### திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு பத்தொன்பதாம் அதிகாரத்திலே எழுதி வைத்த வாக்கியமாவது :— அந்தக் காலத்திலே இராயப்பர் யேசுநாதரை நோக்கி: இதோ நாங்கள் எல்லாவற்றையுந் துறந்துவிட்டு,



உம்மைப் பின்சென்று வந்தோமே. அதினுல் எங்களுக்கு என்ன கிடைக்கும்? என, யேசுநாதர் அவர்களுக்குச் சொன்னதாவது : மறுஜென்மத்தில் மனுமகன் தம்முடைய மகிமைப் பத்திராசனத்தில் வீற்றிருக்கும்போது, என்னைப் பின்சென்ற நீங்களும், இஸ்ராயேலருடைய பன்னிரண்டு கோத்திரங்களையும் நடுத்தீர்ப்பவர்களாகப் பன்னிரண்டு சிம்மாசனங்களில் உட்காருவீர்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும் என் நாமத்தைப்பற்றி வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தந்தையையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டுவிட்ட எவனும், நூறுமடங்கு பெறுவான். நித்திய சீவியத்தையும் சுதந்தரித்துக்கொள்ளுவான் என்று திருவுளம்பற்றினுர்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி முனியோரது சுகிர்த பெறுபேறுகளின் விசேஷங் காணலாயிருக்கும். அதெப்படியெனில் என்றல், இதோ நாங்கள் சகலத்தையுங் கைவிட்டுத் தேவரீரைப் பின்தொடர்ந்து வந்தோமே என்றதினுல் : ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி முனியோர் வங்கிஷபதிகளான தம்முடைய தாய் தந்தையரைத் துறந்தும், தனதானிய சம்பத்துக்களுக்கு வாயிலாகவிருந்த நீதிஸ்தல நியாயதுரந்தர உத்தியோகத்தை வெறுத்தும், மீளவும் சாதாரண திருச்சபையின் வருமானங்களை அனுபவித்திருந்த மானியக் குருத்துவ நிலைமையைக் கைநெகிழ்ந்தும், வனவாசத்திலே தனித்து உறைந்து சருவ லோக நாயகராகிய எங்கள் அமிர்த யேசுவின் திரு அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்த மேரை காண்பிக்கப்படுவது.

சகலத்தையுங் கைவிட்டுத் தேவரீரைப் பின்தொடர்ந்து வந்தோமே, எங்களுக்குக் கிடைக்கப்போகிறதென்ன என்று சம்பேதுரு ஆண்டவரைக் கேட்டதினுல் : தமது நிமித்தம் இன்பங்களை மறுத்துத் துன்பங் கைக்கொண்டு தம்முடைய தெய்வீக சாயலாய் நடப்போருக்கு, அளவில்லாத நீதிபரரான அவர் தவருமல் மகா பெரும் சம்பாவனை அருளுவார் என்ற படிப்பினையாம். இந்தப் பிரகாரமே சிலுவேஸ்திரி முனியோர் தமது தவப் பரித்தியாகத்துக்காகச் சர்வேசுரனுல் மகத்தான பரலோக பொக்கிஷங்களை அடைந்து அனுபவிக்கலானுர் என்று அறியவும். அதெம்மருவாதியோ வென்ருல் : நம்மைப் பின்பற்றிய நீங்களும் பன்னிரண்டு தவிசுகளிலே வீற்றிருந்து இசிறவேலின் பன்னிரு கோத்திரங்களுக்கும் நியாயந் தீர்ப்பீர்கள் என்று யேசுநாதர் திருவுளம்பற்றின விபரமாவது : பன்னிரண்டு என்ற இலக்கமானது அதிகமான தொகையென்று வேத வாக்கியங்களிலே பொருள்படும். ஆதலால், இசிறவேலின் பன்னிரண்டு கோத்திரம் என்றபோதே தம்மை விசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசியாமற்போன பெருந்தொகையான யூதர்களையும் மற்றும் பிறசாதி சனங்களையும் ஆண்டவர் குறித்தருளினார் என்றறியவும். விசுவசியாத சனங்களை விசுவசித்தோரானவர்கள் அநேக ஆசனங்களில் வீற்றிருந்து நியாயந் தீர்ப்பார்கள் என்றதினால்: அவிசுவாசிகளின் நித்திய நிர்ப்பாக்கிய கதியும் விசுவாசிகளின் பிரதாபமான வெற்றி மகிமையும் காணலாயிருக்கும். இந்தப்படியே சிலுவேஸ்திரி முனியோருடைய அதி பற்றுதலான விசுவாசமும் அழியாத மகிமையடைவதாயிற்றென்றறியவும்.

மேலும் தமது நாமத்துக்காக வீடுவாசல், தந்தை தாய், சகேதரம், மனைவிமக்கள், காணி பூமி ஆதிய அருமையான சொத்துக்களைக் கைநெகிழ்ந்தோருக்கு ஒன்றுக்கு நூறு மடங்கும் நித்திய சீவியமும் கிடைக்கலாகும் என்று ஆண்டவர் திருவாக்கு அளித்தபடியே சிலுவேஸ்திரி முனியோரும் இவ்வுலோக வாசத்தின் வீடுவாசலென்கிற அநேக தபோமடங்களையும், தந்தை தாய் சகோதரிலும் மனைவி மக்களிலும், இனிய ஞான உறவு பூண்ட வாலவிருத்தரான தபோதன சுற்றங்களையும், காணி பூமிகளிலும் பார்க்க இலட்சாதிலட்சம் விலையேறப்பெற்ற சுகிர்த ஆத்துமங்களின் ஈடேற்றப் பலனையும் இவ்வுலோகத்திலேதானே அடைந்ததுமல்லாமல், மறுலோகத்திலே கன்னிசுத்த தேவமாதாவாலும் மோட்சவாசிகளாலும் எதிர்கொண்டு அழைக்கப்பெற்று அனந்தகால சுக சீவியப் பேரின்பப் பெறுபேறடைந்துகொண்டார் என்றறியவும்.

இந்த மேரையாய் நாங்களும் தேவ நேசத்துக்கு விக்கினமான உறவற்றார் ஆஸ்திபாஸ்திகளின் பற்றுதல் அறுத்தகற்றி, சகலத்துக்கும் மேலான அன்போடு எங்கள் ஆண்டவரைப் பின்பற்றி, ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி முனியோரின் சலுகையால் அழியாத மோட்ச பதவி அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

*அனந்த தயவுள்ள சருவேசுரா! தேவரீர் மடாதிபரான ஆராதிஷ்ட சிலுவேஸ்திரியுவானவர் திறந்த சவக்குழியொன்றைப் பார்த்துத் தியானித்ததினாலே இவ்வுலகம் விழல் என்று கண்டு தபோதனராகிப் புண்ணியப் பெறுபேறுகளால் அலங்கரிக்கப்படச் சித்தமானீரே; நாங்களும் அவரைக் கண்டு பாவிப்போராகிப் பூலோக சுகங்களை வெறுத்து உமது நித்தியமான சகவாசத்தைப் பெறும்படி இரக்கஞ் செய்யவேண்டுமென்று தேவரீரை இரந்து மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.*

### கார்த்திகை மாதம் முப்பதாந் திகதி

# ஆராதிஷ்ட அந்திரே அப்போஸ்தலு

### திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

சுவிசேஷக மத்தேயு நாலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே யேசுநாதர் கலிலேயா நாட்டின் கடலருகே நடந்துபோகையில், இராயப்பரென்னும் சீமோனும் அவருடைய சகோதரரான பிலவேந்திரருமாகிய இரு சகோதரர் கடலில் வலை வீசிக்கொண்டிருக்கிறதைக் கண்டார். ஏனெனில் அவர்கள் செம்படவர்களாயிருந்தார்கள். அப்போது அவர்களை நோக்கி: நீங்கள் என் பிறகே வாருங்கள், நான் உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்று திருவுளம்பற்றினார். அவர்களும் உடனே வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்சென்றார்கள். பின்னும் அவர் அவ்விடம் விட்டு அப்புறம் போகையில், வேறே இரண்டு சகோதரர்களான செபதேயுவின் மகன் யாகப்பரும், அவருடைய சகோதரனாகிய அருளப்பரும், தங்கள் பிதாவாகிய செபதேயுவோடுகூடப் படகில் தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறதைக் கண்டு அவர்களையும் அழைத்தார். அவர்களும் உடனே வலைகளையும் தங்கள் பிதாவையும் விட்டுவிட்டு அவரைப் பின்சென்றார்கள்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்திலே ஆராதிஷ்ட அந்திரே அப்போஸ்தலுவின் சுகிர்த மகிமை காணப்படுவது. அது எப்படியென்றால், ஆண்டவர் அவரைக் கண்டு தம்மைப் பின்சென்று வரச் சொன்னதினால் பூலோகத்தில் இருக்கிற வங்கிஷபதி, சாஸ்திரி, வித்தியாவந்தர் முதலான வெகுமானத்தில் அதிகரித்த அநேகம் பேர்களை ஆண்டவர் பாராமல் எளிய மனுஷனான அந்திரேயைத் தமது அப்போஸ்தலு உத்தியோகத்துக்குத் தெரிந்தெடுத்ததினால் அவருடைய பெறுபேற்றின் மகிமை காண்பிக்கப்படுவது. மீன் கரையேற்ற வலை வீசியிருக்கையிலே மனுஷரைக் கரையேற்றுகிறவனாக்குவேன் என்றதினால், அறிவில்லாத மச்சம்போல் சர்வேசுரனை அறியாதிருக்கிற மனுஷருடைய ஆத்துமாக்கள் கிறீஸ்துவேதம் என்கிற ஞான வலையில் இவரால் சேர்க்கப்படுவார்கள் என்ற விபரமாம். இதல்லாமல் அவர் ஆண்டவருடைய வாக்கைக் கேட்ட உடனே வலையைவிட்டுப் பின்பற்றி வந்தார் என்றதினால், ஆண்டவருடைய திருவாக்கைச் செலுத்தின பிரமாணிக்கச் சுறுசுறுப்பையும் சீவனோபாயத் தொழிலால் தேடப்பட்ட சம்பத்து, வாஞ்சை சகலதும் விட்டுவெறுத்து ஆண்டவருடைய சித்தத்துக்கு அநுகூலமாய் நடந்தார் என்றதும் காண்பிக்கப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனதினால் அவருடைய சுகிர்த நடக்கையின் சில விசேஷங்களைக் காணல் உச்சிதமாம். அது எப்படி என்றால், ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளினதின்பின் ஆராதிஷ்ட அந்திரே அப்போஸ்தலு ஐரோப்பா என்ற திக்கில் வேதபிரசங்கியாய்ப் போய்ச் சித்திய, எப்பீரு, தகாசிய, நிசெய, அக்காய என்ற தேசப் பிரிவுகளிலே சுவிசேஷ வாக்கைப் பிரசங்கம்பண்ணினவிடத்திலே அந்த அளவிடப்படாத சனங்கள் கிறீஸ்துவேதத்தை விசுவசித்தார்கள். அப்போது நிசெய என்ற பட்டணத்தில் ஏழு பிசாசுகள் ஒரு கூட்டமாய்க் கூடிக்கொண்டு அந்த ஊர் வழிகளிலே திரிந்து வருகிற போகிற மனுஷர்களை வாதித்து வதைத்திருந்ததினால் இந்தச் செய்தியை அப்போஸ்தலுவானவருக்குச் சொன்னவிடத்திலே அவர் அந்தப் பிசாசுகளை நாய்வேஷமாய்த் தம் முன்பாக வரக் கற்பித்து அப்படியே வந்தவிடத்திலே நீங்கள் ஒருவருக்கும் பொல்லாப்புச் செய்யாதபடிக்கு வனாந்தரத்திலே போங்கள் என்று துரத்தினார். அத்தால் அந்த இராச்சியத்தின் மனுஷர் பிசாசுவினையங்களால் ஈடேறிச் சர்வேசுரனைத் துதித்தார்கள். இன்னமும் அந்திரே அப்போஸ்தலு பண்ணுகிற பிரசங்கங்களுடைய கீர்த்தியை வெகு தூர தேசங்களில் மனுஷர் கேட்டு அவர் அண்டையிலே வரத்தக்கதாக நாற்பது பேர் கடல் யாத்திரையாகிறபோது அவர்கள் ஏறின உரு கடலில் அமிழ்ந்தி எல்லாருஞ் செத்துச் சவங்கள் தேவபொருட்டாய் அப்போஸ்தலு இருக்கிற தேசத்தின் கடற்கரையில் அடைந்தவிடத்திலே அதை அப்போஸ்தலு அறிந்து கடலோரம் வந்து பார்த்து வெகு இரக்கமாய்ச் சர்வேசுரனைப் பிரார்த்தித்தவுடனே நாற்பதுபேரும் எழுந்திருந்தார்கள். இப்படியே செத்தவர்களை எழுப்பினதையும், வியாதி வருத்தர், அங்கவீனர்களைக் குணமாக்கினதையும், பிசாசுமாயம், தந்தரம், வேஷங்கள் இவைகளைப் போக்கினதையும் இந்தப் பிரசங்கத்திலே சொல்லி முடிக்கலான கிரமம் அல்ல.

கடைசியிலே தம்முடைய சுகிர்த நாள் நிறைந்து மரித்தமேரை எப்படி என்றால்: அக்காய என்ற தேசத்தில் பாத்தா என்ற பட்டணத்தில் கிறீஸ்துவேதம் மிகுதியாய்ப் பிரபலித்துத் தேவாலய மந்திரங்கள் திருநாட் திருவிழாக்கள் வெகு கொண்டாட்டமாய் நடக்கிறபோது ஏசெய என்ற தலைவனுடைய பெண்சாதி மனதிலே தேவபத்தி உற்பவித்துக் கிறீஸ்தவளானாள். அதைத் தலைவன் கேட்டுக் கிறீஸ்துவேதத்தின் பேரில் வெகுவாய் முனிந்து வேதக்காரரைச் சிறை விலங்கு முதலான அநேகம் சில்லறைகள் படுத்தி அதுக்கு முகாமையான அந்திரே அப்போஸ்தலுவைச் சிலுவையிலே வதைக்கத் தீர்வையிட்டான். அப்படியே அப்போஸ்தலுவைச் சிலுவையிலே வதைக்கத்தக்கதாகக் கொண்டுபோனவிடத்திலே அவர் சிலுவையைக் கண்ட உடனே மிகுந்த அக்களிப்போடு முன்னுக்கு ஓடி அதை அணைத்து முத்திசெய்து, துதித்துச் சொல்லுவது: என் ஆண்டவருடைய சரீர அங்கங்களால் சவுந்தரியம் அடைந்த திருச் சிலுவையே! உன்னை அநேக காலம் விரும்பினேனே, கவலையாய் நேசித்தேனே, ஓய்வின்றியே தேடினேனே, என் ஆசைக்குத்தானே ஏற்பாகப்பட்ட நீ என்னை மனுஷரிடையில் நின்று எடுத்து என் குருச்சுவாமிக்குத்தானே கையளிப்பாயாக. இப்படியே உன்னால் மீட்கப்பட்ட என்னை உன்னாற்றானே ஆண்டவர் கையேற்றுக்கொள்வாராக என்று இப்படிப்பட்ட ஸ்தோத்திரம் சொல்லிச் சிலுவையிலே அறையப்பட்டார். ஆனால் இரண்டு நாள் உயிரோடே சிலுவையிலிருந்து கூடின அநேகமாயிரம் சனங்களுக்கு ஓய்வில்லாமல் சுகிர்த வாக்கைப் பிரசங்கித்து, அந்தச் சிலுவை வாதை நீக்கத் தெண்டித்த சனங்களையும் வேண்டாம் என்று விலக்கித் தம்முடைய ஆத்துமத்தைக் கையேற்கச் சர்வேசுரனைப் பிரார்த்தித்தவுடனே ஆகாசத்தில் நின்று சோதிமயமான ஒளிவு வந்து சரீரத்தை மூடி ஆத்துமம் மோக்ஷகரை சேர்க்கப்பட்டது. இந்தப் பிரகாரமாய்க் கிறீஸ்துவேதத்துக்காகப் பாடுபட்டுப் பிராணனைக் கொடுத்து வேதசாட்சியாய் மோக்ஷமுடி அடைந்த அந்திரே அப்போஸ்தலுவின் சுகிர்தங்களை நாங்கள் எவ்வளவாகிலும் அனுசரித்து அவர் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.



## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, முத்திப்பேறுபெற்ற அந்திரே அப்போஸ்தலர் தேவரீருடைய திருவேதத்தைப் பிரசங்கிக்கிறவராயும் திருச்சபையை நடப்பிக்கிறவராயும் இருந்ததுபோல எங்களுக்காக என்றென்றும் தேவரீர் சமுகத்திலே மனுப்பேசுகிறவராயும் இருக்கக் கிருபைபண்ணவேணுமென்று உமது தேவ மகத்துவத்தைப் பிரார்த்திக்கிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாதம் மூன்றாந் திகதி
# சிந்து இராச்சியத்தின் அப்போஸ்தலுவும்
# மகா தேவ தாசனுமான ஆராதிஷ்ட
# பிறஞ்சீஸ்கு சவேரி முனீந்திரன்
# திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மாற்கு பதினாறாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது : நீங்கள் உலகமெங்கும் போய், எல்லாச் சிருட்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சண்யமடைவான், விசுவசியாதவனோ ஆக்கினைத்தீர்வையிடப்படுவான். மேலும் விசுவசிக்கிறவர்களைத் தொடர்ந்து வரும் அற்புதங்களாவன : என் நாமத்தினால் பேய்களைத் துரத்துவார்கள். நூதனமான பாஷைகளைப் பேசுவார்கள். பாம்புகளைப் பிடித்துத் தூக்குவார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைப் பானம் செய்தாலும், அது அவர்களுக்குப் பொல்லாப்புச் செய்யாது. நோயாளிகளின்மேல் கைகளை நீட்ட, அவர்கள் சௌக்கியமடைவார்கள் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின் அபிப்பிராயம் ஏதென்றால் : நீங்கள் உலோகம் எங்கும் போய்ச் சகல சனங்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவீர்களாக என்ற வாக்கியத்தினால், ஆண்டவர் அப்போஸ்தலுமாருக்கும் குருமாருக்கும் தம்முடைய சகல கட்டளைகளைப் பிரசித்தம் பண்ணவும் படிப்பிக்கவும் கொடுத்த கற்பனை என்று அறியவும். அந்த வாக்கியத்தில் சகல சனங்களுக்கும் உபதேசிக்கச் சொன்னதினால் பெரியோர், சிறியோர், கீழ்சாதி, மேல்சாதி முதலான சகல மனுஷரும் யாதொரு பேதகமின்றித் தம்முடைய நேசத்துக்கும் பரலோக பாக்கியத்துக்கும் உரித்தாளிகள் என்று காண்பிக்கச் செய்தார். அத்தால் இந்த உலோகத்திலே கெறுவமுள்ள மானிடர் ஒரு தாய் தந்தைகளால் பிறந்தது என்று யோசியாமல் பெருமை மகிமை பாராட்டி ஆத்தும சகோதரரை நிசிதர் என்று எண்ணுகிறது எத்தனை துரோகம் என்று அவதானிக்கக்கடவார்கள். விசுவசித்து ஸ்நாபிக்கப்பட்டவன் பரகதி அடைவான், விசுவசியாதவன் நரகப்பிராத்தி ஆவான் என்ற வாக்கியத்தால் கிறீஸ்துநாதர் போதித்த வேதமும், அதின் கற்பனைகளின் செலுத்துதலும் பிரசாத ஸ்நானமும் சகலருடைய ஈடேற்றத்துக்குத் தேவையான கருமம் என்றும் அதின்றியே வேறு எப்படிக்கொத்த புண்ணிய கிரியைகளைச் செய்கிலும் நரகத்தால்



விலகக்கூடாது என்றும் காண்பித்தார். விசுவாசிகளுக்கு அனுசரணமான இலக்ஷணமாவது நமது நாமத்தால் பேய்ச்சன்னதம் அகற்றுவார்கள், நூதன வாக்கு உரைப்பார்கள், சற்ப விஷம் நீக்குவார்கள், சிவவினையபானங் கொள்ளுகினும் தீங்கின்றியிருப்பார்கள், நோயாளரைக் கைநீட்டிக் குணமாக்குவார்கள் என்ற வாக்கியத்தின் விபரம் ஏதென்றால், தம்முடைய வேதத்தை விசுவசித்துப் பிரசாத ஸ்நானத்தால் அதில் உட்படுகிறவர்களைக்கொண்டு அவ்வித ஆச்சரியங்களைச் செய்து தமது வல்லமையையும் வேதத்தின் உண்மையையுங் காண்பிப்பார் என்ற அபிப்பிராயமாம். அப்படியே ஆதி திருச்சபையிலே கிறீஸ்துநாதரை விசுவசித்துப் பிரசாத ஸ்நானம் பெற்று முழுமனதோடு சர்வேசுரனுக்குப் பண்செய்தவர்கள் அநேகம் பேர் வியாதிக்காரரைச் சுகமாக்கவும், பல பாஷைகளாற் பேசவும், பிசாசுகளைத் துரத்தவும் வரம் அடைந்து அந்தந்த அதிசயங்களைப் பலமுறையும் செய்தவர்கள் என்று அறியவும்.

ஆனால் இக்காலத்தில் அந்த ஆச்சரியங்கள் சம்பவியாததுஏது என்று கேட்கில், நவமாய் உண்டாக்கப்பட்ட இளங்கன்றுகள் வேரூன்றுந்தனையும் தண்ணீர் பாய்ச்சல் பண்ணுகிற மேரையாய் வேதவாக்கியத்தை நம்பினவர்களுடைய இருதயம் தேவ விசுவாசத்திலே உறுதியாகும்படி அப்படிக்கொத்த ஆச்சரியங்களைக் காண்பிக்க வரப்பிரசாதம் கொடுத்தது என்றும், மரம் வேரூன்றி வளர்ந்ததின்பின் தண்ணீர் இறைத்தலை விடுகிறதுபோல இப்போது திருச்சபை சகல திக்கிலும் நிலைகொண்டிருக்கிறதினால் அவ்வித புதுமைகள் சம்பவிக்கத் தேவையில்லை என்றும் அறியவும். ஆனால் இப்போது சர்வேசுரன் பேரில் முழு விசுவாச பத்தியுள்ளவர்கள் அந்த அற்புதங்கள் செய்வார்களோ என்று கேட்கில், சர்வேசுரனுடைய புகழ்ச்சிக்கும் புறத்தியானுடைய ஆத்தும ஈடேற்றத்துக்கும் தேவையான சமயத்திலே தருமவாளரான பேர்களால் செய்யப்படும் என்று அறியவும்.

அதல்லாமல் ஞானவிதமாய் அந்த அடையாளங்கள் எவ்வேளையும் சம்பவிக்கிற மேரையாவது : ஒருவனுடைய மனதின் பாவங்களை விலக்குகிறவர்கள் பிசாசுகளைத் துரத்துகிறவர்களாவார்கள். உலகத்தின் துஷ்ட அதரும அளப்புக்களைவிட்டு ஞானப்பேச்சுகளைப் பேசுகிறவர்கள், நூதன பாஷைகளைப் பேசுகிறவர்களாவார்கள். தன்னுடைய சுகிர்த சித்த விமரிசையால் பிறருடைய மனதின் துஷ்டாட்டத்தை அகற்றுகிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள், சற்ப விஷம் நீக்குகிறவர்களாவார்கள். பிறர் படிப்பிக்கிற துர்க்குண படிப்பனையினால் பாவத்துக்கு ஏதுவாகாதவர்கள், விஷந் தீண்டிச் சாவின்றி இருக்கிறவர்களாவார்கள். தங்கள் சுகிர்த பாவனையினால் மற்றவர்களுடைய மனதில் சுகிர்த சிந்தை எழுப்புகிறவர்கள், கர நியாசத்தால் வியாதிக்காரரைக் குணமாக்குகிறவர்களாவார்கள். இப்படிப்பட்ட கிரியைகள் ஆத்துமம் ஈடேறுகிற ஞான ஆச்சரியங்களாயிருக்கிறதினால், சரீரத்துக்குச் செய்கிற உபகாரத்திலும் அதிக உச்சிதமுண்டாம். அதினால் இவ்வித கிருத்தியமுள்ளவன் உண்மையான விசுவாசமுள்ளவனாவான் என்று காண்பித்தருளினார்.

ஆகையால் இப்படிக்கொத்த தர்ம போதகங்களைக் கேட்கிற சமஸ்தரும் தங்கள் சுகிர்த பாவனையினால் தங்களுடைய ஆத்துமங்களையும் பிறர் ஆத்துமங்களையும் ஈடேற்றத்தக்கதாகப் பிரயாசப்படக்கடவார்கள். அப்படியே செய்கிறதற்கு அவனவன் மனதில் சுறுசுறுப்புண்டாயிருக்கும்படி இந்த உற்சவத்துக்குக் காரணமான பிறஞ்சீஸ்கு சவேரி முனீந்திரன் தம்முடையவும் பிறருடையவும் ஈடேற்றத்துக்காகப் பட்ட பிரயாசத்தைச் சுருக்கமாய்ப் பார்க்கிறது உச்சிதமாம். அது எப்படியென்றால், பிறஞ்சீஸ்கு சவேரி முனீந்திரன் பம்பேலூன என்ற இராச்சியத்திலே சவேரி என்ற துருக்கத்தில் வங்கிஷபதிகளான பிதா மாதாக்களால் பிறந்தார். பிராஞ்சு இராச்சியத்தின் பரீசு என்கிற நகரிக்குக் கல்வி சாஸ்திரம் படிக்கிறதற்குப் போய்க் குறையற்ற பிரகாரம் படித்தபின், பட்ட ஆசாரியர் உத்தியோகத்தைப் பெற்று அந்தக் கல்வி சாஸ்திரங்களைப் படிப்பித்திருந்தார். அப்போது ஆராதிஷ்ட இன்னாசி முனீந்திரனுடைய தரும உபதேசங்களால் இவ்வுலோகத்தில் சகல வெகுமான செல்வ பாக்கியங்களை விட்டு வெறுத்துத் தரும சீவியத்துக்கு முழுமனதோடு திரும்பிப் பற்பல தரும அப்பியாசங்களினால் தேவ பயபத்தியில் மாத்திரம் வளர மகா ஆவலோடு தேடினார். அதினால் தமது சரீரத்தைப் பிடிக்கத்தக்கதாகக் கோதுமை அப்பம், முந்திரிகைப்பானம், மாங்கிஷம் முதலான சுவையுள்ள ஒசீவனங்களை விலக்கி நிசிதமான போசனங்களோடு நாட்கழித்ததுமல்லாமல் இரண்டு மூன்று நாள் வரையும் யாதொன்றும் புசியாமல் நிராகரமாயிருப்பார். உதிரம் சிந்துந்தனையும் இருப்புச் சங்கிலிகளால் சரீரத்தை வாதித்து நித்திரை ஒறுத்துத் தியானத்தில் மூழ்கிச் சரீரத்தின் இடும்பை மட்டுப்படுத்தத் தெண்டிப்பார். இவ்வித சுகிர்த கிரியைகளினால் ஞான சீவியத்தில்



அதிகமாய்த் தெளிந்து சர்வேசுரனால் விசேஷமான உபகாரங்களைப் பெற்றது எப்படியென்றால், அநேகந்தரம் தியானம்பண்ணும்போதும், பூசைபண்ணும்போதும் பூமியால் எடுபட்டு அந்தரமாய் உயர்த்தப்படுவார். இப்பிரகாரமாய்ச் சுகிர்த சீவியத்தில் சம்பன்னம் அடைந்ததின்பின் தருமிஷ்ட இன்னாசி முனீந்திரனுடைய கட்டளைப்படி ஈந்திய திக்குக்கு அப்போஸ்தலுவாகவும் திருச்சபையின் சிரேஷ்ட குருப்பிரசாதியாகிய அர்ச். பாப்பானவரின் ஸ்தானியாகவும் ஏற்பட்டுப் பெந்து, சென்ம ஊர் முதலான சகலத்தையும் கைவிட்டு மகா எளிய பாவனையோடு ஈந்திய திக்குக்கு வந்து பிறருடைய ஆத்துமத்தை ஈடேற்றப் பட்ட பிரயாசம் ஏதோவென்றால், முப்பத்து மூவாயிரம் காதவழி வெறுங்காலாக நடந்து கணக்கற்ற துஷ்ட மறு சமய வாதிகளையும் பாவிகளையும் தேவ வேதத்துக்கும், சுகிர்த வழிக்கும் திருப்பினதுமல்லாமல், முடிதரித்து அரசாண்டிருந்த ஏழு இராசாக்களையும் அவர்களுடைய இராச்சியங்களையும் தேவ வேதத்துக்கு உட்படுத்தினார். தர்மசாலைகளில் வியாதிக்காரருக்குப் பணிசெய்து அவர்களுடைய அருவருப்பான புண்களை அதிக மனப்பிரியத்தோடு பரிகரித்ததுமல்லாமல் நாவாலும் நக்கிச் சுகமாக்கினார். இப்பிரகாரமாய்ச் சொல்லில் அடங்காத விதமாய்ச் சர்வேசுரனுக்காகச் செய்த பிரயாசங்கள் தமக்கு எத்தனை அதிக பிரியமாய் இருந்தது என்று காண்பிக்கத்தக்கதாகச் சர்வேசுரன் மகா ஆச்சரியங்களைச் செய்ய அவருக்கு வரங் கொடுத்தருளினார். அப்படியே செய்த எண்ணிறந்த புதுமைகளுக்குள்ளே விசேஷமான அற்புதங்களாவது: ஒரு உருவில் கடல் யாத்திரையாய்ப் போன ஐஞ்ஞூறு பேர் தண்ணீர்த் தாகம் பொறுக்க மாட்டாமல் மரண அவஸ்தையாயிருந்தபோது அவர்களுக்குத் தேவையானமட்டும் சமுத்திர சலத்திலே உப்பின் இரசத்தை மாற்றி மதுரமாக்கிக் கொடுத்துச் சம்பூரணமாக்கினார். இதல்லாமல் மரணித்த அநேகரை உயிர்ப்பித்தார். அவர்களுக்குள்ளே ஒரு தினத்துக்கு முன் அடக்கப்பட்டிருந்த ஒருவனைக் குழியால் எடுத்து உத்தானமாக்கினார். இன்னமும் இரண்டு பேரை அடக்கக் கொண்டுபோகிற சமயத்திலே அவர்களுடைய கையைப் பிடித்து உயிர்ப்பித்து அவர்களுடைய பிதா மாதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். இப்படியே பத்தரை வருஷம் அப்போஸ்தலு உத்தியோகத்தின் பிரயாசங்களில் செலவழித்தபின் சுகிர்த கிரியைகளால் நிறைந்த அவர் ஆத்துமத்துக்கு நித்திய ஆறுதல் கொடுத்தருளச் சர்வேசுரன் கருணையாகி அவருடைய மரணம் முடுகினதை அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு இந்தச் சுகிர்த ஆத்துமாவானவர் இவ்வளவு காலம் செய்த புண்ணிய தருமங்கள் போதாதாகவும், சரீரத்திற்பட்ட வியாதியின் கொடுமையைப் பாராமலும், பதினொரு நாள் தேவ நேச அதிகத்தோடு மரணிக்க ஆயத்தம் பண்ணினதின் பின் மார்கழி மாதம் மூன்றாந் திகதி வெள்ளிக்கிழமை பரலோக நித்திய செல்வ பாக்கியத்தை அடைந்தார். மரணித்ததின் பின் அவருடைய வேண்டுதல் உதவியால் அநேக ஆச்சரியங்கள் சம்பவித்ததுமல்லாமல் அவருடைய திருச் சரீரம் அழியாமல் சீவித்திருக்குமாப்போல் கோவைப் பட்டணத்திலே யேசு கூட்டத்தின் தேவாலயத்தில் அதிக ஆசார மகிமையோடு ஒரு சிங்காசனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இப் பிரகாரமாய்ச் சர்வேசுரன் உலோகம் எங்கும் சுவிசேஷத்தை உபதேசிக்கக் கொடுத்த பரிசாரகத்தின் உத்தியோகக் கட்டளையை இந்தத் தரும ஆத்துமாவானவர் செலுத்தின விதமும் சர்வேசுரனுக்காகப் பிரயாசப்பட்ட மேரையும், நாங்கள் அவதானித்து அவருடைய சுகிர்த கிரியைகளை அனுசரித்து எங்கள் மனசால் சகல துஷ்ட ஆசைகளை அகற்றிச் சர்வேசுரனை ஸ்துதித்து, அவருடைய இந்தத் தாசன் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ! முத்திப்பேறுபெற்ற பிராஞ்சீஸ்குவுடைய ஞானப்போதகத்தினாலேயும் அற்புதங்களினாலேயும் சிந்து தேசத்திலுள்ள சனங்களைத் தேவரீருடைய திருச்சபையிலே அழைத்து உட்படுத்தச் சித்தமானீரே. அவருடைய புண்ணிய பலன்களைக் கொண்டாடுகிற நாங்கள் அவருடைய சுகிர்த மாதிரிகைகளையும் அநுசரிக்க அநுக்கிரகம் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## மார்கழி மாதம் நாலாந் திகதி கன்னியாஸ்திரீயும் வேதசாட்சியுமாகிய ஆராதிஷ்ட பார்பரு அம்மாளின் திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு இருபத்தைஞ்சாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு உவமையாகத் திருவுளம்பற்றினதாவது: மோட்ச இராச்சியமானது தீபங்களைக் கையிலே எடுத்துக்கொண்டு, மணவாளனையும், மணவாளியையும் எதிர்கொள்ளப்போன பத்துக் கன்னியர்களுக்கு ஒப்பாயிருக்கும். எப்படியெனில், அவர்களில் ஐந்து பேர் மதியீனரும், ஐந்து பேர் விவேகிகளுமாயிருந்தார்கள். ஆனால் ஐந்து மதியீனர்களும் தீபங்களை எடுத்துக்கொள்ளும்போது தங்களோடு எண்ணெயையும் எடுத்துக்கொள்ளவில்லை. விவேகிகளோவென்றால், தீபங்களோடு தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் எடுத்துக்கொண்டு போனார்கள். மணவாளன் வரத் தாமதித்தபோது, எல்லாரும் தூங்கி விழுந்து நித்திரைபண்ணினார்கள். நடுச் சாமத்திலே: இதோ மணவாளன் வருகிறார்; அவருக்கு எதிர்கொண்டு போங்களென்று சத்தமுண்டாயிற்று. உடனே அந்தக் கன்னியர்களெல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீபங்களைத் தயார்பண்ணினார்கள். அப்போது மதியீனர் விவேகிகளை நோக்கி: எங்கள் தீபங்கள் அவிந்துபோகிறது. உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சந் தாருங்கள் என்றார்கள். அதற்கு விவேகிகள் மறுமொழியாக: ஒருவேளை உங்களுக்கும் எங்களுக்கும் பற்றாமல் போகும். ஆதலால் நீங்கள் விற்கிறவர்களிடத்திலே போய், உங்களுக்கு வேண்டியதை வாங்கிக்கொள்ளுங்கள். அதுவே தாவிளை என்றார்கள். அப்படியே அவர்கள் வாங்கப்போன சமயத்தில், மணவாளன் வந்தார். அப்போது தயாராயிருந்தவர்கள் அவரோடு மணவறைக்குள் பிரவேசிக்கவே கதவு அடைக்கப்பட்டது. கடைசியாய் மற்றக் கன்னிகைகளும் வந்து, ஆண்டவரே! ஆண்டவரே! எங்களுக்குத் திறந்தருளுமென்று பிரார்த்திக்க, அவர் மறுமொழியாக: உங்களை அறியேனென்று உண்மையாகவே சொல்லுகிறேன் என்றார். ஆகையால் விழிப்பாயிருங்கள். ஏனெனில் நாளும் நாழிகையும் உங்களுக்குத் தெரியாது என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தில் நம்முடைய நாயன் யேசுக்கிறீஸ்து வான இராச்சியம் பத்துக் கன்னியர்களுக்குச் சமானமாயிருக்கும் என்று வசனித்த உவமையின் அபிப்பிராயம் ஏதென்றால் பத்துக் கன்னியர்களாவது சத்தியவேத பத்துக் கற்பனையை அனுசரிக்கிற சமஸ்தருமாம். அவர்களில் எண்ணெயும், விளக்கும் கொண்டிருந்த புத்திசாலிகள் அஞ்சு பேர்களோ என்றால், விசுவாசமும் கிரியையுமுள்ளவர்களாம். எண்ணெயில்லாமல் விளக்கு மாத்திரம் உள்ளவர்களாவது நற்கிரியை இல்லாமல் விசுவாசம் மாத்திரமுள்ளவர்களாம். ஆனால் நடுச் சாமத்தில் இதோ மணவாளன் வருகிறான், அவனுக்கு எதிர்ப்படுங்கள் என்ற அபயச்சத்தம் கேட்கப்பட்டதற்கு ஞான உற்பனம் ஏதென்றால், உடலை விட்டு ஆத்துமம் பிரிகிற நிமிஷமும், நடு இடையில் கிறீஸ்துநாதர் நடுத்தீர்க்க எழுந்தருளுகிற நேரமுமாம். அப்போது அந்தக் கன்னியர்கள் யாவரும் எழுந்திருந்து தங்கள் விளக்குகளைக் கொளுத்தினார்கள் என்ற வாக்கியத்தின் பொருள் ஏதென்றால்; நடுத்தீர்வை நாளையில் நல்லோர் தீயோர் யாவரும் எழுந்திருப்

பார்கள் என்றும், நற்கிரியை செய்தவர்கள் நித்திய சீவியத்தை அடைவார்கள் என்றும், துர்க்கிரியை செய்தவர்கள் நரக ஆக்கினைக்கு ஏதுவாவார்கள் என்றும் விபரமாம். எங்கள் விளக்குகள் நூர்ந்து போகிறதினால் உங்கள் எண்ணெயில் எங்களுக்குந் தாருங்கள் என்று புத்தியீனக் கன்னியர்கள் கேட்டதற்கு விபரம் ஏதென்றால், விசுவாசம் இல்லாதவர்களுடைய கிரியைகள் மனுஷர் முன்பதாக வெளிச்சமுள்ளதாய்க் காணப்பட்டாலும் சர்வேசுரனுடைய சந்நிதியில் அந்தகாரமாயிருக்கும். அல்லாமலும் அவரால் யாதொரு வரமும் கிடைக்கக்கூடியதல்ல. ஏனென்றால் அப்படிப்பட்டவர்கள் விசுவாசமில்லாமல் கிரியை மாத்திரஞ் செய்து மனுஷ வாழ்த்துதலை அடைந்தார்கள். ஆயத்தமாயிருந்தவர்கள் மணவாளனோடு விவாக வீட்டுக்குட் பிரவேசிக்கக் கதவு அடைபட்டது என்றதற்கு அர்த்தமோ என்றால், நெருக்கமான வழியால் நடந்து விசுவாசத்துடனே நற்கிரியை செய்தவர்கள் மோக்ஷ இராச்சியத்துக் குட்படுவார்கள் என்றும் விசுவாசமில்லாத அக்கியானிகளுக்கும், நற்கிரியை இல்லாத பாவிகளுக்கும் மோக்ஷவாசல் அடைபடும் என்ற விபரமாம். சற்றிலே அந்தக் கன்னியர்கள் வந்து சுவாமீ! சுவாமீ! எங்களுக்கும் திறவும் என்றும், சத்திய பிரமாணமாய் உங்களை அறியேன் என்றும் சொல்லுகிறேன் என்று வசனித்ததற்கு ஞான உற்பனம் ஏதென்றால், நடுத்தீர்வை நாளையில் துர்ச்சன பாவிகள் ஆண்டவரிடத்தில் எவ்வளவு மன்றாடிப் பொறுதி கேட்டாலும் மறுபடி பச்சாத்தாபக் கிரியைகள் செய்து பாவவிமோசனத்தைப் பெற்றுக் கொள்ளத் தெண்டித்தாலும் கிடைக்கக்கூடியதாயிராது என்று அறியவேண்டியது.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியம் கன்னியாஸ்திரீயான ஆராதிஷ்ட பார்பருவின் திருநாளில் வாசிக்கப்படுகிறதினால் அவருடைய சுகிர்த கிரியைகள் இன்று வாழ்த்தப்படுகிறது உச்சிதமாம். அது எப்படியென்றால் அர்ச்சியசிஷ்ட பார்பரு கன்னியாஸ்திரீ நிகோமென் என்ற நகரியில் தியோஸ்குரு என்ற அக்கியானப் பிதாவால் பிறந்தார். இஸ்பிரீத்து சாந்து பிரசாதம் அவர் மனதில் புகுந்து சர்வேசுரன் பேரிலும் தேவபத்தியிலும் மனம் உறுதியாகப்பட்டது. சரீர உருபலாவர்ண்ணியத்தால் அலங்கார சவுந்தரியமானவராய் அவ்வூரிலுள்ள சமஸ்த ஸ்திரீகளில் அதிக பேர்பெற்றவளானார். ஆனதினால் வாலிபருடைய கண்ணோக்கத்தால் தான் விலகும்படியாகத் தம்முடைய பிதாவால் உப்பரிகை ஒன்று செய்வித்து அதில் இரண்டு வாசல்மட்டும் வைத்துச் சகல சுக செல்வத்



தோடு அதிலிருத்தப்பட்டார். ஆனால் அர்ச்சியசிஷ்ட பார்பரு கன்னியாஸ்திரீ அவ்விடத்தில் செப தியானத்தால் மனந் தெளிந்து ஒரே சர்வேசுரனைத் தமது பிரிய பத்தாவாகத் தெரிந்துகொண்டதினால் அவருக்கு மாத்திரம் பத்தினியாயிருக்க மனமொருமித்தார். அநேகந்தரம் பிதாவால் ஐசுவரியவான்களுக்கு விவாகபந்தனமாய்க் கொடுக்க யோசித்தவிடத்திலே அதை அவர் வெறுத்து அரோசகம் பண்ணினார். பிதா தூரப் பயணம்போனசமயத்தில் தமது மனதினுட் புகுந்த இஸ்பிரீத்து சாந்து வேகத்தால் சர்வேசுரனை அறிய மனந்தெளிந்து தாமிருக்கிற மாளிகையிலிருந்த இரண்டு வாசல் தவிர இன்னும் ஒரு வாசல் செய்வித்து அந்த மூன்று வாசலும் பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து மூவரும் ஒரே சர்வேசுரன் என்ற அபிரகசியத்தின் குறிப்பாக வைத்தார். பிதா திரும்பிவந்து இதைக் கண்டு ஏது நிமித்தமாக இவ்விதம் செய்தாய் என்று மகளிடத்தில் விசாரித்தபோது, பிதா, சுதன், இஸ்பிரீத்து சாந்து மூவரும் ஒரே சர்வேசுரனானபடியால் அதின் குறிப்பாக மூன்று வாசல் செய்வித்தேன் என்று சொன்னார். அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுக் குரோதத்தால் முனிந்து வாளை உருவி அவரைக் கொல்லப்போனவிடத்தில் சர்வேசுரன் அவன் கையால் தப்புவித்துக்கொள்ளக் கருணையாகி வழிகாட்டினார். மீளவும் அந்தத் துஷ்ட பிதாவின் கையில் அகப்பட்டு அவரை ஆக்கினைபண்ண மார்சியானு என்ற நடுவனுக்குக் கையளித்தான். நடுவன் கன்னியாஸ்திரீயை வேத உறுதியை விட்டுத் திருப்பிக்கொள்ள அநேகம் ஆதரவான வார்த்தைகளைச் சொல்லி ஏலாதவிடத்தில் பலவிதமான கஸ்தி வாதைகளைப் பண்ணிச் சிறைப்படுத்தினான். அன்றிராத்திரி சிறைச்சாலையில் ஒரு பிரகாசம் உண்டாய் அந்தப் பிரகாசத்தின் நடுவில் கிறீஸ்துநாதர் கன்னியாஸ்திரீயான அர்ச்சியசிஷ்ட பார்பருவுக்குத் தோன்றி ஆறுதல் பண்ணித் தாமரை மலரையொத்த புத்திரியே நீ சிற்ப காலத்தின் வாதையினால் அடையப்போகிற அளவற்ற ஆனந்தத்தை நினைத்துத் துஷ்டன் செய்கிற சகல வாதை நிர்ப்பந்தங்களுக்குப் பயப்படாதிருப்பாயாக. உன் பேரில் நான் கருணையாயிருந்து உன் காயங்களைச் சுகப்படுத்துவேன் என்று வசனித்த அக்ஷணத்திற்றானே சகல காயங்களும் சுகமாக்கப்பட்டது. இவ்விதமான அற்புதங்களைச் சுலியானா என்ற ஒரு ஸ்திரீ கண்டு ஆச்சரியப்பட்டுச் சத்தியவேதத்துக்குத் திரும்பி அப்படியே தானும் தேவ வேதத்துக்காக ஆக்கினைப்பட ஒருமித்தாள். விடிந்த உடனே மீளவும் நடுவன் கன்னியாஸ்திரீயைத் தன் முன்பாக அழைப்பித்துக் காயங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் குணப்பட்டிருக்கிறதைக் கண்டு எங்கள் தெய்வங்கள் உனக்கு இத்தனை கருணையாய் உன் காயங்களைக் குணமாக்கினபோதே இன்னம் அவர்களை வணங்காம லிருக்கிறாயோ என்று கேட்டதற்குக் கன்னியாஸ்திரீ அந்தத் தெய்வங்கள் தங்களுடைய பிராணனைக் கரையேற்றிக் கொள்ளக்கூடாமல் மரணித்தபோதே என் காயத்தைக் குணமாக்குவது எப்படி? என் அங்கத்தை உண்டாக்கிக்கொடுத்த யேசுநாதர் என்னைக் குணமாக்கினார் என்று சொன்னவிடத்திலே நடுவன் கோபத்தால் எரிந்து கன்னியாஸ்திரீயைத் தலைகீழாய்த் தூக்கி முதுகுப்புறத்தைப் பந்தங்களால் சுட்டுச் சிரசில் அடிக்கச் சொன்னான். அப்படியே வாதிக்கிறபோது கன்னியாஸ்திரீ சர்வேசுரனைப் பார்த்துப் பிரார்த்தித்ததின்பின் நடுவனைப்பார்த்து: நீ என்னைச் சுடுகிற இந்த நெருப்பு எனக்கு நெருப்புப்போலாகாமல் குளிர்ந்த தண்ணீர்போலிருக்கிறது என்று சொன்னவிடத்தில் அவளுடைய ஸ்தானங்கள் இரண்டையும் வெட்டிப்போட்டு நிருவாணத்தோடு நாலு தெருக்களிலும் சுற்றுவிக்கச் சொன்னான். அப்போது கன்னியாஸ்திரீ சர்வேசுரனைப் பார்த்து: ஆண்டவரே! மேகத்தால் ஆகாசத்தை மறைக்கிற தேவரீர் எனது நிருவாணத்தை மறையப்பண்ணும் என்று மன்றாடினவிடத்தில் ஒரு தேவதூதன் இறங்கிவந்து அவள் காயங்களைக் குணப்படுத்தி ஒளிவுள்ள வெள்ளைத் துகிலால் சரீரத்தை மூடினான். அதைக் கண்டு நடுவன் அவள் சிரசைச் சீக்கிரம் வெட்டச் சொல்ல அவளுடைய துஷ்ட பிதாத்தானே கொலைச் சேவகனாகி அவளைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோனான். அவ்விடத்தில் சென்றவுடனே அர்ச்சியசிஷ்ட கன்னியாஸ்திரீ முழந்தாளிட்டுச் சர்வேசுரனைப் பிரார்த்தித்துத் தலைசாய்த்தபோது தனக்குக் கொலைச் சேவகனாயிருந்த தன்னுடைய துஷ்ட பிதாவாற்றானே சிரம் தறிபட உடலை விட்டு ஆத்துமம் பிரிந்து தான் அனுசரித்த சர்வேசுரனைக் கண்டு மோக்ஷ பாக்கியத்தை அடைந்தார். அதின்பின் அந்தத் துஷ்ட பிதாவின் கொடுமைக்காகச் சர்வேசுரன் ஆக்கினை கொடுக்கச் சித்தமாகி ஆகாசத்தால் ஒரு தீச்சுவாலை அவன்மேல் விழுந்து எரிந்து அவனை நீறாக்கி அந்தச் சாம்பலும் காணாதேபோனது. பிராண பரித்தியாகியுடைய சுத்தமான சிரத்தை மகா ஆசார வணக்கத்துடனே கொண்டுபோய்ச் சுத்தவாளருடைய திருச்சரீரங்கள் வைக்கப்பட்டிருக்கிற அதி பூச்சியமான ஸ்தலத்தில் ஸ்தாபித்துத், திருச்சரீரம் சுகந்த தயிலத்தால் அபிஷேகம் பண்ணி அடக்கப்பட்டது. சர்வேசுரன் இந்தக் கன்னியாஸ்திரீபோல் அநேகம் அற்புதங்களைக்



காண்பித்து விசேஷமாய் இடிமுழக்கங்களுக்கு இவருடைய உதவி பிரசித்தமாகப்பட்டது.

இந்தடைவாகப் பத்தியுள்ள கன்னியாஸ்திரீகள் எண்ணெய் கொண்டு விளக்குக்கொளுத்தி மணவாளனுடைய தெரிசனத்தை அடையப் பேறுபெற்றதுபோல் அர்ச்சியசிஷ்ட பார்பறு கன்னியாஸ்திரீ விளக்கும் எண்ணெயும் என்ற விசுவாசத்தோடும், நற்கிருத்தியத்தோடும் சீவித்து மண அறை என்கிற மோக்ஷ இராச்சியத்தில் உட்பிரவேசித்துத் திவ்விய மணவாளனாகிய கிறீஸ்துநாதருடைய தெரிசனத்தை அடைந்தார். ஆனதினால் நாங்களும் வேதாகமத்துக்கு அடுத்த கற்பனைகளைக் குறையற்ற பிரகாரமாய்ச் செலுத்தி அர்ச். பார்பறு பேரில் பயபத்தியோடிருந்து அவருடைய சுகிர்த கிரியைகளை அனுசரித்து அவர் அடைந்த மோக்ஷ பாக்கியத்தை அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் பெலன் குறைந்தவர்களான பெண்பாலாரும் வேதசாட்சி மரணமாகிய வெற்றியை அடையும் வரத்தை அருளி உமது அனந்த வல்லமையின் ஆச்சரியங்களுள் இதுவுமொன்றாய் விளங்கச் செய்தீரே. உம்முடைய வேதசாட்சியும் கன்னிகையுமான முத்திப்பேறுபெற்ற பார்பறம்மாளின் ஜனன தினத்தைக் கொண்டாடுகிற நாங்கள் அந்த அம்மாளின் முன்மாதிரிகையால் தேவரீரைத் தேடி நடந்துவர எங்களுக்குத் தயாபர இரக்கம் பண்ணியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

### மார்கழி மாதம் ஆறுந் திகதி

# ஆராதிஷ்ட நீக்கொலாவுமுனீந்திரன்

### திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு இருபத்தைஞ்சாம் அதிகாரத்திலே எழுதி வைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே யேசுநாதர் தமது சீஷர்களுக்கு உவமையாக இப்படியே மொழிந்தருளினார். ஒரு மனுஷன் தூரதேசத்துக்குப் பயணமாய்ப் புறப்பட்டபோது தனது ஊழியரை அழைத்துத் தன்னுடைய திரவியங்களை அவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தான். அவன் ஒருவனுக்கு ஐந்து தலேந்தும், வேறொருவனுக்கு இரண்டு தலேந்தும், இன்னொருவனுக்கு ஒன்றுமாக, அவனவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய சக்திக்குத் தக்கபடி கொடுத்து, உடனே பிரயாணமாய்ப் போனான். ஐந்து தலேந்தை வாங்கினவன் போய், அவைகளைக் கொண்டு உழைத்து, வேறு ஐந்தைச் சம்பாதித்தான். அவ்வண்ணமே இரண்டு தலேந்தை வாங்கினவனும் வேறு இரண்டைச் சம்பாதித்தான். ஒன்றை வாங்கினவனோ போய், பூமியைத் தோண்டித் தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்துவைத்தான். வெகுகாலத்துக்குப் பின் அந்த ஊழியருடைய எஜமான் வந்து, அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான். அப்பொழுது, ஐந்து தலேந்தைப் பெற்றுக்கொண்டவன் அணுகி வேறே ஐந்து தலேந்தை ஒப்புக்கொடுத்து: ஆண்டவனே! ஐந்து தலேந்தை என்வசத்தில் ஒப்புவித்தீரே, இதோ வேறைந்தை ஆதாயமாகச் சம்பாதித்தேன் என்றான். எஜமான் அவனைப் பார்த்து: சவ்வாஸ் நம்பிக்கையுள்ள நல்ல ஊழியனே! நீ சொற்பக் காரியங்களில் பிரமாணிக்கனாயிருந்ததினால், அநேக காரியங்களின்மேல் உன்னை அதிகாரியாக்குவேன். உன் எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி என்றான். அப்படியே இரண்டு தலேந்தை வாங்கினவனும் வந்து: ஆண்டவனே! என் வசத்தில் இரண்டு தலேந்தை ஒப்புவித்தீரே, இதோ வேறிரண்டைச் சம்பாதித்தேன் என்றான். எஜமான் அவனைப் பார்த்து: சவ்வாஸ், நம்பிக்கையுள்ள நல்ல ஊழியனே! நீ கொஞ்சத்தில் பிரமாணிக்கமுள்ளவனாயிருந்ததினால், அநேக காரியங்களின்மேல் உன்னை அதிகாரியாக ஸ்தாபிப்பேன். உன் எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசி என்றான்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின் அபிப்பிராயமோவென்றால், தூரதேசத்துக்குப் போகப் புறப்பட்ட மனுஷன் எங்கள் தேவ கர்த்தரான யேசுநாதரேயாம். சுவிசேஷ உவமையில் காணப்பட்ட நாயன் ஊழியரை அழைத்துத் தனது உரொக்கத்தைப் பகிர்ந்து கொடுத்தான் என்றதற்கு உற்பனமாவது: சர்வேசுரன் மனுஷனுக்குப் பகிர்ந்து கொடுக்கிற பலவித சுபாவ ஞான நன்மைகளுக்கும், ஞான வரப்பிரசாதங்களுக்கும் அடையாளமாம். அத்தால் சுவிசேஷத்தில் காணப்பட்ட அஞ்சு பொன்னின் விபரமாவது: திரவியம், வெகுமானம், ஞானம், பிரசாதம், ஆயுசு என்கிற இந்த அஞ்சு உபகாரங்களாம். இரு பொன்னாவது: திரவியமும், வெகுமானமுமாம். உவனவன் பெற்ற அளவுக்கு ஆதாயப்படுத்தினான் என்றதினால் திரவியம் அடைந்தவன் அத்தால் பிச்சைதானம் பண்ணவும், வெகுமானம் அடைந்தவன் கெம்பீரப்படாமல் தன் நீசத்தனத்தை அவதானித்துத் தன்னைத் தாழ்த்தவும், ஞானம் அடைந்தவன் அத்தைத் தியானத்தால் வளரப்பண்ணவும், வரப்பிரசாதத்தை அடைந்தவன் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரம் பண்ணவும், அதிக வயது அடைந்தவன் அத்தை வியர்த்தமாக்காமல் தேவ பணிவிடையில் செலவழிக்கவும் வேணுமென்ற விபரமாம்.



ஆனால் இந்த உற்சவத்துக்கு நீக்கொலாவு முனீந்திரன் காரணமானதினால் அவருடைய சுகிர்த சீவியத்தைக் காண்பித்தல் உசிதமாம். அது எப்படியென்றால், நீக்கொலாவு முனீந்திரன் லீசிய என்ற நகரியிலே பத்தார என்ற பேர்போந்த ஸ்தலத்தில் எப்பிப்பானியு, யுவானாயி என்ற சங்கை மகிமை போந்த தாய் தந்தையர்களால் பிறந்தார். அவருடைய சுகிர்த நெறியும், சுத்தமும் எவ்வளவு பெரிதாயிருக்குமென்று குழந்தையிற்றானே காணப்பட்டது. அது எப்படியென்றால் அவரை வளர்த்த தாயின் பாலை மற்ற நாட்களில் அடிக்கடி குடித்து வருவார். ஆனால் புதன்கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் ஒவ்வொரு முறை சாயங்காலத்தில் மாத்திரங் குடிப்பார். இந்த உபவாசத்தின் பழக்கத்தைச் சாகுந்தனையும் காத்துவந்தார். வாலிபனானபோது தாய், தந்தையை இழந்து அவர்களால் கிடைத்த ஐசுவரிய சம்பத்துகளைப் பிச்சைதானம் பண்ணிவருவார். அப்படியே அவர் செய்த தருமங்களில் அதிகமாய்க் கீர்த்திக்கப்பட்ட தருமமோவெனில், தமது தேசத்தின் ஓர் ஏழைத் துரைமகனுக்கு மூன்று குமாரிகள் இருந்தார்கள். அவர்கள் விவாக சம்பந்தம் பண்ணப் பக்குவமாயிருக்கச் செய்தே அவர்களைக் கட்டிக்கொடுக்கமாட்டாமல் அவர்களுடைய கற்பை விலைக் கிரயமாக்க நினைக்கிறதை நீக்கொலாவு முனீந்திரன் அறிந்து மூன்று முறை தமது பணத்தை அவன் வீட்டின் பலகணி வாசலாலே வீசி மூவரையும் பேர்புகழ்ந்தவர்களோடே விவாக சம்பந்தம் பண்ணிக் கொடுக்கச் செய்தார். இப்படிக்கொத்த தரும அப்பியாசங்களால் சர்வேசுரனுக்குத் தம்மைத்தாமே முழுதும் கையளித்தவிடத்திலே தேவநேசத்தின் வேகத்தால் சுத்தமான ஸ்தலங்களைத் தெரிசித்து ஆசரிக்கும்படி பலஸ்தீன் என்ற தேசத்துக்குப் பிரயாணமானார். இந்தப் பயணத்தில் ஓர் உருவில் ஏறி ஆகாசமும் கடலும் அமரிக்கையாயிருந்தாலும் பயங்கரமான புசல் அடிக்குமென்று கப்பல் ஓட்டிகளுக்கு அறிவித்தவுடனே புசலுண்டாய் எல்லோரும் மகா ஆபத்துப்பட்டிருக்கையில் நீக்கொலாவு முனீந்திரன் சர்வேசுரனை மன்றாட ஆச்சரியமான அமரிக்கை உண்டாயிற்று. இந்த அதிசயத்தைக் கண்டவர்கள் ஆச்சரியப்பட்டுக் காற்றும், கடலும் சொற்கீழ்ப்படிய இவர் எப்பிரகார மகிமையுள்ளவரோ என்று புகழுகிறதை நீக்கொலாவு முனீந்திரன் அறிந்து என்னைப் புகழாமல் இவ்விதமான ஆச்சரியத்துக்கு ஆதிகாரணமான சர்வேசுரனை வாழ்த்தக்கடவீர்கள் என்று தர்ம இஷ்டருக்குரிய தாழ்ச்சியைக் காண்பிக்கச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதின்பின் தம்மில்லத்துக்குத் திரும்பினவிடத்தில் யாவருக்கும் விசேஷமான சுகிர்த படிப்பனை காட்டத்தக்கதாகத் தேவ ஏவுதலால் மீரு பட்டணத்துக்கு வந்தபோது, அந்த நகரத்து மேற்றிராணியார் பிராணவியோகமானதினால் ஆரைத் தெரிவோமோ என்று சுற்றுக்கிராமத்திலிருந்த குருப்பிரசாதிகளோடு மந்திராலோசனை பண்ணிச் சர்வேசுரனை மன்றாடி நிற்கும்போது, நாளைக் காலமே எல்லாருக்கும் முதல் நீக்கொலாவு என்று பேர்ப்பட்ட ஒருவன் கோயிலுக்கு வருவான். அவனைத்தானே தெரியவேணும் என்று தேவ அருள் அடைந்தார்கள். அப்பிரகாரம் மற்றநாள் கோயில் வாசலிலே நீக்கொலாவு முனீந்திரனைக் கண்டு அனைவரும் ஒருமனதாய் மீரு பட்டணத்துக்கு மேற்றிராணியாராக அவரைத் தெரிந்தார்கள். அவர் அந்த உத்தியோகத்தைக் கையேற்காதபடிக்கு விலக நினைத்தாலும் தேவசித்தத்தை அறிந்து கைக்கொண்ட நாட் துவக்கமாய் முன்னிலும் அதிக தரும அப்பியாசங்களோடு தமக்கும் பிறருக்கும் உபகாரமாகச் சீவிக்க ஒருமித்தார். அத்தால் கன்னிசுத்தத்தைக் காத்ததிலும் கிறீஸ்தவர்களை ஆண்டு புத்தி போதகங்களால் நடப்பித்ததிலும் உதாரமான பிச்சை தானங்களைப் பண்ணினதிலும் இடைவிடாத செபத்திலும், கடின உபவாச ஒறுத்தலிலும் அதிசயமான விதமாய்ப் பிரசங்கம்பண்ணுகிறதிலும் தேவ நேச அக்கினியால் எரிந்தவருமாய் விதவைகளுக்கும் ஆறுதல் அற்றவர்களுக்கும் சகல வழி அற்றவர்களுக்கும் பணத்தினாலும் புத்திபோதகத்தாலும் உதவினதினால் அதிசயமான பிறர்நேச முள்ளவருமாயிருந்தார்.

அவருடைய தரும மகிமையையும் பிறர்நேச வேகத்தையும் காட்டும் சம்பவமாவது: கொன்ஸ்தந்தீனு அகுஸ்து இராயன் மூன்று சேனாபதிகள் பேரில் சொல்லப்பட்ட அசாத்தியமான முறைப்பாட்டை விசுவசித்து மூவரையுங் கொல்லத் தீர்வையிட்டபோது அவர்கள் அங்கலாய்த்து நீக்கொலாவு முனீந்திரனுடைய அற்புதங்களின் கீர்த்தியால் அவருடைய அனுக்கிரகத்தை மன்றாடினவிடத்தில் அவர் தூரத்தில் நின்று இராயனுக்குக் காணப்பட்டுப் பயமுறுத்தி மூவரையும் இரட்சித்தார். இதல்லாமல் அவர் தேவ வேதத்துக்காகப் பட்ட நெருக்கிடை எப்படியென்றால், கொடிய தீயோக்கிலேசியானும் மக்ஷிமியானும் என்ற இரு இராசாக்களுடைய கட்டளைக்கு விரோதமாய்ச் சத்திய விசுவாசத்தின் உண்மையை மீரு பட்டணத்தில் பிரசங்கித்ததினால் அந்த இராசாக்களுடைய முறைக் காவலான சேவகர் அவரைப் பிடித்து வெகுதூரம்



கொண்டுபோய் மறியலாக்கினவிடத்திலே இராசாவான கொன்ஸ்தந்தீனு சிங்காசனத்தில் ஏறுமட்டும் சிறைப்பட்டிருந்தார். இவர் இராச்சியபாரம் பண்ணிவருகையில் இவர் கட்டளைப்படிக்குச் சிறைச்சாலையால் மீட்கப்பட்டு மீரு பட்டணத்துக்குத் திரும்பினார். அதின்பின் நீசெய பட்டணத்தில் கூடின திருச்சபைச் சங்கத்துக்குப் போய் அவ்விடத்தில் முந்நூறு மேற்றிராணிமாரோடு கூடித் துஷ்ட அரியானு என்ற பதிதனுடைய பொய் மதத்தைச் சபித்து மீரு பட்டணத்துக்குத் திரும்பினதின்பின் இறுதிகாலம் முடுகினதை அறிந்து மிக்கான மகிழ்ச்சியோடு தேவ சங்கீதங்களைப் பாடுகையில் தேவதூதர் தமக்கு முடுகுகிறதைக் கண்டு அதிகமாய் மனமகிழ்ந்து ஆண்டவரே! உமது பேரில் நம்பினேன் என்ற சங்கீதத்தை ஆரம்பித்துச் சர்வேசுரா! உம்முடைய திருக்கரங்களில் என் ஆத்துமத்தைக் கையளிக்கிறேன் என்ற சுலோகத்துக்கு வந்தவுடனே தமது ஆத்துமத்தைப் படைத்தவருக்குக் கையளித்து நித்திய பரகதி அடைந்தார். அவருடைய தேகம் அப்பூலிய என்ற பட்டணத்துக்குக் கொண்டுபோகப்பட்டவிடத்திலே மகா பூச்சியத்தோடும் கொண்டாட்டத்தோடும் அடக்கப்பட்டு இதுவரைக்கும் ஆசரிக்கப்படுகின்றது. இப்படியே அவர் மரித்து அடக்கப்பட்டதின் பின் அவருடைய வேண்டுதல் உதவி, கடல் யாத்திரையாய்ப் போகிறவர்களுக்கும் உபத்திரியப்படுகிறவர்களுக்கும் மிகுதியுங் கிடைக்கிறது.

இந்தடைவாகக் குறித்த சுவிசேஷத்திலே எழுதப்பட்டபிரகாரம் அஞ்சு பொன் கையேற்ற ஊழியன் அதின்மேல் இன்னமும் அஞ்சு சம்பாதித்து நாயனுடைய மகிழ்ச்சிக்குட் பிரவேசித்த மேரையாய் நாங்களும் சர்வேசுரன் எங்களுக்குத் தந்தருளின அஞ்சு பொன்னாகிய பஞ்ச இந்திரியங்களின் துஷ்ட ஆசைகளை ஒறுத்து அத்தால் சுகிர்த கிரியைகளை வர்த்திக்கப்பண்ணி அவர் சலுகையால் மோக்ஷ இராச்சியத்தினுட் பிரவேசிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் மேற்றிராணியாரான முத்திப்பேறு பெற்ற நீக்கொலாவுவைக் கணக்கில்லாத அற்புதங்களால் அலங்கரித்தீரே. அடியோர்கள் அவரது பெறுபேறுகளினாலும் சலிகையினாலும் நரக அக்கினிச்சுவாலைக்குத் தப்பிக்கொள்ள அநுக்கிரகஞ் செய்தருளவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மார்கழி மாதம் எட்டாந் திகதி

# தேவமாதாவின் அமலோற்பவ

## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா முதலாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :— *அந்தக்காலத்திலே, கபிரியேல் என்னும் தேவதூதன் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்தூருக்குச் சர்வேசுரனால் அனுப்பப்பட்டு, தாவீதின் கோத்திரத்தாராகிய சூசையப்பர் என்னப்பட்ட ஓர் மனிதனுக்கு விவாகபந்தனமான ஓர் கன்னிகையிடத்தில் வந்தார். அந்தக் கன்னிகையின் பேர் மரியம்மாள். தேவதூதன் அவளிருந்த இடத்தில் பிரவேசித்து : பிரியதத்தத்தினாலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர் உம்முடனே ; ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே என்றார்.*

இந்தச் சுவிசேஷ வாக்கியத்தினால் பரலோக பூலோக இராக்கினியாகிய பரிசுத்த தேவமாதாவின் உற்பவ மகிமை காணலாயிருக்கும். அது எப்படியோவென்றால் : காபிரியேல் என்னுந் தேவதூதன் கன்னிமரியாளை நோக்கி : மங்களம் பிரிய பிரசாத பூரணியே! கர்த்தர் உம்முடனே ஸ்திரீகளில் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே என்று வாழ்த்தினவிடத்திலே, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று சொல்லப்படுகிற முக்காலங்களில் ஒன்றையாவது விசேஷித்துச் சொன்னதல்லவே. ஆனால் அப்பரம கன்னிகையானவர் எப்போதும் பிரசாத பூரணியுமாய்க் கர்த்தருக்கு உவப்பான சுந்தர தேவாலயமுமாய் ஸ்திரீ சனங்களுக்குள்ளே சிரேஷ்ட நாயகியுமாய் விளங்குகிறார் என்று தோன்றும்படி முக்காலத்தையுந் தழுவிப் பொதுமுறையாய்க் கூறப்பட்டதாமே. ஆனதினால் கன்னிசுத்த தேவமாதா உற்பவிக்கும்போதும் பிறக்கும்போதும் பிறந்த பின்னும் தேவப்பிரசாத பூரணமும் உன்னத கடவுள் வாசமும் ஸ்திரீசன சிரேஷ்டமும் முடையவராய் விளங்கினார். அப்படியிருக்க நிறைவுள்ள இடத்தில் குறைவில்லையே. சுத்தமுள்ள இடத்தில் அசுத்தமில்லையே. சிரேஷ்டமுள்ள இடத்தில் கனிஷ்டமில்லையே. அதுபோலப் பரமநாயகி உற்பவித்த போது அவரிடத்தில் வரப்பிரசாத நிறைவிருந்தால் சென்மபாவமாகிய குறைவிராதே. தெய்வீக வாசமாகிய பரிசுத்தமிருந்தால் அசுத்தமாகிய பிசாச வாசமிராதே. தேவவிருப்பாகிய சிரேஷ்டமிருந்தால் தேவ வெறுப்பாகிய கனிஷ்டமிராதே. ஆதலினால் கன்னிசுத்த தேவமாதா கோடி நட்சத்திரங்களுக்குள்ளே ஓர் களங்கமற்ற பூரண சந்திரன் உதித்துத்



தோன்றினாற்போலச் சென்மபாவத்தால் கறைப்பட்ட மானிட சென்மத்துக்குள்ளே, தான் ஒருத்தியே சென்மபாவமாகிய களங்கமில்லாமல் பிரசாத பூரண அலங்காரத்தோடு உற்பவித்துப் பிறந்தார் என்று அறியவும்.

அன்றியும் தேவதூதன் கன்னிமரியாயை நோக்கிச் சகல மனிதருக்குள்ளே மாத்திரமல்லச் சம்மனசுகளுக்குள்ளேயும் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே என்று வாழ்த்தவேண்டியவிடத்திலே, அப்படி வாழ்த்தாது ஸ்திரீ சனங்களை மாத்திரம் விசேஷித்து ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே என்று வாழ்த்தின ஞாயம் ஏதோவென்றால், ஆதியிலே பிசாசானது ஏவாளாகிய பெண்ணைப் பாவத்திலே விழுத்தினதினால் அவளே மனுக்குலத்துக் கெய்திய சகல ஆத்தும சரீரக் கேடுகளுக்கும் நாயகியானாள். ஆனதினால் அப்படியே பெண்ணால் அழிந்த உலகத்தைப் பெண்ணாலேயே மீட்கக் கருதிய சர்வேசுரன் அர்ச். மரியம்மாளையே ஸ்திரீ சனங்களுக்குள்ளே விசேஷித்தமாய்த் தெரிந்துகொண்டபடியால் தேவதூதன் அவரை நோக்கி ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே என்று வாழ்த்தின ஞாயமாம்.

அர்ச். தேவமாதா சென்மபாவ தோஷமில்லாமல் உற்பவித்ததற்கு முக்கிய காரணம் ஏதென்றால், அவர் அநாதி நித்தியகாலந்தொட்டுச் சர்வேசுரனால் தம்முடைய திருக்குமாரனுக்குத் திவ்விய மாதாவாய் நியமிக்கப்பட்டிருந்ததேயாம். தேவகுமாரன் பாவத்தைச் சங்கரிக்கவும் பிசாசைச் செயித்து ஆத்துமாக்களை ஈடேற்றவும் உலக இரட்சகராய் இங்கே எழுந்தருளத் திருவுளங்கொண்டு தம்முடைய மனுஷீக சுபாவத்தை அர்ச். கன்னிமரியாயிடத்திலிருந்து எடுத்து அவருக்குத் தாமே குமாரனாக உற்பவித்துப் பிறந்தருளச் சித்தமானார். அப்படியிருக்கிறதினால் அந்த மாதா மற்ற மனுஷரைப்போலப் பாவதோஷத்தில் சென்மித்திருப்பாரேயாகில் சுதனாகிய சர்வேசுரன் அவரிடத்திலே எடுத்தருளின மனுஷீக சுபாவமும் ஒரு காலத்தில் பாவத்திற்கும் அதனால் பிசாசுக்கும் அடிமையாயிருந்ததென்று சொல்லலாகுமே. அப்படியானால் இது பாவ நாசராக அவதரித்த கடவுளுடைய மகத்துவத்துக்கும் பரிசுத்தத்திற்கும் மிகவும் இழிவாயிருக்கும் என்கிறதினால் சர்வேசுரன் தம்முடைய திருக்குமாரனுடைய தெய்வீக மகத்துவத்தின் பொருட்டு அர்ச். கன்னிமரியாயைச் சென்மபாவ தோஷத்தினும் அதின் காரியமாகிய சருவ ஆசாபாசங்களினும் நின்று இரட்சித்து நிர்மல பிரசாத பூரணியாய்ச் சிருட்டித்தருளச் சித்தமானார் என்று அறியவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளவும் இதிலே தெளிந்துகொள்ளத்தக்க விசேஷமாவது: பரிசுத்த கன்னிகையானவர் சென்ம தோஷமின்றி உற்பவமானபோதே ஆதிகாலத்தில் சர்வேசுரன் சற்பத்தை நோக்கி ஸ்திரியானவள் உன் தலையை நசுக்குவாள் என்று இட்டசாபம் நிறைவேறலாயிற்று. அந்தப் பிரகாரமாய் அர்ச். தேவமாதா சென்ம தோஷமின்றி உற்பவமானதினால் அந்தச் சென்மதோஷங் காரணமாகச் சகல மனுஷரிடத்திலும் தன் அதிகாரத்தைச் செலுத்தி அவர்களைத் தன் அடிமையாக்கிக்கொள்ளும் சற்பமாகிய பிசாசினுடைய அதிகாரந் தன்னை அணுகவொட்டாதபடி கெடுத்துச் செயங்கொள்வாராயினார்.

இப்பிரகாரமாய்ப் பரம நாயகியாகிய தேவமாதா சென்மபாவமின்றி உற்பவித்தார் என்பது, சத்திய திருச்சபையிலே எப்போதும் அங்கீகரிக்கப்பட்டிருந்த சத்தியமாம். ஆயினும் ஆயிரத்தெண்ணூற் றைம்பத்துநாலாம் ஆண்டு மார்கழி மாதம் 8-ந் திகதியின் முன்னே அந்தச் சத்தியம் ஒரு விசுவாச சத்தியமாய் ஏற்படுத்தப் பெற்றிருந்ததில்லை. சொல்லப்பட்ட அந்த ஆண்டிலோவெனில் 9-ம் பியூஸ் என்னும் அர்ச். பாப்பு வத்திக்கான் என்னும் மாளிகையிலே கூடிய திருச்சங்கத்திலே தேவமாதாவின் அமலோற்பவத்தை ஒரு விசுவாச சத்தியமாக ஏற்படுத்தியருளினார். ஆகையால் அன்றுமுதல் அந்தத் தவறாத சத்தியத்தை அசையாத விசுவாசத்தோடு கைக்கொண்டு நடக்கிறது எல்லாக் கிறீஸ்தவர்களுக்குங் கடமையாயிற்று. விசுவசியாதவன் எவனோ அவன் திருச்சபையின் ஒற்றுமையை இழந்து அதற்குப் புறம்பாய்ப் போவான் என்பது நிச்சயமாம். ஆனதினால் பரம நாயகியின் அமலோற்பவத்தைத் திருநாளாய்க் கொண்டாடுகிற நாங்கள் அவர் அடைந்துகொண்ட அவ்வளவு பரிசுத்தத்தனத்தை அடைந்துகொள்ளக் கூடாதவர்களாயிருந்தாலும் எங்களுடைய அந்தஸ்துக்கேற்ற பரிசுத்தத்தை அடையப் பிரயாசப்படவேண்டும். ஏனெனில், அசுத்தமானதொன்றும் மோட்சத்துக்குட் பிரவேசிக்கமாட்டாது என்று வேதவாக்கியம் இருக்கிறபடியால் மோட்சத்தை அடைய விரும்புகிறவர்கள் எல்லோரும் தங்களுடைய அந்தஸ்துக்கு ஏற்றபடி புண்ணியங்களைச் செய்து பரிசுத்தராகத் தகும். சென்மபாவத்திலே உற்பவித்துப் பிறந்த நாங்கள் எல்லோரும் கோபம், மோகம், ஆங்காரம், பகை, சோம்பல் என்று சொல்லப்படும் கொடிய ஆசாபாசங்களால் அடிக்கடி அலைக்கழிக்கப்படுகிறதினால் புண்ணிய வழியிலே நடந்து பரிசுத்தராகிறது எங்களுக்கு வருத்தமாகின்றது. ஆனால் அமலோற்பவியாகிய தேவதாயின் ஆதரவு எங்களுக்கு இருந்தால்



ஆசாபாசங்கள் எல்லாவற்றையும் வென்று புண்ணியங்களை அனுசரித்து மோட்சத்துக்குரிய பரிசுத்தத்தை அடைகிறது எங்களுக்கு மிகவும் எளிதாகுமே. ஆகையால் நாங்கள் சாகுமளவும் தேவதாயின் ஆதரவை இடைவிடாமல் தேடிப் புண்ணியங்களைச் செய்து ஆத்துமத்தைச் சுத்தப்படுத்தி மோட்சவீட்டில் பிரவேசிக்கப் பிரயாசப்படக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, தேவரீர் மாசில்லாக் கன்னிகையின் திருஉற்பவத்திலே உம்முடைய திருச்சுதனுக்குத் தகுதியான வாசஸ்தலம் ஒன்றை ஆயத்தப்படுத்தியருளினீரே. எங்கள் ஆண்டவருடைய திருமரணத்தை உத்தேசித்து அவர் திருத்தாயாரைச் சகல பாவ அசுத்தங்களினும் நின்று காத்துவைத்த தேவரீர் அந்தத் தாயாருடைய மன்றாட்டினால் நாங்களும் பரிசுத்தராய்த் தேவரீரிடத்தில் வந்துசேரத் தயவுபண்ணியருள வேணுமென்று உம்மையே மன்றாடுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து தாமே காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## மார்கழி மாதம் பதின்மூன்றாந் திகதி வேதசாட்சியும், கன்னியாஸ்திரீயுமாகிய ஆராதிஷ்ட ஞானசியம்மாள் திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மந்தேயு பதின்மூன்றும் அதிகாரத்தில் எழுதிவைத்த வாக்கியமாவது:—அக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்கு உவமையாகத் திருவுளம்பற்றினதாவது: பரலோக இராச்சியமானது ஓர் நிலத்தில் புதைத்திருக்கிற புதையலுக்கு ஒப்பாயிருக்கின்றது. அதைக் கண்ட மனிதன் அதை மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினால் போய், தனக்குள்ள யாவையும் விற்று அந்த நிலத்தை வாங்கிக்கொள்ளுகிறான். மீளவும் பரலோக இராச்சியமானது நல்ல முத்துகளைத் தேடுகிற வர்த்தகனுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் விலையேறப்பெற்ற ஓர் முத்தைக் கண்டமாத்திரத்தில், போய், தனக்குண்டான யாவற்றையும் விற்று அதை வாங்கிக்கொள்ளுகிறான். அல்லாமலும் பரலோக இராச்சியமானது கடலில் வீசப்பட்டு எவ்வகை மச்சங்களையுஞ் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கின்றது. அது நிறைந்தபின், வெளியில் இழுத்துக் கரையில் உட்கார்ந்து நல்லவைகளைத் தெரிந்தெடுத்து, பாத்திரங்களில் வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, ஆகாதவைகளைப் புறம்பே எறிந்துவிட்டார்கள். இவ்வண்ணமே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர் புறப்பட்டுப் போய் நீதிமான்கள் நடுவிலிருந்து தீயோரைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார். பின்னும் அவர்: நீங்கள் இவையெல்லாம் கண்டுபிடித்தீர்களோ? என்றார். அதற்கு அவர்கள்: ஆம் என்றார்கள். அப்போது அவர்களை நோக்கி அவர் சொன்னதாவது: ஆகையால் பரலோக இராச்சியத்துக்கடுத்தவைகளிலே தேர்ந்த வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் வெளியில் எடுத்துக் காட்டுகிற வீட்டெஜமானுக்கு ஒப்பாயிருக்கிறான் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட வாக்கியத்தால் கன்னியாஸ்திரீயும் வேதசாட்சியுமாகிய ஆராதிஷ்ட லூசியம்மாள் சீவித்த சுகிர்த சீவியத்தின் மேரை காண்பிக்கப்படுவது. அது எப்படியென்றால், ஆராதிஷ்ட லூசியம்மாள் சிசிலிய என்ற இராச்சியத்துக்கு அடங்கிய சிறகூச என்ற நகரியில் சங்கை மகிமை போந்த தாய் தந்தையர்களால் பிறந்தாள். சிறுவயது தொடுத்து அவளைத் தாயான எவுதீக்கி என்பவள் தேவபத்தியில் அப்பியாசம்பண்ணி வேதவிசுவாசத்தில் உறுதிப்படுத்தினாள். ஆனால் அவளுடைய தாய்க்குப் பெரும்பாடு என்னும் வியாதி உண்டாயிருந்ததினால் நாலு வருஷக்காலமாக வயித்தியரைக்கொண்டு பார்ப்பித்தவிடத்தில் அற்பமாகுதல் சுகம் அடையாததினால் அக்காலத்தில் அர்ச்சியசிஷ்ட ஆகதாவை அடக்கின தலத்தில் சர்வேசுரன் அநேகம் புதுமைகளைக் காண்பிக்கிறார் என்று அர்ச்சியசிஷ்ட லூசியம்மாள் அறிந்து தன் தாயோடே கத்தான என்ற நகரியில் அவளுடைய திருச் சரீரத்தை வணங்கும்படி போனார்கள். இப்படியே ஆராதிஷ்ட ஆகதாவுடைய குழி அருகே சேர்ந்து மன்றாடச் செய்தே ஆராதிஷ்ட ஆகதாவுடைய வேண்டுதலால் அர்ச்சியசிஷ்ட லூசியம்மாள் தன் தாய்க்குச் சுகம் கிடைத்ததை அறிந்த உடனே தனக்குக் கிடைக்கவேண்டியதாயிருக்கிற சீதனத்தைப் பிச்சைக்காரருக்குக் கொடுக்கும்படி தன் தாயைப் பின்சென்று மன்றாடினாள். அதின் பிற்பாடு சிறகூச என்ற நகரியில் சேர்ந்த உடனே தனக்குள்ள ஆஸ்தி எல்லாம் விற்று வந்த பணம் எல்லாம் இல்லாவாளருக்குப் பகிர்ந்து கொடுத்தாள். அவளுடைய சம்மதி இல்லாமல் விவாக சம்பந்தத்துக்கு அவளுடைய தாயானவள் முன் பேசியிருந்த மணவாளன் இதையறிந்து அவள்பேரில் வர்மம்கொண்டு பஸ்காசியு என்ற அந்நகரியின் நடுவனிடத்தில் போய் லூசியம்மாள் கிறீஸ்துவேதத்தை அனுசரிக்கிறாள் என்று முறைப்பட்டான். அப்போது பஸ்காசியு



என்ற நடுவன் ஆராதிஷ்ட லூசியாவை அழைப்பித்து அவளைத் தங்கள் பேய் விக்கிரக ஆராதனைக்குத் திருப்பப் பற்பல உபாயங்களைப் பண்ணிவருகையில் அந்த உபாயங்களாலென்கிலும், பயமுறுத்துதலாலென்கிலும் திருப்ப ஏலாமல் நடுவன் எம்மாத்திரம் அவளைத் தேவபத்தியால் திருப்பப் பிரயாசப்பட்டாலும் அவ்வளவுக்குத் தேவபத்திக் காந்தல் அவளுடைய இருதயத்தில் வேகப்பட்டதால், தேவ விசுவாசத்தின் புகழ்ச்சிகளைச் சொல்லி நடுவனைக் கண்டித்து வருவாள். ஆனதினால் பஸ்காசியு என்போன் அத்தைப் பொறுக்கமாட்டாமல் இனிமேல் என் முன்பாக அப்படியே பேசாதே என்றும் அந்த வார்த்தைகள் எல்லாம் உன்னை அடிக்கும்போது மறைந்துபோம் என்று சொன்னதற்கு அர்ச்சியசிஷ்ட லூசியம்மாள் பிரத்தியுத்தரமாகத் தேவ ஊழியர்களுக்கு வார்த்தைகள் குறையாது என்று கிறீஸ்துநாதர் திருவுளம்பற்றினார். அது எப்படியென்றால்: நீங்கள் இராச பிரபு பிரதானிகள் முன்பாக இருக்கிறபோது எப்படி அல்லது என்னத்தைப் பேசுவோம் என்று கவலித்திருக்க வேண்டியதல்ல. ஏனென்றால் அந்நேரத்தில் நீங்கள் பேசவேண்டியதைச் சர்வேசுரன் உங்களிடமாகப் பேசுகிறதல்லாதே நீங்களல்ல என்று கிறீஸ்துநாதர் திருவுளம்பற்றினதை அர்ச்சியசிஷ்ட லூசியம்மாள் பஸ்காசியு என்றவனுக்கு அறிவித்தவிடத்தில் பஸ்காசியு என்ற நடுவன் உன்னிடத்தில் இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரன் உண்டோ என்று கேட்டதற்குச் சிற்றின்பக் கிரியை இல்லாமல் பயபத்தியோடு சீவிக்கிறவர்கள் இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனுடைய ஆலயமாயிருக்கிறார்கள் என்று மறுமொழி சொன்னாள். அப்படியானால் நான் உன்னைப் பரஸ்திரீகளுடைய ஸ்தலத்துக்குக் கொண்டுபோகப்பண்ணி அத்தால் இஸ்பிரீத்துசாந்து உன்னைவிட்டுப் பிரிந்துபோகச் செய்வேன் என்று சொன்னான். இதற்கு அர்ச்சியசிஷ்ட லூசியம்மாள் சொல்லுவது: நீ எனக்கு வலோத்காரம்பண்ணிச் சிற்றின்பத்துக்கு ஏதுவாகக் கட்டளையிட்டாயாகில் என் கற்பும் பெறுபேறுகளும் அதிகப்பட்டு அத்தால் எனக்கு மோக்ஷ மகுடம் இரட்டிக்கப்படும் என்றாள். அப்போது பஸ்காசியு என்ற நடுவன் கோபங்கொண்டு அர்ச்சியசிஷ்ட லூசியாவைப் பரஸ்திரீகளுடைய வீட்டுக்குக் கொண்டுபோய் அவ்விடத்தில் அவளுடைய கன்னிசுத்தத்தை அழிக்கக் கட்டளையிட்டான். ஆனால் சர்வேசுரனுடைய பொருட்டால் அவளுடைய கன்னிமைக்குச் சேதம் வரவில்லை. எப்படியெனில், கல் மலைபோல் அவள் அசையாமல் நின்றாள். அப்போது அவளுடைய கை கால்களில் கயிறுபோட்டு இழுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும் கொஞ்சமாவது அவளை அசைக்கமாட்டாமற் போனார்கள். பஸ்காசியு என்ற நடுவன் இதைக் கண்டு வெகு கிலேசப்பட்டு அர்ச்சியசிஷ்ட லூசியம்மாளிருக்கிற தலத்தில் குங்கிலியமும் எண்ணெயும் வார்த்து நெருப்பெரிக்கக் கட்டளையிட்டான். ஆனால் நெருப்புக் காந்தல் அர்ச்சியசிஷ்ட லூசியம்மாளுக்கு யாதொரு பொல்லாப்பும் பண்ணாமலிருந்ததினால் மிகுந்த கஸ்தி வாதைகளால் ஆக்கினையிட்டு அவளுடைய கழுத்தை வாளால் குத்தினதினால் அர்ச்சியசிஷ்ட லூசியம்மாள் தன் பிராணனைச் சர்வேசுரனுக்குக் கையளித்தாள்.

இந்தடைவாக வான இராச்சியம் நிலத்தில் புதைத்து வைத்த புதையலுக்குச் சமானம் என்றும், அதைக் கண்டவன் தனக்குள்ளதெல்லாம் விற்று அந்த நிலத்தைக் கொண்டான் என்றும் சொன்ன பிரகாரம், அர்ச்சியசிஷ்ட லூசியம்மாள் மோக்ஷ இராச்சியத்தின் மகிமை எல்லாம் அறிந்து தனக்குள்ளதெல்லாம் விற்று இல்லாவாளருக்குப் பகிர்ந்து கொடுத்தும், தமது கன்னிசுத்தத்தைக் குறையற்ற பிரகாரமாய்க் காத்தும இவ்வலோகத்தில் தரும சீவியத்தில் சீவித்தும் மோக்ஷ இராச்சியத்தை அடைந்ததினால் நாங்களும் அவளுடைய தரும சுகிர்தங்களை இயன்றளவு அனுசரித்து அவள் சலுகையால் மோக்ஷம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

எங்கள் இரட்சணியமாகிய சருவேசுரா, தேவரீருடைய கன்னியும் வேதசாட்சியுமான முத்திப்பேறுபெற்ற லூசியம்மாளின் திருநாளில் அகமகிழுகிற அடியோர்களின் இருதயங்களிலே உத்தமமான பத்தியின் உணர்ச்சிகள் உண்டாகக் கிருபைபண்ணியருளவேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக் கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## மார்கழி மாதம் இருபத்தோராந் திகதி
# ஆராதி. தொம்மை அப்போஸ்தலு
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக அருளப்பர் இருபதாம் அதிகாரத்தில் எழுதிவைத்த வாக்கியமாவது:— அக்காலத்திலே யேசுநாதர் மரித்தெழுந்தருளித் தம்முடைய சீஷர்களுக்குத் தம்மைக் காண்பித்தபோது பன்னிரு



வரில் ஒருவராகிய திதீம் என்னப்படுகிற தோமையார் அவர்களோடு கூட இருக்கவில்லை. ஆகையால் மற்றச் சீஷர்கள்: சுவாமியைக் கண்டோமென்று அவருக்குச் சொன்னபோது, அவர்: நான் அவருடைய கரங்களிலே ஆணிகள் அறைந்த துவாரத்தையும் கண்டு, ஆணிகள் இருந்த இடங்களிலே என் விரலையும் விட்டு, அவருடைய விலாவில் என் கையையும் இட்டாலொழிய நான் விசுவசிக்கமாட்டேன் என்று அவர்களுக்குச் சொன்னார். எட்டு நாளைக்குப் பின், மறுபடியும் அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருக்கையில் அவர்களோடு தோமையாரும் இருந்தார். அப்பொழுது கதவுகள் பூட்டியிருக்க, யேசுநாதர் வந்து, நடுவில் நின்று: உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக என்றார். பின்னும் அவர் தோமையாரை நோக்கி: இங்கே உன் விரலை இடு, என் கரங்களைப் பார், உன் கையை நீட்டி என் விலாவிலே வை, அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு என்று திருவுளம்பற்றினார். தோமையார் அவருக்கு மறுமொழியாக: என் ஆண்டவரே, என் தேவனே என்றார். யேசுநாதர் அவரை நோக்கி: தோமாஸ், நீ என்னைக் கண்டதினாலல்லோ விசுவசித்தாய். காணாதிருந்தும், விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே ஆராதிஷ்ட தொம்மை அப்போஸ்தலுவின் பெறுபேற்றின் மகிமையும் அவரால் எங்கள் விசுவாசம் உறுதிப்பட்ட விசேஷமும் காண்பிக்கப்படுவது. அது எப்படியென்றால், ஆண்டவர் அவரை அழைத்துத் தமமுடைய கரங்களையும் விலாவையும் சோதிக்கச் சொன்னதினால், தம்முடைய தேவ கருணைக்கு அவர் எத்தனை வேண்டினவராயிருந்தார் என்று காணப்பட்டது. இதல்லாமல் அவர் ஆண்டவருடைய திருச் சரீரக் காயங்களைக் கண்டு அறிந்து மரித்து எழுந்தருளின ஆண்டவரும், சர்வேசுரனும் அவர்தாம் என்று திட்டமாய் விசுவசித்துச் சொன்னதினால் விசுவாசம் அற்றவர்களுடைய மனதுகளிலிருந்த சகல சந்தேகங்கள் தெளிந்து சமஸ்தரும் ஆண்டவர் பேரில் ஏகாந்த விசுவாசமாயிருக்கப்பண்ணினார். இதுவும் அல்லாமல் அவர் கண்டு விசுவசித்ததை நாங்கள் காணாமல் விசுவசிக்கிறதினால் எங்கள் விசுவாசத்தின் பெறுபேறு அதிகரிக்கப்பட்டதென்று அறியவும்.

ஆனால் இப்படிப்பட்ட விசுவாசத்தின் பெறுபேறுகளை அடைந்த நாங்கள் அதுக்குத் தக்க தருமக் கிரிகைகளோடு நடவாதிருந்தால் எங்கள் விசுவாசம் பிராணன் இல்லாத பிரேதம் போலவும், எண்ணெய் இல்லாம லிருண்ட விளக்கு வெளிச்சம போலவும், பலன் அற்றதாயிருக்கும் என்று சர்வேசுரன் திருவுளம்பற்றினதினால், எங்கள் விசுவாச உறுதிக்குக் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயிருந்த தொம்மை அப்போஸ்தலுவினால் தருமக் கிரியைப்
பலன் அடைய அவருடைய சுகிர்த சரித்திரங்களில் சிலது
சொல்லிக் காண்பிக்கிறது கிரமமாம். அது எப்படி யென்
றால், ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளினதின்பின்
சீஷர்கள் வேதம் பிரசங்கிக்க உலோகத்தின் பல திக்கிலும்
பிரிந்துபோகையில், தொம்மை அப்போஸ்தலுவுக்கு நாங்க
ளிருக்கிற ஈந்திய என்கிற திசையில் வரத்தக்கதாகப் பங்குப்
பேறாயிற்று. அப்போது இப்படிப்பட்ட வெகு தொலையான
அறியாத தேசத்துக்கு வர வழி தெரியாமலும் உதவி இல்லா
மலும் தத்தளிப்பாயிருக்கிறபோது சர்வேசுரன் கருணைபண்
ணின மேரையாவது: இந்தியாவில் இராசாவாயிருந்த கந்தோ
புரு என்றவன் ஐரோப்பா இராச்சியங்களிலிருக்கிற மாட
மாளிகைகளின் கீர்த்தியைக் கேட்டு அப்படிப்பட்ட மகிமை
யான அரண்மனை தன் தேசத்திலும் செய்யவேணும் என்ற
மனதாய் அந்த வேலை அறிந்த ஒருவனைத் தேட ஐரோப்பா
வுக்குத் தானாபதியை அனுப்பினான். அவன் போய் அந்தத்
தொழிலாளியைத் தேடித் திரிகிற சமையத்திலே தேவதூதன்
வழிப்போக்கனாய் அவனுக்குத் தோன்றி அவன் வந்த
காரியத்தின் நினைவை அறிந்து அப்படிப்பட்ட வேலை அறிந்த
சமர்த்தனை நான் காண்பிப்பேன் என்று தொம்மை அப்
போஸ்தலு இருந்த விடுதியில் கூட்டிக்கொண்டுபோய் இவன்
தான் மாளிகை வேலைகளுக்கு வெகு திறமையுள்ள கற்சிற்
பன் என்று காண்பித்தார். இதல்லாமல் அவன்கூடக் கவலை
யின்றிப் போகிறதற்குத் தொம்மை அப்போஸ்தலுவின் மன
தில் தெளிவு கொடுத்தார். இப்படியே அந்தத் தானாபதி
தொம்மை அப்போஸ்தலுவோடு சம்மதித்துப் பயணமாய்க்
கப்பலில் ஏறினவுடன் ஒரு வருஷம் ஓடிச் செல்லவேண்டிய
பிரயாணத்தை அந்த உரு மூன்று மாசத்தில் முடித்துக் கரை
சேர்ந்தது. அத்தைக் கண்டு தானாபதி ஆச்சரியப்பட்டுத்
தொம்மை அப்போஸ்தலுவைக் கந்தோபுரு என்ற இராசா
விடத்திலே கூட்டிக்கொண்டுபோய்த் தொழிலைக் கற்பிக்கச்
சொன்னான். அப்போது அந்த இராசா தான் மாளிகை
செய்ய நினைத்திருந்த தலத்திலே அப்போஸ்தலுவை அழைத்
துக்கொண்டுபோய் மாளிகைக்கு இவ்விடம் ஆகுமோ என்று
கேட்ட விடத்திலே, மகா இராசா எப்போதும் சுக சீவியாய்
வாழ்ந்திருக்கிறதற்கு ஆன தலந்தான் என்று சொல்லி
வேலைக்கு வேண்டிய செலவுகளைக் கைப்பற்றிக்கொண்டார்.
இராசா போனதின்பின் தொம்மை அப்போஸ்தலு வாங்கின
உடைமையை இல்லாவாளருக்குப் பகிர்ந்து கொடுத்து வேதத்



தைப் பிரசங்கித்து வியாதிக்காரரைக் குணமாக்கிப் பிசாசு
மாய்கைகளைப் போக்கிக் கிறீஸ்துவின்பேரில் விசுவாச பத்தி
உண்டாக்கியிருந்தார். இப்படியே சிலகாலம் போனதின்பின்
இராசா மாளிகை வேலை பார்க்கவேணும் என்று வந்தவிடத்
திலே மாளிகையுமில்லை, உடைமையுமில்லை, அதுக்குவந்த கற்
சிற்பன் வேதம் உண்டாக்குகிறதல்லாதே மாளிகை உண்டாக்கு
கிற வேலை ஒன்றுங் காணவில்லை என்று சனங்கள் சொன்ன
தைக் கேட்டு இராசா வெகுவாய் முனிந்து தொம்மை அப்
போஸ்தலுவை அழைப்பித்து மாளிகை எங்கே என்று கேட்
டான். அதற்குத் தொம்மை அப்போஸ்தலு சொல்லுவது:
மாளிகை குறை இல்லாமல் முடிந்திருக்கிறது. ஆனால் அதில்
மகா இராசா சகல சுக செல்வ பாக்கியத்தோடு மறுமையில்
வாழ்ந்திருக்கிறதல்லாதே இம்மையிலே காணலான கருமமல்ல
என்று சொன்னார். இப்படிப்பட்ட வசனத்தைக்கேட்டுத்
தனக்குக் கோமாளம் சொல்லுவதோ என்று கோபம் அதிக
மாய் அவரையும் அவரைக் கூட்டிக்கொண்டுவந்த அபானிசு
என்ற தானாபதியையும் சிறையிலே வைத்தான். அப்போது
இப்படிப்பட்ட செய்தியை இராசாவுடைய சகோதரனானவன்
கேட்டு இராசாவின் உடைமை எல்லாம் வீணிலே அழித்தான்
என்று சகியாத சந்தாப சலிப்போடு வியாதியாய் விழுந்தான்.
இப்படிப்பட்ட துரோகியைக் கொல்லாதிருக்கில் பிழைக்க
மாட்டேன் என்று இராசாவுக்குச் சொல்லி அனுப்பினான்.
ஆனால் விண்ணப்பஞ் செய்யப்போன தூதர் வருமுன் அந்தக்ஷ
ணத்திலேதானே அவனுக்கு நித்திரை வந்து ஒரு தெரிசனம்
கண்டான். அது ஏதெனில் மகா விசித்திர கருமத்தோடு
செய்திருக்கிற ஒரு மகிமையான மாளிகையைக் கண்டு இதை
உன் சகோதரனான இராசாவுக்குத் தொம்மை உண்டாக்கினான்
என்ற சத்தத்தைக் கேட்டான். அதினால் பயத்தோடு கண்
விழித்து உடனேதானே இராசாவின் அண்டையிலே தூதரை
அனுப்பித் தொம்மை மாளிகை உண்டாக்கினது மெய்யாகக்
கண்டேன். அவரைக் கொல்லக்கடவதல்ல என்று சொல்லு
வித்தான். அத்தைக் கேட்டு இராசன் தொம்மையை அழைப்
பித்து அப்படிப்பட்ட தெரிசனத்தின் வகை ஏதென்று
கேட்டவிடத்திலே அவர் வேத விசுவாசத்தின் உபதேசத்
தைப் போதித்துப் பூலோக வாழ்வின் அநித்தியத்தையும், பர
லோகத்தில் நீடூழிகாலம் வாழுகிற நிச்சயமான மகிமையையும்
காண்பித்தார். அதினால் இராசாவும் அவர் சகோதரன் முத
லான சகல இராச குடும்பத்தவர்களும், குடியானவர்களும்
கிறீஸ்துவேதத்தை அனுசரித்தார்கள். இப்படியே இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்திலும், ஈந்திய ஆசிய என்ற திசைக்கடுத்த சகல இராச்சியங்களிலும் தொமமை அப்போஸ்தலு கிறீஸ்து வேத வெளிச்சம் கொளுத்திப் பிசாசு கோயில் உருபங்களையும் அழிப்பித்துக் கடைசியாய் வேதத்துக்காகத் துஷ்ட அக்கியானிகள் கையால் பாடுபட்டுத் தம்முடைய சுகிர்த பிராணனைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து வேதசாட்சிகளுடைய முடியையும் ஆசன மகிமையையும் அடைந்தார். இப்படிப்பட்ட சுகிர்தங்களைக் கேட்டறிகிற நாங்கள் இயன்றளவும் அதைப் பின்சென்று அவருடைய சலுகையால் மோக்ஷ பாக்கியத்தை அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, நாங்கள் தேவரீருடைய அப்போஸ்தலரான முத்திப்பேறுபெற்ற தோமையாருடைய திருநாளிலே ஆனந்தம் கொள்ளுகிறவர்களாகி அவருடைய அடைக்கலத்தினால் என்றும் பாதுகாவலடையவும் அவருடைய விசுவாசத்தைத் தக்க பத்தியோடு பின்பற்றவும் எங்களுக்கு அநுக்கிரகம் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்து சாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

# மார்கழி மாதம் இருபத்தாருந் திகதி ஆதி வேதசாட்சியான ஆராதிஷ்ட முடியப்பர் அல்லது எவ்தேவன் திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு இருபத்துமூன்றாம் அதிகாரத்தில் எழுதிவைத்த வாக்கியமாவது :—அக்காலத்திலே யேசுநாதர் யூதர் வேத வித்தியா பாரகர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது : இதோ, நான் தீர்க்கதரிசிகளையும், ஞானிகளையும், வேதசாஸ்திரிகளையும் உங்களிடத்திற்கு அனுப்புகிறேன். நீங்களோ அவர்களில் சிலரைக் கொல்லுவீர்கள், சிலரைச் சிலுவையில் அறைவீர்கள். உங்கள் ஜெப ஆலயங்களில் வாரினாலடித்து, சிலரை ஊருக்கு ஊர் தொடர்ந்து உபாதிப்பீர்கள். நீதிமானான ஆபேலின் இரத்தமுதல், தேவாலயத்திற்கும் பீடத்திற்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரேக்கியாஸ் குமாரனாகிய சக்கரியாவின் இரத்தமட்டும், பூமியில் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தமெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக் (இவ்விதம் செய்வீர்கள்) இவையெல்லாம் இந்தச் சந்ததியின் மேல் வருமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஜெருசலேமே, ஜெருசலேமே, தீர்க்கதரிசி



களைக் கொலைசெய்து, உன்னிடமாய் அனுப்பப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்லுகிறாயே ; கோழியானது தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளுக்குள்ளே அணைத்துக்கொள்ளுகிறதுபோல, எத்தனையோ முறை நானும் உன் குமாரர்களை அணைத்துக்கொள்ள விரும்பினேன். உனக்கு மனமில்லாமல் போயிற்றே. ஆதலால், இதோ உங்கள் வீடு, உங்களுக்குப் பாழாய் விடப்படும். ஏனெனில் ஆண்டவருடைய நாமத்தினாலே வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவரென்று நீங்கள் சொல்லுமளவும், இதுமுதல் என்னைக் காணமாட்டீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின் விபரமாவது, செருசலேம் நகரியிலிருக்கிற துஷ்ட யூதர் கிறீஸ்து வேதம் படிப்பிக்கிற தீர்க்கதரிசி முதலான ஆவருடைய சீஷர்களை வாதிக்கவும் வதைக்கவும் செய்வார்கள் என்று ஏலவே அறிவித்த வசனமாம். ஆனால் இப்படிப்பட்ட வசனம் முந்த முந்த ஆராதிஷ்ட முடியப்பரிடத்திலே நிறைவேறி எல்லாருக்கும் முந்தி அவர் வேதத்துக்காகப் பாடுபட்டு வேதசாட்சியாய் முடி அடைந்ததினால் அவருடைய பெறுபேற்றின மகிமை காண்பிக்கப்படுவது.

அது எப்படியென்றால் : ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளினதின்பின் கிறீஸ்துவேத சபையில் முந்த முந்தக் கூட்டப்பட்ட கிறீஸ்தவர்கள சமஸ்தரும் ஒரு ஆத்தும சகோதரர்போலத் தங்களுடைய பிழைப்பின் பலன்களைப் பொதுவில் வைத்து அப்போஸ்தலுமார் கையால் சாதாரணமாய்ப் பகிர்ந்து எடுத்துப் பேதகம் இல்லாமல் நடந்துவந்தார்கள். அப்போது இப்படியே அவர்களை நடப்பிக்க அப்போஸ்தலுமாருக்கு அவகாசம் இல்லாததினால் அவர்கள் தங்களிடமாய்ப் புத்தி, பத்தி மிகுந்த ஏழு பேரைத் தியாக்கோன்மாராகத் தெரிந்தெடுத்துச் சனங்களை நடப்பிக்கக் கட்டளையிட்டார். அப்போது அவர்களுக்குள்ளே ஆராதிஷ்ட முடியப்பர் என்பவர் கல்வி சாஸ்திரம் முதலான ஞானத் தெளிவிலும், தேவபத்தியிலும், அதிகரித்து வேதம் உபதேசிக்கிறபோது அவருடைய சுகிர்த பிரசங்கங்களின் மகிமையையும், செய்கிற அறபுதங்களையும் கண்டு பல தேசங்களின் மனுஷர் திரளாகக் கிறீஸ்துவேத சபையில் கூடினார்கள். இப்படிப்பட்ட வர்த்தமானத்தை யூதர் கண்டு வெகுவாய் வர்மித்துத் தங்கள் வேதத்தில் விவேகி, வித்தியாவந்தர்களாயிருக்கிற பேர்களை அழைத்து அவரோடே தர்க்கிக்கப்பண்ணினார்கள். ஆனால் அந்த வித்தியாபாரகர்களில் எவனாகிலும் ஆராதிஷ்ட முடியப்பர் என்பவர் சொல்லுகிற வசனங்களைத் தட்டவும் கேட்ட கேள்விகளுக்கு மறுமொழி உரைக்கவும் மாட்டாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணித்துப் போனதினால் எந்தப்படியும் அவனை யாதொரு குற்றத்திலே அகப்படுத்தி வதைக்கவேணும் என்று யோசனை பண்ணி இவன் தங்கள் யூதமார்க்கத்தைப் பழிக்கிற பகைக்காரன் என்ற குற்றத்தைச சாட்டி நடுவர் சபையில் முறைப்பட்டார்கள். ஆகையால் நடுக்காரர் அவரை அழைப்பித்து அவர் படிப்பிக்கிற வேதத்தின் கிரமம் ஏதென்று கேட்டவிடத்திலே அதற்கு அவர் மறுமொழியாகத் தேவ வாக்கியங்களைச் சொனன மகிமையையும் அவரது பத்திச்சுடரையும், முகத்தில் காணப்பட்ட மனோரூபி முகச் சாயலையும் பார்த்து அதிசயித்திருந்தார்கள். அந்நேரம் சர்வேசுரன் அவருடைய வசனங்களை மெய்யென்று வேதசாட்சியால் காணபிக்கத் திருவுளமாகி ஆகாசந் திறபட்டுத் தேவசுதன் பிதாவாகிய சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறமேரை காணப்பட்டது. அத்தைக் கண்டு முடியப்பர் என்பவர் சனங்களைப் பார்த்து இதோ நீங்கள் சிலுவையிலே வதைத்த நமது நாயகனை யேசுக்கிறீஸ்து தேவ பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறதைக் காண்கிறேன். கண் திறந்து ஆகாசத்தில் பாருங்கள் என்று சொன்னவிடத்திலே எண்ணெய் ஊற்றின தீப்போல் அவர்கள் மனது கோபமாய் எரிந்து அவரைக் கல்லெறிந்து கொல்லக் கட்டளையிட்டார்கள். அப்படியே நகரி வாசலால் புறப்படுத்திக் கல்லெறிந்து கொல்லுகிறவிடத்திலே ஆராதிஷ்ட முடியப்பர் என்பவர் யேசுநாதர் சிலுவையிலே பிரார்த்தித்த மேரையாய்த் தம்மை வதைக்கிறவர்களுடைய பாவத்தைப் பொறுக்கவேணும் என்று சர்வேசுரனைப் பிரார்த்தித்துத் தம்முடைய சுகிர்த பிராணனை ஒப்புக்கொடுத்து மரித்தார். இந்த மேரையாய் யேசுநாதர் தாம் மனுஷருக்காகப் பிராணனைக் கொடுத்ததுக்குக் கைம்மாறாக இவர் தம்முடைய ஆத்துமத்தை முந்த முந்த ஆண்டவருக்காகக் கொடுத்து வேதசாட்சிகளுக்குக் கிடைக்கிற செயவிருதுகளை எல்லாருக்கும் முந்திக் கையேற்கப் பேறுபெற்றவரானார் என்று அறியவும், ஆனதினால் இப்படிப்பட்டவருடைய சுகிர்தங்களை நாங்கள் இயன்றளவும் அநுசரித்து அவருடைய சலுகையால் மோக்ஷ பாக்கியங்களை அடையப் பிரயாசிக்கக் கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, அடியோர்கள் இன்று கொண்டாடுகிற சம்பவத்தைப் பின்பற்றுகிறவர்களாகிச் சத்துராதிகளையும் நேசிக்கப் பழகச் செய்தருளும். நாங்கள் எவர் பரலோகத்துக்குப் பிறந்த தினத்தை ஆசரிக்கிறோமோ அவர் தம்மை வாதித்தவர்களுக்காகவும் எங்களாண்டவரான யேசுக்கிறீஸ்துவைப் பிரார்த்தித்தாரே. தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்துதாமே காரண காட்சியாக, ஆமென்யேசு.



---

## மார்கழி மாதம் இருபத்தேழாந் திகதி

# ஆராதிஷ்ட அருளப்ப

## அப்போஸ்தலுவின் திருநாளில் வாசிக்கிற

## சுவிசேஷம்.

---

சுவிசேஷக அருளப்பர் இருபத்தோராம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :—அக்காலத்திலே யேசுநாதர் பேதுருவைப் பார்த்து என்னைப் பின்சென்று வா என்றார். இராயப்பர் திரும்பிப் பார்த்து : யேசுநாதரால் சிநேகிக்கப்பட்டவரும், இராப்போசனத்தில் அவருடைய மார்பில் சாய்ந்துகொண்டு : சுவாமி, உம்மைக் காட்டிக் கொடுப்பவன் யாரென்று கேட்டவருமாகிய அந்தச் சீஷன் பின்னால் வருவதைக் கண்டார். ஆகையால் அவரைக் கண்டபோது, யேசுநாதரை நோக்கி : சுவாமி, இவர் காரியம் என்ன என்று கேட்க, யேசுநாதர் பிரத்தியுத்தாரமாக : நான் வருந்தனையும் இவன் இப்படியே இருக்கச் சித்தமாயிருக்கிறேன். உனக்கு என்ன? நீ என் பிறகே வா என்றார். ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சுச் சகோதரர்களுக்குள்ளே பரம்பிற்று. ஆயினும் நான் வருந்தனையும் அவன் இப்படியே இருக்கச் சித்தமாயிருக்கிறேன், உனக்கு என்ன என்று யேசுநாதர் சொன்னாரொழிய, அவன் மரிப்பதில்லை என்று சொல்லவில்லை. அந்தச் சீஷனே இவைகளைக் குறித்துச் சாட்சி சொல்லி, இவைகளையும் எழுதினவன். அவன் சாட்சியும் உண்மையென்று அறிவோம்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே ஆராதிஷ்ட அருளப்ப அப்போஸ்தலு ஆண்டவருடைய அதிகரித்த தயைக்கருணை அடைந்த மேரையும் அவருடைய சுவிசேஷ வாக்கியங்களை எழுதப் பேறுபெற்ற மகிமையும் காண்பிக்கப்படுவது. அது எப்படியென்றால், ஆண்டவரை அதிகமாய் முடுகிச் சென்று அவர் மார்பிலே சயனித்திருக்கிறதை மற்றச் சீஷர்கள் கண்டு முறைப்பட்டவிடத்திலே அவன் இப்படியே இருக்க நான் சந்தோஷமாயிருக்கிறேன் என்று ஆண்டவர் திருவுளம்பற்றினதினால் அவர் பேரிலுள்ள தயைக் கிருபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் மகிமை காண்பிக்கப்படுவது. இதல்லாமல் ஆண்டவ
ருடைய மார்பில் சயனித்ததினால் அவர் சித்தத்திலுள்ள அநேக
தேவ வாக்கியங்களை அறிந்து சுவிசேஷத்தை எழுதின மகிமை
காண்பிக்கப்படுவது. இன்னமும் ஆண்டவர் சிலுவையி
லிருக்கிறபோது அவர் மாதாவோடு இவரும் சிலுவை அடி
யிலே வியாகுலமாயிருக்கச் செய்தே தம்முடைய மாதாவுக்கு
இவரைத் தமக்குப் பதிலாகக் கையளித்ததினால் அவருடைய
பெறுபேற்றின் மகிமை எம்மாத்திரம் பெரிதென்று காணலா
யிருக்கும்.

ஆனால் ஆண்டவர் இவருக்குக் காண்பித்த இத்தனை பெரிய
தயவுக்கு அவரும் ஆண்டவர் பேரில் இத்தனை பட்சபிர
மாணத்தோடு நடந்ததையும் அவர் வேதத்துக்காகப் பாடுபட்ட
தையும் காணுதல் கிரமமாம். அது எப்பிரகாரமோ என்றால்:
ஆண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளினதின்பின் அவர்
மாதாவுக்குப் புத்திரனாகக் கையளித்திருந்த தன்மையாய்ப்
பரிசுத்த தேவமாதா பூலோகத்தில் இருக்குந்தனையும் அவ
ரது அண்டையிலே பணிசெய்திருந்தார். அதின்பின் சுவி
சேஷம் உபதேசிக்கத் தமக்குக் கிடைத்த பங்குப்பேற்றின்
கட்டளைப்படியே ஆசிய என்கிற திசையில் போய் வேதவாக்
கிய போதகங்களைப் பிரசங்கம் பண்ணுகிறவிடத்திலே சர்வே
சுரனை அறியாதிருந்த கணக்கற்ற சனங்கள் மெய்யான கிறீஸ்து
வேதத்தைக் கைக்கொண்டு பல இராச்சியங்களிலேயும்
தேவாலயங்கள் உண்டாக்கப்பட்டது. இவ்வித வர்த்தமானத்
தைத் தொமிசியானு என்கிற எம்பரதோர் கேட்டு வெகு
வாய் முனிந்து அருளப்ப அப்போஸ்தலுவைச் சிறைப்படுத்தி
உரோமாபுரியில் கொண்டுவந்து கொதிக்கிற எண்ணெய்க்
கடாரத்தில் அமிழ்த்தினான். ஆனால் சர்வேசுரனுடைய பிர
சாத மகிமையால் அந்த எண்ணெயால் ஒரு தீமையும் வரா
மல் இரக்ஷிக்கப்பட்டிருக்கிறதை எம்பரதோர் கண்டு அதிச
யித்து அவரை அந்த ஊரில் இராதபடிக்குப் பாத்துமூ
என்ற தீவுக்கு ஏற்றிவிட்டான். அப்போது அப்படிப்பட்ட
பிறதேசத்திலே அருளப்ப அப்போஸ்தலு இருக்கச் செய்தே
சர்வேசுரன் அவருக்கு உலகம் முடியும் காலத்தில் சம்பவிக்
கிற அதிசயமான அநேக விசேஷங்களை அறிவித்த பிரகாரம்
தேவகாட்சி நிபந்தனமாக எழுதிவைத்தார். தொமிசியானு
என்ற துஷ்ட எம்பரதோர் செத்ததின்பின் உரோமானு சனங்
கள் அருளப்ப அப்போஸ்தலுவை மறுபடியும் எபேசு பட்
டணத்தில் மகா கொண்டாட்டத்தோடு கூட்டிவந்திருக்கிற
விடத்திலே அவருடைய புதுமையையும் பிரசங்கங்களையும்



கேட்டு இன்னமும் திரளான சனக் கூட்டங்கள் கிறீஸ்து
வேதத்தை அனுசரித்து ஆசிய என்ற திசையில் சகல இராச்
சியங்களிலேயும் கிறீஸ்து வேதசபை நாட்டப்பட்டது. அதி
னால் ஞானக் கண் மறைந்த அக்கியானிகள் கோப மூர்க்க
மாய்த் தேசத்தாரைக் குழப்பி அருளப்ப அப்போஸ்தலுவைச்
சிறைப்படுத்தித் தாங்கள் வணங்குகிற சந்திர தேவாலயத்தில்
கூட்டிக்கொண்டுபோய் அத்தை வணங்கச் சொன்னார்கள்.
அப்போது அப்போஸ்தலுவானவர் அவர்களைப் பார்த்து
நான் உங்களுக்கு ஒரு பொருத்தம் சொல்லுகிறேன். ஒன
றில் நீங்கள் உங்கள் சந்திர தேவனைப் பிரார்த்தித்துக் கிறீஸ்து
தேவாலயத்தை அழியுங்கள், ஒன்றில் நான் என் கிறீஸ்து
தேவனைப் பிரார்த்தித்து உங்கள் சந்திர கோயிலை அழிப்பித்
தால் நீங்கள் கிறீஸ்துவின்பேரிலே விசுவசிக்கக்கடவீர்கள்
என்று சொன்னவிடத்திலே அதற்கு அநேகம் சனங்கள்
சம்மதித்துக் கோயிலால் புறப்பட்டிருக்கிறவிடத்திலே ஆரா
திஷ்ட அருளப்பர் சர்வேசுரனைப் பார்த்துப் பிரார்த்திக்கச்
சந்திர கோயிலும் அதின் விக்கிரகமும் இடிந்து விழுந்து பொடி
யாக்கப்பட்டது. அத்தைக் கண்டு சர்வேசுரனை அறியா
திருந்த அநேகமாயிரம் சனங்கள் விக்கிரக ஆராதனைகளை விட்
டுக் கிறீஸ்துவேதத்தின் பேரில் உண்மையான விசுவாசங்
கொண்டார்கள். இந்த மேரையாய் ஆராதிஷ்ட அருளப்ப
அப்போஸ்தலு சர்வேசுரனுடைய வேதத்துக்காக வெகு பிர
யாசங்களைப் பட்டதின்பின் அவருக்கு மோக்ஷ இளைப்பாற்றி
யைக் கொடுக்கத்தக்கதாகச் சர்வேசுரன் திருவுளமாய்த்
தோன்றி எனது பட்சபிரமாணம் அதிகப்பட்டவனே! எனக்
காகப் பட்ட பிரயாசங்களால் நீ இளைப்பாறுகிற காலமாயிற்று.
இற்றைக்கு அஞ்சாம் நாள் ஞாயிற்றுக்கிழமை உன்னைக் கூட்
டிக்கொள்வேன் என்று அருளிச் செய்தார். அதினால் ஆரா
திஷ்ட அருளப்பர் சகல சனங்களையும் கூட்டி ஞாயிற்றுக்
கிழமை கோயிலிலே போய்க் கிறீஸ்து வேதத்தைத் தவறாமல்
நடக்கிறதுக்குப் போதகஞ் சொல்லிப் பீடத்தின் அண்டை
யிலே ஒரு குழி வெட்டுவித்து அதில் தான் சிலுவை மேரை
யாய் இரு கரம் விரித்துச் சயனித்துச் சர்வேசுரனைப் பிரார்த்
தித்த உடனே தேவகாந்தி ஒளிவு அவர்பேரி லிறங்கி மறைத்
தது. அதின்பின் குழியைப் பார்க்க அவர் உடலும் காணப்
படாதே போனது. அதினால் அவர் உட லுயிரோடு பரலோ
கம் சேர்ந்தார் என்று நினைக்கலான விசேஷமாம். இந்தப்
பிரகாரமாக ஆராதிஷ்ட அருளப்ப அப்போஸ்தலு சர்வேசுரனை
நேசித்துச் சாகுந்தனையும் அவருடைய பத்தி விடாமல் நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோக்ஷ முடி அடைந்ததைப் பார்த்து நாங்களும் அப்படிப்பட்ட சுகிர்தங்களை அனுசரித்து அவருடைய சலுகையால் மோட்சம் அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

ஆண்டவரே, உமது திருச்சபையானது உம்முடைய அப்போஸ்தலரும் சுவிசேஷகருமான முத்திப்பேறுபெற்ற யுவானியாரின் போதகங்களால் ஞான வெளிச்சமடைந்து சதா நித்தியமான சம்பாவனைகளைச் சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாக அதனைத் தயவோடு பிரகாசிப்பித்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்தவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

## மார்கழி மாதம் இருபத்தெட்டாந் திகதி
# மாசில்லாத பாலகருடைய
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக மத்தேயு இரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது:—அந்தக்காலத்திலே இதோ ஆண்டவருடைய தூதன் சூசையப்பருக்கு நித்திரையில் தோன்றி: நீர் எழுந்திருந்து, குழந்தையையும் அதன் தாயையும் அழைத்துக்கொண்டு எஜிப்து தேசத்துக்கு ஓடிப்போய், நான் உமக்குச் சொல்லுந்தனையும் அங்கேயிரும். ஏனெனில், பிள்ளையைக் கொல்லுவதற்கு ஏரோது அதைத் தேடும்படி நேரிடும் என்றார். அவர் விழித்தெழுந்து, பிள்ளையையும் அதன் தாயையும் இரவில் கூட்டிக்கொண்டு, எஜிப்து தேசத்துக்குப்போய், ஏரோது சாகுமட்டும் அங்கே இருந்தார். இவ்விதமாய் எஜிப்து தேசத்திலிருந்து என் குமாரனை அழைத்தேனென்று தீர்க்கதரிசியால் ஆண்டவர் சொன்னது நிறைவேறும்படியாயிற்று. அப்போது ஏரோது சோதிட சாஸ்திரிகளால் தான் ஏய்க்கப்பட்டதாக அறிந்து, வெகு வாய்ச் சினந்து, ஆட்களை அனுப்பிச் சோதிட சாஸ்திரிகளிடமிருந்து தான் அறிந்துகொண்ட காலத்தின்படி பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறங்களிலெங்கும் இரண்டு பிராயமுதல் அதற்குட்பட்ட சகல ஆண் குழந்தைகளையுங் கொலைப்படுத்தினான். அப்போது எரேமியாஸ் தீர்க்கதரிசியால் மொழியப்பட்டது நிறைவேறிற்று. அதாவது: ராமாவூரில் குரல் சத்தமும் அழுகையும் பெரும் புலம்பலும் கேட்கப்பட்டது. ராக்கேல் தன் பிள்ளைகளினிமித்தம் அழுது; அவைகள் இல்லாததினால் ஆறுதல் வேண்டாமென்றிருந்தாள் என்பதாம்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்திலே ஆண்டவருக்காக மரித்த குழந்தைகளுடைய பெறுபேற்றின் மகிமை



காண்பிக்கப்படுவது. அது எப்படியென்றால், ஆண்டவர் பூலோகத்திலே பிறந்தபோது கிழக்குச் சீமையிலிருந்து சோதிட இராசாக்கள் அவரை வணங்க வந்த வழியிலே செருசலேம் நகரியில் சென்று யூத விராசா பிறந்த தலம் ஏதென்று கேட்டவிடத்திலே ஏரோது இராசாவுக்கு அந்த வசனம் கலக்கத்தை உண்டாக்கி நான் ஆளுகிற யூதேய இராச்சியத்திலே இன்னமும் பிறந்த இராயன் ஆர் என்று மனங் கவலைப்பாகி அப்படிப்பட்ட குமாரன் இருக்கும் தலத்தை விசாரித்து அவனைக் கொல்லவேணும் என்று நினைத்தான். அதினால் தேடிவந்த இராசாக்களை அழைப்பித்து நீங்கள் வணங்கவந்த குமாரனைக் கண்டதின்பின் நானும் வணங்கப்போகும்படி அவரிருக்கிற தலத்தை எனக்கும் அறிவிப்பீர்களாக என்று சொன்னான். ஆனால் அவர்கள் குமாரனைக் கண்டதின்பின் தேவ அருள் பெற்று அக் குமாரனை ஏரோது இராசாவுக்கு வெளிவிடாமல் வேறு வழியாய் விலகிப்போனதை ஏரோது அறிந்து வெகு வாய் முனிந்து தனது வேத அறிவாளிகளை அழைத்து இப்படிப்பட்ட இராசகுமாரன் எவ்விடத்திலே பிறக்கலாகும் என்று கேட்டான். அதற்கு அவர்கள் பூருவ வேதவாக்கியங்களைப் பார்த்துப் பெத்திலேயம் என்ற நகரியில் பிறப்பார் என்று சொன்னதைக் கேட்டு அந்த நகரியிலும் அதின் சுற்றுக்கிராமங்களிலும் சிறு பிள்ளைகளை எல்லாம் கொல்லுகில் அக் குமாரன் எங்கிருந்தாலும் தப்பார் என்று நினைத்து இராசாக்கள் வந்துபோன இரண்டு வருஷத்துக்குள்ளாகப் பிறந்த பிள்ளைகளை எல்லாம் கொல்லக் கட்டளையிட்டான். ஆனால் உலோகத்தை ஈடேற்ற வந்த ஆண்டவர் அதற்கான கிரமங்கள் முடியுமுன் சாகச் சித்தமாயிராததினால் ஏரோது இராயன் நினைத்த வினையத்தைச் சூசையப்பருக்கு அறிவித்து எஜிப்த்து இராச்சியத்திலே விலகிப்போயிருக்கத் திருவுளமானார். இதல்லாமல் தாம் பிறந்த நிமித்தத்தால் எஜிப்த்து இராச்சியத்தின் அக்கியானங்கள் தெளியலாகும் என்று முன் திவ்விய வாக்கியங்களில் எழுதியிருந்தது. ஆனால் அந்தப் பிரகாரம் ஆண்டவர் எஜிப்த்து இராச்சியத்தில் பிரவேசித்த உடனே அதிலிருந்த பிசாசு விக்கிரகக் கோயில்கள் எல்லாம் இடிந்து விழுந்து அக்கியானம் தெளிவாயிற்று. இப்படியே ஆண்டவர் விலகிப் போனதின்பின் ஏரோது இராசாவின் துஷ்ட கட்டளை செலுத்தப்பட்ட மேரை எப்படியோவென்றால், அவனுடைய பணிவிடைச் சேவகர் அந்தப் பதியிலுள்ள வீடுகளில் புகுந்து பெற்ற தாய் வளர்த்த தாய்மார் அணைத்திருந்த முலைகுடிக் குழந்தை முதலான இரு வயசுக்குட்பட்ட சிறு பிள்ளைகளை எல்லாம் வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ப் பறித்து வாளால் வீசி இரு துண்டாக்குகிறதையும், கல்லினுந் தரையிலும் அறைந்து கொல்லுகிற கெட்டோரங்களையும் தாய்மார் கண்டு சகியாத சலிப்போடு பிரலாபித்து ஐயோ! ஏன் பெற்றேனே, ஏன் வளர்த்தேனே, ஏன் பத்துமாதம் வயிற்றில் சுமந்தேனே என்று அழுகிறவர்களும், பிள்ளைகளைக் கொன்று தாய்மார்களை ஏன் வைக்கிறீர்கள எங்களையுங்கூடக் கொல்லுங்கள் என்கிறவர்களும் இப்படியே ஆகாசத்துக்குக் கேட்க அபயச் சத்தங்கள் செய்து தரையில் பெருகக் கண்ணீர்களை விட்டுப் புலம்பியிருக்கிற விடத்திலேயும் கொடிய சேவகர் சற்றும் இரக்கமில்லாமல் இரத்தமோடச் சகல பிள்ளைகளையும் கொன்றுபோட்டார்கள். அப்படியே கொன்றுபோட்ட பிள்ளைகளுடைய ஆத்துமம் பெற்ற நன்மைகள் எம்மருவாதியோவெனில், பூமியில் தீப்பற்றினவுடனே ஆகாசத்துக்குப் புகை எழும்புகிறதுபோலப் பூமியிலே விழுந்த பிரேதங்களின் ஆத்துமம் உடனே தானே சர்வேசுரன் அண்டையிலே மோக்ஷகரை சேர்ந்தது. இந்தப் பிரகாரமாய்ப் பூலோகத்திலே மனுஷருக்காகப் பாடுபடவந்த ஆண்டவர் பாடுபட முன்னமே இந்தச் சிறு பிள்ளைகள் தங்கள் ஆத்துமம் என்கிற ஞானப் புட்பங்களை அவருக்குக் காணிக்கையாக வைத்தார்கள் என்று அறியவும். அதினால் அவர்கள் பாவ தோஷமின்றி முன்னமே தங்களுடைய நிர்மல ஆத்துமங்களைச் சர்வேசுரனுக்குக் கையளித்ததுபோல நாங்கள் செய்த பாவ தோஷங்களைவிட்டு எங்கள் ஆத்துமங்களைச் சுத்தமாக்கி அவர்களுடைய சலுகையால் சர்வேசுரனைக் காணப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவேசுரா சுவாமீ, வேதசாட்சிகளான மாசில்லாக் குழந்தைகள் தேவரீருடைய இரட்சணிய மகிமையை வாயினால் அறிக்கையிடாவிட்டாலும் மரணத்தினால் வெளிப்படுத்தினார்களே. அடியோர்களும் நாவினால் அறிக்கையிடுகிற தேவரீருடைய வேதத்தை நடக்கையினாலும் மகிமைப்படுத்தத் தக்கதாக எங்களிடமுள்ள சகல துர்க்குணங்களின் வேரையும் நிர்மூலமாக்கியருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலஞ் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரண காட்சியாக, ஆமென்யேசு.

---

# மார்கழி மாதம் முப்பத்தொராந் திகதி
# ஆராதிஷ்ட சில்வேவெஸ்திரி பாப்புவின்
## திருநாளில் வாசிக்கிற சுவிசேஷம்

---

சுவிசேஷக லூக்கா பன்னிரண்டாம் அதிகாரத்திலே எழுதிவைத்த வாக்கியமாவது :— அக்காலத்திலே யேசுநாதர் தம்முடைய சீஷர்களுக்குத் திருவுளம்பற்றினது. உங்கள் இடைகள் வரிந்து கட்டப்படவும், எரிகிற தீபங்கள் உங்கள் கைகளில் இருக்கவுங் கடவன. தங்கள் எஜமான் வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படியாக அவர் கலியாணத்தினின்று எப்பொழுது திரும்புவாரென்று காத்திருக்கிற மனிதருக்கு நீங்கள் ஒப்பாயிருக்கக்கடவீர்கள். எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியரே பாக்கியவான்கள் ; அவர் தமது இடையை வரிந்து கட்டி, அவர்களைப் பந்தியமரச் செய்து, அவர்களில் ஒவ்வொருவரிடத்திலும் போய் அவர்களுக்குப் பரிமாறுவாரென்று உண்மையாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர் இரண்டாஞ் சாமத்தில் வந்தாலும், மூன்றாஞ் சாமத்தில் வந்தாலும், அவ்வண்ணமே காண்பாராகில், அவ்வூழியர் பாக்கியவான்கள். அல்லாமலும், திருடன் இன்ன வேளையில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், சந்தேகமற விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிந்துகொள்ளுங்கள். அந்தப்படியே, நீங்களும் ஆயத்தமாயிருங்கள். ஏனென்றால் நீங்கள் நினையாதவேளையில் மனுமகன் வருவார் என்று திருவுளம்பற்றினார்.

இந்தச் சொல்லப்பட்ட சுவிசேஷ வாக்கியத்தின் அர்த்தம் ஏதென்றால், இடையைக் கட்டிக் கைகளிலே விளக்குக் கொளுத்திக் கொண்டிருக்கவேணும் என்றதினால், இடையைக் கட்டுவதாவது : காம விகார ஆசையை அடக்குதலாம். கைகளில் ஏந்துகிற வெளிச்சமாவது : எங்கள் சுகிர்த நடக்கையின் வெளிச்சத்தை உலோகங் காணவேணும் என்கிற விபரமாம். இதல்லாமல் குடும்பக்காரர் குடும்பத் தலைவனைக் காத்திருக்கிற மேரையும், ஊழியர் எஜமான் வருகிற வழி பார்த்திருக்கிற மேரையும் காட்டி எச்சரிக்கையோடே விழித்திருக்கவேணும் என்றதினால், கள்ளன் என்கிற எங்கள் சாவின் வேளையும் ஆண்டவர் எங்கள் பாவக் கணக்குக் கேட்க வருகிறவேளையும் இந்நேரம் என்று அறியாததினால் எந்நேரமும் அதுக்கான தருமங்களைச் செய்து ஆயத்தமாயிருக்கவேணும் என்று படிப்பித்த விபரமாம்.

இந்தப் படிப்பனையெல்லாம் ஆராதிஷ்ட சில்வேவெஸ்திரியார் குறையற்ற பிரகாரமாகச் செலுத்தி மோக்ஷம் அடைந்ததி

னால் அவருடைய சுகிர்த நடக்கைகளைக் காண்கிறது கிரமமாம். அது எப்படியென்றால், ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி பாப்பு கிறீஸ்துவேத சபையை ஏக சிரேஷ்ட குருவாய் நடப்பித்துக்கொண்டு வருகிற காலத்திலே ஞானக் கண் தெளியாமலிருந்த கொன்ஸ்தந்தீனு எம்பரதோர் தேவ வேதக்காரருக்கு வெகு நெருக்கிடைகளைப் பண்ணுகிறதைக் கண்டு அது அமருந்தனையும் தாம் சுரூத்தி என்ற மலையில் விலகியிருந்தார், அப்போது கொன்ஸ்தந்தீனு என்ற இராயனுக்குச் சருவாங்கமும் குஷ்ட நோய் உண்டாகி ஒரு அவுஷதமும் பலியாமல் மூவாயிரம் குழந்தைகளுடைய இரத்தத்தால் ஸ்நானம் பண்ணினால் சுகம் காணும் என்று தன் வேத குருமார் சொன்னதினால் மூவாயிரம் குழந்தைகளைக் கொல்லத்தக்கதாக அவன் முன்னாகக் கொண்டுவந்தவிடத்திலே அதுகளைக் கண்டு மனமிரங்கித் தனது ஒரு உயிருக்காக இம்மாத்திரம் உயிர்களை வதைத்தல் ஆகாதென்று அதுகளை அதனதன் தாய்மாருக்குக் கையளித்தான். இப்படிப்பட்ட இரக்கத்தின் கிரியை அவன் செய்தது சர்வேசுரனுடைய சித்தத்துக்கு வெகு பிரியமாயிருந்ததால் அவனுடைய உடலையும் உயிரையும் கூடச் சுத்தமாக்கத் திருவுளமானார். அது எவ்விதமோவெனில், ஓரிரவு தெரிசனத்திலே அவனுக்குப் பேதுரு பாவிலு என்ற அப்போஸ்தலர் இருவருந் தோன்றி உன்னுடைய வியாதி குணங்காணத்தக்கதாக சுரூத்தி மலையிலே மறைந்திருக்கிற சிலுவேஸ்திரி என்ற குருவைக் கூட்டிவந்து அவர் சொல்லுகிற போதகங்களைக் கேட்டு அவர் கையால் ஞானஸ்நானம் பெற்றால் குறையற்ற ஆரோக்கியத்தை அடைவாய் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட அருள்களைக் கொன்ஸ்தந்தீனு இராயன் கேட்டவுடனே ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி பாப்பு ஒளித்திருந்த இடத்திலிருந்து அவரை அழைப்பித்துத் தான் கண்ட தெரிசனத்தைச் சொன்னவிடத்திலே அத்தால் அவர் தேவ சித்தத்தை அறிந்து இராயனுக்கு வேதபோதகத்தைப் போதித்து ஞானஸ்நானம் கொடுத்தார். அக்ஷணமே சரீரம் கழுவப்படுதலோடு ஆகாசத்திலிருந்து பிரகாச ஒளிவு அவன் மேல் வந்து இறங்கிக் குஷ்டமெல்லாம் உதிர்ந்து விழுந்து ஆத்துமமும் சரீரமும் கூடப் பரிசுத்தமாயிற்று. இப்படிப்பட்ட அற்புதத்தை இராயன் கண்டு மனங்கொள்ளாத ஞானத்தெளிவின் அக்களிப்போடு தனது இராச்சிய சீமைகளிலிருந்த பிசாசு விக்கிரகக் கோயில்களை அழித்துக் கிறீஸ்து வேத ஆலயங்களை உண்டாக்கவும் இந்த வேதத்தை அனுசரிக்கவும் உத்தாரங் கொடுத்தான். அதின்பின் எலேன் என்ற தனது



தாயார் யூதர்மார்க்கத்தை நம்பியிருக்கிறதை அறிந்து அவளையும் அவள் வேத அறிவாளிகளையும் உரோமையில் வரப்பண்ணி ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி பாப்புவோடு தர்க்கித்து உண்மையை அறியச் சொன்னான். அப்படியே அவர்கள் பண்ணுகிற தர்க்கங்களுக்கு ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி பாப்பு ஞானத்தெளிவுகளைக் காட்டிக் கிறீஸ்துவேதத்தின் உண்மையைக் காண்பித்தவிடத்திலே வேத பண்டிதரும் இராயனுடைய தாயாகிய எலேனாளும் கூடவந்த சகலமான பேர்களும் கிறீஸ்துநாதர் பேரில் தெளிந்து உறுதியாய் விசுவாசமானார்கள்.

இந்த மேரையாய் ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி பாப்பு ஆண்டவருடைய சுவிசேஷத்திலே கண்ட படிப்பனைகள் தவறாமல் விரதத்துவம், சாந்துவம் முதலான சுகிர்தங்களோடு நடந்து வாக்குப் பிரசங்கங்களால் உலோக மனுஷருக்குக் கையில் ஏந்தின தீபிகைபோல ஞான வெளிச்சங் கொடுத்து மோக்ஷ பிரகாசத்தை அடைந்தார். ஆனதினால் இப்படிப்பட்ட அவருடைய சுகிர்தங்களை நாங்கள் இயன்றளவு அனுசரித்து அவர் சலுகையால் மோக்ஷபதவி அடையப் பிரயாசிக்கக்கடவோம்.

## திருச்சபைச் செபம்

சருவ வல்லமையுள்ள சருவேசுரா, தேவரீருடைய ஸ்துதியரும் மேற்றிராணியாருமாகிய முத்திப்பேறுபெற்ற சிலுவேஸ்திரியுவின் ஆசாரத்துக்குரிய மங்கள தினமானது அடியோரைப் பத்தியிலும் சுகசேமத்திலும் வளரச் செய்யும்படி எங்களுக்கு அநுக்கிரகஞ் செய்தருளும். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சருவேசுரனுமாய்ச் சதாகாலம் சீவியராய் இராச்சியபாரம் பண்ணுகிறவருமாயிருக்கிற எங்கள் நாயக யேசுக்கிறீஸ்து காரணகாட்சியாக, ஆமென்யேசு.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவிசேஷ விரித்துரையின்

# அட்டவணை

பக்கம்


| | |
|---|---|
| ஆகமனகாலத்தின் 1-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 1 |
| ,, 2-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 4 |
| ,, 3-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 6 |
| ,, 4-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 9 |
| கர்த்தர் பிறந்த திருநாளின் 1-ம் பூசையின் சுவிசேஷம் | 11 |
| ,, ,, திருநாளின் 2-ம் பூசையின் சுவிசேஷம் | 16 |
| ,, ,, திருநாளுக்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 18 |
| ,, விருத்தசேதனச் சடங்கு செய்யப்பட்ட திருநாளின் சுவி. | 19 |
| ,, பிரத்தியக்ஷமான திருநாளின் சுவிசேஷம் | 22 |
| கர்த்தர் பிரத்தியக்ஷத்தின் 1-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 25 |
| ,, ,, 2-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 27 |
| ,, ,, 3-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 30 |
| ,, ,, 4-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 33 |
| ,, ,, 5-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 35 |
| ,, ,, 6-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 37 |
| தபசுகாலத்தின் முன்வருகிற 3-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 39 |
| ,, ,, 2-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. | 41 |
| ,, ,, ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 43 |
| ஆசிரீறு தரிக்கிற திருநாளின் சுவிசேஷம் ... | 46 |
| தபசுகாலத்தின் 1-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 48 |
| ,, 2-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 51 |
| ,, 3-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 54 |
| ,, 4-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 57 |
| ,, 5-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 59 |
| ,, 6-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 63 |
| ,, மகோற்சவ வியாழக்கிழமையின் சுவிசேஷம் | 65 |
| கர்த்தர் உயிர்த்தெழுந்தருளின திருநாளின் சுவிசேஷம் | 68 |
| எழுந்தேற்றத்துக்கடுத்த தவளோற்சவ ஞாயிற்றுக்கிழ. சுவி. | 72 |
| எழுந்தேற்றத்தின் 2-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 75 |
| ,, 3-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 77 |
| ,, 4-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 79 |
| ,, 5-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 82 |
| கர்த்தர் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாளின் சுவிசேஷம் | 85 |
| ஆரோகணத் திருநாளுக்கடுத்த ஞாயிற்றுக்கிழமையின் சுவிசேஷம் | 89 |
| இஸ்பிரீத்துசாந்து பிரசன்னமான திருநாளின் சுவிசேஷம் | 90 |
| திரித்துவத்தின் திருநாளின் சுவிசேஷம் | 94 |
| சற்பிராசாதத் திருநாளின் சுவிசேஷம் ... | 96 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

இஸ்பிரீத்துசாந்து ஆகமனத்தின் 2-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 99
,, ,, 3-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 102
,, ,, 4-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 104
,, ,, 5-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 107
,, ,, 6-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 109
,, ,, 7-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 111
,, ,, 8-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 113
,, ,, 9-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 115
,, ,, 10-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 117
,, ,, 11-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 119
,, ,, 12-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 121
,, ,, 13-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 125
,, ,, 14-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 127
,, ,, 15-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 130
,, ,, 16-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 132
,, ,, 17-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 135
,, ,, 18-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 138
,, ,, 19-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 140
,, ,, 20-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 142
,, ,, 21-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 145
,, ,, 22-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 147
,, ,, 23-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 150
,, ,, 24-ம் ஞாயிற்றுக்கிழமையின் சுவி. 152
ஆராதிஷ்ட செபஸ்தியாம் முனீந்திரன் திருநாளின் சுவிசேஷம் 159
ஆராதிஷ்ட பிறஞ்சீஸ்குசாலிஸ் முனீந்திரன் திருநாளின் சுவி. 161
தேவமாதாவின் சுத்திகரத் திருநாளின் சுவிசேஷம் 165
ஆராதிஷ்ட மத்தியாஸ் அப்போஸ்தலு திருநாளின் சுவிசேஷம் 167
ஆராதிஷ்ட சூசையப்பர் திருநாளின் சுவிசேஷம் 170
பரிசுத்த தேவமாதா மங்களங்கேட்ட திருநாளின் சுவிசேஷம் 172
சுவிசேஷகரான ஆராதிஷ்ட மாற்கு திருநாளின் சுவிசேஷம் 175
ஆராதிஷ்ட பிலீப்பு, யக்கோவு அப்போஸ்தலர்களின் திருநா. சுவி. 179
கிறீஸ்துவின் சிலுவை கண்டெடுத்த திருநாளின் சுவிசேஷம் 182
ஆராதிஷ்ட பிலீப்புநேரியார் திருநாளின் சுவிசேஷம் 185
யேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத் திருநாட் சுவி. 188
ஆராதிஷ்ட அந்தோனியார் திருநாளின் சுவிசேஷம் 192
ஆராதிஷ்ட ஸ்நாபக அருளப்பர் (யுவானியார்) திருநாளின் சுவி. 195
ஆராதிஷ்ட பேதுரு, பாவிலு அப்போஸ்தலர் திருநாளின் சுவி. 197
உத்தரியமாதா திருநாளின் சுவிசேஷம் ... 201
ஆராதிஷ்ட பெரிய யக்கோவு அப்போஸ்தலு திருநாளின் சுவி. 205
ஆராதிஷ்ட ஆனாள் திருநாளின் சுவிசேஷம் ... 208
ஆராதிஷ்ட கயித்தானு முனீந்திரன் திருநாளின் சுவிசேஷம் 210
ஆராதிஷ்ட லவுரேன்சாமியார் திருநாளின் சுவிசேஷம் 215
கன்னிசுத்த தேவமாதா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்
பட்ட திருநாளின் சுவிசேஷம் ... ... 218

005612



பக்கம்

ஆராதிஷ்ட உரேக்கு முனீந்திரன் திருநாளின் சுவிசேஷம் 222
ஆராதிஷ்ட பர்த்தொலோமை அப்போஸ்தலு திருநாளின் சுவி. 225
ஆராதிஷ்ட லூவீஸ் முனீந்திரன் திருநாளின் சுவிசேஷம் 227
கன்னிசுத்த தேவமாதா பிரசவமான திருநாளின் சுவிசேஷம் 230
கன்னிசுத்த தேவமாதாவின் மரிய என்ற திருநாமத்திருநாட் சுவி. 233
சுவிசேஷக மத்தேயு அப்போஸ்தலு திருநாளின் சுவிசேஷம் 236
ஆராதிஷ்ட மிக்கேல் திருநாளின் சுவிசேஷம் ... 238
தேவமாதாவின் திருச் செபமாலைத் திருநாளின் சுவிசேஷம் 242
ஆராதிஷ்ட சீமோன், ததேயு அப்போஸ்தலர் திருநாளின் சுவி. 246
சகல மோக்ஷவாசிகளுடைய திருநாளின் சுவிசேஷம் 250
உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமாக்கள் திருநாளின் சுவிசேஷம் 253
ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி மடாதிபரின் திருநாளின் சுவிசேஷம் 258
ஆராதிஷ்ட அந்திரே அப்போஸ்தலு திருநாளின் சுவிசேஷம் 261
ஆராதிஷ்ட பிறஞ்சீஸ்கு சவேரி முனீந்திரன் திருநாளின் சுவி. 264
ஆராதிஷ்ட பார்பரு அம்மாள் திருநாளின் சுவிசேஷம் 268
ஆராதிஷ்ட நீக்கொலாவு முனீந்திரன் திருநாளின் சுவிசேஷம் 273
தேவமாதாவின் அமலோற்பவத் திருநாளின் சுவிசேஷம் 278
ஆராதிஷ்ட லூசியம்மாள் திருநாளின் சுவிசேஷம் 281
ஆராதிஷ்ட தொம்மை அப்போஸ்தலு திருநாளின் சுவிசேஷம் 284
ஆராதிஷ்ட முடியப்பர் அல்லது எஸ்தேவன் திருநாட் சுவி. 288
ஆராதிஷ்ட அருளப்ப அப்போஸ்தலு திருநாளின் சுவிசேஷம் 291
மாசில்லாத பாலகருடைய திருநாளின் சுவிசேஷம் 294
ஆராதிஷ்ட சிலுவேஸ்திரி பாப்பு திருநாளின் சுவிசேஷம் 297

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org